COMMON [illegible]

Church of En[illegible]

CALLED IN TAMIL

SEBABUSTHAGA VISTHA[illegible]

IN QUESTIONS AND ANSWERS

BY

REV. G. [illegible]HAM.

ஜெபபுஸ்தக விஸ்தரிப்பு

அல்லது

இங்கிலாந்து சபையில் வழங்கிவருகிற
பொதுவான ஜெபபுஸ்தகத்தின்பேரில்
வியாக்கியானம் செய்யப்பட்ட [illegible] வினா[illegible].

இது

தஞ்சாவூர் கனம் ஞா. ஆபிரகாம் ஐயரவர்களால்
இயற்றப்பட்டது.

MADRAS:
S. P. C. K. PRESS, VEPERY.

[illegible]888.

S. P. C. K. Press, Vepery, Madras, 1688.

DEDICATED

(BY PERMISSION)

TO THE

REV. W. H. BLAKE, B. A.

Missionary S. P. G. and Principal of St. Peter's College,

Tanjore.

By his Assistant in the Holy Ministry

THE AUTHOR.

PREFACE.

The want of a suitable Tamil Expo
of Common Prayer has long been felt
chists, Readers and Sunday School Teachers. There are many books published in English by various authors, which are used only by English knowing men. But no Exposition has hitherto appeared calculated to give complete Instruction to Vernacular men, on the Principles of the Anglican Liturgy which is valued and appreciated by devout worshippers in every country.

I have therefore come forward to supply this need by the publication of a Catechism, which by its form of Questions and Answers will, I think, help the memory of the student and enable him to understand clearly the Answers to the objections against our mode of worship or against the Doctrines contained in the Prayer Book.

I have devoted a special chapter to the history of the Prayer Book and have noticed the changes and alterations in the Liturgy in their proper places.

I thankfully acknowledge that I am very much indebted to the works of Bp. Wordsworth's Theosophia Anglicana, Evan Daniel Blunt, Procter, &c., parts of which I have translated and abridged and to the valuable Notes I have obtained from Revds late Dr. Kennet and A. F. Cæmmerer.

I am happy to observe that the Prayer Book Examination of the Christian Knowledge Society in English has given a great impetus to the study of the Prayer Book.

A sir[illegible] [illegible]xamination in Tamil will be found highly usef[illegible] [illegible] to native females.

[illegible] object of the publication of this book is to [illegible] stir up a devotional spirit in the minds of my [illegible] when they use the Common Prayer Book [illegible] of all Devotional books. If this end [illegible] Holy Ghost through the medium of [illegible] let the Praise, Glory and Honor be [illegible] His [illegible] Nam[illegible]

TANJORE. }
4th May, 188[illegible] }

G. [illegible]BRAHAM.



பாயிரம்.

பல கல்விமான்களை [illegible] சபையின் [illegible] ஜெபப்புஸ்
தகத்தின்பேரில் செய்திருக்கிற புஸ்தகங்களிலிரு[illegible] தெரிந்தெ
டுத்த ஜெபப்புஸ்தக விஸ்தரிப்பு என்னும் இ[illegible] புஸ்தகத்தைப்
பிரசுரஞ்செய்திருக்கிறேன். தமிழ்ப்பாஷையில் [illegible]. பொது
[illegible] அச்சிட்ட புஸ்தகத்தில் ஜெபப்புஸ்தகத்தில் அடங்கிய காரி
யங்களை வியாக்கியானஞ்செய்து விஸ்தரிக்கிற புஸ்தகங்களில்லை. இங்கி
லீஷ் பாஷையிலோ அநேக புஸ்தகங்களிருக்கிறது. ஆகையால் இங்
கிலீஷ் படியாத உபதேசிமார், [illegible]மார், உபாத்தியாயர் [illegible]களுமா
ருக்கும் சபையில் [illegible] புஸ்தகத்தின் [illegible], உப
யோகமாகக் கேள்விகளும் உத்தரவுகளும் அடங்கியதாய் இந்தப் புஸ்
தகம் எழுதப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து [illegible] சபை
முதலிய [illegible] சபைகளுக்கு [illegible] [illegible]
முதலாம் அதிகாரத்தில் [illegible] கொண்டிருக்கிற [illegible]
[illegible] [illegible]. ஆறும் அதிகாரத்
தில் [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] எழுதப்பட்டிருக்கிறது.
இ[illegible] [illegible] புஸ்தகங்களில் [illegible]. [illegible]
[illegible] பெரிய பரிசுத்தவான்களின் [illegible]
[illegible] [illegible] படிப்பினையுங் [illegible]. இவைக
[illegible] தமிழ்ச்சபையின் அறிவுவிர்த்திக்கும் பக்திவிர்த்திக்கும்
[illegible] உபதேசிமார் முதலியவர்களுக்கு மிகுந்த பிரயோசன
[illegible] நம்முடைய [illegible] ஜெபப்புஸ்
தகத்தின் [illegible] சொற்களையும், மாட்சிமையும், உயர்ந்த கருத்தை
[illegible] அலங்கரிப்புத் தன்மையும் எத்தேசத்தி
முள்ள [illegible] பக்திமான்களாலும் வியந்துகொள்ள
பட்டிருக்கிறது. [illegible] வேதவாக்கியங்களோ அடங்கிய [illegible]
[illegible] சொல்லப்படத்தக்கவைகள்.

"உன்னைக் கட்டினவர்கள் உன்னைப் பூரணவடிவாய்க் கட்டினார்
கள்" (எசே. 27 4.). பட்டணத்து [illegible]. [illegible]

பாயிரம்.

"[illegible]லம் எருசலேமோ, அதின் நீளமும் அம்மாத்திரம். அதின் நீளமும் [illegible]ரும் உயரமுஞ் சரியாயிருக்கிறது (வெளி. 21 16.). உங்களுக்கு [illegible] இந்த ஆராதனை என்ன? (யாத். 12. 26.) ஆவியால் ஜெபம் [illegible]ணுவேன், [illegible] அறிவும் விளங்க ஜெபம்பண்ணுவேன்." ([illegible]கொரி. 14. 15.)

பொது [illegible] த்தகத்தை வழங்குகிற இதின்தமான சபை [illegible] பொருளையுங் கருத்தையுந் திட்டமாயறிந்து, [illegible] ஆராதனையிலுள்ள அவர்கள் மனம் பரவசமாகித் [illegible]வனைத் தொழுதுகொள்ளும்படிக்கு [illegible]ராககூனைவையை இந்தப் புஸ்தகத்தை அச்சிட்டுவிக்கிறேன். பரிசுத்தாவியாகிய வல்லமையுள்ள கர்த்தர் இதை தமது கருவியாகக்கொண்டு, ஆசீர்வதித்து என நோக்கத்தையும் விருப்பத்தையும் நிறைவேற்றுவாராக. அவருக்கே கனமும் மகிமையும் துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக. ஆமென்.

TANJORE.
4th May, 1888.

G. ABRAHAM.

CONTENTS.

APPENDIX.

அட்டவணை.

அநுபந்தம்.

ஜெபபுஸ்தக விஸ்தரிப்பு.

I. CHAPTER.

THE NAME AND ATTRIBUTES OF THE CHURCH.

The origin of the Church of England, Independent of Rome before and after the arrival of St. Augustine.—Its Apostolic succession.—The Reformation in England a removal of what was new and a restoration of what was old.

முதலாம அதிகாரம்.

இங்கிலாந்து திருச்சபையைப் பற்றியது.

1. வினா. இந்தப் புஸ்தகத்துக்கு இடப்பட்டிருக்கிற பெயர் என்ன?

விடை. இங்கிலாந்து தேசத்துத் திருச்சபையில் வழங்கி வருகிற திருச்சபைக்குரிய பொதுவான ஜெபபுஸ்தகம் என்பதே.

2. வினா. இதிலடங்கிய முறைமைகளென்ன?

விடை. காலை மாலை ஆராதனை முறைமைகளும் சாக்கிரமெந்துகளைக்கொடுக்கும் முறைமைகளும சபைக்குரிய மற்றச் சடங்காசாரங்களும் தேவாலயங்களில் சொல்ல அல்லது பாடவேண்டிய தாவீதின் சங்கீதங்களும் உதவிக்குருப்பட்டம், குருப்பட்டம், அத்தியட்சர்பட்டம் கொடுக்கும் முறைமைகளும் அடங்கியிருக்கிறது.

3. வினா. இந்தப் பெயர் இப்போதிருக்கிறபடி முன்னமே இருந்ததா?

விடை. கி. பி. 1549-ம் வருஷத்தில் இப்படியிருந்ததை 1552ல் "திருச்சபைக்குரிய" என்ற வார்த்தையை மாற்றிப் பிற்பாடு திரும்பவும் 1661-ம் வருஷத்தில் திருச்சபைக்குரிய கத்தோலிக் அல்லது சாதாரண முறைமையைக் காட்டும்படி அந்த வார்த்தையைச் சேர்த்திருக்கிறார்கள்.

4. வி௵. விசுவாசப் பிரமாணங்களில் திருச்சபைக்குரிய தாகச் சொல்லப்பட்டிருக்கிற லட்சணங்கள் எவை?

விடை. ஒரே, பரிசுத்த, பொதுவான, அப்போஸ்தல திருச்சபை என்பவைகளே. காணப்படுகிறதும் காணப்படாததுமான சபையென்றும், உலகத்தில் போராடும் சபை, வெற்றி சிறந்த பரமசபையென்றும் சொல்லப்படும். 19-ம் பிரமாணம் "தேவனுடைய சுத்தாங்கவசனம் பிரசங்கிக்கப்பட்டும், கிறிஸ்துவின் நியமப்படி சாக்கிரமெந்துகளுக்கு அவசியமவேண்டிய யாவற்றையும் செய்யப்படவேண்டிய விதமாய்ச் செய்து தகுதியாய் ஆசரிக்கப்பட்டும்வருகிற விசுவாசிகளுடைய சங்கமே கிறிஸ்துவின் வெளியரங்கமான சபையாம்."

5. வி௵. ஒரே அல்லது ஐக்கியப்பட்ட சபையென்று அழைக்கப்படுவதேன்?

விடை. அதின் அவயவங்களாகிய சகலருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டாயிருப்பதினாலும், கிறிஸ்துவாகிய ஒரே தலைக்குள்ளும் மேய்ப்பனுக்குள்ளும ஒரே மந்தையில் சகல ஆடுகளும் சேர்க்கப்படவேண்டியதாயிருப்பதினாலும், அவருடைய சரீரத்துக்குள் ஒரே ஆவியினாலே சகலரும் ஞானஸ்நானம் பெற்று, பரி. நற்கருணையில் ஒரே அப்பத்திலும் பாத்திரத்திலும் பங்குபெறுகிறவர்களாயிருப்பதினாலும், ஒரே விசுவாசமும், நம்பிக்கையும், ஒரே இருதயமும், ஆத்துமாவுமுள்ள ஏகசகோதரராய் சமாதானக்கட்டிலும் ஆவியின் ஒருமையிலும் ஒரே சட்டத்தைக்கொண்டு நடக்கவேண்டியவர்களாயிருப்பதினாலும், ஒரே அப்போஸ்தல அதிகாரத்துக்குள்ளும் சிட்சை போதனை தொழுகையிலும் நிலைத்திருந்து ஒரே மனதினாலும், வாயினாலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டியவர்களாயிருப்பதினாலும் இப்படி அழைத்திருக்கிறது.

6. வி௵. பரிசுத்தசபை என்று அழைக்கப்படுவதேன்?

விடை. அதின் தலையாகிய கிறிஸ்து பரிசுத்தராயிருப்பதினாலும், பரிசுத்த அழைப்பினால் அழைக்கப்பட்டு, பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றதினால் பரிசுத்தமாக்கப்பட்டு, பரிசுத்த ஊழியங்களைச்செய்து, பரிசுத்தமாய் நடந்து தீட்டற்ற பரிசுத்த சுதந்தரத்தை பரிசுத்த ராஜ்யத்தில் அடையும்படியான நோக்கத்தால் பரிசுத்தசபை என்று அழைத்திருக்கிறது.

7. வி௵. பொதுவான அல்லது கத்தோலிக்சபை என்று அழைக்கப்படுவதேன்?

விடை. கத்தோலிக் என்ற வார்த்தையின் அர்த்தப் படிக்கு திருச்சபையானது லோகம்முழுவதிலும் அதின் இரு ஷ்டிப்புமுதல் முடிவுகாலம் வரையிலும் யூதசபையைப போல் ஒரே இடத்திலுள்ள ஒரேஜனங்களுக்கு மாத்திரமல்ல, உலகத்தில் எல்லா இடங்களிலுமுள்ள எல்லா ஜாதிகளுக்கும் பாஷைக்காரருக்கும் ஒரே பொதுவான சபையாயிருந்து விசுவாசத்தையும் சத்தியத்தையும் சன்மார்க்கத்தையும் போதித்து சகலமானவர்களையும் அதற்குட்படுத்திக் கீழ்ப்படியச்செய்து ஆவிக்குரிய சகல கிருபையின் எத்தனங்களையும் தேவகட்டளைப்படிக்கு அவர்களுக்குப் பட்சபாதமில்லாமல் கையாட வேண்டியபடியால் கத்தோலிக் அல்லது பொதுவான சபை என்று அழைத்திருக்கிறது.

8. வினா. பொதுவான திருச்சபையைச் சேர்ந்த ஒரு பாகமான ஒரு சபை, தன்னைமாத்திரம் உலகத்துக்கெல்லாம் பொதுச்சபையென்று சொல்லலாமோ? ரோமான்மார்க்கத்தார் தங்களைக் கத்தோலிக்சபை என்பானேன்?

விடை. ரோமான்சபை சொல்வது எதற்கு ஒப்பாயிருக்கிறதென்று கேட்டால், ஒரு மரத்தின் கிளையானது தன்னைத் தானே முழுமரமென்று துணிந்து சாதிப்பதற்கும்; மனுஷனுடைய ஒரு கையானது மற்ற அவயவங்களைப்பார்த்து நானே முழுச்சரீரமாயிருக்கிறேன் என்று பெருமைபேசுவதற்கும் ஒப்பாயிருக்கிறது. ரோமான்சபை கிறிஸ்துசபையைச் சேர்ந்த ஒரு பாகமும் அவயவமுமாயிருப்பதால் பொதுவான சபை என்று சொன்னாலும் தன்னைமாத்திரம் கத்தோலிக்சபை என்று சொல்லக்கூடாது. கிரேக்கசபை, இங்கிலீஷ் சபை, லத்தீன்சபை மூன்றும் கத்தோலிக்சபையின் மூன்று கிளைகளாயிருக்கிறது. இந்த மூன்றில் ஒன்று தன்னை மற்றதை விட உயர்த்துகிறது நியாயமல்ல. கிரேக்கசபையும் இங்கிலீஷ் சபையும் உபதேசத்தில் பழுதுபடாமலிருக்க, ரோமான்சபை அதில் தவறியிருக்கிறது. ஆகிலும் நம்முடைய சபை கிரேக்க சபையைப்போல லத்தீன்சபையையும் ஒரு சபையென்று ஒப்புக்கொள்ளுகிறது.

9. வினா. அப்போஸ்தலசபை என்று அழைப்பனேன்?

விடை இயேசுகிறிஸ்துவாகிய கோடிக்கல்லின்மேலும் அப்போஸ்தலருடைய அஸ்திபாரத்தின்மேலும் அவர்களுடைய சத்திய உபதேசத்தின்மேலும் அவர்களுடையதும் அவர்கள் பின்னடியாருடையதுமான ஐக்கியத்திலும் உடன் விசுவா

சத்தினுஞ் கட்டப்பட்டிருப்பதே அப்போஸ்தல திருச்சபை யாம்.

10. வினு. நம்முடைய இங்கிலாந்து திருச்சபை மேற்சொல்லிய நான்கு லட்சணங்களும்பொருந்திய கத்தோலிக்கசபையின் ஒரு பங்கென்று எதினுல் தெரியவரும்?

விடை. இங்கிலாந்துசபையின் உற்பத்தியினுலும் அதின் பரிசுத்த உபதேசஙகளினுலும் அதின் அப்போஸ்தல அதிகார ஏற்பாட்டினுலும் முத்திரைபெற்றதாக ரூபிக்கலாம். கத்தோலிக்சபை கிறிஸ்தவப்பிதாக்கள் சொல்லியபடிக்கு உலகமெங்கும் சுற்றியிருக்கிற சமுத்திரத்துக்கு ஒப்பாயிருக்கிறது. சமுத்திரத்தில் கடல்களும் குடாக்களும் பலபேருள்ள சமுத்திரங்களும் இருப்பதுபோல ஒரே பொதுவான அப்போஸ்தல திருச்சபையிலே பல கிளைச்சபைகளும், பல கத்தோலிக் சபைகளும் இருக்கிறது. இங்கிலாந்துசபையும் இவைகளில் ஒன்றுன கத்தோலிக்சபை என்பதற்குச் சந்தேகமேயில்லை.

11. வினு. இங்கிலாந்துசபையின் உற்பத்தியைப்பற்றியும் ஆரம்பத்தைப்பற்றியும் எடுத்துக்காட்டு?

விடை. அதின் சபையும் குருக்களும் கண்காணிமாரும் தோன்றுதொட்டு ஒருவர்பின் ஒருவராய் அப்போஸ்தலர் பிரித்தானியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த முதலாம் நூற்றுண்டுமுதல் ஆரம்பமாகி வந்திருப்பதால் ரோமான் சபையைப்போலவே இதுவும் அப்போஸ்தலரால் உற்பத்தியாகியிருக்கிறது.

12. வினு. அப்படியிருக்க கி. பி. 596 ல் அகுஸ்தீன் என்பவர் ரோமாபுரியிலிருந்து பாப்பானவரால் அனுப்பப்பட்டு இங்கிலாந்துதேசம் குணப்பட்டதாகச் சொல்லுகிறுர்களே, இதென்ன?

விடை. அகுஸ்தீன் கெண்டு (Kent) என்ற ஒரு பாகத்தில் சாக்ஸன் என்ற சிலபேர்களைக் குணப்படுத்தினுர். ஆனுல் அவர் பேரானதற்கு அநேக நூற்றுண்டுகளுக்கு முன்னமே இங்கிலாங்கில்சபைகளும் கண்காணிமார்களும் இருந்தார்கள்.

13. வினு. இதை ரூபித்துக்காட்டு?

விடை. a. சில அப்போஸ்தலர்கள் பிரித்தானியாவுக்குப் போனுர்களென்று ஐசேபியூ என்பவரும், ரோமருக்குக் கீழ்ப்படாத பிரித்தானியா கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தது

என்று தெர்த்துல்லியன் என்பவரும், பிரித்தானியா மெய்யான தேவனை வணங்கச் சம்மதித்தது என்று ஓரிஜென் என்பவரும், பரி. பவுல் தம்முடைய விடுதலைக்குப்பின் மேல்தேசங்களுக்கும் ஸ்பானியாவுக்கும் போனதாய் கிளெமென்த், ஜெரோம் முதலியவர்களும் சாட்சிபகர்ந்திருக்கிறார்கள்.

b. பரி. பிலிப்பு யாக்கோபு என்பவர்களால் அரிமத்தியா ஊர் யோசேப்பு அனுப்பபபட்டு இங்கிலாந்துக்கு வந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தாரென்பது பல சரித்திரக்காரருடைய எழுத்துக்களினால் மாத்திரமல்ல, அவ்விடத்திலுள்ள ஞாபக ஸ்தம்பத்தினாலும் உறுதிபபடுத்தப்பட்டிருக்கிறது.

c. அகுஸ்தீன் இஙகிலாந்துக்குப் போவதறகு ஏறக்குறைய 300 வருஷங்களுக்குமுன் கி. பி. 305ல் தியோக்ளிசியன் என்ற ரோமராயன் காலத்திலுண்டான துன்பத்தில் பரிசுத்த அல்பான் (St. Albans) என்பவர் வெருலம் என்ற இடத்தில் இரத்தச்சாட்சியாய் மரித்திருக்கிறார்.

d. இங்கிலிஷ்பாஷை வார்த்தையாகிய சர்ச்சு (Church) என்பது கிரேக்கபாஷை வார்த்தையாகிய "கியூரியாக்கி" என்பதிலிருந்து தோன்றினது. ரோமர், சபை அல்லது கோவில் என்றர்த்தமுள்ள வார்த்தையை வழங்கினதேயில்லை; அவர்களுக்கு "சர்ச்சு" என்ற வார்த்தை தெரியவுமாட்டாது. ஆகையால் கிறிஸ்துமார்க்கம் இங்கிலாந்துக்கு ரோமரால் கொண்டுவரப்படவில்லையென்பது நிச்சயமாயிருக்கிறது.

e. இங்கிலாந்து சபை ஆசியாதேசத்து வழக்கங்களை அவர்களோடே சேர்ந்து அனுசரித்ததாகவும் அவர்கள் ஈஸ்தர்பண்டிகையை கொண்டாடின வழக்கத்திலும் பரிசுத்த ஞானஸ்நானங்கொடுத்த விதத்திலும், முற்றிலும் ரோமசபை வழக்கங்களுக்கு எதிரிடையாய் நடந்துவநததாகவும் அகுஸ்தீன் என்பவரே சொல்லியிருக்கிறார். ஆகையால் இங்கிலாந்துசபையானது கிரேக்கசபை அல்லது ரோமான்முதலிய சபைகளும் உற்பத்தியான ஆசியாதேசத்து சபைகளின் வழியாயும் வாய்க்கால்மூலமாயும் உண்டாகியிருக்கிறது.

f. ரோமாபுரி கணகாணிமார், முதல் ஆறு நூற்றாண்டுகள் வரை இங்கிலாந்தில் அதிகாரம் செலுத்தவில்லையென்பது முந்தின நியாயங்களினால் துலங்குகிறதுமன்றி, கி. பி. 590ல் பாப்பாயிருந்த கிரகோரி என்பவருக்கு பிரித்தானியாதேசமுங்கூட முற்றிலும் தெரியாமலே இருந்தது. எப்படியென்றால் சில இங்கிலிஷ்காரப்பிள்ளைகள் அடிமைகளாக ரோமா

புரிக்குப் போனதில் பாப்பு அவர்கள் அழகைப்பார்த்து அதிசயப்பட்டு, இவர்களிருக்கப்பட்ட பிரித்தானியாதேசம் அஞ்ஞானதேசமா? அல்லது கிறிஸ்தமானதேசமா? என்று விசாரித்தான். அதின்பேரில் அகுஸ்தீன் என்பவர் வந்து விசாரித்து சபைகளும் கண்காணிமார்களும் இருப்பதை எழுதியனுப்பினார்.

14. வினா. அப்போஸ்தலர் காலமுதல் கிறிஸ்தவர்களிருந்தாலும் கண்காணிமாரும் இருந்தார்களென்று காட்டக்கூடுமா?

விடை. *a* "கண்காணியில்லாமல் சபையில்லை" என்பது பூர்வ கிறிஸ்தவ சுலோகம். இக்காலத்தில் டிசென்றருக்குள் இருக்கிறபடி முற்காலத்தில் குருவுங் கணகாணியுமில்லாத சபை இருந்ததேயில்லையென்பது பிரத்தியட்சமான காரியம்.

b. கி. பி. 324 ல் பிராஞ்சுதேசத்திலுள்ள ஆர்லீஸ்பட்டணத்தில் கூடிய சங்கத்தில் தோனேத்தா (Donatists) என்பவர்களுடைய கொள்கையைக் கண்டிக்கும்படிக்கு இங்கிலாந்திலிருந்து யார்க்பட்டணத்து கண்காணியாகிய எபோரியஸ், காலசெஸ்தர் பட்டணத்துக் கணகாணியாகிய அடெல்பியஸ், லண்டன்பட்டணத்துக் கண்காணியாகிய ரெச்த்தீதூஸ் என்ற மூன்றுபேரும் சேசர்டாஸ் என்ற குருவானவரும் ஆர்மீனியுஸ் என்ற உதவிக்குருவானவரும் போயிருந்திருக்கிறார்கள்.

c. கி. பி. 325 ல் பித்தீனியாவிலுள்ள நிசேயாபட்டணத்தில் ஆரியருடைய கொள்கையைக் கண்டிக்கும்படி கூடின பெரிய சங்கத்தில் பரி. அதனேசியு என்பவரும் பாயிச்சியர்ஸ்பட்டணத்துக் கண்காணியாகிய ஐலாரி என்பவரும் சொல்லியபடி இங்கிலாந்துசபை கணகாணிமார் மூவர்போயிருந்து பேசினதாக அறியவருகிறோம்.

d. அப்படியே கி. பி. 347 ல் கூடின சார்டிக்கா என்ற சங்கத்திலும் 359 ல் கூடின ஆர்மினம் (Arminum) என்ற சங்கத்திலும் போயிருந்தார்கள். அங்கே போனவர்களில் மூன்று இங்கிலிஷ் கண்காணிகள்மாத்திரம இராயனால் கொடுக்கப்பட்ட வழிச்செலவு பணத்தை வாங்கினார்களென்று வாசிக்கிறோம். ஆகவே 596 ல் பரி. அகுஸ்தீன் போனபோது இங்கிலாந்தில் ஒரு சிரேஷ்ட கண்காணியாரும் எழு மற்ற கண்காணிகளும் குருமாரும் உதவிகுருமாரும் இருந்தார்களென்பது மறுக்கக்கூடாததாயிருக்கிறது.

15. வினு. காரியம் இப்படியிருக்க, இங்கிலாந்துசபையின் அப்போஸ்தலத் தொடர்ச்சியைப பழுதுள்ளதாய்க் குற்றப்படுத்தவேணடுமென்று ரோமானித்தார் முதலியவர்கள் செய்த மாறுபாடென்ன?

விடை. எலிசபெத் ராஜாத்தியின் காலத்தில் நம்முடைய முதலாவது கண்காணியாருடைய கணகாணிப்பட்டத்தைப் பற்றி நாக்ஸ் எட் என்ற இடத்தில் (Nag's Head Tavern in Cheapside) அந்தரங்கமாயக் கொடுத்ததாக குறைசொன்னூர்கள். இது முற்றிலும் கட்டுபபாடு எ்றும் ஒவ்வாத பொய்யும அபத்தமுமான ஏற்பாடென்றும் வீணுய் உற்பத்திசெய்த கதையென்றும் 1731ல் தோமாஸ் பிரவுன என்பவரால் ரூபிக்கப் பட்டது. அதுமுதல் கல்விமானுன எந்த ரோமானித்தானும் விவேகியான எந்த பியூரிட்டனும் அதைபபற்றி நாவெடுத்து பேசுவதற்கு வெட்கபபட்டு நின்றுபோச்சுது. இங்கிலாந்து தேச சரித்திரக்காரனுகிய லிங்கார்ட் (Lingard) சொல்லுகிறது என்னவென்றால், "பார்க்கர் (Parker) என்ற சிரேஷ்ட கண் காணியாருடைய அபிஷேகம ஆரும் எட்வார்ட் ராஜாவின் முறைமைக்குச் சற்றேறக்குறைய சரியாய் நடத்தப்பட்டது. அபிஷேகஞ்செய்த நாலுபேரில் இரண்டுபேர் பார்லோவுவ், ஆட்ஸ்கின்ஸ் (Barlow and Hodgskins) ரோமமுறையின்படி கண்காணிப்பட்டம் பெற்றவர்களாயிருந்தார்கள். மற்ற இரண்டுபேரும் திருத்தபபட்ட இங்கிலாந்து முறைபபடிககு கண்காணிப்பட்டம் அடைந்தவர்களாயிருந்தார்கள். இது 1559-ஆம் டிசம்பர்மீ 17உ யில் வெளியரங்கமாய் நடந்ததென்பதே"

16. வினு. இங்கிலிஷ்சபையின் அப்போஸ்தலர் தொடர்ச்சியை லத்தீன்சபையானது அதற்கு பிந்தினகாலத்தில் ஒப்புக்கொண்டதா இல்லையா?

விடை. ஒபபுக்கொண்டிருந்தார்கள். பாப்புகளும ரோமானித்தாரும் அங்கிகரித்து எலிசபெத்து ராஜாத்தியின் காலத்தில் 12 வருஷத்துக்கதிகமாய் கோவிலுக்கு வந்து ஆராதனைகளில் சேர்ந்து ஐக்கியமாயிருந்தார்கள். இங்கிலாந்து சபையின் உபதேசமும் முறைமைகளும் அடங்கிய திருத்தபபட்ட பொதுவான ஜெபபுத்தகத்தை ரோமாபுரி பாப்புகளாகிய 4-வது பவுல் என்பவரும 4-வது பையஸ் என்பவரும், ஒப்புக்கொண்டு எலிசபெத்துராஜாத்தி பாப்பானவருடைய அதிகாரத்தை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டார்கள்.

மேற்படி ராஜாத்தி அதற்குச் சம்மதிக்கமாட்டோம் என்று சொன்னதினாலே 5-வது பையஸ் என்ற பாப்பானவர் நம்முடைய கோவில் ஆராதனைகளுக்கு வந்துகொண்டிருந்தவர்களைத் தடுத்து பயமுறுத்தி 1569-ளு பெப்ரவரி 23௳ சபைக்குப் புறம்பாக்கும் கட்டளையை அவர்களுக்கு விரோதமாய்ப் பிறப்பித்தார்; அதுமுதல் இருசபையும் பிரிந்துபோயிற்று.

17. வினா. நம்முடைய சபையை அப்படி அவர்கள் ஒப்புக்கொண்டிருந்ததற்கு எழுத்துமூலமான ஆதாரம் ஏதாவதுண்டா?

... விடை. அநேகமுண்டு. உதாரணமாக, மாண்டு பெல்லியரிலுள்ள ரோமான கண்காணியாராகிய கோல்பர்ட் (Colbert) என்பவர் தம்முடைய குருமாருடைய உபயோகத்துக்காகத் தம்முடைய அனுமதியால் 1701ல் பிரசுரஞ்செய்து 1795ல் அச்சிட்ட கேள்வியும் விடையுமான பிராஞ்சுபுஸ்தகம் 297-ம் பக்கம் 3-ம் அதிகாரம் 2-ம் பிரிவில் பின்வருமாறு எழுதியிருக்கிறார். அதின் மொழிபெயர்ப்பு:—

கேள்வி. "அப்போஸ்தலத் தொடர்ச்சி இங்கிலீஷ் என்றழைக்கப்பட்ட சபையிலுள்ள அநேக கண்காணிமாருக்கு முக்கியமாய் அவர்கள் ரோமசபையிலிருந்து தங்களை பிரித்துக்கொண்ட காலமுதல் இல்லையென்று நீ மறுக்கக்கூடாதே?

உத்தரவு. "அந்தத் தொடர்ச்சியையுடைய சில கண்காணிமார்கள் இருக்கிறார்கள் என்பது நான் ஒபபுக்கொள்ளக்கூடிய காரியமாகவேயிருக்கிறது."

மார்ட்டின் லுத்தர் தன் குருப்பட்டாபிஷேகப் பாத்தியத்தை கி. பி. 1507ல் பாப்புவுக்குக்கீழ் ரோமான் கண்காணியாட்சி முறைமையின்படிக்குத் தாம் பெற்றுக்கொண்டதாக எழுதியிருக்கிறார். சீர்திருத்தலை நடப்பித்தவர்களில் முக்கியமானவர்களெல்லாரும் ரோமான் கொள்கைகளை வெறுத்ததினாலே அவர்கள் பெற்றுக்கொண்ட கண்காணிப்பட்டம் அல்லது குருப்பட்டம் செல்லாதென்று சொல்வது தப்பிதம். அந்திரேயா கண்காணியார் தாம்செய்த ஒரு பிரசங்கத்தில் 29-வது வேதமார்க்கப்பிரமாணத்தை அனுசரித்துச் சொல்வது என்னவென்று கேட்டால் "பரி. பேதுரு கொடுத்த ஞானஸ்நானம் யூதாஸ்காரியோத்து கொடுத்ததைவிட சிரேஷ்டமானதல்ல; இரும்பினால் செய்யப்பட்ட முத்திரையானது பொன்னினால் செய்யப்பட்ட முகர் அல்லது முத்திரைக்கொப்பாகவே பூரண


மாய்க் கடிதத்தில் அழுத்தமாய்ப் பதியக்கூடிய தன்மையுள்ளது" என்கிறார்.

18 வினா. இங்கிலாந்தில் சபைகளும் குருக்களும் கண்காணிமாரும் பரி. அகுஸ்தீன் காலத்துக்கு முன் இருந்தது சரியே. அவர்களுக்குப் பொதுவான ஜெபபுத்தகமும் சாக்கிரமெந்துக்குரிய முறைமைகளும் இருந்ததா?

விடை. ஆம். இங்கிலாந்தில் இரண்டாவது நூற்றாண்டின் துவக்கமுதலே சின்ன ஆசியாவிலுள்ள எபேசு பட்டணத்திலிருந்து பிராஞ்சுதேசத்துக்கு வந்த மிஷனெரிமார்களால் ஜெபமுறைகள் கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டது. காலை மாலை ஜெபமுறைகள் திட்டமாய்த் தெரியவில்லை. ஆனால் காலிகன் அல்லது பிராஞ்சு ஜெபமுறைகள் கெர்மேனஸ் (Germanus), லூபஸ் (Lupus) என்பவர்களால் கி. பி. 429ல் இங்கிலாந்தில் பிரபலமாயிருந்தன. மேற்படி காலிகன் ஜெபமுறையின் சுருக்கமாவது: *a*. பழைய ஏற்பாட்டில் ஒருபாடம்; *b*. நிருபங்களில் ஒரு பாடம்; *c* பெனிடிக்டஸ் என்ற கீர்த்தனை; *d*. சுவிசேஷவாக்கியம்; *e*. பிரசங்கம்; *f* ஜனங்களுக்காக ஜெபங்கள்; *g*. ஞானஸ்நானத்துக்கு ஆயத்தக்காரரை அனுப்பிவிடுதல்; *h*. அந்த நாளுக்குரிய புத்திமதிகள்; *i*. கீதத்தோடு காணிக்கை வாங்குதல்; *j*. அப்பம் ரசம் படைக்கப்பட்டு மூடப்படுதல்; *k*. பரிசுத்தவான்களின் பேர் வாசிக்கப்படுதல்; *l*. சமாதானமுத்தம்; *m*. சுருக்கஜெபங்கள்; *n*. உங்கள் இருதயங்களை உயர்த்துங்கள் என்பவைகள்; *o* திரித்துவ கீத முகவுரை தோத்திரம், *p*. பரி. நற்கருணைப்பிரதிஷ்டை; *q* பரிசுத்தாவிக்காக ஜெபம்; *r*. அப்பத்தைப் பிட்குதல்; *s*. கர்த்தருடைய ஜெபம்; *t* ஜனங்களை ஆசீர்வதித்தல். *u*. கீதத்தோடு பரி. நற்கருணையைப் பரிமாறுதல்; *v*. ஸ்தோத்திரஞ்செலுத்தல் என்பவைகளே. இவைகளைக் கவனிக்கிறவர்கள் தற்காலத்து இங்கிலிஷ் முறைமைக்கு இது ஏறக்குறைய சரியாயிருக்கிறதைப் பார்க்கலாம்.

19. வினா. கிறிஸ்தவர்களையும், கண்காணிமார்களையும், தனக்குத்தானே சரியான ஜெபமுறைகளையும் உடைத்தாயிருந்த பிரித்தானியா சபையைப்பார்த்த பரி. அகுஸ்தீன் ஜெபமுறைகளைப்பற்றிப் பெரிய கிரகோரி என்ற பாப்பானவருக்கு எழுதிய கடிதமென்ன?

விடை. "விசுவாசம் ஒன்றாயிருக்க என் திருச்சபைவழக்கங்கள் பேதமாயிருக்கிறது? பரிசுத்த ரோமான்சபையில் பரி


அப்போஸ்தல ஜெபமுறை வரலாறு.
பரி. யாக்கோபு அல்லது எருசலேமின் ஜெபமுறை
பாசில் ஜெபமுறை
சீரியாக் ஜெபமுறை
கிறிசொஸ்தம் ஜெபமுறை
ஆர்மீனியன் முறை
பரி. மாற்கு அல்லது எருசலேமின் ஜெபமுறை
பரி. ததேயுஸ் அல்லது கிழக்கத்து ஜெபமுறை
நெஸ்தோரியர் ஜெபமுறை
பரி. பேதுரு அலலது ரோமாபுரி ஜெபமுறை
அம்புரோஸ் ஜெபமுறை
லீயோவின் ஜெபமுறை
கலேசியஸ் ஜெபமுறை
கிரகோரியின் ஜெபமுறை
ரோமசபையின் தற்கால முறை
பரி. யோவான் அல்லது எபேசு சபையின் ஜெபமுறை
லியோன்ஸ் பட்டணமுறை
ஸ்பாணியர் முறை
பிரித்தாணியா அல்லது இங்கிலிஷ் முறை

சுத்த நற்கருணையைப் பரிமாறும் வழக்கம் ஒருவிதமாயும் காலிக்கன் திருச்சபையின் வழக்கம் என் இன்னொருவிதமாயும் இருக்கவேண்டும் என்பதே."

20. வினா. கிரகோரி என்பவர் இதற்கு எழுதியனுப்பின பதில் உத்தரவென்ன?

விடை. "என் சகோதரனாகிய உனக்கு நீ வளர்ந்த ரோமான் சபை வழக்கங்களெல்லாம தெரிந்திருக்கிறது. ஆனால் என்னுடைய பிரியமென்னவென்றால், ரோமான் சபையிலாவது காலிக்கன் சபையிலாவது அல்லது இன்னொரு சபையிலாவது சர்வவல்லமையுள்ள தேவனுக்குப பிரியமாயிருக்கப்பட்டது எதுவோ, அதைக் கண்டுபிடித்து எச்சரிக்கையாய்த் தெரிந்தெடுத்து, அப்படி பல சபைகளிலுமிருந்து சேர்த்ததை நீ விசுவாசத்தில் புதிதாய்ச சேர்ந்தவர்களுக்குப போதிப்பாயாக. ஏனென்றால் காரியங்கள் இடங்களினிமித்தம நேசிக்கப்படாமல் இடங்கள் நல்ல காரியங்களைத் தெரிந்தெடுத்து கொள்ளவேண்டும; அவைகளை ஒன்றாய்ச சேர்த்தவுடனே அங்கிலேயருடைய உபயோகத்துக்காக அவைகளை அவர்களுடைய மனதில் பதியும்படி செயவாயாக" என்று போபெற்ற பெரிய கிரகோரி எழுதினார்.

21. வினா. இதற்கப்பால் நடந்ததென்ன?

விடை. மேற்சொன்ன உத்தரவினபடி பிரித்தானியருடைய ஜெபமுறையைப பரி. அகுஸ்தீன் ஆதாரமாக வைத்துக் கொண்டு பரி. லீயோ, காசியான எனபவாகளால இயற்றப்பட்டுப் பிரான்சுதேசத்தின தெனபாகங்களில் வழங்கிவந்த ஜெபமுறைகளில் முக்கியமானவைகளைத் தெரிந்தெடுத்துச் சேர்த்து ஒரு புது ஜெபமுறையுண்டாக்கி சாக்சோனிய சபைக்குக் கொடுத்தார். ஆனால் அவருக்குப்பின் வந்தவர்கள் ரோமஜெபமுறையை நிலைநிறுத்தவும் இங்கிலீஷ்ஜெபமுறையை எடுத்துப் போடவும் முயற்சிசெய்ததில் முற்றிலும் அப்படிச்செய்ய அவர்களால் கூடாமற்போயிற்று. சில கண்காணிமார் தங்கள் ஜனங்களை வசப்படுத்தி ரோமமுறைமையை அங்கிகரித்தும் மற்றவர்கள் வயிராக்கியமாய்த் தங்கள் முற்பிதாக்களுடைய முறைமையைவிடாது பற்றியுங்கொண்டார்கள். பிந்தியகாலத்தில் அந்தந்தக் கண்காணிமார் அவரவர்களுடைய சபைக்குத் தம்தம் இஷ்டப்படிக்கு ஜெபமுறைகளைவைத்து ஆராதனை நடப்பிக்கும்படி நேரிட்டது. அப்படிப்பட்ட முறைமைகளில் யார்க்கு, சாரம், எரிபோட், எக்ஸற்றர், லிங்கன், பாங்கார், அபர்டீன்

என்ற ஏழு முறைமைகள் முக்கியமானவைகளாயிருந்தது. இது வுந்தவிர வித்தியாசாலைகளில் வெவ்வேறு முறைமைகள் இருந்தவென்பதைப் புஸ்தகசாலைகளில் தற்காலத்திலும் பத்திரமாய்க் காக்கப்பட்டுவருகிற கையெழுத்துப் பிரதிகளினால் அறியலாம். இங்கிலிஷ் முறைமைகளிலெல்லாம் 1085 ல் ஆஸ்மண்டு என்ற சாலிஸ்பரி கண்காணியாரால் இயற்றப்பட்ட சாரம் என்ற முறை முக்கியமுள்ளது. அதில் பிரவெரி, மிசால், மாணியல முதலிய பழைய ஜெபமுறைகளெல்லாம அடங்கினதாயிருந்து சீர்திருத்தலின்காலமட்டும் நிலைத்திருந்தது. யார்க்கு, எரிபோர்ட் முறைமைகளும் பத்திரமாய்க் காக்கப்பட்டு அச்சிடப்பட்டது. ஆகையால் இங்கிலிஷ் சபையைப்பற்றி ரோமான் சபை குறைசொல்லவும் தனனைப்பற்றி மேன்மைபாராட்டவும் இடமேயில்லை.

22. வினா. அகுஸ்தீனுக்கு முந்தின ஆறு நூற்றாண்டுகளிலும் இங்கிலாந்து தனனரசாட்சி சபையாயிருந்தபோதிலும் அகுஸ்தீன வந்து எதல்பட்ராஜாவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் குணப்படுத்தினதினால் ரோமாபுரிக் கண்காணியாருக்கு அதிகாரமுண்டல்லவா?

விடை. அப்படி; சாக்சோனியர் அவனால் கிறிஸ்துவக்குட்பட்டார்களேயொழிய பாப்புவுக்குட்படவில்லை எதல்பட்ராஜாவுக்குமுன் அவனுடைய ராணியும் அவளால் பலரும் சபையிலசேர்ந்து காண்டர்புரி பட்டணத்தில்தானே இங்கிலாந்துசபைக்கு ஒரு கண்காணியார் லியூட்ஹார்ட் (Ludhard) இருந்திருக்கிறார். குணப்பட்டதினாலே பாப்புவக்கு அதிகாரமுண்டானால், ரோமாபுரியும் மற்றச் சபைகளும் எல்லா சபைகளுக்கும் தாய்ச்சபையாகிய எருசலேம சபைக்கல்லவா கீழடங்கியிருக்கவேண்டியது! மேலும் இது கி. பி. 431 ல் சிப்புருதீவைப்பற்றி எபேசுபட்டணத்தில் கூடின பெரிய சங்கத்தின் 8ஆம் சட்டங்களுக்கு விரோதமாயப் பிறனுடைய எல்லைக்குறியைக் கடந்துபோவதாயிருக்கிறது. கிரகோரி என்பவரும மற்றப் பாப்புகளும் இந்தச் சங்கத்தை ஒப்புக்கொண்டவர்களாயிருந்தார்கள். பரி. அகுஸ்தீன். முதலாவது தானட்டு (Thannet) என்ற தீவில்வந்து இறங்கியிருந்து கொண்டு எதல்பட்ராஜனிடத்தில் தான் கெண்டு மாகாணத்தில் தேவவசனத்தைப் பிரசங்கம்பண்ணும்படி உத்திரவுகேட்டுப் பெற்று நடத்தினதினாலே இங்கிலாந்துராஜாக்களே கொன்ஸ்தந்தீன் இராயனைப்போலத் திருச்சபைக்குத் தலைவர்களாயிருக்கிறார்கள்.

23. வினா. பரி. அகுஸ்தீனுக்குப் பட்டங்கொடுத்து அவரை அனுப்பினதினாலே ரோமாபுரி தாய்ச்சபையாய் மதிக்கப்பட வேண்டாமோ?

விடை. பரி. அகுஸ்தீன் கால்தேசத்தில் பட்டம்பெற்று வந்தார்; ரோமாபுரியில் பட்டம்பெற்று வந்தாலும் அதினால் அதிகாரச் சுதந்தரம் இல்லை. பரி. பேதுரு பரி. மாற்குவை அலெக்சந்திரியாபட்டணத்து முதற்கண்காணியாக நியமித்து அனுப்பினதுபோல அகுஸ்தீனும் அனுப்பப்பட்டாரென்று வைத்துக்கொள்வோம். அலெக்சந்திரியா பட்டணத்துச்சபை, குருக்கள், கண்காணிமார், சிரேஷ்டர்கள்பேரில் ரோமாபுரி பாபபுகள் அதிகாரம் செலுத்தவில்லை. அப்படியானால் இங்கிலாந்துசபையின்பேரில் எபபடி அதிகாரம் செலுத்தத் துணியலாம்? கான்டர்புரி பெரிய அத்தியட்சாதீனம்; 2-வது அர்பான் என்னும பாபபானவரால் தன் அத்தியட்சாதீனத்துககுச் சமமாக மதிக்கபபட்டுவந்திருக்கிறது. பெரிய கிரகோரி என்பவர் தான் எழுதிய நிருபங்களில் எதல் பட்ராஜாவை கொன்ஸ்தந்தீன இராயனுககும், பெர்ததா ராஜாத்தியை எலனை இராணிககும் ஒப்பிட்டு, அவர்கள் இங்கிலாந்துதிருச்சபைககுச் செய்த பகதியுள்ளதும் புத்தியுள்ளதுமான நன்மைகளைககுறித்து வியந்துபேசுகிறார்.

24. வினா. பன்னிரண்டாம் நூற்றாண்டின் து[illegible]ராவிட் இங்கிலாந்தின் சிரேஷ்ட கண்காணிமார் பாப்[illegible]யின் [illegible]தில் ப[illegible] (Pall) என்ற அதிகாரம்பெற்று ஆணையி[illegible] [illegible]கொடுத்துக் கீழடங்கியிருந்ததில்லையா?

விடை. ஆம், இது மனச்சாட்சிககு விரோதமாய்த் தந்[illegible]ராலே நடநததாயும் இங்கிலாந்திலுள்ள ராஜாககளுக்குப் ப[illegible]மில்லாததாயுமிருந்தது. இரண்டாவது உவில்லியம் என்ற ராஜன் இப்படிப பாப்புவின அதிகாரத்தையும் ஆணையையும் ஏற்றுக்கொண்ட ஒரு இங்கிலிஷ் கண்காணியானைத் தன் தேசத்திலிருந்து ராஜாங்க விரோதியாக விரட்டிவிடவேணென்று சொல்லியிருக்கிறார். இபபடிப்பட்ட நியாயமில்லாத ஏற்பாட்டுக்கு ஒருவராகிலும் சம்மதித்து ஆணையிடக்கூடாதென்று கி. பி. 1661 ல் ஐக்கிய ஏற்பாட்டுச்சட்டத்தில் கண்டிப்பாய் விதிக்கப்பட்டது. மேலும் இது தேவனுக்குப் பிரியமில்லாத காரியமாயும் ஏரோதுராஜா யோசிக்காமல் பாவமான ஆணையிட்டுப் பின்பு அதை நிறைவேற்றினதற்கு ஒப்பாயுமிருக்கிறது.

25. வினா. இதினாலே பாப்புவுக்கு இங்கிலாந்துசபையின் மேல் அதிகாரமுண்டாயிருக்கிறதல்லவா?

விடை. இல்லை. ராஜாங்கத்துக்கும் திருச்சபைக்கும் விரோதமான இந்தப புதுஏற்பாடு நடக்கக்கூடாதென்று திருச்சபை தன் சங்கங்களாலும், ராஜாங்கம் பார்லிமெந்து என்ற கூட்டத்தாரின் சட்டங்களாலும் விரோதித்துத் தள்ளியிருக்கிறது.

26. வினா. அதை ரூபித்துக்காட்டு?

விடை. நார்தம்பர்லண்டு ராஜாவாகிய எக்விரிட் என்பவன் கி. பி. 680ல் கண்காணிமார்களுடைய யோசனைபபடிக்கு யார்க்பட்டணத்துக் கண்காணியாராகிய உயில்விரிட் ரோமாபுரிக்கு அப்பீல்செய்ததற்காக அவனைக் காவலில வைத்தான். எக்பிரிட்டுக்குப் பினவந்த அல்பிரிட், எட்வார்ட், 1-ம் ஹென்றி முதலானவர்கள் அபபடியே செய்ததுமன்றி அவையெல்லாம் பழைய சட்டங்களை அனுசரித்து [illegible] ரண்டன ஏற்பாட்டில் கி. பி. 1164லும, குருமார் [illegible] சட்டங்களில கி. பி 1350, 1363, 1389, 1392 வருஷங்களிலும், கடைசியாக 8-வது ஹென்றிராஜனால் [illegible] 1531-1543 வரையிலும் பலமாய் எதிர்க்கபபட்ட[illegible] கி. பி. 1395ல் காண்டாபுரி சிரேஷ்ட கண்காணியாயிருந்த கோட்நேய் (Courtenay) என்பவர் இவைகளை ராஜாவுக்குக் காட்டி, பார்லிமெந்து சஙககூட்டத்தில் பாபபானவர் சபையிலும் கண்காணிமார்கள்மேல் யாதொரு அதிகாரமும செலுத்தாதபடி இங்கிலாந்து பழைய சுவாதீனத்துக்காக வழக்காடினார்.

27. வினா. ஸ்தேவான், 2-வது ஹென்றி, யோவான் என்ற ராஜாக்கள் ரோமாபுரிக்கு அபபீலசெய்துகொள்ளவும் தேச அதிகாரமும் திருச்சபை அதிகாரமும் பாபபானவராலே நடந்துவரவும் சம்மதித்து ஒத்திருக்கவில்லையா?

விடை. ஆம், இவர்கள் ரோமானுக்குச் சார்பாயிருந்து இப்படிச் செய்தார்கள் ஆனால் ராஜாங்கச் சட்டமும் திருச்சபை சங்கங்களும் ஒத்திருந்து இந்த ராஜாக்கள் இபபடி செய்யவில்லை. அவர்கள் தேவனாலே பெற்ற ராஜ அதிகாரத்தை மற்றவர்களுக்கு கொடுப்பது ஏசா தன் முதற்பிறபபுச் சுதந்தரத்தை விற்றதுபோலிருக்கிறது. கடைசியாக 8-வது ஹென்றி கால முதல் ராஜாக்களும், பார்லிமெந்தும் திருச்சபையும் ஒன்றாய்ச் சேர்ந்து பழைய சுதந்தரத்தைப் புதுப்பித்தார்கள். இது 39-ம் பிரமாணத்தால் உறுதிப்படுத்தப்பட்டது.

28. வினா. 8-வது ஹென்றிராஜன் கேட்ட பூஜையைத் திருப்திசெய்யும்படிக்கு இங்கிலிஷ்சபையில் சீர்திருத்தலை நடப்பித்து அக்கிரமஞ்செய்யவில்லையா?

விடை. சீர்திருத்தலுக்கு விரோதிகள் சொல்லிய இந்தக் காரியத்தை நியாயதோரணையினிமித்தம் ஒருவாறு ஒப்புக்கொண்டாலும் நடந்த சீர்திருத்தல ஹென்றியுடையதல்ல, தேவனுடையது. வேலையைச் செய்தவன் கூலியாள், அந்த வேலை அவனல்ல, வேலை வேறாகவே இருக்கிறது. உதாரணமாக, சாலொமோனின் தேவாலயம் தீருவிலுள்ள அஞ்ஞானவேலையாட்களால் லீபனோனின் கேதுருக்களை வெட்டிக்கொண்டுவந்ததினால் கட்டப்பட்டது: யெகூராஜன் தேவனைப் பிரியப்படுத்தி நடக்கவில்லை; ஆனால் அவன்செய்த சீர்திருத்தம் அவருக்குப் பிரியமாயிருந்தது நேபுகாத்நேச்சாரும் அாததசஷ்டா ராஜனும் விக்கிரகத்தை வணங்கிவந்தாகள்; ஆனால் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்துக்காகச் செய்த விளம்பரங்கள் தெய்வபததமுள்ளதாயிருந்தது. நம்முடைய ரட்சகர் பிரதிஷ்டைசெய்யப்பட்டுப் பிரசங்கம்பண்ணி ஆராதனைசெய்த இரண்டாம் தேவாலயம் அவரைக் கொலைசெய்யத்தேடின கொடூரனும் அவபக்தியுள்ளவனுமான ஏரோது ராஜனால் பழுதுபார்க்கப்பட்டுச் சிறப்பாய்க் கட்டப்பட்டது. அப்படியே சீர்திருத்தலை நடத்தின மனுஷருடைய நடக்கைகளை நாம் வியந்துகொள்ளாவிட்டாலும் தம்முடைய மகிமைக்காகவும் தம்முடைய சபையின் நன்மைக்காகவும் தேவன் கருவிகளையும் எத்தனங்களையும் கைபாடி பொல்லாபபிலிருந்து நன்மைதோன்றும்படி செய்து தம்முடைய வேலையைத தாமே நடபபித்ததற்காக அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுததுகிறோம். சீர்திருத்தலில் பழைய சுத்த உபதேசங்களையும் சடங்குகளையும் ஏற்றுக்கொண்டு இடையில் ரோமானால் வந்த புதிதான தப்பறைகளை அகற்றி, தான் விழுந்த நிலைமையிலிருந்து எழும்பி சத்தியத்தை இரததச்சாட்சிகளின் ரத்தத்தால் முத்திரித்து முன் வியாதியடைந்திருந்த இங்கிலாந்துசபை நோய்நீங்கித் தன்னைக் கழுவிச் சுத்திகரித்துக்கொண்டது. சீர்திருத்தலுக்குப் பின்னுள்ள இங்கிலாந்து சபை முந்தின ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள பூர்வீக அப்போஸ்தல திருச்சபையின் நிலைமைக்குக் கொணடுவரப்பட்டிருக்கிறது. நாகமான் வியாதியடையுமுன்னிருந்த குஷ்டரோகமில்லாத சரீரம் யோர்தான் நதியில் முழுகினபிற்பாடு அவனுக்குக் கிடைத்தாற்போல் ஆகியிருக்கிறது.

29. வினா. எட்டாவது ஹென்றி ராஜா காரணமாயிராவிட்டால் சீர்திருத்தம் உண்டாவதற்கும் ஜெபமுறைகள் சுயபாஷையில் உண்டாவதற்கும எதுவாயிருந்த காரணமென்ன?

விடை. எட்டாவது ஹென்றி ராஜா காரணமாயிராமல், பரிசுத்த வேதாகமம் இங்கிலிஷ் பாஷையில் மொழிபெயர்க்கப் பட்டு அச்சுப்பதிப்பிக்கபபட்டுக் கோவில்கள்தோறும் வைக்கப பட்டு வாசிக்கப்பட்டதினால் முன ரோமாணித்தாரால் போடப்பட்ட முக்காடு எடுபட்டுபோய் வேதத்தின் சத்திய அறிவு விரதியாகி சகல மனிதருடைய இருதயத்திலும் சத்தியத்தின் ஒளி, பிரகாசத்தைக் கொடுத்ததே சீர்திருத்தல் நடபபதற்கும் ரோமான் தப்பறைகளைத் தள்ளுவதற்கும் பூர்வீக முறைமைகளை அனுசரித்து ஜெபமுறைமைகளை இங்கிலிஷில் மொழி பெயர்பபதற்கும் முக்கிய காரணமாயிருந்ததென்பதை சரித்திரங்களினால் அறியவருகிறோம்.

30. வினா. பரிசுத்த வேதாகமம் திருப்பபபட்ட விஷயத்தைக் காலக்கிரமத்தோடே சொல்லு?

விடை. 1382 உவிக்லிவ் என்பவருடைய திருப்புதல் இது அச்சிடப்படவில்லை.

1516. எராஸ்மஸ் என்பவரின் திருப்புதல்.

1525. திண்டல் என்பவரின் புதியஏற்பாட்டுத்திருப்புதல், திண்டல் இதினிமித்தம் சிறையாகக் கோபோண பட்டணத்துக்குப்போனர்.

1535. மைல்ஸ் காவர்டேல் என்பவரின் முழுவேதாகமத் திருப்புதல். இது சூரிச்சுபபட்டணத்தில் ராஜ அனுமதி பெற்று 1537, 1539, 1550, 1553 வருஷங்களில் திரும்பத் திரும்ப அச்சிடப்பட்டு ஜனங்கள் வாங்கி ஆவலாய் வாசித்தார்கள்.

1537. யோவான் ராஜர்ஸ் (Rogers) என்று மறுபேர்கொண்ட தோமாஸ் மத்தேயு என்பவரின் முழுவேதாகமத் திருபபுதல், இவர் மரியாள் ராஜாத்திகாலத்தில் இதற்காக ரத்தச்சாட்சியாய் மரித்தார். இதில் உத்தரிக்கும் ஸ்தலத்தைப்பற்றியும், தள்ளும்படி யாகமங்களைப்பற்றியும் கவனிப்புகள் சேர்க்கப் பட்டிருந்தது.

1539. தாவணர் என்பவரின் திருப்புதல். முந்தின ராஜர்ஸ் என்பவரின் திருப்புதலைத் திருத்தினதாயிருந்தது.

1539. பெரிய வேதாகமம் என்று பேர்பெற்ற கிரான்மர் என்பவரின் திருப்புதல். இது 8-ம் ஹென்றி ராஜனால் பிரசித்தப்படுத்தப்பட்டு அவன் கண்காணிமார் யாவரும் தங்கள் தங்கள் சபைகளை வேதவாசிப்பில் தேற்றுவிக்கும்படி திட்டம் செய்தான்.

31. வினா. சீர்திருத்தப்பட்ட திருச்சபை ரோமானால் சில காலம் சீர்கெட்ட நிலைமையிலிருந்தல்லவா சீருக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது; அந்தச் சீர்கெட்டகாலத்தில் அது சபையல்லவே?

விடை. சபையாகவே இருந்தது. ஆனால் இப்போதிருக்கிற ரோமினசபையைப்போலத தவறின சபையாயிருந்தது. இஸ்ரவேலருடைய சபை ஆகாபின காலத்திலும் சபையாகவேயிருந்தது. யூதச்சபை பரிசேயருக்குள்ளும் சபையாயிருந்தது. மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த வேதபாரகர்களுக்கு ஜனங்கள் நியாயமான காரியங்களில் மாத்திரமல்ல, அவசியமில்லாத காரியங்களிலும் கூடக் கீழ்ப்படிந்திருந்தார்கள். எருசலேமின் மூப்பர்கள் கிறிஸதுவை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எருசலேம் பரிசுத்த பட்டணமாகவே இருந்தது. உலகமெல்லாம் ஆரியருடைய வேதப்புரட்டால் நிறைந்தகாலத்திலும் மெய்யான கிறிஸ்தவ சபை நிலைநின்று சாதித்தது. கர்த்தருடைய உடன்படிக்கைபபெட்டி பெலிஸ்தர் கையில் அகப்பட்டாலும் கர்த்தருடைய பரிசுத்த பெட்டியாகவே இருந்தது. பாபிலோனுக்குக் கொணடுபோகப்பட்ட பரிசுத்த பாத்திரங்கள் பாபிலோனிலும் பரிசுததமாகவேயிருந்தது. அப்பொழுது அது சபையாய் இருந்திருக்காவிட்டால் இப்போது சபையாயிருக்கமாட்டாது. அப்படியே தன் சீருள்ள நிலைமையிலிருந்து தவறின இங்கிலாந்து சபை ரோமானுக்குள்ளும் பரிசுத்த சபையாகவே இருந்தது. அப்படிக்கில்லாவிட்டால் மனுஷவேலையும் பூமிக்குரியதாயுமிருக்குமேயொழிய, தேவனுடைய வேலையும் பரலோகத்துக்குரியதாயுமிருக்கவே மாட்டாது. இஸ்ரவேல் யூத ஜனங்களுக்கு நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் ஆசாரிய முறைமையும் சீர்கெட்டகாலத்தில் முதலாயிருந்ததுபோல் ரோமானின் காலத்திலும் இங்கிலாந்து சபைக்கு தேவ இரக்கத்தால் சபைக்குரிய விசேஷித்த காரியங்களாகிய பரிசுத்த சாக்கிரமெந்துகளும் பரிசுத்த வேதமும் அப்போஸ்தல தொடர்ச்சியான குருமுறையும், கர்த்தருடைய ஜெபம், மூன்று விசுவாசப்பிரமாணம், பத்துக்கற்பனை

முதலிய தல்சட்டங்களும் இருந்துவந்ததால் மெய்யான சபை யாக்வே அக்காலத்திலும இருந்தது.

32. வினா. இங்கிலாந்து சபையின் 39 வேதமார்க்கப் பிரமாணங்கள் கி. பி. 1562ல் உண்டானது. ஆகையால் அது 300 வயதுள்ள புதுச்சபை. விசுவாசச்சட்டங்கள் புதிதாயுண்டான சபையைப் பூர்வீகமாயுள்ளதென்றும் கததோலிக் சபையென்றும் எப்படிச்சொல்லலாம்?

விடை. இந்த ஆட்சேபனையை நாம் ஒரு கேள்வி பிரமாணித்தாலாப் பார்த்துக் கேட்பதினாலே ரததுச்செய்து நியாயம் சொல்லலாம். அதாவது நிசேயா விசுவாசப்பிரமாணம, சீர் திருத்தும்படி பிரசுரஞ்செய்யப்பட்ட கி. பி. 325-ம் வருஷத்துக்கு முன் கிறிஸ்துவின் சிஷர்களால் நாட்டபபட்ட உலக மெங்குமுள்ள கத்தோலிக் சபையின் விசுவாசச்சட்டங்கள் எங்கேயிருந்தது? என்பதே. இங்கிலாந்து சபை தனனைச் சீர் படுத்திக்கொணடபொழுது அந்தச் சங்கத்திலுள்ள பிதாக்கள் சொன்னதுபோல "பூர்வீக வழக்கங்கள் நடந்துவருவதாக" என்று இந்தச் சபையும் சொல்லிற்று. நிசேயா சஙகத்துககு முன்னுள்ளசபைகள் பூர்வீகக் கத்தோலிக் சடையாயிருக்காவிட்டால் லத்தீன், கிரேக்கு இஙகிலீஷ் சபைகளும் சபைகளல்ல.—சபைச்சட்டங்கள் துவககமுதல் திருச்சபையினுல் வியார்த்தி செய்யப்பட்ட பரிசுத்த வேதாகமங்களிலிருந்து உண்டானது. மற்றச் சபைகளைப்போல அதுவும் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில் கூடுதல் குறைதலில்லாமல் சகலத்தையும் கைக்கொணடுவருகிறது. 39 பிரமாணங்களில் புது உபதேசங்கள் யாதொன்றையும் உண்டாக்காமல் பழைய மெய்யான உபதேசங்கள் இன்னின்னவைகளென்று மாத்திரம் சொல்லுகிறது. அவைகளில் இரட்சிப்புக்கு அவசியமான யாவும் பரிசுத்த வேதாகமங்களில் அடங்கியிருக்கிறதென்றும் பரிசுத்தசபையில் சந்தேகமின்றி யாவராலும் ஒபபுக் கொள்ளப்பட்ட திவ்விய அதிகாரமுள்ள புஸ்தகங்களே அவைகளென்றும், அவைகளிலிருந்து 3 விசுவாசப்பிரமாணங்கள் உற்பத்தியாகி, அதுமுதல் கத்தோலிக் சபைகளின அங்கிகாரம் பெற்று விசுவாசத்துக்குச் சட்டமாக வழங்கிவருகிறதென்றும் அவைகளில் கண்டிருக்கிறது. வேதவசனத்துக்கும் ஆதித் திருச்சபையின் வழக்கத்துக்கும் விரோதமாய்த் தேவாராதனை ஒழுங்குகளுக்குத் தெரியாத பாஷையில் நடத்தபபடுகிறதை அது தப்பிதமென்று உணர்த்தி மேற்படி பிரமாணங்களில் பூர்வீக

ஆகமக்காரர் பிதாக்களுடைய பட்டாபிஷேகமுறைமைக்குரிய சட்டங்கள், ஒமிலிகள், கனோன் சட்டங்கள் இவைகளை எடுத்துக்காட்டித் திருச்சபையின் பூர்வ உத்தமமான வழக்கங்களை ஸ்தாபித்திருக்கிறது. ஆனால் 'ரோமான்சபை' இவைகளுககு எதிரிடையாய் மற்றக்காலங்களிலும முக்கியமாய் 16-ம் நூற்றாண்டில்· கி. பி. 1445–63 வரை திரெண்டு (Trent) என்னும் சங்கத்திலும் வேதாகமத்துக்கு விரோதமானதும் அவைகளில் கண்டிராததுமான 12 புதப பிரமாணங்களைத் தனக்கு விசுவாசச் சட்டமாக்கியிருக்கிறது. "வைத்தியனே உன்னையே குணமாக்கு" என்று இங்கிலாந்துசபை அதைப்பார்த்துச் சொல்லும்படியாக தப்பிதம் கண்டுபிடிக்கிற ரோமான்தானே தப்பிதத்தில் விழுந்துகிடக்கிறது. மேற்படி திரெண்டில் கூடிய சங்கம் கூடததகாத கூட்டமும் நியாயமில்லாததும் திருச்சபை ஏற்பாட்டுக்கு விரோதமானதும் புது மார்க்கத்தையும் புது விசுவாசத்தையும உண்டாககி எல்லாரும் அதைக் கைக்கொள்ள வேண்டுமென்று அதிகாரத்தோடே கட்டளையிடுகிற சங்கமுமாயிருப்பதினாலே இங்கிலாந்து சபையல்ல, ரோமான்சபையே புதுமார்க்கமாயும் புதுச்சபையாயுமிருககிறது.

33. வினா. இங்கிலாந்துசபை சீர்திருத்தல் பெற்ற சபையாயிருந்தால் அந்தத் தேசத்தில் பல பிரிவினைச்சபைகளும் குழப்பங்களும் கட்சிகளும் மார்க்கவிஷயத்தில் ஒவ்வாமையும் உண்டாயிருப்பதற்குக் காரணமென்ன?

விடை. எந்த நன்மையான காரியங்களிலும் தீமையானது கலந்துகொள்வது உலகத்தில் சகசம். அப்படியே சீர்திருத்தலினால் அநேக நன்மைகள் உண்டாயிருந்தபோதிலும் சபைப் பிரிவினையாகிய தீமையும் ஊடே உண்டாகிவிட்டது. அது இங்கிலாந்து சபையின் குற்றமாயிராமல் பிரிவினைச் சபைகளின் குற்றமாகவேயிருக்கிறது. சீர்திருத்தலின் காலத்தில் சகலமும் தங்கள் இஷ்டப்படி நடக்கவேண்டுமென்று நியாயத்துக்கு விரோதமாயும் வேதத்துக்கு விரோதமாயும் பிடிவாதஞ் செய்தவர்கள் தாங்களே பிரிந்து லோத்தைபபோல் சோதோமுக்குப்போக ஆசைகொண்டார்கள். இங்கிலாந்து சபை அவர்களைச் சேர்த்துக்கொள்ள வருந்தி அழைத்தாலும் ரோமானைப் போல அவர்களும் சமாதானத்துக்கும் ஐக்கியத்துக்கும் இடங் கொடாமல் சாதனைசெய்கிறார்கள். ஆகையால் நம்முடைய சபை ரோமான்சபையை ஒருபக்கத்திலும் பிரிவினைச்சபைகளை மறுபக்கத்திலும் வைத்து இரண்டுக்கும் நடுவே சத்தியத்

தைப்பேசி அதைச் சாதித்து அந்தக் காலமுதல் நாளதுவரை தனக்கு ஒப்புவிக்கப்பட்ட சத்தியததுக்காகப போராட்டஞ் செய்வதில் உறுதியாயிருக்கிறது.

34. வினு, எந்த விஷயததில் அந்தக் காலமுதல் இந்தக் கேடான பிரிவினையுண்டாயிற்று?

விடை. ரோமான் சபையின உபதேசத் தப்பறைகளையும் வீண் சடங்காசாரங்களையும தள்ளினபோது பியூரிட்டன் (Puritans), லுத்தரன் (Lutherans) முதலியவர்கள் வேதத்தின் படி பழுதில்லாத ஆதித்திருச்சபை உபதேசங்களையும் தெய்வ பக்திக்கும் ஊன்றகட்டுதலுக்கும் உபயோகமான சடங்குக ளையும் ஆசாரஙகளையும் முற்றிலும் வேண்டாமென்று தளளி ஞர்கள். பெரும்பான்மையோர் அதைத் தடுத்து அபபடியல்ல, சத்தியவேதத்துக்கும் பூர்வீக சபைகோட்பாடுகளுக்கும் ஒத்தி ருக்கிற காரியஙகளைத் தள்ளககூடாது என்று சொன்னதினால் முதலாவது பிரிவினையுண்டாகி அபபடிபபட்டவர்கள் "நிப ந்தனைக்குட்படாதவர்கள்" (Nonconformists) என்று அழைக் கப்பட்டார்கள். இரண்டாவது பிரிவினை அபபடிபபட்ட வர்கள் அப்போஸ்தல தொடாசசியான குருமுறையை விட்டு விட்டதினலும் தஙகளிஷடபபடியே சபைகளை நடத்தி ஒழு ஙகுகளைக் கெடுததினுலும் உண்டாயிற்று. கணகாணியாாக ளாலேயன்றி வேறுமுறையாய்ப் பட்டம்பெற்றத தஙகளைக் குருக்கள் என்று சொன்னவாகள கி. பி. 1500-ம் வருஷமவரை யில் கிடையாது. சீர்திருத்தல் வேலையைப் பல தேசஙகளிலும் இஙகிலாந்திலும் நடப்பித்தவாகள் எல்லாரும் ஒருவர்தபபாமல் சரியான முறைபபடி குருபபட்டம பெற்றவர்களாயிருந்தார் கள். சீர்திருத்தல்காலததுக்குப பிற்பாடுதான் அவரவா தங்க ளைத் தாங்களே குருமாராக்கிக்கொண்டார்கள்.

35. வினு. பிரிவினைக்காரருக்குள் உவெஸ்லியன், லுத்த ரன், கால்வீன் சபைகளில ஊழியம்செய்கிறவர்கள் என்னவித மாய்ப பட்டஙகளைப் பெற்றிருககிருர்கள்?

விடை. ௧. யோவான் உவெஸ்லி என்பவர் தாம் கருதிய சீர் திருத்தலின்படி சபைகளைச் சேர்த்தபோது தேவ ஊழியத்தை நடப்பிக்கும்படி அப்போஸ்தலர் குருமுறை அவசியமென்று கண்டு லண்டன்பட்டணத்திற்கு ஏதோ காரணத்தையிட்டுவந்த ஏராஸ்மஸ் என்னும் ஒரு கிரேக்கசபைக் கண்காணியானைக் கொண்டு சிலருக்கு சப் டீக்கன் பட்டமும், சிலருக்கு உத்விக்

குருப்பட்டமும் கொடுக்கும்படி செய்தார். பின்பு அவரைக் கொண்டே தாமும் கண்காணிப்பட்டம் பெற்றுக்கொள்ளக் கேட்டார். ஆனால் எராஸ்மஸ் என்பவர் தாம் ஒருவராய் அப்படிச்செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டார். கடைசியாகப் போக்கில்லாமல் தமமைக் கண்காணியாகத் தாமே செய்து கொண்டதுமன்றி காகஸ (Cox) என்னும் இன்னொருவரையும் கணகாணியாக்கி அமெரிக்காவுககு அனுப்பினார். இவர் ஆல்பரி என்பவருககு ஒண்டியாய்ப பட்டஙகொடுததார் சிலகாலத்துக்குப்பிறகு காக்ஸ எனபவர் தாம் பெற்ற பட்டம் சரியானதல்லவென்று கணடு அங்கிலேயச் சபைக கண்காணிமாாகளைக் கேட்டார்; அவர்கள் சமமதிககவில்லை. பின்பு இந்தியாவுக்கு ஒருவர் வேண்டியதாயிருந்தபோது தம்மைக கண்காணியாக்கி அனுப்பக் கேட்டார்; அதற்கும் சம்மதிக்கவில்லை. அதன்பின்பு தாம் ஏற்படுததிய குருமுறைககுபபோலி நியாயஙகளைச சொல்லித் தப்பாய் வேதவாககியங்களைத தாறபரியம் செய்தார். அவருடைய காலத்துக்குப்பின் அநேகர் நம்முடைய சபையில் வந்து பட்டம்பெற்றிருக்கிறார்கள்.

b. ஜெர்மனியாதேசத்தில் சீர்திருத்தலத்துவக்கி மிகவும் ஜாக்கிரதையாயும் தைரியமாயும் நடத்திவந்த லுத்தர் என்பவர் ரோமான்சபைக் குருப்பட்டம் பெற்றிருந்தார். அவரைச் சேர்ந்த சீர்திருத்தல்காரரில் கண்காணிகள் ஒருவரும் சேரவில்லை. குருப்பட்டஙகொடுக்க ஒருவரும் அகபபடாததினாலேயும் தன் பிடிவாதமான கொள்கைகளை விட்டுவிட மனதில்லாததினாலேயும் துணிந்து குருமாாகூடி குருமாரை அபிஷேகம் செய்யலாமென்றும், கணகாணிமார் அவசியமில்லையென்றும் சாதித்துவிட்டார்.

c. கல்வீன் என்பவர் உதவிக்குருப்பட்டமாத்திரம் பெற்றவர்; இவர் நற்கருணையைப் பறிமாறககூடாது. இவரும் தன் கொள்கைககுட்பட்ட ஜனஙகளுக்குத் தம்மைத்தாமே குருவாக்கிக் கெட்ட மாதிரியைப பின்சந்ததிக்கு வைத்துப்போனார். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து பிரிவினைககாரர் எல்லாரும் தங்களைக் கோராகு, தாத்தான், அபிராமின் பாவத்துக்குள்ளாக்கிக்கொண்டார்கள்.

36. வினா. ஆகையால் இங்கிலாந்து சபையின் கடமை என்ன?

விடை. பிளப்பும் பிரிவினையும் அதிகப்படாமல் வத்தின் நிமித்தம், இங்கிலிஷ் சபைகளும் பிரிவினைச் சபைகளும்

யாவும் ஒன்றாய்ச்சேரும் காலத்தைத் தேவன் சீக்கிரம்வரும்படி செய்யக் கருத்தாய் ஜெபஞ்செய்து பிரிவினைச் சபைகளைப் போதிக்கவேண்டுமென்பதே. திருச்சபையின் தலையானவர் இந்த விகற்பங்களையெல்லாம் நீக்கித் தமது பரிசுத்தஆவியை ஊற்றி ஐக்கியத்தைச் சிருஷ்டிக்கச் சபைகள்யாவும செய்யும் ஜெபத்துக்குச் சீக்கிரம் உத்தரவு பிறக்கும்படி செய்வார் என்று நம்பவேண்டும.



II. CHAPTER.

ON THE BOOK OF COMMON PRAYER.

Set Forms of Public Prayers. Its Nature and usefulness in comparison with Extempore prayers Scripture authority for Forms of Prayers. The Apostolic Liturgy of the Early Church and the early Anglican Liturgies.

இரண்டாம் அதிகாரம்.

பொதுவான ஜெபத்தையும் அதின் தன்மையையும் பூர்வ ஜெபபுத்தகங்களையும் பற்றியது.



1. வினா. *பொதுவான ஜெபமென்பதென்ன?*

விடை. *திருச்சபையிலுள்ள எல்லா அவயவங்களுக்கும் பொதுவாகவும் மனித ஜாதியார் யாவருக்கும் ஏகமாகவும் சபையாரால் கடவுளை நோக்கிச் செய்யப்படும ஜெபமே. பொது வான ஜெபமென்னப்படும். இது தனக்காக ஒருவனால் தனிமையில் செய்யப்படும தனி ஜெபத்துக்கும் தங்களுக்காக ஓர் குடும்பத்தால ஒன்றித்துச செய்யப்படும குடும்ப ஜெபத்துக்கும் வேறாயிருக்கிறது.*

2. வினா. *அதின் முக்கிய பிரயோசனம் விளங்குவதெப்படி, அதை வழங்கும் விசேஷித்த நோக்கமென்ன?*

விடை. *திருச்சபையார் ஏகோபித்துச் செய்யும்போது ஆராதனைக்கு அது அவசியமாயிருப்பதால் அதின் இரண்டு முக்கிய பிரயோஜனம் விளங்கும். திருச்சபை ஒரே ஞான சரீரமாம். கிறிஸ்துவானவர் அதின் தலை. அதின் அவயவங்களானவர்கள் ஏக சிந்தையாயிருந்து ஒருமனப்பட்டு ஏக இருதயத்தோடும்*

ஒரே வாயினாலும் பராபரனை மகிமைப்படுத்த கற்பிக்கப்படுகி றார்கள். இவ்விதமாய் அவர்கள் சிநேகத்தில் ஒன்றி இணைக் கப்பட்டுத் தீங்கள் கூடுகிற கூட்டத்தை விட்டுவிடாமல் தங் களுக்குள் பரம ஐக்கியத்தை நிலைநிறுத்துகிறார்கள். இவ்வித ஐக்கியவான்களுக்கு கிறிஸ்துவின் திருச்சமுகப் பிரசன்னம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிறது.

3. வினா. பொதுவான ஜெபத்தின் பிரயோசனம் துலங்கி விளங்கிவருமபொருட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய சட்ட மென்ன?

விடை. பொதுவான ஜெபம் தேவஆராதனைக்கென்று பிர திஷ்டையாக்கப்பட்ட ஸ்தலத்திலும் திருப்பணிவிடைசெய்ய ஒழுங்குப்பிரகாரம நியமிக்கப்பட்ட குருவினாலும் கூடிய அனைவருக்கும் விளங்க நாட்டோடியபாஷையிலும் செய்யப் படவேண்டுமெனபதே.

4. வினா. கிறிஸ்தவர்கள் பிரதிஷ்டைசெய்யப்பட்ட ஸ்தல த்தில் தேவஆராதனை நடப்பிக்கவேண்டுமென்பதற்கு நியாய மென்ன?

விடை. உங்களுக்குப் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் வீடுகளில்லையோ (1 கொரி 11. 22) என்று பவுல் அப்போஸ் தலன் உரைத்திருப்பதில் பராபரனுடைய வீடு நாம் குடியிருக் கும வீட்டிற்கு வேறுபாடாகவும் மேம்பாடாகவும காட்டியிரு ப்பதாலும் யூதருடைய தேவாலயத்தைக் கர்த்தர் தமக்குச் சொந்தமாகத் தெரிந்து நியமித்ததாலும் தேவஆராதனைக்கென்று நியமனமான பரிசுத்த ஸ்தலம ஒன்றில் கர்த்தனைத் தொழுதே ற்றி அவருடைய கனம் தங்குகிற ஸ்தலமாக அதை மதிப்பது கிறிஸ்தவர்களுக்கு இலட்சணமாயிருக்கிறது.

5. வினா. அந்த ஆலயத்தைச் சிறப்பாயும் சுத்தமாயும் வைப் பதற்கு நியாயம் சொல்லு?

விடை. தேவாலயககூடாரம் தற்காலப் பிரயோகத்துக்கெ ன்று உண்டாக்கப்பட்டிருந்தாலும் அது மிகவும் சிறப்பும் அலங்காரமும் பரிசுத்தமும் பொருந்தியதாய் தேவசிமகம் பெற்றதினாலும சாலமோன் கட்டிய தேவாலயம், அதை விடச் சிறப்பும் மேன்மையும் பொருந்தியதாய் தேவனுக்குப் பிரதிஷ்டையாக்கப்பட்டு அவருடைய திருச்சமுகம் செக்கை னாவென்ற மேகத்தோடு வந்து அதில் தங்கியிருந்தபடியினாலும் "கர்த்தர் தம்முடைய ஆலயத்திலிருக்கிறார், பூமியெல்லாம்

அவருக்கு முன்பாக மவுனமாயிருக்கக்கடவது" என்று தீர்க்கதரிசி விளம்பியிருப்பதினாலும், இரண்டுபேராவது மூன்றுபேராவது தேவநாமத்தினாலே கூடிவரும்போது அவருடைய பிரசன்னம் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருப்பதினாலும் சங்கீதத்தில் பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைப் பணியுங்கள் என்று கட்டளை கொடுக்கப்பட்டிருப்பதினாலும், தேவ ரகசியங்களாகிய சாக்கிரமெந்துகள் அதில் பரிமாறப்பட்டு வருவதினாலும், தேவவணக்கத்தை நமக்கு பயபக்தியுடனே செய்வதற்கு ஏற்ற விதமாய் கோவில்களைக் கட்டி அவைகளைச் சிறப்புடனே அலங்கரித்து சுத்தமாயும் சுசியாயும் காப்பாற்றிவருவது நமது கடமையாக இருக்கிறது.

6. வினா. தேவாலயத்தில் ஆவிக்குரிய ஆராதனையோடு சரீர வணக்கமும் இருக்கவேண்டியது அவசியமா?

விடை. ஆம். 95-ம் சங்கீதத்தில் நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள் என்றும், ரோம. 12. 1ல் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்றும், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்றும், மத 2. 11ல் சாஸ்திரிகள் பிள்ளையை சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்தார்களென்றும், வெளிப்படுத்தின விசேஷம் 4, 7-ம அதிகாரங்களில் இருபத்துநான்கு மூப்பர்களும தூதர்களும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் முகங்குப்புறவிழுந்து தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்துக்கு முன்பாகவைத்துத் தொழுதுகொள்ளுகிறார்களென்றும், 1 கொரி. 6. 20ல் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் என்று சொல்லியிருப்பதினாலும், சரீரமானது தேவனால் படைக்கப்பட்டு இயேசுநாதரால மீட்கப்பட்டு சரீரம், உயிர்த்தெழுதலில் பல பாகங்களை பெற்றுக்கொள்வதாயிருப்பதினாலும், மனித சரீரத்தை எடுத்த இரட்சகர் தாமே கெத்செமனே தோட்டத்தில் முழங்காலில் நின்று முகங்குப்புறவிழுந்து ஜெபம்செய்து நமக்கு நன்மாதிரி காட்டித் தேவனை மகிமைப்படுத்தியிருப்பதினாலும், வழக்குக்காக நாம் ஒரு மனித நியாயாதிபதி அல்லது அதிகாரியிடத்தில் போகிறபோது காண்பிக்கிற கனம், மரியாதை, தாழ்மை, வணக்கம் எல்லாவற்றைப்பார்க்கிலும் ராஜாதிராஜாவும் சகலருக்கும் நியாயாதிபதியுமாயிருக்கிற உன்னத ஆண்டவருக்கு ஏற்ற நியாய உயர்ந்த வணக்கத்தைக் காட்டுவது கடமையாயிருப்ப

திருலேயும, நாம் தேவனிடத்தில் தயவுகளையும் இருபைகளை யும் ஆசிர்வாதங்களையும் கேட்கப்போகிறபோது நம்முடைய வீட்டுக்குவருகிற பிச்சைக்காரருடைய தாழ்மை வணக்கம் முதலியவைகளைக் கவனித்து, நாமும் மேட்டிமையை விட்டுவிட்டு ஏழைகளுக்கும் குற்றவாளிகளுக்கும் பாவிகளுக்கும் உரிய கோலத்தோடும் குரலோடும் கிருபாசனத்தைக் கிட்டிச்சேரவேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலும் நம்முடைய ஆண்டவர் நம்முடைய மனித தன்மையோடும் ஜடலத்தோடும் பரமண்டலத்துக்கேறி தேவனுடைய வலதுபாரிசத்தில் மனிதனாய் வீற்றிருப்பதினாலே மனித சரீரம்யாவும் அவருக்கு சரீரவணக்கத்தைச் செலுத்துவது ஏற்றதும் பொருந்தினதுமாயிருக்கிறது. ஆவி வணங்கும்போது சரீரம் வணங்காமல் இருக்கமாட்டாது. ஆவியும் சரீரமும் ஒத்து வணங்கினாலொழிய தேவனுக்குகந்த தொழுகையாய் இருக்கவுமாட்டாது. ஆகையால் உட்காரவேண்டிய தருணத்தில் உட்கார்ந்து, நிற்கவேண்டியபோது நின்று, முழங்காற்படியிடும்போது முழங்காலில் பயபக்தியாய் நின்று அவரைச் சேவித்துத் தொழத்தக்கதாய் இங்கிலாந்து ஜெபமுறை ஏற்ற சட்டங்களுள்ளதாயிருக்கிறது.

7. வினு. சபையில் திருப்பணிவிடைசெய்யும்படி ஒழுங்கு பிரகாரம் நியமிக்கப்பட்ட குருவானவர் ஆராதனை நடப்பிப்பதால் உண்டாகும் முக்கிய பிரயோஜனமென்ன?

விடை. தேவஆராதனைக்கென்று பிரதிஷ்டையாக்கப்பட்ட ஸ்தலம் தேவபக்தியை எழுப்புவதற்கான எத்தனமாக மதிக்கப்படுமேயானல், ஒழுங்குபடி நியமனம்பெற்ற குருவானவரால் அவ்விடத்தில் ஆராதனை நடத்தப்படுவது தேவபக்தியை ஸ்திரப்படுத்தி, பரமசிந்தனையைப் பயிற்றுவிக்கும் எத்தனமென்று எண்ணுவதற்குப் போந்த ஆதாரமுண்டு. ஏனெனில் கர்த்தர் தமது தாசர்பேரில் பரம ஆசீர்வாதங்களைச் சொரிந்து குருவானவர் ஜனங்களுக்காகச் செலுத்தும் ஜெபங்களை அங்கீகரித்து அனுகூலமாகச்செய்வார் என்கிறதற்கு குருப்பட்டமானது முத்திரைபோலிருக்கிறது என்று (Hooker) ஊக்கர் சொல்லியிருக்கிறார்.

8. வினு. தேவ ஊழியத்துக்கென்று விசேஷித்த மனிதர் பிரித்துவைக்கப்படுவரும் வழககத்துக்கு ஆதாரமுண்டா? கிறிஸ்துசபையில் அவர்கள் ஏற்படுத்தப்படும் விதமென்ன?

விடை. கோத்திரப் பிதாக்களுடைய காலத்து ஏற்பாட்டில் ஒவ்வொரு குடும்பத்துக்குத் தலைவன் ஆசாரிய உத்தியோகத்தைத்

நடப்பித்துவந்தான். யூதசபையில் ஆரோனும் அவன் குடும்பத்தாரான ஆசாரியரும் லேவியரும் தேவகாரியங்களில் ஊழியஞ்செய்துவந்தார்கள் (எபி. 5. 1.). கிறிஸ்துசபையிலும் அப்படியே கண்காணிப்பட்டம், குருப்பட்டம், உதவி குருப்பட்டம் என மூவகை நிலைமைகள் எக்காலத்திலும் நிலைபெற்றுவந்திருக்கிறது. இவ்வூழியத்துக்குக் கண்டவர்களெல்லாரும் சேர்த்துக்கொள்ளப்படாமல், ஏற்றுக்கொள்ளப்படுவோர் நன்றாய் பரீட்சிக்கப்பட்டும், சோதிக்கப்பட்டும் தங்கள் மேலெடுத்துக் கொள்ளும் ஊழியத்துக்கான குணசீலங்கள் பொருந்தியவர்களாக அறியப்பட்டும் இருக்கிறதன்றி, பொதுவான ஜெபங்களாலும் கைகளை மேல்வைக்குதலாலும் தேவவசனத்தைப் பிரசித்தப்படுத்தவும் சாக்கிரமெந்துக்களை பரிமாறவும் நியமிக்கப்படுகிறார்கள்.

9. வினா. பொதுவான ஆராதனையில் ஜனங்களுடைய பாக முறை என்ன? அப்படியானால் அந்நியபாஷையில் செய்யப்படும் ஆராதனைமுறைமை அப்பிரயோஜனமானதென்றுகாட்டு?

விடை. ஜனங்களுடைய ஜெபமாகிய தூப ஆராதனையை குருவானவர் தேவசன்னிதியில் செலுத்தினாலும் தூபபீடத்திலிருந்தேறும் புகைபோல ஜனங்களின் இருதயம் குருவானவரின் இருதயத்தோடே ஒருமித்தேகவேண்டியது. சரீரப்படி அவர்கள் பிரிந்திருந்தாலும் ஆவியிலும் அறிவிலும் ஐக்கியப்பட்டு ஜெபிக்கவேண்டியது. ஆகையால் அந்நியபாஷையில் ஆராதனைசெய்வது வேதவசன உரைக்கும், பூர்வீக திருச்சபை முறைமைக்கும் விரோதமாயிருக்கிறது. (வேதமார்க்கப் பிரமாணம். 24 காண்க.)

10. வினா. இது வேத உரைக்கு விகற்பமான செய்கை என்று காட்டு?

விடை. "எக்காளம் நிச்சயமற்ற சத்தமிட்டால் எவன் யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுவான்?" என்றும், "நீ ஆவியினால் தோத்திரித்தால் கல்லாதவனுடைய இடத்திலிருக்கிறவன் உன் ஸ்தோத்திரத்துக்கு எப்படி ஆமென் என்பான்" என்றும் பரி. பவுல் சொல்லியிருக்கிறார். (1 கொரி. 14. 8, 16.)

11. வினா. இது ஆதித்திருச்சபைவழக்கத்துக்கு பின்ன பேதமான கொள்கை என்று காட்டு?

விடை. ரோமான்சபையைச் சேர்ந்த அக்கொவனஸ் (Aquinas.) முதலிய ஆகமக்காரர் எழுட்டு நூற்றாண்டுவரையும்

திருச்சபையில் நாடோடிய பாஷையில் ஆராதனை நடக்கிறதென்று விளம்பியிருக்கிறார்கள்.

12. வினா. பொதுவான ஜெபம் பிரயோஜனப்படத்தக்க விதமாய் செலுத்தப்படுமெபடியான வேறு சட்டமென்ன?

விடை. முன்னறவே இயற்றப்பட்டும் ஒழுங்குபடுத்தப்பட்டும் சர்தாரண அனுமதிபெற்றுமிருக்கும் பொதுவான ஜெபமானது செய்யப்படவேண்டும் என்பதே. இப்படி செய்வதால் மிகுந்தபிரயோஜனங்களுண்டு.

13. வினா. அப் பிரயோஜனங்களில் சிலவற்றைச் சொல்?

விடை. (1) நாடோடிய பாஷையில் எழுதப்பட்டிருக்கும் இவ்வித ஜெபமுறையானது அதனை வழங்கும் ஜனங்கள் மிகவும் தெளிவாய் உணர்ந்து உட்கருத்தாய்ச் சிந்தித்து ஆவியிலும் உண்மையிலும் ஜெபிப்பதற்கு ஏற்றதுதான். அது தேர்ந்த யோசனையோடும் தெளிந்த புத்தியோடும் ஆழ்ந்த கருத்தோடும் அமைந்த சிந்திப்போடும் இயற்றப்பட்டிருக்கிறது. அது எவருக்கும் பொருள்விளங்கத்தக்க எளிதான மொழிகளுள்ளதாயும் எளிதாய் உணர்ந்துகொள்ளத்தக்க தெளிவான நடையுள்ளதாயும் எப்பேர்ப்பட்டவர்களுக்கும் அவசியமான எல்லாவித நன்மைகளையும்பற்றிய நிறைவான அறிக்கையுள்ளதாயும் அமைக்கப்பட்டிருக்கிறது. தனிமையில் அப்பியாசிக்கவும் வாசித்து உட்கொள்ளவும் ஆராய்ந்து பரிசோதிக்கவும் கூர்ந்து தியானிக்கவும் ஏற்ற முறைமையாகிய இது பொதுவமைதி பெற்று வழங்குவது மிகவும் உத்தமமே. திடீரென்று ஜெபிக்கப்படும் தக்ஷண ஜெபங்கள் வழங்கப்படுவதாயிருந்தால் இவ்வித பலன்களுக்கு இடமுண்டாயிராதே. பண்ணப்போகிற மன்றாட்டின் கருத்து இன்னதென்றறியாதவன் அம்மன்றாட்டை உணர்வோடு செலுத்தக்கூடுவதெப்படி? உரைக்கவேண்டிய வார்த்தைகள் இவையென்றறியாதவன் உட்கருத்தோடு அவைகளைச் சிந்திப்பதெப்படி? குருவானவர் உரைக்கும் வார்த்தைகளை காதுகொடுத்து கவனிக்கவேண்டியதாயிருக்க, அவ்வார்த்தைகளைத் தெளிந்த புத்தியோடே சொல்லி அவருடன் ஒத்து ஜெபிப்பதெப்படி? குருவானவர் உரைப்பதைக் கேட்கக்கூடாமல் செவி மந்தத்தாலாவது இடத்தூரத்தாலாவது வேறெந்த காரணத்தினாலாவது தடைப்படும் பேர்கள் சபையில் கர்த்தரை ஆராதிப்பதெப்படி? ஆதலால் அமைதிபெற்ற ஜெபமுறைமை ஒன்றிருப்பதுமிகவும் நன்று.

(2) சபையார் குருவானவரோடு கருத்தில்மாத்திரமல்லவார்த்தைகளிலும் ஒத்திசைந்துரைத்து, அவருக்குப பின்னுகவும் அவருடன் சேர்ந்தும் அவரோடு முறைமாற்றியும் தேவஆராதனையை நடப்பித்து, அவ்வாராதனையில அவர் வருந்தி தமக்குரிய பாகத்தை எழுப்புதலோடும் தாராளமாயும் செலுத்திவருவதற்கு இது ஏற்ற முறைமைதான். இப்போப்பட்ட முறைமையைப் பிரயோகித்துவருவதால் ஆராதிப்போனுடைய வாய் தடுமாருமல் மனம் ஒரே நிலைகொண்டிருக்கவும் நோக்கபேத கப்படாமல் உட்கருத்து ஒன்றித்தெழும்பவும் புத்தி தலைவரப் படாமல் பத்தியுதித்து அனலாகவும் ஒழுக்கத்தாழ்ச்சியும் இணக்கபேதகமும் அறப் பொதுவாராதனைக்கேற்ற ஒழுக்கமும் ஒருமைப்பாடும் சமுதீதத்தன்மையும் விளங்கிவரவும் ஏதுவுண்டாகும். ஆதிச் சபையின்மூலமாய் நடந்தேறிவந்த இவ்வழக்கம் திருச்சபையிலுள்ள சலாக்கியங்களில் ஒன்றென மதிக்கப்படத் தகும்.

ரோமான்மார்க்கம் தலைப்பட்டபின் பேரிய -மேதசபாவை யில் ஜெபஆராதனை நடப்பிக்கப்படும் வழக்கம் நிறுத்தப்படலாயிற்று; என்றாலும் -சபை சீர்திருத்தல் நடந்தபொழுது அவ்வழக்கம் திரும்பவும் நாட்டப்பட்டது. பொதுவமைதியைப் பெற்ற இம்முறையை ஒப்புக்கொள்ளாதடிசென்றவர்களோ (Dissecenters) தக்ஷண ஜெபங்களை வழங்கமுயன்று இச்சிலாக்கியத்தில் பங்குபேறற்றுப்போனுர்கள்.

(3) அடாத தாபத்திலெழும்பும் கொடும் வசனிப்புகளுக்காவது மதாபிமானத்து ஆதிக்கத்தாலெழும்பும் பேதக வசனிப்புகளுக்காவது அறிவீனத்தால் பிறக்கும் ஆசாரக்குறைவான வசனிப்புகளுக்காவது கவனத்தாழ்ச்சியால் பிறக்கும் தியவசனிப்புகளுக்காவது இடங்காணப்படாமல் நல்லொழுக்கத்தோடும் அத்தியந்தமேரையோடும் சுத்த தேவபக்தியோடும் தேவ ஆராதனை நடப்பிப்பதற்கு இது ஏற்ற முறைமைதான். தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில் பரிசுத்த அலங்காரத்துடனே ஆராதனை நடப்பிக்கப்படுவது அவசியமாயிருக்க சமயத்துக்குத்தக்கதாய் தக்ஷண ஜெபங்களைப் பிரயோகித்துவருவதால் பல ஒழுங்குபேதங்களுக்கும் ஒழுங்குத்தாழ்ச்சிகளுக்கும் இடமுண்டாகுமே.

(4) உபதேசத்தூய்மையும் விசுவாச ஒருமையும் பேதப்படாமல் பரிபாலனப்படுவதற்கு ஏற்ற முறைமைதான். குருவானவர் தவருயாவது பிசகாயாவது வசனிக்கப்படாதபடி இது அவருடைய நாவை ஆண்டுகொள்ளுகிறது. சுவிசேஷ உபதே

சங்களில் முக்கியமானவையாவும் அதிலுள்ள பற்பல முறைமைகளில் அடங்கியிருப்பதால் விசுவாச ஒருமை அதிகரித்து உறுதிப்படலாகிறது. ஆதலால் முன்னறவே இயற்றப்பட்டும் ஒழுங்குவடுத்தப்பட்டும் அநுமதிபெற்றுமிருக்கும் ஜெபமுறைமையைப் பிரயோகித்துவருவது அவசியமும் பிரயோஜனமுமான காரியந்தான் என்பதற்குச் சந்தேகமில்லை.

14. வினா. இப்பேர்ப்பட்ட ஜெபமுறைமையின் அவசியத்தையும் பல பாகத்தையும் மெய்ப்பிக்கத்தக்க திருஷ்டாந்தங்களைச் சொல்லு?

விடை. சில வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தில் டிசென்றர்களைச் சேர்ந்த ஆலயங்கள் அநேகம் இருந்தன. ஆத்தும மீட்பைப்பற்றிய சிலுவையின் உபதேசமும் குமாரனுைவரும் ஆவியானவரும திருத்துவத்தில் சரிசமானர்தான் என்னும் மகத்தவ உபதேசமும் உள்ளபடி அவையாவிலும் அக்காலத்தில் பிரசங்கிக்கப்பட்டுவந்தாலும் பிற்காலத்திலோ தெய்வீக மறுத்தலான தீய கோட்பாடுகளும் ஆத்தும நாசத்துக்கு இனமான வேறு பல புரட்டுகளும் பரிபாலனமாகிவந்தன. டிசென்றருடைய ஆராதனை பரிபாலனத்துக்குக் கொடுக்கப்பட்ட பணங்கள் இந்தடவாய் அவர்களுடைய கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரிடையான சொசினிய உபதேசங்கள் பரிபாலனமாகும்பொருட்டு செலவாயின. (Lady Howley) அவுலி என்னும் ஓர் அம்மாள் டிசென்றர்களுக்காகத் தாம் சகாயமாய்க்கொடுத்த உபகாரமானது சொசினியரின் கவைகாரியங்களுக்கென்று அபகரிக்கப்படலானதைப்பற்றி நியாயஸ்தலங்களில் வியாஜ்யமாடப்பட்டதுண்டு. நிலையான விசுவாசச் சட்டதிட்டங்கள் அமைக்கப்படுவது மிகவும் அவசியமென்பதற்கு இவை எல்லாம் அத்தாட்சியாயிருக்கின்றனவல்லவா!. காரியங்கள் இந்தடவாய் நேரிட்டதால் அதுமுதல் அந்தந்த கோவில்களுக்கு உபகாரங்கொடுக்கும் தர்மசாலிகள் அவைகளில் போதிக்கப்படும் உபதேசங்கள் இன்னின்னபடிதான் இருக்கவேண்டுமென்ற ஒப்பந்தத்தின்பேரில் நன்கொடையளிப்பதுண்டு. பொது அமைதி பெற்ற முறைமையில்லாமையால் தோன்றிய மேற்சொல்லிய கெடுதிகள் பலவும் அப்பேர்ப்பட்ட முறைமை ஒன்றிருப்பது அவசியமும் அதிபிரயோஜனமுமான காரியமென்று அத்தாட்சிப்படுத்துகிறதே.

15. வினா. பொதுவான ஜெபபுஸ்தகத்தை வழங்கிவந்த சபைகள் முதலாய் தவறுக்குள்ளானதில்லையா?

விடை. உண்டு. என்றாலும் இவர்கள் பொதுவான ஜெப புஸ்தகத்தைக் கைக்கொண்டிருந்தமையால் அல்ல, வேதசட்டங்களை விட்டு பேதகமாய்ச் சென்றதால்தான் தவறுக்குள்ளானார்கள். மேலும் பொதுவான ஜெபமுறைமைகள் உபதேச சீர்கேட்டை தவிர்க்க சுயதத்துவம் உள்ளவையென்று நாம் சாதிக்கிறதில்லையே. தப்பறைகள் தலைப்படாமல் தடுக்கப்படவும் கிறிஸ்துமார்க்க உபதேசங்கள் பழுதுபடாமல் பாதுகாக்கப்படவும் அவை பலத்த எத்தனங்கள் என்கிறோமேயல்லாது மற்றப்படியல்ல. தப்பறை ஒருவிசை உண்டாகுமேயானால் அப்புறம் அது வேர்கொண்டு நிலைபெற்றுக்கொள்வதாயிருக்கலாம். ஆனால் அதினிமித்தம் வழங்கிவந்த விசுவாசப்பிரமாணங்களும் உபதேசப்பிரமாணங்களும் பழுதுள்ளவையென்று அனுமானிப்பது யதார்த்தமா? எப்பேர்ப்பட்ட நியம ஏற்பாடுமுதலாய் விரோதிக்கப்படுவதாயிருக்கலாமே எப்பேர்பட்ட அதிகாரம்முதலாய் புறக்கணிக்கப்படுவதாயிருக்கலாமே! அமைதிபெற்ற ஒழுங்குமுறைகளோ பழுதுபட்டதை புதுப்பித்து சீர்ப்படுத்தும் தத்துவமுள்ளவை. அவைகளைக்கொண்டிராத யாதோர் சபையார் விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்களேயானால் அவர்களுடைய முற்சீரைப்பற்றிய குறிப்பேதும் காணப்படமாட்டாது. அவர்கள் தவறுதலுக்குள்ளான வழிவகையைக் கண்டறியத்தக்க ஏதுக்கள் உண்டாயிருப்பதில்லை. நடந்தவிடம் தடம்படாதிருந்தால் இருந்தவிடம் தடம்படுவதெப்படி? தடந்தெரிவதெப்படி? ஆனால் ரோமான்சபையைப்போல ஒழுங்குமுறைகளை உடைத்தாயிருந்து தவறுக்குள்ளாகுஞ் சபைகளோ இவ்வாறல்ல; அவர்களுடைய முறைமைகள், பழுதுகள், வழுக்கள் முதலிய பல சீர்கேடுகளால் நிறையப்பட்டிருந்தாலும் அவைகளின் முற்சீரைக் காண்பிக்கத்தக்க குறிப்புகள் ஓரளவாயேனும் அவைகளுக்கு உண்டாயிருக்கும். அவர்கள் சுத்த விசுவாசப்பிரமாணத்தையும் மெய்யுபதேசப்பிரமாணத்தையும் புறக்கணித்துப்போட்டாலும் அவர்கள் நினைவு ஞாபகம் சமூலமாய் அழிந்துபோவதில்லை. அவர்கள்கொண்ட உபதேசங்கள் எவ்வளவு நூதனமும் வேறுபாடுமுள்ளவைகளென்று அவர்களுக்குத் தூண்டிக்காட்டவும், அவர்கள் எங்கேயிருந்து விழுந்தார்களென்று அவர்களுக்கு உணர்த்துவிக்கவுந்தக்கதாக அவை அவர்களுக்கு விரோதமான அத்தாட்சிகளாய் இன்னமிருக்கும். இந்தியாவிலுள்ள சூரியானசபை இப்பேர்ப்பட்டதுகளில் ஒன்றென்று தோன்றுகிறது. இதுவும் இதைப்போலொத்த மற்றும் சபைகளும் தங்கள் ஆதி

நிலைமையைச் சிந்தித்துக் குத்துருவப்பட்டு நல்லுணர்வடைந்து இன்னமும் ஓர்விசையாகிலும் பரிசுத்த அலங்காரத்துடனே தேவனை ஆராதிக்கத்தக்கதாக அவை அவர்களுக்கு விரோத மான அத்தாட்சிகளாய் இன்னமிருக்கும். அப்படியே செய்ய நற்சீர்பெற்றிருந்தவர்கள் என்பதற்கு போந்த நியாயமுண்டு.

16. வினா. இயற்றி அமைக்கப்பட்ட ஜெபமுறைமைகளின் அருமையையும் அவசியத்தையும் காட்டத்தக்க வேறே நியாயங்களைச் சொல்லு?

விடை. (1) பராபரனுடைய மகத்துவத்துக்கும் அவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கும் ஏற்றதான நல்ல ஜெபங்களை நடப்பிக்க வரம்பெற்றோர் அநேகர் சபையாரில் இருப்பதில்லை. மேலும் அவ்வித ஜெபங்களைக் குருவானவர் தமது யுத்திப்பிரகாரம் நடத்துவதாயிருந்தால் ஜனங்களுக்கு ஆகவேண்டிய மன்றாட்டில் பலவற்றை அவர் அறியாமையினாலாவது ஞாபகத் தாழ்ச்சியினாலேயாவது வேறே காரணத்தாலாவது விட்டுவிடுவதாயிருக்கலாமே. அவருடைய மனதியற்கைக்குத் தக்கதாக அவர் செய்யும் ஜெபங்கள் சபையாருடைய அறைகுறைகளுக்குத் தகுந்தவைகளாயிராமல் தனது காரியங்களையே சார்ந்திருக்கவுங்கூடுமே. அமைதிபெற்ற பொதுவான ஜெபமுறைமை ஒன்றிருந்தால் இவ்வித சங்கற்பங்களுக்கு இடமுண்டாயிராதே.

(2) பரிசுத்தவான்களின் ஐக்கியம் பரிபாலனப்பட்டும் விளங்கியும்வருவதற்கு பொதுவான ஜெபமுறைமை தகுந்த ஓர் எத்தனந்தானே. உலகமெங்குமுள்ள திருச்சபையின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று தூலதூரமான நாடுவிடங்களில் வசிக்கிற பலவகையுள்ளோராய் இருந்தாலும் அங்கங்கே கூடி ஒரேவித ஜெபங்களையும் துதிதோத்திரங்களையும் பிரயோகித்து எல்லாருக்கும் ஏகதேவனானவரை இந்நடவாய் ஆராதிப்பது நன்மையும் செம்மையுமான காரியந்தானல்லவா? பூமியின் வடகோடியிலுள்ளவர்கள் மாத்திரமல்ல தென்கோடியிலுள்ளவர்களும், இவர்கள் மாத்திரமல்ல பூமியின் எத்திக்கிலுமுள்ள எல்லாக்கிறிஸ்தவர்களும் கருத்துள்ள ஒரேவிதமான மொழிகளை உரைத்து ஜெபித்து உன்னதேவனை ஆராதிப்பது மிகவும் சிறப்பலங்காரமான செய்கைதானே.

பொதுவான ஜெபபுஸ்தகமானது அரபிப்பாஷையிலும் இத்திதேச பாஷைகள் பலவற்றிலும், பிராஞ்சு, கிரேக்கு, உருசிய, ஜெர்ம்மனிய, போலீசிய, இத்தாலிய பாஷைகளிலும் மொழி

பெயர்க்கப்பட்டு பிரசுரமாயிருக்கிறது. எபிரெயுபாஷையில் அப்புஸ்தகத்தை வழங்கிவருகிற யூத கிறிஸ்தவர்களின் சபை லிவர்பூல் (Liverpool) என்னும் நகரியிலுண்டு. எருசலேமிலுள்ள கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிக்கொண்ட யூதா'ஞாயிறு தோறும் அரபியபாஷையில் நடப்பிக்கிற ஆராதனைமுறைமை ஒன்றுண்டு.

(3) வியாதியினாலாவது வேறே யாதோர் விக்கினத்தாலாவது வேறே எந்தக்காரணத்தாலாவது தடைப்பட்டு தேவாலயத்துக்கு வரக்கூடாமல் வீட்டிலிருக்கும் ஒருவன் வெளியரங்கமாய் நடக்கும் பொது ஆராதனைக்கு ஆஜராகக்கூடாதேபோனாலும் அந்தரங்கத்தில் தன் முழங்காலகளை முடக்கி தன் ஜெபபுஸ்தகத்தை திறந்து சரீரப்படி தனிமையிலிருக்கிற அவன் ஆவியிலோ மற்றுமுள்ள சபையாரோடு சேர்ந்து ஜெபித்து ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் உண்டென்றும், திருச்சபையாகிய ஞானசரீரத்துக்கு சிரசான கிறிஸ்துவானவர் எல்லாரிலும் எல்லாமுமாய் இருக்கிறார் என்றும் தனக்குள்ளே உணர்ந்துகொண்டு, தன் செய்கையில் மனமகிழ்ச்சியடைந்து பூரிக்ககூடுமே.

(4) நாம் கர்த்தரை நோக்கிப்பண்ணின ஜெபத்தைத் திரும்பக் கவனித்துக்கொள்ளவும் தியானித்து உணரவும் பொதுவான ஜெபமுறைமை ஏற்ற எத்தனந்தான். அது நாம் என்னென்ன நன்மைகளுக்காக ஜெபித்தோமென்று நமக்கு நினைப்பூட்டுகிறது. ஜெபம்பண்ணுகிறதுமாத்திரம் போதாது; அசீர்வாதத்தில் கேட்டுக்கொண்ட நன்மைகளைத் தியானித்துக்கொள்வதும், பாராட்டிய விருப்பத்துக்கேற்ற நடக்கையிலும உத்தமம் விளங்கும்படி கவலையுள்ளவர்களாய் இருப்பதும் அவசியமல்லவா? அவைகளைத் தியானித்துக்கொள்ளுகிறவன் அவைகள் தனக்குக் கட்டளையிடப்படுமென்று நிச்சயித்து, விசுவாசத்திலும நம்பிக்கையிலும் திடவுறுதிப்படுவதுமன்றி அந்த மனிதன் நடக்கையும் அறிக்கையும் பிணைக்காமல் ஒத்துமைப்பட்டவர்களாயிருக்கும்படி மகா சாவதானமுள்ளவனாய் இருப்பான். பொதுவான ஜெபமுறைமை இதற்கேற்ற உதவியல்லவா?

17. வினா. இதை மெய்ப்பிக்கத்தக்க புற அத்தாட்சிகளைச் சொல்லு?

விடை. திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்த சுதேசிகளல்லாத யாவருக்குள்ளும் மேற்பட்டவராக டிசென்றர்களால் மிகவும் கங்கிக்கப்பட்ட (Calvin) கால்வின் என்பவர் பொதுவாரா

தனையில் வழங்கும்படி ஜெபமுறைமையொன்று ஏற்படுத்தப் பட்டிருப்பது சாலவும் நன்றெனத் தமக்குள் உணர்வுகொண்டு ஆறாம் Edward ராஜாவின் காலத்தில் (A. D. 1545.) இங்கிலாந்து தேச (Protector) பிரபுவுக்கு எழுதிய ஓர் நிருபத்தில உரைத்திருக்கிறதாவது:—"நியமனம்பெற்ற ஜெபமுறைமையும் ஏற்படுத்தப்பட்ட சபைப்பிரசங்களும் உண்டாயிருப்பது மிகவும் உத்தமமான காரியமென்று நான் ஒப்புக்கொண்டுமெழுச்சுகிறேன். திருப்பணிவிடைசெய்யும் போதகனமார் வேத கமற நடப்பதற்கும் சபையாரில் பலவீனரும் அறிவீனருமான பலர் உபயோகமடைவதற்கும் நமது சபைகளில் அந்நியோந்நிய ஒற்றுமை வழங்கி விளங்குவதற்கும் கடைசியாகப் புதுமைகளை நாட்டும் பேதகக்காரரின துணிகரம் மட்டுப்படுவதற்கும் ஏதுவாக அனுமதிபெற்ற ஞானோபதேசமும் சாக்கிரமெந்துக்களைப் பரிமாறுதற்கடுத்த நிலையுள்ள முறைமையும் தேவஆராதனையில் வழங்கத்தக்க பொதுவான ஜெபமுறைமையும் அமைக்கப்பட்டிருப்பது அவசியமென்பதே." பாக்ஸ்டர் (Baxter) என்னும வேறொருவர் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதாவது:-"ஜெபமுறைமைகள் தொடுத்து வழங்கப்படாவிட்டால் மார்க்கத்தில் பிதற்றலாட்டங்கள் தோன்றலாகும். மனிதர் தேவன்பேரில் பற்றுதலையுளளோராபோல பாராட்டினாலும் உள்ளபடி அப்பேர்ப்பட்டவர்களாயிராமல் மாயஜாலத்தில் வளர்ந்து தாங்கள் வழங்கும் நூதனநடையிலும் விநோத வசனிப்புகளிலும் நானாவித வாசகங்களிலும நளினமொழிகளிலுமே பிரியங்கொண்டிருப்பார்கள்" என்பதே.

18. வினா. மேற்சொல்லிய முறைமைப்படி ஆராதனை நடப்பிப்பது நியாயமென்று பழைய ஏற்பாட்டிலுள்ள ஆதார உதாரணங்களையுங்கண்டும், புதிய ஏற்பாட்டில் நமது ஆண்டவரும் அவரது அப்போஸ்தலரும் காண்பித்திருக்கிற மாதிரியைக் கொண்டும் காட்டு?

விடை. இஸ்ரவேலர் தாங்கள் நடப்பித்த பொது ஆராதனையில் எப்போதும் ஜெபதோத்திரமுறைமைகளை வழங்கிவந்தார்கள். அவர்கள் எகிப்தியருடைய கையினின்று அற்புதமாய் விடுவிக்கப்பட்டதின்பேரில் புருஷரும் ஸ்திரீகளும் பகுந்து நின்று பாடின துதிதோத்திரக் கீதமே அவர்களுக்குள் நடந்த பொது ஆராதனையில் முந்தினது (யாத். 15. 1, 21.). இதின்பின் ஆசாரியனால் ஜனத்தை ஆசீர்வதிக்க கூறப்படும் வாக்குமுறை தேவனால்தான் நியமிக்கப்பட்டது (எண். 6. 23—26.). அக்காலத்தில் அவர்களுக்குப் பிரதான ஆசாரியனாயிருந்த ஆரோன்

வாய்ச்சாலகமுள்ளவனும் திவ்விய அருள் அனுக்கிரகம்பெற்ற வரப்பிரசாதியுமாயிருந்தாலும் அவனும் அவன் பட்டத்தில் வருகிறவர்களும் சபையில் வழங்கத்தக்க ஆசீர்வாத முறைமை யொன்று ஏற்படுத்தப்படுவது நலமென்று கண்டதால் அவ் வாறு தேவனால் அமைக்கப்பட்டது. விளைவில் முதற்பலனை யும் பத்திலொரு பாகத்தையும் செலுத்துகிறவர்கள் சொல்லத் தக்க ஜெபமுறைமைகள் கட்டளையிடப்பட்டிருந்தன. தாவீ தின் சங்கீதங்களும் பொதுப்பட இப்பேர்ப்பட்டவைகள் தான். தாவீது ராஜா தமக்கென்று மாத்திரமல்ல, தேவாலயத்தில் பொது ஆராதனை நடப்பிக்க சபை முழுமைக்கென்றும் ஆவி யானவருடைய ஏவுதல் பிரகாரம் இதைப் பாடினார் (1 நாளா. 16. 7. 2 நாளா. 5. 13; 29 30.) யூதர் பாபிலோனிய சிறையிரு ப்பிலிருந்து திரும்பினபின்பு ஜெபமுறைமைகளை வழங்கி வந் தார்கள். நமது இரட்சகருடைய காலத்திலும் இவைகளில் சில வழங்கிவந்தன. அவர் தாமும் அவரது அப்போஸ்தலரும் யூத சபை ஆராதனைக்கு ஒத்திணங்கி உடன்பட்டிருந்து இவ் வித ஜெபமுறைமைகளை வழங்குவது தகுதியென்பதற்கு அனு மதிகொடுத்திருக்கிறார்களென்று நான்கு சுவிசேஷங்களாலும் அப்போஸ்தலருடைய நடபடியாலும் பிரத்தியட்சமாய் தெரிய வரும். கர்த்தருடைய ஜெபம் என்னப்படுகிற சுருக்க ஜெபத் தை நமது ஆண்டவர் தாமே ஜெபச்சட்டமாக அல்லது மாதி ரிச்சட்டமாக அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்டருளினார் என்று மத். 6. 9ஐ லூக். 11. 12 ஒத்துப்பார்த்தால் விளங்கும். அப்போஸ்தலருக்குப் பின்னடியாரும் ஆதிச் சபையிலுள்ளவர் களுமான அநேக ஆசமக்காரர் இதற்கிசைவாய்த் திடச்சாட்சி பகர்ந்திருக்கிறார்கள். மேலும் அப். 4. 24—30ல் காணுகிற சிறந்த ஜெபமானது இப்பேர்ப்பட்டவைகளில் ஒன்றென்றே காணப்படுகிறது. ஏனென்றால் கூடியிருந்தவர்களெல்லாம ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு அதாவது அவர் கள் அனைவரும் ஒன்றித்து நேர்க்கசத்தமாய் ஜெபித்தார்கள் என்று சொல்லியிருக்கிறது. ஏற்கனவே இயற்றப்பட்டு வழங்கிவந்த ஜெபமுறை ஒன்றிருந்தாலே அல்லது இப்படி நடந்திருக் கக்கூடாதே! கூடிய சபையார் வெகு திரளானாலும் அவர்கள் அனைவரும் ஆவியில் ஒன்றித்தும் கருத்தில் ஏகோபித்தும் மன தார ஜெபிப்பார்களேயானால் இவ்வித ஜெபமுறைமை அவசிய மல்ல. ஆனால் இவ்வித ஜெபமுறையில்லாதவிடத்து அவர்கள் அனைவரும் உரத்தசத்தமாய் ஏகோபித்து ஜெபித்திருப்பது கூடிய காரியமல்லவே.

19. வி௵. பரிசுத்த ஆவியின் ஏவுதலால் ஜெபஞ் செய்யப் படுகிறதாகச் சொல்லும் விஷயங்களை எப்படி தாற்பரியப்ப டுத்துவாய்?

விடை. அவ்வாக்கியங்கள் புத்தியையல்ல, இருதயத்தைப் பற்றும். அது வாயின் வார்த்தைகளல்ல நமது இருதயத்தின் சிந்தனையே அவைகளில் குறிக்கப்படுகிறது.

20. வி௵. பரி. மாற் 13 2ல் நமது ஆண்டவர் வழுத்தி யிருக்கிற கட்டளைக்கு அர்த்தமென்ன?

விடை. நீங்கள் என்ன பேசுவோமென்று முன் கவலைப் படாமலும் தியானியாமலும் அந்நாழிகையில் உங்களுக்குக் கொடுக்கப்படுகிறதைப் பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்தஆவிதானே என்று இவ்வாக்கியத்தில் ஆண் டவர் வசனித்திருந்தாலும், இதிலுள்ள கற்பனை அவர் குறித் துப்பேசுகிற காலத்துக்கும் காரியத்துக்கும் சொல்லத்தக்கதே அல்லாது வேறல்ல. அவர் தமது அப்போஸ்தலருக்கு விசே ஷித்த அதிகாரங்கொடுத்து திருப்பணிவிடைக்கென்று அவர் களை நியமித்தபோது அவர்களுக்குத் திடவுறுதியாக இவ்வார்த் தைகளை வசனித்து அவர்கள் போதிக்கும் சத்தியத்தை ஸ்தா பித்துப் பரிபாலனஞ்செய்யத்தக்கதாக சத்துராதிகள் யாரும் எதிர்க்கக்கூடாத ஆவியையும் அனுக்கிரகத்தையும் அவர்களு க்கு அருளுவதாய் வாக்குத்தத்தம்பண்ணினார். இதற்கென்று வசனிக்கப்பட்ட வார்த்தைகளை பொதுவாகத் தாற்பரியப்படுத் துவது இரட்சகருடைய நோக்கத்துக்கு பின்னமாகுமேயல்லா மல் வேறல்ல.

21. வி௵ ஆதிச்சபையில் முன்னற இயற்றப்பட்ட பொது ஜெபமுறைகள் இருந்ததற்கு உதாரணம் சொல்லு?

விடை. ஆதிக் கிறிஸ்தவர்களைப்பற்றிய சரித்திரங்களால் விள ங்குகிறபடி பரிசுத்தஆவியின் வரப்பிரசாதங்கள் நின்றுபோன பின்பு ஜெபமுறைகள் ஆதிச்சபையில் மிகவும் பூர்வமாய் வழங்கப்பட்டுவந்தன. அவைகள் பொதுவான ஜெபங்களெ ன்றும் அத்தியந்த ஜெபங்களென்றும் பூர்வ ஆகமக்காரரால் நாம தேயம் பெற்றிருந்தன. அவைகளில் மிகவும் சாதாரணமாய் வழங்கிவரும் நான்கு முறைகள் பரி. பேதுரு, யோவான், யாக் கோபு, மாற்கு என்பவர்களால் இயற்றப்பட்டதாகச் சொல் லப்படுவதைக் கவனிக்கும்போது அவைகளில் சில மிகவும் பூர்வமாயுள்ளவைதான் என்று நினைக்க இடமுண்டாயிருக் கிறது.

22. வினா. சாக்ஸன் (Saxon) சபையில் வழங்கின ஜெப புஸ்தகம் யாராலே செய்யப்பட்டது?

விடை. பரி. அகுஸ்தீன் என்பவர் பெரிய கிரகோரி என்னும் பாப்புவினால் அனுப்பப்பட்டு சாக்ஸோனரில் அநேகரைக் குணப்படுத்திய பின்பு அவர்களுடைய பிரயோசநத்துக்கென்று அக்காலத்தில் சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கிய பல ஜெபமுறைகளிலிருந்து நவமுறையொன்றைச் செய்ததாக (A. D. 595.) பீட் (Bede) என்பவர் தமது திருச்சபைச் சரித்திரத்தில் கண்டிருக்கிறார்.

23. வினா. இங்கிலாந்து தேசத்தில் பிற்காலத்தில் இதற்குப் பதிலாக வழங்கப்பட்டதெது?

விடை. சாலிஸ்பரி என்றவிடத்தில் கண்காணியாயிருந்த ஆஸ்மண்டு (Osmend) என்பவர (Book of Offices) என்னும் ஓர் ஜெபபுஸ்தகத்தை தமது விசாரணைக்குட்பட்ட சபைகளுக்கென்று A. D. 1078 ல் பிரசித்தப்படுத்தியிருக்கிறார். அதுமுதல் இதுவே பெரும்பான்மையும் இங்கிலாந்துதேசமெங்கும் வழங்கிவந்தது.

24. வினா. திருச்சபை சீர்திருத்தலின் காலத்தில் பிரஸ்தாபமாயிருந்த பல ஜெபமுறைப்புஸ்தகங்கள் தள்ளப்படவும் ஆதிச் சபையிலுள்ள ஜெபமுறைமைகள் திரும்ப ஸ்தாபிக்கப்படவும் ஏதுவாயிருந்ததென்ன?

விடை ரோமான்மார்க்கத்தாருடைய புதுமையான உபதேசங்களாலும் அருவருப்பான சொன்னைகளாலும் அக்காலத்திலிருந்த ஜெபமுறைமைப் புஸ்தகங்கள் பழுதுபட்டுப்போயிருந்ததால் "பிரேவியரி" "மிஸால்" "ரிற்றுவல்" என்ற புஸ்தகங்கள் தள்ளப்பட்டு அவைகளுக்குப் பதிலாக "பொதுவான ஜெபபுஸ்தகம்" சாதாரண பிரயோசநத்துக்கென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

25 வினா. ரோமான் பிரெவியரி என்பதென்ன? அதிலுள்ள பழுதுகளெவை?

விடை. இது பூர்வீகத்திலுள்ள ஜெபபுஸ்தகங்களின் சுருக்கமாய் இருந்ததால் இப்பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். இது நமது ஜெபபுஸ்தகத்திலுள்ள காலை மாலை ஆராதனைக்கு ஒத்திருக்கும். இதிலுள்ள பழுதுகளாவன:—பரிசுத்தவான்கள் தேவதூதருடைய பரிந்துபேசுதல் அடங்கிய மன்றாட்டு; கன்னி மரியாளை நோக்கிப் பண்ணப்படும் வித்தானி; பரிசுத்தவான்

கள் என்னப்பட்டவர்கள் இரத்தச்சாட்சிகள் முதலியவர்களுடைய ஆகமங்களிலிருந்தெடுக்கப்பட்ட பாடங்கள்; மரித்தோருக்காக மன்றாட்டு; உத்தரிக்கும் ஸ்தலத்திலுள்ள ஆவிகளுக்காக விண்ணப்பம், ஆகிய இவைகளே.

26. வினா. மிஸால் என்ற பூசை ஆராதனையின் தன்மையென்ன?

விடை. மரித்தோருக்காகவும் உயிருள்ளோருக்காகவும் செய்யப்படும் பூசை நிவிர்த்திப பலியாகிய அன்றாடகப் பூசை ஆராதனை அடங்கியது மிஸால் என்னப்படும் "தேவவசீகர" உபதேசமும் இதில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். நமது ஜெப புஸ்தகத்தில் கண்டிருக்கிற பரிசுத்த இராப்போசன ஒழுங்குக்கு மிஸால்தான் மூலஆதாரமாம். இதிலுள்ள பல ஜெபங்கள் பூர்வ சபையானது பழுதுபாடின்றி முன்னம் தூய்யநிலைமை கொண்டிருந்தகாலத்தில் வழங்கிவந்த ஜெபங்களுக்கு ஒத்தவைதான்.

27. வினா. மிஸால் என்ற வார்த்தைக்கு மூலமென்ன?

விடை. பரிசுத்த இராபபோசனம் பரிமாறப்படும் முன்புக்கு உதவிக குருவானவர் ஒருவர் அதற்கு அபாத்திரராகப் புறம்பாக்கப்பட்டவர்களையும் ஞானஸ்நானம்பெற ஆயத்தப்படுபவர்களையும் அனுப்பிவிடும்பொழுது உரைக்கும் *Ite missa est* என்ற வார்த்தைகளே இதற்கு மூலமென்று தோன்றுகிறது. இம்மொழிகளுக்கு "போங்கள் அனுப்பிவிடலாயிற்று" என்றாத்தமாம்.

28. வினா. ரிற்றுவல் என்பதற்கு அர்த்தமென்ன? அதில் காணப்பட்ட பிரத்தியட்சமான ரோமான்மார்க்கப் புரட்டென்ன?

விடை. விசேஷித்த காலங்களுக்கு என்று செய்யப்பட்ட முறைமைகளடங்கியது ரிற்றுவல் என்னப்படும்.

இதில் ஞானஸ்நான ஒழுங்கு, திடப்படுத்தல் ஒழுங்கு, விவாகமுறைமை முதலியவை உண்டு. இதில் கண்டிருக்கிற அவஸ்தைபூசுதல் என்ற ரோமமுறைக்கு வேத ஆதாரமே இல்லை.

III. CHAPTER.

ON THE HISTORY OF THE PRAYER BOOK.

The King's Primer 1545 The I Book of Edward VI 1549 The II Book of Edward VI 1550 Sanctioned for use 1552 Revision of Queen Elizabeth 1559 Petition to James I 1604 The Directory in the reign of Charles I. 1643. The savoy Conference 1662.

மூன்றும் அதிகாரம்.

பொதுவான ஜெபபுஸ்தகத்தின் சரித்திரத்தைப் பற்றியது.

1. வினா. பொதுவான ஜெபபுஸ்தகத்தை ஏற்படுத்தினவர்களுடைய நோக்கமென்ன? எந்த நியாயங்களை முன்னிட்டு அவர்கள் அதைச் செய்யத்தொடங்கினார்கள்?

விடை. புதுமைகளை உண்டுபண்ணவேண்டுமென்பதல்ல, தப்பறைகளையும் பழுதுகளையும் தள்ளவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாம். அந்த நோக்கம் பயன்படும்பொருட்டு வேதவசன உரைக்கும் ஆதிசபை முறைமைக்கும் ஒத்துவருத்தக்க பங்குகளை அவர்கள் வைத்துக்கொண்டு அறியாமையாலும் அவபக்தியாலும் தோன்றிய தீயவழக்கங்களையும், ரோமான் மார்க்கத்தாருடைய தப்பித உபதேசங்களுக்கும் ஆசாரங்களுக்கும் இணையாய் நிற்கும் பங்குகளையும் நீக்கிவிட்டார்கள்.

2. வினா. எட்டாம் என்றியின் (8 Henry) சமயத்தின் பேரிலே பிரயோஜனமுள்ள எவ்வழக்கம் ஸ்தாபகமாயிற்று? (King's Primer) என்ற புஸ்தகம் பிரசித்தப்படுத்தப்பட்ட நோக்கமென்ன? அது பிரசித்தப்படுத்தப்பட்ட வருஷமெது?

விடை. Henry VIII சீர்திருத்தலுக்கு எவ்வளவாவது உதவுவோனாகாவிட்டாலும் தேவ ஆராதனை இங்கிலீஷ்பாஷையில் செய்யப்படவேண்டுமென்று கேட்ட ஜனங்களுடைய விருப்பத்துக்கு இணங்கினான். அப்படியே தேவ ஆராதனை நாடோடிய பாஷையில் நடப்பிக்கப்படும்படியாக ராஜாவின் புஸ்தகம் (King's Primer) A. D. 1545ல் பிரஸ்தாபமாய் வழங்குகிறது.

3. வினா. அதின் அடக்கமென்ன?

விடை. விசுவாசப்பிரமாணமும், கர்த்தருடைய ஜெபமும், பத்துக்கற்பனைகளும், இப்போது வழங்கிவருகிற லித்தானிக்கு

ஏறக்குறைய நீத்த ஒரு லித்தானியும், 95-ம் சங்கீதமும், உன்னை துதிக்கிறோம் முதலிய சில கீதங்களும், சுருக்க ஜெபங்களும் தனி ஜெபத்துக்கும் குடும்ப ஜெபத்துக்கும் அடுத்த சிறந்தான பல ஜெபங்களும் அதிலடங்கியிருந்தன.

4 வி. ஆறாம் எட்வர்ட் (Edward VI.) கிரீடாதிபதியான ஆரம்பத்திலே சபையின் பொதுவான ஆராதனையில் சீர்பாட்டைப் பிறப்பிக்கும்படி நடப்பிக்கப்பட்ட முதல் முயற்சி என்ன?

விடை. அவனுடைய அரசாட்சி ஆரம்பமானவுடனே கர்த்தருடைய இராக்கருணையாகிய சாக்கிரமெந்திலே அப்பமும் ரசமுமாகிய இரண்டும் தவறாமல் யாவருக்கும் பரிமாறப்படவேணுமென்ற சட்டம் ஒன்று பிறந்ததுமல்லாமல், பரிசுத்த ராப்போசனத்தைப் பரிமாறும் ஒழுங்கும் உடனே செய்யப்பட்டது.

5 வி. பின்பு செய்யப்பட்ட முயற்சியென்ன? (Edward VI.) ஆறாம் எட்வர்ட்டின் முதலாம் ஜெபபுஸ்தகம் பிரசித்தமான காலமென்ன?

விடை. தெரிந்து நியமிக்கப்பட்ட சில கண்காணிமாரும் வேதசாஸ்திரிகளும் அவர்களுக்குத் தலைமையாக கிரான்மரும், ரிட்லியுங்கூடி சபையிலே பொதுவான ஆராதனையில் வழங்கத்தக்க பொதுவான முறைமைகளுள்ள புஸ்தகம் ஒன்று செய்யப்படும்படி உத்தரவாயிற்று. அப்படியே (1549, May) மேய் மாசம் 10-ல் "ஆறாம் (Edward) எட்வர்ட்டின் முதலாம் ஜெப புஸ்தகம் என்று பேர்வழங்கிய புஸ்தகமொன்று பிரசித்தமாயிற்று.

6. வி. அதின் அடக்கமென்ன? அதிலுள்ள காலை மாலை ஜெப ஒழுங்கு எப்படித் துவக்குகிறது?

விடை. அதில் ஞாயிற்றுக்கிழமைக்கும் பரிசுத்த நாட்களுக்கும் அடுத்த பொதுவான முறைமைகளும், ஞானஸ்நானம், திடப்படுத்தல், விவாகம், பரிசோதனை அடக்கம்பண்ணுதல் முதலிய விசேஷ காலங்களுக்குரிய ஒழுங்குகளும் இருந்ததுமல்லாமல் மேற்சொல்லிய நற்கருணை ஒழுங்கும் திருத்திச் சேர்க்கப்பட்டது. காலைமாலை ஜெப ஒழுங்கோ கர்த்தருடைய ஜெபத்தைக்கொண்டு துவக்குகிறது.

7. வி. யாருடைய அனுமதியில் அது இங்கிலாந்து சபையில் அதிகாரமுள்ளதாக ஒப்புக்கொள்ளப்பட்டு ஸ்தாபகமாயிற்று?

விடை. பொதுவான பார்லிமெந்தாரும் சங்கத்தாரும் அதை ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தினார்கள். இவ்விதமாய் அது

திருச்சபை அதிகாரிகளாலும் தேச அதிகாரிகளாலும் உறுதி பெற்றதால் அதைப பிரயோகிப்பது பிரமாணமாக விதிக்கப் பட்டது.

8. வினா. பிரசித்தமான கொஞ்சக்காலத்துக்குள்ளாக அது திரும்பத் திருத்தப்படவேண்டியதாயிருந்ததா?

விடை. ஜனங்கள் பாலபபிராயமுதலாய் ஒப்புக்கொண்டு வந்த கொள்கைகளில் சற்று மனவிருப்பமுற்றோராய்த் தோன்றினதால் முதலாம் ஜெபபுஸ்தகத்தில் ரோமானயாத்தகப் பழுதுகளை அடியறவகற்றி நிர்மூலமாய நீக்கிவிடுவது அப்புஸ்தகத்தைச் சென்மித்தோருக்கு நலமென்று காணப்படவில்லை. ஆதலால் நீக்கிநின்ற சிதைவுகளைப போக்கிவிடுவதற்காக 1550-ல் அரசனுடைய அனுமதிக்கிசைவாய் சங்கத்தாருடைய உத்தரவின்பேரில் அது மறுபடியும் திருத்தப்படலாயிற்று.

9. வினா. இதைத் திருத்துவதில் கிரன்மருக்கு உதவியாயிருந்ததார்? அதிலிருந்து தள்ளபபட்ட ரோமானித்தாருடைய தப்பான கொள்கையெவை?

விடை. பேதுரு மாட்டின், மாட்டின் பியூசர் (Peter Martyn, Martyn Bucer) இவ்விருவரும் அவருக்குசதவியாயிருந்து அதைத் திருப்பினார்கள். இவ்விருவரும அந்நியராயிருந்தாலும் அக்காலத்தில் ஆக்ஸ்பர்ட் கேமபிரிட்ஜ் (Oxford Cambridge) என்ற கல்விச்சாலைகளில் வேதசாஸ்திர ஆயர்களாயிருந்தார்கள். திருப்பப்பட்ட புஸ்தகம் 6-ம எட்வார்டின இரண்டாம் ஜெபபுஸ்தகம் என்ற பெயரால் விளங்கினது. இதிலிருந்து மரித்தோருக்காகச் செபித்தல், அவளவைபூசுதலின் முறைமை என்பவை தள்ளபபட்டன. வேறு முக்கியகூட்டுதலகளும திருத்தல்களும் செயயபபட்டன.

10. வினா. முக்கியமான அந்த திருத்தல்களுங் கூட்டுதல்களுமென்ன?

விடை. ரூபிரிக் என்ற பல குறிப்புகளுங் காலைமாலைச் செப ஆரம்பத்திலுள்ள வாசகியங்களும, அவைகளுக்குப் பின்வரும் எச்சரிப்பும், பொதுவான பாவ அறிக்கையும், பாவவிமோசனமுங் கூறுதலுங் கூட்டபபட்டன. நற்கருணை ஒழுங்கில் பத்துக் கற்பனை சேர்க்கப்பட்டது. இவ்வொழுங்கில் கிறிஸ்துவின் சரீரப பிரசன்னத்தைக் குறித்த வாசகங்கள் தள்ளப்பட்டன; (Ordinal) ஆர்டினல் என்ற குருபபட்டந்தரிப்பிக்கும் முறைமையுஞ் சேர்க்கப்பட்டது.

N. B. ரூபிரிக் என்ற பல கவனிப்புகள் சிவப்பு மையால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கும் வழக்கத்தையிட்டு இலத்தின்பாஷையில் சிவப்பு என்ற அர்த்தத்தையுடைய ரூபிரிக என்ற நாமத்தால் அழைக்கப்படலாயிற்று.

11. வினா. எப்பொழுது எவ்வனுமதியால் இந்த இரண்டாம் புஸ்தகம் பிரசுரமபண்ணபபட்டது.

விடை. தேவாராதனையில விளங்கவேண்டிய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும்பற்றிய பிரமாணமொன்று சேர்க்கப்பட்டு, 1552-ல சகல பரிசுத்தவான்களின நாள் முதல் அதிகாரம்பெற்றதாக வழங்கபபட்டது.

12. வினா. மரியாளென்ற ராணி பட்டாபிஷேகம் பெற்றபின் உண்டான துன்பத்தினால் விளைந்த மாறுதலென்ன?

விடை. புரோடெஸ்தாந்தர் (Protestants) என்பவர்களுடைய பொதுவான ஜெபபுஸ்தகம் நீக்கபபட்டு ரோமான்சபை வழக்கபபடி ஆராதனை நடப்பிக்கபபட்டது. துன்பத்துக்கஞ்சி ஜெர்மனி தேசத்திலும் சுவிட்ஸர்லாந்து தேசத்திலும் தஞ்சம்புகுந்திருந்த இங்கிலீஷ்சபையாருக்குள் கடும் விகற்பமுண்டாயிற்று. இவ்விகற்பத்தில் சாலவின், நாக்ஸ் என்பவர்கள் முகாமையாயிருந்தார்கள். பிற்காலத்தில் நேரிட்ட கொடிதான பல கெடுதிகளுக்கு இது காரணமானது.

13. வினா. எலிசபேத்து என்ற இராணி பட்டாபிஷேகம் தரித்துக்கொண்டபின்பு உண்டான சீர்ப்பாடென்ன?

விடை. சீர்திருத்தப்பட்ட மார்க்கத்தை திரும்ப ஸ்தாபிப்பதே அவளது கருத்தாயிருந்தது. (Edward) எட்வார்டின் ஜெபபுஸ்தகத்தைத் திருத்தி சீர்ப்பாடுசெய்யும்பொருட்டு சாஸ்திரிகளின் சங்கமொன்று நியமனமானதால் அக்கருத்து திருஷ்டாந்தப்படலாயிற்று. இவ்விதமாய்த் திருத்தலான புஸ்தகம் வழங்கப்படவேணுமென்ற ஓர் சட்டம் 1559-ல் யோவான்ஸ்நானனுடைய பண்டிகைகளில் பிறப்பிக்கப்பட்டு சபையில் பொதுவான ஜெப ஆராதனையின் ஒருமைப்பாட்டுக்குஞ் சாக்கிரமெந்துகளுடைய பரிமாற்றத்துக்குமான சட்டம் என்கிற பேர்மொழிகளுஞ் சேர்க்கப்பட்டன.

14. வினா. இந்த முறையில் மாற்றப்பட்டவைகளும் கூட்டப்பட்டவைகளும் எவை?

விடை. லித்தானியாவிலே ரோமாபுரி கண்காணியின் கொடுங்கோலினின்றும் அருவருக்கப்படத்தக்க அவனுடைய ஏக்

லா அவசியாயங்களினின்றும் என்ற சுலோகங்கள் நீக்கப்பட்டன. இராசாத்திக்காக வரும் மன்றாட்டில் "உம்மைச் செம்மையாய் ஆராதிக்கவும், நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கவும் அவளைத் திடப்படுத்த" என்றவாசகஞ் சேர்க்கப்பட்டது. காலை மாலைச் செப ஒழுங்கிலே ராஜாத்திக்காகவுங் குருமாருக்காகவுஞ் செய்யப்படும் ஜெபங்களும் கடைசியாய்ச் செய்யப்படும் ஜெபங்களும், பராபரனே இரக்கமாயிருக்கிறதும் என்று துவக்குகிற ஜெபமுங் கூட்டப்பட்டன. சில ரூபிரிக்குகள் திருத்தப்பட்டன. பாட அட்டவணை திட்டமாய் நியமிக்கப்பட்டது. நற்கருணை பரிமாறும் ஒழுங்கில ஆரணொடொரு விசேஷித்த திருத்தலுகளுண்டு.

15. வினா. இதுவரையும் ரோமான்மார்க்கத்தார் சீராய்த் திருத்தலுற்ற ஜெபபுஸ்தகத்தைப்பற்றி முறைப்பாடு செய்ததுண்டா? அது வழங்கப்பட்ட ஆலயங்களுக்கு அவர்கள் போகாதபடி தடுத்துநின்ற காரணமென்ன?

விடை. திருத்தலுற்ற ஜெபபுஸ்தகத்தில் கண்டிருக்கும் உபதேசங்களையும் முறைமைகளையும் ஆட்சேபிப்பதற்கான நியாயத்தை அவர்கள் தேடினாலும் தெரிந்தெடுப்பது கூடாதென்று காணப்பட்டதால் எலிசபேத் ராஜாத்தி பட்டாபிஷேகமான கொஞ்சக்காலமட்டுஞ் சீர்திருத்தலடைந்த சபையாருடைய கோவில்களுக்குப் போய்வந்தார்கள். ஆனால் பாப்புவின் தலைமை அதிகாரத்தை அறிக்கைபண்ணி ஒப்புக்கொள்ளவில்லையென்று இராசகினி மறுத்ததை செய்ததினிமித்தம் ஐந்தாம் பையஸ் என்ற பாப்பு இராசகினியைச் சபைக்குப் புறம்பாக்கினதாகப் பத்திரம் பிறப்பித்த பிற்பாடுதான், ரோமான் மார்க்கத்தார் அந்த நல்ல வழக்கத்தைவிட்டு சபையின் திருத்தலான ஆராதனைமுறைமையைத் தள்ளி, அவ்வித ஆராதனை நடந்த கோவில்களை புறக்கணித்தார்கள்.

16. வினா. அக்காலத்தில்தானே ரோமான்மார்க்கத்தாரல்லாத வேறு சிலபேர் பொதுவான ஜெபபுஸ்தகத்தைக் கண்டித்துரைக்க முயற்சியுற்றெழும்பவில்லையா?

விடை. மரியாளாலுண்டான உபத்திரவத்திற்கஞ்சி புறதேசத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்கள் எலிசபேத் ராசாத்தியின் காலத்தில் சுதேசத்துக்குத் திரும்பிப் பொதுவான ஜெபபுஸ்தகத்தை பலவிதமாய் ஆட்சேபிக்க முயன்றார்கள்.

17. வினா. அவர்கள் தங்களுக்குத் தரித்துக்கொண்ட நாமமென்ன? அதற்கு மூலமென்ன?

விடை. [illegible] ஜெனீவா [illegible] யில் [illegible] களில பழகின [illegible] தாங்கள் அதிக சுத்தாங்கதலைச் [illegible] பியூரித்தர்களென (Puritans) [illegible] தங்களைக் [illegible] கொண்டார்கள்.

18 வினு [illegible] ப்பமாவதென்ன? அக்காலம் [illegible] யானது?

விடை [illegible] வாண்டுகளில் பியூரித் தன்மை (Puri[illegible] [illegible] கொண்ட காரியத்தில் வெகு [illegible] அவருடைய [illegible] யார்கியதேல [illegible] முதலாம [illegible] பாக பியூரித்தர்கள் [illegible] அபிப்பிராயங்களை யுப்பறற [illegible] முதலாம மன்னனுக்கு [illegible] தார்கள். [illegible] க்கு அதிசயமான போதகன் மார் [illegible] விண்ணப்பம் [illegible] ஆனல் அதில [illegible] 750 [illegible] க்கு அதிகமல்ல [illegible].

19 வினு [illegible] ஜெபபுஸ்தக [illegible] கண்டித்த முக்கிய ஆட்சேபனைகளென்னை?

விடை. [illegible] முறைமை, [illegible] வாசித்தல, [illegible] [illegible] சிலு வையின் அடையாளம் [illegible] ஞானத்தாய் தகப்பன் மாரை [illegible] தல், [illegible] தல், [illegible] டைய இராப்போ சனத்தை வாங்கும்போது முழங்காலில் நிற்குதல், விவாகத்தில் மோதிரம்மாற்றல், தினசரி ஆராதனை [illegible] முதலியவைகளே.

20. வினு. முதலாம் ஜேம்ஸ் என்ற அரசன் அந்த விண் ணப்பத்திற்கு என்ன முடிவு செய்தான்? அதினல் தோன் றி[illegible] முக்கியமான சங்கதிகளில ஒன்றென்ன?

[illegible]டை. எடுத்துக் காட்டப்பட்ட ஆட்சேபனைகளுக்கு சமா தா[illegible]ம் ஒதப்பொருட்டு 1604-ஆம் ஜனுவரி 9-ல் கண்காணிமா [illegible]யுய ஒன்பதுபிரதானகுருமாரையும் எதிர்பக்கத்தாரான (Puri-ta[illegible]s) நாலு வேதசாஸ்திரிகளையுங் கொண்டு (Hampton court) எ[illegible]னுமிடத்தில் ஒரு சங்கங் கூட்டினன். மூன்றுநாளளவும் தங்கியிருந்தது. (Puritans) பியூரித்தருடைய மனுக்களில் அநே

கம் அபோதனைகளாகத் தள்ளப்பட்டாலும் முக்கியமான சிலது ஒப்புககொள்ளபபட்டன. இங்கிலீஷ் வேதாகமம மறு படியுந் திருத்தபபட்டு அதிகாரம்பொருந்தியதாய பிரஸதாப மாக்கப்படும்படி இசசங்கததாரால தீர்மானமாயிற்று.

21. வினு இச்சமயத்தில் ஜெபபுஸ்தகத்தில் உண்டான மாறு தல்களெவை?

விடை. பாவவிமோசனத்தைப்பற்றிய ரூபிரிக்கோடே சில வார்த்தைகள் கூட்டபபட்டன; பொதுவானதோத்திரமன்றி மற்றதோத்திரங்கள் எல்லாம் ஊடே சோகசபபட்டன; ஞா னஸ்நானத்தின் முடிவில சாக்கிரமெந்துக்களைப்பற்றிய விஸ தரிபபு கூட்டப்பட்டது; ஒழுங்குபபிரகாரம பட்டம்பெற்ற குருவானவரேயன்றி மற்றொருவரும ஞானஸ்நானங்கொடுக் கக கூடாதென்று தீர்மானிக்கபபட்டது.

22. வினு. இச்சங்கததாரின் தீர்மானங்களை ஒவ்வாமைக் காரர் என்று அாததங்கொள்ளும நான்கான்பாமிஸ்ட் (Non-conformists) எனபவர்கள ஒப்புக்கொண்டார்களா? முதலாம சார்லிஸ் என்ற அரசன் கிரீடாதிபதியான காலம் ஆரமபத்தில் இவர்களுக்குள் நேரிட்ட ஒவ்வாமைக்குக் காரணமாய் இருந் ததென்ன?

விடை. நான்கான்பாமிஸ்ட் என்பவர்கள் சங்கத்தின் தீர் மானங்களை எறக்குறைய ஒபபுககொணடார்கள ஆனல் முத லாம் சார்லிஸின் ஆளுகை ஆரம்பத்தில் (Laud) லாாட் என்ற சிரேஷ்ட கணகாணி திருச்சபையின் உபதேசங்களுக் குஞ் சட்டங்களுக்கும அதிக வைராக்கியம்பாராட்டி சனங் கள் அதை அனுசரிததுவரவேண்டுமென்று கண்டிப்புசசெய் ததால் திரும்பவும் ஒவ்வாமை உணடாயிருந்தது கூடமாயிற்று. இதனபேரில் சபைபிரிதிந்திகளின் சங்கததார் கொணடபே தம் அனுதினமும் அதிகரித்து எழும்பிற்று.

23. வினு. இந்தச்சமயததில் (Charles) சார்லிஸ் அரசன் ஸ்கொத்லாந்து (Scotland) தேசததில் நிறைவேற்ற [illegible] றது தென்ன? அதெப்படி முடிந்தது?

விடை. இங்கிலாந்து சபைக்குரிய ஜெபபுஸ்தகத்தை யாது Scotland தேசத்திலும் பிரயோகிக்கப்படும்படி அரசன் [illegible] குவாய் முயன்றான். ஆனல் காரியம் வாய்க்கவில்லை அத் தே சத்துச் சபையார் கண்காணி அரசாட்சியைத் தள்ளி பிஸ்பிடேரியன் பித்திரியருடைய ஆராதனைமுறைமையை ஒப்புக்கொண்டு

அனுசரிக்கும்படி தங்களுக்குள் கட்டுப்பாடுசெய்து, உறுதியாய உடன்படிக்கைபண்ணிக்கொண்டார்கள்.

24 வினு. 1643-ல் வெஸ்ற்மினிஸ்றரில் வேதாந்திகள் சங்கங்கூடினதற்கு நோக்கமும், கூடினதாலுண்டான பயனும் என்ன?

விடை. இவ்வருடத்தில் சிரேஷ்டாலோசனைச் சங்கத்தாராகிய பார்லிமெந்தார் ஒரு கட்டளையைப்பிறப்பித்து (Westminster)ல் வேதாந்திகளை கூடிவரவும் ஜெபபுஸ்தகத்தையுஞ் சபையாளுகை முறைமைகளையும சீர்திருத்தவுந் திட்டஞ்செய்தார்கள். அவர்கள் திட்டப்படி கூடிவந்த வேதசாஸ்திரிகள் பொதுவான ஜெபபுஸ்தகத்தைத் தள்ளிப்போட்டு ராஜ்யத்துக்குட்பட்ட சபைகள்தோறும் வழங்கும்படி வேறொரு முறையை (Directory) நியமனஞ்செய்தார்கள். இதன்படி ஆராதனையொழுங்கு வேறுபட்டு அந்தந்தக் குருவானவர் தம்தம் இஷ்டப்படி ஆராதனைநடப்பிக்க இடமுண்டாயிற்று.

25. வினு பியூரித்தர் (Puritans) தலைப்பட்டதால் உண்டான கெடுதிகள் எவை?

விடை. அவர்கள்பக்கம் அதிக முறுக்கானதினால் கண்காணி அரசாட்சி தள்ளப்பட்டது, சபை சீர்கெட்டுவிட்டது; அரசன் மரண ஆக்கினைப்படுத்தப்பட்டான்; தங்கள் பட்சத்தாராயிராதவர்களை க்ரூரமாய் நடத்தினார்கள், மனச்சாட்சிக்கடுத்த காரியங்களில்முதலாய் பலோத்காரம நடப்பித்தார்கள். ரோமான்யர்கள் நடப்பித்துவந்த கொடுமைகளைப்பார்க்கிலும் இவை அதிக கொடியவையாயிருந்தன.

26. வினு 1660 ல் இரண்டாம் சாலிஸ், (Charles) தகப்பனாகிய முதலாம் Charlesன பட்டத்துக்கு வந்தபோது ஜெபபுஸ்தகம் திரும்ப வழங்கலானதற்கு முகாந்தரமென்ன?

விடை. 1660-ம் வருடம் (May) மேயமாசம் 23-ல் இரண்டாம் சாலிஸ் இங்கிலாந்திய காலத்தில் இராசசியம் புதுச்சீர் பெற்றது. ஜெபபுஸ்தக பிரயோகத்தை விலக்கின சிரேஷ்ட ஆலோசனைச் சங்கத்தாராகிய பார்லிமெந்தார் பண்ணின தீர்மானம் இராச அனுமதிபெறாததால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்று தள்ளப்பட்டதின்பேரில் ஜெபபுஸ்தகமானது மறுபடியும் வழங்கப்படலாயிற்று.

27. வினு. (Presbyterians) பிரஸ்பிதரியருக்கு மனஸ்தா

பஙிவிர்த்தி செய்து சம்மதத் திருப்தியுண்டாக்க நோக்கமாய் அரசன் கூறுவித்த விளம்பரமென்ன?

விடை. ஒருவன் மார்க்கவிஷயத்தில் விபரீதக் கோட்பாடுகளை அனுசரித்தாலும் அதனால் ராசாங்கத்தில் சமாதானபேதம் உண்டாவதற்கிடமில்லையென்று கண்டால் அவனைத் தொந்தரிக்கலாகாதென்றும், இங்கிலாந்துசபை ஜெபபுஸ்தகத்துக்கு விரோதமாய் பிரஸ்பிதீரியரால் பல ஆட்சேபனைகள் உரைக்கப்பட்டதால் இருபக்கத்திலும் சமரசமான வேதாந்திகள் கூடி அதனைப் பார்வையிட்டுவர அவசியமான திருத்தங்களை நடப்பிக்கவும் திட்டஞ்செய்யவேண்டுமென்று ராஜவிளம்பரம் உண்டாயிற்று.

28 **வினா.** (Savoy) செவாய்புரியில் கண்காணிமார் எந்த நோக்கத்தோடே சங்கங்கூடினார்கள்? பிரஸ்பிதீரியர் அதற்கு இணங்கினார்களா?

விடை. 1661–ல் சேவாயில் சங்கங்கூடினபோது ஜெபபுஸ்தகத்தில் கண்டிருக்கிற முறைமைகளிலும் சடங்குகளிலும் பாவமானதாக அல்லவென்று தங்களால் மெய்ப்பிக்கப்படும் எவற்றையும் நீக்கிவிடுவோமென்பதாய் கண்காணிமார் சம்மதவாக்குரைத்தார்கள். பிரஸ்பிதீரியரோ எந்த முறைமைகளையாவது கைக்கொள்ளவேண்டிய கடமையாகக் கண்டிப்பாய் விதித்து உறுதிப்படுத்துவது தகாதென்று சாதித்து ஞானஸ்நானத்தில் சிலுவையடையாளத்தை வரைதல், விவாகத்தில் மோதிரம் மாற்றல், திராப்போசன சாக்கிரமெந்தில் முழங்காலில் நிற்குதல், வெள்ளையங்கியைத் தரித்துக்கொள்ளல் முதலான இவ்வழக்கங்கள் அவசியமற்றவை என்று சாதித்தார்கள்.

29 **வினா.** ஜெபபுஸ்தகத்தைத் திருப்ப நோக்கமாய் அவர்கள் கேட்டுக்கொண்ட வேறு மனுக்களென்ன?

விடை. ஜெபபுஸ்தகத்தில் இணக்கமில்லாதவை தோன்றுவதால் சம்பந்தத்தொடர்பு உற அது திருத்தப்படவேண்டியதன்றி, சுருக்கஜெபங்கள் நீட்டப்பட்டுச் சுருக்கவாசகங்கள் நீக்கிவிடப்படுவது அவசியமென்றும் தங்கள் ஜெபங்கள் குருமாரால் தேவையான வேளைகளிற் செய்யப்படுவது தகுதியென்றும் பரிசுத்தவான்களின் நாட்கள் தள்ளப்படவேண்டியதென்றும் நற்கருணையொழுங்கு நற்கருணை அறையிலிருந்து வாசிக்கப்படலாகாதென்றும் ஞானஸ்நானமுறைமையில் மறுபிறப்பு என்ற மொழி விட்டுவிடப்படவேண்டுமென்றுந் தோ

வில்களில் தள்ளுபடியாகமங்கள் வாசிக்கப்படவேண்டு மென்றுங் கேட்டுக்கொண்டார்கள்.

30. வினா. (NonConformists) நான்கார்வார்மிஸ்த்தரைச் சேர்ந்த ஓர் குருவானவர் துணிவாய்க் கேட்டுக்கொண்டதென்ன? விவாதப்பட்ட இருகட்சிகதாரரும் ஏகமனதிருணயமாவதற்கு ஏதுகரமிருந்ததா?

விடை. (Baxter.) பாக்ஸ்றர் என்பவர் அனுமதிபெற்று ஜெபமுறைமையானது திருத்தப்படமுதலாய் அபாத்திரமுள்ளதென்று சாதித்து, பூர்வீகமுள்ள யாதொரு ஜெபமுறைமையையும் பார்வையிடாமல் சுயமாய் ஒரு முறைமையைச் செய்து சங்கத்தார் அதை ஒப்புக்கொள்ளும்படி கூச்சம் அச்சமறக் கேட்டுக்கொண்டார். இச்சங்கதியினாலும் பிரஸ்பித்தீரியருடைய மனு ஒப்புக்கொள்ளத் தகாததாயிருந்ததினாலுஞ் சங்கத்தார் ஏகமனதிருணயமாவதற்கு இடமறுப்போயிற்று.

31. வினா. என்றாலுஞ் சில திருத்தல்கள் நடக்கலானதெப்படி? அவ்விதமாயத் திருத்தப்பட்ட புஸ்தகம் பிரசுரமான காலமென்ன?

விடை. இயற்றப்பட்ட திருத்தல்கள் என்னென்னவாறு ஆயினும் இங்கிலாந்து சபையின் மகிமைக்குத் தாழ்ச்சலாக எண்ணப்பட்ட தன்மையாயாவது கலகத்தாட்சியாயாவது கூட்டிக் குறைக்கலாகாதென்று சகத்தில் பண்ணிக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பிரகாரஞ் சில திருத்தல்கள் நடக்கலாயின. இவ்விதத் திருத்தமான புஸ்தகம் பார்லிமெந்தாருடைய அனுமதிபெற்று 1662-ஆம் மேய் 16-ல் ராஜசம்மதியின்பேரில் பிரசித்தமாயிற்று.

32. வினா. அந்த முறை நடந்த விசேஷித்த திருத்தல்களெவை?

விடை. சங்கீதங்கள் தினசரி ஆராதனைக்கென்று திட்டமாய் ஒழுங்குபடுத்தப்பட்டன, சில பாடங்கள் மாற்றப்பட்டு தகுதியும் ஏற்றதுமான வேறே பாடங்கள் அவைகளுக்குப் பதிலாக நியமனஞ்செய்யப்பட்டன. சங்கீதங்களும், பத்துக் கற்பனைகளுந்தவிர மற்றெல்லாம் சாதாரண வேதாகமப் பிரதியிலுள்ளபடி வாசிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. லித்தானியாவின் முடிவிலிருந்த ஐந்து ஜெபங்கள் காலை மாலை ஜெப ஒழுங்கின்முடிவில் சேர்க்கப்பட்டது; எம்பர் வாரங்களுக்கடுத்த ஜெபங்கள் பார்லிமெந்தர்

ருக்காகச் செய்யும்ஜெபம்; பலவித நிலைமையுள்ளோருக்காகச் செய்யும் மன்றாட்டு பொதுவான தோத்திரம், வேறு சில ஜெபங்கள் தேவபந்திக்குச் சேருகிறவர்களுக்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையிலாவது பரிசுத்தநாளிலாவது அறிவிக்கவேண்டிய எச்சரிப்பைப்பற்றிய சட்டம், அதற்குச் சேருகிறவர்கள் முன்னறத் தெரியப்படுத்துவதற்கான ஒழுங்கு, தேவவசீகர உபதேசத்துக்கு எதிர்ப்போதிப்பு, முதிர்ந்த வயதாளிகளுக்குக் கொடுக்கும் ஞானஸ்நானமுறைமை, சமுத்திர யாத்திரையில் செய்யத்தக்க ஜெபங்கள், வியாதியஸ்தரைச் சந்திக்கும் ஒழுங்கின்முடிவில் 5 ஜெபங்கள், சார்லிஸ் ராஜா பட்டமடைந்ததின்பேரில் ராஜ்யம் புதுச்சீர் பெற்றதை வருஷாந்தரம் நினைவுகூருவதற்கான முறைமை முதலானவை கூட்டப்பட்டன.

33. வினா. மேற்காட்டிய திருத்தல்களைச் செய்தவர்கள் ஜெபபுஸ்தகத்தை திருத்துவதற்கு தங்களைத் தூண்டிவிட்ட காரணத்தைப்பற்றி பகர்ந்திருக்கிறதென்ன?

விடை. நவமாய்த் திருத்தலான ஜெபபுஸ்தகத்தின் முகவுரையில் அவர்கள் தங்கள் நோக்கத்தையும் அபிப்பிராயத்தையும் பற்றி வழுதியிருக்கிற நேர்மையாவது:—எதிர்ப்பேசுகிறவர்களால் எடுத்துக்காட்டப்பட்ட பல ஆட்சேபனைகளில் மெய்ந்தியும் அப்பிரயோசனமுமானவைகளை தள்ளும்படி பார்க்கிறோம் எவ்வளவாவது திருத்தல்பெற அகத்தியம் பொருந்தினவைகளையோ நியாயவாதிகளின் தூண்டுதலின்றி சுயமனதாகியால்தானே திருத்தல்செய்தோம். என்னெனில் இப்புஸ்தகம் சாவ அனுமதி பெறுமுன அமைக்கப்பட்டிருந்த விதத்தைப்பற்றி தேவவசன உரைக்கும் உபதேச தூய்மைக்கும் விரோத போதனையுள்ளதாகவாவது தெய்வபக்தியுள்ளோர் நன்மனச்சாட்சியுடன் பிரயோகஞ்செய்ய அபாத்திரமுள்ளதாகவாவது இருக்கவில்லையென்று நாங்கள் திருப்திகரமாய் நிச்சயித்திருப்பதுமல்லாமல் உலகறியத் திடச்சாட்சியாய்க் கூறியும் அறிவித்திருக்கிறோம். ஆதலால் நேர்மை விலகிநிற்கும் எந்தப் பாரிசத்தாருடைய அபிப்பிராயத்துக்காவது திருப்திசெய்யவேண்டுமென்று இந்த முறை கூடினது எங்கள் நோக்கமல்ல. ஆனால் தேர்ந்த எங்களறிவால் இயன்றமட்டுந் திருச்சபையில் சமாதானமும் ஒருமையும் நிலைபெற்றோங்கவும் தேவாராதனையில் தகுந்தவணக்கமும் உகந்தபத்தியுந் தழைக்கவுந் திருச்சபையின் ஜெபமுறைமைக்கு விரோதமாய் மிகை தேடுகிறவர்களுக்கு இடங்கிடையாதேபோகவுங் காரணமான காரியங்களை நாடியே கூடி வந்தோம் என்பதே.

34. வினா. ஜெபபுஸ்தகம் மறுபடியுந் திருப்பப்பட்டதா?

விடை. மேற்சொல்லியதே கடைசிமுறையென்றாலும் 1689–ல் ஒரு சங்கம் நியமிக்கப்பட்டது. கூடிய சங்கத்தார் நான்காார்மிஸ்த்தருக்கு இதமியமாக பல விஷயங்களில் திருத்தல்களை இயற்றுவிக்க பொதுப்பட மனங்கொண்டிருந்தாலுந் திருத்தலாகும்படி தெரிந்து கூறப்பட்டவைகளைப்பற்றியே கொடிதான ஒவ்வாமையும் தீராத தர்க்கவாதமும் எழும்பியதால் யாதொரு திருத்தலும் நடவாதேபோயிற்று.

35. வினா. என்றாலுங் கால இயற்கைக்குங் காரியங்களின் வேறுபாட்டுக்கும் ஏதுவாகச் செய்யப்பட்ட திருத்தல்களை யை?

விடை. முகவுரைப் பேர்த்தாளில் (Ireland) ஐர்லாந்து என்ற நாமஞ் சேர்க்கப்பட்டது. 1751–ல் கூடிய Parliament சங்கத்தாரது தீர்மானபபடி பல அட்டவணைகள் நவமாய்க் கூட்டப்பட்டன. விவாக அறிக்கை கூறுவதற்கான சட்டமானது 1753–ல் கூடிய சங்கததார் தீாமானபபடி நிசேயாவிசுவாசப் பிரமாணத்துககு பின்வரும் ரூபிரிக்கினின்று இடம் மாற்றப் பட்டது.

36. வினா. குருமார் ஜெபபுஸ்தகத்தை தேவாலயங்களில் பத்திரமாய் வழஙகிவரும்படி பிரமாணிக்கபபட்டிருப்பதெப்படி?

விடை. இப்போது தேசப்பிரமாணத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடி இஙகிலாநது ஐர்லாநதிலுள்ள ஐககியச்சபைக்குரிய பொதுவான ஜெபபுஸ்தகத்தை ஒபபுக்கொண்டும் பிரயோகித்துக்கொண்டும் வருவேன எனக் குருமார் அறிக்கைசெய்வதினாலும் பட்டம்பெறுகிறவர்கள் ஒபபுகக்கொள்ளவேண்டிய 39 சட்டஙகளை அறிக்கையிட்டு அதற்குக் கையொப்பங்கொடுபபதாலும பட்டாபிஷேகப பிரதிக்கினையினாலுந்தானே.

37. வினா. பொதுவான ஜெபபுஸ்தகத்தின் மாட்சிமை துலங்கும்படி அதில் விளங்கும் இலட்சணங்களைக் குறிப்பாய்ச் சொல்லு?

விடை. அது எவருக்கும் விளங்கத்தக்க எளிதான நடையும் அனலான பததியைப பயிற்றுவிக்கத்தக்க இதமான தன்மையுமுள்ளது. அது புத்தியுள்ள ஆராதனைபொருந்தியதும் பூர்வபுத்திமுறைமைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதும் திரள்கூடிய சபை ஒரே மனதோடும் ஒரே வாயினாலும் வேதமொழிகளைப்பே

மிகுந்து வழங்க ஒரே தேவனும் இரட்சகருமாகிய அவரை இடைவிடாமல் ஆவியிலும் உண்மையிலும் ஆராதித்து மகிமைப்படுத்தத்தக்க நன்மேரையாக இயற்றப்பட்டதாயும் மெய்மை விளங்குவதால், சிறந்த தன்மையும் நிறைந்த மேன்மையும் பொருந்தியதெனத் தகுமே. அதிலே விதிக்கப்பட்டிருக்கிறபடி எழுந்துநின்றும் உட்கார்ந்திருந்தும் முழங்காலில் நின்றும் ஆராதனை செய்யப்படுவதாலும் அவ்வாராதனை வகையில் நானாவிதமாய் இருப்பதாலும் இளைப்புத் தவிர்ந்துபோக ஊக்கந் தளைக்கிறது. அதின் ஜெபங்களில் தனித்தோர்க்கடுத்த விண்ணப்பங்களும் சமுதாய நன்மைகளுக்கடுத்த வேண்டுதல்களும் உண்டு. இவை நிறைவுள்ளவையாயினும் நீண்டவையல்ல. பொருள்மிகுந்தவையானாலும் அப்பொருள் மிகைபடக் கூறப்பட்டதல்ல; பத்திக்கடுத்தவையாயினும் புத்தியையயக்சத்தக்கதல்ல. தொகுத்துரைக்கவேண்டுமானால் ஒருவர் சொல்லியபடி ஒரே ஜெபந்தவிர இப்புஸ்தகத்தில் சொல்லாமல் விடப்பட்டிருக்கும் ஜெபம் பின்னொன்றுமில்லை. அவ்வொரே ஜெபம் இசெபபுஸ்தகத்தைப்பற்றியதுதான். அதாவது, பொதுவான ஜெபபுஸ்தகம் என்றுமுள்ளகாலமாக திருச்சபையில் வழங்கப்பட்டும் மதிக்கப்பட்டும் மகிமைவிளங்கிவரக் கடவுள் கருணைபுரிவாராக என்பதே. ஞானமும தெளிந்த புத்தியுமுள்ள நற்கிறிஸ்தோர் அனைவரும் இதற்கு ஒப்பி, அப்படியே ஆகக்கடவதென்று அர்த்தமாய் ஆமென் என்று உரைப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. (Bishop Blakall) பூர்வீகமான வேதசாஸ்திரிகளில் பொதுவான ஜெபபுஸ்தகத்துக்கு உபசாரணையாகச் சாட்சிபகர்ந்திராத யாவரேனும் காணப்படுவது மகா அபூருபம். இப்புஸ்தகத்தை ஒப்பாமலும் வழங்காமலும் இருக்கும் டிசென்றர்களில் முதலாய் பேர்போனவர்கொல்லாரும் இதின் சிறப்பை புகழ்ச்சியாய் மெச்சிக்கொண்டார்கள்.

38. வினா. ஆறும் எட்வார்ட் ராஜாவின் 1-ம் புஸ்தகத்துக்கும் 2-ம் புஸ்தகத்துக்கும் இருக்கப்பட்ட வித்தியாசங்களென்ன?

விடை. 1-ம் புஸ்தகத்தில் குருமார் உடுப்புகளைப்பற்றியும் இன்றுயிட்டு (Introits) ஒழுங்குகளைப்பற்றியும் பரிசுத்தவான்களுடைய மன்றுட்டுகளைபபற்றியும் குருபட்டம் பெறுகிறவருக்கு பரிசுத்த பாத்திரத்தையும அப்பத்தையும் கையில் கொடுப்பதைப்பற்றியும் கண்காணியார் அபிஷேகிக்கப்படும்போது வேதாகமத்தை அவர் கழுத்தில் வைத்து மேய்ப்பர் கோலை கையில் கொடுப்பதைப்பற்றியும் உண்டாயிருந்த ஆசாரங்கள்

2-ம் புஸ்தகத்தில் எடுபட்டுப்போயிற்று. இவைகள் விரோதிகளுக்குச் சார்பாய் அவர்களைப் பிரியப்படுத்த நோக்கமாய் தப்பறைகளை நீக்கினதோடு நன்மையானவைகளும் தள்ளப்பட்டது. பின்சந்ததியில் எழும்பும் திருச்சபைக் குருமாரும் ஜனங்களும் அவைகளை முன்னிருந்தபடியே வைத்துக்கொள்ளப் பிரியங்கொள்வார்களேயென்று அவர்கள் நினைக்கவில்லை.



IV. CHAPTER.

ON THE RITES, CEREMONIES, RUBRICKS AND LECTIONARY.

The necessity of Rites and Ceremonies in the Church. Why some were abolished and some retained The Rubricks and their use. The vestments of the Clergy and the decoration of the Churches. The old and new Lectionary The amendment of the act of Uniformity in 1872 The Reader and his place in the Church

நான்காம் அதிகாரம்.

நியமநிஷ்டைகளையும் சடங்காசாரங்களையும் ரூபிரிச் சட்டங்களையும் பாட அட்டவணையையும் பற்றியது.



வினா. சபைக்கூட்டத்தில் ஆராதனை நடப்பிக்கவேண்டிய மேரையைப்பற்றி பரி. பவுல் விதித்திருக்கிற சட்டங்களைவை? அவைகளால் நாம் அனுமானித்துக்கொள்ளத்தக்கதென்ன?

விடை. ஒழுங்கற்றதாய் எல்லாம் செய்யப்படக்கடவது என்பதும், எல்லாம் நல்லொழுக்கமும் வரிசையுமாய் நடக்கக்கடவது என்பதும் அப்போஸ்தலர் இட்டிருக்கிற சட்டங்கள். 1 கொரி. 14. 26-40. சபைகூடி நடப்பிக்கும்போது ஆராதனையில் நியமநிஷ்டைகளும் சடங்காசாரங்களும் உண்டாயிருப்பது அவசியமென்று இத்தால் பிரத்தியட்சமாய் விளங்குகிறது.

2. வினா. நியமநிஷ்டைகள், சடங்காசாரங்கள் என்பவைகளுக்கு அர்த்தமென்ன? இவைகளுக்கும் சாக்கிரமெந்துக்களுக்கும் இருக்கிற வித்தியாசமென்ன?

விடை. நியமநிஷ்டைகள் என்பது தேவனைத் தகுதியாய் ஆராதிப்பதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் நியமங்களையும்; சடங்காசாரங்கள் எனபது தேவ ஆராதனையில் அனுசரிக்கப்பட்டுவரும் ஆசாரங்களையும் குறிக்கும். இவை மனுஷரால் ஏற்படுத்தப்பட்டிருக்க சாக்கிரமெந்துக்களோ தேவ அமைப்பால் உண்டானவைகள்.

3. வினா. நியமநிஷ்டைகளையும் சடங்காசாரங்களையும ஏற்படுத்துகிற அதிகாரம் யாருக்குரியது?

விடை. வேதமார்க்கப் பிரமாணங்களிலுள்ள 20-ம் பிரமாணத்தில் சொல்லியபடி, "ஆராதனைக்கேற்ற முறைமைகளையும் சடங்குகளையும் ஏற்படுத்துவதற்கு திருச்சபைக்கு அதிகாரம் உண்டு. மேலும் 34-ம் பிரமாணத்தில் சொல்லியபடி மனிதரால் ஏற்படுத்தியவைகளாகிய சபையின் சடங்குகளையும் முறைமைகளையும் தேவபத்திக்கேதுவாக ஏற்படுத்தவும் மாற்றவும் ஒழித்துப்போடவும் அந்தந்த தேசத்துச் சபைககு அதிகாரம் உண்டு.

4. வினா. இப்படியே சடங்காசார நியமநிஷ்டைகள் சபையில் ஏற்படுத்தப்பட்டதற்கு வேத அனுமதியுண்டா?

விடை. குறைக்காரியங்களைச் செவ்வைப்படுத்திவர பரி. பவுலால் தீததுவுக்கு கொடுககபபட்ட கட்டளையும் சபைக்கு விஷயங்களையும்பற்றி நிருபங்களில் அமைக்கபபட்டிருக்கிற பல சட்டங்களும் முழங்காலே முடக்குதல் முதலிய முறைகளைப்பற்றி உரைக்கப்பட்டிருக்கிறதும் (Ephes. 3. 13 Philip. II. 4.) எருசலேமில் கூடியசங்கத்தில் அபபோஸ்தலரும் மூப்பருமானவர்கள் விசுவாசமுறைமைக்கும் புறம்பான சபை ஆசாரமுறைமைக்கும் அடுதத விஷயங்களில் பாராட்டின அதிகாரமும் (Acts 15. 6, &c.) இதற்குப போரந்த அனுமதி தானே.

5. வினா. இவைகளை ஏற்படுத்தும் அதிகாரம் நீதாய்க் கையாடப்படாதபடி அதனை மட்டுபபடுத்தும் திட்டங்களுண்டா?

விடை. உண்டு. தேவ ஆராதனையில் நல்லொழுக்கமும் வரிசையும் விளங்கும்படிசெய்வதே அம்முறைமைகளின் பிரதான நோக்கமானதால், அந்நோக்கத்துக்குப் பின்னமாக அவை அற்பத்தனமானதுகளாயாவது அவபக்திக்குடந்தையானவைகளாயாவது பிரிவினைக்கு இடமானதுகளாயாவது இருக்கலாகாது. யாதோர் சபையிலே ஏற்படுத்தப்படுகிற அல்லவென்று

மாற்றுவிக்கப்படுகிற ஒழுங்கு பின்னோர் சபையில் நியாய மானபிரகாரம் தள்ளுபடியாக்கப்படவாவது விவாதிக்கப்பட வாவது இனமுள்ளதாயிருக்கவுங்கூடாது.

6. வினா. திருச்சபைச் சீர்திருத்தலுண்டான சமயத்தில் பிரஸ்தாபமாயிருந்த சடங்காசாரங்களைப்பற்றி நடந்த ஒழுங் கென்ன? ஜெபபுஸ்தகத்தை இயற்றினவர்கள் இவ்விஷயத் தைப்பற்றி அறிவித்திருக்கிறதைச் சொல்?

விடை. அவர்கள் திருச்சபைச் சீர்திருத்தலுக்குமுன் கிறிஸ் தவர்களுக்குள் அனுசரிக்கப்பட்டுவந்த ஆசாரங்களில் சிலவ ற்றை அமைத்துக்கொண்டு வேறு சிலவற்றை வேறுபடுத்தி மீந்துள்ளவைகளைத் தள்ளும்படியாக்கினார்கள். அவர்கள் அவ பக்தி, சீர்கேடு என்னும தீமைக்கு இடங்கொடுக்கவாவது அவ சியமற்ற புது முறைமைகளை ஏற்படுத்தவாவது பட்சபாதங் கொண்டிராமல், நடுநிலைமையாய் நின்று சமன்செய்து சீர்தூக் குங்கோல்போல் நேர்மையையே நிகழ்த்தினார்கள். இதற்கு ஒபப ஜெபபுஸ்தகமுறைமையில் பூர்வந்தொட்டு பிரபல்லிய மாயிருந்த சடங்காசாரங்களைப்பற்றி பேசுமிடத்து நல்நோக் கத்தோடே அமைக்கப்பட்டவைகளும் தீட்பாயாவது அடாத விதமாயாவது கையாடபபடாதபடி தடுக்கப்பட அவசியமு டையவைகளுமான ஆசாரங்களையும் இயற்கைபபடியே அப் பிரயோசனமும் கெடுதியுமான ஆசாரங்களையும் வேற்றுமை தோன்றக் காட்டியிருக்கிறார்கள்.

7. வினா. திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியம ஷ்டைகளையும் சடஙகாசாரங்களையும் கைக்கொண்டு நடப் பது அச்சபையிலுள்ள ஒவ்வொருவனுக்கும் கடமையென்று காட்டு?

விடை. எல்லா மனுஷ அதிகாரக் கட்டளைக்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் என்று 1 பேது. 2. 13ல் கற்பிக்கப் பட்டிருப்பதாலும் பரிசுத்தவான்களின் ஐக்கியத்துக்குரித்தான இலட்சணமாகிய ஆராதனை ஒருமைப்பாடு இந்தடவாய் அனு கூலப்படுவதாலும் திருச்சபை ஆசாரங்களை ஒவ்வொருவரும் கைக்கொண்டுநடப்பது கடமையே.

8 வினா. மேற்சொல்லிய ஆசாரங்களை இங்கிலாந்துசபை யாரும் ரோமான்சபையாரும் முறையே எவ்விதமாய் மதித்து வருகிறார்கள்?

விடை. ஆத்தும ரட்சிப்புக்கு அவைகள் அவசியம் தேவை யானவைகளென்று ரோமான்சபையார் ஒப்புக்கொண்டிருந்

கிறார்கள். இங்கிலாந்துசபையாரோ' அப்படியல்லவென்று மறுத்து ஒழுக்கத்துக்கும் ஊன்றக்கட்டுதலுக்கும் உபயோகமானதுகளாகமாத்திரம் அவைகளை மதித்துவருகிறார்கள்.

9. வினா. இங்கிலாந்துசபைக்குரிய இவ்வாசாரங்கள் எங்கே கண்டிருக்கின்றன?

விடை. அச்சபையின் சட்டங்களில் வெளிப்படையாயாவது தொக்குநிலையாயாவது அடங்கியிருக்கிறதன்றி பொதுவான ஜெபபுஸ்தகத்திலுள்ள (Rubrick) ரூபிரிக என்னும் கவனிப்புகளிலும் அட்டவணைகளிலும் எடுத்துரைக்கப்பட்டும் இருக்கின்றன.

10. வினா. Rubrick ரூபிரிக் ஆவதென்ன? இந்நாமத்துக்கு மூலாதாரமென்ன?

விடை. தேவ ஆராதனை நடப்பிக்கவேண்டிய இடம், காலம், விதம் முதலியவற்றைத் தெரியக்காட்டும் பற்பல சட்டக்குக் குறிப்புகளே ரூபிரிக் எனப்படும். இக்கவனிப்புகள் பூர்வமான சபை சட்டங்களைப்போல சிவப்பு எழுத்துகளால் பதிப்பிக்கப்படும் பூர்வவழக்கத்தையிட்டு இப்பெயர்கொண்டு அழைக்கப்படலாயின.

11. வினா. Rubrick ரூபிரிக் என்னும் இக்கவனிப்புகளை குருவானவா கைக்கொள்வது அவசியமோ?

விடை. அவை ஜெபபுஸ்தகத்தோடு இணைப்பிரியாவிதமாய் இயற்றப்பட்டிருக்கிறதாக ஜெபபுஸ்தக முறைமையில் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டிருப்பதால் குருமார் தாங்கள் நடப்பிக்கும் ஆராதனைகளில் காரியசீர்பாகத்துக்கும் சபையின் ஊன்றக்கட்டுதலுக்கும் ஏற்க அவைகளுக்கு ஒத்திணங்கியிருப்பது அவசியந்தான். இப்படியே அவர்கள் பிரமாணஞ்செய்தும் கையொப்பங்கொடுத்தும் இருக்கிறார்கள்.

12. வினா. இக்கவனிப்புகளில் யாதொன்றைக் கூட்டிக் குறைக்கலாகாதா?

விடை. இவைகளில் விதிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு சட்டப்படி எவ்விஷயத்திலும் நடந்துகொள்வது அவசியமென்று கண்டிப்பாய்ச் சாதிப்பது அவசியமுமல்ல, சரியுமல்ல. காலங்களின் இயற்கைக்கும் காரியங்களின் வேறுபாட்டுக்கும் தக்கதாக அவை மாற்றப்படலாம்.

13. வினா. ஐயந்திரிபுக்கிடமான விஷயங்களில் * அவ்விஷயங்கள் தீர்க்கப்படுவதற்கான வழி என்ன? யாதொரு ரூபி

ரிக்கைப்பற்றி விவாதம நேரிடுவதாயிருந்தால் நடந்துகொள் ளத்தக்க உத்தம விதமெது?

விடை. உண்டாயிருக்கும் சந்தேகந் தெரியத்தக்கதாக ஜெப புஸ்தகத்திலுள்ளவைகளை உணாநதுகொளளவும் செய்து நடப் பிககவுநதக்க வழிவகையைத தீர்மானிபபது அந்தந்தக் கண்கா ணிமாருககே அடுககும். ஆனல் பறபல கண்காணிமார் ஏற் படுத்தும விபரீதமான தீர்மானஙகளை கைககொளவது பொது ஆராதனையில் ஒருமைத்தாழ்ச்சியைப பிறபபிககும். ஆதலால் விவாதப்பட்ட விஷயத்தில் திருச்சபை ஒருமைக்கும் சமாதா னததுககும் இனமாக அனுமதிபெறற சட்டதிட்டங்கள் அமை ககபபடுநதனிலும் நூதனமுறைமைகளைப் பிரயோகியாமல் நெடுகிலும் வழஙகிய முறைமைகளை சட்டமாககிக்கொள்வது மிகவும உததமம்.

14. வினு. Rubrick ரூபிரிக சட்டமில்லாமல் தேவ ஆராத னையில் நடநதுவரும் வழககஙகளென்ன?

விடை (1) விசுவாசபபிரமாணம் சொல்லும்போது ஒரு முகமாயத திருமபுதல்.

(2) இயேசு என்ற நாமத்திற்குப் பணிதல், தலைகுனிதல்.

(3) காணிக்கைவாஙகுமபோது நிற்குதல்.

(4) சுவிசேஷ வாககியததுககு முன்னும் பின்னும் எல்லா ரும் நின்று மகிமைசெலுததல.

(5) பரிசுதத திரிசுததத்தில் சேனைகளின் காத்தராகிய என் றதுமுதல் எல்லாருஞ் சோநது துதிததல்.

(6) உன்னததததிலிருககிற தேவனுககு என்பதில் எல்லாரும் நின்று துதிததல்.

(7) ஞானஸநானமுறையில் சாவவல்லமையுள்ள தேவனே பரமபிதாவே என்ற ஜெபததை எல்லாருஞ் சொல்லுதல்.

(8) குருமார் கழுததில் போடுகிற கறுப்பு, சிவப்பு அல்லது வேறொரு நிறமான ஸ்றேல் (Stole) என்பதைப்பற்றியும் யாதொரு சட்டமுமில்லை.

15. வினு. குருமாரின் கோவில் உடுப்பைப்பற்றிய சட் டஙகளென்ன?

விடை. தமிழ் ஜெபபுஸ்தகத்தில் இதைப்பற்றி ஆறும் எட் வார்ட் இராசா அரசாண்ட இரண்டாம் வருஷத்தில் பார்லி மெந்து சங்கத்தார் தீர்மானித்தபடி என்று எழுதியிருக்கிறது.

அதின்படி பின்வருகிற மூன்று சட்டங்கள் மேற்படி ராஜா
வின் ௧-ம் ஜெபபுஸ்தகப்பதித்தலில் கண்டிருக்கிறது. அவை
களாவன: (a) ஊர்க் கோவில்களிலாவது சிறு ஆலயங்களி
லாவது ஆராதனை நடப்பிக்குங் குருமார் சர்ப்பிளிஸ என்னும்
உடையை உடுத்தவேண்டும். (b) அததியட்சாமார் கோவில்
களிலுங் கல்விச்சாலை ஆலயங்களிலும் ஆராதனை நடப்பிக்
குங் குருமார் தங்கள் தங்கள் கல்விபட்டத்துக்குரிய ஊட்
டின்ற அடையாளத்தையுந் தரித்துக்கொள்ளவேண்டும். பரி.
நற்கருணையைப் பரிமாறுங் குருமார் வெஸடுமென்று, ஆல்ப்
என்னும் உடையைத் தரிக்கவேண்டும். (c) அத்தியட்சாகள
எந்த வெளியரங்கமான ஆராதனையை நடததும்போதும் ராச்
செட்டு, சர்ப்பிளிஸ், ஆல்ப, கோப், வெஸ்டுமென்று என்ற
உடுப்புகளை போட்டுக்கொண்டு மெய்ப்பனுக்குரிய கோலோ
டே ஆராதனைக்குப் போகவேண்டும் என்பதே.

16. வினா. இந்தச் சட்டங்கள் மாற்றபபடவில்லையா?

விடை. மேற்சொல்லிய உடுப்புகள் அவபக்ஷசேதுவான
வைகளென்று கால்வீன், பியூரிட்டா என்பவர்கள் ஆட்சேப
னைசெய்தலின்பேரில் மேற்படி ராஜாவின் 5-ம் வருஷத்தில்
மாற்றப்பட்டுத் திரும்பவும் எலிசபேத்து ராஜாத்தியின் காலத்
தில் ஏற்படுத்தபபட்டு ஐக்கிய சட்டத்தால் உறுதிப்படுத்தப
பட்டது. ஆகிலும் 24, 25-ம் கனோன சட்டங்களின் தாற
பரியம் வேறுவிதமாயிருப்பதால் சில இடங்களில் தவிரமற்ற
இடங்களில் தற்காலத்தில் அந்த வழக்கமில்லை.

17. வினா. ஆலய அலங்கரிப்புக்கடுத்தவையென்ன?

விடை. தேவாலயத்திலுள்ள திருமேசை, பொரப்ட், வாசி
ப்புமேசை, பரி. நற்கருணைப்பாத்திரங்கள், ஞானஸ்நானத்தொ
ட்டி, மணி, காணிக்கைப்பாத்திரங்கள், விளக்குகள் முதலிய
வைகளைச் சுத்தமாயுஞ் சுசியாயும் வைக்கிறதே எருசலேம
தேவாலயம் எவ்வளவு சிறப்பும் அலங்காரமுமாயிருந்ததோ
அவ்வளவு நேர்த்தியாய் நம்முடைய பரிசுத்த ஆலயங்கள்
இருக்கவேண்டியது அவசியம். தங்கள் வீடுகளை அநேகர் விளக்
கொளியினாலும் மெழுகுவர்த்திகளினாலும் புஷ்பங்களினா
லும் அலங்கரித்தபோதிலும் கர்த்தருடைய வீடு வெறுமையா
யும் வெளிச்சமற்றதாயும் இருக்கவேண்டுமென்று சொல்வது
ஆச்சரியமாயிருக்கிறது. சொரூபங்கள், படங்கள்தவிர தெய
வபயத்தையும், தெய்வவணக்கத்தையும் இது கர்த்தருடைய
வீடு என்கிற உணர்ச்சியையும் உள்ளத்தில் கிளப்பிவிடுகிற
மற்றெந்தச் சிறப்பையுஞ் செய்வதினால் குற்றமில்லை.

18. வினா! சங்கீதம் வாசித்தவுடனே பாடங்கள் தொடர்ந்து வாசிக்கப்படுவதால் ஜெபபுஸ்தகமாட்சிமை துலங்குமா?

விடை. ஜெபபுஸ்தகமானது பற்பல பாகமும் முறையுங் கொண்டதாயிருப்பதே அதன சிறப்புக்கு ஓர் அத்தாட்சி. ஜெபத்தில் தரித்திருந்த ஆசதுமா ஜெபத்தை நிறுத்தி துதியிலும், துதியினின்று தியானத்திலும் முயற்சியா யிருக்கத்தக்கதாக இயற்றப்பட்டிருக்கின்றது. இவ்விதமாய் மனதானது சங்கீத வாசிபபில் கூர்ந்து சோர்ந்து பக்திநிலையில் முயற்சித்தபின் பாடஙகளை வாசிக்கப்படும்பொழுது கவனித்து சற்று இளைப்பாறிக்கொள்ள இடமளிக்கபபட்டிருக்கின்றது. அப்படியே தகுந்தவிதமாய் ஜெபிக்கிறவன் அதிக உட்கருத்தாய்க் கேட்கிறான்; ஏற்றபடி கேட்கிறவன் ஏற்றபடி ஜெபிக்கிறான். (Hooker.)

19. வினா. தேவாராதனையில் வேதாகமபாடங்கள் வாசிக்கப்படுவது சரியானதென்று வேதாசாரத்தால் காட்டு?

விடை. மோசேயினுகமங்களுந் தீர்க்கதரிசன ஆகமங்களும் யூதருடைய ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட்டுவந்ததாக அப்போஸ்தலர் 13. 27; 15. 12ல் அறிந்துகொள்ளுகிறோம். மேலும் இரத்தச்சாட்சியாகிய (Justin, Tertullion) யுஸ்தீன், தெர்த்துல்லியன் என்பவர்கள் தங்கள் ஆகமங்களில் எழுதி அறிவித்திருககிறபடி பூர்வீக கிறிஸ்தவர்கள் ஆராதனைவேளையில் வேதவசனபபாடங்களை வாசிபபது வழக்கமாகவேயிருந்தது.

20. வினா. வேதாகமபாட வாசிப்பில் திருச்சபை சீர்திருத்தலுக்குமுன வழங்கினதும் ரோமான்சபையில் இப்போது வழங்கிவருவதுமென்ன?

விடை. வேதாகமம் ஒழுங்காய் வாசிக்கப்படாமல் பற்பல பாகங்களாய் வகுக்கபபட்டு பரி. ஆஸ்தின் அல்லது அம்புரோஸ் என்பவர்களின் (Austin Ambrose) ஒமிலிப் பிரபந்தத்திலிருந்தாவது வேறே பலருடைய ஆகமங்களிலிருந்தாவது எடுக்கபபட்ட பங்குகள் ஊடேசேர்க்கப்பட்டு வாசிக்கப்படுவதுண்டு. அதுவுமன்றியில் சாதாரணமாய் வழங்கிவந்த லத்தீன் பாஷையிலேயே அவைகள் வாசிக்கப்பட்டுவந்தன.

21. வினா. இவ்விஷயத்தில் செக்த்தேரியரான பிரிவினைக்காரருக்குள் வழங்குகிற முறையென்ன?

விடை. அவர்கள் நேராயாவது ஒழுங்காயாவது வேதாகமத்தை ஆராதனையில் வாசித்துவருகிறதில்லை. அந்தந்தக் குரு

வானவர் தமக்கிஷ்டமான அதிகாரத்தையாவது அதிகாரத்தின் ஓர் பங்கையாவது தெரிந்துகொள்வார். இந்தடவாய் ஒருதரம் வாசிக்கப்பட்டதே பலதரம் வாசிக்கப்படுவதும் வேறநேக அதிகாரங்கள் ஒருக்காலும் வாசிக்கபபடாதிருபபதும் உண்டு.

22. வினா. பாடமாவதென்ன? தினசரிபாடங்கள் நியமிக்கபபட்டிருக்கிற விதத்துக்கு ஆதாரமென்ன?

விடை. தேவாராதனையில் வாசிக்கப்படும்படி தெரிந்து நியமிக்கப்பட்டிருக்கும் வேதாகமபபங்குகளே பாடமென்னப்படும். யூதருடைய வழக்கத்தைப பின்பற்றின. (அப. 13. 27; 15. 21.) ஆதி கிறிஸ்தவர்களின் மாதிரியையும் இரத்தச்சாட்சியாகிய யுஸ்தீனும் தெர்த்துல்லியனும் பகர்ந்திருபபதையும் திருச்சபையானது ஆதாரமாகக்கொண்டு பழைய புதிய ஏற்பாடுகளிலிருந்து ஒவ்வொரு பாடம் வாசிக்கும்படி திட்டஞ்செய்திருக்கிறது.

23. வினா. முதலாம்பாடம் பழைய ஏற்பாட்டிலிருந்தும் இரண்டாம்பாடம் புதிய ஏற்பாட்டிலிருந்தும் நியமிக்கப்பட்டிருக்கிறதற்கு நியாயமென்ன?

விடை. இரண்டு ஏற்பாடுகளையும் இரத்தச்சாட்சிகளாகிய யுஸ்தீன் ஒத்திட்டுக் கவனித்து, அப்போஸ்தலன்மார் தாங்கள் போதிக்கப்பட்டபடி முந்திநியாயபபிரமாணத்தையும் பின்னர் சுவிசேஷத்தையும் போதித்திருக்கிறார்கள். ஏனெனில் நியாயபபிரமாணம் என்ன? சுவிசேஷ நிழல்தானே; அல்லவென்று சுவிசேஷமென்ன? நியாயப்பிரமாணப பொருள்தானேயென்று வாய்மையாய் வசனித்திருக்கிறார். அகுஸ்தீன் மற்று முதலான பிதாக்களும் இதற்கொபபவே உரைத்திருக்கிறார்கள். ஆகையால் நிழலினின்று பொருளுக்கும, வாக்குத்தத்தம்பண்ணபபட்ட மீட்பினின்று நிறைவேற்றபபட்ட மீட்புக்கும் மனதை நேராக்கும்படி முந்தி நியாயபபிரமாணமும், பிந்தி சுவிசேஷப பிரமாணமும் வாசிக்கப்படலாகிறது.

24. வினா. முதலாம்பாடங்கள் நியமிக்கப்பட்டிருக்கிற ஒழுங்கு என்ன? தள்ளுபடி ஆகமங்களில் சிலபங்குகள் வாசிக்கபபடுகிறவேளையும் நோக்கமுமென்ன?

விடை. முதலாம்பாடங்கள் வருஷத் துவக்கத்தில் மோசேயின் முதலாம் ஆகமத்தோடு தொடங்கி பழைய ஏற்பாட்டோடே முடியும். சுவிசேஷ தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் ஆகமம்மாத்திரம் அவ்வொழுங்கு மீறி அட்வெந்துநாட்களி

லும் அவைகளுக்கு முன்னும் பின்னும் [illegible]
படி திட்டஞ்செய்யப்பட்டிருந்தது. காலாகமங் கா[illegible]
களின் ஆகமங்களுக்கொத்த பொருளுள்ளவைகளா[illegible]
மித்தமும் சாலொமோனின் உன்னதப்பாட்டு [illegible]
பொருளுள்ளதாயிருப்ப[illegible]மித்தமும் மற்ற ஆகமங்க[illegible]
அதிகாரங்கள் பூமிசா[illegible] அட்டவணை[illegible]
இவைகளுக்கொப்பான [illegible]களுக்கும் அடுத்திருப்ப[illegible]
சபையாருக்குப் பிர[illegible] டற்றிருப்பதினிமித்தமும்
பாடஒழுங்கினின்று நீக்கப்பட்டாயின. பழைய ஏற்பாட்டின்
பாடமுறை அக்டோப[illegible] 17௳ யோடு முற்றுப்பெறுவதா
யும் நவம்பர்மீ 18௳ [illegible] தீர்க்கதரிசனம் தொட
ங்கப்படுவதாயும் இருட[illegible]யிலுள்ள தேதிகளில் தன்
ளுபடி யாகமங்களில[illegible] வாசிக்கப்படும். சில
திருநாட்களுக்கும் அ[illegible]ந்தே முதலாம்பாடம் தெரி
ந்தெடுக்கப்பட்டிருக்கி[illegible] வேதாகமத் தொகை
யோடு சேர்ந்தவையல்லாவிட்டாலும் அவைகளிலுள்ள
சன்மார்க்கப் போதனைகளினிமித்தம் நல்லொழுக்கத்துக்கும்
நன்னடக்கைக்கும் மாதிரியாக வாசிக்கப்படும்படி திருச்சபை
யால் நியமனமாகி இருக்கிறது.

25-வினா. ஞாயிற்றுக்கிழமைகளுக்கும் திருநாட்களுக்கும் முதலாம்பாடம் நியமிக்கப்பட்டிருக்கிற ஒழுங்கைப்பற்றி கவனிக்கவேண்டியதென்ன?

விடை. அட்வெந்து முதல் செப்துவசெசிமாவரையுமுள்ள ஞாயிறுகளுக்கடுத்த முதலாம்பாடங்கள் கிறிஸ்துவானவரைப் பற்றிய முக்கிய தீர்க்கதரிசனங்களடங்கிய ஏசாயாவின் ஆகமத்திலிருந்து நியமிக்கப்பட்டிருக்கின்றன. செப்துவசெசிமா ஞாயிறுமுதலே, மோசேயின் முதலாம் ஆகமந்தொடங்கி முதலாம பாடமாக வாசிக்கப்படும். மனிதன் பாவத்தில் விழுந்து அதனால் சீர்கேடு விளைந்தது முதலியவற்றைப்பற்றிய சங்கதிகள் அடுத்துவரும். இவைகள் லெந்தின் காலத்துக்குமுன் தியானிக்கப்படத் தகுந்தவைதானே. பின்வரும் ஞாயிற்றுக்கிழமைகளுக்கும் ஆகமக்கிரமப்படி முதலாம் பாடங்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும் கண்டபடியல்ல, சமயத்துக்கும் ஏற்றக் கட்டுதலுக்கும் அடுத்த பாடங்களே நியமிக்கப்பட்டன. பண்டிகைநாட்களான ஞாயிறுகளிலோ அவ்வொழுங்கு மீறி அப்பண்டிகைகளுக்குரிய விசேஷித்த சரித்திர பாகங்கள் வாசிக்கப்படும். கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகை, எப்பிப்பனி முதலிய நாட்களிலும் இப்படித்தான்.

26. வினா. பரிசுத்தவான்களின் நாட்களுக்குரிய முதலாம் பாடங்களெவையவை?

விடை. பரிசுத்தவான்களின் திருநாட்களிலும் மற்றும் சில திருநாட்களிலும் மன்றைய பத்திப் பரிட்சைக்கும் பரிசுத்த ஜீவிக்கும் எழுப்புமபொருட்டு நல்லொழுக்க விதிகளை யுடைத்தாக்கும் வேதாகமப் பங்குகளாகிய சாலொமோனின் வாக்கியங்கள், பிரசங்கியின் ஆகமம் என்பவைகளிலும் தள்ளுபடி ஆகமங்களிலுமிருந்து முதலாம் பாடங்கள் வாசிக்கப்படும்.

27. வினா. முந்தின ஒழுங்குபடிக்கு புதிய ஏற்பாடு வாசிக்கப்பட்டுவருகிற முறை என்ன? வருஷத்தில் எத்தனை முறை வாசிக்கப்படும்? பாட ஒழுங்கில் வராத ஆகமமெது? முகாந்தரமென்ன?

விடை. இரண்டாம் பாடங்கள் வாரத்தின் மற்ற நாட்களுக்கொப்பாய் ஞாயிற்றுக்கிழமைகளுக்கும் ஆகம ஒழுங்குப்படி நியமிக்கப்பட்டிருக்கின்றன. காலைப்பாடங்கள் சுவிசேஷங்களிலும் நடபடி ஆகமத்திலிருந்தும், மாலைப்பாடங்கள் நிருபங்களிலுமிருந்தும் வாசிக்கப்படும். திருநாட்களுக்கும் சில பரிசுத்தவான்களின் நாட்களுக்குமோ விசேஷித்தபாடங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாய்ப் புதிய ஏற்பாடானது வருஷத்தில் மூன்றுவிசை வாசிக்கப்படும். அறிவிப்பின் ஆகமமானது அதிலுள்ள இரகசியப் பொருட்களினிமித்தம் பாட ஒழுங்கில் சேர்க்கப்படாவிட்டாலும் முதலாம் அதிகாரமும் கடைசி அதிகாரமும் பத்தொன்பதாம அதிகாரத்தின் ஒரு பங்கு மாத்திரமும் பாடங்களாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தன முந்தின இரண்டும், அவ்வாகமத்தை எழுதின பரி. யோவான் நாளிலும் பிந்தினது சகல பரிசுத்தவான்களின் பண்டிகையின் மாலை ஆராதனையிலும் வாசிக்கப்படும்.

28. வினா. 1871-ம் வருஷத்தில் புதுப்பிக்கப்பட்ட பாட அட்டவணையில் மாற்றியிருக்கிறதென்ன?

விடை. (a) அதிகாரங்களாய வாசித்தல் சரித்திர வாசகப் பொருள்தொடர்ச்சிக்குப் பின்னபேதமாயிருந்ததால் மாற்றி நீண்ட பாடங்களைச் சுருக்கியிருக்கிறது. (b) வருஷத்தில் முன் மூன்றுதரம் வாசிக்கப்பட்ட புதிய ஏற்பாடு இரண்டு தரம் வாசிக்கப்படுகிறது. (c) நாலு சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடியும் இரண்டாம் பாடமாக காலையில்மாத்திரமல்ல, மாலையிலும் மாற்றி மாற்றி வாசிக்கப்படுகிறது. (d) பண்டிகை நாட்

களுக்குரிய, 2-ம் பாடங்கள் மாற்றப்பட்டிருக்கிறது. (e) ஞாயிற்றுக்கிழமை மாலை ஆராதனைக்கு மாற்றி வாசிக்க இரண்டு பாடங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது. (f.) நாளாகம புஸ்தகங்களிலிருந்து ராஜாக்களின் புஸ்தகங்களோடு சேர்ந்த பாகங்கள் வாசிக்கப்படுகிறது. (g) தள்ளுபடி ஆகமப்பங்குகள் சிலதை நீக்கிவிட்டு எசேக்கியேல தீர்க்கதரிசனம், அறிவிப்பாகம பங்குகள் சேர்க்கப்பட்டிருக்கிறது. (h) தள்ளுபடி ஆகமங்களில் விசேஷமாய் ஞானம் என்ற புஸ்தகத்திலிருந்துதான் பாடங்கள் வாசிக்கப்படுகிறது. (i) திருநாட்களில் முன் தள்ளுபடி ஆகமங்களிலிருந்து வாசிக்கப்பட்ட பாடங்களுக்குப் பதிலாய் அதிகாரம்பெற்ற புஸ்தகங்களிலிருந்து புதுப்பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, கன்னிமரியாள் சுத்திகரிப்பு, பரி. மத்தியாவின் திருநாள் பார்க்கவும். (j) சாம்பற் புதன்கிழமை, பரிசுத்த வாரத்திலுள்ள புதன், வியாழம், சனிக்கிழமை, ஈஸ்தர் வாரத்திலுள்ள திங்கள், செவ்வாய் கிழமைகளுக்கு விசேஷித்த பாடங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது. (k) சமயத்துக்கேற்ற மற்றப பாடங்கள் அத்தியட்சருடைய அனுமதிப்பிரகாரம் பாட அட்டவணையில் கண்டிருப்பவைகளுக்குப பதிலாக மாற்றிக்கொள்ளப்படலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

29. வினு. இந்த திருத்துதலினால் உண்டாகும் பிரயோசனமென்ன?

விடை. ஞாயிற்றுக்கிழமைதவிர மற்ற நாட்களில் கோவிலுக்கு வரக்கூடாதவர்கள வேதாகமத்தின் முக்கியமான பாகங்களை ஒழுங்காய் வாசிக்கக் கேட்கலாம். ஒரே நாளில் இரண்டுதரம் வரக்கூடாதவர்கள் புதிய ஏற்பாட்டில் முன்போல வாசித்த பாகங்களை அல்ல, வருஷத்துக்கு ஒருவிசை புதிய ஏற்பாடு முழுவதையும் கேட்கலாம். திருநாட்பாடங்களில் தீர்க்கதரிசனங்கள் முன்னடையாளங்களைப் பழைய ஏற்பாட்டிலும் அவைகளின் நிறைவேறுதலை புதிய ஏற்பாட்டிலும் கேட்கலாம்.

30. வினு. சந்தேகிக்கும்படி சமயம் நேரிடும்பொழுது பாடங்கள் தெரிந்துகொள்ளப்படவேண்டிய விதியென்ன?

விடை. (1) அந்தத் தேதிக்குரிய பாடத்தைவிட விசேஷித்தபாடத்தை வாசிப்பது கிரமம். விசேஷித்த 2-ம் பாடமில்லாத நாட்களுக்கு திருநாளுக்குரிய விசேஷித்த 2-ம் பாடம் தெரிந்துகொள்ளப்படவேண்டும்.

(2) தன்னுபடி ஆகமப் பாடத்தைவிட அதிகாரம்பெற்ற புஸ்தகத்திலுள்ள பாடம் வாசிப்பது உத்தமம்.

(3) அட்வெந்து பண்டிகைநாட்களை அடுத்த ஞாயிறுகளுக்குரிய பாடங்கள், அந்த நாட்களில் வரும் பரிசுத்தவான்களின் திருநாட் பாடங்களைவிட விசேஷித்தவைகள்.

(4) விருத்தசேதனத் திருநாள், பிரசன்னத்திருநாள், பரி. யோவான்ஸ்நானன், மிகாவேல்முதலிய திருநாட் பாடங்கள் அந்தந்த ஞாயிற்றுக்கிழமைப் பாடங்களைவிட சிரேஷ்டமானவைகள் என்பதே.

31. வினா பாடங்களை கோவிலில் சபையார் வாசிப்பதற்கு அனுமதியுண்டா?

விடை. கடைசியான திருத்தல்படி தற்காலத்து ரூபிரிக சட்டம் "வாசிக்கிற குருவானவர் என்பது வாசிக்கிறவர்" என்பதாய் மாற்றப்பட்டிருப்பதினாலே பட்டம் பெறாதவராகிலும் பாடம் வாசிக்கலாம் என்றாதாரமாகிறது. பூர்வீக சபைகளில் ரீடர் அல்லது வாசிப்போன் என்ற ஒரு வகுப்பு இருந்தது, இவர்கள்மேல் அத்தியட்சர் கைகளை வைப்பதுமுண்டு 398-ல் கர்த்தாகோவிலில் கூடின நாலாவது சங்கத்தார் ஏற்படுத்திய ஒரு முறைமையும் உண்டு அதாவது கைகள் வைக்கப்பட்ட ரீடரை அத்தியட்சர் சபைக்கு முன்நிறுத்தி அவருடைய குணகுணங்களை அறிவித்து, வாசிக்கிற புஸ்தகத்தையும் அவர் கையில் கொடுப்பது வழக்கம்; ஆனால் பரி. நற்கருணைச் சந்நிதியில் அல்லது பீடத்தில் வாசிப்பது வழக்கமல்ல. குருவில்லாத கோவில்களில் ரீடர்மார் ஜெபம்பண்ணுகிறது நம்முடைய கோவில்களிலும் ரோமான்கோவில்களிலும் மற்றும் கோவில்களிலும் நடந்தேறிவருகிறது.

32. வினா 1872-ல் ஐக்கிய ஏற்பாட்டை (The act of uniformity.) திருத்தும்படி உண்டான ஆக்டினால் பிறந்த அனுமதிகளென்ன?

விடை. (1) ஞாயிற்றுக்கிழமை, கிறிஸ்து பிறந்த நாள், சாம்பல் புதன்கிழமை, பெரிய வெள்ளிக்கிழமை, பரத்துக்கேறின நாள் இவைகள்தவிர மற்ற நாட்களில் வழக்கமான காலை மாலை ஆராதனையைச் சமயத்துக்கேற்றபடி சுருக்கிக்கொள்ளலாம்

(2) கண்காணியாரால் அனுமதிபெற்ற வேறே விசேஷித்த முறையை விசேஷித்தகாலங்களில் வேதத்திலுள்ள பங்குகளோடும் ஜெபபுஸ்தக பங்குகளோடும் வழங்கிக்கொள்ளலாம்

(3) ஞாயிறுகளிலும் திருநாட்களிலுங் குறிக்கப்பட்ட ஆராதனையோடு வேறு ஆராதனையையுங் கண்காணியார் உத்தரவுகொடுத்தால் வேதத்திலும் ஜெபபுஸ்தகத்திலுமிருந்து தெரிந்தெடுத்துச் சேர்த்துக்கொள்ளலாம்.

(4) காலைஜெப ஒழுங்கு, லித்தானியா, பரி. நற்கருணை ஆராதனை இவைகளைத் தனித்தனியாயும் தொடர்ந்தேற்றியாயும், லித்தானியாவை மாலை ஆராதனையில் மூன்றாவது சுருக்கஜெபத்துக்குப் பின்னாவது நடப்பித்துக்கொள்ளலாம்.

(5) மூந்தி ஆராதனை செய்யாமலே பிரசங்கம்பண்ணலாம் என்பவைகளே.

33. வினா ஞாயிற்றுக்கிழமை யாதொரு பரிசுத்தவானுடைய நாளாய் நேரிடும்போதும், திரித்துவத்தின் பண்டிகையாகிய இருபத்தேழாம் ஞாயிறு வரும்பொழுதும், பாடங்கள் தெரிந்தெடுத்து வாசிக்கத்தக்க முறையென்ன?

விடை. ஞாயிற்றுக்கிழமையானது யாதொரு பரிசுத்தவானுடைய நாளாக வந்து நேரிடுமானால் ஞாயிற்றுக்கிழமைக்குரிய பாடங்களே வாசிக்கப்படவேண்டுமோ, பரிசுத்தவான்களுடைய நாட்களுக்குரிய பாடம் வாசிக்கப்படவேண்டுமோ என்பதைப்பற்றி உறுதியில்லை. இரண்டாம பாடத்தைப்பற்றியோ விசேஷித்த பாடம் நியமிக்கப்பட்டிருக்குங் காலத்தில் தேதிக்குரிய பாடத்தைவிட்டு இப்பாடமே வாசிக்கத்தகும். ஏனென்றால் இது புதிய ஏற்பாட்டிலுள்ள ஒரதிகாரத்துக்குப் பதிலான வேறொரு அதிகாரமேயன்றி மற்றப்படியல்லவே. ஆனால் விசேஷித்த பாட அட்டவணையில் கண்டிராவிட்டால் தேதிக்குரிய பாடமே வாசிக்கப்படலாகும். 1-ம் பாடமோ இவ்வாறல்ல, ஞாயிறுகளுக்குரிய முதலாம்பாடங்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள வேதாகமபாகங்களிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாடத்தைவிட்டுத் தள்ளும்படியாகப் பாடத்தை வாசிப்பதேற்றதல்ல. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் 27-ம் ஞாயிறுவருவது அபூர்வமானதால் அதற்குரிய பாடங்கள் நியமிக்கப்பட்டிருப்பதில்லை. அதைத்தொட்டுப் பல கொள்கைகளுண்டு. சிலர் அன்றையத் தேதிக்குரிய பாடத்தை வாசிப்பார்கள். அது தள்ளும்படியாகமங்களிலுள்ளதாய் இருக்குமானால் அதை வாசிப்பது தகுதியல்ல. வேறேபேர் வெளிப்படுத்தலுக்குப் பின்வரும் ஞாயிறுகளிலொன்றுக்குரிய பாடத்தை வாசிப்பார்கள். திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் 25-ம் ஞாயிறுக்குப்பின் கண்டிருக்கிற ரூபிரிக்கானது சுருக்க

ஜெபத்தையும் நிருப சுவிசேஷ வாக்கியங்களையும்பற்றிய சட்டமேயல்லாமல் வேறல்லவாதலால் இவர்கள் தப்பிதக்கருத்தைக் கொண்டிருக்கிறார்களென்றே தீர்க்கவேண்டும். பாட அட்டவணையில் கண்டிருக்கிற ஒழுங்கையே நாமும் பின்பற்றித் தொடர்ந்தேற்றியாய் வாக்கியபுஸ்தகத்தில் இரண்டு அதிகாரங்களைத் தெரிந்துகொள்வது தாவிலை.

34. வினா. பாடங்களை வாசிப்பவர் நிற்கவேண்டிய இடம் முதலியவற்றைப்பற்றிச சட்டமுண்டா?

விடை. கூடியிருக்கிறயாவரும் நன்றாய்க் கேட்கத்தக்கதாக வாசிக்கிறவர் நின்று திரும்பி வாசிக்கவேண்டும் என்று மாத்திரம் ரூபிரிக்கில் கண்டிருக்கிறது. ஆனால் சில கோவில்களில் குருவானவர் நிற்குமிடத்துக்கும் ஜனங்கள் உட்கார்ந்திருக்கிற இடத்துக்கும் தூரமுண்டாயிருந்ததால் வாசிக்கப்படும் பாடத்தை ஜனங்கள் கேட்கக்கூடாமலிருந்தது. இந்நிமித்தம் பாடங்களை வாசிப்பவர் சபையினருகே சமீபித்து நின்று வாசிப்பது வழக்கமாயிற்று இதற்கு வாசிப்பு மேசைகள் வைக்கப்படும் வழக்கமுமுண்டாயிற்று. இவைகள் பொதுவான ஜெபபுஸ்தக வாசிப்புக்கு ஒன்றும், வேதாகமபாடவாசிப்புக்கு மற்றொன்றுமாக இரண்டிருந்தன. அவைகளுக்கு லெக்டேர்ன்ஸ் (Lecterns) என்றபெயர் வழங்கிவந்தது.

35. வினா. பாடங்கள் வாசிக்கப்படும்பொழுது ஜனங்கள் செய்யத்தக்கதென்ன?

விடை. அவர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷிக்கலாகாது, கவலைத்தாழ்ச்சியாயிருக்கவுங்கூடாது. வாசிக்கப்படுவது திருவாக்கின் வசனமென்றுணர்ந்து வணக்கத்தோடும் கவனத்தோடும் அதைக் கேட்கவேண்டும். தாங்கள் அதைக்கொண்டே நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்குமென்றுந் தங்களுக்குச் சட்டதிட்டப் பிரமாணம் அதுவேயென்றும் அறிந்து பயபக்தியாகக் கவனிக்கிறதுமன்றி, தங்கள் நடக்கையை அதோடு ஒத்திடப்பார்ப்பதும் அவசியம்.

——»»««——

V. CHAPTER.

ON THE FESTIVAL AND FASTING DAYS OF THE CHURCH.

The Advent is preparatory to the Christmas and the Lent to the Easter. The customs of the early Church on Ash-Wednesday, the Passion week, Maundy Thursday, Good-Friday and Easter. The controversy on the observance of Easter. The Rogation days, Ascension day and Whit-Sunday. The Eves, Vigils and Ember days.

ஐந்தாம் அதிகாரம்.

பண்டிகைகளையும் உபவாசநாட்களையும் பற்றியது.

---

1. வினா. *திருச்சபையின் வைதீகவருஷம் அட்வெந்து (Advent) வைக்கொண்டு ஆரம்பிக்கப்படுவதேன்? அட்வெந்து என்பதற்கு அர்த்தமென்ன? இது துவக்கும் காலத்தைப்பற்றிய ஒழுங்கென்ன?*

விடை. *திருச்சபையின் வைதீகவருஷம் அட்வெந்தைக் கொண்டு ஆரம்பமாகிறது. பூர்வ வழக்கப்படி அட்வெந்தில் நாலு ஞாயிறுகளுண்டு. கிறிஸ்துவானவர் மாம்ஸத்தில்வந்த முதலாம் வருகையைத் தகுதியாய் ஆசரிக்க நம்மை இவை ஆயத்தப்படுத்தி, அவர் சகலரையும் நியாயந்தீர்க்கும்பொருட்டு இரண்டாந்தரம் வருவதைச் சிந்திக்க நம்மை ஏவுகின்றன. அட்வெந்து என்பது வருகை என்றர்த்தமாம். இந்நாட்கள் கிறிஸ்து பிறந்த நாளாகிய பிறப்பின் பண்டிகை நாளோடே முடியத்தக்கதாக பரிசுத்த அந்திரேயாவின் பண்டிகைக்குப் பின்வரும் ஞாயிறுமுதல் தொடங்கும்படி திட்டஞ்செய்திருக்கிறது.*

2. வினா. *பின்வரும் ஞாயிறுகளின் ஒழுங்கு எவ்விதமாய்த் திட்டஞ்செய்யப்பட்டிருக்கிறது?*

விடை. *அட்வெந்து நாட்களுக்குப் பிற்பாடு கிறிஸ்து மனுஷவதாரமெடுத்த பெரிய ரகசியத்தைப்பற்றிச் சிந்திக்க முயலுகிறோம். பின்னர் படிப்படியே அவருடைய ஜீவிய விருத்தாந்தத்தில் முக்கிய விசேஷங்களையும், அவர் மரித்து உயிர்த்த வரலாறுகளையும் அப்போஸ்தலர்மீதில் பரிசுத்தாவியானவர் இறங்கினதையும், இரட்சிப்பின் கிரியை பரிசுத்த திரித்துவத்தின் செயலால் முடிந்ததையும்பற்றித் தியானித்துவருகிறோம். கிறிஸ்துவானவரைப்பற்றிய சரித்திரமுழுதும் வருஷாந்தரம்*

ஞாபகப்படுத்தும்படி புதிய ஏற்பாட்டில் ஆச்சரித்திரமடங்கிய பாகங்களும், பழைய ஏற்பாட்டில் அவைகளுக்கிசைவான பகுதிகளும் ஊடேயுள்ள ஞாயிறுகளுக்குப் பாடங்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றன.

3. வினா. அட்வெந்தென்னும் நான்கு ஞாயிறுகளும் அவைகளுக்குரிய நிருப சுவிசேஷ வாக்கியங்களும் சுட்டிக்காட்டிப் போதிக்கிறதென்ன?

விடை. 1-ம் ஞாயிறு, கிறிஸ்துவானவர் தாமே நம்மைத்தேடி முதலாந்தரம் வந்ததுபோல இரண்டாந்தரமும் வருவாரென்றும்;

2-ம் ஞாயிறு, அவர் தம்முடைய பரிசுத்த வேதவசனத்திலும் நித்திய ஜீவனமளிக்கையிலும் வருகிறாரென்றும்;

3-ம் ஞாயிறு, தம்முடைய வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்துகிற குருமாருடைய ஊழியங்களிலே வருகிறாரென்றும்;

4-ம் ஞாயிறு, பாவப்போராட்டத்திலே நமக்கு உதவிசெய்கிற பரிசுத்த ஆவியினாலுமாய் வருகிறாரென்றும் போதிக்கிறது.

4. வினா. கிறிஸ்து பிறந்த பண்டிகையானது முன் எந்தெந்த நாட்களில் கொண்டாடப்பட்டது?

விடை. கிளெமெந்து என்பவர் சொல்லியபடி சில சபைகள் மேய்ம் 20-ம் தேதியிலும் அதற்கு ஒரு மாதத்துக்கு முன்னும், சில சபைகள் ஜனுவரிம் 6-ம் தேதியிலும் கொண்டாடினார்கள். கொன்ஸ்தந்தினபுரி சபை முதலாவதாக டிசெம்பர் 25-ம் தேதியைக் கொண்டாடத்துவக்கி, மற்றச் சபைகள் அதைப் பின்தொடர்ந்துவருகிறது.

5. வினா. பிறப்பின் பண்டிகையில் சுருக்க ஜெபத்தின் விண்ணப்பம் என்ன?

விடை. பரி. ஞானஸ்நானத்தால் மறுஜெனனமடைந்து புத்திரசுவிகாரத்தினாலே பிள்ளைகளான நாம பரிசுத்தாவியினாலே தினந்தினம் புதுப்பிக்கப்படும்படி கிருபைவேண்டும் என்பதே. டிசென்றாகள் மறுஜெனனம், புதிதாகுதல் இவ்விரண்டுக்குமுரிய வித்தியாசம் தெரியாமல் ஞானஸ்நானத்தில மறுஜெனனம் இல்லவே இல்லையென்று சாதிக்கிறார்கள். மறுஜெனனம பரிசுத்த ஞானஸ்நானத்தில் ஒரேதரம் நடக்கிற ஒரே செ

ய்கை; புதிதாக்குதல் ஜீவகாலமுழுவதிலும் தொடர்ந்தேற்றியாய் நடக்கிற தினசரிவேலை; பாவத்துக்கு இறப்பும் நீதிக்குப புதுப்பிறப்புமாயிருக்கிறது. அது மறு ஜெனனமுழுக்கும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலுமாயிருக்கிறது. (தீத்து. 3. 5.)

6. வி௫. பிறப்பின் பண்டிகைக்குப்பின் மூன்று திருநாட்கள் தொடர்ந்தேற்றியாய் அடுத்துவருகிற முகாந்திரமென்ன?

விடை. பரிசுத்த ஸ்தேவான் முதலாவது இரத்தச்சாட்சியாயிருந்து பிறந்த ரட்சகருக்குத் தன் ஜீவனைக் கொடுத்ததினாலும், பரிசுத்த யோவான் பிறந்த ரட்சகனை அதிகமாய் நேசித்தவனும் நேசிக்கப்பட்டவனுமாயிருப்பதினாலும், குற்றமில்லாத பாலகர் தங்கள் ஜீவனைப் பிறந்த ரட்சகருடைய ஜீவனுக்குப்பதிலாகக் கொடுத்ததினாலும் ரத்தச்சாட்சியாய் மரிக்குதல், அன்புகூருதல், மாசில்லாதிருத்தல் முதலியவைகளால் அவனை மகிமைப்படுத்துகிறோம். இன்னுஞ் சிலர் ரத்தச்சாட்சியாய் மரிப்பதில் மூன்று வகையுண்டு: பரிசுத்த ஸ்தேவான் சித்தத்திலும் செய்கையிலும், பரிசுத்த யோவான் செய்கையில் அல்ல சித்தத்திலும், குற்றமில்லாத பாலகர் சித்தத்தினால் அல்ல செய்கையிலும் ரத்தச்சாட்சிகளானார்கள். ஆகையால் அந்த வரிசைப்படி குறிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். உலக இன்பம் பழைய ஏற்பாட்டின் பாக்கியம், உலகத்தின் துன்பம் புதிய ஏற்பாட்டின் பாக்கியம் என்பதைப் போதிக்க நோக்கமாய் இந்த நாட்கள் அடுத்துக் குறிக்கப்பட்டிருக்கலாம்.

7. வி௫. பிரசன்னத்திருநாளின் முக்கிய விசேஷமென்ன?

விடை. இது முன்சொன்ன திருநாளோடே சேர்ந்திருந்தது. கிரேக்கசபை இந்த நாளைக் கிறிஸ்மஸ்பண்டிகையோடே ஆசரித்தது. இந்த நாளை தேவன் வெளிப்பட்ட நாள் (Theosphania) என்றும், பிரசன்னத்திருநாளென்றும், பெத்லகேமின் Bethphania என்றும் அழைத்தார்கள். ஏகமாய் வெளிச்சங்களைக் கொளுத்திச் சுத்திகரிப்பின் தண்ணீரைப் பிரதிஷ்டையாக்கினதாலும் கிறிஸ்து புறஜாதிகளுக்கும் உலகத்துக்கும் வெளிச்சமாயிருக்கிறதினாலும் இந்த நாளில் அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றாரென்கிற பாரம்பரியத்தினாலும் இதை வெளிச்சங்களின் நாளென்றும் அழைத்தார்கள். பெரும்பாலும் இந்த நாளில் பரிசுத்த ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது.

8. வி௫. பிரசன்னத்திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறுகளின் போதகமென்ன?

விடை. (1) கிறிஸ்து தமது பிறப்பினால் பிரசன்னமானது.

(2) அவர் மூன்று சாஸ்திரிகளுக்குத் தரிசனையானது.

(3) அவர் தமது ஞானஸ்நானத்தினால் தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தினது.

(4) அவர் தமது வல்லமையை அற்புதங்களினால் வெளிப்படுத்தினது.

சாஸ்திரிகள் காணிக்கைகளைக் கொண்டுவந்த நாளைச் சிறப்பிக்கும்படிக்கு நமமுடைய இராணியின் அரண்மனைக் கோவிலில் அவர்களாவது அல்லது அவர்கள் பிரதிநிதியாவது பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் கொண்டுபோய் கிராதியில் முழங்காற்படியிட்டுப் படைக்கும்படி செய்வது வழக்கமாயிருந்தது. இவ்விதமாக [illegible] திருச்சபை கிறிஸ்துவின் பிறப்புமுதல் பிரசன்னத்திருநாளவரை அவருடைய பிறப்பு, சுன்னத்து, இளமைமுதலியவைகளில் காணப்படுகிற மனுஷீகத்தாழ்மையையும் பிரசன்னத்திருநாள் முதல் செப்துவகெசிமாவரையும் அவருடைய அற்புதங்களில் விளங்குகிற அவருடைய தெய்வீக வல்லமையையும் நமக்குப் போதிக்கிறது.

9. **வினா.** லெந்தென்னுநாளுக்கு முந்தின மூன்று ஞாயிறுகளின் நோக்கமென்ன?

விடை. கிறிஸ்மஸ் பண்டிகைக்கும் லெந்து நாளுக்கும் இடைச்சங்கிலியாய் இவைகள் அவர் [illegible]க்கத்தையும் அதின்படி அவர் பாடுபட்டு [illegible] குணப்பட்டு அவருடைய வல்லமையின் பாதங்களிலிருந்து விலகிப்போகவேண்டிய அவசரத்தையும் லெந்துநாளின் நியாயத்துக்குதவியாய் மனுஷன் தன் [illegible] தன்னை வெறுத்து வெறுத்து, பட்சமாய் அவருடைய பாதங்களிலும் அவர் காட்டிய அன்பிலும் பின்செல்லவேண்டியவன் என்றும் போதிக்கிறது.

10. **வினா.** திருச்சபையில் ஆசரிக்கப்பட்டுவருகிற நாட்கள் பண்டிகைகளாகிய திருநாட்கள்மாத்திரமோ?

விடை. அல்ல. உபவாசநாட்களாகிய திருநாட்களும் திருச்சபையால் ஆசரிக்கப்பட்டுவருகின்றன. பண்டிகைநாட்கள் "சந்தோஷநாட்களும்" உபவாசநாட்கள் தெய்வதுக்கமான துக்கநாட்களுமாம்.

11. வினா. உபவாசித்தல் விதிப்பிரமாணமாகுமோ? அது தேவனுக்குப் பிரியமான செய்கையாயிருப்பதெப்படி?

விடை. உபவாசிக்கும்படி புதியஏற்பாட்டில்விதிக்கப்பட்ட பிரமாணமில்லாமையால் அதைத் தவறுக்கடமையாக மதிக்கத் தேவையில்லை. ஏனெனிலும் நமது ரட்சகர் தாமே உபவாசித்த தாலும் அதைப்பற்றி பேசியிருப்பதாலும் (மத். 4 & 6.) அப்போஸ்தலரும் ஆதிக்கிறிஸ்தவர்களும் உபவாசித்திருப்பதாலும் (அப். 10. 10; 13. 2; 14. 23. 2 கொரி. 6. 5.) உபவாசத்தை தெய்வீக மனஸ்தாபத்துக்குகந்த நற்செய்கையாக செய்து, சரீரத்தை ஆவிக்குக் கீழ்ப்படுத்தி இருதயநொறுங்குண்குதலையும் உத்தம மனத்தாழ்மையையும் நமயில் எழுப்புவதற்கு ஏற்ற முறைமையாகவும ஒப்புக்கொண்டு அனுசரிப்பது உத்தமம். இம்முயற்சிதானே தேவனுக்குப் பிரியமானதல்ல; அது பிறப்பிக்கும் பலனே யாவருக்கும் பிரியம். உபவாசிக்கவேண்டிய விதத்தையும் அளவையும்பற்றி திட்டங்கூறப்பட்டிருப்பதில்லை; ஆனால் அதை ஏற்றவிதமாய் நிறைவேற்றும்பொருட்டு சமயங்களும் காலங்களும் குறிக்கப்பட்டிருக்கிறதுண்டு. மற்றவைகளைப்பற்றி திட்டஞ்செய்வதற்கு அவரவர் இஷ்டமே அல்லாது சட்டம் ஏதுமில்லை.

12. வினா. அருந்தவசுக்கும் உபவாசத்துக்கும் வித்தியாசம் உண்டா?

விடை. இங்கிலாந்துசபை முறைமைப்படி வித்தியாசமில்லை ரோமான்சபையாரோ இவ்விரண்டில் முந்தினது ஒன்றும் போசியாமல் கணடிப்பாய் ஒறுத்திருப்பதையும், பிந்தினது விசேஷித்த பதார்த்தங்களைமாத்திரம் சாப்பிடாமல் ஒறுப்பதையும் பற்றுமென்று வித்தியாசப்படுத்திக்கொள்வார்கள்.

13. வினா. உபவாசஞ்செய்வது பூர்வ வழக்கமா?

விடை. ஆம. யோனா, 3. 5. லேவி. 23. 27. சங். 69. 10. தானி 9. 3 2 நாளா. 20 3. எஸ்று. 8. 2. எரே. 30. 9. சகரி. 8 19. யோவே. 1 16.

14. வினா திருச்சபையில் குறிக்கப்பட்டிருக்கிற உபவாச நாட்களும வேளைகளுமெவை?

விடை. சாம்பற்புதன்கிழமையும் பெரிய வெள்ளிக்கிழமையும் உள்பட தொகை ஏற்பட்டிருக்கிற லெந்தென்னும் 40 நாட்களும் உபவாசநாட்களாம். வெள்ளிக்கிழமை கிறிஸ்துபிறந்த நாளாயிருக்குங்காலத்தில் மாத்திரம் அது உபவாசநாளாகாது.

சில பண்டிகைநாட்களுக்கு முந்தின சாயந்தரங்களாகிய விஜில்களும், எம்பர்நாட்களும், ரொகேஷன்நாட்களும் உபவாச நாட்களாம்.

15. வினா. லெந்தென்னும் உபவாசநாட்கள் ஏற்படுத்தப்பட்ட காலமும் நோக்கமுமென்ன?

விடை. கிறிஸ்துவானவர் வனாந்தரத்தில் 40 நாள் உபவாசித்ததுபோல லெந்தென்னும் 40 நாட்கள் உபவாசநாட்களாக ஆதிக் கிறிஸ்தவர்கள்காலமுதல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பின்வரும் ஈஸ்தர்பண்டிகையைப் பக்தியாய்க் கொண்டாடும்பொருட்டு உபவாசத்தினாலும் சுயவெறுப்பாலும் மனதை ஆயத்தப்படுத்திக்கொள்ளத்தக்கதாக இந்நாட்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டவர் தமது சீஷரைவிட்டு எடுபட்டுப்போனபின் அவர்கள் உபவாசிப்பார்களென்று பரிசேயரிடத்தில் சொன்ன வார்த்தைகள் இதற்கு ஆதாரமாயிருக்கலாம். (மத். 9. 15.) அப்போஸ்தலர்தாமே இவைகளை ஏற்படுத்தினதாக நினைக்கிறவர்களுமுண்டு.

16. வினா. 40 நாட்கள் உபவாசநாளாக ஏற்படுத்தப்பட்டிருப்பதற்கு ஆதாரமென்ன?

விடை. பழைய ஏற்பாட்டின் காலத்தில் மோசேயும் எலியாவும் 40 நாள் உபவாசஞ்செய்த சங்கதியே 40 என்ற தொகை குறிக்கப்பட்டிருப்பதற்கு ஆதாரமாம்.

17. வினா. இந்த 40 நாட்களும் தொகைப்படுத்தப்படுவதெப்படி? ஞாயிற்றுக்கிழமைகள் இந்தத் தொகைக்குள் சேர்க்கப்படாதிருப்பதேன்?

விடை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நமது ரட்சகருடைய உயிர்த்தெழுதலைக் கொண்டாடுகிற பண்டிகைநாளாயிருப்பதால், அது உபவாசநாளோடு கணக்கேற்றப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அப்படியே அந்த ஞாயிறுகள் ஒவ்வொன்றும் லெந்தினுடைய ஞாயிறு எனனப்படாமல் லெந்தில் இத்தனையாம் ஞாயிறென்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் 40 நாள் சரியாகும்படி ஈஸ்தர்பண்டிகைக்கு முந்தின 7-ம் வாரத்தின் புதன்கிழமையிலிருந்து அவை தொடங்குகின்றன.

18. வினா. லெந்தென்னும் மொழியின் மூலமும் உரையுமென்ன?

விடை. லெந்து என்பது ஸாக்ஸன்(Saxon) மொழி; அதற்கு வசந்த காலம் என்றர்த்தமாம்.

19. **வினு.** லெந்தென்னும் நாட்களில் முதலாம் நாள் எந்தப் பெயரால் அழைக்கப்படுகிறது? நமது ஜெபபுஸ்தகத்தில் அதற்கு இடப்பட்டிருக்கிற பெயரால் திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்களுடைய நோக்கம் விளங்குமா?

விடை. வெளியரங்கமாய்த் தவசுசெய்கிறவர்கள் தங்கள் தலைமீதில் சாம்பலைத தெளித்துக்கொள்ளுகிற வழக்கமுண்டாயிருந்தபடியால் Augustine என்பவனுடைய காலததில்அந்நாள் உபவாசத்தின் தலைநாளென்று அர்த்தமாய் Capula Jejumi என்றும், சாம்பல் நாளென்றர்த்தமாய் டையீஸ் சிநேரம் (Dies Cynenem) என்றும்அழைக்கபபட்டது. திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் இந்நாளை சாம்பற்புதனகிழமை என்று அழைத்திருப்பதால் சாம்பலைத் தெளிததுக்கொள்ளும் வழக்கத்தை திரும்ப ஏற்படுதத நோக்கமுற்றிருந்தார்களென்றும் காணபபடும். ஆனால் காலபேதத்தால் அவ்வழக்கம் திரும்ப ஸ்தாபிக்கப்படாமல் நிறுத்தப்படலாயிற்று.

20. **வினு.** அதற்குப பதிலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற முறை என்ன?

விடை. காலமும் காரியமும் கூடிவரும் வேளையில் அவ்வழக்கத்தை ஏற்படுத்த நோககமாய் தற்காலத்துககென்று அந்நாளில் செயயபபடத்தக்க ஆராதனைமுறைமை ஒன்று நியமிககப்பட்டிருக்கிறது.

21. **வினு.** தேவகோபாக்கினை கூறல் என்னும் முறைமைக்கு விரோதமாயச் சொல்லபபடும் ஆட்சேபனை எனன?

விடை. இம்முறையில் கணடிருக்கிறபடி மனிதர் தாங்கள் பிறத்தியாரைச் சபிககும்படி ஏவபபடுகிறாகளென்று ஆட்சேபிக்கிறதுணடு. ஆனால் நாமல்ல, தேவனே சாபங்களைக் கூறுகிறவரெனறு அறிந்துகொள்ளவேணடியது. நம்மிலும் பிறத்தியாரிலும் காணபபடும் ஆகாமியங்களைத் தண்டிக்கும்படி அவர் நீதியாய்ச் செய்திருக்கிற தீர்மானததுககு நாம் சமமதியுனைக்கிறோமேயல்லாமல் வேறல்ல.

22 **வினு.** இந்த முறை திருச்சபையின் சீர்திருத்தலின் காலத்தில்தான் உணடுபணணபபட்டதோ?

விடை. இம்முறைமை மிகவும் பூர்வமாயுள்ளது; இது 9-ம் நூற்றாணடில் செய்யப்பட்டதாகச் சொல்லபபடும்.

23. **வினு.** லெந்தில் முதல்ஞாயிறும் அதற்கு முந்தின மூன்று ஞாயிறும் எப்படி அழைக்கப்படும்?

விடை. லெந்துக்கு முந்தின மூன்று ஞாயிறுகளுக்கும் முத லாம் ஞாயிறுக்கும் முறையே செப்துவசெசிமா, செக்சசெசி மா, க்வின்குவசெசிமா, குவாதிரசெசிமா என்று பெயர். ஏனெ னில் இவைகள் ஈஸ்தருக்கு முந்தின ஏறக்குறைய 70, 60 50, 40-ம் நாட்களாம். பூர்வகாலத்தில் பக்திமான்களில் சிலர் இவற்றில் முதலாம் ஞாயிறு முதல்கொண்டே உபவாசிக்கத் தொடங்கினார்கள்.

24. வினா. லெந்துநாட்களில் உபவாசிக்க வேண்டியதென்ன?

விடை. (1) தங்கள் எஜமான் கஷ்டப்பட்டதினால் அப்போஸ்தலர் கொண்ட துக்கம்;

(2) ஆதிக்கிறிஸ்தவர்களிடத்தில் காணப்பட்ட பக்தி விசுவாசம் குறைவுபட்டது;

(3) உயிர்த்தெழுந்தநாளில் பாஸ்கு நற்கருணையை பெறுகிறவர்களுக்கு ஆயத்தம்;

(4) பரிசுத்த ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு வேண்டிய ஆயத்தம்;

(5) பாவமன்னிப்பை தேடுகிறவர்கள் தபசுசெய்ய வேண்டிய அவசியம் முதலிய காரணங்களே.

25. வினா. உபவாசம்பண்ணுவதின் விசேஷித்த நோக்கங்கள் என்ன?

விடை. (1) மாம்சத்தை அடக்கி, ஒடுக்கி, பழக்கி, திமிறிச் செல்லவொட்டாமல் அதை ஆத்துமத்துக்குக் கீழ்ப்படுத்துவது;

(2) ஆவியானது ஜெபத்திலும் வேண்டுதலிலும், அனலும் கருத்துமுள்ளதாயிருக்கும்படி செய்விப்பது;

(3) தேவனுடைய உன்னத மகத்துவத்துக்குமுன் நம்மை நாமே தண்டித்துச்செய்கிற உபவாசம் அவருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்துகிறதற்கு அடையாளமாயிருப்பதுமே.

26. வினா. ஆதிச்சபையில் சாம்பற்புதன்கிழமையில் நடந்த வழக்கமென்ன?

விடை. குற்றஞ்செய்த பாவிகள் இரட்டையுடுத்தி வெற்றுக் காலால் நடந்து தரையைப் பார்த்துக்கொண்டு கண்காணியா

டம் வருவார்கள். குருவானவர் இவர்களின் குணப்படுதலைக் குறித்து சோதனைசெய்வார். இவர்களோடேகூட கண்காணி மார், குருக்களும் கண்ணீரோடே எழு தவச்சங்கீதங்களையும் கோவிலில் வாசிப்பார்கள். பின்பு இவர்கள்மேல் சாம்பல் தெளிக்கப்பட்டு, இவர்கள் முகம் இரட்டினால் மூடப்படும். அதின்பின்பு ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து சாபத் துடனே வெளியே அனுப்பிவிடப்பட்டதுபோல் ஆலயத்துக்கு வெளியே அனுப்பிவிடப்படுவார்கள்.

27. வினா. தபசுசெய்கிறவர்களுக்குள்ளே எத்தனை வகுப்பு இருந்தது?

விடை. (1) துக்கப்படுகிறவர்கள் (Mourners.), இவர்கள் முதல்வருஷத்தில் கோவில்கதவுக்கு முன்னே நின்று மனஸ்தாபப்படவேண்டும்.

(2) கேட்கிறவர்கள் (Hearers), இவர்கள் இரண்டாம் வருஷத்தில் வேதம் ஜெபம வாசிக்கப் படுகிறதை நின்று கேட்கவேண்டும்.

(3) முழங்காலில்நிற்பவர்கள் (Kneelers), இவர்கள் மூன்றாம் வருஷத்தில் தாழவிழுந்து முழங்காலில் நின்று தபசுசெய்யவேண்டும்.

(4) கூட நிற்கிறவர்கள் (Co-standers), இவர்கள் விசுவாசிகளோடே கூடநின்று தேவனை ஆராதிக்கலாம்; [illegible]டத்தில் பங்கு இல்லை.

[illegible] வினா. ரோமான சபையிலும் பழைய இங்கிலீஷ் சபையிலும் குருத்தோலை ஞாயிறில (Palm Sunday.) நடந்த வழக்கமென்ன?

விடை குருத்தோலைகளும் ஒலிவஇலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுச் சபையாருக்கு பங்கிடப்பட்டது. பரிசுத்த நற் கருணைக்குமுன் இது நடந்தது. புஷ்பங்கள் ஓலைகள்மேல் பரிசுத்த தண்ணீரைத் தெளித்து ஜெபஞ்செய்துகொடுப்பார்கள். இந்த வழக்கம் இன்னமும் இங்கிலாந்தில் மான்மத், உவேல்ஸ் என்ற இடங்களில் நடந்துவருகிறது. தபசுசெய்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

29. வினா. பாடுபட்டவாரத்தில் நடந்ததென்ன?

விடை. இந்த வாரத்தில் பெரிய காரியங்கள் நடந்ததினாலே அநேகர் இந்த வாரத்தைப் பரிசுத்தமாயும் பெரிதாயும் எண்ணி,

உபவாசத்திலும் விழிப்பிலும் தருமஞ்செய்கிறதிலும் பத்திக் கடுத்த முயற்சிகளிலும் பின்னிட்டார்கள். உலக ராஜாக்கள் இதைக் கனம்பண்ணி சர்க்கார் கோர்ட்டு முதலிய சகல புறம்பான வேலைகளையும் நிறுத்தி விடுதலைநாளாக்கினார்கள். சகல நியாயஸ்தலங்களின் கதவுகளுஞ் சாற்றப்பட்டன; கொலை செய்கிறவர்களை வெட்டவேண்டிய கைகள் நின்றுபோயின; ராஜ கட்டளையால் குற்றஞ்செய்த கைதிகளின் விலங்குகள் தறிப்புண்டன. சகலருக்கும் பொதுவான ரட்சிப்பும் ஆசீர்வாதமும் பரம ராஜாவால் உண்டானபடியால் உலக ராஜாக்கள் இப்படிச் செய்தார்கள். அதினால் இந்த வாரத்தில் ஒவ்வொரு நாளுக்கும் ஆராதனை ஒழுங்கு ஏற்பட்டிருக்கிறது.

30. **வினா.** பெரிய வியாழக்கிழமை (Maundy Thursday) நடந்த விசேஷங்களென்ன?

விடை. பரிசுத்த நற்கருணை ஏற்பாடான பெரிய நாளானபடியால் முந்தின நாட்களைவிட்டப் பக்தியாய் ஆசரிக்கப்பட்டது. சபைகளும் குருக்களும் ஒருவர்காலை ஒருவர் கழுவி, முக்கியமாய் ஏழைகளின் கால்களைக் கழுவி, அவர்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்தார்கள். இங்கிலாந்துதேசத்து ராஜாக்களில் கி. பி. 1572ல் எலிசபெத் ராணியும், இரண்டாவது ஜேம்ஸ் ராஜாவும் தாங்கள் பிறந்த அல்லது அரசாட்சிசெய்த வருஷங்களின் தொகைப்படிக்கு ஏழைகளைத் தெரிந்து இப்படிச் செய்தார்கள். இந்தச் சடங்கு சென்ற நூற்றாண்டில் ராஜாவுக்குப் பதிலாக யார்க்பட்டணத்து கண்காணியாரால் நடத்தப்பட்டது. ரோமான்சபையில் இந்த நாளில் Chrism என்ற தைலம் அடுத்த வருஷத்துக்காகப் பிரதிஷ்டைசெய்யப்பட்டது; வெள்ளிக்கிழமைக்குரிய அப்பம், ரசம், பிரதிஷ்டைசெய்யப்பட்டது; பீடத்திலுள்ள சகல சிறப்புகளும் மெழுகுவர்த்திகளும் எடுபட்டது; பதிதர்கள் எல்லார்பேரிலுஞ் சபைக்குப் புறம்பாக்குந் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

31. **வினா.** பெரிய வெள்ளிக்கிழமைக்குரிய மறு பெயர்களென்ன?

விடை. பஸ்காவின்நாள், ஆயத்தநாள், பாடுபட்டநாள், பாவமன்னிப்பின்நாள், நீண்ட வெள்ளிக்கிழமை, நல்ல வெள்ளிக்கிழமை முதலியவைகளே.

32. **வினா.** இந்த நாளில் நடந்த பழைய வழக்கங்களென்ன?

விடை. கிறிஸ்துவின் மரணம் உலகமனைத்துக்கும் பொது

வானதால் குற்றவாளிகள் யாவருக்கும் பாவவிமோசனங் கூறப
பட்டது. சீர்திருத்தலின் காலத்துக்கு முந்தின ஜெபமுறை
மைகளில் கண்டபடி பீடத்தின்முன்னுககு ஒரு சிலுவையை
நிறுத்தி, அதற்கு முன்பாக ஜனங்களும் குருக்களும் கும்பிட்டு
விழுந்தார்கள். இந்தச் சடங்குக்கு சிலுவையண்டைபோகுதல
(Creeping to the Cross) என்று பெயா. எட்டாவது ஹென்றி
ராஜா 30-வது உத்தரவில் இப்படிச் செய்வதுமாத்திரமல்ல
முத்தமிடவுங் கட்டளையிட்டான். இப்படி சாஷ்டாங்கஞ் சிலு
வை குருமுன் ஜனங்கள் செய்துகொண்டிருந்த வேளையில் மீகா.
3 4 ல் சொல்லியதைப்போலொத்த ஒருபாட்டுபோடப்பட்டது.
குருமார் கறுப்பு உடுபபைத் தரிசதுககொண்டார்கள்; பீடம
கறுபபுத் தொங்கல்களால் மூடப்பட்டது; முந்தின நாளில் பிர
திஷ்டைசெய்யப்பட்ட அப்பம் பிரதிஷ்டையாகாத ரசத்தோடு
பரிமாறப்பட்டது. ஆனால நம்முடைய தற்கால ஜெபபுஸ்தகத
தில் பெரிய வெள்ளிக்கிழமைககு நிருப சுவிசேஷவாக்கியங
கள் நியமிக்கப்பட்டிருபபதினாலே பரிசுத்த நற்கருணை பரிமா
றப்படவேண்டுமென்பதே கருததாய் தோன்றுகிறது.

33. வினா. ஈஸ்தர்பண்டிகைக்கு முந்தின சாயங்காலத்தில்
செயயப்பட்ட ஆயத்தங்களென்ன?

விடை. மணவாளன எடுபட்ட நாளானதினாலே இந்த நாள
உபவாச நாளாகவே கைககொள்ளப்பட்டது; கிறிஸ்துவான
வா பாதாளததில இறங்கினவிசேஷம் தியானிக்கப்பட்டது,
பரிசுத்தஞானஸ்நானத்துக்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டது.
அதினால்தான் சுருகக ஜெபத்தில் அதைபபற்றிய வாசகம்
காணப்படுகிறது. இராமுழுவதும விழித்திருந்து ஜெபங்களைச
செய்து விடியுமட்டும் ஞானபபாட்டுகளைப் பாடிக்கொண
டிருந்தார்கள். கொனஸ்தந்தீனுடைய காலததில் மெழுகினால
உயர்ந்த தூண்களை பட்டணத்தின் தெருக்களிலெல்லாம் நிறுத்தி
பிரகாசிக்கச்செய்து விளக்குகளுந் தீவட்டிகளும் பிடித்து இரா
வானது பட்டப்பகலைபபோல் இருநததுமல்லாமல் நீதியின் சூரி
யன் தங்கள் ஆலயத்தில் உயிரதெழுந்து காணப்படுவாரென்று
சொல்லி ஆலயத்தை மிகவுஞ் சிறபபாக ஜோடித்தார்கள்.

34. வினா. ஈஸதர்பண்டிகை எவ்விதமாய்க் கொண்டாடப்
பட்டது?

விடை. லெந்தென்னும் நாளுக்குரிய தபசுகளும் உபவாசங
களும் நின்றுபோய் திடீரென்று சந்தோஷமும் மகிழ்ச்சியுங்
கொண்டாட்டமுந் துவக்கிற்று; பதினைந்து நாள்வரையும்

எக்களிப்பாய்க் கொண்டாடினார்கள்; விடுதலைபெறாத குற்ற வாளிகள் விடுதலைபெற்றார்கள்; கடன்காரருக்குக் கடன்களை மன்னித்தார்கள்; அடிமைகள் சுயாதீனம்பெற்றார்கள்; வழக்கு வியாச்சியங்களைத் தொடாமல் விட்டுவிட்டார்கள்; சந்தோ ஷத்துக்கடையாளமாக இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார், அவர் மெய்யாகவே எழுந்தாரென்று மாற்றிச்சொல்லி ஒருவரையொருவர் வினவினார்கள்.

35. வினா. ஈஸ்தர்பண்டிகையில் தியானிக்கவேண்டிய உயிர்த் தெழுதல்கள் எவை?

விடை. (1) கிறிஸ்துவானவருடைய உயிர்த்தெழுதல்;

(2) நம்முடைய புது ஜீவனுக்குரியதான உயிர்த் தெழுதல்;

(3) நம்முடைய சரீர உயிர்த்தெழுதல். சுருக்க ஜெபம், நிருப சுவிசேஷவாக்கியங்கள், சங்கீதங்கள், முதலாம் இரண்டாம் பாடங்கள் எல்லாம் இதற்கு இசைவாயிருக்கிறது.

36. வினா. 95-ம் சங்கீதத்துக்குப் பதிலாக வரும் பாட்டின் பொருளென்ன?

விடை. ஒருவரையொருவர் வினவிக்கொண்டு சந்தோஷத் தைக் காட்டினதற்கொப்பாய் இந்த வாக்கியங்களும் தெரிந் தெடுக்கப்பட்டிருக்கிறது. முந்தின இரண்டு வாக்கியங்கள் நாம் பண்டிகையை எப்படி ஆசரிக்கவேண்டுமென்றும், அதற் கடுத்த மூன்று வாக்கியங்கள் கிறிஸ்து இனி ஒருக்காலும் மரிப் பதில்லை, நாமும் ஞானஸ்நானத்தினால் பாவத்துக்கு மரித்தோ மென்றும், கடைசி இரண்டு வாக்கியங்கள் கிறிஸ்துவின் உயிர்த் தெழுதல் நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு அடையாளமென் றும் காட்டுகிறது

37. வினா. ஈஸ்தர்பண்டிகை ஆசரிப்பைபற்றி ஆதிச்சபை யிலுண்டான தர்க்கமென்ன?

விடை. ஆதிச்சபையில் இந்த நாள் பலவிடங்களில் பல தினங்களில் ஆசரிக்கப்பட்டது. சின்ன ஆசியாவிலுள்ள கிறிஸ் தவர்கள் பரி. யோவானுடைய அனுமதியின்பேரில் அது எந்த நாளாயிருந்தாலுஞ் சரி, நீசான் மாதம் பதினாலாம் தேதி யில் யூதருடைய பஸ்காவுக்கு அடுத்த மூன்றாம் நாளில் ஈஸ்தர் பண்டிகையைக் கொண்டாடினார்கள். மேலச்சபையாகிய

ரோமான்சபையக, கிறிஸதவர்கள, காத்தர் ஞாயிற்றுக்கிழமை உயிரோடெழுந்திருந்ததினாலே பஸ்காவுக்கு அடுதத ஞாயிற்றுக கிழமையில் அதைக் கொண்டாடினார்கள. போலிக்கார்ப்பு என பவா கி. பி. 158ல் உரோயாபுரிக்குப் போய் அனிசீத்து என்பவரைக் கண்டுபேசி, பண்டிகை காலத்தைக்குறித்து திட்டஞ்செய்ய எத்தனித்ததில் காரியம ஒத்துமையாக வாய்க்க வில்லை. ஆகிலும் அவர்கள் ஒருவருக்கொருவா அன்பாய் நடந்து கொண்டதினாலே திருச்சபை ஐக்கியத்தின பெலன் வெளியா யிற்று. கிழக்கத்து வழக்கத்தை உறுதிப்படுத்தும்படிக்கு ... ான போலிக்கார்ப்பு மேற்கத்தியாருடைய ஈஸ்த்தாபண்டி கைநாளில் அவர்கள் கோயிலில் பரிசுத்த ராப்போசனம் பா மாறினர். அனிசீத்துக கூடவேயிருந்தார். அவருக்குப்பின வந்த ரோயாபுரி விக்டா சண்ணாணியார் கி. பி. 196ல மேலச்சபை வழக்கத்தை ஒப்புக்கொள்ளாதவர்களைச் சபைக குப் புறம்பாக்கினர். கி. பி. 314ல் ஆர்லீஸ் பட்டணத்தில கூடிய சங்கத்தார் சகல இடஙகளிலும் ஒரேநாளில் பண்டிகை ஆசரிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள் நிசேயா சங்கத்தார் தடையியாக அது ஞாயிற்றுக்கிழமையாகவே இருக்க வேண்டுமென்று சட்டங்கொடுததார்கள். அதுமுதல் கிழக்கத்து வழக்கத்தைக் கைக்கொண்டுவந்த Quartodecimans என்றவா கள் பிரிவினைக்காரராக மதிக்கப்பட்டார்கள. கி. பி. 341ல் அந்தியோகியாச் சங்கத்தாரால் அவர்கள் சபைக்குப் புறம்பாக்கப பட்டார்கள். இங்கிலீஷ்சபையார் அகுஸ்தீன் என்பவருடைய காலமட்டும் எபேசுவிலுள்ள கிழக்கத்துச் சபையோடே ஐக்கிய மாயிருந்து, அவர்கள் வழக்கத்தையே பின்பற்றிவந்தார்கள். தடையியாக அந்த வழக்கம் எட்டாம் நூற்றாண்டில் முற்றிலும் நின்றுபோயிற்று.

38. வினா. பரத்துக்கேறின பண்டிகையின் விசேஷத்தைச சொல்லு?

விடை. இந்தப் பண்டிகை மற்றப் பண்டிகைகளைப்போலத் தற்காலத்தில் விசேஷித்துக் கொண்டாடப்படாவிட்டாலும் முந்திய காலங்களில் பெரிய உற்சவமாய்க் கொண்டாடப்பட்டது. ஜெபமுறைகளை உண்டாக்கினவர்கள் பெரிய பண்டிகைகளுக்கொப்பந்தமாய் விசேஷித்த சங்கீதங்கள், விசேஷித்த பாடங்கள், விசேஷித்த சுருக்கஜெபம், நிருப சுவிசேஷவாக்கியங்கள், விசேஷித்த நற்கருணை முகவுரை முதலியயாவையும் நியமித்திருக்கிறார்கள். பரி. அகுஸ்தீன் என்பவர் இந்தப் பண

டிகை எல்லாச் சபையிலும் ஆசரிக்கப்பட்டுவந்ததென்றும் அப்போஸ்தலர் காலத்தில் அவர்களால்தானே ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டுமென்றும், ஆதித் திருச்சபைசங்கத்தாரால் பாரம்பரியத்திஞல் தெரியவருகிறபடி அது ஒப்புக்கொள்ளப்பட்டு வந்ததென்றுஞ் சொல்லுகிறார்.

39. வினு. ரொக்கேஷன் நாட்களெவை? அவை அப்படி அழைக்கப்பட்டிருப்பதேன்? அவை அனுசரிக்கப்பட்டுவந்த நோக்கமென்ன?

விடை. ரொக்கேஷன் என்பது லத்தீன் மொழியாம். அதற்கு ஜெபிக்குதல் என்று அர்த்தமுண்டு. நமதாண்டவர் பரத்தசேறின பண்டிகைக்கு முந்தின மூன்று தினங்கள் ரொகேஷன் நாட்களாம். பின்வரும் பண்டிகையைத் தகுதியாய்க் கொண்டாடும்பொருட்டு உபவாசத்திஞலும் பத்திக்கடுத்த மற்ற முயற்சிகளாலும் மனதை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும் இக்காலத்தில் பூமி செழித்து நன்றாய்ப பலன்கொடுக்கும்படி தேவ இரக்கத்துக்காக கெஞ்சவும் பெருவாரி, விக்கினம், மோசப முதலிய உபத்திரவங்கள் நீங்கிப்போகும்படி தேவ தயவுககாகப் பிரார்த்திக்கவுமென்று இந்நாட்கள் அனுசரிக்கப்பட்டன

40. வினு. இந்நாட்களை முதலாவதாக ஏற்படுத்தினதார்? அவற்றின் பூர்வ அனுசாரவிதத்தைபபற்றி இக்காலத்தில் நிலைநின்றியிருக்கிற வழக்கமென்ன?

விடை. 5-ம் நூற்றாண்டின் மத்தியில் கால் (Gaul) தேசத்திலுள்ள Neumia வின் கண்காணியாயிருந்த (Mamercus.) மாமர்க்ஸ் என்பவர் தமது சேகரத்தில் சடிதியாய் நேரிடவிருந்த அவதியினிமித்தம் இந்நாட்களை ஏற்படுத்தி, தகுந்த ஜெபதவங்களை ஏற்படுத்தி, வெளியரங்கமாய் வலஞ்சுற்றிவந்து பத்தி முறைமைகளை அனுசரித்து இந்தடவாய் அவைகளை ஆசரிக்கும்படி திட்டஞ்செய்திருந்தார். அவ்வழக்கபபடியே இககாலத்திலும் வலஞ்சுற்றிவருவார்கள்.

41. வினு. ரொக்கேஷன் நாட்களில் செய்யப்படத்தக்க விசேஷித்த ஆராதனைமுறைமை நியமிக்கப்பட்டிருக்கிறதா?

விடை. இல்லாவிட்டாலுந் தனியுபவாசநாட்களாக அவை அனுசரிக்கப்பட்டுவரும்படி திருச்சபையால் திட்டஞ்செய்யப்பட்டிருக்கிறது. வலஞ் சுற்றிவரும்பொழுது 103, 104-ம் சங்கீதங்களும், கோவிலுக்குத் திரும்பும்போது லித்தானியாவும், தோத்திர ஒமிலியும் (Homulies) வாசிக்கப்பட்டனவென்று

(Sparrow) ஸ்பாரோ என்ற கண்காணியார் சொல்லியிருக்கிறார்.

42. வினா. பரிசுத்த ஆவியின் பண்டிகை யூதருடைய எந்த பண்டிகைக்குச் சரி?

விடை. பஸகாபண்டிகைக்கு ஈஸ்தாபண்டிகை ஒப்பாயிருக்கிறது போல் பெந்தெகொஸ்தேபண்டிகைக்குப் பரிசுத்த ஆவியின் பண்டிகை ஒப்பாயிருக்கிறது. பெந்தெகொஸ்தே பண்டிகை சீனாய்மலையில் நியாயப்பிரமாணங் கொடுக்கப்பட்டதை ஞாபகப்படுத்தும்படிக்கும் அறுப்பின்நாளிலே தோத்திரஞ்செலுத்தும்படிக்கும் நியமிக்கப்பட்டதுபோல, பரிசுத்தாவியின் பண்டிகையானது பரிசுத்தாவியானவர் சீஷர்கள் மேல் ஊற்றப்பட்டதை ஞாபகப்படுத்தும்படிக்கும் கிறிஸ்துவின் சபையில் முதற்பலன்கள் சேர்க்கப்பட்டதற்காக தோத்திரஞ்செலுத்தும்படிக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் நியாயப்பிரமாணத்தைப் பெற்ற காலமுதல் யூதர்கள் பரிசுத்த ஜாதியாக மாறினதுபோல பரிசுத்தாவியைப்பெற்ற காலமுதல் சீஷர்கள் பரிசுத்த திருச்சபையாக மாறிப் பெயர்கொண்டார்கள். பூர்வீக இங்கிலீஷ் சபையில் இந்தப் பண்டிகைக்கு ஐம்பது என்றர்த்தமுள்ள பெந்தெகொஸ்தே என்ற நாமம் வழங்கப்பட்டுவந்தது. சீர்திருத்தலின் காலத்துக்குப்பின்பு வெள்ளை ஞாயிறு என்றர்த்தமுள்ள (White Sunday) உவயிற் சன்டே என்ற பேர் வழங்கத் துவங்கிற்று. புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் வெள்ளை உடைகளைத் தரித்துக்கொண்டதினால் இந்தப் பேர் வழங்கியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

43. வினா. பரிசுத்த திரித்துவப் பண்டிகை ஆரம்பமான காலமும் நோக்கமுமென்ன?

விடை. துரான்டஸ் (Durandus) என்பவர், இந்தப் பண்டிகை பிந்தியகாலத்தில் பெரிய கிரகோரி என்பவரால் ஆரம்பமானதாயும் பரிசுத்த திரித்துவத்தைப்பற்றிய விசுவாசத்தை அரியானருடைய தீயகொள்கையானது அவித்துக் கெடுத்துப்போடாதபடிக்கு ஏற்படுத்தப்பட்டதாயுஞ் சொல்லுகிறார். இரண்டாவது அலெக்சந்தர் என்ற பாப்பானவர் (கி. பி. 1061–1073.) திரித்துவ கீதங்களிலும் Gloria Patri ஜெபமுறைகளிலும் திரித்துவ உபதேசமும் வணக்கமும் நிலைநாட்டப்பட்டிருப்பதால் இந்தப் பண்டிகை அவசியமில்லை யென்று சொன்னாலும் ஐரோப்பாவின் மேலச்சபைகள் யாவும் இதைக் கொண்டாடிவந்தன. கண்காணியான தோமாஸ்

பெக்கட்டு என்பவர் கி. பி. 1162ல் இங்கிலாந்தில் இந்த நாளை ஸ்தாபித்தார். ஆர்லீஸ் பட்டணத்துச் சங்கம் கி. பி 1260ல் இதை ஒப்புக்கொண்டது. ஆனால் 22-வது யோவான் என்ற பாப்பானவர் கி. பி. 1334ல் இதைப் பிரபலப்படுத்தினர். கிரேக்கச்சபையில் இதற்கொப்பான பண்டிகை இல்லை.' திரித்துவம் என்கிற வார்த்தை முதலாவதாக கி. பி. 170ல் அந்தியோகியாவின் கண்காணி தியோப்பிலு என்பவரால் வழங்கப்பட்டது.

44. வினா. பரி. திரித்துவப் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்தைந்து ஞாயிறுகளின் போதகமென்ன?

விடை. திருச்சபையானது வருஷத்தின் முதல் பாதி ஆவெந்து தொடங்கி திரித்துவ பண்டிகைவரைக்கும் கிறிஸ்துவின் பிறப்பு, சுன்னத்து, பிரசன்னம், பாடுகள், மரணம், உயிர்தெழுதல், பரமேறுதல், பரிசுத்தாவியின் வருகை முதலிய சரித்திரத்தையும் கிறிஸ்துமார்க்க உபதேசங்களையும் கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக்காட்டுகிறது. பிந்தின பாதி அதினால் போதிக்கப்படுகிற நமமுடைய கடமைகளை நமக்குக் காட்டுகிறது. ஒன்றில்லாமல் ஒன்று பூரணமாய் இருக்கமாட்டாதாகையால் விசுவாசிக்கவேண்டிய உபதேசங்களுஞ் செய்யவேண்டிய கடமைகளும் வருஷத்துக்கு ஒருதரம் நமக்குமுன்னே வைக்கப்பட்டிருக்கிறது. செய்கைக்குரிய பக்தியுள்ள நடக்கைகளில்லாவிட்டால் விசுவாசம் பிரயோஜனமாயிராது; விசுவாசம் போதிக்கப்படாவிட்டால் கிரியைகள் உண்டாகமாட்டாது ஆகையால் இந்த இருபத்தைந்து ஞாயிறுகளுக்குரிய சுருக்க ஜெபங்களும், நாம் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய நற்கனிகளாகிய நற்கிரியைகளைச் செய்துவரும்படி ஜெபிக்க நம்மை ஏவுகிறது சுவிசேஷ வாக்கியங்கள் நமது ரட்சகருடைய முன்மாதிரியை நமக்கு விளக்கிக் காண்பிக்கிறது; நிருப வாக்கியங்கள் கிறிஸ்துமார்க்கத்தின் நற்குணங்களும் நற்கிரியைகளும் இன்னதென்று காண்பிக்கிறது. முதல் மூன்று, ஐந்து, பதினெட்டு, இருபத்தைந்து ஞாயிறுகளுக்குரிய நிருபவாக்கியங்கள்தவிர மற்றதெல்லாம் புதிய ஏற்பாட்டு ஒழுங்குப்படி, பரிசுத்த பவுலின் நிருபங்களிலிருந்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

45. வினா. இங்கிலாந்துசபையில் ஆசரிக்கப்பட்டுவருகிற சின்னப் பண்டிகைகள் எவை? அவைகள் ஆசரிக்கப்படுகிற மூகாந்தரமென்ன?

விடை. இங்கிலாந்துசபையில் முக்கியமான பண்டிகைக

எல்லாமல் ஆதிச்சபையிலிருந்த சுவிசேஷ பிரசங்கிகளும் மகாத்துமாக்களுமானவர்களுடைய பிரயாசங்களையும் நல்லொழுக்கங்களையும் நினைவுகூரத்தக்க பண்டிகைகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாய் பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் பண்டிகைநாள் குறிக்கப்பட்டிருக்கிறது. பரி. யோவான்ஸ்நானன், பரி. பவுல், பரி. பர்னபா, சுவிசேஷகராகிய மாற்கு, லூக்கா என்பவர்களுக்கு வெவ்வேறு பண்டிகைநாட்கள் உண்டு. நமது இரட்சகரின் நாமத்தினிமித்தம் முதலாவது இரத்தச்சாட்சிகளானது பாலகரானதால் அவர்கள் பேருக்கும் ஓர் பண்டிகைநாள் உண்டு. மற்றும் தெய்வபத்தரையெல்லாம் நினைவுகூரும் பொருட்டு சகல பரிசுத்தவான்களின் நாள் நியமிக்கப்பட்டிருக்கிறது நற்றூதருடைய ஊழியத்தினாலும் உதவியினாலும் கிறிஸ்தவர்கள் பல நன்மைகளையடைவதால் தேவனுக்குப் புகழ்ச்சியாக பரி. மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் நாள் குறிக்கப்பட்டிருக்கிறது.

46. வினா. மேற்காட்டிய பண்டிகைநாட்களை ஆசரிப்பது அப்போஸ்தலக் சட்டங்களுக்குப் பின்னமல்லவென்று காட்டு?

விடை. நாட்களையும் மாதங்களையும் வருஷங்களையும் காலங்களையும் பார்க்கவேண்டாமென்று பரி. பவுல் விலக்கியிருப்பதால் (Gal. iv. 10. Col. ii. 16.) இவைகளை ஆசரிப்பது நியாயமல்லவென்று ஆட்சேபிக்கப்படுவதுண்டு. புறச்சாதியாரான கிறிஸ்தவர்கள் யூதமார்க்க சடங்காசாரங்களையுங் கைக்கொள்ளவேண்டுமென்று போதித்துவந்த கள்ளப்போதகன்மாரை கண்டிக்கும்படியாகவே அக்கட்டளையைப் பரி. பவுல் கொடுத்திருக்கிறார். ஏனெனில் அவர்கள் பொருளைத் தள்ளி நிழலை ஸ்தாபிக்கிறவர்களாயிருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவானவருக்கு மகிமையாகக் கொண்டாடப்படும் இம்முறைமைகளை ஆகாதென்று பரி. பவுல் கற்பித்திருக்கிறதில்லையே.

47 வினா. ரோமான்மார்க்கத்தாருடைய கணக்கில் ஏறிய பரிசுத்தவான்களுடைய திருநாட்களைப்பற்றிச் சொல்லப்படுகிற ஆட்சேபனையானது திருச்சபைச் சீர்திருத்தலை ஒப்புக்கொண்டு நடப்பித்தவர்கள் குறித்திருக்கும் திருநாட்களுக்கும் செல்லுமோ?

விடை. ரோமான்மார்க்கத்தார் அநேக பரிசுத்தவான்களையும், இரத்தச்சாட்சிகளையுந் தொகைப்படுத்தி தொழுதேற்றி வருகிறார்கள். இவர்கள் ஒப்புகொண்டுவருகிற திருநாட்களில்

அநேகம் கட்டுக்கதை ஏற்பாடுகள்தான். அவர்களால் பரிசுத்தவான்கள் என குறிப்புக்கொள்ளப்படுகிற சிலர் தகாத நடத்தையுள்ளவர்களாயிருந்தார்கள்; வேறு சிலருடைய தெய்வபக்தியைப்பற்றி சந்தேகிக்கவேண்டியதுண்டு. ஆகையால் இவர்களுடைய திருநாட்களைப்பற்றிச் சொல்லப்படும் ஆட்சேபனை நமது திருநாட்களுக்குச் செல்லாது. அவைகளில் பூர்வகாலமுதல் திருச்சபையில் ஆசரிக்கபபட்டுவந்தவைகளும் சுவிசேஷத்தின் பிரஸ்தாபத்துக்கும் பிரபல்லியத்துக்கும் ஏற்றவைகளுமான திருநாட்களேதவிர மற்றவைகளெல்லாந் திருச்சபை சீர்திருத்தலின் காலத்தில் தள்ளுபடியாயின.

48. வினு. திருச்சபைக்கு அருளிச்செய்யபபட்ட விசேஷித்த கிருபைவரங்களை நினைவுகூரும்பொருட்டு பண்டிகைகளை ஏற்படுத்திக் கொண்டாடுவதற்கு ஆதாரமுண்டென்று காட்டு? -

விடை. திருச்சபைக்கு அருளிச்செய்யப்பட்ட விசேஷித்த கிருபைவரங்களை நினைவுகூரும்பொருட்டு பண்டிகைகளை ஏற்படுத்துவது வேதத்தில் விலக்கப்படாதிருக்கிறதின்றி விதிக்கப்பட்டும் இருக்கின்றன. தேவன் தாமே பஸ்காபண்டிகை, வாரங்களின் பண்டிகை, கூடாரப்பண்டிகை என மூன்று பண்டிகைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இவைகளில் முந்தின இரண்டும் கிறிஸ்தவர்களுக்குள் வழங்கிவருகிற ஈஸ்தர் பண்டிகைக்கும் பரிசுத்தாவியின் பண்டிகைக்குங் குறிப்பானது. முக்கியமாய் மனித ஏற்பாடான தேவாலயப்பண்டிகையை கிறிஸ்துவானவர் ஆசரித்திருப்பது நமது நியாயத்திற்கு மிகவும் அனுகூலமானதாயிருக்கின்றது.

49. வினு. ஈவ்ஸ் அல்லது விஜில்ஸ் என்பதென்ன?

விடை. இது பூர்வ கிறிஸ்தவர்களுக்குள்ளிருந்த ஒரு வழக்கத்தைக் காட்டுகிறது. சில பண்டிகைகளுக்கு முந்தின இராவில் அவர்கள் விழித்திருந்து அதைப் பக்தியாய்க் கொண்டாடுவதுண்டு. துன்பகாலத்தில் தாங்கள் பகற்காலத்தில் செய்யக்கூடாதவைகளை இராக்காலத்தில் நிறைவேற்றுவார்கள் விஜில்ஸ் (Vigils) என்பதற்கு விழிப்பு என்ற அர்த்தமுண்டு. அவ்வழக்கம் பழுதுபட்டுப்போனமையால் நிறுத்தப்பட்டது. இராவாராதனை நின்றுபோனாலும் உபவாசஞ்செய்யும் வழக்கம் நின்றுபோகவில்லை.

50. வினு. இங்கிலாந்துசபையில் அனுசரிக்கப்பட்டுவருகிற எல்லா பண்டிகைகளுக்கும் Vigils உண்டா?

விடை. கிறிஸ்துவானவரின் பிறப்பின் பண்டிகைக்குப் பின்னும், பரி. கன்னிமரியாள் சுத்திகரிபபின் நாளுக்கு முன்னும் வரும் பண்டிகைகளுக்கும், ஈஸ்தருக்கும், பரிசுத்தாவியின் பண்டிகைக்கும் ஊடே வரும் பண்டிகைகளுக்கும் (Vigils) விஜில்கள் இல்லை. ஏனெனில் சந்தோஷமான இக்காலங்களில் உபவாசஞ்செய்வது தகுதியல்லவே; ஆன்றாலும் பரிசுத்தாவியின் பண்டிகைக்கு முன்னுள்ள பத்தாம் நாளான பரத்துக்கேறின பண்டிகைக்கு Vigils உண்டு. மணவாளன் தங்களைவிட்டெடுபடும் நாட்கள் வரும், அப்போது அந்நாட்களில் உபவாசிப்பார்களென்று நமது இரட்சகர் தமது சீஷரைப்பற்றி உரைத்தபிரகாரம் இப்பண்டிகைக்கு உபவாசம் நியமிக்கப் பட்டிருப்பது சரியே. வேறு சில பண்டிகைகளுக்கும் விஜில்கள் இல்லை. அவையாவன, செப்டெம்பர்மாதம் வரும் மிகாவேலின் பண்டிகைகளும், அக்டோபர்மாதம் வரும் லூக்காவின் பண்டிகைக்குந்தானே முந்தினதில் Vigils இல்லாதிருப்பதற்கு முகாந்தரமாவது, தேவதூதர் நிறைவான பேரின்ப பாக்கியசலாக்கியம உடையவர்களாய் சிருட்டிக்கப்பட்டவர்களும் ரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கு ஊழியக்காரருமான பணிவிடை ஆவிகளாயிருக்க, அவர்களுக்காக தேவனுக்குத் துதிசெலுத்திவருகிற நாம் அவர்களுடைய பண்டிகைகளுக்குமுன் உபவாசம்பண்ணுவது தகுதியல்ல என்பதே. பிந்தினதற்கு விஜில் இல்லாதிருப்பதேதென்றால், பண்டிகைக்கு முந்தின நாள் பரி எதெல்ரெடான் என்னும் கன்னிகையின் பண்டிகையாகப் பூர்வத்தாரால் கொண்டாடப்பட்டுவந்ததால்தானே.

• 51. வினா. எம்பர்நாட்கள் என்பதென்ன? அம்மொழிக்கு அர்த்தமென்ன?

விடை. லெந்தின் முதலாம் ஞாயிறுக்கும் பரிசுத்தாவியின் பண்டிகைக்கும் செப்டெம்பர்மாதம் 14-ம் தேதிக்கும் டிசம்பர் மாதம் 23-ம் தேதிக்கும் பின்வரும் புதன், வெள்ளி, சனிக்கிழமைகள் எம்பர்நாட்களாம். எம்பர் என்பது Saxon என்னும் மொழி; அதற்குச் சுற்று என்று அர்த்தமாம். அந்நாள் தாக்கமின்றி நெடுகிலும் முறையே அனுசரிக்கப்பட்டுவருவதால் அதற்கு இப்பெயருண்டாயிருக்கலாம். இது (German) ஜர்மன் மொழி என்றும் உபவாசமென்னுங் கருத்தைக் கொள்ளுமென்றும் நினைக்கிறவர்களுண்டு. இந்நாட்கள் உபவாச நாட்களாயிருப்பதையிட்டு எம்பர் என்பது சாம்பல் என்

பதற்கு ஏகார்த்தமுள்ள மொழியாக எண்ணப்படுகிறதும் உண்டு.

52. வினா இந்நாட்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நோக்க மென்ன? இந்நாளில் வழங்கும் ஜெபங்கள் எப்போது சேர்க்கப்பட்டது?

விடை: இந்நாட்களுக்குப்பின் வரும் ஞாயிறுகள் திருப்பணி விடை செய்ய ஏற்படுகிறவர்களுக்குப் பட்டங்கொடுப்பதற் கென்று நியமிக்கப்பட்ட காலங்களாம். இப்பேர்ப்பட்ட சமயங்களில் அப்போஸ்தலர் காலம்முதற்கொண்டு திருச் சபையார் உபவாசஞ்செய்துவந்திருக்கிறார்கள் (அப. 13. 3.). எம்பர்நாட்களில் செய்யப்படுகிற ஜெபங்கள், ஜெபபுஸ்தகம் கடைசியாய்த் திருப்பப்பட்டபோது சேர்க்கப்பட்டன. அவைகள் காலத்துக்கேற்றதும் வழங்குவதற்கு அவசியமுமான ஜெபங்கள். இவைகள் ஜெபிக்கப்படுங்காலங்களிலேயல்லா மல் பின் எந்த வேளைகளிலாவது குருப்பட்டம் கொடாதிருப் பதே உத்தமம்.



VI. CHAPTER.

ON THE MINOR FESTIVALS OF THE CHURCH

The origin and object of keeping the Minor Holidays of the Calendar A short account of the life of each of the Saints and Tradition or Legend said about him.

ஆறாம் அதிகாரம்.

கியாலண்டர் அட்டவணையில் கண்ட சின்ன திருநாட்களையும் பரிசுத்தவான்களையும் பற்றியது.



1. வினா. மைனர் அல்லது கறுப்பு எழுத்து திருநாட்களைப பற்றி என்ன தெரியும்?

விடை. இவைகள் 1561ல் நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் சேர்க்கப்பட்டன. அதுமுதல் சில அற்ப மாறுதல்களோடு ஜெபபுஸ்தகத்தின் எல்லாத் திருப்புதல்களிலும் இருந்திருக் கின்றன. சாரம் அட்டவணையிலிருந்து எடுக்கப்பட்ட இவைகள் ஏற்படுத்தப்பட்ட காரணம் லேசில் அறிந்துகொள்

ளக்கூடியதல்ல. பெருமையுடைய ஆவைகள் பொதுவான அல்லது ஸ்தலத்துக்குரிய பரிசுத்தவான்களைக் கனபபடுத்தவேணுமென்கிற நோக்கத்திஞலும், லௌகீக வருஷோற்சவங்களில் சம்பந்தப்பட்டிருபபதிஞலும் உண்டாயிருக்கலாம். ஆனல் பொதுவாக இவைகளின ஆசரிப்பு இங்கிலீஷ் அல்லது காலிக்கன்சபையுடன் சம்பந்தபபட்ட இரததச்சாட்சிகளுக்கும் பரிசுத்தவான்களுக்கும் விசேஷித்த கனஞ்செய்யவேண்டிய நோக்கத்திஞல் உண்டாயிற்று.

JANUARY—ஜனுவரி.

2. விஞ. ஜனுவரிமாதத்தில் யார் யார் திருநாட்களைக் கொண்டாடுகிறேம்?

விடை. ஹூசியன், இலாரி, பிரிஸ்கா, பேபியான், ஆக்னீஸ், வின்செண்ட் என்பவர்கள் திருநாட்களே.

3. விஞ. ஹூசியன் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் ரோமைதேசத்தான், காலிக்கன்சபை பரிசுத்தவான். கி. பி. 245ல் பரி. டெனிஸ் என்பவர் ரோமையிலிருந்து காலுக்கு அனுப்பப்பட்டபொழுது அவருடைய கூட்டாளியாயிருக்கும்படியாக குருவாய் அனுப்பபபட்டார். இவர் ஆவேஸ்பட்டணத்தின் கண்காணியாராகி, கி. பி. 290ல் அங்கே இரத்தச்சாட்சியாஞர்.

4. விஞ. இலாரி என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் பாயிட்டியர்ஸ் பட்டணத்துக் கண்காணியும் வேத சாட்சியுமாம்; துவக்கத்திலே கால்தேசத்துப் பேர்பெற்ற கண்காணியும் ஆசிரியனுமாயிருந்தவர்; புருஷத்துவத்திலே அஞ்ஞானத்தை விட்டு குணப்பட்டார்; பரி. அம்புரோஸைப்போல ஜனங்களுடைய கேட்டுக்கொள்ளுதலின்பேரில் சபையாஞயிருந்தபடியே 350ல் பாட்டியர்ஸ் பட்டணத்துக் கண்காணியாஞர்; தமது ஜீவியம் முழுவதையும் கிழக்கிலும் மேற்கிலும், ஆரியருடையவும் ஸெமி—ஆரியருடையவுமான கொள்கையை மேற்கொள்வதில் செலவிட்டார். இதினிமித்தம் கொன்ஸ்தந்தியஸ் ராயன் இவரைத் தீவாந்தரத்துக்கு அனுப்பிஞன்; என்ருலும் தம்முடைய கண்காணியாட்சிக்குத் திரும்பிவந்து மூன்று வருஷம் உயிரோடிருந்து கி. பி. 368ல் இறந்துபோஞர். வியாக்கியானம், உபதேசம் முதலியவைகளுக்கு அடுத்த நூல்களை உண்டுபண்ணின பூர்வ பெரிய லத்தீன் திருச்சபைப்பிதாக்களில் இவர் ஒருவராயிருந்தார்.

5. வினா. பிரிஸ்காவைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் மூன்றும் நூற்றாண்டில் இரத்தச்சாட்சியான ஒரு ரோமைசீமாட்டி. இவளை சிங்கங்களுக்கு எதிரில் போட்ட பொழுது, சிங்கங்கள் இவளைப் பீறுகிறதற்குப் பதிலாக அவள் பாதத்தருகே வந்து படுத்துக்கொண்டனவென்று ஒரு பாரம்பரியமுண்டு. வேறொரு பாரம்பரியம் என்னவெனில், இவள் சிரச்சேதம் பண்ணப்பட்டபொழுது, பிரேதம் அடக்கம் பண்ணப்படும்வரையில் ஒரு கழுகு அதைக் காத்துக்கொண்டிருந்தது என்பதே.

6. வினா. பேபியான் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் 236–250வரை ரோமாபுரியின் கண்காணி இவர் சபையாளுயிருந்தபடியே கண்காணியானார். ரோமாபுரியின் கண்காணியாக யாரைத் தெரிந்துகொள்ளுகிறது என்று இருந்தபொழுது ஒரு புறா இவர்பேரில் வந்திறங்கியதின் பேரில் இவரே கண்காணியாக்கபபட்டாரென்று ஐசேபியுஸ் என்னும் சரித்திரக்காரன் சொல்லுகிறார். அபூர்வ குணங்களும் ஊக்கமுமுடையவர். சபையின சீர்ப்பாட்டை வெகுவாய் தேர்சசிபண்ணி யதார்த்தமாய் ஆண்டாரென்று பரி. ஸிப்பிரியன் இவரைப் புகழ்ந்து பேசியிருக்கிறார். இவர் தேஸியூ என்ற ராயனுடைய துன்பத்தில் இரத்தச்சாட்சியானார்.

7. வினா. ஆக்னெஸ் என்பவளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் ரோமைதேசத்தாளான ஒரு பாலிய கன்னிகை; சிற்றின்பத்தில் விழுந்தபொழுது பொருத்தனைபண்ணினாள்; தன்னுடைய வைராக்கியத்தில் உறுதியாய் நின்ற தினிமித்தம் தியோகிளிஷியினால் உண்டான துன்பத்தில் நியாயாசனத்துக்குமுன் கொணடுவரப்பட்டு, சித்திரவதையினால் 23–ம் வயதில் கொல்லப்பட்டாள். பரி. அம்புரோஸ், எரோம், அகுஸ்தீன் என்பவர்கள் காலம்முதற்கொண்டு கற்புக்கும் குற்றமில்லாமைக்கும் அடையாளமாக இவளுடைய நாள் கொண்டாடபபட்டது.

8. வினா. வின்செஸ்ட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் சரகோசா பட்டணத்து ஸ்பானியதேசத்து உதவிக்குரு; 304ல் தியோகிளிஷியினால் உண்டான துன்பத்தில் இரத்தச்சாட்சியானார். இவர் கையில் குருத்தோலையும் காகமும் வைத்திருக்கிற பாலிய உதவிக் குருவாகப் பாவிக்கப்படு

கிறூர். காகம் இவர் சரீரம் காட்டுமிருகங்களுக்கு இரையாக ஒப்புக்கொடுக்கப்பட்டபொழுது அதைக் காத்ததாம்.

FEBRUARY—பெப்ருவரி.

9. வினு. பெப்ருவரி மாதத்தில் யார் யாருடைய திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. பிலாவியஸ், அகத்தா, வலன்தீன் என்பவர்கள் நாட்களே.

10. வினு. பிலாவியஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. அர்மீனியாதேசத்திலுள்ள பாஸ்டீ பட்டணத்துக் கண்காணி. 316ல் தியோகிளிஷியின் காலத்தில் உண்டான துன்பத்தில் இருப்பு சீப்புகளால் கிழிக்கப்பட்டு சிரச்சேதம் பண்ணப்பட்டாரென்கிற பாரம்பரியததையல்லாமல் இவரைப் பற்றி வேறொன்றுந் தெரியாது. இவர் உல்கோம்பர்ஸ் என்ற வியாபாரிகளாலும் சரகோசாப்பட்டணத்து ஜனங்கள்முதலி பவர்களாலும் உபகாரியாக (Patron) கனப்படுத்தப்பட்டார்.

11. வினு. அகத்தா என்பவளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவளும் பரிசுத்த ஆக்னெஸைப்போல பரிசுத்தத்க்கு அடையாளம். சிசிலித்தீவிலுள்ள கட்டாறுபட்டணத்ல் நீஷியஸ் அல்லது தியோகிளிஷியின் காலத்தில் உண்ான துன்பத்தில் இரத்தச்சாட்சியானுள். இவள் ஒரு கையில் ருத்தோலையும் மறுகையில் ஒரு தட்டில் ஸ்தன்னியமும் வைத்திருக்கிறதாகப் பாவிக்கப்படுகிறுள். இதைப்பற்றிய கதை என்னவெனில், இவள் பெரிய இருப்புக் கத்தரிகைகளால் கிழிக்கப்பட்டாள் என்பதே. 366ல் ரோமாபுரியின் கண்காணியாகிய டாமேஸியூஸ் என்பவரால் குறிக்கப்பட்டு பெரிய கிரகோரி என்பவரால் இரத்தச்சாட்சிகள் வகுப்பில் சேர்க்கப்பட்டாள்.

12. வினு. வலன்தின் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 270ல் ரோமாபுரியில் இரத்தச்சாட்சியான ஒரு குருவென்று பாரம்பரியத்திறல் தெரிவதேயல்லாமல் இவரைப் பற்றி வேறொன்றும் தெரியாது. இவரைக் கண்காணி என்று சொல்வது பிசகு.

MARCH—மார்ச்சு.

13. வினு. மார்ச்சுமாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகின்றன?

விடை. தாவீது, சாட், பர்பெத்துவா, கிரகோரி, எட்வாட், பெனிடிக்ட் என்பவர்களுடைய திருநாட்களே.

14. வினு. தாவீது என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் உவேல்ஸ் நாட்டின் பரிபாலன பரிசுத்தவான்; ஒரு உவேல்ஸ் ராஜாவின் மகன். இவர் ஒரு சந்நியாச மடத்தை ஏற்படுத்தி அதற்கு மடாதிபதியானரென்று ஒரு பாரம்பரியமுண்டு. உவேல்ஸ் நாட்டுக் குருக்கள் சங்கத்தில் ஆரியானருடைய கொள்கைக்கு விரோதமாய்ப் பொதுவான விசுவாசத்துக்காக சரி நியாயஞ்சொல்லிப் பேசின இவருடைய வைராக்கியத்தினிமித்தம் கேயாசியான்பட்டணத்து சிரேஷ்ட அத்தியட்சராகிய டியுபிரிட்டியஸ் என்பவர் தமக்குப் பின்ஞக இவர் சிரேஷ்ட அத்தியட்சராகவேணுமென்று தூண்டிவிட்டார். கேயாசியான் பட்டணத்திலிருந்து தற்காலத்தில் பரி. தாவீது என்பவருடைய சிரேஷ்ட அத்தியட்சாஸனம் என்னப்படுகிற மெனெவியாவுக்கு மாற்றப்பட்டார். கி பி. 544ல் இறந்துபோனுர்.

15. வினு. சாட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. வட அம்பிரியா நாடு இவருடைய பிறந்தகம், ஆனுல் ஐர்லாந்தில் வளர்ந்தார்; எய்டானுக்குக் கீழாக கல்வி கற்றுககொண்டார்; வில்பிரிட்டுக்கு விரோதமாய் அவர் இல்லாதபோது 664ல் யார்க்கு பட்டணத்து கண்காணியாக்கப்பட்டார். சிரேஷ்ட அத்தியட்சர் தேடோர் என்பவர் வில்பிரிட்டுக்குச் சார்பாய் 669ல் இவரை அரசாட்சியினின்று நீக்கிஞர். கடைசியாக மெர்சியா என்ற ராஜ்யத்தின் லிச்சுபீல்ட் பட்டணத்துக் கண்காணியாகி 672ல் அங்கே மரணமடைந்தார். பீட் என்ற சரித்திரக்காரன் இவருடைய நிஷ்கபடமான நடத்தையையும், பரிசுத்த ஜீவியத்தையும், மரணத்தையுங்குறித்து மிகவும் வர்ணித்து எழுதியிருக்கிருர்.

16. வினு. பர்பெத்துவா என்பவளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 203ல் செவ்வீரஸ் ராயன் காலத்தில் உண்டான துன்பத்தில் இரத்தச்சாட்சிகளான ஆபிரிக்காகண்டத்தின் இரத்தச்

சாட்சிகளில் இவளொருத்தி. பாதிபர்பத்துவாவாலேயே ஒழு தப்பட்ட இவன் நடபடிகள் இக்காலமட்டாகத் தற்காக்கப் பட்டிருக்கிறது. மந்தேனார் என்பவர்களின் வீண் தோற்றத்துக் கும் துறவறத்துக்குமுரிய சில குறிப்புகள் காணப்பட்டபோ திலும், அவை புத்திகூர்மையும் சிறப்புமானவை.

17. வினா. கிரகோரி என்பவனைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 590–604 வரையிலும் ரோமை கண்காணியும் பாப்பத்திகார்த்தின் மெய்யான ஸ்தாபகனுமாம். இவர் உயர்ந்த குடும்பமும் அந்தஸ்தும் கல்வியும் உடையவராய் சந்நியாசி யாகி, துறவறத்துக்குரிய சிநேகத்தையும் கோட்பாடுகளையும் ஜீவியமட்டும் நிலைப்படுத்தினவர். தனது விருப்பத்துக்கு விரோதமாய் 590ல் பாப்பாக்கப்பட்டார். அப்பொழுது மேற்கு ராஜ்யத்தின் நிர்மூலம் இவரை உடனே ரோமாபுரி சபையின் கண்காணியும், மேற்குச்சபைத்தலைவனும், ரோமா புரியின் உண்மையான ராஜாவும் பிரதிநிதியுமாக்கிற்று. இவர் தன்னை அதிகாரியும் ஒழுங்குபடுத்துகிறவரும் போதகரும் ஆசி ரியனும் சந்தேகமில்லாமல் தனது காலத்தில் பெரிய மனிதனு மாக ரூபித்தார். இவருடைய சிரேஷ்ட அத்தியட்சர் குணு சீலம் ஸ்பானிய விசிகாத்தியரும், லம்பார்டியரும் ஆரியானரு டைய கொள்கையிலிருந்து திரும்பியதினால் விசேஷிக்கப் பட்டது. இவர் அங்கிலேய ஸாக்ஸோனிய கிறிஸ்துமார்க்கத் தின் மெய்யான அப்போஸ்தலனாயிருந்தமையால், அங்கிலேய திருச்சபையால் சிரேஷ்டமாய் மதிக்கப்படத்தக்கவர். இவர் சாதாரணமான அம்புரோஸின் ராகத்துக்கு மேலான கிரகோரி யின் ராகத்தைப் புதிதாய் ஆரம்பித்தவர். கெலேஷியஸ் என்ப வருடைய பூர்வமுறையைத் தழுவின இவருடைய நற் கருணைமுறை மேற்குச் சபையின் பூர்வ ஆராதனை முறைக ளின் பெரிய களஞ்சியமாயிருக்கிறது. அதிலிருந்தே நமது ருக்க ஜெபங்களெல்லாம் எடுக்கப்பட்டன.

18. வினா. எட்வார்ட் என்பவனைப்பற்றி என்ன தெரியும்?

விடை. எட்வார்ட்ராஜனின் பாலிய குமாரன். இவர் பதினாறு யதில் இவருடைய மாற்றாந்தாய் கட்டளைப்படி குதிரை யிலிருந்து நஞ்சு குடித்தபொழுது, கார்பி அரமனைக்கோட்டை யில் கொல்லப்பட்டார். திருச்சபை, சந்நியாசம் முதலியவை கள்பேரிலிருந்த இவருடைய வைராக்கியமே, இவரை மகாத் மா வகுப்பில் சேர்க்கிறதற்குக் காரணமாயிருந்தது.

19. வினா. பெனிடிக்ட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. மாண்ட்காசைனோவில் அப்பொல்லோ தேவனின் ஒரு பழைய கோவில்ஸ்தலத்தில் பெனிடிக்ட் சந்நியாச முறைமை ஸ்தாபித்தவரும், பெனிடிக்ட் சந்நியாசமுறையின் சட்டநிரூபணருமாம். இவர் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர்; தம்முடைய காலத்திலுள்ள துன்மார்க்க நடக்கையை விட்டுச் சிறு பிராயத்திலேயே துறவியாகி, துறவறத்திலுள்ள சீரழிவைத் திருத்தி நிலைப்படுத்தினவர். இவர் நடக்கை சிறப்பும் பரிசுத்தமுமுள்ளது.

APRIL—ஏப்பிரில்.

20. வினா. ஏப்பிரல் மாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. ரிச்சார்ட், பரி. அம்புரோஸ், அல்பேஜ், பரி. ஜியார்ஜ் என்பவர்கள் நாட்களே.

21. வினா. ரிச்சார்ட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் 1245 – 1253வரை சிச்செஸ்டர்பட்டணத்து கண்காணி; உயர்ந்த படிப்பும் சிறந்த நடக்கையும் உடையவர்; பாலோனா என்ற பட்டணத்து பண்டிதனும், ஆக்ஸ்போர்டின் ஆலோசனைத்தலைவனுமாம். ராஜாவினால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவருக்கு விரோதமாக சிரேஷ்ட அத்தியட்சர் பானிவேஸ் என்பவரால் அத்தியட்சராகத் தெரிந்துகொள்ளப்பட்டு பாப்புவினால் ஸ்திரப்படுத்தப்பட்டவர்; ஆகையினால் கொஞ்சக்காலம் சங்கடமடைந்தார். காணியாட்சிக்குரிய வரும்படி சரியாய் கிடையாமற்போனபோதிலும், பகைவர் நடுவில் ஜீவித்து அரசாண்டு, பொதுவான கனத்தில் மரித்தார். இவருடைய மிகுந்த விருத்தாப்பியத்தில் பரிசுத்த நற்கருணை ஆராதனையை நடத்தியபொழுது, இவர் நற்கருணை பாத்திரத்தைக் கையில் பிடித்தபடியே விழுந்தபோதிலும், நற்கருணை பாத்திரத்தில் இருந்தது சிந்திப்போகாதபடி செய்ய அற்புதப்பிரகாரமாய் காக்கப்பட்டாரென்றும் இவரைப்பற்றி சொல்லப்படுகிறது. இவர் செஸ்டர்பட்டணத்து அத்தியட்சர் ஆலயத்தில் க்ஷேமிக்கப்பட்டார்.

22. வினா. பரி. அம்புரோஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 374-397 மட்டும் மிலன் பட்டணத்துக் கண்காணி; உயர்ந்த அந்தஸ்தும் மேலான படிப்புமுடையவர் இவர் குழந்தையாயிருந்தபோது, பின்னுன காலத்தில் வாச்சலகனுயிருப்பாரென்பதற்குக் குறிப்பாக வாயிலே ஈக்கள் திரளாக மொய்த்ததாம். மிலன்பட்டணம் கண்காணி இல்லாமல் காலியாயிருந்தபொழுது லிகூரியாவின் கவர்னராயிருந்தார்; ஞானோபதேசம் படிக்கும்போதே ஜனங்களின் கேட்டுக்கொள்ளுதலின்பேரில் கண்காணியானுர்; உடனே இவர் மேற்கு 'சபையின் சிரேஷ்ட கணகாணியாகி, திருச்சபை அதிகாரத்தில் பலமானுர்; ஆரியானர் கொள்கைக்கும் அஞ்ஞான கொள்கைக்கும் விரோதமாக ஜெயங்கொண்டார் பெரிய தீயடோஷியஸ் ராயன் தெசலோனிக்கே பட்டணத்தில் நடத்திய சங்காரத்தினிமித்தம் அவன் பகிரங்கமாய் தபசு பண்ணினுலொழிய பரிசுத்த நற்கருணைக்குச் சேர்க்கமாட்டேனென்றும் கடிந்துகொணடார்; மீலானில் கிரியை முறையையும் கீதத்தையும் ஒழுங்குபடுத்தினுர்; பரி. அகுஸ்தீனைக் குணப்படுத்தியவர் இவரே; வல்லமையுள்ள கெட்டிக்கார நூலாசிரியன்.

23. வினு. அல்பெஜ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 954-1011 வரை பாத்து பட்டணத்துக்கு அருகிலுள்ள பெனிடிக்ட் சன்னியாச மடத்தின் மடாதிபதி; வின்செஸ்டர் பட்டணத்து கண்காணி; தென்மார்க்கர் படையெடுத்த காலத்தில் காந்தர்புரியின் சிரேஷ்ட அத்தியட்சர்; நற்குணமும் பரிசுத்த நடக்கையுமுள்ளவர். தெனமார்க்கர் இவரை காந்தர்புரியில் பிடித்து, சபையின் பொக்கிஷத்தைக் கொடுக்கமாட்டேனென்று மறுத்ததினுல் நெடுங்காலம் சிறையில்வைத்து நிந்தனைபண்ணி, கடைசியில் கிரீன்விச்சில் கொலைசெய்தார்கள். அவர் தேகம் பரி. பேதுருவின் ஆலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டு, பிறகு காந்தர்புரிகருக் கொண்டுபோகப்பட்டது.

24. வினு. ஜியார்ஜ் என்பவரைபபற்றி என்ன தெரியும்?

விடை. கீழசசபையில் இவர் பெரிய இரத்தச்சாட்சியென்று சொல்லப்படுகிருர்; 4, 5-ம் நூற்றுண்டுகளில் சீரியாவில் உண்டான சபைகளால் கனப்படுத்தப்பட்டவர். இவர் ஒரு ராணுவ உத்தியோகஸ்தனென்றும், கப்பதோக்கியாவில் பிறந்து 303ல் தியோகிளிஷியின் காலத்தில் நிக்கோமீதியாவில் இரத்தச்சாட்சியானுர் என்றும் ஒரு பாரம்பரியமுண்டு. இவர் தன்

பத்தைப்பற்றிய ராஜகட்டளையைக் கிழித்துப்போட்ட பாவிய னென்றும், அதினிமித்தம் வதையுண்டு கொல்லப்பட்டாரெ ன்றும் சொல்லியிருக்கின்றன. இவரைப்பற்றிய சரித்திரங் கள் எப்படி உண்டாயினவென்றும், இவர் இங்கிலாந்தோடு எப்படிச்சம்பந்தப்பட்டாரென்றும் தெரியாது. இங்கிலாந்தோடு சம்பந்தப்பட்டது சிலுவையுத்தம் முதற்கொண்டு" என்கலாம். ஆனால் பரி. ஜியார்ஜ் என்பவரின் பேர், வின்ட்ஸரில் ஒரு ஆலயத்தைக் கட்டின மூன்றாவது எட்வார்ட் ராஜா காலம்வரை யில் சரியானபடி பிரஸ்தாபமாகவில்லை.

MAY—மேய்.

25. வினா. மேமாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டா டப்படுகிறது?

விடை. சிலுவை கண்டெடுத்தல், பரி. யோவான் எண் ணெய்க்கொப்பரையில் போடப்பட்டது, டன்ஸ்டன், அகுஸ தீன், கனம்: பீட் என்பவர்கள் திருநாட்களே.

26. வினா. சிலுவை கண்டெடுத்தல் திருநாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. பெரிய கொன்ஸ்தந்தீன் ராயனுடைய தாயாகிய பரி. ஹெலனா என்னும் சக்கிரவர்த்தினி கர்த்தர் அறையப பட்ட சிலுவைக்காக எருசலேமில் தேடிப்பார்க்க சொப்ப னத்தில் சொல்லப்பட்டு பலஸ்தீனாவுக்குப் பிரயாணம்போய் கல்வாரிமலையைப் பரிசோதிக்கக் கட்டளைகொடுத்தாள். அப்படிச் செய்ததின்பேரில் மூன்று சிலுவைகள கண்டெடுக கப்பட்டன. கர்த்தர் அறையுண்ட சிலுவை எதுவென்று கண டறிய மகேரியஸ் என்ற எருசலேம்பட்டணத்துக் கண்காணி மூன்று சிலுவைகளாலும் தனித்தனியே ஒரு வியாதியஸ்தனைத் தொடவேணும்; எந்தச் சிலுவையினால் வியாதியஸ்தனைத் தொ டும்போது சுகமுண்டாகிறதோ அந்தச் சிலுவையே கர்த்தர் அறையுண்ட சிலுவையாயிருக்கவேணுமென்று யோசனை சொன்னார். அவர் யோசனைப்படியே வியாதியாயிருந்த ஒரு ஸ்திரீயை முதல் இரண்டு சிலுவைகளால் தொட்டு குணம் ஒன்றுமுண்டாகவில்லை; கடைசியாக மூன்றாவது சிலுவையி னால் தொடவே சுகமுண்டாயிற்று. அதின்பேரில் அதுதான் கர்த்தருடைய சிலுவை என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகை யினால் சக்கிரவர்த்தினி உயிர்த்தெழுதலின் ஆலயத்தை அதின் ஸ்தானத்தில் கட்டி, மெய்யான சிலுவையின் ஓர்பாகத்தை

அதற்குள் வைத்து, மீதியை ரோமாபுரிக்குக் கொண்டுபோய் அங்கே பரிசுத்த சிலுவைக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினாள் என்பதே இதைப்பற்றிய பாரம்பரியம். பிற்காலங்களில் இதைப் பற்றி கட்டுக்கதைகளும் உண்டாயின. ஆனால் பொதுவான சரித்திரம் யதார்த்தந்தானென்றும் மறுக்கப்படாத சத்தியத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அறியவருகிறோம்.

27. வினா. பரி. யோவான் எண்ணெய்க் கொப்பரையில் போடப்பட்டதைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இந்த நாளைப்பற்றிய விசேஷமென்னவெனில், தொமீஷியான் ராயனுடைய துன்பத்தில் வயதுசென்ற அப்போஸ்தலன் ரோமாபுரியில லத்தீன்வாசலுக்கு எதிரேகொதிக்கிற எண்ணெய்க்கொப்பரையில் போடப்பட்டாரென்றும், யாதொரு மோசமும் அடையாததினாலே இவர் மாயவித்தைக்காரனென்று எண்ணி, ராயன் இவரைப பத்முதீவுக்கு அனுப்பினான் என்பதுமே. ரோமாபுரியில் லத்தீன்வாசலுக்கு எதிரிலுள்ள பரி. யோவான் ஆலயம் அதி பூர்வமானது.

28. வினா. டன்ஸ்டன் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 924 – 980வரை சிரேஷ்ட அத்தியட்சராயிருந்தவர்; எட்வி, எட்கார் என்றவர்களின் காலங்களில் உண்டான துன்பத்தில் சபைக்காகவும், குருக்களுடைய துறவறத்துக்காகவும் விரதத்துவத்துக்காகவும் போராடி ஜெயங்கொண்ட வீரன்; சிரேஷ்ட அத்தியட்சரானபிறகு மெய்யாகவே இங்கிலாந்தின் மந்திரியும் அதிகாரியுமாயிருந்தவர்; கிளாஸ்டன்புரியில் கல்விகற்று அங்கேயே மடாதிபதியானார்; பிறகு வூர்ஸ்டர், லண்டன் என்ற பட்டணங்களின் கண்காணியும் 959ல் காந்தர்புரியின் சிரேஷ்ட அத்தியட்சருமானார். இவர் கெட்டிக்காரனும், அதிக படிப்பாளியும், மதாபிமானமும் உள்ளவர். இவர் தேவகாரியத்தில் எது சரியென்று விசுவாசித்தாரோ அதற்காகப் பாடனுபவிக்கிறவரும், மற்றவர்களைக் கண்டிப்பு செய்கிறவருமாயிருந்தார்.

29. வினா. காந்தர்புரி பரி. அகுஸ்தீனைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் ஒரு ரோமை சந்நியாசியும் சாக்சோனியருடைய குணப்படுதலுக்கு ஆதாரமுமாயிருந்தவர். இவர் 596ல் இங்கிலாந்தில் இறங்கி 597ல் எதல்பர்ட்ராஜாவுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 598ல் காந்தர்புரியின் முதலாவது சிரேஷ்ட

அத்தியட்சராக கால்தேசத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்டு, 604ல் அவருடைய மரணத்துக்குமுந்தி ரோசெஸ்டர், லண்டன் முதலிய அத்தியட்சாதீனங்களை ஏற்படுத்தினார். இங்கிலாந்தில் கிறிஸ்துமார்க்கத்தை ஸ்தாபித்தவரானதால் அங்கிலேயரால் கனப்படுத்தப்படுகிறார்.

30. வினா. பீட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் வெர்மௌத், யாரோ என்ற இடங்களின் சன்னியாசி; அங்கிலேய-சாக்சோனியசபையின் பெரிய குரு; பரிசுத்த நடக்கையும் அபூர்வ மனவிசாலமும் பொருந்தினவர். அங்கிலேய திருச்சபையின் சரித்திரம், பரிசுத்தவான்கள் இரத்தச்சாட்சிகள் என்பவர்கள் நடபடிகள், பழைய புதிய ஏற்பாட்டின் வியாக்கியானங்கள் சுயபாஷையில் மொழிபெயர்ப்பு இவை முதலானவைகளின் ஆசிரியனுமாயிருந்தார். அவர் மரிக்கும் அந்நாளில்கூட ஞானப்பாட்டுகள் சாஸ்திரபுஸ்தகங்களைத் திருப்பினதுமல்லாமல், பரி. யோவான் சுவிசேஷத்தையும் திருப்பிக்கொண்டிருந்தாராம். (Venerable.) வெனரபில் அதாவது, கனம்பொருந்திய என்கிற பேரை அவருடைய சமாதி சாசனத்தின்பேரில் ஒரு தேவதூதன் இடையில் சேர்த்ததாக பாரம்பரியமாய் சொல்லப்படுகிறது.

JUNE—ஜூன்.

31. வினா. ஜூன்மாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. நிக்கோமீத், பானிபாஸ், பரி. அல்பான், எட்வார்ட் ராஜாவின் மறு அடக்கம் என்ற நாட்களே.

32. வினா. நிக்கோமீத் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் நாள் கிரகோரியின் ஜெபமுறையில் கொண்டாடப்பட்டது. இவர் தொமீஷியான் ராயன்காலத்தில் தடியினால் அடிபட்டு இரத்தச்சாட்சியானாரென்று இவரைப்பற்றி சொல்லப்படுகிறது.

33. வினா. பானிபாஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் 600-755வரை இருந்தவர்; ஜெர்மானியாவின் அப்போஸ்தலன்; கிரெடிற்றனில் பிறந்து எக்ஸீற்றர் பட்டணத்தில் கல்விகற்று வின்செஸ்டருக்குச் சமீபத்திலுள்ள நட்ஷால்டிங்கில் சந்நியாசியாயிருந்தவர்; படிப்பினாலும் சாமர்த்தியத்தினாலும் கனம்பெற்றவர். ஜெர்மனி

தேசத்தில் கைஸ்மார் என்ற இடத்தில் உள்ள திவ்ய ,கருவாலி மரத்தை வெட்டி அற்புதஜெயதத்தோடு பிரசங்கித்து ஞான ஸ்நானங்கொடுத்தார். பிறகு மேயன்ஸ் என்ற புது அத்தியட்சாதீனத்துக்குக் கண்காணியாகி, மடங்களையும் அத்தியட்ச குரு விசாரணைஸ்தானங்களையும் ஏற்படுத்தினார். கடைசியாக 755ல் இரத்தச்சாட்சியானார்.

34. வினா. பரி. அல்பானைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் பிரித்தானியாவின் முதல் இரத்தச்சாட்சி என்கிற ஒரு பாரம்பரியமுண்டு இவரைப்பற்றிய விசேஷமென்னவெனில், துன்பகாலத்தில் தன்னிடம் அடைக்கலம் புகுந்திருந்த ஆம்பியேல்ஸ் என்கிற குருவானவரால் குணப்படுத்தப்பட்டார். ஆம்பியேல்ஸ் என்கிறவரை எப்படியாகிலும் பிடிக்கவேணுமென்று வெகு நுட்பமாய் தேடியபொழுது பரி. அல்பான் குருவானவரைத் தம்மிடம் இனி வைத்திருக்கக்கூடாமையினால், அவருக்குத் தமது உடுப்புகளைப்போட்டு இவ்வகையாய் தப்பிப்போகும்படி செய்தார். இது சீக்கிரத்தில் வெளியாகிவிட்டது. அதினால் ராஜாங்கத்தார் பரி. அல்பானைக் கூப்பிட்டுத் தங்கள் தேவர்களுக்குப் பலியிடச்சொன்னபொழுது அவர் மறுத்ததினால் அவர்கள் முதலில் கொடூரமாய் வதைசெய்து பிறகு கொன்றார்கள். இவர் மரணம் 303ல் தியோகிளிஷியான துன்பத்தில் சம்பவித்தது. இவர் இரத்தச்சாட்சியாய் மரித்த வெருலம் (Verulam.) என்றவிடத்தில் பிற்காலங்களில் எல்லாவற்றிலும் விசேஷித்ததாகிய பரி. அல்பானுடைய பெனிடிக்ட் சந்நியாசமடம் தோன்றிற்று. பரி. அல்பானின் கனத்துக்காகவே இந்த இடத்துமடாதிபதி பார்லமெந்துசங்கத்தில் உட்கார்ந்த எல்லா மடாதிபதிகளிலும் சிரேஷ்டமானவராயிருந்தார்.

35. வினா. எட்வார்ட் ராஜாவின் மறு அடக்கத்தைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இத்தினம் கார்பிகோட்டைக்குச் சமீபத்தில் ஒரு சேற்றுநிலத்தில் முதலில் அடக்கம்பண்ணப்பட்ட கொலையுண்ட எட்வார்ட் பாலிய ராஜனின் தேகம் அங்கிருந்து சாலிஸ்பரிக்குக் கொண்டுபோகப்பட்டு மறு அடக்கமானதைப் பற்றி நினைப்பூட்டுகிறது.

JULY—ஜூலாய்.

36. வினா. ஜூலாய்மாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. பரி. கன்னிமரியாள் சந்திப்பு, பரி. மார்த்தீனின் மறுஅடக்கம், சுவிதன், மருகிருதா, பரி. மசத்லேனு மரியாள், பரி. அன்னுள் என்றவர்கள் நாட்களே.

37. வினு. பரி. கன்னிமரியாள் சந்திக்கப்போனதைப் பற்றி என்ன தெரியும்?

விடை: கன்னிமரியாள் எலிசபெத்தைச் சந்திக்கப்போன நாள் பெரிய பிரிவினைகாலத்தில் 1389ல் ஆருவது அர்பான் என்ற பாப்புவினுல் நியமிக்கப்பட்டு, 1431ல் பாவில் என்ற கூட்டத்தில் நிச்சயப்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் உண்டான ஒரு திருநாள். இதின் நோக்கம் மரியாளைக் கனப் படுத்துவதினுல் தன் குமாரனைத் தன் விண்ணப்பத்தினுல் ஒப்புரவாக்கி, விசுவாசிகளுக்குச் சமாதானத்தையும் ஐக்கியத் தையும் உண்டாக்கவேண்டுமென்பதே.

38. வினு. பரி. மார்த்தீனின் மறு அடக்கத்தைப்பற்றி என்ன தெரியும?

விடை. இவர் சரீரம் அவர் மரித்த இடமாகிய காண்டியிலிரு ந்து 478ல் டூர்ஸ் பட்டணத்திலுள்ள பெரிய தேவாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. 371–397வரை டூர்ஸ்பட்டணத்துக் கண்காணியாயிருந்த பரி. மார்த்தீன் என்பவர் ஒரு ரோமை ராணுவ உத்தியோகஸ்தனின் குமாரன். அவர்தானே நாற் பது வயதுவரையிலும் ஒரு யுத்தவீரனுயிருந்தார். இவர் பாயிட் டியர்ஸ் பட்டணத்து பரி. இலாரி என்பவரின் மாணுக்க னும் சிநேகிதனுமாம். ஆரியானருககு விரோதமாகவும் கடைசியாக மீந்திருந்த அஞ்ஞானத்துக்காகவும் ஞானப்பழக்கம் பண்ணவேணுமென்று தைரியமாய்ப் போதித்து பிடிவாதமாய் சண்டைபண்ணியதால் அவர் கண்காணியாயிருந்த காலத்தி லும் யுத்தவீரனுக்குரிய வீரியத்தைக் காட்டினுர். இவர் தன் னுடைய அங்கியை ஒரு நிர்வாண பிச்சைக்காரனுக்குப் பகிர்ந்துகொடுத்த பெயர்போன கதையினுல் எல்லாராலும் நன்ருய் அறியப்பட்டிருக்கிருர். கர்த்தரே அந்த வஸ்திரத் தைத் தரித்திருந்ததாக ஒரு சொப்பனத்தில் கண்டு இத்தரிச னத்தினுல் கிறிஸ்துவண்டை குணப்படுத்தப்பட்டார்.

39. வினு. சுவிதன் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. சந்நியாசமடங்களுக்குரிய சீர்திருத்தல்களின் துவக் கத்திலும் ரோமாபுரியின் அதிகாரம் அதிகரிக்கத்தொடங்கின போதும் 838–862வரை வின்செஸ்டர் பட்டணத்துக் கண்

காணியாயிருந்தவர். மனிதர் தம்முடைய பிரேதக்கல்லறையில் நடக்கும்படியாக அத்தியட்சராலயத்துக்கு வெளியே தாம் அடக்கம்பண்ணப்படவேணுமென்ற அவருடைய விருப்பப்படிக்கே அடக்கம்பண்ணப்பட்டார். 912ல் மகாத்துமா வகுப்பில் சேர்க்கப்பட்டபிறகு அவருடைய பிரேதம் அத்தியட்சராலயத்துக்குள் ஒரு சிறு மண்டபத்தில் மறு அடக்கம்பண்ணப்பட்டது; இதினால் அவர் கோபமடைந்து மழையை வரவிட்டு நாற்பதுநாளாக வேலையை நிறுத்திவிட்டாரென்று பாரம்பரியமாய் சொல்லப்படுகிறது. ஆகையினால், பரி. சுவிதன்நாளில் பெய்கிற மழையானது பின்னால் நாற்பது நாளாக பெய்யப்போகிற மழையைக் குறிப்பாய்க் காட்டுகிறது என்பது சாமானிய விசுவாசம்.

40. வினா. மருகிருதாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவில் 278ல் இவள் இரத்தச்சாட்சியானதாகச் சொல்லப்படுகிறது. இவளைப்பற்றி அதிகமாய் ஒன்றுந் தெரியாது. ஆனால், ஒரு சர்ப்பத்தை மிதித்துக்கொண்டு அல்லது கிழித்துக்கொண்டு இருக்கிறதாகப் பாவிக்கப்படுகிறாள். இவள் மெய்யாகவே பலமுள்ளவாகளை வெட்கப்படுத்த பெலவீனரிலுள்ள விசுவாசபலத்துக்கு அத்தாட்சியாகக் கொண்டாடப்படுகிறாள்.

41. வினா. மகதலேனாள் மரியாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் திருநாள் 1549–ம் வருஷ ஜெபபுஸ்தகத்தில் விசேஷித்த சுருக்கஜெபம், நிருபவாக்கியம், சுவிசேஷவாக்கியம் உள்ள சிவப்பு எழுத்து பரிசுத்தவான் நாளாக இருந்தது. சுருக்கஜெபத்தில் இவள் தபசுக்கும் பாவமன்னிப்புக்கும் நல்ல மாதிரியாயிருந்தாளென்று சொல்லப்பட்டது. சுவிசேஷவாக்கியத்தில் கண்டிருக்கிற பாவியான ஸ்திரீ இவளென்று சொல்லப்பட்டது. மேற்குச்சபையில் பாரம்பரியம் இவள் லாசருவின சகோதரி என்று சொல்லிற்று; கிழக்குச்சபையின் பாரம்பரியம் இதற்கு வித்தியாசப்பட்டது மல்லாமல், பரிசுத்த வேதாகமத்தில் இப்படிச் சொல்வதற்கு ஆதாரமும் இல்லை. அவளிடத்திலிருந்து ஏழு பிசாசுகள் புறப்பட்டனவென்றும், அவள் ஆண்டவருக்கு அவருடைய ஜீவியத்திலும் சிலுவையண்டையிலும் கல்லறையண்டையிலும் ஊழியஞ்செய்தாளென்றும், ஆண்டவர் உயிர்த்தெழுந்த பிறகு அவரை முதலாவது தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றாள்

என்பதுமே வேதாகமத்தில் நாம் அவளைப்பற்றி அறிகிற விசேஷங்களாயிருக்கிறது.

42. வினு. பரி. அன்னுளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் கன்னிமரியாளின் தாயும் யோயாக்கீமினுடைய மனைவியுமாம். தள்ளுபடி ஆகமங்களினுல், நாம் அறிவது என்னவென்றால், இவளுக்கு வெகுகாலம் பிள்ளையில்லாதிருந்ததென்றும், விசேஷித்த வாக்குத்தத்தத்தினுல் இவளுக்குக் குழந்தை அற்புதப்பிறப்பாகப் பிறந்தது என்பதுமே. இவளுடைய பேர் வேதாகமத்தில் சொல்லப்படாமல் இருந்ததுமல்லாமல், 368ல் இருந்த எபிபானியஸ் என்பவருக்கு முந்தியிருந்த பூர்வ திருச்சபைப் பிதாக்களுக்குந் தெரியாதிருந்தது. யூஸ்த்தினியன் என்ற சக்கிரவர்த்தி ஆறும்நூற்றுண்டில் பரி. அன்னுளுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினுன்.

AUGUST—ஆகஸ்டு.

43. வினு. ஆகஸ்டுமாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. (Lammas Day.) லாமாவின்நாள், கர்த்தர் மறுரூபமானநாள், இயேசுவின் திருநாமநாள், பரி. லாரென்ஸ், பரி. அகுஸ்தீன், பரி. யோவானின் சிரச்சேதம் என்ற நாட்களே.

44. வினு. லாமாஸ்நாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. சாரம் ரோமைமுறைகளில் இந்த நாள் பரி. பேதுரு விலங்கில் இருந்த நாளென்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றிய கதை என்னவெனில், தியோடோஷியஸ் ராயனின் மனைவியாகிய யூடாக்ஸியாள் என்ற ராஜாத்திக்கு எருசலேமிலே பரி. பேதுருவுக்குப் போட்டிருந்த விலங்குகளை வெகுமதியாகக் கொடுத்தார்கள். அதை ராணி பாப்புவுக்கனுப்ப, பாப்பு அவைகளை ராயன் அப்போஸ்தலனுடைய கனத்துக்கென்று கட்டிய ஆலயத்திலே வைத்தாராம். இந்தப் பெயருக்கு அநேக உற்பத்திகளுண்டு. ஆனுல் அதிக உத்தமமும் நம்பப்படத்தக்கதுமானது. லோவ்-மாஸ் என்பது லாமஸ் என்று மறுவிவந்தது என்பதே. அதினர்த்தம் அறுப்பின் முதற் பலன்களைக் காணிக்கையாகக் கொடுத்தல் என்பதே.

45. வினு. கர்த்தர் மறுரூபமான நாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இந்த நாள் கிழக்குச்சபையில் 8-வது நூற்றுண்டி

லும் மேற்குச்சபையில் இதற்குமுந்தியும் கொண்டாடப்பட்டது. ஆனால் திருக்கர்கையினின்று பெல்கிரேட் என்ற இடத்தை 1457ல் மீட்டுக்கொண்டதை ஞாபகப்படுத்தும்படியாக மூன்றாவது காலிக்ஸ்டஸ் என்ற பாப்புவினால் உலகமெங்கும் கொண்டாடக் கட்டளையிடப்பட்டதே இதினாரம்பமாம்.

46. வினா. இயேசுவின் திருநாமநாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இது சாரமுறைஅட்டவணையிலிருந்து எடுக்கப்பட்டது. முற்காலத்திலே இது விருத்தசேதனத் திருநாளிலும், ரோமைச்சபையில் பிரசன்னத்திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறிலும் ஆசரிக்கப்பட்டது. மறுரூபத்தில் விளங்கிய நமது ஆண்டவருடைய மாட்சிமையில் இது சம்பந்தப்பட்டிருக்கிறது என்கிறதினாலேயல்லாமல், வேறே என்னகாரணத்தினால் இப்போது கொண்டாடப்படுகிறது என்று சொல்லுவது வருத்தம்.

47. வினா. பரி. லாரென்ஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் இரண்டாவது செஸ்டஸ் என்ற பாப்புவின் கீழ் ரோமைச்சபையின விசேஷித்த குருவாயிருந்தவர். அவருக்குப்பிறகு 258ல் வலீரியான் என்ற ராயன்காலத்தில் உண்டான் துன்பத்தில் இரத்தச்சாட்சியானார். இவரிடத்தில் ராயன சபையின் பொக்கிஷத்தைக் கேட்டபொழுது கொடுக்கமாட்டேனென்று மறுத்ததினால், இறைச்சிமுதலியதைச் சுடுங் கருவிபோலொத்த ஒரு இருபபுச்சட்டத்தில் சிறுதணலால் சுடப்பட்டார். இவர் சாகுந்தருணத்தில இப்படி வாதிக்கவேணுமென்ற கட்டளை கொடுத்த அதிகாரிக்கு நான் பொரிக்கப பட்டாயிற்று, இப்போது என்னைத் திருப்பிப்போடு என்றாராம். இவர் சாகுந்தருணத்தில் செய்த விண்ணப்பமே ரோமாபுரிமுழுவதும் குணப்பட்டதற்குக் காரணமாயிருந்ததென்று புருடென்றியஸ் என்பவர் சொல்லுகிறார். இவர் சாதாரணமாக உதவிகுரு உடுப்பு அணிந்து, கையில் இரத்தச்சாட்சிக்குரிய குருத்தோலையும் இருப்புச்சட்டமும் வைத்திருக்கிறவராகப பாவிக்கப்படுகிறார். இவருடைய பேர் 354-ம் வருஷத்தின அட்டவணையிலும், பெரிய கிரகோரி என்பவருடைய நற்கருணைமுறையிலும் காணப்பட்டது.

48. வினா. பரி. அகுஸ்தீன் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் 354–430வரை ஹிப்போபட்டணத்து பெரிய கண்காணியும் லத்தீன் வேதசாஸ்திரத்தின் பிதாவுமாயிருந்தார். கிறிஸ்துமார்க்க உபதேசத்தின்பேரில் விசேஷமாக நீதிமானுகுதல, தெரிந்துகொள்ளுதல் என்ற உபதேசங்களின்பேரில் மற்றெந்த நூலாசிரியரைப்பார்க்கிலும் அதிக பற்றுதலுடையவர். இவர் வடஆப்பிரிக்காவிலுள்ள டாகிஸ்டீ என்ற பட்டணத்தான். இளம்பிராயத்தில் கலைஞான மாணுக்கனும் வாக்கலங்கார உபாத்தியாயனுமாம். மாணிக்கேயர் முதலியவர்களுடைய கொள்கையைப் பற்றிக்கொண்டு பரிசுத்த நடசகையுள்ள தனது தாயாகிய மாணிக்கேயாளுடைய ஜெபத்தினுலே கிறிஸ்தவனுக வசப்படுத்தப்பட்டவர். அவர் தன்னுடைய குணப்படுதலைப்பற்றி தானே சொல்லுகிறது என்னவென்றால், தான் தன்னுடைய கடந்த காலத்தின் பாவமான ஜீவியத்துக்காகத் துக்கசாகரத்தில் மூழ்கினவனுயிருந்த ஒருநாளில், தான் குடியிருந்த வீட்டின் தோட்டத்துக்குப் போய் தன்னுடைய பாவங்களிலிருந்து விடுதலையாகவேணுமென்று ஊக்கமாய் ஜெபம்பண்ணினதாகவும், இப்படி ஜெபித்துக்கொண்டிருக்கையில் அடுத்தவீட்டிலிருந்த ஒருபிள்ளை எடுத்து வாசி என்று பாடின சத்தத்தைக் கேட்டாராம். பிறகு வீட்டிற்குத் திரும்பி பரி. பவுலுடைய நிருபங்களையெடுத்துத்திறந்தபோது வெறியிலும் களியாட்டிலுமல்லவென்று தொடங்குகிற (ரோம. 13. 13, 14.) வசனங்கள் அவர்கண்களுக்குத் தென்பட்டதாம். இப்படியாக பின்னுல் வந்த உயிர்த்தெழுந்த திருநாளில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். ஆனுல் மொத்தத்துக்கு இவர் பரி. அம்புரோஸ் என்பவரால் குணப்படுத்தப்பட்டவர். பிறகு குருவாகி 395ல் ஹிப்போபட்டணத்தின் கண்காணியாக்கப்பட்டு முப்பத்தைந்து வருஷம் அங்கே கண்காணியாயிருந்து 430ல் வந்தாலர் (Vandals) அப்பட்டணத்தை முற்றிகைபோட்டிருந்தபொழுது சுரத்தினுல் இறந்துபோனுர். அவருடைய அறிக்கைகளின் வல்லமையும், மாணிக்கேயர், பெலாகியர், ஆரியானர், டோனேற்றியா என்பவர்களின் கொள்கைக்கு விரோதமான அவருடைய பிரபந்தங்களின் ஆழ்ந்த வேதசாஸ்திரமும், அதிசயிக்கத்தக்க அவருடைய வேதவியாக்கியானங்களும், பிரசங்கங்களும், நிருபங்களும், தேவனுடைய நகரத்துக்கும் உலகத்தின் ராஜ்யத்துக்கும் உள்ள அவருடைய எதிருவமையும் கிறிஸ்தவராஜ்யத்திலுள்ள எல்லாருடைய இருதயத்தையும் மனதையும் பிரமிக்கச்செய்கிறதாயிருக்கின்றன. அவர் மரணப் படுக்கையில் இருந்தபொழுது மனஸ்தாபசங்கீதங்களை எழுதி

தன் கண்கள்முன்னே யதாஙகவைக்கவேணுமென்று கேட்டுக் கொண்டு அவைகளைப் பார்த்தபடியே ஜீவித்துப்போனார்.

49. வினு. பரி. யோவானின் சிரச்சேதநாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இந்த நாளின் ஆசரிப்பு மேற்குச்சபையில் அதிக பூர்வகாலந்தொடுத்து கொண்டாடபபடுகிறது. பரி. யோவான ஸ்நானன் சிரச்சேதம்பண்ணப்பட்ட நாளிலே அவர் பிறந்த நாளாகிய பெரிய திருநாளைக் கலவாமல், இரத்தச்சாட்சிகள மரணத்தை வழக்கமாய் ஆசரிக்கிறதுபோல கொண்டாடவேணுமென்கிற நோக்கததினுலேயே இப்படி பிரிககப்பட்டிருக கிறது.

SEPTEMBER—செப்டேம்பர்.

50. வினு. செப்தெம்பர் மாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. பரி. ஜைலஸ், யுனர்கஸ், கன்னிமரியாள் பிறப்பு, திருச்சிலுவைநாள், லாம்பர்ட், பரி. சிப்பிரியன், பரி. யெரோம் என்பவர்கள் நாட்களே.

51. வினு. பரி. ஜைலஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. ஏழாவது நூற்றுண்டிலுள்ள காலிக்கன் பரிசுத்தவான்; முதலில் துறவியாயிருந்து, பிறகு நிஸமீஸ-க்குச் சமீபத்திலுள்ள பரி. ஜைலஸ் என்பவருடைய பெயர்போன பெனிடிக்ட் சந்நியாசமடத்தைக் கண்டுபிடித்து விசிகாத்ஸ என்பவர்களின் ராஜாவாகிய பிளேவியஸ் என்பவனுல் துறவறத்துக்கு அழைக்கப்பட்டார். தன்னை வெறுத்தலில் அதிக வைராக்கியம் பாராட்டியதால் ஒருவிசை நற்செயலாய் நொண்டியானபொழுது சுகம் வேண்டுவதில்லையென்று சொன்னுர் என்கிற ஒரு பாரம்பரியத்தினுல் இவர் முடவர்களைப் பரிபாலிக்கிற பரிசுத்தவானுனுர். இங்கிலாந்தில் இவர்பேரால் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கிற 146 ஆலயங்கள் உண்டு. பரி. ஜைலஸ் என்பவர் பெனிடிக்ட் உடுப்பு அணிந்து கையில் அம்பினுல் குத்தப்பட்ட ஒரு இருதயம் வைத்திருக்கிறதாகப் பாவிக்கப்படுகிருர். இதைப்பற்றிய கதையென்னவெனில், இவர் காட்டிலே தபசுபண்ணிக்கொண்டிருந்தபொழுது ஒரு பழகின மான் அவருக்குப் பால்கொண்டுவந்து கொடுத்ததாகவும், மான் இவரிடத்திலே அடைக்கலம்புகுந்தபோது அதைத்

[illegible] ர்களால் கண்டறியப்பட்டாரென்ப [illegible]

52. விறு. யூனாகஸ [illegible] என்னை தெரியும்?

விடை. [illegible] பட்டணத் [illegible] கணகாணி, [illegible]

53 விறு [illegible] பற்றி என்ன தெரியும்?

விடை [illegible] கொண்டாட [illegible] 13, 14ம் [illegible] யில் [illegible] வாசகள [illegible] ஆசிரியின் [illegible]

54. விறு [illegible] என்ன தெரியும்

விடை. [illegible] சக்கிர [illegible] காதத்தினி [illegible] கதேச ராஜாவாகிய காஸ்ரோஸ என்பவன் எருசலேமைக் கொள்ளை யடித்து ஹெலெனு சக்கிரவாத்தினி அங்கே வைத்துப்போன சிலுவையின் பெரிய பாகத்தைக் கொண்டுபோனன் ஆகன மகிழ்ச்சியாயிருக்குங்காலங்களில் இதோடு பரியாசமாய் விளை யாடுவது வழக்கம் ஹெராகிளியஸ என்ற சக்கிரவாத்தி அவ னோடு யுத்தஞ்செய்து அவனைத் தோறகடித்து சிலுவையை மீட்டுக்கொண்டான். ஆனல், அவன் திரும்ப அதை ஜெய கோலமாய் எருசலேமுக்குக் கொண்டுவருகையில் நகரத்தின் வாசல்கள் அடைபட்டுப்போனதைக் கண்டான். மேலும் ராஜாதிராஜா மகிமையோடும் ஆடம்பரத்தோடும் இந்நகரத் துக்குள் பிரவேசியாமல், சாந்தமாயும் தாழ்மையாயும் கழுதை யின்மேல் ஏறினவருமாய் பிரவேசித்தாரென்று வானத்திலிருந்து ஒரு சத்தம் அவனுக்குச் சொல்லிற்று. இதின்பேரில் ராஜா இரங்கி வெறுங்காலால சிலுவையைத் தானே பிடித்துக் கொண்டு பிரவேசித்தான்.

55. விறு. லாம்பாட் என்பவரைப்பற்றி என்ன தெரி யும்?

விடை. இவர் எழாவது நூற்றுண்டில் யூட்ரிக்ட் பட்ட ணத்தில் கணகாணியாயிருந்தவர், அஞ்ஞானிகளுக்குச் சுவி

சேஷகன்; 709ல் ஹெரிஸ்டல்... பெப்பீன் எனபவ னிடத்தில் காணப்பட்ட தன் ... கதிநதுகொண்ட தினல் குரூரமாய் கொல்லப்பட்டான் சிலுவைமாதிரியாக கைகளை விரித்து முழங்கால்படியிட்டிருந்தபொழுது கொல்லப் பட்டார். இவருடைய கையில் குருத்தோலையும் பாதத்தில் ஒலே ஈட்டியும் இருக்கிறதாகப் படங்கள் ... இவர் தேகம் லீஜ் என்றவிடத்தில் மறு அடக்கம் பண்ணப்பட்டது. அந்தப் பட்டணத்து அத்தியட்சராலயம் ... யப்பட்டது.

56. வினு. பரி. சிப்பிரியனைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் 248–258வரை கார்த்தேஜ் பட்டணத்து சிரேஷ்ட அத்தியட்சர், அதிக படிப்பும் உயர்ந்த ... உடை யவர்; புருஷத்துவத்திலே குணப்பட்டு பின்பு ... ரத்தில் கணகாணியானர். வ... ரோமாபுரி மை... மைப் பாப்புவின் அதிகாரப் பாத்தியதைக்கு விரோதமாய் அத்தியட்சகருக்களின் உயர்வையும் அதிகாரத்தையும் மேற் குச்சபையிலே ஸ்தாபித்து நிலைப்படுத்தியவர். பியூரிட்டன் கொள்கைக்கு விரோதமாகவும், துன்பகாலத்திலே மறுதலித் துப்போனவர்களைத்-திரும்பச் சபையிலே சேர்த்துக்கொள்ளு தலைப்பற்றிய விஷயத்திலுள்ள அசட்டைக்கு விரோதமாக வும கண்டிப்புச் செயதவர். மேலும் ரோமாபுரி கண்காணியி னல் வெகு கண்டிபபாக எதிரக்கப்பட்டதும், பின்னணகாலத் தில் சபையின் அதிகாரததினல் தள்ளப்பட்டதுமான வேதப புரட்டரால் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு இரண்டாவது ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதின் அவசியத்தைப் பரி பாலனம் பண்ணியவர்; மட்டற்ற செல்வாக்கும் புகழும்பெற்ற அதிகாரி, அநேக பிரபந்தங்கள் செய்த ஆசிரியன். கடைசியாக 258ல் காலீரியஸ் என்ற ராயனுடைய காலத்திலுண்டான துன்பத்தில் இரத்தச்சாட்சியானர்.

57. வினு. பரி. யெரோம் என்பவரைப்பற்றி என்ன தெரி யும்?

விடை. ஒரிஜன் எப்படிக் கீழ்த்திசையில் கெட்டிக்காரனு யிருந்தாரோ அப்படியே யெரோம் மேற்குத்திசையில் கல்வி யில் நிபுணனுயிருந்தார். லத்தீன் பிதாக்கள் எல்லாரிலும் அறிவு மிகுத்தவர் இவர் ஒருவரே. இவருக்குக் கிரேக்க பாஷைமாத் திரமல்ல எபிரெய கல்தேயு பாஷைகளுந் தெரியும். இவர் பாநொனியாவிலுள்ள ஸ்டிரிடான் என்றவிடத்தில் பிறந்தார்;

இளவயதில் இலக்கணம்,'வாக்கலங்காரம் இவைகளில் உபாத்தி யாயராயிருந்தார்; ஞானஸ்நானம் பெற்றபிறகு காவல், ரோமை, கிழக்குமுதலிய இடங்களுக்குப் பிரயாணம்பண்ணி சால்சிஸ் என்ற வனாந்தரத்தில் சந்நியாசியாயிருந்தார்; கொன்ஸ் தந்திநோபுரியைப பார்த்தபிறகு ரோமாபுரியில் டாம்செஸ் என்ற பாப்புவின் ஆலோசனைக் கர்த்தாவாயிருந்தார்; அதற் கப்பால் கிழக்குக்குத் திரும்பி தம்முடைய ஜீவியத்தின் பிந்திய முப்பது வருஷங்களையும் ஏகாந்தத்திலும், பெத்லகேமில் படிப பிலும் செலவிட்ட இவள் தொண்ட[illegible]டிப்புள்ள குணமுடை யவர். [illegible] மூல[illegible]சொல்லப்படுகிறது[illegible]ருப்பிய வல்கேட் என்ற வத்தி[illegible] திருப்புதல் [illegible] அணிந்துகெ[illegible]லகளைவிட வெகு அரு மையானது. இவருடை[illegible]ாராட்டியத[illegible] வியாக்கியானங்கள், கடி தங்கள், காலத்[illegible]க்கும் [illegible]ம் உரிய இவருடைய பிர பந்தங்கள் அதிக மேம்[illegible] [illegible]ர். இவர் பக்கத்தில் ஒரு சிங்கமும், பாதத்[illegible]ல்[illegible] என்பவரைடு[illegible]ாப்பியுமுடைய பெரிய மனிதனுகப் பாவித்துப் பூர்வமிஷணதகைபபற்றி நல்ல கதை ஒன்று சொல்லப்பட[illegible]ட்டாளியுமா அவருடைய மூர்க்க குணத்தையும் கண்டிப்பன் என்பவருடகுறிக்கிறதாயிருக்கிறது. ஒருசாயந்திரம் பெத்லகே[illegible]ப்பரியமுடைய மடத்தின் வாச லில உட்கார்ந்துகொண்டிருந்தபொழுது 'ஒரு சிங்கம் ெ[illegible]ாண் டிக்கொண்டு அவரிடம வந்தது; ெயரோம் என்பவர் அதினருகே போய் அதின் காலைப பார்த்தபோது ஒரு முள்ளைக கண்டு அதைப் பத்திரமாய் எடுததுப்போட்டார். சிங்கம் அவருக்குத தனது நன்றியைக காட்டும்பொருட்டு அதுமுதல் அவருக்கே பணிவிடைசெய்தது எனபதே

OCTOBER—அக்டோபர்.

58. வினா. இந்த மாததததில் யார் யாருடைய திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. ரிமிஜியஸ், விசுவாசம், பரி. டெனிஸ், எட்வார்ட் ராஜாவின் மறுஅடக்கம், எத்தல்டிரிடா, கிறிஸ்பின் என்ப வர்கள் திருநாட்களே.

59. வினா. ரிமிஜியஸ் என்பவரைப்பற்றி எ[illegible] என்ன தெரி

விடை. 439–533வரை ரைம்ஸ்பட்டணத்து [illegible]யும: [illegible]ஷியருடைய ராஜாவாகிய கிளாவிஸ் என்

விசுவவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தபூட்ரிக்ட் பட்ட ணத்தில் கண்டாபிஷேகநாளில் பரிசுத்தநானிகளுக்குச் சுவி

ஷேகம்செய்வித்தார். இவர் பிராஸ்கியசபையின் சிரேஷ்ட அத்தியட்சராகி அதிக விருத்தாப்பியத்தில் 533ல் இறந்துபோனார்.

60. வினா. விசுவாசம் என்பவளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் ஒரு கன்னிகையும், தியோகிளிஷியான் தன் பததில் அக்கினியிற்றுணியாவில இரத்தச்சாட்சியுமானாளென்று ஒரு பாரம்பரியமுண்டு. இவளுடைய நாமத்துக்கென்று அநேக ஆலயங்கள் இங்கிலாந்தில் பிரதிஷ்டைசெய்திருக்கின்றன.

61. வினா. பரி. டெளவியாயிருந்து ப...பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் பிராஸியட்சராகிப் பரிபாலன பரிசுத்தவானும், உதவி கண்கா...07முதல் ம... நூற்றாண்டில் ஆரிலியான் காலத்திலுண்டானக்கிறது. இரத்தச்சாட்சியுமாம். பரி. பவுலினால் குணப... ...டன் என்பவனை... ...யம்பகியனை தியோ ளிசியு இவர்தானென்று ...தேகிக்கபபடுகிறது மல்லாமல், அத்தேனே... ...வல்ஸ் தேசத்... ...தலாவது கண்காணியென்றும் ஒரு பார... ...வுக்குச் ... மேலும் இவர் சிரச்சேதம் பண்ணப்பட்டபிறகு ... சிரசை தன் கைகளில் எடுத்துக்கொண்டு தான் அடைபபாறவேண்டிய இரண்டுமைல் தூரமுள்ள இடம்வரைக்கும் நடந்து, அபபுறம் கீழே போட்டுவிட்டாரென்றும் ஒரு பாரம்பரியமுண்டு.

62 வினா. எட்வார்ட் ராஜாவின் மறு அடக்கத்தைப்பற்றி என்னதெரியும்?

விடை. இவர் 1041–1066வரை அரசாண்டார். இந்த நாளில் விசேஷமேதென்றால், அவருடைய சொந்த மடமாகிய வெஸ்ட்மினிஸ்டரிலுள்ள பூர்த்தின கோவிலிலிருந்து பெக்கெட் என்னும் சிரேஷ்ட அத்தியட்சரின் பரிபாலனத்துக்குள்ளான மடத்திலுள்ள அதிக அலங்காரமான ஒரு கோவிலுக்குள் 1163ல் அவர் தேகம் மறு அடக்கமானதே. ...ம் நூற்றாண்டில், பரி. ஜார்ஜ் என்பவர் இவரைவிட சிரே... ...வரென்று மதிக்கப்பட்டதுவரையில் வேதசாட்சியிருந்தாரோ ...வார்ட் ராஜாவே இங்கிலாந்தின் பரிபாலனயில் நிபுணனாகப் போற்றபபட்டார்.

மிருத்தவர் இவ ...எத்தல்டிரிடாளைப்பற்றி என்ன தெரியும்?

திரமல்ல எபிடெ... பெயர்போன சாக்சோனிய பரிசுத்தவான். பாண்ணியாவிலும... ...ற்க்கு ஆஸ்கினியாராஜாவின் மகள். இரு

முறை கலியாணம்பண்ணியும், இருகலியாணங்களிலும் கன்னிமையைப் பாதுகாத்துக்கொண்டாள். வட ஊம்பிரியாவின் ராஜாவாகிய ஸைபிரிட் என்ற அவளுடைய இரண்டாவது புருஷனிடமிருந்து பிரிக்கப்பட்டு பெயர்போன வில்பிரிட் என்றவர் கைகளிலிருந்து முக்காட்டைப் பெற்றுக்கொண்டாள். பிறகு ஈலெபட்டணத்து மடத்துக்கு ஸ்தாபகத்தியும், கன்னிமடத்தலைவியுமானாள். அவளுடைய பரிசுத்தம், சந்நியாசம் முதலியவற்றைப்பற்றி பீட் என்பவர் முதலாவதாக எழுதியிருக்கிறார். இவள் தொண்டையில் புண்பட்டு செத்துப்போனதாகச் சொல்லப்படுகிறது. இதை அவள் தான் வாலிபத்தில் கழுத்தில் அணிந்துகொண்ட கழுத்தணியைப் பற்றி வீண்பெருமை பாராட்டியதற்குத் தண்டனையென்று உணர்ந்துகொண்டாள்.

64. வினா. கிறிஸ்பின் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. கால்தேசத்துப் பூர்வமிஷனரிகளில் ஒருவரும் பரி. டெனிஸ் என்பவரின் கூட்டாளியுமாம். 288ல் இவர் தமது சகோதரன் கிறிஸ்பினியன் என்பவருடன் சிரச்சேதம் பண்ணப்பட்டாரென்று ஒரு பாரம்பரியமுண்டு. இந்தச் சகோதரர்கள் பரி. பவுலைப்போல் தங்கள் சொந்தக்கைகளினால் சக்கிலியத் தொழில்செய்து ஜீவனம்பண்ணி, அந்தத் தொழிலுக்குப் பரிபாலன பரிசுத்தவான்களானார்கள். இந்த நாள் 1415ல் ஆக்கினிகோர்ட்டில் அடைந்த பெரிய ஜெயநாளாயிருக்கிறபடியால் இங்கிலீஷ் சரித்திரத்தில் அதிக முக்கியமான நாள்.

NOVEMBER—நவம்பர்.

65. வினா இந்த மாதத்தில் யார் யார் திருநாட்கள் கொண்டாடப்படுகிறது?

விடை. லியோனார்ட், பரி. மார்த்தீன், பிரிட்டியஸ், மெக்கூட்டஸ், இயூ, எட்மண்ட், சிசிலியா, பரி. கிளமெந்து, கத்தரீன் என்பவர்கள் நாட்களே.

66. வினா. லியோனார்ட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 599ல் மரித்த வேதசாட்சியும் கிளாவிஸ் ராஜாவின் தோழனுமாம். இவர் பரி. ரிமிஜியஸ் என்பவரால் குணப்படுத்தப்பட்டு பிறகு ஒரு சந்நியாசியும், லேமோகிஸ் என்றவிடத்துக்கு அருகிலுள்ள மடத்தின் தலைவனுமாம். இவர், முக்கியமாய் கைதிகளிடத்தில் உழைத்து, அரசனைக்கொண்டு அடிக்

கடி அவர்களை விடுதலையாக்கி, கைதிகள் சிறைகளுடைய பரி பாலன பரிசுத்தவானானார்.

67. வினா. பரி. மார்த்தீன் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. டூர்ஸ்பட்டணத்து கண்காணி. ஜூலைமீ 4உ பார்.

68. வினா. பிரிட்டியஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. டூர்ஸ்பட்டணத்து பரி. மார்த்தீனின் மாணாக்கரும், 397–414வரை அவருக்குப் பின்னான கண்காணியுமாம். இவர் பாலியத்தில் பெரிய பாவியாயிருந்து பரி. மார்த்தீன் என்பவரால் குணப்படுத்தப்பட்டவர். பிறகு இவர் நிந்தனைக்கு இரையாகி அவர் அதநியட்சராதீனத்திலிருந்து ஏழுவருஷம் நீங்கியிருந்து, திரும்ப 407முதல் மரணமட்டாக உழைத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

69. வினா. மெக்கூட்டஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் உவேல்ஸ் தேசத்தானான ஒரு பரிசுத்தவான். பிரித்தானியாவுக்குச் சமீபமான ஒரு அஞ்ஞானத்தீவில் சந்நியாசியாயிருந்து, பிறகு பிரித்தானியாவிலுள்ள ஆலெத் என்றவிடத்தில் 541–564வரை கண்காணியாயிருந்தார். ஆலெத் இடத்து அத்தியட்சாதீனம் பரி. மேலோ என்ற அவர் பேருக்கே மாற்றப்பட்டது.

70. வினா. இயூ என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 1186–1200வரை லின்கன் பட்டணத்துப பெரிய கண்காணி. இவர் கிரினோபில் என்றவிடத்தில் பிறந்து, 1181ல் இங்கிலாந்துக்கு முதலாவது கார்தூசிய மடாதிபதியாகக் கொண்டுவரபபட்டார். அவருடைய இஷ்டத்துக்கு விரோதமாய் லின்கன்பட்டணத்துக் கண்காணியாக்கப்பட்ட போதிலும் அவருடைய பூர்வ மடத்தை அடிக்கடி போய்ப் பார்த்துவந்தார். இவர் பரிசுத்தத்துக்கும், திறமைக்கும், உற்சாகத்துக்கும், உதாரகுணத்துக்கும் பெயர்போனவா. இவர் லின்கன்பட்டணத்து அத்தியட்சராலயத்தின் பெரிய பாகத்தைக்கட்டி, அங்கே பெரிய ஆல்ட்டருக்குப் பின்னால் உள்ள ஒரு சிறு அறையில் அடக்கம்பண்ணப்பட்டார்.

71. வினா. எட்மண்ட் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவர் ஒரு சாக்சோனிய பரிசுத்தவானும், 855–870

வனா கிழக்கு ஆஸ்கினியாவின் ராஜனுமாம். வீரமான சண்டைக்குப் பிறகு தென்மார்க்கரால் சிறைபிடிக்கபபட்டு, மார்க்கத்தை மறுதலிக்கமாட்டேனென்றும் சிறையாக இருக்க மாட்டேனென்றும் சொன்னதினால் அமபுகளினால் கொல்லப் பட்டார். அவர் தேகம் 903ல் கான்யூட் ராஜாவினால் பரி. எட்மண்ட் ஆலயத்துக்குக் கொண்டுவரபபட்டு மறு அடக்கம் பண்ணப்பட்டது.

72. வினா. சிசிலியாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் ஒரு ரோமைப் பெருமாட்டி. இவள் தன்னுடைய புருஷனாகிய வலீரியான் எனபவனைக் குணப்படுத்தினாள். தன்னுடைய மார்க்கத்தை மறுதலிக்கச் சொன்னபொழுது மாட்டேனென்றதினால் கொதிககிற தண்ணீரில் போடப்பட்டும் சாகாதிருந்தாள. அதினால் அவளைக் கொல்ல ஒரு கொலைக்காரனை அனுப்பினார்கள்; ஆனால் அவன் அவளுடைய பொறுமையான குணத்தைக் கண்டு பயமடைந்து, மூன்று குத்து குத்தி குத்துயிராகவிட்டு ஓடிப்போனான். ஆனால் அவள் மூன்றுநாள் உயிரோடிருந்து சாகுமட்டாக சங்கீதங்களும் பாட்டுகளும் பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய வீடு ஓர் ஆலயமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்றும் அதில் 500ல் ஒரு சங்கம் கூடிற்றென்றும் சொல்லப்பட்டிருககிறது. இவள் சங்கீதபரிபாலன பரிசுத்தவாளாக மதிக்கப்படுகிறாள். பெரும்பாலும் கையில் ஒரு வாத்தியமும் வெள்ளை ரோஜாபுஷ்பததினால் செய்யப்பட்ட ஒரு மாலையும் வைததிருககிறதாகப பாவிக்கப்படுகிறாள். ரோஜாமாலை என்னத்தைக் குறிக்கிறதென்றால், ஒரு சமயத்தில் இவள் புருஷன் வெளியேபோயிருந்து வீட்டுக்கு வந்தபொழுது வெகு கவர்ச்சியுள்ள வாததியங்களைக்கேட்டான். அவள் அறைக்குப் போய் நிறத்திலும் வாசனையிலும் வாடாததும், ஆனால் அவிசுவாசிகளின் கண்களுக்கு அதரிசனமானதுமான பரதீசிலுள்ள புஷ்பங்களினால் செய்யப்பட்ட இரண்டு ரோஜாபுஷ்ப கிரீடங்களைக் கையில் வைத்துக் கொண்டு அவள் அருகே நின்ற ஒரு தேவதூதனைக் கண்டான். தேவதூதன் இவைகளைக்கொண்டு சிசிலியா, வலீரியான் என்ற இருவரையும் முடிசூட்டினான் என்பதே. 821ல் பாஸ்கல் என்ற பாபபு இவளுக்கு ஒரு ஆலயததை முதலாவதாகக் கட்டி, அங்கே அவளுடைய தேகத்தை மறு அடக்கம்பண்ணி நித்திய துதியடங்கிய ஒரு ஆராதனையை நியமித்தார்.

73. வினா. பரி. கிளமெந்தைப்பற்றி என்ன தெரியும்?

விடை. ஐரனியூ சொல்லுகிறபடி முதலாம் நூற்றாண்டில் பரி. பேதுருவின் மரணத்துக்குப் பிறகு ரோமாபுரியின் மூன்றாவது கண்காணியாம். ஐசேபியுஸ் என்கிறவர் கி. பி. 100ல் அவர் கழுத்தில் நங்கூரத்தைக் கட்டி கடலில் தள்ளினார்கள் என்று சொல்லுகிறார். ஓரிஜன்காலம் முதற்கொண்டும் அதற்குப்பிந்தின காலங்களில் எல்லாம் சொல்லப்படுகிற பாரம்பரியம் என்னவென்றால், இவர் பரி. பவுலின் உடன்வேலையாளாகிய கிளமெந்து என்பதே. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இவர் நிருபம் ஆழ்ந்த கருத்தும் சரித்திரத்துக்கடுத்தவிஷயத்தில் அதிக பிரயோஜனமுமுள்ளது. அது கிறிஸ்தவ ஜெபமுறைக்கு முதல் மாதிரியாகிற ஒரு சிறந்த ஜெபத்துடன் முடிகிறது.

74. வினா. கத்தரீனாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் அலெக்சந்தரியாபட்டணத்துக் கன்னிகையும் இரத்தச்சாட்சியுமாம். நாலாவது நூற்றாண்டின்துவக்கத்தில் மாக்சிமியஸ் என்ற சக்கிரவர்த்திக்கு முன் கொண்டுவரப்பட்டு, அப்பட்டணத்து அஞ்ஞானப் புலவரை ஜெயமாகக் கண்டிததாள். சக்கிரவர்த்தியின இச்சைக்கு இடங்கொடுக்கமாட்டேனென்று மறுத்ததினால் ஆணியடிக்கபபட்ட சக்கரத்தின்பேரில் வைத்து வாதிக்கப்பட்டு கொல்லப்பட்டாள். அதுமுதல் லௌகீக ஞானத்தின் பரிபாலினியாக மதிக்கப்படுகிறாள். தேவதூதர்கள் இவளுடைய சரீரத்தையெடுத்து சீனாய்மலைக்குக் கொண்டுபோனார்களென்று ஒரு கதை சொல்லப்படுகிறது.

DECEMBER–டிசேம்பர்.

75. வினா. இந்த மாதத்தில் யார் யார் திருநாள் கொண்டாடப்படுகிறது?

விடை. நிக்கொலாஸ், கன்னிமரியாள் உற்பவித்தநாள், லூசி, ஓசாப்பியென்ஷியா, சில்வெஸ்தர் என்பவர்கள் நாட்களே.

76. வினா. நிக்கொலாஸ் என்பவரைப்பற்றி என்ன தெரியும்?

விடை. 342ல் மரித்த லீசியாவிலுள்ள மீராபட்டணத்துக் கண்காணியாம். அவருடைய பரிசுத்தத்தையும் தர்மத்தையும் பற்றிய கீர்த்தியையல்லாமல்இவரைப்பற்றி வேறொன்றும் தெரியாது. இவர் சரீரம் 1087ல் மகம்மதியர் அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்களென்கிற பயத்தினால் இத்தாலியாவிலுள்ள பாரி என்னும் இடத்தில் மறுஅடக்கம்பண்ணப்பட்டது. இவர் வியாபாரிகள், கப்பலாட்கள், பையன்கள், விசேஷமாக அனாத

பிள்ளைகள் முதலியவர்களைப் பரிபாலிக்கும் பரிசுத்தவாளும். என்னமுகாந்தரத்துக்கென்று தெரியாது. பொதுவாக ஐரோப்பா விலெங்கும் பிள்ளைகள் இவரைக் கனம்பண்ணவேணுமென்று கற்பிக்கப்படுகிறார்கள்.'

77. **வினு.** கன்னி மரியாள் உற்பவித்தநாளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இது கன்னி மரியாளின் பிறப்புடன் சம்பந்தப் பட்ட ஒரு திருநாளாம். பாவமில்லாத பிறப்பு என்ற கொள்கை பிரபல்லியமானதே இதற்குக் காரணம். அந்தத் திருநாளைப்போ லவே இதுவும் மேற்குச்சபையைவிட கிழக்குச்சபையிலே அதி பூர்வகாலந்தொடுத்து கொண்டாடப்பட்டது. இது இங் கிலாந்துக்கு பரி. ஆன்செலம் என்பவராலே கொணடுவரப் பட்டபோதிலும் 15-ம் நூற்றாண்டுவரையில் கட்டாயமாயிருக் கவில்லை.

78. **வினு.** லூசி என்பவளைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இவள் சரகூசா என்ற இடத்தாள். நாலாவது நூற் றாண்டில் தியோகிளிஷியான் காலத்தில் வதையினால் இரத்தச் சாட்சியானாள் என்று ஒரு பாரம்பரியமுண்டு. இவளுடைய சரித்திரம் பரி. ஆக்னீஸ், அகத்தா என்பவர்களுடையதைபோ லவே இருக்கிறது.

79. **வினு.** (O Sapientia) ஆ ஞானமே என்ற கீதத்தைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இது இந்த நாள்முதல் பரி. தோமாவின் நாள்தவிர டிசெம்பர்மாதம் 23உ வரைக்கும் மரியாளின் கீதத்துக்குப் பதி லாக ஏழு விசேஷித்த ஆன்றிபோன் (Antiphous) என்ற மாறி மாறி பாடும் ஞானப்பாட்டுகள் பாடப்பட்டன என்பதைக் குறிக்கும். இவை நமது ஆண்டவருக்குப் பாடப்பட்ட தொ டர்ச்சியான பாட்டுகளாயிருந்தது. அவையாவன: ஓ ஞானமே, ஓ கர்த்தரே, ஓ ஈசாயின் வேரே, ஓ தாவீதின் திறவுகோலே, ஓ விடியற்கால வெளிச்சமே, சர்வ ஜாதிகளின் ராஜனும் விருப்பமுமானவரே, ஓ இம்மானுவேலே என்பதே.

80. **வினு.** சில்வெஸ்தர் என்பவரைப்பற்றி என்ன தெரி யும்?

விடை. இவர் 314-335வரை ரோமாபுரியின் கண்காணி. தியோகிளிஷியான் காலத்தில் உண்டான துன்பத்தில் குருவா

யிருந்து ஜீவியஞ்செய்தார். இவருக்கிருந்த சுகத்தாழ்ச்சியினி மித்தம் கிரேயூக்கூட்டத்துக்கு வரக்கூடாமையாயிருந்தபோதி லும், இந்தக் கூட்டத்தின காலத்திலும் மேற்கண்ட இடத்துக கண்காணியாயிருந்தார். சரித்திரத்துக்கடுத்த விஷயமாய் இவ ரைப்பற்றி ஒன்றுந் தெரியாது. ஆனலை மத்திய காலங்களில இவர் கொன்ஸ்தந்தீன் ராயனுடைய பெயர்போன தானத்தைப பெற்றுக்கொண்டவர் என்று கீர்த்திபெற்றிருந்தார். 8, 10–ம் நூற்றாண்டுகளுக்கிடையில் உண்டானதும் சக்கிரவர்த்தியுடை யதென்று சொல்லபபடுவதுமான ஒரு கள்ளக் கையெழுத் துள்ள சாசனம் ராயன் ராஜதானியைக கொன்ஸ்தந்திநோபுரி க்கு மாற்றியபொழுது மேற்குராஜ்யத்தின் அதிகாரம் முழுவதை யும் பாபபுவுக்கும அவா பின்னடியாருக்கும் கொடுத்துவிட் டாரென்றும் ராஜ அந்தஸ்துக்குள்ள எல்லா வெளிபபடை யான ராஜசின்னங்களை அவர்களுக்கே கொடுத்து ராஜாவின் கட்டளையினுல் நிருபிக்கபபட்டுபபோயிற்று என்றும் அந்தச சாதனம் சொல்லுகிறது.



VII. CHAPTER.

THE WEEKLY AND DAILY WORSHIP IN THE EARLY CHURCH.

The differences between the First and Second books of Edward the VI Annotations of all the parts that constitute the Morning and Evening prayers The division and devotional character of the Psalms The reading of the two lessons. An explanation of the Creed and Collects, &c.

ஏழாம் அதிகாரம்.

காலைமாலை ஜெப ஒழுங்கைப்பற்றியது.

1. வினு பூர்வ கிறிஸ்தவர்கள் வாரத்தின் எந்த நாளில் எந்த நோக்கத்தோடே கூடி தேவாராதனை செய்ய வருவார்கள்?

விடை. குறித்த ஒரு நாளிலே ஆதிகிறிஸ்தவர்கள் கூடி வருகிற வழக்கமுண்டென்று பிளினி (Pliny) [illegible] றுன். அந்த நாள் ஞாயிற்று கிழமையென்று இரத்தசாட்சியாகி ய (Justin) யுஸ்தீன் அறிவித்திருக்கிருர். அந்நாளிலே பட் டணத்திலாவது தேசத்திலாவது குடியிருக்கப்பட்ட [illegible]

தரவெல்லாம் ஒன்றுகூடி வேதவாக்கியங்களை வாசித்து ஜெபங்களைப்பண்ணி புத்திமதிகளைக் கேட்கிறதுமல்லாமல் பரி. நற்கருணையையும் வாங்கிவருவார்கள்.

2. வி'னு.* யூதருடைய ஓய்வுநாளுக்குப் பதிலாக கர்த்தருடைய நாள் ஆசரிக்கப்பட்டுவருவதற்கு ஆதாரமுண்டா?

விடை. யூதருடைய ஓய்வுநாளுக்குப் பதிலாக கர்த்தருடைய நாளை ஆசரிக்கவேண்டுமென்று (Ignatius) இக்னேஷியஸ் கற்பித்திருக்கிறார். ஆனால் இவ்வேற்றுமைக்கு புதிய ஏற்பாட்டில் பிரத்தியட்சப்பிரமாணங் காட்டப்படாதிருந்தும் அப்போஸ்தலருடைய வழக்கம் அதனை உறுதிப்படுத்துகிறது. Acts xx, 7. 1 Cor. xvi. 2. Rev. i. 19. Mat. xxviii. 1. Mark xv. 29. John xix. 26, 20.

3. வினு. இவ்வேற்றுமைக்கு முகாந்தரமென்ன?

விடை. கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த நாள் வாரத்தின் முதலாம் நாளாயிருப்பதாலும், பரிசுத்தாவியானவர் இந்நாளில் தானே அப்போஸ்தலர்மீது இறங்கினதாலும் உண்டாயிற்றென்கலாம். யூதருக்குள் வழங்கிவந்த ஓய்வுநாள் மாறிபோய் அதற்குப்பதிலாக கிறிஸ்துமார்க்க ஓய்வுநாள் நியமனம்பெற்றதால் அவர்களுடைய ஏற்பாடு முடிவடைந்ததென்பது வெளியரங்கமாயிற்று.

4. வினு. பூர்வசபையில் கர்த்தருடைய நாள் ஆசரிக்கப்பட்ட விதத்தைப்பற்றி முதலாவதாக சாட்சிபகர்ந்திருக்கிறதார்? அதற்கும் நாம் இப்பொழுது அதை அனுசரித்துவருகிறதற்கும் சம்பந்தமுண்டா?

விடை. கர்த்தருடைய நாளில் கிறிஸ்துவானவருக்கு ஆராதனை செய்யப்பட்ட விதத்தைப்பற்றி (Justin) யுஸ்தீன் என்பவரே முதலாவதாகச் சாட்சிபகர்ந்திருக்கிறார். அவர் சொல்லிய விசேஷங்களால் நம்முடைய வழக்கம் ஏறக்குறைய அக்காலத்து வழக்கத்துக்கு ஒத்திருக்கிறதென்று விளங்குகிறது.

5. வினு. ஆதிக்கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் நடப்பித்த ஆராதனையொழுங்கைப்பற்றி யுஸ்தீன் என்பவர் உரைத்திருக்கிறதென்ன?

விடை. பழைய புதிய ஏற்பாட்டாகமங்களிலிருந்து தகுந்த பாடங்கள் வாசிக்கப்பட்டபிற்பாடு அவைகளின்பேரில் குருவானவர் பிரசங்கமொன்றைச் செய்வார்; பிற்பாடு இயந்தப்

பட்ட முறைமைப்படி ஜெபங்கள் செய்யப்படும்; ஜனங்கள் ஆமென் என்று பின்னுரைப்பார்கள்; இதன்பிறகு கர்த்தருடைய இராப்போசனமும் பரிமாறப்படும், தர்மகாணிக்கையுஞ் சேர்க்கப்பட்டு குருவானவர்வசம் ஒப்புவிக்கப்படும். கடைசியாக சமாதானமுத்தி கொடுக்கப்பட்டு ஜனங்கள் அனுப்பிவிடப்படுவார்கள். பின்பு வியாதியினாலாவது வேறெவ்வித அவசியமுகாந்தரத்தாலாவது இராப்போசனம் வாங்கத் தடைப்பட்டவர்களுக்கு பிரதிஷ்டையாகின அப்பத்தையும் ரசத்தையும் உதவி-குருமார் கொண்டுபோய்க் கொடுப்பார்கள்.

6. வினா. பூர்வகிறிஸ்தவர்கள் வாரத்தின் மற்றநாட்களில் ஆராதனைக்கென்று கூடிவருதலுண்டா? தினசரியாராதனையைப் பற்றி ஜெபபுஸ்தகத்தில் விதிக்கப்பட்டிருக்கிற கட்டளை என்ன?

விடை. மற்றநாட்களிலும் அவர்கள் கூடிவந்ததுண்டு. இதறகினசவாய் ஜெபபுஸ்தகத்தில் தன் சேகரக்கோவிலில் பணிவிடைசெய்துவருகிற குருவானவர் ஸ்தானத்தில் இல்லாமையினாலாவது வேறெவ்வித முகாந்தரத்தினாலாவது தடைப்பட்டாலொழிய, தினசரி மணியடித்து ஜனங்களோடு காலையிலும் மாலையிலும் வேதத்தைவாசித்து ஜெபம்செய்யவேண்டுமென்று கற்பிக்கப்பட்டிருக்கிறது.

7. வினா. பழைய பிரவேரி ஜெபமுறையில் ஏழு ஜெபவேளைகளைப்பற்றி (Canonical Hours of Prayer) செய்யப்பட்ட ஒழுங்கென்ன?

விடை. 1. நாக்டர்ண் (Nocturns or Matins) ராத்திரி.
2. பிரைம் (Prime) காலை 6 மணி.
3. டியர்ஸ் (Tierce) காலை 9 மணி.
4. செக்ஸ்து (Text) மதியம் 12 மணி.
5. நோன்ஸ் (Nones) மாலை 3 மணி.
6. வெஸ்பர்ஸ் (Vespers) மாலை 5 மணி.
7. கம்பிளைன் (Compline) மாலை 6 மணி.

கிறிஸ்தவர்கள் துன்பகாலங்களில் சத்துராதிகளுக்குப் பயந்து மாலை ஜெபத்தையுங் காலை ஜெபத்தையும் அர்த்தராத்திரிக்குப் பின் ஒன்றாய் நடத்திவந்தார்கள்

8. வினா. மேற்சொன்ன ஏழு நேரங்களையும் ஆதிகிறிஸ்தவர்கள் என்ன முகாந்தரத்தையிட்டுத் தெரிந்துகொண்டார்கள்?

விடை. அந்தி சந்தி மத்தியானவேளைகளிலும் நான் தியா

னம்பண்ணி முறையிடுவேன் என்று சங். 55. 17-ம் வாக்கியத்தி லும், ஒரேநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன் என்று சங. 119. 164-ம் வாக்கியத்திலுஞ் சொல்லியபடிக்கும், அப்போ ஸ்தல ஏற்பாடு (Apostolical Constitutions) என்ற புஸ்தகத்தில் சொல்லியபடிக்கும் நமது ரட்சகருடைய பாடுகளை நினைவு கூரும்படியாகத் தெரிந்துகொண்டார்களென்று எண்ணலாம் அவர் ராத்திரியில் கட்டப்பட்டார், காலை 6 மணிக்கு இகழ்ச் சியடைந்தார், காலை 9 மணிக்கு மரணதீர்ப்படைந்தார், மதி யம் 12 மணிக்கு சிலுவையிலறையப்பட்டார், மாலை 3 மணி க்கு அவருடைய விலா குத்துண்டு திறக்கப்பட்டது, மாலை 5 மணிக்குச் சிலுவையிலிருந்து இறக்கி 6 மணிக்குக் கல்ல றையில் வைத்தார்கள். பத்தியுள்ள அநேக குருமாரும சபை யாரும் இந்த மணிநேரங்களைத் தியானவேளையாக வழங்கி வரு கிறார்கள்.

9. வினு. காலைஜெபஒழுங்கு ஒரே ஆராதனை முறைமைதானு?

விடை. ஆதிச்சபையில் வழங்கினதும காலைஜெபத்துக்கே உரிமைப்பட்டதுமான முறைமையோடுகூட விடியாவிஜெ பம், நற்கருணை ஒழுங்கு எனனும் முறைமையுஞ் சேர்ந்து வழங்கப்படுவதால் காலை ஜெபமுறைமையானது இரு ஆரா தனை முறைமையுள்ளது. திருச்சபை சீர்திருத்தல் நடந்தேறின 100 வருஷங்களுக்குள்ளாகவே இவ்விரு ஆராதனையொழுங்கு களும் ஒரேமுறைமையாகச சேர்க்கப்படலாயின என்று தோன் றுகிறது.

10. வினு. 6-ம் எட்வார்டின் முதலாம் புஸ்தகத்தில் காலை மாலை ஜெப ஒழுங்கு எப்படித் துவக்கிற்று? அது திருத்தலான போது கூட்டப்பட்டவைகளென்ன?

விடை. 6-ம் எட்வார்டின் முதலாம் புஸ்தகத்தில் காலைமாலை ஜெபஒழுங்கு கர்த்தருடைய ஜெபத்தைக்கொண்டு துவக் கினதால் பிரேவியருக்கும் பூர்வ திருச்சபைவழக்கத்துக்கும் ஒற்றுமைபொருந்தினதாயிருந்தது. ஆனல் திருச்சபை சீர்திருத் தல் நடப்பித்தவர்களுக்கு அது துவக்குகிற முறையாகத் தோன் றாமல் திடீரென்று ஆரம்பித்ததாக புத்தியிற்பட்டதால் 1552ல் ஜெபபுஸ்தகத்தைத் திருத்தினபோது வேதவாக்கியங்களையும் ...தாவான எச்சரிப்பையும் பாவ அறிக்கையையும் பாவவி மோசனத்தையுங் கூட்டி ஆரம்பச்சீருடன் அதைச் சிறப்பித் தார்கள்.

11. வினா. இந்தக கூட்[illegible] தகமையுள்ள[illegible] தருமா?

விடை. சந்தேகமறத [illegible] படுமுறைஆரம்பத்தில் கண்டி ருக்கும் வேதவாககியங [illegible] [illegible]ட்டையும் [illegible] படுதலின் அ.வசியத்தை [illegible]டசால் மனதுக்கு [illegible] யைககொடுதது பின்வரும [illegible] சம்மை ஆயத்தப படுத்தத்தல, வை. அவ் [illegible] குருவான சபையாரை அன்புடன [illegible] சர்வ வல்லமையுள்ள தேவனி [illegible] பண்ணும் படி எச்சரிப்பு வழுததும [illegible] வருமே கோபித்து பாவ [illegible] அவ்வறி [illegible] படி உண்மையாய்க கு [illegible] விசுவாசி [illegible] றவர்களுக்கு குருவான [illegible] இணக்கக்கேடுள்ளதென் [illegible]

12. வினா. காலை மா [illegible] கியங்கள் மிகவும் உக [illegible] சில [illegible] ஷங்களைச் சொல்லு?

விடை. ஆராதனைக்குக் கூடிவந்திருக்கும் நாலுவகைச் சபை யாரில் ஒவ்வொருவரையும உத்தமகுணபபடுதலுககு வழி எழுப்பிவிடும்பொருட்டு அவாகளுககுச் சொல்லத்தகக எச்ச ரிப்புகளுஞ் செய்யபபோகிற ஜெபஆராதனையில் மனமொன்றி நிற்பதற்கு இருதயத்தை நேராகச் சீராகப் பண்பாக பககுவப் படுத்தத்தக்க புததிபோதனைகளும இவ்வாக்கியங்களில் உண்டு. வகைவிபரப்படி இவைகளைக கோத்துப் பார்ககுமிடத்தில் இவைகளில், (1) தேவகோபத்துக்கு மிகுதியும் அஞ்சிப பயங் கரததால் பிடியுண்டிருககும் பேருக்கு மனோகரத்தை தரத்தகக ஆறுதலான வாககியங்களுணடு (சங. 51. 11, 19; 14. 3, 2. எரே. 10. 24)

(2) பாவமன்னிப்புக் கிடைக்குமோ என்று பேதலித்து சந்தேகத்தால் தனக்குள்ளே உழன்று மறுகிநிற்கும் பாவிக்கு அவனுடைய மனஐயங்களையும் குழப்பஙகளையும் நீக்கித் திட நிச்சயம் அளிககத்தக்க ஆரோககிய வாக்கியங்களுண்டு. (9. 9, 10 Luke 15. 18, 19.)

(3) பாவத்தைப்பற்றித் தன்னறிவில்லாமலும் அதால்வரும் மோசத்தைப்பற்றி தகுமுணர்வில்லாமலும் அதற்கு தப்பத்தக்க வாகுவழியின்பேரில் கரிசனங்கொள்ளாமலும் அறிவீனத்தால் மோசம்போகும்பேருக்கு நல்லறிவைக் கொடுக்கத்தக்க நற்போ தக வாக்கியங்கள் உண்டு. (1 யோ. 1. 8, 9. எசே. 18. 27.) ய

(4) குணப்படுதலைப்பற்றி கவலைப்படாமல் தெம்பாயி ருக்கும் அசட்டைக்காரருக்கு எச்சரிப்பைக் கொடுக்கத்தக்க எழுப்புதலான வாக்கியங்களுமுண்டு. (சங். 4. 5. Matt. 3. 2.)

(5) உத்தமபத்தியும் ஒடுக்க வணக்கமுமின்றி மாயமாயும் வெளிவேஷமாயும் பாவஅறிக்கைசெய்யும் பாவிகளை கடிந்து கொள்ளத்தக்க புத்திமதிவார்த்தைகளுமுண்டு. (யோவேல்.2. 13.)

13. வினா. இவ்வாக்கியங்களுக்கும் பின்வருகிற எச்சரிப் புக்கும் சம்பந்தம் என்ன?

விடை. பின்வரும் எச்சரிப்பு முன்னிற்கும் வாக்கியங்க ளுக்கு விருத்தியுரையேயல்லாது வேறல்ல. இது குருவாக்கும், அவை திருவாக்குமாயிருப்பதன்றி இது அவைகளை பிரித துரைப்பதுபோல் அவை இதற்கு அனுமதிகொடுக்கின்றன.

14. வினா. குருவானவரால் கூறப்படும் எச்சரிப்பின் பொரு ளடக்கத்தை வகுத்துக்காட்டு.

விடை. பின்வரும் பாவஅறிக்கைக்கு நமது மனதை நேராக் கத்தக்க இவ்வெச்சரிப்பில் ஆறு காரியங்களுணடு. அவை யாவன:-

(1) பாவஅறிக்கை செய்வதற்கான அழைப்பு. "நாம் செய்த பலவித பாவங்களையும் அறிக்கையிட தேவவசனம் பற்பலவாக கியங்களால் நம்மை ஏவுகின்றது." (2) பாவத்தை மறையாமல அறிக்கையிடுவதற்கான எச்சரிப்பு. "நம்முடைய பரமபிதாவா கிய அவருடைய சன்னிதிக்குமுன்பாக மாயமாய் மறைத்துக் கொள்ளாமல்" (3) அவ்வறிக்கை செய்யத்தக்கவிதம் "பணி வுந் தாழ்மையுந் துக்கமுமுள்ள இருதயத்தோடே" பாவத்தால் எவ்வளவு ஈனராயிருக்கிறோமென்றும் தேவனுடைய சமுகத் தில் நாம் எவ்வளவு நிர்ப்பந்தரும் அபாத்திரருமாயிருக்கிறோ மென்றுங் காட்டத்தக்கதாகப் பணிவுந் தாழ்மையுமுள்ள இருத யம் அவசியம். செய்தபாவங்களுக்காகத் துயரப்பட்டு தெய்வெற் றினமான மனஸ்தாபமடையவும் இனிமேல் பாவஞ்செய்யாமல் உறுதியாய்த் தீர்மானம்பண்ணிக்கொள்ளவுந் தக்கதாக துக்க முள்ள இருதயம் அவசியம். தேவனுடைய கற்பனைகளுக்கு அமைந்து நடந்துவரும்படி கெட்டியாய்த் தீர்மானம்பண்ணிக் கொள்ளத்தக்கதாக கீழ்ப்படிதலுள்ள இருதயம் அவசியம். (4) அவ்வறிக்கையைச் செய்யும் நோக்கம். "தேவனுடைய அளவில் லாத தயவினாலும் இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறு வதற்காக." (5) அவ்வறிக்கை செய்யத்தக்க சமயங்கள். "நாம்

எக்காலத்திலும் அறிக்கையிடவேண்டும்." (6) முடிவுரையாகச் சபையாரை வருந்திக்கேட்டுக்கொள்ளுங் கோரிக்கை. சுத்த இருதயத்தோடும் (1 Tim. 2. 8. Psalm 66. 18.) தாழ்ந்த சத்தத்தோடும் (Heb. 12. 28.) பரமகிருபாசனத்தருகே வந்தால் இவ்விஷயத்தில் யூதரைப்பார்க்கிலும் நமக்கு அதிக சலாக்கியமுண்டு. ஏனென்றால், ஆசாரியன் தேவாலயத்துக்குள் பிரவேசித்தபொழுது இவர்களும் அவரோடுகூட பிரவேசிக்கக்கூடாமல் வெளிப்பிராகாரத்தில் இருக்கவேண்டியது. நாமோ குருவானவரோடேகூடச் சேர்ந்து ஜெபிக்க சலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

15. வினா. நாம் ஆராதனைக்குக் கூடிவருகிற நோக்கத்தைப் பற்றி இவ்வெச்சரிப்பில் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. இதைப்பற்றி நான்கு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன:-(1) நாம் தேவனுடைய திருக்கரங்களினாலே பெற்றுக்கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக தோத்திரஞ்செலுத்துவது. தோத்திரஜெபங்களுஞ் சங்கீதங்கள் பலதும் இந்த நோக்கத்துக்கு ஒத்துவரும். (2) மிகவுஞ் சிறந்த அவருடைய புகழைப் பிரசித்தம்பண்ணுவது, சங்கீதங்கள், ஞானப்பாட்டுகள், கீர்த்தனைகள், பிரார்த்தனைகள்முதலியவை இதற்கொக்கும். (3) அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்பது (1 & 2 Lesson) 1, 2-ம் பாடங்கள், சங்கீதங்கள், நிருப சுவிசேஷவாசகங்கள் முதலியவை இதற்கு ஒத்துநிற்கும். (4) நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டியவைகளை வேண்டிக்கொள்வது, சுருக்கஜெபங்கள் லித்தானியா முதலிய பல விண்ணபபமுறைமைகள் இதற்கு ஒத்திருக்கும்.

16. வினா. இந்த நோக்கங்கள் நான்கும் பயன்படும்பொருட்டு உத்தம குணப்படுதல் அவசியமென்று வேதவாக்கியங்களால் மெய்ப்பி.

விடை. துதிக்கிறது செம்மையானவர்களுக்கடுத்ததாயிருக்க உத்தம குணப்படுதலற்றவர்கள் கர்த்தரைத் துதிக்க அபாத்திரர். (Psalm 33. 1). பரிசுத்தமானவைகளை நாய்களுக்குமுன்போடுவது அடாததாயிருப்பதுபோல் உத்தம குணப்படுதலற்றவர்கள் தேவவசனத்தைக் கேட்க அபாத்திரராயிருக்கிறார்கள் (Matt. 7. 6). பாவிகளை தேவன் கேட்கிறதில்லையென்கிறதும் ஒருவன் தெய்வபத்தனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனையே கேட்கிறாரென்பதுஞ் சாதாரண சத்தியமாயி

ருக்க, குணப்படாத மற்ற பாவிகளின் ஜெபம் அவருக்கு அரு வருப்பாகவேயிருக்கும்.

17. வினா. எச்சரிப்பைக் கூறுவதில் குருவானவர் சபை யாரை எப்பெயரால் அழைக்கிறார்? இப்பெயர் உகந்ததுதான் என்று காட்டு?

விடை. பிரியமான சகோதரர் என்ற நாமத்தினால் அழைக்கி றார். பரி. பவுல் இப்பெயரால் கிறிஸ்தவர்களை அழைத்திருப்ப தே இதற்கு ஆதாரமெனக்கலாம். (Philip. 4. 1.) இப்பெயா வழங் கப்பட்டிருப்பது மிகவுந் தகுதிதான். ஏனென்றால் தேவனு டைய வசனத்தைப் போதிக்கும் குருக்கள் தங்கள்விசாரணைக்கு ஒப்புவிக்கபபட்ட சபையார்பேரில் எவ்வளவு பட்சமும் உய்த மும் பாராட்டவேண்டுமென்று இது காண்பிக்கிறது. (2) Ephes. 4. 15ல் சொல்லியபடி சிநேகத்தில் உண்மையாயிருந்து சுவி சேஷபோதகர் பிரசங்கிக்கும் உபதேசங்களைச் சபையார் சாந் தமாயும் உற்சாகமாயும் கேட்பதற்காக இப்பெயர் அவர்களை உற்சாகப்படுத்தி எழுப்பிவிடத்தக்கது. (3) ஆராதனையைச் செ லுத்தும் குருவானவருக்கும் அவரோடுசேர்ந்து ஆராதிக்கும் சபையாருக்கும் அவ்வாராதனையை நடப்பிக்கும் கடவுளுக்கும் உண்டாயிருக்கப்பட்ட சம்பந்தத்தைக் காண்பிக்கத்தக்கது. நம் மெல்லாருக்கும் ஒரே பிதாஉண்டு; அவருக்குள் நாமனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரராயிருக்கிறோம். நம்மெல்லாருக் கும் ஒரே காரியகர்த்தருண்டு; பிரியமானவர் என்னப்பட்ட அவ ருக்குள் நாம்பிரியமான சகோதரராயிருக்கிறோம். திருச்சபைக்கு ஒன்றான சிரசு கிறிஸ்துவானவரே; இவருக்குள் நாமனைவரும் அவயவங்களாயிருக்கிறோம். குடும்பம் ஒரு குடும்பந்தான். ஆராதனையுந் தேவாராதனைதான். பரத்தில் அவ்வாராதனையை நடப்பிக்கிற பரமவாசிகளின் கூட்டமுண்டு. (4) ஞானஸ்நான உடம்படிக்கையை நமக்கு ஞாபகப்படுத்தத்தக்கது. (5) மாம்சபி ரகாரமும் உலகாசாரப்பிரகாரமும் உண்டாயிருககப்பட்ட இன ஜன, மேல்கோத்திர வேற்றுமைகள் என்னென்னவுண்டோ அதையெல்லாம் அகற்றிப்போடத்தக்கது. (6) விசுவாசப்பிரமா ணத்தில் நாம் அறிக்கையிடுகிற பரிசுத்தவான்களின் ஐக்கியம் விளங்கும்படி செய்யத்தக்கது.

18. வினா. பாவஅறிக்கையை குருவானவருஞ் சபையாரும் சேர்ந்து உரைப்பதற்கும் அதை உரைக்குஞ்சமயததில் முழங்கா லில் நிற்பதற்கும் ஆதாரமென்ன?

விடை. உள்ளத்தில் மிகுந்த பணிவைப் பிறப்பிக்கத்தக்கதும்

உண்டாயிருக்கும் பணிவைப் பாராட்டுதற்கேற்றதுமான நிலை முழங்காற்படியிட்டிருப்பதுதான். புவியிலுள்ள போராட்ட சபையில் இவ்வழக்கம் நடப்பிக்கப்பட்டுவந்ததற்கு பல திருஷ்டாந்தரங்களுண்டு (1 இரா. 4. 54. 2 நாளா. 6 அதி. சங் 95. 6. தானி. 6. 10. லூக். 22 அதி. அப். 19. 40. ஏசா. 45. 23. எபே. 3. 14.). பக்தியுள்ள வெற்றிசிறந்த சபையிலும் இவ்வழக்கம் நடந்தேறிவருகிறதாக வாசிக்கிறோம (வெளி. 7. 11.). பெலட்சயம், வியாதிமுதலிய தகுந்த காரணத்தால் முழங்காற்படியிடாமலிருப்பது குற்றமல்லவென்றாலும் அசதி, அசட்டை, சோம்பல் முதலிய காரணத்தால் அப்படியிருபபது குற்றந்தான்.

19. வினு. எச்சரிப்பு கூறப்பட்டபின்னும் பாவஅறிக்கை செய்யப்படு முன்னும் கவனித்துக்கொள்ளத்தக்க ஒழுங்கென்ன?

விடை. சபையார் பரவஷ்டத்தனமின்றி தகுந்த அமைதலோடும் ஒடுக்கவணக்கத்தோடும் உட்கருத்தான தியானத்தோடும் சர்வவல்ல கடவுளுககுமுன்பாகப பணிவாய் முழங்காற்படியிடவும் செய்யபபோகிற ஆராதனையை மனத்தெளிவோடும் தாராளத்தோடும் நன்மேனையாய் நடபபிததுக்கொள்ளவும போந்த சமயமுமுண்டாயிருககததக்கதாக குருவானவர் எச்சரிப்புக் கூறியபின் சற்றுநேரம தாமதிதது வாசிபபை நிறுத்தியிருபபது உத்தமம்.

20. வினு. பொதுவான பாவஅறிககையில் எத்தனை பங்குளுண்டு?

விடை. பாவசங்கீர்த்தனமும் கிருபைக்காக விண்ணபபமுமாக இரணடு பங்குகளுணடு. முந்தினதில் நாம் செயதிருககும் பாவங்களைப்பற்றிய பொதுவானஅறிககை அடங்கியிருக்கிறது. நாம் எவைகளைவிட்டு வழிதப்பினோமென்றும் எவைகளை நத்திப்பற்றிக்கொண்டோமென்றும் எவைகளை வெறுத்து விரோதித்தோமென்றும் முந்தியெடுததுரைத்து, இந்தடவாய் நாம் நடத்தின கருமங்களேயும் அவற்றால் விளைந்த பலனையும் அறிக்கையிடுகிறோம். பிந்தின பங்கில் நாம் முன்னறச் செய்த பாவங்களுக்கு மன்னிப்பையும் இனிமேல் பாவஞ்செய்யாதிருக்க கிருபையையும் அனுக்கிரகிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் தேவன் அருளிய வாக்குத்தத்தங்களை முன்னிட்டே இவைகளை வேண்டிக்கொள்ளுகிறோம்.

21. வினா. இவ்வறிக்கையில் தப்பிப்போன ஆடுகளை போல் எனபது யதார்த்தமாய்க் கண்டிருககிறதென்று காண்பி

விடை. ஆடானது மந்தையைவிட்டு எளிதாய் வழிதப்பி அலையத்தக்கதும் தப்பியபின் திரும்ப மந்தையை வந்து சேர மாட்டாததுமானது. எதிரிக்கும், நாய், நரி, ஓநாய், கடுவாய் முதலிய துஷ்டமிருகங்களினுடைய வாயினின்று தன்னை தற் காத்துக்கொள்ளச் சத்துவமற்றதுமான ஜெந்து. பாவிகளின் நிலைமையைக் காட்டுவதற்கு இது எற்ற உபமானந்தான். இப் படியே வேதாகமத்திலும் வழஙகபபட்டிருக்கிறது (சங். 100. 2, 23. 1 John x. 1, 5. Psalm 119. 176. Isaiah 53. 6.)

22. வினா. வழுவியலைந்து என்றும் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் என்றும் சுகமேயில்லை என்றும் சீர்பபடுத தும் என்றும் தேவபக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் என்றும் இவ்வறிக்கையில் வழங்கியிருக்கிற வாசகங்களின் கருத்தைச் சொல்லு.

விடை. வழுவுதல்என்பது அறிவீனத்தாலாவது பெலவீனத் தாலாவது கவனத்தாழ்ச்சியாலாவது பாவத்தை நடப்பிப்பதை யும், அலைதல்என்பது மனதாரவும் துணிவோடும் தேவ கற்பனை களை மீறி அவ்வழியில் நெடுகிலும் நிலைத்திருப்பதையுங்குறிக் கும். யோசனைகள் என்பது சுயஞானத்தாலும் உபாய தந்திரங களாலும் நடப்பிக்கும் பாவங்களையும், விருப்பங்கள் என்பது சீர்கெட்ட நமது சுபாவ விருப்பஙகளையும் இச்சையாலெழும் பும் சோதனைகளையும் குறிக்கும். சுகமேயில்லை என்பது பாவ வியாதியால் நமக்குண்டாயிருக்கும் சீர்கேட்டையுஞ் சுக ஈனத்தையுங் குறிக்கிறது. சீர்ப்படுத்தும் என்பது அழிந்து நிர் மூலமாய்க் கிடக்கும் பட்டணத்தைத் திரும்பவும் எடுப்பித்துக் கட்டி சீர்ப்படுத்துவதுபோல பாவத்தால் மேனிகுலைந்து பரி சுத்த குறைச்சலாகி பழுதுபட்டுப்போயிருக்கும் ஆத்துமத்தைப புதுப்பித்து ஜோடித்துச் சீர்ப்படுத்துவதைக் குறிக்கும். தேவ பக்தி என்பது தேவனுக்குச் செலுத்தவேண்டிய கடமை களில் பாராட்டும் பக்தியையும், நீதி என்பது பிறருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளில் பாராட்டும் நேர்மையையும், தெளிந்த புத்தி என்பது பொதுப்பட எக்காரியத்திலும் தன் னடக்கமும் இச்சையடக்கமும் மேனாயுந் தாழ்மையுமாய் நாம் நமது ஆவியையும் தேகத்தையும் ஆண்டு நடத்திக்கொள்வதை யும் குறிக்கும்.

23 வினா ஆராதனை துவககுமுன் எல்லாரும் ஆஜராய்வநது கூடாதிருபபதால விளையும தீமைகளென்ன?

விடை (1) தேவ நாம மகிமைககு அதால குறைச்சலுணடாகும. ஆராதனைககு வழககமாயப பிந்திவருகிறவாகள கடவுளுககு ஏறற மரியாதை செலுததாதவாகளும அவருககுச செலுததும ஆராதனையில பததிவைராககியமறறவாகளுமாய் இருககிறாாகள, பாவ அறிககை செயயவும பாவவிமோசனம பெறவுங குருததருடைய ஜெபததைச சொலலவுந திரிததுவ கீாததனையைப பாடவுங கூடிவராமல், இடையில வருவது ஒழுஙகுபேதததுககும ஒழுககததாழசசிககும இடமாயிருபபதுமனறி தேவமகிமைககுப பினனமாகுமே (2) பிறருககும கெடுதியுணடுபணணுவதாயிருககும வாலிபரும கவலைததாழசசியுளளவாகளுமாயிருபபவாகளில மேலெழுசசியைப பிறபபிபபதிலும மனததிாககமறறவாகளை சிநதையில கலஙகடிபபதிலும உததம புததிமானகளாயிருபபவாகளை முதலாய அவாகள கவலைககுட்படுததுவதிலும பிறருககுக கெடுதிசெயகிறதாயிருககும. இதுவுமனறி மறறவாகளும பததியில அனலறறு ஆராதனைககு வருவதில அசதியை அடையததககதாக துனமாததிரியாயிருககும. (3) இபபோபபட்டவாகள தஙகளுககே கெடுதியை வருததிககொளளுகிறாாகள. ஏனெனறால் யாதொரு ஆராதனையில யாதாமொரு பஙகில ஆஜராயிராது போவதுதானே குறைசசல மேலும ஆராதனையைச சீராய நடபபிககததககதாக அதை நேராகத துவககிககொளளாதே போவதுங குறைசசலதானே மேலும இது தேவமகிமைககுக குறைசசலேயானால நமககுக் கெடுதிதானே. ஏனெனறால நம்மைக கனமபணணுகிறவாகளை நாம (1 Sam. ii. 30.) கனமபணணுவோம எனகிறா இதுவுமனறி இது பிறருககுக கேடுவருததுவதால நமககுங கெடுதிதானே அநேகரை நீதிமானகளாககினவாகள என்றைககும நடசததிரஙகளைபபோல பிரகாசிபபாாகளேயானால (Dan xii 3) பிறருககு இடறல் வருததினவாகளின ஊசறபடியில பாவம படுததிருககும. பரி. பவுல கொரிநது சபையாருககு எசசரிததுப புததி போதனை வருததியிருககுமாபபோலும (1 கொரி 8. 9) அவா தாமே. நடநதுகொணடாபபோலும (1 Cor 8. 13) நாம் நடநது கொளவது அவசியம.

24. வினா பாவ அறிககைச் செய்தலைப்பற்றி இ[illegible] சபை ஒப்புககொண்டிருக்கிற [illegible]

யத்தின்பேரில் இதற்கும் ரோமான்சபையாருக்கும் இருக்கப்பட்ட விகற்பமென்ன?

விடை. தேவன் ஒருவர்தவிர பாவமன்னிப்புக் கொடுக்கத்தக்கவர் யாருமில்லை; ஆதலால் (Luke v. 21.) தேவனிடத்தில் நமது பாவங்களை அறிக்கையிட திருச்சபையால் கற்பிக்கப்படுகிறோம். பாவியானவன் ஆலோசனையையும் ஆறுதலையுமடைந்து, அமைந்த மனச்சாட்சியுள்ளவனுயிருக்கும் பொருட்டு குருவானவரிடத்தில் தன் பாவங்களை அறிக்கையிடுவது நற்செய்கையாகத் திருச்சபையால் புகழப்பட்டிருந்தாலும் அவனவன் சித்தச் சோக்கே அதற்குப் பிரமாணம். ரோமான்சபையோ இதற்கெதிரிடையாக குருவானவரிடத்தில் தனித்துச் செய்யும் பாவ அறிக்கையை சாதாரணமாய் நிலைநிறுத்தி பொதுப்பாவ சங்கீர்த்தனத்தை அகற்றி முந்தினதை அக்கடமையென்று சாதித்து அதைச் சாக்கிரமெந்துக்களில் ஒன்றென்று போதித்து கற்பனை வழுத்தியிருக்கிறது.

25. வினு. இங்கிலாந்துசபையில் பாவ அறிக்கை ஜெபங்கள் செய்யப்பட்டிருக்கிற விதமென்ன?

விடை. காலை மாலை ஜெபங்களிலும் நற்கருணைமுறைமையிலுமுள்ள பாவ அறிக்கைகள் பொது ஆராதனைக்கேற்கும்பொருட்டு பொதுமொழிகளால் சோக்கப்பட்டிருக்கின்றன. பொருள் நிறைவும் வார்த்தைக் குறைவுமுள்ளவை. தனித்து ஒவ்வொருவனும சாதாரணமாய்ச் சொல்லத்தக்க தன்மையுள்ளவைகளுமாயிருக்கின்றன.

26. வினு. பாவவிமோசனஞ்செய்யும் அதிகாரத்தை அப்போஸ்தலமார் நமது ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டு நிறைவேற்றி தங்கள் பின்னடியாருக்குக் கையளித்துவரவில்லையா?

விடை. கட்டுதல் அவிழ்க்குதல் (மத். 16. 19; 18.18.) அல்லது மற்றொரு இடத்தில் தெளிவுறக் கூறப்பட்டிருக்கிறபடி பாவங்களை மன்னித்தல் (John. 20. 22, 23.) என்ற வார்த்தைகளில் பாவவிமோசனஞ்செய்யும அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு சந்தேகமில்லை. இந்த அதிகாரத்தை அப்போஸ்தலர் பெற்றுப் பாராட்டி மற்றவர்களுக்குங் கையளித்துவந்தார்கள். (Acts 2. 38. 2 Cor. 2. 10; 5. 18. Gal. 4. 9.)

27. வினு. நமது சபையில் குருமாரால் செய்யப்படும் பாவவிமோசனம் ஆதிக்கப் பாராட்டமுள்ளதோ? மத்தியஸ்தமுறை

மைக்கடுத்ததோ? உன் கொள்கைக்கு ஜெபபுஸ்தகத்தில் கண்டிருக்கிற பாவவிமோசனமுறைமைகள் ஒத்திருக்கிறதெப்படி?

விடை. குருமாருக்கு அளிக்கப்பட்டிருக்கிற இந்த ஊழியம் ஆதிக்கம் பாராட்டுதலாகவல்ல, கூறியறிவிக்குந் தன்மையையுந் தானுபத்தியமுறைமையும்பாத்தியஸ்தருக்குச்சொல்லத்தக்க தன்மையுள்ளதாகவும் மதிக்கப்படும்(1 Authoritative, 2 Declaratory, 3 Ministerial). ஜெபபுஸ்தகத்தில் கண்டிருக்கிற பாவவிமோசன முறைமைகளில் காலை மாலை ஆராதனைக்கும் நற்கருணைக்கும் அடுத்தவைகளில் அர்த்தம் தெளிவற விளங்கியது. ஒழுங்குப்பிரகாரம் பட்டம் பெற்ற குருமார் முந்தினதில் பாவவிமோசனங்கூறி அறிவிக்கிறதாயிருந்தாலும் குணப்பட்டு விசுவாசிகளானோருடைய பாவங்களைத் தேவனே மன்னிக்கிறதாக அதில் ஐயமற உரைக்கப்பட்டிருக்கிறது. தானுபதி முறைமையுற்ற இரண்டாவதில் நற்கருணைக்குச் சேருகிறவர்களுக்குத் தேவன் பாவங்களை மன்னித்து விடுதலையளிப்பாரென்ற ஊக்கமும் உறுதியுமுள்ள நற்கருத்தும் விருப்பமும் காட்டப்படுகிறது. மூன்றாவதில் வியாதியஸ்தரைச் சந்தித்து எனக்கொப்புவிக்கப்பட்டிருக்கிற அவருடைய அதிகாரத்தினால் உனது பாவங்களெல்லாவற்றையும் விமோசனஞ்செய்கிறேன் என்று உரைக்கப்பட்டிருப்பது ஆதிக்கப் பாராட்டமாகத் தோனறினாலும், அவ்வதிகாரம் தானுதிபத்திய முறைமைக்கடுத்ததும் அவ்விமோசனம் குணப்படுதலையும் விசுவாசத்தையும் அடுத்து நிற்பதாகவும் பாத்தியஸ்தருக்குச் செல்லத்தக்க தன்மையுள்ளதெனவுந் தரும்.

28. வினா. இங்கிலாந்துசபையில் வழங்குகிற பாவஅறிக்கையும் பாவவிமோசனமும் ரோமான்சபை முறைமையிலிருந்து எடுக்கப்பட்டதா?

விடை. அல்ல. பிரஸ்பித்தீரியன் வகுப்பைச்சேர்ந்த புரோடெஸ்டான்டர் சொன்ன ஆலோசனையின்பேரில் இயற்றப்பட்ட இவை 4-ம் Edwardன் இரண்டாம் புஸ்தகத்தில்தான் முதலாவதாகக் கண்டிருந்தது. பாவவிமோசனமானது (Calvin) கால்வினின் பட்டத்தில் வந்த பொல்லேறுவினால் (Pollarus) செய்யப்பட்டதும் பாப்புமார்க்கத்துக்கு முற்றிலும் எதிரிடையானதுமாயிற்று.

29. வினா. பாவவிமோசனக்கூறலில் இங்கிலாந்துசபைக்கும், ரோமான்சபைக்கும் உண்டாயிருக்கிற விகற்பமென்ன?

விடை. ரோமான்மார்க்கவழக்கப்படி பாவவிமோசனமானது அந்தரங்கத்திலும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியேயும் பாத்தியஸ்த நிலைவரத்தோடும் நேர்மையாயும் குருவின் நாமத்தினாலும் கொடுக்கப்படும். இங்கிலாந்துசபையில் அது வெளியரங்கமாயும் எல்லாருக்கு ஒருமிக்கவும் பாத்தியஸ்தத்தின்பேரிலும் மூலியமாயுந் தேவநாமத்தினாலுங் கூறப்படும்.

30. **வினா.** பாவவிமோசனத்திலடங்கிய பொருளென்ன?

விடை. முகவுரையாக தேவன் சர்வவல்லமையுள்ளவரானதால் பாவங்களை மன்னிக்க அவரால் கூடுமென்றும் அவர் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவானதால் பாவியினுடைய மரணத்தை விரும்பாமல் அவன் தன் அக்கிரமத்தை விட்டுத்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறாரென்றும் அப்படியானதால் அவர் தமது ஜனத்துக்கு பாவவிமோசனத்தையும் மன்னிப்பையுங் கூறியறிவிக்கத் தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும் கட்டளையையும் அருளிச்செய்திருக்கிறாரென்றுஞ் சொல்லியிருக்கிறது. பின்வருவதில் இரண்டு விசேஷங்களுண்டு. அவையாவன:—(1) மெய்யானகுணப்படுதலும் உத்தமவிசுவாசமுமுள்ளவர்களுக்குப் பாவமன்னிப்பு கிடைக்குமென்று அறிவிப்பு; (2) அவ்விரண்டையும் நமக்குக் கட்டளையிட பரிசுத்தாவியின கிருபைக்காக நாம் ஜெபிக்க வேண்டுமென்ற புத்திமதியுந்தானே.

31. **வினா.** பாவவிமோசனங்கூறும் அதிகாரத்தைப்பற்றி எதிரிடையான இரண்டு கொள்கைகளென்ன? இவ்விரண்டுக்கும் விபரீதமான யதார்த்த உபதேசமெது?

விடை. பாவங்களை நியாயதுரந்தரமாய் மன்னிக்கும் அதிகாரம் குருமாருக்குண்டென்று ரோமான்சபையார் சொல்லுவார்கள். உத்தம மனஸ்தாபமுள்ள பாவிகளுக்கு மன்னிப்பைக் கூறவாவது கொடுக்கவாவது குருமாருக்கு அதிகாரங் கையளிக்கப்பட்டிருக்கிறதில்லையென்று பிரிவினைக்காரராகிய சொசதேரியார் சொல்லுவார்கள். இங்கிலாந்துசபையின் உபதேசமோ இவ்விரண்டையும் தழுவாமல் வேதோபதேசத்தையே சார்ந்து நிற்கிறது. அதாவது, பாவமன்னிப்பு கூறும் அதிகாரத்தைக் கிறிஸ்துவானவர் தம்முடைய பணிவிடைக்காரருக்குக் கையளித்திருக்கிறாரென்பதும், அவ்வதிகாரப்படி அவர்கள் பாவவிமோசனம் கூறினாலும் தேவனுக்குக் கருவிகளாகமாத்திரமிருந்து அவருடைய நாமத்தினால் கூறுகிறார்களேயல்லாது மற்றப்படி யல்லவென்றும், கூறப்படும் விமோசனமானது

எல்லாருக்குமல்ல, உத்தமகுணப்படுதலும் மெய்விசுவாசமு முள்ளவருக்கே பலிக்கத்தக்கதென்பதுந்தான்.

32. வினா. பாவ அறிக்கையில் நாம் மெய்யான குணப்படுத லுள்ளவர்களாய்ப் பாராட்டியும் அதின்பேரில பாவமன்னிப்பு நமக்குத் தேவநாமத்தில் கூறப்படுவதாயுமிருக்க, பாவவிமோச னத்தின் முடிவில் மெய்யான குணப்படுதலுக்காக நாம் ஜெபிக்கும்படி எச்சரிக்கப்படுவதேன?

விடை. மெய்யான குணப்படுதல் பாவமன்னிப்புக்கு அவ சியமாயிருப்பதுமன்றி பாவமன்னிப்பை நாம்பெற்றவர்களென் பதற்கு நம்மில் விளங்கவேண்டிய அத்தாட்சியுமாயிருக்கிறது. ஆதலால் பாவஅறிக்கை செய்யும்போதுமாத்திரமல்ல பாவ விமோசனம் பெற்றபின்பும் அது நம்மில் காணப்படவேண்டி யது மிகவும் அவசியம். பாவமன்னிப்பைப் பெற்றவன் தான் முன்செய்த பாவங்களைப்பற்றி எப்பொழுதும் யோசனையுள்ள வனாயிருப்பது அவசியம். ஒருவன் எவ்வளவாய் அவைகளைச் சிந்தித்துக்கொள்ளுகிறானோ அவ்வளவாய அவைகளைவிட்டு விலகுவான். நாம் பாவமன்னிப்பைப் பெறுவதற்காகமாத்திர மல்ல, பெற்றுக்கொண்டதற்காகவும் மெய்யான குணப்படு தலைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். ஆனபடியால் இவ்விதக் குணப்படுதலை கட்டளையிடுபவராகிய ஆவியின் அருள் அனுக்கிரகத்துக்காக ஜெபித்துக்கொள்வது அவசியமே.

33. வினா. ஆமென் என்பதற்கு அர்த்தமென்ன? அது வெவ் வேறு அர்த்தமாய் வழங்கப்படுவதுமுண்டா?

விடை. ஆமென் என்ற எபிரெயமொழிக்கு அர்த்தம் மெய்யாக என்பதே. ஒருவன் தான் கொடுக்கும பிரதிஉத்தாரத்துக்கு உரைக்கும் சம்மத வாக்காக அது எல்லாப் பாஷைகளிலும் அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் எப்படி யோ அப்படியே பொதுவான ஜெபபுஸ்தகத்திலும் அந்தந்த விடத்துக்குத் தக்கதான வெவ்வேறு பயனைக்கொள்ளும் ஜெபங் களிலும் சுருக்க ஜெபங்களிலும் அது தேவனைநோக்கி உரைக் கப்படுவதும் நாம் எப்படி வேண்டிக்கொண்டோமோ அப்ப டியே ஆவதாக என்று நமது விருப்பத்தைக் காட்டுவதுமாயிருக் கிறது. எச்சரிப்புகளிலும் பாவ விமோசனக்கூறுதல்களிலும் விசுவாசப்பிரமாணங்களிலுமோ குருவானவனைநோக்கிச் சொ ல்லப்படுவதும் உரைத்ததெல்லாம் உள்ளதுதான், மெய்தான், உள்ளபடியே சம்மதந்தான் என்று பொருட்கொள்வதுமாயிருக் கிறது.

34. வினு. ஆமென் என்பது சிலவிடங்களில் பெரிய எழுத்தாயுஞ் சிலவிடங்களில் சிறிதாயும் பதிபபிக்கப்பட்டிருப்பதேன்?

விடை. ஆராதனையில் குழப்பம் உண்டாவதற்கிடமில்லாமல் குருவானவரும் ஜனங்களுந் தம்தமக்குரிய பாகங்களை திட்டமாய் அறிந்துகொள்ளத்தககதாக அப்படிப் பதித்திருக்கிறது. பாவ அறிக்கை, கர்த்தருடைய ஜெபம், விசுவாசப்பிரமாணங்கள், தோத்திரகீர்த்தனைகள என்னும் இவைகள் குருவும் ஜனங்களும் சேர்ந்து சொல்லுகிறவைகளானதால் இவைகளின் முடிவில் வரும் ஆமென் என்பதுதான் முந்திவரும் மற்ற எழுத்துக்களுக்கொப்ப ஓரேமாதிரி அட்சரங்களால் பதிக்கபபட்டிருக்கிறது. சுருக்கஜெபங்களிலோ குருவானவர் ஜனங்களுக்குப் பிரிந்து பேசுமாப்போல் தனிமையில் வாசிக்க, ஜனங்களோ அவரோடு சேர்ந்து சொல்லாமல் அந்தச் சுருக்கஜெபத்தின் முடிவில் ஆமென் என்று சம்மதஉத்தரம் உரைக்கவேண்டியிருப்பதால் அம்மொழி தான் சேர்ந்துநிற்கும் மற்ற எழுததுக்களுக்கு வேறுபாடாக சிறு அட்சரங்களில் பதிக்கபபட்டிருக்கும். குருவானவர்மாத்திரம் வாசிக்கவேண்டியது இன்னதென்றும் குருவானவரும் ஜனங்களுஞ்சேர்ந்து உரைக்கவேண்டியது இன்னதென்றும் இவ்விகற்பக்குறிப்பால் எவருந் தெளிவாய் அறிந்துகொள்ளக்கூடும்.

35. வினு. பாவவிமோசனங் கூறப்படும்பொழுது குருவானவருஞ் சபையாரும் எவ்வித நிலைமையிலிருக்கவேண்டியது? எவ்விதப் பட்டக்காரரும் அந்த விமோசனத்தைக் கூறத் தகுமோ?

விடை. பாவவிமோசனமானது தேவனிடத்திலிருந்து வருகிறதாயிருப்பதால் சபையார் மரியாதையாய் முழங்காலில்நிற்க, குருவானவர் நின்று அதைக் கூற ஒழுங்குண்டு. கூறும் தெய்வபணிவிடைக்காரர் உதவிக் குருவாக அல்ல குருவாகவே இருக்கவேண்டும்.

36. வினு. தேவாராதனை நடப்பிப்பதில் உதவிக் குருவானவர் ஒப்புக்கொள்ளவேண்டிய முறைமையென்ன? இதைப் பற்றிச் சட்டம் பிறந்திருக்கிறதா? எந்நாளும் நலமாய்த் தோன்றுகிற முறைமை என்ன?

விடை. உதவிக் குருவானவர் ஆராதனை நடப்பிக்கிறதாயிருக்கையில் பாவவிமோசனங் கூறுகிறதற்குப் பதிலாக பாவமன்னிப்பு மன்றாட்டுள்ள வேறே ஒரு சுருக்கஜெபத்தை வாசிக்

கிறதுண்டு. முந்தின எந்த ஜெபத்துக்குப் பின்பாகிலும் வாசிக்கத்தக்க ஜெபமென்ற முகவுரையுள்ள ஜெபமாவது தேவகோபாக்கினை கூறல் என்னும் முறையிலுள்ள ஜெபமாவது வாசிக்கப்படலாகும். ஆனால் இவ்வொழுங்கைப்பற்றி ரூபிரிக்கில் சட்டம் இல்லாததால் பாவ அறிக்கையானபின் கர்த்தருடைய ஜெபத்தை தொடர்ந்துசொல்வது நலமான காரியமாய்த் தோன்றுகிறது.

37. வினா. தேவாராதனையில் ஜனங்களுஞ்சேர்ந்து ஆராதிப்பதற்கு வேத ஆதாரமுண்டா?

விடை. மோசேயும் இஸ்ரவேல்புத்திரருஞ் சேர்ந்து துதியின் கீதங்களைப் பாடினதாக யாத். 15 அதிகாரத்திலும், அப்போஸ்தலரும் அவர்களது சீஷர்களும் ஒருமனப்பட்டு உரத்த சத்தமாய் ஜெபித்ததாக அப. 4 அதிகாரத்திலும், பரமவாசிகளான பரிசுத்தகூட்டத்தார் ஜெபங்களையுந் தோத்திரங்களையுஞ் செலுத்துகிறதாக வெளி. 5, 6 அதிகாரங்களிலும் வாசிக்கிறோம்.

38. வினா. குருவானவரோடு முறைமாற்றியும் பிரதியுத்தாரஞ்சொல்லியும் ஆராதித்துவருவதற்கு வேத ஆதாரமுண்டா?

விடை. உண்டு. சங். 106. 48ல் ஜனங்களெல்லாரும் ஆமென், அல்லேலூயா என்பார்களாகவென்று முடிவுரையாகச் சொல்லியிருக்கிறது. அப்படியே ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லி கர்த்தரைத் துதித்தார்கள் என்று 1நாளா. 16. 36ல் கண்டிருக்கிறது. சாலொமோன் கட்டின தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டபொழுது ஜனங்களும் ஆராதித்ததாக சொல்லி இருக்கிறது. (2 நாளா. 6, 7 அதி.). எஸ்றா நியாயப்பிரமாணத்தைத் திறந்து மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரைத் தோத்திரித்தபோது ஜனங்களெல்லாரு தங்கள் கைகளைக்குவித்து அதற்கு மறுமொழியாக ஆமென், ஆமென் என்று சொன்னதாய் நெகே. 8. 5, 6ல் கண்டிருக்கிறது. இந்த வழக்கந் தள்ளப்படவும் நின்றுபோகவும் இல்லையென்று 1 கொரி. 14னால் விளங்குகிறது. ஏனென்றால் கல்லாதவர்களும் கற்றவர்களும் பொதுவான சபையாருஞ்சேர்ந்து ஆராதிப்பது அக்காலத்து வழக்கமென்று பவுல் அவ்வதிகாரத்தில் காட்டியிருக்கிறார். கேருபீன்கள் மாற்றிமாற்றி தேவமகிமையைக் கொண்டாடுகிறதாக ஏசா. 6. 1ல் வாசிக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் முழுமையிலும் இதற்கிசைவான உதாரணங்கள் உண்டு.

39. வினா. சபையாரில் யாவரும் உள்ளத்தில்மாத்திரமல்ல உரத்த சத்தத்தோடும் ஜெபிப்பது அவசியமா?

விடை. இம்முறைமை தேவவசனத்துக்கு ஒத்திருப்பதினாலும் தேவவசனத்துக்கு ஒத்துமையான முறைமைகளை ஏற்படுத்துவதற்கு திருச்சபை அதிகாரம் பொருந்தியதாயிருப்பதாலும் அதினாலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடி சபையிலுள்ள ஒவ்வொருவரும் உள்ளத்தில்மாத்திரமல்ல உரத்த சத்தமாயும் ஆராதிப்பது அவசியம். ஆராதனை முழுமையும் பொதுவாகவென்றாலுஞ் சரி, அதிலுள்ள சில முறைமைகள் விசேஷமாகவென்றாலுஞ் சரி, அவ்வாராதனையைச் செலுத்துகிற மனிதரையும் அவர்கள் செலுத்துகிற ஆராதனையை ஏற்கிற கடவுளையும்பற்றிக் கவனிக்குமிடத்து, அது பத்தியுள்ள ஆராதனையாகவே யிருக்கிறது. பொதுவாக எப்படியென்றால், இவ்வித வழக்கம் மனவிழிப்பைப் பிறப்பிப்பதால் உட்கருத்தை நிலைப்படுத்தவுங் குருவானவரும் ஜனங்களுந் தம்தமக்குரிய *கடமையை நடத்த தைரியப்படுத்துவதால் உத்தமபத்தியை அனல் மூட்டியெழுப்பவும் பொதுவான ஜெபத்தின் இயற்கைக்கேற்க எல்லாரும் ஏகோபித்துச் சேர்ந்து சர்வவல்லவனை ஆராதிப்பதற்கு உகந்திருக்கவும் ஏற்ற முறைமையாம். விசேஷமாக எப்படியென்றால், பொதுவான பாவ அறிக்கை, கர்த்தருடைய ஜெபம், லித்தானியா, விசுவாசப்பிரமாணங்களை யாவருஞ் சேர்ந்து சொல்வதற்கேற்ற அவசியமும் நியாயமுந் தகுதியுமான முறைமையாம்.

40. வினா. ஸ்திரீகள் சபையில் போதித்தலையுந் தர்க்கித்தலையும் விவாதமாடுதலையும்பற்றி பரி. பவுல் உரைத்திருக்கிற கட்டளைக்கு இவ்வழக்கம் விரோதமாகாதா?

விடை. சபையில் போதித்தலையுந் தர்க்கித்தலையும் விவாதமாடுதலையும்பற்றி அப்போஸ்தலன் 1 கொரி. 14ல் அக்கற்பனையைக் கொடுத்தாரேயல்லாது சபையில் ஆராதனை நடப்பித்தலைப் பற்றியல்லவே. ஆதலால் இவ்வழக்கம் அக்கற்பனைக்கு விரோதமானதல்ல.

41. வினா. கர்த்தருடைய ஜெபத்தின் சிறந்தமாட்சிமையையும் பொருளடக்கத்தையும்பற்றிச் சொல்லு?

விடை. கர்த்தருடைய ஜெபமானது இயல்பிலும் பொருளிலும் மகா மாட்சிமையுள்ளது. அதற்கு நிகரான ஜெபமில்லை; வகைக்குவகை அது மட்டில்லாச் சிறப்பினையுடையது; அதிலடங்கிய பொருளைப் பார்த்தால் அது நிறைவாகரமுள்ளது;

அதன் செயற்கையைப் பார்த்தால் அதுவோ நிகரற்றது; அதில் தெளிவான மொழிகளும் சுருக்கமான வாசகங்களுமுண்டு; அதின் வார்த்தைகள் சுருக்கமாயினும் பொருளோ மிக்க பெருக்கம்; அது அத்தியந்த நடையும் பத்தியுள்ள மன்றாட்டு களுமுள்ளது; எச்சாதியிலும் எந்நிலைமையிலும் எவ்விடத்தி லும் எக்காலத்திலுமுள்ள எல்லா வகையுள்ளோருக்கும் அது ஏற்றது. அதிலடங்கிய விசேஷங்கள் அருமந்தமானவை; அவைகளின்பேரில நமது மனம் ஒன்றி நிற்கலாகிறது; நாம் ஆராதிக்கிற சர்வவல்ல கடவுளாின நன்மைத்தன்மையையும் மட்டளவற்ற அவருடைய மாட்சிமையையும் அது நமக்குத் தீர்க்கமாயுணர்த்துகின்றது. இப்பேர்ப்பட்ட தேவன் நமது பேரில் மகாகிருபையும் மிகுந்த இரக்கமுமுள்ள நம்முடைய பிதா என்று முகவுரையாக அறிக்கையிடுகிறோம். அவரு டைய திருநாமம் எங்கெங்கும் மகிமைப் படுத்தப்படவும் அவ ருடைய அருள்நோக்கம் பூதலமெங்கும் பிரஸ்தாபமாக்கப் படவும் அவருடைய திருச்சித்தம் பரத்திலுள்ள பரிசுத்த தூதரால் எப்படி நடப்பிக்கபபடுகிறதோ அப்படியே பூதல த்து மனிதராலும் மகாஉட்கருத்தோடும் அத்தியந்தபத்தியோடும் தவறாத ஜாக்கிரதையோடுஞ்செய்து நடப்பிக்கப்படவும் வே ண்டுமென்று பிரார்த்திக்கிறோம். தேவமகிமைக்கென்று இந்த மட்டும் பிரார்த்தித்து நமக்கு வேண்டிய சரீர ஆத்துமநன்மை களுக்காக தொடர்ச்சியாய் ஜெபிக்கிறோம். பிழைப்புக்கு அத் தியந்தம் தேவையானவைகளை தேவன் நமக்குக் கட்டளை யிட மன்றாடுகிறோம். நமது சகோதரர் நமக்குச்செய்யுந் தப் பிதங்களை தயவாய்ப் பொறுத்துக்கொள்வோமென்று அவ ருக்கு வாக்குக்கொடுத்து நமக்குவேண்டிய பாவமன்னிப்புக் காக அவனர்நோக்கிக் கெஞ்சுகிறோம். கடைசியாக, நமக்கு நேரிடும் சோதனைகளில் நம்மையாண்டு ஆதரிக்கவும் நம்மைச் சுற்றிப் பிடிக்கும் தீமை விக்கினமுதலியவற்றினின்று நம்மை மீண்டு விடுவிக்கவும் வேண்டிக்கொள்ளுகிறோம். முடிவுரை யாக, சிருஷ்டிகள் பெற்றனுபவிக்கும் நன்மைகள் எவைக ளுண்டோ அவையாவையுந் திருச்சித்தத்துக்கு ஒத்தபடி கட் டளையிட்டருள சத்துவமும் வல்லமையும் அவருக்கேயுண் டென்று பாராட்டி, அவர்பேரிலுள்ள நமது பற்றுதலையும் நம் பிக்கையையும் அறிக்கையிட்டு ஜெபத்தை முடிக்கிறோம்.

42. வினா. கர்த்தருடைய ஜெபத்தை வழங்குவது மிகுதியும் தகுதியென்று எப்படி விளங்கும்?

விடை. (1) அதன் தன்மையைக்கவனிப்பதால் இது விளங்

கும். அது கற்பதற்கெளிதும் உணர்வதற்குத் தெளிவுமுள்ளது. (2) அதிலடங்கிய பொருளைக் கவனிப்பதாலும் விளங்கும். நமது அறைகுறைகளுங் கடமைகளுமெல்லாம் அதில் தீட்டி உரைக்கப்பட்டிருப்பதால் தெர்த்துல்லியன் என்பவர் அதை சுவிசேஷ பொழிப்புரையென்ற நாமத்தால் அழைத்திருக்கிறார். அது சகலமான ஜெபங்களின் ரத்தினச்சுருக்கமென்றும் பேர் பெறத்தகும். (3) அதை இயற்றிய காரணகர்த்தாவைக் கவனிப்பதாலும் விளங்கும். நமது அறைகுறைகளையும் பிதாவின் செல்வங்களையும் அறிந்திருப்பவரான நமது மீட்பரால் அது இயற்றப்பட்டது. அவர் பிதாவுக்குப் பிரியரானவராயிருப்பது போல அவர் அருளிய ஜெபமுமிருக்கிறது. மனிதரால் அருளப் பட்ட ஜெபங்களில் காணப்படும் குறைவையெல்லாம் நிவிர்த்தி செய்யத்தக்க இப்பூரண ஜெபத்தை நாம் ஜெபமுறைகளி லெல்லாம் வழங்குவது தகுதிதானே. அப்படியே அது முறை மைதோறும் அங்கங்கே திருச்சபையால் அமைக்கப்பட்டிருப் பது கவனிக்கப்படத்தக்க விசேஷமாம்.

43. வினா. கர்த்தரின் ஜெபத்தை பூர்வ கிறிஸ்தவர்கள் எப்ப டிச் சொல்லுவது வழக்கம்?

விடை. அதைச் சத்தமிட்டுச் சொல்லுவது பூர்வவழக்கம். ரோமான்மார்க்கத்தார் அதை அந்தரங்கமாய் அல்லது மனதுக் குள் சொல்லுவது வழக்கமாயிருந்ததால் அதற்கு எதிரிடையாக இப்படி நடந்துவந்தது. மேலும் இது மிகவும் முக்கியமும் எல்லாராலுங் கற்றறியத்தக்க ஜெபமுமானதால் இவ்வொழுங்கு திருச்சபையால் அமைக்கப்பட்டுத் தினசரி வழங்கப்பட்டும் வருகிறது.

44. வினா. தினசரி ஆராதனைமுறைமையில் கர்த்தருடைய ஜெபமானது தகுந்த இடத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று காட்டு?

விடை. நாம் நமது பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை யிட்டுப் பாவவிமோசனம் பெறுவதற்குமுன் இச்செபத்தைச் சொல்லுவது ஏற்றதல்ல. நமது பாவங்களுக்காக உத்தம மனஸ் தாபத்தைப் பாராட்டி பாவவிமோசனவாக்கைப் பெற்றுக் கொள்ளுமுன் தேவனை நமது பிதாவென்று நாம் உருக்கத் தோடும் மனச்சமாதானத்தோடுஞ் சொல்லக்கூடாது. பின்னை இச்செபம் அமைக்கப்பட்டிருப்பதுதான் தகுதி. பாவஅறிக் கையின் பின் பாவவிமோசனத்தைப் பெற்று தேவனோடு ஒப்புர வான ஆத்துமா தன்னைப் பிள்ளையாகவும் அவரைப் பிதாவாகவும்

பாராட்டி, நன்னம்பிக்கையினால் ஏவப்பட்டு தனக்குவேண்டிய சரீர ஞானநன்மைகளுக்காக மன்றாடி, நல்ல காரியங்களைப் பெற்றுக்கொள்ளவும் ஆகாதவைகளினின்று ரட்சிக்கப்படவும் விண்ணப்பம்பண்ணி, பிதாவடைவாகத் தன்னைச் சந்தித்த தேவனுடைய கிருபையையுணர்ந்து அறிக்கையிடத் துணிவு கொள்ளுகிறது. இதன்பின் தொடர்ந்துவரும், சுருக்க வாக்கியங்களுந் திரித்துவ கீர்த்தனையும் (Gloria Patri) காலையாராதனையிலுள்ள மூன்று பங்குகளில் முந்தினதற்கு முடிவுரையாகவும் அடுத்ததற்குத் தகுந்த முகவுரையாகவும் இருக்கிறது.

45. வினா. இச்செபத்திலுள்ள ஒவ்வொரு வாசகத்திலும் ஒவ்வொரு கடமையுண்டென்று காட்டு?

விடை. சர்வவல்லவரை நமது பிதாவென்று நாம் அழைப்பதில் அவருக்குப் பிதாவடைவான கனத்தைச செலுத்துவதும் பிறரை நமது சகோதரராக எண்ணி நடந்துவருவதும் நமது கடமை. அவர் பரமண்டலங்களிலிருக்கிறவர் என்று அறிக்கையிடுவதில் அவருடைய மட்டளவற்ற மகத்துவத்தையுணர்ந்து அவரை மகிமைப்படுத்துவதும், நமது மகா நீசத்தனத்தையுணர்ந்து நம்மைத் தாழ்த்துவதும் நமது கடமை (சங். 11. 14; 103. 19.). உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று மன்றாடுவதில், நாம் நமதுநடக்கையால் அது கனவீனமடைய இடங்கொடாதிருப்பதும் நாம் நாமே அதைப பரிசுதத குலைச்சல் பண்ணாதிருபபதும் நமது உததம ஆராதிபபாலும் சற்குண நடக்கையாலும் அதை மகிமைபபடுததுவதும் நமது கடமை. உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று மன்றாடுகிறதில், நாம் இம்மையிலும் இம்மைக்குப்பின் மறுமையிலும அவருடைய ராஜ்யத்தில் பிரஜைகளாக இருக்கததககதாக நாம் நாமே அதற்குப பாத்திரராக நடபபதும் பிறரும் அதற்குச் சுதந்தரராக நமது நடக்கையால் அவர்களுக்கு நனமாதிரிகாட்டுவதும் நமது கடமை. உம்முடையசித்தஞ் செய்யப்படுவதாகஎன்பதில், அவர் விதித்த முறைமைப்படி நடப்பதும் அவர் விலக்கியயாவையும் வெறுப்பதும் நமக்கு அடுத்தவர்கள்மூலமாயுந் தேவசித்தஞ் செய்யப்பட்டுவர முயற்சிப்பதும் நமது கடமை. அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கின்று தாரும் என்பதில், அன்றாடக ஆகாரத்தை சவதரிப்பதற்கான வழிவகையை கையாடி வருவதும் நமக்குண்டாயிருப்பது போதுமென்று மனரம்மியமாயிருப்பதும் தற்காலப் பலனைநாடி அடாத எத்தனங்களைப் பிரயோகியாதிருப்பதும் நமது கடமை. எங்கள் குற்றங்களை எங்

களுக்கு மன்னியும் என்பதில், பாவத்துக்காக உத்தம மனஸ்தாபப்படுவதும் முழுப்பகையாய் அதைப் பகைத்து வெறுப்பதும் நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யும் பிறருக்கு அக்குற்றங்களை தயவாய்ப் பொறுப்பதும் நமது கடமை. எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்று ஜெபிப்பதில், பொல்லாங்குக்கு ஏதுவாக நமக்கு நேரிடும் எவ்வித சோதனையோடும் எதிர்த்துப் போராடுவதும் பாவத்துக்குத் தூண்டிவிடும் எப்பேர்ப்பட்ட காரணங்களோடும் பராக்கிரமமாய் எதிர்த்துநிற்பதுந் தீர்மானத்தையும் நடப்பியாநிருப்பதும் நமது கடமை. கடைசியாக முடிவுரையான தோத்திரத்தில் காட்டியபடி மகத்துவக்கடவுளை மகா அத்தியந்தவணக்கத்தோடும் ஆராதித்து மகிமைப்படுத்துவதும் பாவிகளைக் கேளாதவரும் ஆவியிலும் உண்மையிலுந் தம்மைநோக்கி ஆராதிக்கிறவர்களைமாத்திரம் கேட்கிறவருமான அவரை உத்தம இருதயத்தோடும் பரிசுத்த நடக்கையோடுஞ் சேவிப்பதும் நமது கடமை.

46. வினா. இச்செபம் இரண்டாம்பாடத்தில் வாசிக்கப்படுகிறதாயிருக்கிறபொழுது சபையார் செய்யத்தக்கதென்ன?

விடை. இதைப்பற்றி தீர்மானமுள்ள சட்டம் யாதேனும் இல்லை. அதை வாசிக்கும்போது ஜனங்கள் முழங்காலிலிருக்க வேண்டுமோ அல்லவென்று சேர்ந்துவாசிக்கவேண்டுமோ என்பதைப்பற்றி நிச்சயமில்லை. எழுந்துநிற்பதே தகுதியென்று தோன்றுகிறது; சேர்ந்துவாசிப்பது ஏற்றதல்ல வாசிக்கப்படும் பாடங்களைக் கேட்பதேயொழிய அப்பாடங்களை சேர்ந்துவாசிப்பது ஜனங்கள் கடமையல்ல.

47. வினா. கர்த்தருடைய ஜெபத்துக்குமுன்னதாய் இப்பொழுது சில முகவுரைவாக்கியங்களைச சேர்த்திருப்பதற்கு முகாந்தரமென்ன?

விடை. மிகுத்து வழங்குவதால் அருமை மதிக்கப்படாதே போகும் பலவற்றைப்போல இதுவும் அடிக்கடி வழங்குவதாயும் எவருக்குஞ் சாதாரணமாய் அறியப்பட்டதாயும் இருப்பதால் நாம் கவலைத்தாழ்ச்சியாயும் உட்கருத்தின்றியும் அதை உரைக்க ஏதுவுண்டு. இவ்வித ஊக்கமின்மையை நீக்கி உட்கருத்தைப் பிறப்பிக்கவும் கர்த்தருடைய ஜெபத்தை உரைப்பதற்கு தகுதியாய் நம்மை ஆயத்தப்படுத்தவுந்தக்கதாக முகவுரை வாக்கியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

48. வினா. தேவாராதனையைச்சேர்ந்த பல பாகங்களில் மிகவும் நற்பிரியமான பாகமெது? எப்படி?

விடை. தூபியே எவற்றினுஞ் சிறந்தது. விருப்பங்கொள்வதைப்பார்க்கிலும் திருப்பலிபாராட்டுவது எவ்வளவு சிறந்ததோ அவ்வளவாய் ஜெபத்தைப்பார்க்கிலுந் தூபியே மிகச் சிறந்தது. விசுவாசம் நின்றுபோவதுபோலும் நம்பிக்கைக்கு இடமற்றுப்போவதுபோலும் ஜெபத்துக்கும் முடிவுண்டு, தூபிக்கோ முடிவில்லை; அது இம்மைக்கும் மறுமைக்குஞ் செல்லத்தக்கது. இம்மையில் நாம் நடப்பிக்கும் மற்றெந்த ஆராதனையைப்பார்க்கிலும் அதிகமாய் இவ்வாராதனையில் நாம் வானோருக்கு ஒத்து வருகிறோம். எக்காலத்திலுஞ் சந்தோஷமாயிருப்பதும் எல்லாக் காரியத்திலுந் தூபிசெலுத்துவதுங் கிறிஸ்தவர்களுக்குரிய சலாக்கியமாகவேயிருக்கிறது. 'உலகத்தில் நமக்கு உபத்திரவங்களுண்டு; கிறிஸ்துவிலோ நமக்குக் கெம்பீரமுண்டு.' ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிற அனைவரும் அவருடைய தயவைப் பற்றி ஒருவரோடொருவர் சம்பாஷித்து, அவருடைய ரட்சிப்பை நாடோறும் பிரசித்தப்படுத்துவது மிகவும் நியாயம் ஏனென்றால் சங்கீதக்காரன் சொல்லியபடி தூதியே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.

49. வினா. கர்த்தருடைய ஜெபத்துக்குப்பின் சேர்க்கப்பட்டிருக்கிறதென்ன?

விடை. விண்ணப்பங்களுந் தோத்திரங்களுமடங்கிய சில சுருக்கமான வாக்கியங்களுண்டு.

50. வினா. இவைகளில் முந்தின நான்கு வாக்கியங்களைப் பற்றிய விசேஷமென்ன?

விடை. இவைகளில் விண்ணப்பமுண்டு. இந்நான்கும் பத்திக்கடுத்த போசகிஷக் களஞ்சியமெனப்படும். சங்கீதத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. ஆண்டவரே, எங்கள் உதடுகளை &c என்பது சங். 51. 15ல் உள்ளது. இது பூர்வஜெப முறைகளிலும் விசேஷமாக பரி. யாகப்பு, கிறிசொஸ்தம் என்பவர்களின் பெயரால் வழங்கும் ஜெபமுறைகளிலுமுண்டு. தேவனே, எங்களை இரட்சிக்க &c. சங் 70. 1 அல்லது 40. 13ல் உள்ளது. இதுவும் கிரேக்கசபையில் வழங்கப்பட்டுவந்தது. மேலும் கர்த்தாவே, இப்போது ரட்சியுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோமென்று அர்த்தமுள்ள ஓசன்னா என்பதற்கு இது ஒத்த விண்ணப்பமாம்.

51. **வினா.** *பின்வருகிற நான்கையும்பற்றி கவனிக்கப்படத் தக்கதென்ன?*

விடை. இவைகளில் *துதிதோத்திரமுண்டு.* ஜெபத்துக்குப பின்துதிப்பதில் நாம் தாவீதரசனின் மாதிரியைப பின்பற்றுகிறோம். அவர் தமது பாவத்தைஅறிக்கையிட்டு தமது பாடுகளை யெடுத்துக்காட்டி, பாவமன்னிப்புக்காகவும் ரட்சிப்புக்காகவும் ஜெபித்தபின் நம்பிக்கையில் களிகூர்ந்து தோத்திரஞ்செலுத்துவது வழக்கம். நாமும் அப்படியே நமது பாவங்களை மன்னித்து நமக்கு ரட்சிப்பைக் கட்டளையிடுவாரென்று நம்பி, இரத்தச் சாட்சியாகிய போலிக்கார்ப் என்பவர் தாம் மரணத்தறுவாயிலுரைத்த உன்னத கீதமாகிய திரித்துவகீர்த்தனையைப் பாடுகிறோம். ஏசா. 6. 1ல் கண்டிருக்கிற சேராபீன்களின் கீதத்துக்கு இது ஒத்துமைப்பட்டது. பிதாவுக்கு குமாரன்மூலமாய் பரிசுத்தாவியினால் மகிமையுண்டாவதாக என்று ஆரியர் நான்காம் நூற்றாண்டில் இவ்வார்த்தையைப் பிறப்பித்தார்கள். அன்றியும் வாய்க்கவில்லை. இக்கீதம் தோத்திரமாகமாத்திரமல்ல, திருத்துவ அறிக்கையாகவும் இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. பின் வருகிறதாகிய "கர்த்தரைத் துதியுங்கள், &c." என்பது அல்லேலூயா என்பதற்கொத்தது. பாவத்துயரமுறை முடிய துதிதோத்திரமுறை ஆரம்பிக்கிறதென்று காண்பிக்கத்தக்கதாக இது இவ்விடத்தில் சேர்க்கப்பட்டிருப்பது யதார்த்தமே. இதற்கு மறுமொழியாய் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக என்று சொல்லப்படும். இதின்படி ஜனங்கள் சங்கீதங்களையும் மற்றுமுள்ள கீதங்களையும் குருவானவரோடேகூட தாங்களுஞ்சேர்ந்து முறைமாற்றி வாசித்து, தேவதுதியைக் கொண்டாடுவது தங்கள் கடமையென்று உணர்ந்துகொள்ளத் தகுதியாயிருக்கிறது.

52. **வினா.** *குருவானவர் ஆராதனைமுறைமை முழுவதையும் ஓசைமாற்றாமல் ஒரேவிதமாக நடத்தலாமா?*

விடை. இவ்வாராதனைமுறைமையில் ஜனங்களைநோக்கிச் சொல்லப்படுபவைகளுமுண்டு. ஜனங்களை நோக்கிச் சொல்லப்படுவதாகிய முகவுரைவாக்கியங்கள், எச்சரிப்பு, பாவவிமோசனம் இவை முதலியவைகளை ஒருவிதமாகவும் தேவனை நோக்கிச் சொல்லப்படுவதாகிய பாவஅறிக்கை, கர்த்தருடைய ஜெபமுதலியவைகளை வேறுவிதமாகவும் வாசிப்பது குருவானவருடைய கடமை.

53. **வினா.** *தோத்திரமுதலியவைகளை நின்றுகொண்டே வாசிப்பது தகுதியென்று காட்டு?*

விடை. தேவனைநோக்கிச் சொல்லப்படாதவைகளை முழுங் காலிலிருந்து உரைப்பது ஏற்றதல்ல; அவனைநோக்கிச் சொல்லப் படுபவைகளை இருந்துகொண்டு உரைப்பதுந் தகாது. நிற்பதே இருவகைக்குஞ் செல்லத்தக்கது. தோத்திரமுறைமைகள், கீங்கி துகள் முதலியவைகளில் இருவகையும் கலந்துவருவதால் நின்று அவைகளை வாசிப்பதே உத்தமம்.

54. வினா. நமது ஜெபபுஸ்தகத்திலுள்ள காலை மாலை ஆரா தனையொழுங்கு பூர்வமுறைகளில் எந்தப் பங்குக்கு ஒத்துநிற்கும்?

விடை. காலைஜெபமுறைமை (Matins) மாற்றின்ஸ், (Lauds) லாட்ஸ், (Prime) பிறைம் என்ற மூன்று முறைமை களின் சுருக்கம். மாலைஜெபஒழுங்கு (Even Song) மாலைப பாட்டு, (Vespers)வெஸ்பாஸ்,(Compline) காம்பிளேன் என்ற இருமுறைமைகளின் சுருக்கமாம்.

55. வினா. குருவானவரால் கூறப்படும் எச்சரிப்பில் காலை முறைமையின் இரண்டாம் பங்கைப்பற்றி பகரப்பட்டிருப்ப தென்ன? 2-ம் பங்கைச்சேர்ந்த முறைமைகளெவை?

விடை. சங்கீதவாசிப்புமுதல் அப்போஸ்தல விசுவாசப்பிர மாண அறிக்கைவரையுமுள்ளமுறைமை இரண்டாம் பங்கைச் சார்ந்தது. இதைப்பற்றி எச்சரிப்பில் அவருடைய திருக்கரங் களினால் பெற்றுக்கொண்ட உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ் செலுத்தவும், மிகவுஞ் சிறந்த அவருடைய புகழைப் பிரசித்தம் பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும் என்று சொல்லியிருக்கிறது.

56 வினா காலையாராதனையைச்சேர்ந்த இப்பங்கில் முதல் வாசிக்கப்படுகிற சங்கீதமெது? அதற்கு ஆதிச்சபையால் இடப் பட்ட நாமமென்ன? முகாந்தரமென்ன?

விடை. 95-ம் சங்கீதம் இதை ஆதிசசபையார் அழைப்பு என்று அர்த்தமுள்ள (Invitatorive) இன்விற்றேரோறைவ் என்று அழைத்தார்கள். தேவாராதனைக்கென்று கூடிவரும்படி அழைக் கப்படுஞ்சமயத்தில் இது வாசிக்கப்பட்டது.

57. வினா. இந்த 95-ம் சங்கீதத்தில் எத்தனை பங்குகளுண்டு?

விடை. (1)தேவனைத் துதிக்கவும,(2) அவனைநோக்கி ஜெபிக் கவும், (3) அவருடைய வசனத்தைக் கேட்கவுந்தக்க எச்சரிப்பு இதிலுண்டு. இவ்வெச்சரிப்போடுங்கூடி நாம் அவைகளை நடப் பிக்கவேண்டிய விதமுங் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இச்சங்

ஷேம் இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருப்பது மிகவுந் தகுதியான காரியம்.

58 வினு. இச்சங்கீதத்தில் நம்முடைய ரட்சணிய கன்மலையென்று சொல்லியிருப்பதற்கு அர்த்தமென்ன?

விடை. இம்மைக்கும் மறுமைக்கும் அடுத்ததான சகலவித தீமைகளினின்றும் நம்மை ரட்சிக்கவல்லவர் அவர்தான் என்பதே.

59 வினு. எல்லாத் தேவர்களுக்கும் பெரிய ராஜன் என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. தேவன் என்ற நாமத்தால் அழைக்கப்பட்டவர்களுக்கும் அந்த நாமத்தைத் தங்களுக்கு உரித்தாக்கிக்கொண்டவர்களுக்கும் அஞ்ஞானிகளுடைய பொய்த்தேவர்களுக்கும் இவ்வுலகத்தின் அதிபதிகளாகிய சாத்தான் என்னும் தேவர்களுக்கும் பெரிய ராஜன் நமது தேவன் என்பதே.

60. வினு. பூமியின் ஆழங்கள் அவர் கையிலிருக்கின்றன என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. அவரது சமுகமில்லாத இடமுமில்லை; அவருடைய அதிகாரம் நடவாத இடமுமில்லை. எங்கேதானென்றாலும் சரி, தம்முடையவர்களைத் தற்காக்கவும் சத்துராதிகளைத் தண்டிக்கவும் அவரால் கூடும். அவர்களைப் பாதுகாக்கவொட்டாமல் தடுக்கவும் அவர்களைத் தண்டிக்கவொட்டாமல் மறைந்துகொள்ளவுந்தக்க இடம் யாதொன்றுமில்லை என்பதே.

61. வினு. "அவர் மேய்ச்சலின் ஜனங்கள்" அர்த்தமென்ன?

விடை. நமது ஆத்துமங்களை தமது வசனத்தாலும் கிருபையாலும், நமது சரீரங்களை அனுதின அப்பத்தினாலும் திருப்தியாக்குகிறவரும் இம்மையை உருவ மறுமைக்குச் செல்லும்படி நம்மை வானியான தேசத்துக்கு வழிநடத்துகிறவருந் தேவன் தான் என்பதே

62. வினு. உங்கள் பிதாக்கள் என்பதற்கு அர்த்தமென்ன?

விடை கீழ்ப்படியாத யூதர்களைக்குறிக்கும். தேவனுக்குப் பணிவிடைசெய்ய விரும்புகிறவர்கள அவராலுண்டாகும் அழைப்புக்குச் செவிகொடுக்கிறவர்களாயிருக்கவேண்டும். மற்றப்படி நமது இருதயம் அவரது அழைப்பை எண்ணாமல கீழ்ப்படியாமையில் மென்மேலும் வளர்ந்துவருவதால கடினப்பட்டுப்போகும் (எபே. 4. 9.). தேவனுடைய சர்வவல்லமை,

தயவு, உண்மை என்னும் திருலட்சணங்களை நாம் உறுதி
யாய் நம்பாமல் அவைகளைப்பற்றிச் சந்தேகங்கொண்டு பரீட்
சைசெய்கிறவர்களாயிருந்தால், அவிசுவாசிகளான யூதர் கானான்
தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளாததுபோல நாமும் தேவனு
டைய பிள்ளைகளுக்குப் பரமண்டலத்தில் வைத்துவைக்கப்பட்
டிருக்கிற நித்திய இளைப்பாறுதலை இழந்துபோவதாயிருக்கு
மென்பதாம்.

63. வினா. பூர்வ இங்கிலீஷ்சபையிலுள்ள பிரேவியரில்
சங்கீதங்கள் எப்படி வகுக்கப்பட்டன? அவ்வகுப்புகளுக்குக்
கொடுக்கப்பட்ட நாமத்துக்கு மூலமென்ன? வேதாகமத்திலுள்ள
மற்ற ஆகமங்களைவிடச் சங்கீதம் அடிக்கடி திருச்சபையில்
வாசிக்கப்படுகிற காரணம் என்ன?

விடை. சங்கீதங்கள் ஏழுவகுப்புகளாக வகுக்கப்பட்டன.
ஆதிகாலத்தில் இராஆராதனை முக்கியமாய் நடந்துவந்ததால்
இராப்பாடம் என்றர்த்தமுள்ள (Nocturns) நாக்டர்ன்ஸ் என்று
அவைகள் அழைக்கப்பட்டன. ஆனால் அவ்வகுப்புகள் அதிக
நீடிப்புள்ளவைகளாயிருந்த நிமித்தம் திருச்சபைசீர்திருத்த
லின் காலத்தில் தள்ளப்பட்டு மாதம் ஒருவிசை சங்கீதஆகமம்
முழுவதும் வாசித்துமுடியும்படி நூதன ஒழுங்கு திட்டஞ்செய்
யப்பட்டது. பத்திபரிபாலனத்துக்கு இச்சங்கீதங்கள் ஆத்துமத்
தைப் பரம காரியங்களில் முயற்சிப்பிக்கத்தக்கவைகளாயும் எக்
காலத்தோருக்குஞ் செல்லத்தக்கதாயும் எவ்வகை நிலைமையுற்றோ
ருக்கும் பொருத்தமுள்ளவைகளுமாயிருப்பதால் மற்ற வேதா
கமப்பங்குகளைப்பார்க்கிலும் அடிக்கடி வாசிக்கப்படத்தக்க
தாக ஒழுங்குபடுத்தியிருக்கிறது. வேதாகமத்தின் மற்றப் பங்கு
களிலுள்ள நற்பிரயோசனமான எப்பொருளும் இப்பங்கில்
பொழிப்பாயும் எழுப்புதலைப் பிறப்பிக்கத்தக்கதாயும் வகுத்
தப்பட்டிருக்கிறது. கடவுளின் திருச்செயலையும் மகத்துவங்
களையும்பற்றிய அறிக்கை அதிலுண்டு. தேவனுடைய தாசரான
மகாத்துமாக்களின் நடபடிகளும் பத்தித்தியானங்களும் பரி
சுத்த மாதிரிகளும் அதில் வெகுவாயுண்டு; பரம காரியங்களைப்
பற்றிய சாதாரண அறிவிப்பு அதிலடங்கியிருக்கிறது. மனிதர்
அறியத்தக்கதில் சங்கீதம் புகட்டாத பொருள் ஏதுமில்லை. பத்தி
நெறியிலே உட்படுகிறவர்களுக்கேற்ற எளிதான போதனைக
ளும் அந்நெறியில் உட்பட்டிருக்கிறவர்களுக்கு தேறுதலையுண்
டுபண்ணத்தக்க தேறின போதகங்களுஞ் சன்மார்க்கத்தில்
தேறியிருக்கிறவர்களை தீர்ந்த சீருள்ளவர்களாக்கத்தக்க வாக்கி

யுங்களும் அதிலுண்டு. வீரத்துவ மாட்சிமைக்கும் நேர்தவறாத நீதிக்கும் மிதமதப்பா மேனாக்குந் தீர்க்கமான ஞானசதுகரும் மாயமற்ற பிரஸ்தாபத்துக்கும் வாங்கா மனப்பிபாறுமைக்கும் தேவனது எட்டாஇரகசியஙகளுக்குங் கிறிஸ்துவின் கடும்பாடுக ளுக்குந் தேவகோபாக்கினையின பயங்கரங்களுக்குங் கிருபாசுர ஆறுதல்களுக்கும் பராமரிப்பின் செயல்களுக்கும் வரபபோன்ற உலகின் மட்டளவற்ற பேரின்பங்களுக்குமஅடுத்ததாக நாம் அறி யத்தக்கதுஞ் செய்து நடப்பிக்கத்தக்கதுமானது ஏதேதுண்டோ அதெல்லாம் இவ்வாகமத்திலுண்டு. ஆத்துமாவை புண்ணுக்கத தக்க துயரமனைத்தையும் மாற்றத்தக்க அவிழ்தம் அதிலுண்டு; எப பேர்ப்பட்ட கொடும் ரோகத்தையுந் தீர்க்கத்தக்க ஞானஅவிழ்தம் அதிலுண்டு; எப்பேர்பபட்ட படுங்காயஙகளேயும் ஆற்றசதக்க பரியாரமும் அதிலுண்டு; ஆகவேண்டிய யாவும் அதில் ஆயத் தமாயிருக்கின்றன. இபபேர்பபட்ட சங்கீதஙகளை அடிககடி வாசிப்பதும் வாசிக்கக் கேட்பதும் கவனிதது தியானிபபதும் கற்றறிந்து உட்கொள்வதும் மிக்க அவசியமும அதிபிரயோசன முமுள்ள காரியமல்லவா! ஆனபடியால்தான் இது ஆராதனை யில் மிகுத்து வழங்கப்படவும் வேதாகமததிலுள்ள மற்றப பாகங்களைபபோல் குருவானவரால்மாததிரமல்ல, ஜனஙகளா லுங்கூட முறைமாற்றி வாசிக்கப்படுவதவுந திருச்சபை திட் டப்படுத்தியிருக்கிறது.

64. வினு. சங்கீதவாக்கியங்கள் யாரால் வசனிக்கப்பட் டவை? நாம் அவைகளை எப்படி வசனிக்கத்தகும்?

விடை. சிலவை பிதாவாகிய தேவனுலுஞ் சிலவை குமா ரனுகிய தேவனுலுஞ் சிலவை உத்தமரான பக்திமான்களா லும் மற்றவை தீயோரான மனுஷராலும் வசனிக்கப்பட்டி ருக்கும். இவைகளில் நமக்குச் செல்லத்தக்கவைகளேயே தவிர மற்றவைகளை அவரவரே வாசிக்கும் பாவனையாய் நாம் வாசிக் கததகும். ஆராதனைக்குக் கூடிவந்திருககிற அநேகருக்குச் செல்லமாட்டாத வாக்கியங்கள் சங்கீதங்களில் உண்டாயிருக்க லாம். ஆனாலும் அவைகள் பெரும்பான்மையும் எந்த உத்த மனுலுந் தனக்காகச் சொல்லப்படத்தக்கவைதான். ஏனென் ருல் சரீரப்பிரகாரமாகவும் ஆத்துமப்பிரகாரமாகவும் அவர்க ளுக்குச் சத்துராதிகள் பலர் இருப்பார்கள். அற்ப சொற்பமா யாவது அதிக கொடூரமாயாவது அவர்களுக்குப் பல உபத் திரவங்கள் உண்டாயிருக்கலாம். ஆண்டவருடைய திருக்கரத் தில் அநேக நன்மைகளை பெற்றனுபவித்திருப்பார்கள். அவை

களைப்பற்றி எழுப்புதலான நல்லுணர்வு அவர்களில் உண்டா யிருக்கும். முன் உண்டாயிராவிட்டாலும் வாசிக்கும்பொழு தே மனதிற்பிறந்து வாயில் விளங்கும். அவர்கள் தனித்தனியே மனதிற்சொல்ல ஒத்துவராதவைகளைச் சபையின் நாமத்தில் யதார்த்தமாய்ச் சொல்லத்தகும். திருச்சபைக்குரிய யாவிலும் அதன் அவயவங்களாகிய இவர்களுக்கும் பங்குண்டே. தாவீது தாம் பாடிய பல சங்கீதங்களில் கிறிஸ்துவின் நாமத்திலும் வேறு சில சங்கீதங்களில் அவரது சீஷரின் நாமத்திலும் வசனித்தி ருப்பதுண்டு. அவரைப்போல நாமும் அவைகளை வசனிக்க லாமே? நாம் சங்கீதங்களை வாசிக்க வாசிக்க நமது நடக்கை களையும் நடபடிகளையும் நிலைமையையும் அவைகளோடு ஒப்ப பிட்டுப்பார்த்து, தன் உணர்வோடு வாசிக்கவேண்டும். இப்படி வாசித்தாலும் உருக்கம், பயபத்தி, மனத்தாழ்மை, மனத்திடன், நன்றியறிதல் முதலிய நற்குணங்கள் நமது உள்ளத்திலே எழும் பித் தரித்துக்கொள்ளும். இந்தவிதமாய் நாம் வசனிக்கும் வார்த் தைகள் எல்லாம் நமக்குத் தனதம் உரிமையும் உபயோகமு முள்ளதாய்ப் பயன்படும் தருணகாலத்தில் நமக்கு உதவத் தக்க பக்திக சன்நிதியத்தை நமக்குள் பெற்றும், அடைந்தும், அனுபவித்தும் வருகிறவர்களாயிருப்போம்.

65 வினா. பல சங்கீதங்களில் தாவீது ராஜா தமது சத்து ராதிகளுக்கு விரோதமாகச் சாபமொழிகளை வசனித்திருக்க, அவைகளை ஆராதனையில் மிகுத்து வழங்குவது சரியா என்ற ஆட்சேபனைக்குச் சமாதானஞ் சொல்லு?

விடை. இவ்வித சாபமொழிகள் தாவீதின் சுய சத்துராதி களையல்ல தேவனுக்கும் அவரால் அபிஷேகம்பண்ணப்பட்ட வருக்கும் விரோதிகளான தீயோரையே குறிக்கும். அவ்வி ரோதிகளில் முற்றாய் எல்லாரையும் அல்ல, அடங்காத துன் மார்க்கமுந் திரும்பாமுரட்டுக் குணமுமுள்ள சத்துராதிகளைக் குறித்தே அவை வசனிக்கப்பட்டிருக்கின்றன. அவை சபித் தல் முறைமையாக அல்ல, தீர்க்கதரிசனமுரைக்கும் பாவனை யாகமாத்திரம் வசனிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவ் வித வசனிப்புகள் பாவத்தின்பேரிலும் நமது இருதயச் சீர் கேட்டின்பேரிலும் ஆத்தும சத்துராதியின் வன்மத்தின்பேரி லும் நமக்குள் கொடிய வெறுப்பையும் அரோசிப்பையும் பிற ப்பிக்கத்தக்கவையாயிருக்கிறது.

66. வினா. சங்கீதங்களில் யூத ஆசாரமுறைமைகளுக் கடுத்த வாக்கிய வாசகம்முதலியவை மிகுத்திருக்க அவைகள் நமக்கும் ஏற்குமா?

விடை. கிறிஸ்துமார்க்க காலங்களுக்கு உபயோகமாக ஆவியானவரால் அது எழுதுவிக்கப்பட்டன, என்பதற்கு சந்தேகமில்லே. நமது ஆண்டவர் தம்மைப்பற்றி அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை முக்கியமாய் எடுத்துப் பேசுகிறார் (Luke 24. 44.). மேலும் பழைய ஏற்பாட்டுக்குரிய விஷயங்களைப் புதிய ஏற்பாட்டில் அவைகளுக்கொத்த விஷயங்களால் உணர்ந்துகொள்வதுங் கடினமல்ல நியாயப்பிரமாணமென்பது அதை நிறைவேற்றிய நாதர் அருளிய உபதேசப் பிரமாணத்தையும், எருசலேம் சீயோன் என்பவை கிறிஸ்து சபையையும், பற்பல பலிகள் நமது ஆண்டவர் செலுத்திய பலியையும் அவருடைய நாமத்தை முன்னிட்டு நாம் செலுத்தும் ஜெப தோத்திரங்களையும், பலிபீடம் என்பது இராப்போசன பந்திப்பீடத்தையும், சரீரப்பிரகாரமான சத்துராதிகள் யுத்தங்கள் முதலியவை ஆத்தும பிரகாரமாயுள்ளவைகளையுங் குறிக்குமென்று நாம் எளிதாய் உணர்ந்துகொள்ளவும் அறிந்துகொள்ளவுங் கூடுமே. பொதுப்படச் சொல்லவேண்டுமானால் பழைய ஏற்பாட்டு ஆகமங்களை எழுதினவர்களைப் பார்க்கிலும் அதிகத் தெளிவாய்ப் பொருளை அறிந்துகொள்ளத்தக்க வாக்கு வழி நமக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. சங்கீதங்களை வாசிக்கும்போதே இச்சலாக்கியத்துக்காகக் கடவுளை வாழ்த்திக்கொள்வதே நமது கடமை.

67. வினு. சங்கீதமானது சந்தோஷம், துக்கம் முதலிய பற்பல தாபங்களைப் பிறப்பிக்கத்தக்க நானாவித நடையுள்ளவைகளாகக் கலந்து நிரந்துவருவதாயிருக்க அவைகளை நெங்க ஒரேநேராய் வாசித்துக்கொண்டுவருவது சரியா என்று சிலர் சொல்லும் ஆட்சேபனைக்கு சமாதானம் என்ன?

விடை. விசேஷித்த திருநாட்களுக்கும் பண்டிகைகளுக்கும் அடுத்த விசேஷித்த சங்கீதங்களைத் தெரிந்து அதற்குத் திட்டப்படி நியமிக்கப்பட்டிருக்கின்றனவே. மேலுஞ் சங்கீதங்களைத் தொடர்ந்தேற்றியாய வாசித்துவருவது நூதன அமைப்பல்ல, நமது ரட்சகருடைய காலத்துக்கு முன்னறவேயுள்ள அமைப்புத்தான். கிறிஸ்தமானசபைகளெங்கும் இவ்வொழுங்கே நடந்ததாயிருக்க சாதாரண ஒழுங்கில் தகும் காரணமின்றி வேறுபாடுசெய்வது சரியல்லவே. சங்கீதங்கள், வாசிக்கிறவன் மனதில் வெவ்வேறு தாற்பரியங்களைப் பிறப்பிக்கத்தக்க பற்பல பாகமுள்ளவைதான். வேதாகமத்திலுள்ள மற்றப் பங்குகளிலும் இப்படியுண்டே; நீதிமொழிகள் இதற்குத்திஷ்டாந்த

மாமே. இவைகளிலும் வேதாகமதசாலுள்ள மற்றப் பங்குகளி லும் வெவ்வேறு தாற்பரியஙகளை பிறபபிககததக்க நானு வித விஷயஙகள் ஒரே அதிகாரததில கணடிருபபது உணடே; ஆனால இததகாரணததினிமிததம அவைகளை வாசிக்கலாகா தென்று யாரோ ஆடசேபிததிலலையே, ஆதலால் சங்கீதங் களைபபற்றி அபபடி ஆடசேபிகக அவசியமிலலை.

68. வினா இங்கிலீஷ ஜெபபுத்தகததிலுள்ள சங்கீதங்கள் யாரால் திருபபபபட்டன? அதிகாரம்பெற்ற வேதாகமத்திருப் புதலிலிருந்து அவை எடுக்கபபடாததற்கு முகாந்தரமென்ன?

விடை. அதிகாரம் பெற்ற வேதாகமததிருபபுதல் பிரசுரஞ் செய்யபபட்டபொழுது ஜெபபுஸ்தகததில முன்னறச் சேர்க கப்பட்டிருந்த காவர்டேலுடைய (Caverdale) சங்கீதத் திருப் புதல் தள்ளபபடவிலலை. ஏனென்றால் ஜனங்கள் அதை வழு க்கமாய் வாசிதது அபபியாசித்து அதிலுள்ள வாசக ஒழுங்கை வெகுவாய் மனதிற் கொண்டிருந்ததாலும் அது ஜனங்களுக்கு விளஙகததக்க எளிதான நடையுள்ளதாயிருநததாலும் திருத்தப படாமல் அந்தப பிரகாரமாகவே அமைத்துககொள்ளபபட் டது. தமிழ் ஜெபபுஸதகததிலுள்ள சஙகீதங்கள் இந்த முறைமைபபடியல்ல அதிகாரமபெற்ற வேதாகமத்திலுள்ள படி சேர்க்கபபட்டிருக்கின்றன. தமிழ் திருபபின வேதாகமப பஙகுகளெல்லாம் திருத்தலாகும்வரைக்கும அவை திருத்தலின் றிக் கூட்டபபட்டிருக்கன.

69. வினா. சஙகீதஙகளை வழங்குகிறதைப்பற்றி ரூபிரிக் கில் கண்டிருக்கிற சட்டமும் ஆதாரமுமென்ன?

விடை. அவைகளை வாசிக்கும்படி அல்லது பாடும்படி கற்பிககபபட்டிருபபதால் பாடுவோர் கூட்டமற்ற இடங்களில் முந்தின ஒழுஙகும், (Cathedral) கதீட்ரல் அதி சிரேஷ் டாலயங்களில பிந்தின ஒழுஙகும் நடநதேறிவருகிறது. இரு வகை ஒழுங்குக்கும் வேதாதாரமுண்டு. யூதசபையில் பாடு வது வழக்கமாயிருந்தது, கிறிஸதுசபையிலும் இவ்வழக்கம் நடந்துவந்தது. மேலும அவர கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொலவதாக என்று சங் 118. 2ல் சொல்லியிருப் பதற்கு ஒபப அன்னாள், கன்னிமரியாள், சகரியா, சிமியோன் பரமவாசிகளான பரிசுததவான்கள் முதலியவர்கள் தேவதுதி யை உரைத்ததாக வாசிககிறோம். Rev. xi. 17. 1 Sam. 2. 1. & 2 ii. Chro. 29. 30 Luke 1. 66, 67. ii 28. Eph. 5. 19. Colos. 3. 16. Rev. 7. 12.

70. வினு. சங்கீதங்களை மாற்றி மாற்றி முறைப்படி வாசிப்பதற்கு நியாயமென்ன? அவ்வழக்கத்தை உண்டுபண்ணினதார்?

விடை. இவ்வழக்கத்தைபபற்றி திட்டமான ரூபிரிக் சட்டமில்லாவிட்டாலும ,யூதர் தங்கள் ஆலயத்தில் நடப்பித்து வந்த முறையையும் சங்கீதங்களில் அநேகமானவை இயற்றப்பட்டிருக்கிற இயல்பும் இதறகு ஆதாரமாம. இவ்வழக்கம் (Ignatius) இக்னேஷஸ் என்பவரால் கிரேககசபையிலும் அம்புரோஸினால் லத்தீன்சபையிலும் ஸ்தாபிக்சப்பட்டதாகச் சொல்லபபட்டாலும பூர்வமுதல உள்ளதாக ஒப்புக்கொள்ளப்படும. இவ்வழக்கத்தைபபற்றி (Tertullian) தெர்தூல்லியன் என்பவா வசனித்திருககிறார்.

71. வினு. ஒவ்வொரு சங்கீதத்தின் முடிவில் திரித்துவ கீர்த்தனையைச் சொல்லுவானேன்?

விடை. யூதருடைய தேவாராதனைக்கென்று இயற்றப்பட்ட சங்கீதங்கள் கிறிஸ்தவர்களுடைய ஆராதனைக்கு ஏற்றவையாகும்படி தெய்வத்துவத்தின் இரகசியம் வெளிப்பட்ட அச்சுவிசேஷகாலத்தில் ஒவ்வொரு சங்கீதத்தையும் திரித்துவ உபதேச விசுவாசத்தோடு சொல்லிமுடிப்பது தகுந்ததென்று எண்ணபபடலாயிற்று.

72. வினு. இந்தக் கீர்த்தனையின் இருபங்குகளுக்கும் மூலமென்ன? இதற்கொத்த வேறு கீர்த்தனை உண்டோ?

விடை. பிதாவுக்கும் – மகிமையுண்டாவதாக என்று 'அர்த்தங்கொள்ளும். Gloria Patri என்ற இந்தக் கீர்த்தனை பூர்வமாயுள்ளது. உன்னதங்களில் மகிமை என்றர்த்தங்கொள்ளும் Gloria in exelcis என்ற கீர்த்தனைக்கு விசேஷப்படும்பொருட்டு இது சின்னக்கீர்த்தனை என்னபபட்டது. இதன் முந்தின பங்கு அப்போஸ்தலர் காலத்திலுள்ளதாக பாஸில்(Basel) என்பவர் சொல்லியிருக்கிறார்; பிந்தின பங்கோ ஆரியருக்கு விரோதமாய்க் கூட்டப்பட்டது.

73. வினு பி. P. Or. ¶. பை என்று அடையாளம் பலவிடங்களில் வழங்கப்பட்டிருக்கிறதே அதின் கருத்தென்ன?

விடை. முற்காலத்தில் வேதாகமத்தில் சங்கீதங்களைத்தவிர வேறொரு ஆகமத்துக்கும் அதிகாரப் பிரிவுகள் இருந்ததேயில்லை. யூதர்கள் தங்கள ஜெப ஆலயங்களில் இதை வாசிக்கும்படி அவைகளை பார்ஷா என்னப்பட்ட பங்குகளாகப் பிரித்திருந்தார்கள். (Pharsha) பார்ஷா என்பதற்கு வகுப்பு அல்

லது பிரிவு என்றர்த்தமாக இவ்வார்த்தையின் முதலெழுத்தாகிய P. பி என்பது அநதப் பங்கின் முகப்பில் கண்டிருக்கும். அவ்வழக்கப்படி புதிய விசேஷம் துவக்குமிடத்தில் இவ்வடையாளமாவது பை ¶. என்றதாவது கண்டிருக்கும்.

74. வினு. விசுவாச சட்டப்பிரமாணவிஷயத்தில் ரோமான்சபைக்கும் இங்கிலாந்துசபைக்கும் இருக்கப்பட்ட முக்கிய விகற்பங்களெவை?

விடை. ரோமான்சபையார் எழுதப்பட்ட பழைய புதிய ஏற்பாடுகளையும் அதோடேகூட எழுதப்படாத சில பாரம்பரியங்களையும் விசுவாசத்துக்கும் ஒழுக்கத்துக்கும் அடுத்ததாக ஏற்றத்தாழ்வின்றி ஒரேவிதமாய் அங்கீகரித்தும் நன்குமதித்தும் வருகிறார்கள்; இங்கிலாந்துசபையாரோ பரிசுத்த வேதவாக்கியங்களே இரட்சிப்புக்குப் போதுமானவைகளென்று சாதிக்கிறார்கள். (2) அவர்கள் பழையஏற்பாடாகமங்களோடுகூட தள்ளுபடி ஆகமங்களையும் சம அதிகாரம உள்ளவைகளாக ஒப்புக்கொண்டுவருகிறார்கள்; இவர்களோ இவைகள் அவைகளுக்கு ஒத்தவையென்று ஒப்புக்கொள்ளுகிறதுமில்லை; இவைகளைக்கொண்டு யாதொரு உபதேசத்தை மெய்ப்பிக்குகிறதுமில்லை. (3) ரோமான் சபையார் வல்கேற் (Vulcate) என்னும் லத்தீன்பாஷைத் திருப்புதலையே சாதாரண அதிகாரம்பெற்ற வேதாகமமாக அமைத்துப் பாடங்கள், தர்க்கவாதங்கள், பிரசங்கங்கள், விஸ்தரிப்புகள் முதலியயாவற்றிலும் அதையே கையாடிவரவேண்டுமென்றும் வேறெதையாகிலும் ஒப்புக்கொள்ளலாகாதென்றும் சாதிக்கிறார்கள்; இங்கிலாந்துசபையாரோ அதைத் தள்ளிப்போட்டு எபிரெய கிரேக்கப்பாஷைகளிலிருந்து ஒரு திருப்புதல் செய்து அதை வழங்கிவருகிறார்கள். இவ்விருவகையாருக்கும் விசுவாசச்சட்ட விஷயத்திலுள்ள முக்கியவிகற்பங்கள் இவைகளே.

75. வினு. வேதாகம வியார்த்தியைப்பற்றிய விஷயத்தில் உண்டாயிருக்கிற விபரீதக் கொள்கைகளென்ன?

விடை. தன்னிஷ்டமின்றி மேற்பட்ட அதிகாரிகளுக்கு அடக்கமாகவே வேதாகமம் வியார்த்திபண்ணப்படவேண்டுமென்று ரோமான்சபையாரும் தமது இஷ்டப்படிக்குத் தாராளமாய் வியார்த்திபண்ணலாமென்று செக்தேரியரும் சொல்வார்கள்; இங்கிலாந்துசபையாரோ திருச்சபை அதிகாரம் வேதாகமத்துக்கு விரோதமாயிருக்கலாகாதென்றும் தகும் அனுமதியின்றி தன்னாராய்ச்சியின்பேரிலேயே எவ்விஷயத்திலாவது சாதனைபுரிவது அடாதென்றும் ஒவ்வொருவரும் தந்தமது மன

அபிப்பிராயப்படி வேதாகமப்பொருளை சீர்தூக்கிப்பார்க்கலாமென்றும் எனாலும், தன் அபிப்பிராயத்திலேயே சேர்ந்து உத்தமரான முன்னோர் விளக்கிய தாற்பரியங்களைத் தள்ளலாகாதென்றும் புத்திக்கு ஒத்துவரவும் உணர்வோடு கூடியிருக்கவும் சாதாரண அனுமதி பெற்றிருக்கவுந்தக்கபிரகாரமே வியர்த்திபண்ணப்படவேண்டுமென்றும் சாதிக்கிறார்கள்.

76. வினா. பூர்வசபையில் பாடங்களுக்குப் பின் வாசிக்கபட்டதென்ன? அதின் நோக்கமென்ன? இங்கிலாந்துசபையில் அவ்வழக்கம் அனுசரிக்கபட்டுவருகிறதா?

விடை. பூர்வ சபையில் பாடஙகளுககுபபின் அவைகளில் அடங்கிய தேவசித்தம் வெளிபபடுததலுக்குத் தோத்திரமாக கீர்த்தனை ஒன்று வாசிக்கபபடும். இஙகிலாந்துசபையும் அவ்வழக்கப்படி ஒவ்வொரு பாடத்துக்குப்பின் இரண்டிரண்டு கீர்த்தனைகளைச் சேர்த்து அவைகளில் குருவானவருடைய மனதுக்கு பொருந்தியது ஒன்று வாசிக்கபபடும்படி திட்டம் செய்திருக்கிறது இவைகளில் பாடங்களுக்குப்பின் வாசிக்கும்படி அல்லது பாடியபடி சேர்க்கபபட்டிருக்கிற தேதெயாம் (Tedium), பெனிடிசிற்றி (Benedicite) என்பவை இரண்டும் மனுஷத் தோற்றலானவை; மற்றைய ஆறுமோ வேதாகமப்பங்குகள்.

77. வினா. (Tedium) தேதெயாம் என்பதற்கு அர்த்தமென்ன? இந்தக் கீர்த்தனையின் தனமையை எடுத்துரை? இது எழுதப்பட்ட காலமும் இடமுமென்ன? இது யாரால் செய்யபபட்டது? இது பிரசித்தமாயிருந்தகாலத்தில் வேறேது பிரபல்லியமாயிருந்தது?

விடை. மூலபாஷையாகிய லத்தீனபாஷையில் இப்பதங்களைக்கொண்டு இக்கீர்த்தனை துவக்குவதால அம்மொழிகளே இதற்குப் பேராயிற்று. உம்மைத் துதிக்கிறோம் தேவனே என்பதுதான் இவைகளுக்கர்த்தம் இது மிகவும் சிறந்த தோத்திரகீர்த்தனையும் நிறைந்த விசுவாச அறிக்கையும் பாவமன்னிப்புக்கும் கிருபைக்கும் நேர்ந்த அனலான மன்றாட்டுகளுமுள்ளது. ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்திலுள்ள சிறந்த வாக்கியங்களும் சுவிசேஷ சரித்திரத்தில் அடங்கிய மகத்தான சத்தியங்களும் சங்கீத ஆகமத்திலுள்ள உருக்கமான விண்ணப்பங்களும் இதிலே உண்டு. பரிசுத்த திருத்துவத்தின் சிறந்த மகத்துவத்திற்கு உள்ளபடி இது உகந்த கீதந்தான் மனுஷமார்க்கமாயுள்ள எவ்வித செய்யுட்களிலும் இதுவே முதன்

மையானதெனப்படத்தகும். பூர்வ இங்கிலீஷ் ஜெபமுறை மைகளில் இது அம்புரோஸ், அகுஸ்தீன என்பவர்களின் பாட்டு என்று அழைக்கப்படும். ஆனால் இதைச் செய்தது இன்னாரென நிச்சயமில்லை. என்றாலும் அது 5-ம் நூற்றாண்டில் காலிக்கன் சபையின் (Gallican church) பிரயோகத்துக்கென்று செய்யப்பட்டதாகவும் அதனுசியின் விசுவாசப்பிரமாணம் உண்டான காலத்தில்தானே இதுவும் உண்டானதாகவும் சொல்லப்படும். இவ்விரண்டும் ஒருவராலேயே செய்யப்பட்டதாயிருக்கலாம். ஆனால் A. D. 453ல் திரையர்ஸ் (Triers) கண்காணியாயிருந்த நைசீற்றியஸ் (Nicetius) என்பவரால் இக்கீர்த்தனை இயற்றப்பட்டதென்பதற்கு அதிக உறுதியுண்டு. Visher Caver, Stilling, Fleet என்பவர்கள் இரண்டு பூர்வ கையெழுத்துப்பிரதிகளை ஆதாரமாகக்கொண்டு இதைச் சாதிக்கிறார்கள்.

78. வினா. Tedium என்கிற கீர்த்தனை காலை ஆராதனைக்குரியதென்று அக அத்தாட்சியைகொண்டு காண்பி. அது வழங்கின தேசம் இன்னதென்று அதால் அனுமானப்படுமோ?

விடை. பெனிடிசிற்றுச் சட்டப்படி அது மாலை ஆராதனைக்கென்று குறிக்கப்பட்டது. ஆண்டவரே இந்த நாளில் பாவஞ் செய்யாதபடிக் காத்தருளும் என்ற அக அத்தாட்சிக்கிசைவாய் காலிக்கன்சபையானது காலை ஆராதனைக்குரியதென்று நியமித்திருப்பதால் அது கால் தேசத்திலேயே இயற்றப்படத்தக்கதாக தோன்றுகிறது.

79. வினா. இக்கீர்த்தனையில் எத்தனை விசேஷங்கள் உண்டு?

விடை. முககியமான மூவிசேஷங்களுண்டு. அவையான: (1) துதி தோத்திரம். நாமும் விண்ணுலகிலும் மண்ணுலகிலுமுள்ள சாவசிருஷ்டியும் ஒன்றித்து இத்துதியைச் செலுத்துகிறோம். முக்கியமாய் சம்மனசுக்களோடும் நிறைவாகரரான நீதிமான்களின் ஆவிகளோடுஞ் சேர்ந்து நாம் இத்துதியைக்கொண்டாடுகிறோம். (2) விசுவாச அறிக்கை. அளவில்லாத மகத்துவமுள்ள பிதாவாகிய உம்மை என்பதுமுதல் நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக வருவீரென்கிறதை விசுவாசிக்கிறோம், எனகிறதுவரையும் இவ்விஷயமுண்டு. இதிலுள்ள முந்தின பங்கில் பிதா குமாரன் பரிசுத்தாவியாகிய திரித்துவத்தைப்பற்றிய பொது அறிக்கையும், பிந்தின பங்கில் குமாரனைப்பற்றிய விசேஷ அறிக்கையுமுண்டு. இவருடைய தெய்வீகத்தையும், மனுஷீகத்தையும், இவர் பண்ணின அவதாரத்தையும், உத்தரித்த

மரணத்தையும், அடைந்த மகிமையையும், நியாயாதிபதியா திரும்ப வருவதையும் இதில் அறிக்கையிடுகிறோம். (3) விஃ ணப்பம். ஆதலால் விலேயுயர்ந்த என்பதுமுதல் முடிவுவரை யும் இவ்விஷயமேயுண்டு. முதலாவது பொதுப்பட தேவனு டைய ஜனத்துக்காகவும் பின்பு விசேஷமாய்த் தனிமையி நமக்காகவும் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். தேவன் அவர்க இம்மையிலும் மறுமையிலும் தற்காத்தருளவேண்டுமென் அவர்களுக்காகவும் நாம் செய்த பாவங்களை மன்னித்து இனி பாவஞ்செய்யாமல் காக்கவேண்டுமென்று நமக்காகவும் பிரார் திக்கிறோம்.

80. வினா. பரமண்டலங்கள் கர்த்தரையே நோக்கி முழக்ம் மிடுகிறது என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. அவைகளில் காணப்படுகிற ஆச்சரிய அலங்காரத் தையும் விநோதமகத்துவத்தையுந் தியானிப்பவர்கள் அவை களைச் சிருட்டித்தவருடைய மட்டளவற்ற மகிமையையும் மகத் துவத்தையும் உணர்ந்தறிய இடமுண்டாயிருக்கிறது என் பதே. சங். 19 லும் இதற்கிசைவாய் சொல்லியிருக்கிறது.

81. வினா சேனைகளின் தேவனாகிய கர்த்தா என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. தேவன் ஏராளமான தேவதூதக் கூட்டத்தாருக்கு ஆண்டவராயிருப்பதாலும் (எபி. 12. 22), அஞ்ஞானிகள் வணங்குகிற சூரிய சந்திர நட்சத்திர வானசேனைக்கு அதிபதி யாயிருப்பதாலும், பூமியின் குடிகளெல்லாரும் அவருடைய சேனைகளாயிருப்பதாலும், விசேஷமாய் யுத்தத்தில் அவரால் வழிநடத்தப்பட்ட யூதஜனத்துக்கு அவர் தளகர்த்தர்போலிருந் ததாலும், கொடிகளுடைய சேனையைப்போல பயங்கரப் படத்தக்கதாயிருக்குமென்று பழைய ஏற்பாட்டிலும் (உன். 6. 10.) அரண்களை நிர்மூலமாக்கத்தக்கதும் எல்லாமேட்டிமை யையும் நிர்மூலமாக்கி எல்லாப் புத்தியையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறதுமான ஆயுதங்களையுடையவர்க ளென்று புதியஏற்பாட்டிலும்(2 கொரி. 10: 4, 5.) குறிக்கப்பட் டிருக்கிற கிறிஸ்துசபை அவருடைய சேனையாயிருப்பதாலும், அவர் சேனைகளுடைய தேவனாகிய கர்த்தர் என்னப்பட்டிருக் கிறார்.

82. வினா. மெய்யான உம்முடைய ஒரே குமாரன் என்பதின் கருத்தென்ன?

விடை. கிறிஸ்துவானவர் நம்மைப்போல் ஞானஸ்நானத்தில் அருளப்படுஞ் சுவிகாரத்தாலல்ல, அநாதி ஜன்மிப்பின்படி மெய்த்தேவனின் மெய்த்தேவனாயிருப்பதால் மெய்யான ஒரே குமாரன் எனப்படத்தக்கவர் அவர்தான் என்பதே.

83. வினா. விசுவாசிகளெல்லாருக்கும் மோட்சராஜ்யத்தை திறந்தீர் எனபதின் கருத்தென்ன?

விடை. ஜீவனும் அழியாமையுஞ் சுவிசேஷத்தால் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் அதற்கு முன்னமை உண்டாயிருக்கவில்லையென்று சாதிக்கக் கூடாதே. அதுபோலவே நீர் மரணத்தின் கொடுமையை வென்று விசுவாசிகளுக்கு மோட்சராஜ்யத்தைத் திறந்தீரென்று சொல்லப்பட்டிருந்தாலும் அதற்கு முன் மோட்சராஜ்யம் திறவுண்டிருக்கவேயில்லையென்று சாதிக்கத்தகாது. ஆனாலும் நமது இரட்சகர் வருமுன் மனிதருக்குண்டாயிருந்த அறிவு அவருடைய வருகையால் மிருதியும் அதிகரித்ததுபோல் ஒரே ஜாதியிலும் ஒரே சனத்திலுமிருந்துமாத்திரமல்ல, பூமியின் சகல ஜனசதளங்களிலுமிருந்து தெரிந்துகொள்ளப்படும் ஏராளமான திரள்கூட்டத்தாரைப் பரம வீட்டில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக மோட்சராஜ்ய வாசல் இவரால் விரிவாய்த் திறக்கப்பட்டதென்று சொல்லப்படும். ஏனென்றால் இவருடைய மரணத்தால் அடைப்பான நடுச்சுவர் தகர்க்கப்பட்டு, மறைவாய்த் தொங்குதிரை கிழிக்கப்பட்டு, பாவிகள் கதிசேரத்தக்கதாக வாருவழி உண்டாயிற்றே.

84. வினா. கிறிஸ்து தேவரீர் மகிமையின் ராஜா என்பதைப் பற்றி கவனிக்கப்படத்தக்க விசேஷமென்ன?

விடை. சங்கீதக்காரன் 24ல் கிறிஸ்துவை மகிமையின் ராஜா என்ற நாமத்தால் அழைத்திருக்கிறான். அச்சங்கீதம் அவபூரமேறுதலைக் காட்டுஞ் சங்கீதமென்பது பிரத்தியட்சமான காரியம். இவ்விடத்தில்மாத்திரமல்ல, கொரி. 2. 8. முதலிய புதியஏற்பாட்டு வாக்கியங்களிலும் இப்பேர் அவருக்கிடப்பட்டிருக்கிறது. அவர் தேவன் என்பதற்கு இத்தால் அத்தாட்சி விளங்குகிறது. நீர் பிதாவினுடைய நித்திய சுதன் என்று இக்கீர்த்தனையில் கண்டிருப்பதற்கு இசைவாக பழைய புதிய ஏற்பாடுகள் இரண்டும் திடச்சாட்சி பகருகின்றன.

85. வினா. வழக்கப்படி இக்கீர்த்தனையின் முடிவில் திரித்துவ கீர்த்தனை சேர்க்கப்பட்டிராததேன்?

விடை. இதுதானே திரித்துவ கீர்த்தனையாயிருப்பதாலும் அக்கீர்த்தனைக்கு விரித்துரையாகவேமாத்திரம் இருப்பதாலும் இது பொருளில் மாத்திரமல்ல நடப்பிலும் மகா சிறந்த கீதமாயிருப்பதாலும், திரித்துவகீர்த்தனை இதன் முடிவில் வருவது அவசியமில்லையென்பதாக விடப்பட்டிருக்கிறது.

86. **வினா.** தீடெயம் (Te Deum) என்கிற கீதத்துக்குப் பதிலாக Benedicite என்னும் கீதத்தை வழங்கத்தகக சமயமெது? இதன் தன்மையும பொருளுமென்ன? இது எதற்கொப்பாய்ச் செய்யப்பட்டிருக்கிறது? இந்நாமத்திற்கு மூலமென்ன?

விடை. காலை முதலாம் பாடத்துக்குபபின் பெரும்பாலும் தீடெயமே வாசிக்கப்படும். ஆனால் சிருட்டிப்பின் கிரியையைப்பற்றியாவது தேவபராமரிபபின் செய்கை அதிக விநோதமாய் விளங்கிய (மூவர் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்டது முதலான) சங்கதியைபபற்றியாவது முதலாம்பாடத்தில் சொல்லப்பட்டிருக்குமானால் Benedicite என்கிற கீர்த்தனை வாசிக்கப்படும். எபிரெயருக்குள் பூர்வீகமாய் வழங்கிவந்த இச்செய்யுள் கிறிஸ்துசபையில் 4-ம் நூற்றாண்டில் பிரபலமாகத் தொடங்கிற்று. இது வேதாகமப் பங்கல்லாதிருந்தாலும் பொருளிலும் நடையிலும் 148-ம சங்கீதத்துக்கு ஒத்திருக்கிறது. சங்கீதங்களுக்கும் பாவகீர்த்தனங்களுக்குமுள்ள சாதாரணவழக்கப்படி இதிலும் முதல்வரும் லத்தின்மொழியே இதற்கு நாமமாக வழஙகபபடுகிறது. (Benedicite) என்பதற்கு அர்த்தம் வாழ்த்துங்கள் என்பதே. (தானி. 3. 23)

87. **வினா.** பெனிடிசிற்றி என்னுங் கீர்த்தனைக்கு வேறே நாமமுண்டோ?

விடை. உண்டு. மூன்றுபிள்ளைகளின் பாட்டென்றும் இதற்குப் பேர். சாதராக், மேஷாக், ஆபேதநேகோ என்பவர்கள் அக்கினிச்சூளையில் தற்காககப்பட்ட அற்புதச் செயலுக்காக இதைப் பாடியதால் இப்பெயர் இதற்கிடப்படலாயிற்று.

88. **வினா.** இக்கீதத்தில் புத்தியில்லாத ஜெந்துக்கள் தேவனைத் துதிக்கும்படி நாம் வருந்திக்கொள்வதையிட்டு சொல்லப்படும் ஆட்சேபனைக்குச் சமாதானமென்ன?

விடை. இவ்வித வசனிப்புகள் உவமான அலங்காரமாய் வழங்கப்பட்டிருக்கிறதேயன்றி மற்றப்படியல்ல. நாம் சொல்லுகிறவைகளைக் கேட்காததுங் கேட்கக்கூடாதவைகளுமான எல்லா வசனிப்புகளையும் நோக்கி இப்படி வசனிப்பது வேத

நடைக்கேற்ற சிறந்த உபமானந்தான். 148-ம் சங்கீதத்திலும் மற்றும் வேதவாக்கியங்களிலும் இந்த உபமானமுண்டு; அல்லது இவ்வித உபமானங்கள் உண்டு. ஆதலால் இதையிட் ஆட்சேபனையுண்டாகக அவசியமில்லை.

89. வினு. காலை ஆராதனையில் இரண்டாம் பாடத்துக்குப் பின்வருங் கீர்த்தனைகள் எவை? அவை எந்தச் சமயங்களில் வாசிக்கத்தக்கவை?

விடை. கிறிஸ்துவைக்குறித்தும் யோவானைக்குறித்துஞ் சகரியா சொன்ன தீர்க்கதரிசனமுள்ள Benedictus என்ற கீர்த்தனை கிறிஸ்துவின் மனிதாவதாரத்தைப்பற்றி தோத்திரமுள்ளதாயிருப்பதால் மீட்பின செயலை விசேஷித்துத் தெரிவிக்கும் பண்டிகைகளுக்கடுத்தது. ஆனால் Jubilate என்ற 100-ம் சஙகீதமானது சுவிசேஷத்தில் நிறைவாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவகிருபை, இரக்கம், உண்மைமுதலிய ஆசீர்வாதங்களுக்கு துதியாகப் பொதுவாய் வழங்கப்படத்தக்க தோத்திரபாடலாயிருக்கிறது. பெனிடிக்றஸ் என்பதற்கு தோத்திரமுண்டாவதாக அல்லது தோத்தரிக்கபபட்டவர் என்றும், யூபிலாற்றி என்பதற்குக் களிகூருங்கள் என்றும் அர்த்தமாம்.

90. வினு. மாலையாராதனையில் முதலாம் இரண்டாம் பாடங்களுக்குப்பின் வாசிக்கப்படும் கீர்த்தனைகளெவை?

விடை. முதலாம் பாடத்துக்குப்பின் (Magnificat) மாக்னிபிக்கேற் என்ற கன்னிமரியாளின் பாட்டு வாசிக்கப்படும். மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தமும் தேவன் தமது பக்தருக்கு விசேஷித்துக் காண்பித்த இரக்கங்களும் பழைய ஏற்பாட்டின் முக்கிய பொருளாயிருப்பதால் முதலாம் பாடத்துக்குப்பின் தொடர்ந்தேற்றியாய் வாசிக்கப்படுவதற்கு இது ஏற்ற கீர்த்தனைதான். ஆனால் தேவன் தமது சபையாருக்குக் கருணையாயருளிய லௌகீக ரட்சிப்பைப்பற்றி முதலாம் பாடத்தில் சொல்லியிருக்குமானால் 98-ம் சங்கீதத்தை வாசிக்கத்தகும். இரண்டாம் பாடத்துக்குப்பின் பெரும்பான்மையும் வாசிக்கப்படுவது Nunc Dimittis என்ற சிமியோன் கீர்த்தனையே. அப்போஸ்தலர் எழுதிய நிருபங்களில் கிறிஸ்துவானவர் விசுவாசக்கண்ணுக்கு காட்சியளிக்கிறதாய் காண்பித்திருக்கிறதுபோல இதில் அவர் மனுஷகண்ணுக்குக் காட்சியளிக்கிறதாய் காண்பித்திருக்கிறது. 67-ம் சங்கீதம் சுவிசேஷ பிரபல்லியத்துக்காக வேளாவேளைகளில் செய்யப்படும் ஜெபமுள்ளது.

91. **வினா.** கன்னிகையின் கீர்த்தனையில் பசியுள்ளவர்கள், ஐசுவரியவான்கள் என்று வழங்கியிருக்கிற பதங்களின் பெய ரென்ன?

விடை. பசியுள்ளவர்கள் என்பது நீதியின்பேரில் பசிதாக முள்ளவர்களையும் (மத். 5. 6.), ஐசுவரியமுள்ளவர்கள் என்பது உலகச்சிற்றின்பம் சுயஞானம் என்னும் மாயையான போக விஷயங்களின்பேரில் சாரமாய் நம்பிக்கைவைத்திருக்கிறவர்களை யுங் குறிக்கும்.

92. **வினா.** கன்னி மரியாளுக்குச் செலுத்தும் ஆராதனை ஆசாரவிஷயத்தில் இங்கிலாந்துசபைக்கும் ரோமான்சபைக்கும் இருக்கிற வித்தியாசமென்ன?

விடை. இங்கிலாந்துசபையார் அவளைப் பாக்கியவதி என் றழைத்து அவளுடைய நினைவுகூருதலைக் கொண்டாடி மெய்யான சாந்தம், உத்தமபத்தி, சுத்தாங்கநடக்கை முதலி யவைகளுக்கு மாதிரியாக அவளுடைய ஒழுக்கங்களை வியந் துகொள்வதே அல்லாமல் அதிக மொன்றுஞ் செய்கிறதில்லை; ரோமான்சபையாரோ மனிதஜாதியார் எல்லாருக்கும் சுதந்தர வீதமாய்ப் பலித்திருக்கிற சீர்கேடும் ஜென்மபாவமும் அவ ளுக்கு இல்லையென்று சாதித்து வானுலக ராஜாத்தியென்று அவளைநோக்கிப் பிரார்த்தித்து திவ்விய வல்லமையையுடைய வள் என்பதாய் அவளைநோக்கி ஜெபம்பண்ணி அவளை வண ங்கிவருகிறார்கள். இப்படி அவளை வணங்குவது தேவதூஷ ணமும் அவபத்தியுமான பாதகமல்லவா! ஏனென்றால் இவ் விஷயத்தில் முதலாம் பெரிய கற்பனையை அவர்கள் மீறி வருகிறார்கள்; இது தேவனுக்கேற்காத பாவமாயிருப்பது மன்றி அவர்கள் வணங்குகிற மரியாளுக்குங்கூட ஏற்றிராதே. இவ்விதம் நடக்குமென்று அவள் ஏற்கனவே அறிந்திருப்பாளா னால் மிகு சாந்தமும் வெகு பணிவுமுள்ள அவளுடைய நெஞ்சத்தில் வாளுருவிப் பாய்ந்தாற்போல் அவள் மனநோ வடைவாளே! அவர்கள் அவளைத் தேவனுக்குச் சமமாக்குவது மன்றி தேவனிலும் மேற்பட்டவளாக்குகிறார்கள்; ஏனென் றால், தங்கள் வேண்டுதலை அருளிச்செய்யும்படி அவள் தன் குமாரனுக்குக் கற்பிக்கும்படி அவளைநோக்கி ஜெபிக்கிறார்கள். இயேசுவானவர் புவியிலிருந்தபொழுது முதலாய் (அவருடைய சமயம் இன்னம் வராதிருக்க) அவரது தாயார்அவருக்கு கற்பனை பகரக்கூடாதிருந்ததேயானால் அவர் பரத்தில் தமது தேவமகி மையில் பிரவேசித்து, எல்லா அதிகாரத்தையுமுடைய ஏகசக்

இரவிர்த்தியாய் இப்போது வீற்றிருக்கக்கொள்ள அவள் அவருக்குக் கற்பனை வழுத்தக்கூடுவதெப்படி!

93. வினா. கன்னிகையின் கீர்த்தனைக்கும் அதற்குப் பதிலாக வழங்கப்படத்தக்க சங்கீதத்துக்கும் சம்பந்தம் ஏதாகிலும் உண்டா?

விடை. கன்னிகையின் கீர்த்தனையைப்போல் இதுவும் துதி தோத்திர கீதந்தான். மேலும் இதற்கும் அதற்கும் வார்த்தையொற்றுமை உண்டென்பது கவனிக்கப்படத்தக்க விசேஷம். முக்கியமாக இதிலுள்ள முதல் நான்கு வாக்கியங்கள் அதில் ஒரளவாய்ச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

94. வினா. சிமியோனின் கீர்த்தனை நமக்கு ஏற்குமா?

விடை. ஏற்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. சிமியோன் இவ்வார்த்தைகளை உரைத்திருப்பதில் கவனிக்கப்படத்தக்க ஓர் விசேஷமுண்டு. அதாவது, புறச்சாதியாருக்குப் பிரகாசிக்கிற ஒளியாக என்பதை முந்தியும், இஸ்ரவேலுக்கு மகிமையாக என்பதைப் பிந்தியும் அவன் வசனித்திருக்கிறான். மனதாரவோ தேவபோதனையினாலோ என்றறியோம். எப்படி என்றாலுஞ் சரி, யூதரின் எதிர்நோக்கத்துக்கும் காரியங்களின் இயல்பான ஒழுங்குகளுக்கும் எதிரிடையாக கிறிஸ்துவானவர் முந்தி புறச்சாதியாருக்கு ஒளியாகவும் அப்புறம் இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் இருக்கிறாரென்று காண்பிப்பது பரிசுத்தாவியானவருடைய நோக்கம். இரட்சண்ணியத்தை என் கண்கள் கண்டன என்று சிமியோன் உரைத்த வார்த்தைகளை நாமுஞ் சொல்லத்தகும். நமது இரட்சகரைக் கண்ணார இம்மையில் காணவில்லையென்றாலும் சுவிசேஷ சரித்திரங்களினாலும் பரிசுத்த சாக்கிரமெந்துக்களினாலும் விசுவாசத்தாலும் நாம் அவரைத் தரிசிக்கிறோம். அவருடைய சபையில் நாம் அவரைக் கண்டும் சந்திக்கவும் தனித்தியானங்களில் அவரோடு சம்பாஷிக்கவும் கூடுமே. இம்மையில் இருக்குமட்டும் நாம் அவரை விசுவாசக்கண்ணால் காண்பதே போதுமென்றிருந்து தேவனைத் துதித்துக்கொண்டு சமாதானத்தோடே இகத்தைவிட்டுப் பிரிந்துபோக நாம் எக்காலத்திலும் ஆயத்தமும் வாஞ்சையுமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இந்தடவாய்ச் சிமியோனைப் போல நாமும் இக்கீர்த்தனையை வழங்கத்தகும்.

95. வினா. சிமியோனின் கீர்த்தனைக்கும் அதற்குப் பதிலாக வழங்கப்படுஞ் சங்கீதத்துக்குஞ் சம்பந்தமுண்டா?

விடை. தேவனுடைய ரட்சண்ணியத்தைப்பற்றிய அறிக்கையே இதிலும் உண்டு. அது சரித்திர நடையைச் சேர்ந்திருந்து இது தீர்க்கதரிசன நடையுள்ளதாய் இருந்தாலும் இரண்டிலும் அவ்வொரே விசேஷந்தான் உண்டு. தேவன் ஏற்படுத்திய ரட்சண்ணியம் பூலோகத்தாரனைவருக்கும் பிரஸ்தாபமாக்கப்படும் என்ற விஷயம் இரண்டிலும் உரைக்கப் பட்டிருக்கிறது.

96. வினா. விசுவாசப்பிரமாணங்கள் அமைக்கப்படலான காரணமென்ன?

விடை. கிறிஸ்துமார்க்க ஆரம்பகாலத்தில் சுத்த உபதேசத்தைப்பற்றி பித்தலாட்டங்கள் நடவாமலுஞ் சத்தியத்துக்கு எதிரிடையாக எத்துவாதமான புரட்டுகள் உண்டுபண்ணப் படாமலுமிருந்ததால் கிறிஸ்துமார்க்கத்தமைவோர் பிரதான உபதேசங்களனைத்தையும் அறிக்கைசெய்வதற்கு திட்டமான பிரமாணமுறைமைகளை ஏற்படுத்த அவசியமிருக்கவில்லை. குருசில் அறையுண்ட மனிதனாகிய இயேசு என்பவரே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவும் தேவமைந்தனுமானவர் என்பதைமாத்திரம் அறிக்கையிடுவது போதுமென்று அக்காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. பிலிப்பு எத்தியோப்பிய பிரதானியை நோக்கி, நீ முழு இருதயத்தால் விசுவசித்தால் ஞானஸ்நானம்பெறத் தகுமென்று சொன்னபொழுது, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருக்கிறதை விசுவாசிக்கிறேன் என்றே அவன் சொன்னான். பிற்காலங்களிலோ மாம்சசிந்தையால் உபயின பலர் பல பேதமான புரட்டுகளை உண்டுபண்ணியதால் தீர்க்கமான விசுவாச முறைமைகள் அமைக்கப்பட அவசியம் நேரிட்டது. நமது ஆண்டவர் திருப்பணிவிடையை நடப்பிக்கும்படி விசேஷித்த மனிதரை அதற்கென்று பிரித்து நியமித்த நோக்கங்களில் இதுவும் ஒன்றுதான். ஆதலால் திருப்பணிவிடைக்காரர் விசுவாச ஒருமையைக் காத்துக்கொள்ள மகா கருத்துள்ளவர்களாயிருப்பது அவர்கள்பேரில் விழுந்த கடமையே.

97. வினா. அப்போஸ்தலமார் காலமுதல் இவ்வித விசுவாச முறைமைகள் அமைக்கப்பட்டிருக்குமென்பதற்கு ஆதாரமென்ன?

விடை. பற்பல சபைகளிலுள்ள விசுவாசப்பிரமாணங்களில் ஒன்றுக்கொன்று வார்த்தை இசைவுள்ள இரண்டேனுங் காணப்படுவது அரிதாயிருந்தாலும் பொருளிலோ அவை

யாவும் ஒற்றுமைப்பட்டு ஒரேமாதிரியாயிருப்பதும் அப்போஸ்தலர் எழுதிய நிருபங்களில் உபதேசமாதிரியென்றும் ஆரோக்கிய வசனங்களின் மாதிரியென்றும் விசுவாசமென்றும் விசுவாசப்பிரமாணமென்றும் பலபெயர்களால் அழைக்கப்படுவது விசுவாசமுறைமைதான் என்று விளங்குவதுமே. (ரோம. 6. 17. 2 தீமோ. 1. 13.)

98. வினா. பூர்வ இங்கிலிஷ் ஜெபமுறைமையில் விசுவாசப்பிரமாணம் எதற்குப்பின் சேர்க்கப்பட்டிருந்தது? இப்பொழுது அது தகுந்தவிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதா?

விடை. பூர்வ இங்கிலீஷ் ஜெபமுறைமையில் விசுவாசப்பிரமாணம் கர்த்தருடைய ஜெபத்திற்குப்பின் சேர்க்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிற இடத்திலேயே (Edward) 6-ம் எட்வார்டின் ஜெபபுஸ்தகத்திலும் வைக்கப்பட்டது. விசுவாசம் தெய்வவசனத்தைக் கேட்பதால் வருவதாயும் அவ்வசனம் விசுவாசமின்றி பலன்படாமையாலும் அதின் பலனைப்பெற விசுவாசத்தோடு கூடிய ஜெபஞ் செய்யப்படவேண்டுவதாலும் இப்போது விசுவாசப்பிரமாணம் வைக்கப்பட்டிருக்கிற இடம் தகுந்த இடந்தான். நாம் விசுவாசியாதவரை நோக்கிக் கூப்பிடக்கூடாதென்று இருக்கிறதாலும் (ரோம. 10. 14.) பிதாவாகிய தேவனை நோக்கி குமாரனாகிய தேவனைமுன்னிட்டு பரிசுத்தாவியாகிய தேவனின் அனுக்கிரகத்தைக்கொண்டு நாம் ஜெபிக்கவேண்டியிருப்பதாலும் ஜெபத்துக்கு முன்னே விசுவாசப்பிரமாணத்தை அறிக்கையிடுவது தகுதியே.

99. வினா. இந்த விசுவாசப்பிரமாணம் பொது ஆராதனையில் வழங்கப்படுவதால் உண்டாகும் பிரயோசனங்களெவை?

விடை. ஜெபங்களுக்குச் சட்டதிட்டமுஞ் சகல உபதேசங்களையும் பரிசோதிக்கத்தக்க உரைகல்லுமாயிருப்பதான இது பொதுவான ஆராதனையில் வழங்கப்பட்டுவருவதால் நமது ஞாபகத்தில் எப்போதும் பேராமல் பதிந்திருக்கவும் நமது சிந்தையில் தவறாமல் தனித்திருக்கவும் ஏதுவுண்டு. (2) நாம் கிறிஸ்துவின் கொடியின்கீழ்ச் சேர்க்கப்பட்டபொழுது நமக்கு ஒப்புவிக்கப்பட்ட குறிப்புமொழியாக இதை வழங்கி வருவதாலுந் திரித்துவ கடவுளோடு நமக்குண்டாயிருக்கும் உடம்படிக்கையை அதில் புதுப்பித்துக்கொள்வதாலும் அவ்வுடம்படிக்கையை கைக்கொண்டு உத்தமசேவகரும் ஊழியக்காரருமாய் நிலைத்திருக்கிறோமென்பதை இத்தால் காண்

ரிப்பதாலும் பின்னுக்கு நாம் பண்ணும் ஜெபங்களைத் தே ுன் பிரியமாய் கேட்பதற்கு அதிக ஏதுவுண்டாகும். (3) விசுவாசத்துக்கும் உபதேசத்துக்கும் அடுத்த விஷயத்தில் நமக் குள் ஒருமைப்பாடும் ஐக்கியமுமுண்டென்றும் நாம் பொது வான திருச்சபையில் அவயவங்களாயிருக்கிறோமென்றும் பி வரும் பொதுச் செபங்கள் அச்சபையினாலும் அச்சபைக்கா கவுமே பண்ணப்படுகின்றனவென்றும் இவ்விசுவாசத்தை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறவர்களே அச்செபங் களைப் பண்ணத்தக்கவர்களென்றும் வேறெவராகிலும் அவை களைச் சொல்லி ஜெபிக்க பாத்திரரல்லவென்றும் இத்தால் அறிக்கையிடுகிறோம். இந்தடவாய் ஜெபங்களை உரைக்க வும் அவைகளால் சுகிர்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வும் பாத்திரர் இன்னாரென்று காண்பிப்பதற்கு விசுவாசப் பிரமாணமானது தகுந்த குறிப்பாயிருக்கிறது.

100. வினு. விசுவாசப்பிரமாணத்தை உரைக்கும்போது நம் மில் காணப்படவேண்டியதென்ன?

விடை. நாம் அறிக்கையிடுகிற பரம சத்தியங்களை நமக்கு வெளிப்படுத்திய கிருபைக்காக கடவுளுக்குத் துதி தோத்திரம் செலுத்தி நன்றியறிதல் பாராட்டுவது நமது கடமை. அதனுல் விசுவாசப்பிரமாணமுடிவில் திரித்துவ கீர்த்தனையாகிய துதி தோத்திரம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விசுவாசப்பிரமாணத் தின் ஒவ்வொரு பங்கை உரைக்கும்பொழுதெல்லாம் நம்மில் நன்றியறிதல் காணப்படுவதே அவசியம். (2) நாம் உரைக்கும் ஒவ்வொரு உபதேசத்தையும் தவருத திருவாக்குரையாக மன தார அங்கீகரித்து ஒவ்வொன்றுங் குன்ருத சத்தியந்தானெ ன்று உள்ளத்தில் விசுவாசிக்கவேண்டும். நாம் எழுந்துநின்று உரைப்பதுதான் சரியென்றுணர்ந்து அதற்காக உயிரளவாய வைராக்கியம் பாராட்டுவது நமது கடமையென்று கிரகித்துக் கொள்ளவேண்டும். (3) நாம் உரைக்கும் ஒவ்வொரு உபதேச மும் நமது ஜெபங்களுக்கு ஆதாரமும் நமது நடக்கைக்குச் சட்டமுமாயிருக்கிறதென்பதை நாம் பத்தியாய்ச் சிந்தித்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் பிதாவின் சர்வவல்லமையை யும் குமாரன் பாராட்டிய அன்பையும் பரிசுத்த ஆவியால் உண்டாகும் அருள் அனுக்கிரகங்களையும் நாம் சரியானபிரகா ரம் விசுவாசித்தால் நமக்குவேண்டிய ஆத்தும சரீரநன்மைகளுக் காய் மனதார ஜெபிக்கவும் அந்நன்மைகள் யாவையும் பெற் றுக்கொள்ளலாமென்று தீர்க்கமாய் நம்பியிருக்கவும் தகுதி யுண்டாகுமே. மேலும் இருதய விசுவாசம் வாயால் அறிக்கை

யிடப்படுவதுமாத்திரம் போதாதென்று நாம் உணர்ந்து, நமது நடக்கையால் அதை மெய்ப்பிக்கவும் சாவதானமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

101. வினு. இயேசு என்ற நாமத்தை உரைக்கையில் தலைகுனியும் வழக்கத்துக்கு நோக்கமும் ஆதாரமும் என்ன?

விடை. இவ்வழக்கத்துக்கு ஆதாரம் ஏசாயா xlv. 23. பிலி. ii. 10. முதலிய வசனங்களே. ஆனால் இதைப்பற்றி ரூபிரிக் சட்டமில்லை. 18-ம் கனோனில்மாத்திரம் இவ்வாறு கற்பிக்கப்பட்டிருக்கிறது. வேதப்புரட்டருடைய தீய கோட்பாடுகளைத் தவிர்க்கவும், இயேசுவே கிறிஸ்து என்றும் அவர் மூலமாகவே சர்வ லோகத்துக்கும் இரட்சிப்பு கிடைக்குமென்றும் நாம் விசுவாசிப்பதை மெய்ப்பிக்கவுந்தக்கதாக அப்படிச் செய்யப்படும். ஏனென்றால் இயேசு என்பவர் மனிதன்தான் என்றும் பரிசுத்தாவியானவர் பரிசுத்த மனிதரில் தங்கித் தரிக்கும்பிரகாரமே இவருக்குள்ளும் வாசம்பண்ணினுரென்றும் சாதிக்கிற வேதபுரட்டர் அபபோஸ்தலர் காலத்தில்முதலாய் இருந்தார்கள். பரி. யோவான் அபபோஸ்தலன் தமது நிருபங்களில் இவ்வேதபுரட்டைக் கண்டித்திருக்கிறார். நாம் கிறிஸ்து என்ற நாமத்தையல்ல, இயேசு என்பதை உரைக்கும்போது தான் தலைகுனிந்து பணிகிறோம். மனிதனுகிய இயேசுவே சர்வலோக இரட்சகராகிய கிறிஸ்து என்று இத்தால் சாட்சியிடுகிறோம். செரிந்தஸ் இககாலத்துச் சோசினியரும் அனுசரிக்கும் கொள்கை தப்பென்று சாதிககிறோம்; இத்தால் நமக்கும் புறமதஸ்தருக்கும் வேற்றுமை தோன்றலாகிறது. நாம் பராபரன் என்ற திருநாமம் பகரப்படும்பொழுது பணிந்தாலும் அவ்வேற்றுமை தோனறாது. ஏனென்றால் யூதர் கிறிஸ்துவாகிய மேசியாவின் வருகைக்கு இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறார்களே; ஆனால் இயேசுதான் அந்த மேசியா என்பதை இவர்கள் மறுககிறார்கள். நாமோ அந்த நாமமே சர்வலோகத்தாருக்கும் அருளப்பட்ட ரட்சண்ணிய நாமமென்றும் அதையன்றி வேறே நாமம் கட்டளையிடப்படவில்லை யென்றும் காண்பிக்கும்படி இவ்விதம செய்கிறோம்.

102. வினு. விசுவாசப்பிரமாணம் சொல்லும்போது கிழக்கே திரும்பும் காரணமென்ன?

விடை. கிழக்குத்திசையானது வெளிச்சம் உதிக்குந் திசை. இது கிறிஸ்துவாகிய நீதியின் சூரியன் நமதுபேரில் உதிப்பதற்கு அடையாளமாய் இருக்கிறபடியினுலும், அந்த விடிவெ

ள்ளி நட்சத்திரத்துக்கு நாம் காத்திருந்து எழும்பவேண்டியவர் களாயிருப்பதினாலும், உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்திக்கிறதைக் காட்டும்படி இரண்டாம் நூற்றாண்டிலிருந்த தெர்துல்லியான் காலமுதல் இந்த வழக்கம் உண்டாயிருக்கிறது. இதுவுமல்லாமல் கிறிஸ்தவர்களெல்லாரும் போர்ச்சேவகர்களாய் அவர் கொடியின்கீழ் யுத்தஞ்செய்ய வேண்டியவர்களானதால் ஒரே சேவகத்தில் ஒரேமுகமாய் நின்று அறிக்கைசெய்வது தகுந்த ஒழுங்காயும் சந்திக்கிற இரட்சகரை விசுவாசத்தால் பார்த்துச் சொல்லுவதுபோலவும் இருக்கிறது. நற்கருணைப்பீடம் மேற்கே யிருந்தால் அந்த முகமாய்த் திரும்பிக்கொள்வதும் பூர்வவழக்கம். கோவில்களில் விசுவாசப் பிரமாணம் பெரிய எழுத்துக்களாய் நற்கருணை அறையின் சுவர்களில் எழுதப்பட்டிருந்தது. குருவானவர் அதைப்பார்த்து வாசிக்க வாசிக்கச் சபையார் பின்தொடர்ந்து சொல்லிக்கொண்டேபோவதும் அக்காலத்து வழக்கமாயிருந்தது. ஆகிலும் இந்த வழக்கத்துக்கு கனோன் சட்டங்களில் ஆதாரமில்லை.

103. வினா. அப்போஸ்தல விசுவாசப்பிரமாணத்தின் வியார்த்தி உரையைச் சொல்லு?

விடை. தேவ சாட்சியாய் எனக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பரம சத்தியங்களை மனதார விசுவாசித்து, அவ்விசுவாசத்தை வாயார அறிக்கையிடுகிறேன். தேவன் ஒரேயொருவர் தானென்று விசுவாசிக்கிறேன். Deut. iv. 35. 1 Cor. viii 6 அவர் சிருட்டிப்பின்படியும் Mat. ii. 10. மீட்பின்படியும Deut. xxxii. 6. சுவீகாரத்தின்படியும் 1 John iii. 1. மனித ஜாதியாருக்குப் பிதாவாயிருக்கிறாரென்றும் Heb. i. 1 & 2. John vi. 57. விசுவாசிக்கிறேன். இந்த ஒன்றான தேவன் சாவத்தையுஞ் சித்தமானபடி செய்யவும் அமைக்கவும் Isa xlv. 12. Rev. xix. 6. தமது இஷ்டபபிரகாரஞ் சகலத்தையும் ஆண்டு நடத்தவும் 1 Chro. xxix. 11. Jerem. xvi. 21. வல்லமையும் அதிகாரமுமுடைய சர்வவல்லவரென்றும், வானத்தையும் பூமியையும் அதாவது பிரபஞ்சத்தையும் அவைகளிலுள்ள சராசரமனைத்தையும் படைத்தவர் அவரேயென்றும் Exod. xx. 11. John i. 10. Col i. 16. விசுவாசிக்கிறேன். இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். இயேசு என்னுஞ் சிறப்புப் பெயருக்குரிய அர்த்தப்பிரகாரம் அவர் சர்வலோக ரட்சகராயிருக்கிறாரென்றும், Luke. i. 31. Mat. i. 21. Acts xiii. 23. கிறிஸ்து என்னும் பட்டப்பெயரையும் உடையவரும் பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவருமான

மேசியா அவர்தானென்றும் Genesis xxi. 12, xlix. 10. Mala. iii. 1. விசுவாசிக்கிறேன். அவர் பரமண்டலத்திலிருந்திறங்கிவந்ததாக அறிவித்திருப்பதாலும் John vi. 38. அவர் உலகங்களையுண்டாக்கினதாக சொல்லியிருப்பதாலும் Heb i. 2. Col. i. 16. அவர் தேவன் என்ற தேவநாமத்தால் பலதரமும் அழைக்கப்பட்டிருப்பதாலும் John i. 1. பிலிப. ii. 6 & 7. 1 Tim. iii. 16. Rev. ix. 5. திவ்வியவல்லமை அவருக்கு அளிக்கப்பட்டிருப்பதாலும் John xvi. 15; v. 26. 2 Cor. iv. 4. அவர் தேவனுடைய ஒரே குமாரனுயிருக்கிறாரென்றும் எந்தச் சிருஷ்டியைப்பார்க்கிலும் நிகரற்றவிதமாய் அப்படியிருக்கிறாரென்றும் Heb. i. 13. விசுவாசிக்கிறேன. அவர் மெய்யாக யேகோவா அல்லது கர்த்தாவாயிருப்பதாலும் Hosea i. 7. Mat. iii. 3. எல்லாம் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்க அருள்பெற்றிருப்பதாலும் சங. cx. 5. ஆண்டுகொண்டுவந்த பசாசின் வல்லமையினின்று நம்மை மீட்டுக்கொண்டதாலும் Heb. ii. 14. Col. ii. 15. தமது சுய ரத்தத்தால் நம்மை தமக்கென்று மீட்டுக்கொண்டதாலும் Acts xx. 28. Ephes. i. 7. ஞானஸ்நானத்தில் நம்மை அவருடைய ஊழியக்காரராக நாம் அவருக்கு படைத்திருப்பதாலும் Rev. vi. 6, 13. அவர் நமமுடைய நாதராயிருக்கிறாரென்றும் விசுவாசிககிறேன். அவர் மெய்யான மனிதத்தன்மையை எடுத்துக்கொண்டாலும் Heb. iv. 15. மனுஷமார்க்கமாயல்ல பரிசுத்தாவியின் செயலால் அற்பதமாய் உற்பவிததாரென்றும் Luke i. 35 தாவீதின் குடும்பத்தாளும் கன்னிகையுமாயிருந்த மரியாளிடத்தில் பிறநதாரென்றும் Luke i. 27. முன்னற உரைக்கப்பட்ட வேதவாப்பிரகாரம் பட்வேண்டிய பாடுகளெல்லாம்பட்டு உதாரித்தாரென்றும் Isaiah liii. 9. Mark ix. 12. பொந்தியபிலாத்து என்ற ரோமதுரை யூதேயாவில் ஆளுகைசெலுத்திய காலததில் இப்பாடுகளெல்லாம் அவருக்கு நேரிட்டனவென்றும் மத். 27. 2. அரும்பாதகரும் நீச அடிமைகளுமாய் இருக்கப்பட்ட குற்றவாளிகளுக்குரிய தண்டனையாகிய சிலுவையின் உபாதைக்குள்ளாகி இந்தவைாய் உத்தரித்தார் என்றும் Luke xxiii 26. Mark xv. 37. ஒரு கெஷநுல் அடக்கம்பண்ணப்பட்டு பிரிந்துபோகும் ஆவிகளுக்குரிய பொதுஸ்தலமாகிய பாதாளங்களில் இறங்கினுரென்றும் Isa. i. 14. Psalm xvi. 10. அவர் தாமே சொல்லியிருக்கிறபடி Mat. xxvii. 63. குருசில் அறையுண்டதற்குப் பின்னுன மூன்றுந்தினத்தில் திரும்ப உயிர்த்தெழுந்தார் என்றும் Mat. xvi. 21. Mark ix. 31. தெளிவான அநேகம்

சாக்ஷிகளால் தம்மைப் பலருக்குக் காண்பித்தபின் முற்காலத்துத் தீர்க்கதரிசனப்படி சங். 68. 18. மீகா. 2. 13. பிரத்தியட்சமாயும் மகிமைப்பிரஸ்தாபத்தோடும் பரமண்டலத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் என்றும் Luke xxiv. 50, 51. Acts i. 9 & 10. வேறெவரும் பெற்றுக்கொள்ளாததும் Heb. i. 13. ஆரானுலகில் மேலான மகா மகத்துவம்பொருந்தியதுமான 1 Kings ii 19. Heb. viii. 1. பிதாவின் வலபக்கத்தில் வீற்றிருக்கும் மகிமையைப் பெற்று Luke xxii. 69. 1 Peter iii. 22. பாவம். Rom. vii. 14. சாத்தான், Heb. ii. 14. மரணம 1 Cor. xv. 26. என்ற கொடுஞ் சத்துராதிகள்மேல் வெற்றிசிறந்தவராய்த் தமது ஞான ஆளுகையைக் காண்பித்தாரென்றும் உலக முடிவில் உயிருள்ளோரையும் 1 Thes. iv. 15. 1 Cor. xv. 51. மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களையும் மத். 25. 32. நியாயந்தீர்க்கும்படி அவர் சகல அதிகாரமும் அடைந்தவராய் John v. 22 27. Acts xvii. 31. தூதசேனையோடு 2 தெச. 1. 7. மத். 25. 31. மகா மகிமையில் வெளிப்படுவார் என்றும் விசுவாசிக்கிறேன்.

மெய்யான தேவனும் திரித்துவத்தில் மூன்றாவதாகிய பரிசுத்தாவியையும் விசுவாசிக்கிறேன். அவர் யாதொரு குணமாயாவது சக்தியாயாவது இராமல் உள்ளபடி ஓர் வஸ்துவாகவே இருக்கிறாரென்றும் Ephe. iv. 30. Romans viii. 26. Acts x. 19. தேற்றரவாளனென்று Acts v. 3, 4. அழைக்கப்பட்டிருக்கிறவர் இவர்தானென்றும் விசுவாசிக்கிறேன. மேலும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தால் உலகிலிருந்து பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டு அவருடைய சித்தத்துக்கொத்தபடி செய்து நிறைவேற்றிவருகிற ஒருசபை இந்தப் பூமியில் உண்டென்றும் அச்சபை ஒரே காலத்தையாவது ஒரு ஜாதியையாவது தழுவினதாயிராமல் எத்தேசகாலத்துக்கும் செல்லத்தக்க சாதாரண தன்மைபொருந்தியிருப்பதால் பொதுவான சபையாயிருக்கிறதென்றும் Mat. xxviii. 19. அச்சபையில் பரிசுத்தவான்களும் அசுத்தவான்களும் கலந்திருந்தாலும் பரிசுத்தமாகுதலுக்கென்றே அவர்கள் அச்சபையில் அழைக்கப்பட்டவர்களானதால் அது பரிசுத்த திருச்சபையாயிருக்கிறதென்றும் மத். 28. 19. லூக். 24. 47. விசுவாசிக்கிறேன். பிதாவாகிய தேவனோடும் 1 John i. 3. குமாரனாகிய தேவனோடும் John xvii. 21. 1 Cor. i. 9 பரிசுத்த ஆவியாகிய தேவனோடும் பிலி. 2. 1. Romans viii. 9. பூமியிலுள்ள பரிசுத்தவான்களோடும் 1 John i. 7. ஜீவித்துப்போன பரிசுத்தவான்களோ

டும் Heb. xii. 22, 23. ஐக்கியமுடையவர்களும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கூட்டமுமாகிய 1 Cor. vi. 51. Ephe. i. 13. பரிசுத்தவான்களின் ஐக்கியமுண்டென்று விசுவாசிக்கிறேன். நமது பாவங்களினிமித்தம் நாம் தேவனுடைய நீதிக்கு உத்தரவாதம்பண்ணக் கடனாளிகளாயிருந்தாலும் 1 John iii. 4. மத். 5. 22. அப்பாவங்களுக்குப் பூரண திருப்தியைச் செலுத்தித் தீர்க்க கிறிஸ்துநாதருடைய ரத்தத்தின்மூலமாய் Mat. xx. 28. 2 Cor. v. 18. Romans v. 10. Col. i. 20. ஞானஸ்நானத்தில் மாத்திரமல்ல Acts ii. 38; xxii. 16. Eph. v. 26. அதின்பின்பு உத்தம மனஸ்தாபத்தைப் பாராட்டும் எப்பொழுதும் 1 John iv. 10, 21. பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் விசுவாசிக்கிறேன். மாம்ச உயிர்த்தெழுதல் உண்டாயிருக்குமென்றும் மாண்டொழிந்த உடலை உயிர்த்தெழச்செய்ய சர்வவல்லவரால் கூடுமென்றும் Luke i. 37. Acts xxvi. 8. மத். 10. 28. அது நடக்குமென்று யூதர் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்களென்றும் Job xix. 25. Daniel xii. 2. சுவிசேஷ ஏற்பாட்டிலும் இதைப்பற்றிய வார்த்தைப்பாடுண்டென்றும் Rom. xiv. 9; viii. 11. 1 Cor. xv. 21. மரித்ததேகமே திரும்ப உயிர்க்குமென்றும் 1 Cor. xv. 23. Rom. viii. 2. 2 Cor. v. 10. நல்லோர்க்கும் தீயோர்க்கும் இவ்வுயிர்த்தெழுதலுண்டென்றும் 1 Cor. xv. 22. John v. 28. விசுவாசிக்கிறேன். கடைசியாக நித்தியஜீவனுண்டென்றும் தீயோர் நித்திய நிர்பாக்கியத்தை அனுபவிப்பார்களென்றும் மத். 52. 45, 46; 10. 20. Luke iii. 17. Rev. xx. 10. நல்லோர் சகலவித சஞ்சலத்துக்கும் நீங்கலாகி Rev. xxi. 4. தேவனைத் தரிசித்து 1 Cor. xiii. 12. 1 John iii. 2. சொல்லமுடியாத பெரு திரள் பேரின்ப சலாக்கியங்களைப் பெற்று 1 Cor. ii. 19. மகிமையில் வாழ்ந்து சுகித்திருப்பார்களென்றும் விசுவாசிக்கிறேன். ஆமென்.

104. வினா. நாம் அறிக்கையிடும் ஒவ்வொரு உபதேசத்திலும் நாம் கைக்கொள்ள யாதொரு கடமையுண்டென்று காட்டு?

விடை. சர்வவல்லமையுள்ள தேவனை விசுவாசிப்பதில் அவரை நேசிப்பதும் அவருக்குப் பயந்து கீழ்ப்படிந்து நடப்பதும் நமது கடமை. அவர் இயேசு என்பதில் அவர்மூலமாய் ரட்சிப்பையும் அவர் கிறிஸ்து என்பதில் தீர்க்கதரிசியாகிய அவர் அருளும் போதகத்தையும் ஆசாரியராக அவர் சம்பாதித்த பாவ நிவாரணையையும் ராஜாவாக அவர் அருளும் ஆதரவையும் நாம் தேடிக்கொள்ளவேண்டும். ஒரேபேறான குமாரனு

கிய அவர்மூலமாய் புத்திரசுவீகாரத்தைப் பெற்றுக்கொள்வதும் நமது கர்த்தராகிய அவரைச் சேவித்து வணங்குவதும் நமது கடமை. அவர் அற்புதமாய் உற்பவித்ததற்காக விசுவாசத்தோடும் அவர் மனுவுரு எடுத்ததற்காக மனத்தாழ்மையோடும் அவர் பாடுகளை உத்தரித்ததற்காக பொறுமையோடும் அவரைச் சேவிக்கவேண்டும். அவர் சிலுவையில் அறையுண்டார் என்பதில் நமது பாவத்தைச் சிலுவையில் அறையவும், அவர் பாதாளங்களில் இறங்கினார் என்பதில் மரணத்தையும் மறுமையையும்பற்றித் தியானிக்கவும், அவர் உயிர்த்தெழுந்தார் என்பதில் நவமான நடக்கையை விளக்குவிக்கவும், அவர் பரத்துக்சேறினார் என்பதில் நமது சிந்தையில் பரவசமாகவும், அவர் திரும்ப வருவார் என்பதில் அவர் வருகைக்கென்று நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும், அவர் நியாயந்தீர்க்க வருவார் என்பதில் நம்மை நாமே ஆராய்ந்து பரிசோதனைசெய்யவும் நாம் சதறுக்கொள்ள வேண்டும். பரிசுத்தஆவியானவரிடத்தில் ரட்சண்ணிய கிருபையைத் தேடிக்கொள்ளவும் கிறிஸ்துவின் சபையில் மேலான அழைப்பின் பங்குபெயரையும் பரிசுத்த சபையில் மாசற்ற சுத்தாங்கத்தையும் பொதுவான சபையில் ஜெபங்கள் சாக்கிரமெந்துக்கள் சகோதர அன்பு சமாதானம் முதலிய சலாக்கியங்களையும் பெற்றுக்கொண்டு, பரிசுத்தவான்களின் ஐக்கியத்துக்கு பின்னபேதமற நடந்துகொள்ளவும் பாவமன்னிப்பைப் பெற்று வாசியான உயிர்த்தெழுதலையடைந்து நித்திய ஜீவனைக் கண்டடையவும் நமது ஜீவகாலமெல்லாம் முயற்சிசெய்வது நமது கடமை. இக்கடமைகளையெல்லாம் நாம் உள்ளபடி நிறைவேற்றிவருகிறோமா என்று நமது உள்ளத்தில் வினவி, ஆமென்று கண்டால் இன்னமும் அப்படியே நிலைத்திருக்கவும அல்ல என்று கண்டால் இனியாகிலும் அப்படிச்செய்து நடப்பிக்கவும சாவதானமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

105. **வினா.** காலை மாலை ஆராதனையில் மூன்றும் பங்கில் செய்யப்பட்டிருக்கிற திருத்தல்களெவை? இந்தப் பங்கு பூர்வ ஜெபமுறைமைகளுக்கு எவ்வளவுதூரம ஒத்திருக்கிறது? ராஜாத்திக்காகவும் ராஜகுடும்பத்துக்காகவும் செய்யப்படும் ஜெபங்கள் தகுந்தபடி ஊடே வைக்கப்பட்டிருக்கிறதா?- அவைகளுக்கு வேதாதாரமென்ன?

விடை. இப்பங்கில் விசுவாசப்பிரமாணத்துக்குப் பின் பாவ அறிக்கையும் பாவவிமோசனக் கூறலும் முன்னமே சேர்க்கப்பட்டிருந்தன; ஆனல் பின்பு அவை சுருக்கப்பட்டு முத

லாம்பங்கில் கூட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு மாறுதல தவிர பின்வருகிற லெசர் லித்தானியா அல்லது சின்ன லித்தானியாவும் (Lessor Litany) சுருக்கஜெபங்களும் பூர்வ இங்கிலீஷ் ஜெபபுத்தக ஒழுங்குப்படி இருக்கின்றன. ஜெபபுஸ்தகமானது 1662ல் திருத்தப்படும் முன்னதாக ராஜாவுக்காகவும் ராஜகுடும்பத்துக்காகவும் செய்யப்படும் ஜெபங்கள் லித்தானியாவின் முடிவில் சேர்க்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவை ஜெபபுத்தகமாதிரிப்படி இடமாறி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. இவை நடையிலும் பொருளிலும் ஏறக்குறைய ஆதிச் சபையில் வழங்கின ஜெபங்களுக்கு ஒத்திருக்கின்றன. மேலான அதிகாரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து அடங்கும்படி வேதம் கற்பிக்கிறபடியினாலே அவை தகுந்தபடி கூட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

106. வினா. சின்ன லித்தானியா என்பதென்ன? அது இங்கே வழங்கப்படுவதேன்?

விடை. பூர்வசபையார் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி ஜெபிக்குமுன் சில ஆபத்தமொழிகளை வழங்குவதுண்டு. முதலாம்பங்கில் பாவ அறிக்கையும் பாவ விமோசனமும் கூறுதலும் அச்செபத்திற்கு முன்னிற்கும். இவைக்கேற்க இப்பங்கிலும் அதற்கு முன்னதாக இந்த ஸ்தலத்திலுள்ள ஒவ்வொருவருடைய நாமத்தைநோக்கி இரக்கத்துக்காக செய்யப்படும் சுருக்க மன்றாட்டுகளாகிய இவைகளுக்கே சின்ன லித்தானியா என்று பெயர். இந்த லித்தானியா குருவானவரும் ஜனங்களும் தங்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுதற்குப் பெலத்த தைரியமாக ஒருவரை நோக்கி ஒருவர் உரைத்துக்கொள்ளும் வாழ்த்தலுக்கும் ஜெபம்பண்ணக்கடவோம் என்று குருவானவர் சொல்லும் வார்த்தைகளுக்கும் பின்னாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

107. வினா. இந்த வாழ்த்துதலின் நோக்கமும் பொருளும் என்ன? இவ்வழக்கம் எவ்விதமாய்த் தோன்றிற்று?

விடை. இவ்வார்த்தை பூர்வமாயும் வேதவசன உரையாயும் இருக்கிறது (ரூத். 2. 4. கலா. 6. 18. 2 தீமோ. 4. 22). வேதபுரட்டன் ஒருவனுக்கு வாழ்த்துதல் சொல்லக்கூடாது என்று யோவான் அப்போஸ்தலன் 2 யோ. 10ல் கற்பித்திருப்பதே இவ்விடத்தில் அவ்வாழ்த்துதல் ஊடே சேர்க்கப்பட்டதற்கு நியாயமாகலாம். குருவானவர் ஜனங்களுடன் விசுவாச அறிக்கை செய்தபின் வேதப்புரட்டாயிராமல் திருச்சபையின் மெய்யான அவயவங்களாகிய அவர்களை உபசரித்து விசுவா

த்தோடும் தேவ உதவியை முன்னிட்டும் செலுத்தப்படவேண்டிய அவர்களுடைய ஜெபங்களில் கர்த்தர் உங்களோடிருக்கக்கடவர் என்ற வாழ்த்துதல் சொல்ல, சபையார் குருவானவரைத் தங்கள் தலைவரும் பிணையாளியுமாக ஒப்புகொண்டு அவர் தங்களுக்காக ஆவியோடு ஜெபஞ்செய்யும்பொருட்டு பெலப்படுத்தப்பட அவர் உமதாவியோடும் இருக்கக்கடவர் என்று எதிர்வாழ்த்துதல் உரைப்பார்கள்.

108. வினா. ஜெபம்பண்ணக்கடவோம் என்ற வார்த்தைகள் பூர்வசபையில் யாரால் உரைக்கப்பட்டன? அந்த எச்சரிப்பின் நோக்கமும் விபரமுமென்ன?

விடை. பக்கநோக்கங்களையும் புற எண்ணங்களையுங் கவலைத்தாழ்ச்சிகளையுந் தவிர்த்து ஒரே சிந்தையோடும் உட்கருத்தோடும் ஜெபிப்பதற்கு ஏழுப்புதலாக இவ்வெச்சரிப்பு உரைக்கப்படும். ஆதிச்சபையில் உதவிக்குருவானவர் ஒருவர் ஜனங்களின் கவலைத்தாழ்ச்சியை அகற்றும்பொருட்டு உட்கருத்தாய் ஜெபம்பண்ணக்கடவோம் என்றும், பின்னும் அதிக உட்கருத்தாய் ஜெபம்பண்ணக்கடவோம் என்றும் அடிக்கடி கூறுவார்.

109. வினா. கர்த்தருடைய ஜெபத்துக்கு முன்னிற்கும் மூன்று சுருக்க ஜெபவாசகங்களைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. திரித்துவத்தில் ஒவ்வொரு வஸ்துவையும் நோக்கி இவை உரைக்கப்படும். இரக்கத்துக்காக இவைகளில் மன்றாடுகிறோம். தேவ அமைப்பான கர்த்தருடைய ஜெபத்துக்குமுன் இவை வழங்கப்படுவது தகுதிதான். இவை இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் இருகாரியங்கள் விளங்கும். (1) நாம் யாரை ஆராதிக்கிறோமென்பது:— கர்த்தருடைய ஜெபமும் பின்வரும் ஜெபங்களும் பரிசுத்த திரித்துவத்தைநோக்கியே செலுத்தப்படுகின்றன. கர்த்தருடைய ஜெபமுகவுரையில் பிதாவே என்று கண்டிருந்தாலும் திரித்துவத்தில் முதலாம் வஸ்துமாத்திரமல்ல, மற்ற இருவருங் கூடக் குறிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் பிதாவே என்றல்ல, எங்கள் பிதாவே என்றுதான் சொல்லி ஜெபிக்கிறோம். (2) நாம் எப்படி ஆராதிக்கிறோமென்பது:— பிதாவாகிய அவரிடத்தில் பிள்ளைபபதியாய் நாம் சேர்ந்து ஆராதிக்கவேண்டும். யூதர் பயப்படுவதற்கான அடிமைத்தனத்தின் ஆவியைப் பெற்றிருந்ததால் அவர்கள் பிதா என்ற நாமத்தை ஜெபங்களில் வழங்கவேயில்லை (ரோமர்,

8. 15.). கிறிஸ்தவர்களாகிய நாமோ அவரை அப்பா, பிதாவே என்றழைக்கும் புத்திரசுவீகாரத்தின் ஆவியை ஞானஸ்நானத்தில் பெற்றுக்கொண்டவர்களாயிருக்கிறோம். பூர்வ கிறிஸ்தவர்களுக்குள் காற்றிக்குமேனர் என்பவர்கள் விசுவாசத்தை அனுசரிக்கிறவர்களும் கற்கிறவர்களுமாயிருந்தாலும் ஞானஸ்நானம் பெறுமுன் தேவனைப் பிதா என்றழைக்கவும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவும் அபாத்திரராக எண்ணப்பட்டார்கள். இசசெபம் பரி. நற்கருணை ஒழுங்கில்மாத்திரம் அப்பொழுது வழங்கிவந்ததற்கு காரணமுமிதுவே. அந்த ஒழுங்கு வாசிக்கப்படுமுன் இவர்கள் ஆலயத்திலிருந்து அனுப்பிவிடப்படுவார்கள்.

110. வினா. கர்த்தருடைய ஜெபம் இவ்விடத்தில் இரண்டாந்தரமாக சேர்க்கப்பட்டிருக்கிற நோக்கமென்ன? ஆராதனை ஒழுங்கில் கர்த்தருடைய ஜெபம் அடிக்கடி வழங்கப்படுவதால் கூறியது கூறல் என்கிற குற்றத்திற்கு இடமாகிறதா?

விடை. முதற்பங்கிலே கர்த்தர் தமது ஊழியக்காரர்மூலமாய் கூறும் பாவவிமோசனத்துக்கு உறுதியுண்டாகும்படி அது பாவவிமோசனக்கூறுதலுக்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலோ அது நமது ஆத்துமசரீரத்துக்கு வேண்டிய சகல நன்மைகளையும்பற்றி பொதுமன்றாட்டுள்ள ஜெபசுருக்கமாயிருப்பதினால் தனித்தனியான மன்றாட்டுகளுக்கு முன்னதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதையன்றி அதை அடிக்கடி வழங்குவதுதானே குற்றமென்று கூறக்கூடாது. ஏனெனில் நமது ஆண்டவர் ஒரே மணித்தியானத்துக்குள்ளாக ஒரே ஜெபத்தை மூன்றுவிசை சொல்லியிருக்கிறார் (மத். 26. 44). 136-ம் சங்கீதத்தில் ஒரே வாசகம் 26 முறை வழங்கியிருக்கிறது. வீண் வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லலாகாதென்று நமது ஆண்டவர் விலக்கினபொழுது அஞ்ஞானிகளுடைய வழக்கத்தை (1 இரா. 18. 26.) குறைவுபட எடுத்துப்பேசினாரேயன்றி வேறல்ல. வீண்மொழிகளைத் திரும்பத்திரும்பச் சொல்லலாகாதென்றால் நற்பலனுள்ள வார்த்தைகளை திரும்பக்கூறல் பழுதல்லவென்று கருதலாகும்.

111. வினா. கர்த்தருடைய ஜெபத்தை உரத்தசத்தமாய்க் கூறும்படி ருபிரிக்கில் கற்பிக்கப்பட்டிருக்கின்ற முகாந்தரமென்ன? அவ்வித வழக்கம் ஆதிச்சபையில் உண்டென்பதற்கு ருபகாரமென்ன?

விடை. இவ்விடத்திலும் மற்ற இடங்களிலும் கர்த்தருடைய

ஜெபத்தை உரத்தசத்தமாய்க் கூறும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறது. சத்தத்தொனியின்றி மனதில்மாத்திரம் சொல்லிக்கொள்ளும்படி கற்பித்துவரும் ரோமான் சபைவழக்கத்தை தவிர்க்கத்தக்கதாகவும் சபையார் குருவானவரோடு சேர்ந்து தாராளமாய் ஏக ஓசையாய் அதை உரைக்கத்தக்கதாகவும் அதில் அவ்வித கற்பனை கொடுக்கப்பட்டிருக்கிறது. (Justyn the Martyr) இரத்தச்சாட்சியாகிய யுஸ்தின் என்பவர் தமது காலத்துக் கிறிஸ்தவர்கள் இந்த வழக்கத்தை அநுசரித்துவந்ததாக தமது முதலாம் நிருபத்தில் சாட்சிவிளம்பியிருக்கிறார்.

112. வினா. கர்த்தருடைய ஜெபத்துக்குப் பின்வரும் சுருக்க மன்றாட்டுகளில் நீர் தெரிந்துகொண்ட ஜனமென்றும் உம்முடைய சுதந்தரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறவை யாரைக் குறிக்கும்?

விடை. இவைகள் சங்கீத ஆகமங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. இவை யாவுக்கும் ஒரே அர்த்தந்தானுண்டு. இவை யூதரைக் குறிக்கும்படி சங்கீதத்தில் வழங்கியதுபோல் கிறிஸ்தவர்களைக் குறிக்கும்படி இங்கே வழங்கியிருக்கிறதென்று நாம் பாவித்துக்கொள்ளலாம். இவைகளெல்லாம் அஞ்ஞானிகளிலும் அவிசுவாசிகளிலுமிருந்து நம்மை வேறுபடுத்தத்தக்கதான நாமங்களேயல்லாது வேறல்ல.

113. வினா. எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும், தேவரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவரும் இல்லை என்பதின் கருத்தென்ன?

விடை. மனித இரட்சிப்பு அபத்தம்; தேவன் நமக்காக ஏற்பட்டாலோ எக்காரியமும் அனுகூலமாகும். ஆதலால் நமது சத்துருக்களெல்லாரையும் அடக்கி மடக்கவும் அந்தண்டைவாய் நமக்குச் சமாதானத்தைக் கட்டளையிடவும் வேண்டுமென்று நாம் தேவனை நோக்கிப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

114. வினா. சுருக்கஜெபங்கள் யாரைநோக்கி பண்ணப்படும்.

விடை. அவை பெரும்பாலும் பிதாவைநோக்கி குமாரனின் நாமத்தில் பரிசுத்தாவியின் அனுக்கிரகத்தைக்கொண்டு ஜெபிக்கப்படுவதாயிருந்தாலும், குமாரனையும் பரிசுத்த ஆவியையும் நோக்கி பண்ணப்படும் ஜெபங்களுண்டு. இத்தால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், நாம் குமாரனை முன்னிட்டுப் பிதாவிடத்தில் ஜெபிப்பதாயிருந்தாலும் நாம்

செய்யும் ஒவ்வொரு சுருக்கஜெபமும் குமாரனாகிய தேவனுடைய நாமத்தினாலேயே செலுத்தப்படவேண்டுமென்று திருச்சபை கற்பித்திருப்பதையும் அதற்கேற்க சகல சுருக்கஜெபங்களையும் அமைத்திருப்பதையும் கவனிக்கும்பொழுது நாம் பண்ணும் ஜெபங்கள் குறைவும் பழுதுமுள்ளவைதானென்றும, நாம் செய்கிற உட்கருத்தான வேண்டுதல்களும பக்தியான ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின இரத்தத்தால் தெளிக்கப்பட்டு அவருடைய பலியின் தூபத்தால் பரிமளிக்கப்படவேண்டுமென்றும் மற்றபடி அவை தேவனுக்கு பிரியமாயிருக்கவே மாட்டாதென்றும், கிறிஸ்துவின் இரத்தம் தமது துற்கருமங்களைமாத்திரமல்ல நற்கிரியைகளையுங்கூட சுத்திகரிப்பது அவசியமென்றும், நாம் செய்கிற எக்கிரியையானாலும் சரி,மீட்பைப் பற்றிய விசுவாசத்தால் தோன்றி அவருடைய புண்ணியங்களின்மூலமாய் செலுத்தப்படாவிட்டால் அங்கிகரிக்கப்படுவதில்லையென்றும், குமாரனாகிய தேவனையும் பரிசுத்த ஆவியாகிய தேவனையும் நோக்கி ஜெபிக்கவும் தகுமென்றும் இருவரிலொருவரை நோக்கி ஜெபிப்பது மூவரையும் நோக்கி ஜெபிப்பதுதானென்றும அறிந்துகொள்ளுகிறோம்.

115. வினா. காலை மாலை ஜெபங்களில் வாசிக்கப்படும் சுருக்கஜெபங்கள் எத்தனை? அவற்றில் மாறுதலுண்டா?

விடை. கர்த்தருடைய ஜெபத்தைத் தொடுத்துவரும் சுருக்கஜெபங்களுக்குப் பின்னும் லித்தானியா வாசிக்க நியமிக்கப்பட்டிருக்கிற நாட்களில் லித்தானியாவுக்கு முன்னும் மூன்று சுருக்க ஜெபங்கள் வாசிக்கப்படும். இவைகளில் முந்தினது அந்தந்த ஞாயிறுகளுக்கும் திருநாட்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற சுருக்கஜெபமாம். அது மாறிமாறி வரும்; பிந்தின இரண்டுமோ மாறமாட்டாது.

116. வினா காலைமாலை ஜெபஒழுங்கில் அடிக்கடி வாசிக்கப்பட்டுவருகிற ஜெபங்களின் பொருளென்ன? அவைகள் அந்தந்த வேளைக்கு முறையே ஏற்றவைகளென்று காட்டு?

விடை. நாம் லௌகிக அலுவல்களின் ஜோலியாயிருக்கும் பொழுது ஆகாத மனுஷருடைய சதிமோசங்களுக்கும் தீவினைகளுக்கும எதுவானவாகளாயிருப்பதால் காலை ஆராதனையில் சமாதானத்துக்காக சொல்லிய இரண்டாம் சுருக்கஜெபம் நாளின் ஆரம்பத்தில் செய்யப்பட ஏற்றதுதான். கிருபைக்காக சொல்லிய மூன்றாம் சுருக்கஜெபமோ நம்மைச் சூழ்ந்திருக்கும் மோசங்களுக்கும சாதனைகளுக்கும் [illegible] இரக்கமாய்

காக்கப்படும்படி செய்யப்படும். நாம் இரவில் அமைந்த மனச் சாட்சிப் பொருந்தி அமரிக்கையாய் அனந்தலாடத்தக்கதாக சமாதானத்துக்கு என்று சொல்லிய இரண்டாம் சுருக்க ஜெபம் மாலையில் வாசிக்கப்படும். இரவின் மோசங்களும் விக்கினங்களும் நீங்கத்தக்கதாக செய்யப்படும் மூன்றும் சுருக்கஜெபமும் சமயத்துக்கு ஏற்றதுதான்.

117. வினு. சமாதானத்தின் அருமையைக் காண்பிக்கத்தக்க சில விசேஷங்களைச் சொல்லு?

விடை. சமாதானமானது பூமிக்கடுத்த சகல ஆசீர்வாதங்களையும் குறிக்கிறதாக வேதாகமத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. அது மோட்சலோக நன்மைக்கு முன்குறிப்பு. இச்சுருக்க ஜெபத்தில் தேவனை சமாதானத்திற்கு காரணரென்றும் (ஏசா. 45. 7.), ஏகசிந்தையை விரும்புகிறவர் என்றும் அழைக்கிறோம் (சங். 133. 1.). கிறிஸ்துவானவர் தமது சீஷருக்கு வைத்துவிட்டுப் போனது சமாதானந்தான். சமாதானத்துக்காகவே ஜெபித்தார்; சமாதானத்துக்காக வரிசெலுத்தினார்; சமாதானத்துக்காக கண்ணீர்விட்டார்; சமாதானத்துக்காக இரத்தஞ்சிந்தினார். அப்படியானால் சமாதானம் மிகவும் அருமையானதுதானே. உள்ளாகவும் புறம்பாகவும் நாம் சமாதானம் பெற்றிருப்பது மிகவும் அவசியம்; மற்றப்படி நாம் பத்தியில் தரிகொள்வது அரிது (1 தீமோ. 2. 2.). ஆனால் சமாதானத்துக்காக ஜெபிக்கிறவர்கள் சமாதான பேதமற நடக்கவும் சாவதானமாயிருக்கவேண்டும். ஆத்துமாவின் நிலைமையைக் காண்பிக்கும்படி ஒருவர் வசனித்திருக்கிற தியானமாவது, "மடக்காவலன் ஒரே ஒருவன் விருந்தாளிகளோ அநேகர். அவர்களெல்லாரும் ஒரே அறையிலிருந்துகொண்டு அவனைப் பலசணியண்டை வாவென்றும், வேறொருவன் சாப்பாடு கொண்டுவாவென்றும், இன்னொருவன் படுக்கையைக் காண்பியென்றும், இன்னொருவன் மேல் தட்டுக்கு வாவென்றும், மற்றொருவன் கீழ்த்தட்டுக்கு வாவென்றும் அவனுக்குக் கற்பிக்கிறதாயிருந்தால், அவன் அவர்களெல்லாருக்கும் இதமியமாய் நடந்துகொள்ளக்கூடாமல் மிகுதியும் கஷ்டப்படுவானே. சுபாவப்படி என் ஆத்துமாவின் நிலைமையும் இவ்வண்ணமே இருக்கின்றது. அது பாவத்துக்கு பணிவிடையாளாய்மாத்திரமல்ல, அதைப்பார்க்கிலும் நீச அடிமையாயிருக்கிறது. பெருமை, என்னைப பலசணியண்டை வந்து வேடிக்கை பாரென்றும், பெருந்திண்டி போஜனங் கொண்டுவாவென்றும், அசதியும் மேலெழுச்சியும் படுக்கைக்கு வாவென்றும், ஆணவம்

மேல்தட்டுக்கு வாவென்றும், பொருளாசை கீழ்த்தட்டுக்கு வாவென்றும் என்னை அழைக்கின்றன. நன்மைக்கு எதிரிடையான தீமைகள் மாத்திரமல்ல, ஒன்றுகொன்று ஒவ்வாமையுள்ள தீமைகளும் என்மேல் ஆளுகைசெலுத்துகின்றன. கர்த்தாவே, பங்கபபாடுள்ள இவ்வித நிலைமையினின்று என்னை விடுவித்தருளும், பாவத்துக்கு அடிமைப்பட்டிருக்கிற என்னை உமதடிமையாக்கிக்கொள்ளும், உமக்கு ஊழியஞ்செய்கிறதே மெய்ச்சுயாதீனம், ஏனெனறால் தேவரீர் தனியேகநாயகன், நீர் எப்பொழுதும் ஒருகணடசீராயிருக்கிறீர், உமது கற்பனைகள் ஒன்றையொன்று விரோதிக்காது, அவை உமது மகிமையை விளக்கி எனக்கு நன்மையை பெருக்குகின்றன" எனபதே. (Fullers Centem platiom.)

118. வினா. சமாதானத்திற்காகச் சொல்லிய சுருக்க ஜெபத்துக்கும் தேவகிருபைக்காக சொல்லிய சுருக்கஜெபத்துக்கும் சம்பந்தமுண்டா?

விடை. முந்தினது சரீரத்திற்கு அவசியமான உலக நன்மைகளைப் பற்றியது; பிந்தினது ஆத்துமத்துக்கு அவசியமான ஞான நன்மைகளைப் பற்றியது. தணடனையாகிய தீமையினின்று தற்காக்கப்படும்படி முந்தினதில் ஜெபிக்கிறோம்; பாவமாகிய தீமையினின்று தற்காக்கபபடும்படி பிந்தினதில் ஜெபிக்கிறோம். சமாதானம் நனனடக்கைக்கு அவசியமாதலால் சமாதானத்துக்காக முந்தினதிலும, நன்னடைக்காகப் பிந்தினதிலும் மன்றாடுகிறோம. ஆகாதவர்களுக்குச் சமாதானமில்லையென்று தேவன் சொல்லுகிறார். கிறிஸ்துவானவர் அருளும் சமாதானம் உலகந் தரக்கூடாததும் எல்லாப் புத்திக்கும் மேலானதுமான சமாதானந்தான்.

119. வினா. இராஜாத்திக்காகவும், ராஜகுடும்பத்துக்காகவும், குருமாருக்காகவும், சபையாருக்காகவும் சொல்லிய ஜெபஙகள முந்தின இரு சுருக்க ஜெபங்களுக்குச் சம்பந்தப்பட்டவைதானென்று காட்டு.

விடை. சமாதானம் தேசாசாரவிஷயத்தில் சிறந்தது; தேவகிருபை வேதாசாரத்தில் சிறந்தது. முந்தினது தேச அதிகாரிகளின் நீதியாளுகையால் பரிபாலனப்படும்; பிந்தினது வைதீக அதிகாரிகளின் திருப்பணிவிடைமூலமாய் அளிக்கப்படும். ஆதலால் முந்தின இரு ஜெபங்களும் பின்வரும் ஜெபங்களுக்கு சம்பந்தப்பட்டவைதான்.

120. வினா. தேச அதிகாரிக்காக ஜெபிப்பது அவசியமென்று காட்டு.

விடை. இப்படி ஜெபிப்பது ஆதிகிறிஸ்தவர்களுக்குள் பிரஸ்தாபமாயிருந்த வழக்கமானதாலும், இப்படி ஜெபிப்பதற்கு வேத அனுமதியும் கட்டளையும் இருப்பதாலும், இப்படிச் செய்வது தன்னிலேதானே நியாயமுந் தகுதியுமானதாயிருப்பதாலும் இப்படிச் செய்வது அவசியமே (1 தீமோ. 1. 2.). நமது அதிகாரிகளின் நன்மைக்காக ஜெபிப்பது நமது நன்மைக்காக ஜெபிப்பதற்குச் சமானந்தான். மேலும் அவர்கள்மேல் விழுந்த கடமைகள் மிகவும் பாரமானவைகளும் வருத்தமானவைகளுமாயிருப்பதாலும் அவர்கள் பாவத்துக்கினமான சோதனைகளுக்கு ஏதுவானவர்களாயிருப்பதாலும் அவர்களுக்காக ஜெபிப்பது அவசியமே. இதுவுமன்னியில் இப்படிச் செய்வதே நம்மிலுண்டாயிருக்கவேண்டிய ராஜபட்சத்துக்கேற்ற குறிப்பு. இது மார்க்கத்தின் தன்மைக்கும் கிறிஸ்தவர்கள் தரித்துக்கொள்ளவேண்டிய சற்குணத்துக்கும் ஏற்க இப்படி ஜெபிப்பது அவசியந்தான். ராஜாக்கள் பிரஜைகள் அனைவரின் சுகவாழ்வை நாடித் தேட வேண்டிய முயற்சிகளை செய்ய கடமைப்பட்டவர்களாயிருப்பதுபோல நாமும் அவர்களுக்காக ஜெபிப்பது நமதுபேரில் விழுந்த கடமையாகவே இருக்கிறது.

121. வினா. நமது சத்துருக்கள் எல்லாரையும் கீழ்ப்படுத்த என்பதின் கருத்தென்ன?

விடை. இவ்வார்த்தைகளை பலர் தப்பாய் தாற்பரியப்படுத்தி உலக ஆளுகைக்காகவும் அதிகாரப்பெருக்குக்காகவும் சத்துராதிகள்மேல் வெற்றிசிறப்புக்காகவும் ஜெபித்திருக்கிறதாக எண்ணிக்கொள்வார்கள். ஆனால் கிறிஸ்தமான பிரபுக்கள் தங்களுக்கு விரோதமாய் அநியாயமாய்ப் படையெடுத்துவருகிறவர்களினின்று தங்களைத் தற்காத்துக்கொள்ளும்படி யுத்தமாடத் தகுமேயல்லது மற்றப்படியல்ல. மற்ற விஷயங்களில் யுத்தம பண்ணுவது கிறிஸ்துமார்க்க ஒழுக்கத்துக்கு ஏற்காது. தினந்தோறும் நாம் சமாதானத்துக்காகவே ஜெபிக்கிறோம்; யுத்தத்திலும் கொலையிலுமினின்று நம்மை ரட்சித்துக்கொள்ளவேணுமென்று லித்தானியாவிலும் ஜெபிக்கிறோம். இவ்விடத்திலும் அக்கருத்தாகவே ஜெபிக்கிறோமென்று எவரும் கருதிக் கொள்ளவேண்டும். யுத்தங்கள் ஒழிந்துபோகவும், நமது ராஜாத்திக்கும் ராஜாங்கத்துக்குமுரிய நியாயமான துரந்தரம் வேற்றரசரால் அபகரிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும், சத்து

ராதிகளின் வல்லமையின்னறு நாம் தற்காக்கப்படவும், சமாதானம் ராஜ்யமெங்கும் பரிபாலனப்படவேண்டுமென்பதே இவ்வார்த்தைகளின் பொருள்.

122. வினா. ராஜகுடும்பத்துக்காக நாம் ஜெபிப்பது அவசியமா?

விடை. ராஜாங்கத்தொடர்ச்சி அற்றுப்போகாமல் பாதுகாக்கப்படுவதும், பட்டத்துக்குவரும் பின்னடியார் பாத்தியஸ்தராய் நடந்துகொள்ளும்படி அவர்கள் ஆண்டு நடத்தப்படுவதும் அவசியமானதால் அவர்களுக்காகவும் ஜெபிப்பது அவசியமே.

123. வினா. கண்காணிமார், குருமாருக்காக ஜெபிப்பது அவசியமென்று காட்டு.

விடை. தேவநாமம் மகிமைப்படுவதற்கும் மெய்ம்மார்க்கம் உலகில் பரிபாலனப்படுவதற்கும் ஏதுவாக சபை அதிகாரிகள் பக்தியும், யுக்தியும், வைராக்கியமும், பரிசுத்த நடக்கையும் உள்ளவர்களாயிருப்பது அவசியம். அநேக ஆத்துமாக்களுக்காக கணக்குக்கொடுக்கவும் சீர்பாடுண்டாகும்படி வெகுவாய் முயற்சிக்கவும் அவர்கள் கடமைப்படி இருக்கிறார்களென்பதையும், அநேக அநேக முக்கிய சோதனைகளுக்கும் வருத்தங்களுக்கும் அவர்கள் ஏதுவாயிருக்கிறார்கள் என்பதையும் கவனிக்கும்பொழுது, அவர்களுக்காக ஜெபிப்பது அவசியக்கடமை என்று விளங்குமே. ஆதிகிறிஸ்தவர்கள் தாங்கள் ஜெபம் பண்ணும்போது ஜெபங்களில் தங்கள் ராஜாவையும் கண்காணியானையும் பேர்சொல்லி ஜெபிப்பது வழக்கம்.

124. வினா. வேதாதாரப்படி சபையாவதென்ன?

விடை. நம்து ஆண்டவா தாமே உரைத்த வசனங்களுக்கு ஏற்க மெய்ப்பனும், அம்மெய்ப்பனின் சத்தத்தைக்கேட்டு நடக்கும் மந்தையுமுள்ள கூட்டமே சபை என்னப்படும். இதற்கிசைவாக சிபபிரியன் என்பவர் வசனித்திருக்கிறதாவது:— கண்காணியோடு ஐக்கியப்பட்ட விசுவாசிகளின் கூட்டமும் மேய்ப்பனைப் பற்றியிருக்கும் மந்தையுமே திருச்சபை. அச்சபை கண்காணியிலும் கண்காணிச் சபையிலும் உண்டு. கண்காணியாரோடு இராதவர்கள் திருச்சபையில் உள்ளவர்களல்ல என்பதே.

125. வினா. மகா அதிசயங்களைச் செய்கிறவர் என்பது குருமார் சபையாருக்காகச் சொல்லிய ஜெபத்துக்கு முகவுரையாக வழங்கப்படத்தக்கதுதானோ?

விடை. அவிசுவாசிகளிலும் அஞ்ஞானிகளிலுமிருந்து ஆச்சரியவிதமாய்த் தேவன் தமக்கு ஒரு சபையைச் சேர்த்துககொண்டார். சாத்தானின் வனமத்துக்கும் துன்பத்தின் மும், மூர்க்கத்துக்கும் பிரிவினைகாரரின் வீண வைராக்கியத்துக்கு நட் விலக்கமாக அதிசயவிதமாய்ச் சபையை தற்காததிருக்கிறார். ஓரேப்பில் முட்செடி தீபபற்றியெரிந்தும் அத்தால் அவிந்துபோ காமல் இருந்ததுபோல இதுவும் இருக்கிறது. அதின் தூண்க ளாகிய அபபோஸ்தலர்பேரில் ஆச்சரியமான வரப்பிரசாதங் களை அனுக்கிரகித்து, அவர்கள்மூலமாய் வேறநேகருக்கும் அவை அருளிச்செய்யப்படும்படி கருணைபுரிந்தார். தமது வச னத்தாலும் சாக்கிரமெந்துகளாலும் மற்ற எத்தனங்களாலும் விசுவாசிகளின் நெஞ்சததில் அதிசயப்பலன்கள் நடந்தேறச் செய்கிறார். அவர் தமது சபைக்காக இபபேர்ப்பட்ட அதிசயங் களை நடப்பித்தவரும் நடப்பிக்கிறவருமாயிருக்க, அச்சபைக் காகச சொல்லிய ஜெபத்தில் மகா அதிசயங்களைச் செய்கிறவர் என்று அழைப்பது மிகவும் யதார்த்தமாமே.

126. வினா. ஆரோக்கியந்தருகிற உம்முடைய கிருபை யள்ள ஆவி என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. பரிசுத்தம் அருளுகிற ஆவி என்பதே. பரிசுத்தாவி யானவரின் அருள் அனுக்கிரகம் போதகமாருக்கும் சபையா ருக்கும் அவசியமானதால் அதற்காக இச்செபத்தில் பிரார்த்தித் துக்கொள்ளுகிறோம்.

127. வினா. எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையுணடாக என்பது முடிவில கண டிருப்பதேன்?

விடை. போதகன்மாராவது சபையாராவது சுயமகிமைக்காக ஆவியின் அனுக்கிரகத்தை நாடலாகாது. பரிசுத்தாவி கிறிஸ் துவை மகிமைபபடுத்துகிறவராய் இருக்கிறதுபோல அவரு டைய அருள் அனுக்கிரகத்தைப் பெற்றவர்களும் இவருக்கு மகி மையுண்டாக நடந்துகொள்வது அவசியமே. கிறிஸ்துவானவர் நமது பரம பிதாவினிடத்தில் நமக்காக நியாயம்பேசி நமது பாவ மன்னிப்பைச் சமபாதித்தவரும் நமக்கு விடுதலையை அருளுகிற வருமாயிருப்பதால் நமது காரியக்காரரென்றும், அவா தேவனுக் கும் அவருடைய சிருஷ்டிகளுக்கும் ஒப்புரவாக்குதலை உண டாக்கி நமக்காகப் பரிந்துபேசுவதால் நமது மத்தியஸ்தரென்றும் அழைக்கிறோம்.

128. வினு. மேற்சொல்லிய ஜெபங்களுக்கு மூலமென்ன?

விடை. பெரிய கிரெகோரியினுடைய சாக்கிரமெந்தேரியிலும் இருக்கிலாந்து சபைகளிலே வழங்கிய பூர்வ முறைமைகளிலும் இந்நான்கு ஜெபங்களுமுண்டு. மூதினது அகுஸ்தீன் (Augustin) என்பவர் எழுதின தியானங்களில் குறிப்பாய் உரைக்கப்பட்டிருக்கிறது.

129. வினு. சேவ ஊழியக்காரருக்காகவும் சபைகளுக்காகவும் செய்யப்பட்டுவருகிற ஜெபம் பிற்காலத்தில் இயற்றப்பட்டதா?

விடை. குமையாருக்காகவும் சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம் 5-ம் நூற்றாண்டில் தோன்றியது என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது.

130. வினு. (Chrysostom) கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம் யாரைநோக்கிப் பண்ணப்படும்?

விடை. பிதாவைநோக்கிக் குமாரன் நாமத்திற் பண்ணப்படும் ஜெபங்களுக்கு இது ஒத்திராமல் சற்று வேற்றுமையுள்ளதாகத் தோன்றுகிறது. இரண்டுபேராவது மூன்றுபேராவது நமது நாமத்தில் கூடிவரும்பொழுது அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வோம் என்று மத்தேயு, 18 19, 20ல் நமது ஆண்டவர் அருளிய வாக்குத்தத்தம் இச்செபத்தில் எடுத்துரைக்கப்பட்டிருப்பதாலும், எங்கள் கர்த்தராகிய யேசுகிறிஸ்து வினிமித்தம் என்பது இச்செபத்தின் முடிவில் கண்டிராததாலும் இது திரித்துவத்தில் இரண்டாம் வஸ்துவானவரைநோக்கியே பண்ணப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

131. வினு. கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபமென்று அழைக்கிற ஜெபம் அவரால்தான் செய்யப்பட்டதோ? நமது ஜெபமுறைமைகளிலுள்ளபடி பூர்வ ஜெபமுறைமைகளிலும் அமைக்கப்பட்டிருந்ததா?

விடை. இது பூர்வமுள்ளதென்பது நிச்சயமாயிருந்தாலும் கிறிசொஸ்தம் என்பவரால செய்யப்பட்டதென்பதின் உண்மை நிச்சயமற்றதெனச் சாதிக்க உறுதியில்லை. Chrysostom Basil என்பவர்களால் செய்யப்பட்ட ஜெபமுறைமைகளில் அது பதியப்பட்டிருப்பது நிசமே; ஆனால் அவைகளுக்குரிய பூர்வ கையெழுத்துப் பிரதிகளில் அது தென்படுகிறதில்லை. அவர்களுடைய ஜெபமுறைமையில் அது மத்தியில் அமைக்கப்பட்டிருந்தாலும் நமது ஜெபபுஸ்தகங்களின் கடைசி இடமே அனுகூலமென்றுமுடிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நாம் செய்

யும் ஜெபங்கள் அனுகூலமாகும்பொருட்டு கிறிஸ்துவின் நாம மூலமாய் அவை செலுத்தப்படவேண்டியதானதால் கிறிஸ்துவானவரைநோக்கிச் செய்யப்படும் இச்செபம் கடைசியில் வருவது தகுதியே.

132. வினா. சபை அனுப்பிவிடப்படும்பொழுது யூதசபையிலும் பூர்வசபையிலும் கூறப்படும் ஆசீர்வாதமென்ன? முடிவில் கூறப்படும் ஆசீர்வாதத்திற்கு மூலமென்ன?

விடை. யூதசபையில் தேவசற்பனைப்படி எண். 6. 23ல் அடங்கிய ஆசீர்வாதம் கூறப்படும் பூர்வ கிறிஸ்துசபையில் அந்த ஆசீர்வாதம் கிறிஸ்துவ உபதேசம் தெளிவுற விளங்க சற்றே மாற்றப்பட்டு திரித்துவநாமத்தில் கூறப்பட்டது. தினசரி ஜெபமுறைமையின் முடிவில் பரிசுத்த பவுல் தமது பல நிருபங்களை முடிக்கும் ஆசீர்வாதமே கூறப்படும்படியாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

133. வினா. ஆசீர்வாதமுறைமையைப்பற்றி கவனிக்கப்படத்தக்க வேறு விசேஷமென்ன?

விடை. உங்கள் என்பது எங்கள் என்று மாற்றப்பட்டிருக்கிறது. அது ஆசீர்வாத வாக்கு என்னப்பட்டாலும் உள்ளபடி பரிந்துபேசுதலான ஜெபமென்றே சொல்லவேண்டும். அதைக் கூறும்பொழுது குருவானவர் முழங்கால்படியிட்டிருக்கிறார்; சபையார் தேவனை நோக்கி உள்ளத்தில் அதை உரைப்பார்கள். குருவானவர் தமக்காகவும் சபையாருக்காகவும் அதில் பிரார்த்திக்கிறார்.




VIII CHAPTER.

THE ORIGIN AND USEFULNESS OF THE THREE CREEDS IN THE PRAYER BOOK.

The Heresies condemned by them. The Importance of the doctrine of the Holy Trinity. The reading of the Athanasian Creed in the Church.

எட்டாம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணங்கள் மூன்றையும் பற்றியது.



1. வினா. விசுவாசப்பிரமாணங்களானது விசுவாசிக்கவேண்டிய காரியங்களெல்லாவற்றையுந் தெளிவுற விரிவுடக் காட்டுமா?

விடை. முக்கியமாய் விசுவாசிக்கவேண்டிய யாவும் அவற்றில் புகட்டப்பட்டிருக்குமென்பதற்குச் சந்தேகமே இல்லை. அப்போஸ்தலருடைய விசுவாசபிரமாணத்தில் பாவப்பிராயச்சித்த உபதேசம் நேராய் கூறப்பட்டிருக்கவில்லை. இந்நிமித்தம் சொசினியர் மறுத்துரைக்கப்பட்ட அவ்வுபதேசத்தை மறுதலிக்கத் துணிவதுமுண்டு. அது நேராய்க் கூறப்படாததையிட்டு அது திருச்சபையால் ஒப்புக்கொள்ளப்பட்டதில்லையென்று சாதிப்பது நியாயமல்லவே. அவ்வுபதேசம் திருச்சபையால் ஆதிதொடுத்து ஐயந்திரிபின்றி அங்கிகரிக்கப்பட்டு வந்ததால்தானே இவ்விடத்தில் தொக்குநிலையாய்மாத்திரம் காட்டப்பட்டிருக்கிறது.

2. வினு. விசுவாசப்பிரமாணங்களுக்கு பூர்வ நாமமென்ன? அந்நாமங்களுக்குக் காரணம் என்ன?

விடை. பூர்வத்தில் விசுவாசப்பிரமாணங்கள் சும்போலா அல்லது குறிப்புமொழிகள் (Symboala, watchwords) என்று அழைக்கப்பட்டன. யுத்தகளம் சேரும் வீரர் குறிப்புமொழிகளால சத்துருவையும் மித்துருவையும் விகற்பப்படுத்திப்போடுமாபபோல கிறிஸ்துவின் சிலுவைக்கொடியின்கீழ் சுத்த உபதேசத்தைப் பிடித்து நிற்கும் மெய்யன்பரினரோர சத்துருக்களாக வருபவர்களையும் மித்துருக்களாக வேஷமாறிவருகிறவர்களையும் இவைகளால் இனமறிந்து விந்நியாசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

3. வினு. திருச்சபையால் அங்கிகரிக்கப்பட்டுவருகிற விசுவாசப்பிரமாணங்கள் எத்தனை? அவைகளுக்குத் தனித்தனியே உரிமையான இலட்சணக்கூறுகளும் நாமங்களும் என்ன?

விடை. இங்கிலாந்துசபையிலும் பொதுப்பட மற்றுமுள்ள சபைகளிலும் மூன்று விசுவாசபிரமாணங்களுண்டு. இவைகளில் முந்தினது விசுவாசக்கூறல்; இரண்டாவதானது விசுவாசவிருத்தியுரை. விசேஷித்த ஓர் வேதபுரட்டுக்கு எதிரிடையாகச் செய்யப்பட்ட மூன்றாவதானது விசுவாச அரண். இவைகளுக்கு அப்போஸ்தல விசுவாசபிரமாணம், அதனேசி விசுவாசபிரமாணம், நிசேயா விசுவாசப்பிரமாணம் என்ற நாமங்கள் முறையேயுண்டு.

4. வினு. மூன்று விசுவாசப்பிரமாணங்களும் வெவ்வேறான காலங்களில் இயற்றப்பட்டனவே. இவை அந்த நிகழ்காலத்துக்குத் தக்கதாக உண்டுபண்ணப்பட்டிருப்பதில் விளங்குவதென்ன?

விடை. திருச்சபை தன் பிள்ளைகளுக்காகப் பரிந் தாய டைவான கரிசனமுங் கவலையுமே. தாயானவள் தன் பிள்ளையை அந்தந்த பருவத்துக்குத் தக்கதாக அமுதூட்டி வளர்ப்பதுபோல திருச்சபையும் செய்கிறது. கிறிஸ்துமார்க்க ஆரம்பத்தில் கிறிஸ்து இயேசுவைப்பற்றிய பொதுவான அறிக்கைமாத்திரம் அம்மார்க்கத்தை அனுசரிப்போர்க்குரிய விசுவாச முறைமையாக விதிக்கப்பட்டிருந்தது. பின்பு அப்போஸ்தல விசுவாசப்பிரமாணமானது விசுவாசமுறைக்கடுத்த தெளிவான திட்டமாக விதிக்கப்பட்டது. ஏறக்குறைய 200 வருஷங்களுக்குப்பின் நிசேயா விசுவாசப்பிரமாணம் ஏற்படுத்தப்பட்டது. இது முந்தினதற்கு ஒத்ததாகவேயிருந்தாலும் அதைப பார்க்கிலும் சற்று விரிவாயிருந்தது. ஏனென்றால் சுத்த உபதேசம் புரட்டப்படுவதாயும் வேதப்புரட்டர் தலையெடுப்பதாயும் காணப்பட்டது. உண்டாயிருந்த புரட்டுகள் வேரற்றுப் போகவும், எழும்பும் புரட்டுகளுக்கு எச்சரிக்கையாயிருக்க வுந்தக்கதாக இது இயற்றப்பட்டது. கடைசியாக அதனேசி விசுவாசப்பிரமாணம் ஏறக்குறைய 100 வருஷங்களுக்குப் பின் அமைக்கப்பட்டது. இதிலும் அவ்விசுவாசமுறைமை தானே புகட்டப்பட்டிருந்தாலும் சத்துராதிகளின் நடுவில் அகப்பட்டிருப்பவனுக்கு சொல்லப்படும் எச்சரிப்புக்கு ஒத்த தீர்க்கவசனிப்புகள் இதில் நிறைந்திருக்கின்றன. வெளியரங்கமாயென்றாலும் சரி, அந்தரங்கமாயென்றாலும் சரி, தேவமகிமையை அபகரிக்கவும், மனிதனை நித்தியஜீவனுக்கு அபாத்திரராக்கவும் முயற்சிக்கும் சத்துராதிகள் அக்காலத்தில் எழும்பியதால் அவர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கத்தக்க எச்சரிப்புகள் இதில் தீர்க்கமாய் வசனிக்கப்பட்டிருக்கின்றன.

5. **வினா.** இவைகளில் முந்தினது அப்போஸ்தல விசுவாசப் பிரமாணமென்று அழைக்கப்படுவானேன்? அப்போஸ்தலருடைய காலத்தில் இந்த விசுவாசப்பிரமாணத்திலுள்ள பல உபதேசங்களாவது, அவ்வுபதேசங்களுக்கு ஒத்த விசுவாசமுறைமையாவது பிரபலமாயிருந்ததெனபதற்கு வேத அத்தாட்சியாகிலும், பூர்வ பிதாக்களுடைய அத்தாட்சிகளாகிலும் உண்டோ? அது இப்பொழுதிருக்கிறபிரகாரம் பிரசித்தமான காலமென்ன? பூர்வ இங்கிலீஷ் ஜெபபுத்தகங்களில் இது எப்பொழுது சேர்க்கப்பட்டது?

விடை. எருசலேமில் அப்போஸ்தலமார் சங்கங்கூடினபொழுது அது இயற்றப்பட்டதென்று சொல்ல, நியாயமில்லாவிட்

டாலும் அவர்கள் போதித்த உபதேசங்கள்யாவையும் பொழிப்பாயும், தொகுப்பாயும் அடக்கிய சுருக்கம் அதிலுண்டு. வாய்விசேஷமென்றாலும் சரி, வேறுவிதமாயென்றாலும் சரி, அவர்கள் ஒப்புவித்த விசுவாசமுறைமையொன்று ஞானஸ்நானம்பெற வந்தவர்களால் மனப்பாடமாய் அறிக்கையிடப்பட்டதென்பது நிச்சயம். இது பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசமாக அதாவது, ஒரேவிசையாய் அல்லது ஆதிமுதலாய் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசப்பிரமாணமாக அழைக்கப்படுகிறது (Rom. vi. 17. Jude 3 வச.). இது அவர்களால்தானே மற்றவர்களை உபதேசிக்க சமர்த்தரான உண்மையுள்ள மனிதருக்கு ஒப்புவிக்கப்பட்டது (2. Timothy, ii 2). இதிலுள்ள உபதேசங்கள் பரி. பேதுரு பண்ணின பிரசங்கத்தில் தொகுத்துரைக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். இரேநேயுவின் கிருபத்திலும் இதின் அடக்கமுண்டு. இது ஆதியிலுள்ள பற்பல சபைகளிலும் முக்கிய வேறுபாடின்றி வழங்கிற்று. 4–ம் நூற்றாண்டில (4th Century) தோன்றிய அம்புரோஸ், ருபினஸ் என்பவர்களுடைய ஆகமங்களில் இது இப்பொழுதிருக்கிறபிரகாரம் மொழிபேதமின்றிக் கண்டிருக்கிறது 5–ம் நூற்றாண்டில் அது பொதுவாராதனையில் வழங்கப்படும்படி சட்டமுண்டாயிற்று. ஸாக்ஸன் ஜெப புஸ்தகங்களிலெல்லாம் அது காணப்படுகிறது.

6. வினா. அதனேசி விசுவாசப்பிரமாணம் தோன்றுவதற்கு நிமித்தகாரணமாயிருந்ததென்ன?

விடை. சபையில் வேதபுரட்டுகள் மிருக்க விசுவாச அறிக்கையும் மிகைபடலாயிற்று தப்பறைகள் விருத்தியாகாமல் தவிர்க்கப்படும்பொருட்டு திட்டமான உபதேசமுறைமைகள் அமைக்கப்படவும், சபையில் சேர்பவர்கள் முக்கிய உபதேசங்களையும் விசேஷமாய கிறிஸ்துமார்க்கத்துக்கு மூலாதாரமாகிய திரித்துவ உபதேசத்தையும் திட்டமாய் அறிக்கையிடும்படி கண்டிப்பாய்க் கற்பிக்கப்படவும் அவசியம் நேரிட்டது. இவ்வுபதேசத்தைப் புகட்டிய மற்றும் விசுவாசமுறைமைகள் இருந்தபோதிலும் அவைகளுக்கு விருத்தியுள்ளயான அதனேசி விசுவாசப்பிரமாணம் ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வழங்கப்படுத்தப்பட்டது

7. வினா. இந்த விசுவாசப்பிரமாணத்தால் கண்டிக்கப்படுகிற வேதபுரட்டுகளைச் சொல்லு?

விடை. 1–வது பரிசுத்த திரித்துவத்தைப்பற்றியும் (வசக்.

3. 28.), 2-வது கிறிஸ்துநாதருடைய தெய்வீகத்தைப்பற்றியும், மனுஷீகத்தைப்பற்றியும் இரண்டு தன்மைகளின் சேர்த்திக்கை யைப்பற்றியும் (29-42.), 3-வது பரிசுத்தாவியைபபற்றியும் (வாக். 3. 28.) பல வேதப்புரட்டுகள் எழும்பியிருந்தன.

8. வினா. பரி. திரித்துவத்தை மறுத்தவர்கள் யார்?

விடை. 1-வது. கிறிஸ்துநாதர் மனிதனும்மாத்திரம் இருந்தா ரென்று இரண்டாம் நூற்றாண்டில் பைசான்றன் பட்டணத்து தியோடொத்தவை என்பவன் போதித்தபடி மானிக்கேயர் என்னப்பட்டவர்கள் பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற மூன்று ஆட்களில்லையென்று சாதித்தார்கள்.

2-வது. பிதாவாகிய தேவனே மனுடாவதாரம்பண்ணி சிலு வையில் பாடுபட்டாரென்று இரண்டாம் நூற்றாண்டில் பிரி கியாபட்டணத்துப் பிராக்சியாஸ் என்பவன் போதித்தபடி பாத்திரிபாஷன்ஸ் (Patripassions) என்பவர்கள் சாதித்தார்கள்.

3-வது. தேவன் ஒரே ஆளென்றும், பிதா குமாரன் பரிசுத் தாவி மூவரும ஒரே ஆளென்றும், பிதா தாமே சிருட்டிகர், மீட்பர், பரிசுத்தருசெய்கிறவர் என்ற முத்தொழிலாய் விளங்கு கிறாரென்றும் மூன்றும் நூற்றாண்டில் எகிபதிய குருவாயிருந்த சபெல்லியஸ் என்பவன் சாதித்தான். தெய்வத்துவத்தில் ஆட்க ளைக் கலவாமலிருக்கவேண்டுமென்பது இவர்களைபபற்றி சொல் லியிருக்கிறது.

9. வினா. கிறிஸ்துநாதருடைய தெய்வீகத்தன்மையை மறுத்த வர்கள் யார்?

விடை. 1-வது. தேவன் நித்தியராயிருக்கவேண்டியது அவ சியமானபடியால் கிறிஸ்துநாதா நித்தியரல்லவென்று அனுமா னிக்கும்படிக்கும், தேவனல்லவென்று காட்டும்படிக்கும், குமா ரனனவர் இல்லாதகாலம் ஒன்றிருந்தது என்று 319-ம் வருஷத் தில் அலெக்சந்திரியாபட்டணத்து குருவாயிருந்த ஆரியூஸ் என் பவன் சாதித்தான். பிதாவானவர் குமாரனை ஜெனிப்பித்தா ரென்றால் ஜெனிப்பிக்கப்பட்டவருக்கு ஒரு உற்பத்தியல்லது துவக்கமிருக்கவேண்டும். ஆகையால் அவர் இல்லாத காலமி ருந்தது என்று சொன்னாலும் அவருடைய தெய்வீகத்தை மறுக் கவில்லை. விசுவாசப்பிரமாணத்தில் 6-10 வாக்கியஙகள் தெய் வத்தில் தெய்வமானவர், ஒரேதன்மையுடையவர் என்பவை களும் ஆமோ அவுசியாஸ் (Homoousios) என்ற குறிப புச்சொற்களுங் காணப்படுகிறது. இவனுடைய கொள்கை 325ல் நிசேயா சங்கத்தாரால் தள்ளப்பட்டது.

2-வது. ஸெமி-ஆரியன்ஸ் என்னப்பட்டவர்கள் ஓரேதன்மையுடையவர் என்பதை ஆரியனைப்போல மறுத்து அதைப்போலொத்த ஒரு தன்மையுடையவர் என்றர்த்தமுள்ள ஆமுாய் அவுசியான் (Homoiousion) என்று சாதித்தார்கள்.

3-வது. சுவீகாரஸ்தர் (Adoptionists) என்னப்பட்டவர்கள் நமது ஆண்டவர்மாத்திரம் தேவனுக்கு ஒரேபேறின குமாரனல்ல, புத்திரசுவீகாரத்தினால்மாத்திரம் தேவனுடைய குமாரனென்று சாதித்தார்கள். இவர்கள் ஸ்பானியாதேசத்தில் எட்டாம் நூற்றாண்டில் தோன்றி இவர்கள் கொள்கை 794-ம் வருஷத்தில் பிராங்குபோர்ட் சங்கத்தால் தள்ளப்பட்டது.

10. வினா. கிறிஸ்துவின் மனிததன்மையை மறுத்தவர்கள் யார்?

விடை. 1-வது. தோசித்தர் (Docitea) என்பவர்கள் கிறிஸ்துவின் சரீரம் வாஸ்தவமானதல்ல; அது ஆவேசமானதும் பரம தன்மையுள்ளதென்றும சொல்லி தம்முடைய தாயின் தன்மையையுடைய மனுஷனாகவும் நரதேசமும்பொருந்திய குறைவற்ற மனுஷனாகவும் இருக்கிறாரென்பதை மறுத்தார்கள்.

2-வது. லவோதிக்கேயில் கி. பி. 362-ம் வருஷத்தில் கண்காணியாயிருந்த அப்பாலிநேரியு (Apollinario) என்பவன் கிறிஸ்துநாதருக்கு பகுத்தறிவுள்ள ஆத்தமா இல்லையென்றும் தெய்வீகவார்த்தையே மனது அல்லது பகுத்தறிவுள்ள ஆத்துமாவுக்குப் பதிலாக இருந்ததென்றும் ஆரியூ தெய்வதன்மையின் பூரணத்தை மறுத்ததுபோல இவன் அவருடைய மனுஷதன்மையின் பூரணத்தை மறுத்தான்.

3-வது. அலெக்சந்திரியா சபையில் 5-ம் நூற்றாண்டில் தோன்றின மானுவிசைட்ஸ் (Monophysites) என்பவர்கள் கிறிஸ்துவுக்கு ஒரே சுபாவம் அல்லது தன்மைமாத்திரம் உண்டென்று சாதித்தார்கள்.

4-வது. 7-ம் நூற்றாண்டில் தோன்றின மானுதெலைட்ஸ் (Monothelites) என்பவர்கள் கிறிஸ்துவுக்கு இரண்டு தன்மைகளிருந்தாலும் அவருக்கு ஒரே ஒரு சித்தம்மாத்திரம் உண்டென்று சொல்லி, அவருடைய மனுஷீகத்துக்குரிய சித்தத்தையும் பூரண மனுஷீகத்தையும் மறுத்தார்கள்.

11. வினா. கிறிஸ்துவின் இருதன்மைகளையும் ஒன்றோடொன்று கலந்து போதித்தது யார்?

விடை. 1-வது. 5-ம் நூற்றாண்டில் கொன்ஸ்தாந்தபுரியில் கண்காணியாயிருந்த நெஸ்தோரியு (Nestorius) என்பவன் கிறிஸ்துவில் இரண்டு தன்மைகளிருப்பதுபோல் இரண்டு வெவ்வேறான ஆட்களும் (Persons) இருக்கிறார்களென்றும், பரிசுத்த கன்னிமரியாளைத் தேவமாதா (Theotokos) என்று சொல்லாமல் கிறிஸ்துவின் மாதா (Christotokos) என்று சொல்லவேண்டுமென்றும் போதித்தான்.

2-வது. 5-ம் நூற்றாண்டில் தோன்றின கிரேக்க சந்நியாசியாகிய இயற்றிக்கு (Eutyches) என்பவன் கிறிஸ்துவின் இரண்டு தன்மைகளும் ஒன்றாகச் சேர்ந்துபோயிற்றென்று சொன்னான். நெஸ்தோரியு கிறிஸ்துவின் தன்மைகளை பிரித்தான், இவனோ கலந்தான். இந்தக் கொள்கை 451-ம் வருஷத்தில் கால்சேதோன் சங்கத்தாரால் கண்டிக்கப்பட்டது.

12. வினு. பரிசுத்தாவிக்கு விரோதமான வேதப்புரட்டர்கள் யார்?

விடை. 1-வது. 2-ம் நூற்றாண்டில் பிரிகியாவிலுள்ள மாந்தேரு என்பவனால் தோன்றின மாந்தேரியா (Montanists.) தங்கள் தலைவனாகிய மாந்தேனுவை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேற்றரவாளனென்று சொன்னார்கள்.

2-வது. கி. பி. 343ல் கொன்ஸ்தாந்தபுரி கண்காணியாயிருந்த மாசிடோனியஸ் (Macedonius) என்பவன் பரிசுத்தாவியின் தெய்வீகத்தை மறுத்தான். அவனைச் சேர்ந்தவர்களில் சிலர் அவரைச் சிருஷ்டியென்றும், சிலர் அவர் குமாரனால் உண்டாக்கப்பட்டவரென்றும், தேவனல்லவென்றும் சாதித்தார்கள். இது 381ல் கொன்ஸ்தாந்திநோபுரி சங்கத்தாரால் கண்டிக்கப்பட்டு கர்த்தருமாய், ஜீவனை கொடுக்கிறவருமாய் முதலிய வாக்கியங்கள் நிசேயாவிசுவாசப்பிரமாணத்தோடே கூட்டிச் சேர்க்கப்பட்டது.

13. வினு. இதைச் செய்தவர் அத்தனாசியு என்பவரோ? இல்லாவிட்டால் இது அவர் பெயரால் அழைக்கப்படுவதேன்? அது எவ்விடத்தில் யாரால் செய்யப்பட்டது?

விடை. அத்தனாசியு இதைச் செய்தவர் அல்லவென்பது நம்பப்பட்த்தக்கது ஆனால் பரிசுத்த திரித்துவத்தையும் கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தையும்பற்றிய உபதேசங்களை நிலைநிறுத்தும்படி அவர் காட்டிய நியாயங்களும் இரட்சிப்படைவதற்கு இந்த விசுவாசம் மிகவும் அவசியமென்று அவர்கொண்டிருந்த

கொள்கையும் இதில் விவரிக்கப்பட்டிருப்பதால் அவருடைய நாமமே பிற்காலத்தில் இதற்கு இடப்பட்டிருக்கலாம். அதனுசியு இதை இராயகொடையாக யோவினியன் இராயனுக்கு செய்துகொடுத்ததாய் நிரகோரிநாசியானஸன் என்பவர் சொல்லியிருந்தாலும் கால்தேசத்துச் சபைக்கென்று கி. பி. 430ல் ஆர்ஸ்பட்டணத்துக் கண்காணியாகிய இலாரி என்பவரால் செய்யப்பட்டதாக (Waterland) வாட்டர்லாணட் என்பவர் நியாயமுரைத்திருக்கிறார்.

14. வினு. இது இங்கிலீஷ் ஜெபமுறைமைகளில் சேர்க்கப்பட்ட காலமெது? அது குருவானவராலும, சபையாராலும் மாற்றி வாசிக்கப்படுவதற்கு நியாயமெனனே?

விடை. இது 9–ம் நூறறாண்டில் இஙகிலீஷ் ஜெபமுறைமைகளில் சேர்க்கப்பட்டது. அபபொழுது இதற்கு "குவைக்கன் குவிலற்று" சங்கீதம் (Quicunquicoult) என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்தப பதஙகளுககு அர்த்தம், ஆத்துமரட்ரட்சிப்படைய விரும்புகிறவனெவனோ என்பதே. இது மற்றச சங்கீதஙகளுக்கு ஒபபாய் முறைமுறையே மாற்றி வாசிக்கப்படுவதற்கு இந்நாமமே ஆதாரமெனக் காண்கிறது.

15. வினு திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் அதைத் தள்ளிப்போடாமல் ஜெபபுத்தகத்தில் அமைத்திருப்பது புத்தியான செய்கையா? அது அபபோஸ்தலருடைய விசுவாசபபிரமாணத்துக்குப பதிலாக வழங்கபபடுகிற வேளையும் முகாந்திரமுமென்ன?

விடை. அத்தால் கண்டிக்கப்பட்ட கொள்கைகள் திரும்ப உயிர்த்து பற்பலவிதமாய் பிரசித்தமாகத் தொடங்கினதால் திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் அதைத் தள்ளிவிடாமல் அங்கீகரித்திருப்பது விவேகம்விளஙகிய செய்கைதான். இது அங்கீகரிக்கபபட்ட நோக்கம் விளங்கும்பொருட்டு திரித்துவ உபதேசம் துலாம்பரமடைய விளங்கிய பண்டிகை நாட்களிலும் மாதம் ஒருவிசை தவறின்றி வழங்கிவரும்பொருட்டு மற்றும் பண்டிகைகளிலும் அது வாசிககப்படும்படி திட்டஞ்செய்திருக்கிறது.

16. வினு. விசுவாசபபிரமாணத்தில் ஆக்கினைகூறும் பாவனையாய் வரும் வாசகங்கள் அன்புத்தாழ்ச்சிக்கும் சபித்தலுக்கும் இடமானவைகளா?

விடை. அவைகள் வேத உரையையே சாதிக்கிறவைகளாய்

இருக்ச அன்புத்தாழ்ச்சிக்கும் சபித்தலுக்கும் இடமானவை யென்று சொல்லத்தகாது. வேதத்தில கூறபபட்டிருக்கிற ஆக்கினைகள் இவைகளைவிட அதிக கண்டிபபாயும் கோரமாயும் வசனிக்கப்பட்டிருக்கின்றனவே (மாற். 16 16. John iii. 18.). நமதாண்டவர் குறித்துபபேசுகிற இரட்சிப்புக்குரிய விசுவாசமானது ஞானஸ்நானத்தில் அறிக்கையிடப்படும் விசுவ சந்தான். ஞானஸ்நானததில் செய்பபபடுகிற அறிக்கை பரிசுத்த திரித்துவத்தின்பேரிலுள்ள விசுவாசமே ஆகையால் மகா முக்கியமுள்ள இவ்வுபதேசத்தை மறுக்கிறவர்களமேல் நடது ஆண்டவரும் விசுவாசப்பிரமாணமும் கூறுகிற ஆக்கினைகள் ஒன்றுக்கொன்று பின்னமற்றிருககிறதேயனறி வேறல்ல. மேலும், திருச்சபையானது இந்த விசுவாசபபிரமாணததை உரைப்பதில் நியாயத்தீர்ப்பைக கட்டளையிடாமல் எசசரிபபையே கூறி அறிவிக்கிறது. அவிசுவாசியை எச்சரிபபது அதர்மமல்லவே.

17. வினா. வேதவசனததில் கண்டிராத சில வார்த்தைகளும் வாசகங்களும் சேர்ககபபட்டிருபபதேன?

விடை. இவ்வார்த்தைகளும் வாசகங்களும் வேதாகமத்தில் கண்டிராவிட்டாலும் இவைகளின் சாரமும் பொருளும் வேதாகம உபதேசத்துக்கு ஒத்திருக்கிறது. ஆகிலும் இவை வழங்கப் படுவதற்கு வேதப்புரட்டரான கள்ளபபோதகாகளே காரணம். இவர்கள் நூதனமும் விநோதமுமான பதங்களையும், வாசகங்களையும் அமைத்து வேத உபதேசததைப புரட்டினார்கள். இவர்கள் வழங்கிய வாசகங்களையும் வார்த்தைகளையுங்கொண்டே இவர்கள் வாயையடைககவும மெய்யுபதேசததை ஸ்தாபிக்கவுந்தக்கதாக இவ்விதம அமைத்திருக்கிறது இவ்விசுவாசப் பிரமாணத்திலாவது வேறெதிலாவது அவசியமில்லாதவைகளை விரித்துரைத்து உணர்த்தவேண்டுமென்பது திருச்சபையின் நோக்கமல்ல. உபாயதந்திரமும் மாறுபாடுமான வேத உபதேசங்கள் முற்காலங்களில் தலைபபட்டனவென்றும் பிற்காலங்களிலும் அப்படியே அவை தலையெடுபபதாயிருக்குமென்றும் அவைகளுக்கு இடங்கொடாமல் தீக்ஷமாயும் திடவுறுதியாயும் அவைகளை மறுத்து மெய்யுபதேசத்தையே பிடித்திருப்பது அவசியமென்றும் காட்டி எச்சரிக்கவேண்டும் என்பதே அதின் நோக்கம்.

18. வினா. விசுவாசப்பிரமாணத்தில் புகட்டப்பட்டிருக்கிறபடி திரித்துவ உபதேசம் பூர்வ திருச்சபையாரால் சாதாரணமாய் அங்கிகரிக்கப்பட்டதா?

விடை. ஆம்; ஆதிக்கிறிஸ்தவர்கள் இதை ஒப்புக்கொண்டார்கள். கிரேக்கை, ரோமான் சபைகளில் பலபல பேதங்கள் பரிபாலித்திருந்தும் இவ்வுபதேசம் பழுதின்றி அங்கிகரிக்கப்பட்டுவந்தது. திருச்சபை சீர்திருத்தல் அடைந்ததின்பேரில் (Protestant) சபையாரில் அதைத் தீர ஒப்புக்கொள்ளாத யாரேனும் இருந்ததேயில்லை. லுத்தர் (Luther), கால்வின் (Calvin), பீசர் முதலிய போபோன யாவரும் அதை ஒப்புக்கொண்டு தங்கள் விசுவாச அறிக்கையாக அதை அமைத்துக்கொண்டார்கள். இக்காலத்து டிசென்றர்களுக்கு முன்னோரான பியூரிற்றனர் இதை ஒப்புக்கொண்டவர்கள். இந்தடவாய் இது சாதாரண அங்கீகாரம்பெற்றிருந்தது.

19. **வினா.** தீரா அறிவீனத்தால் மோசம்போகிறவர்களும் இருப்பார்களே. இப்படிப்பட்டவர்களுக்கு இவ்விசுவாசப்பிரமாணத்தில் யாதொரு புகல் கண்டிருக்கிறதில்லையே என்னும் ஆட்சேபனைக்குச் சமாதானம் சொல்லு.

விடை. தப்பெண்ணத்தைப் பேணுமல் நல்மனச்சாட்சியை பொருந்தியிருப்பவனெவனும் இப்விதம் ஆட்சேபிப்பதற்கு இடமில்லை. ஏனென்றால், இந்த நியாயங்களைத் துணிகரத தோஷம் முரட்டாட்டதோஷம் வெறுத்துத்தள்ளாமல் தாழ்மையோடு சிந்தித்து, அறிவத்தாழ்ச்சியினால் ஒப்புக்கொள்ளாதிருக்கும் அறிவீனரும மதிகேடக குருடருமானவர்கள்பேரில் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் கண்சாடையாயிருப்பார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அப்படியே வேதாகமத்தில் சொல்லியும் இருக்கிறது; பொதுவான ஜெபபுஸ்தகத்திலும் வெளிப்படையாயல்லவென்றாலும தொக்குநிலையாயாவது அவ்விதமே காட்டியிருக்கிறது. மேலும் ஒருவன எப்பேர்ப்பட்ட பாவியாயிருந்தாலும் எப்பேர்ப்பட்ட நிர்பந்தனாயிருந்தாலும் உண்மையாய்க் குணப்பட்டு உலகரட்சகனை உத்தமமாய் விசுவாசித்து பரிசுத்தாவியின் நடத்துதலுக்குப் பணிவாய் தன்னை ஒப்புக்கொடுப்பானேயாகில் இரக்கத்தின கதவு அவனுக்கு அடைக்கப்படாமல் திறந்திருக்கும் என்று வேதாகமத்தில் மாத்திரமல்ல பொதுவான ஜெபபுஸ்தகத்திலும் புகட்டியிருக்கிறது. திருச்சபைமுறைமைகளில் எல்லாம் இவ்விசேஷம் தொக்கிநிற்கிறதாயிருக்க இவ்விஷயத்தில் ஆட்சேபனை உரைக்கலாகாது. அன்றியும் ஆண்டவரால் அமைக்கப்படவேண்டிய கிருபாகரதாட்சணியங்கள் இன்னின்னபடிதான் என்று மட்டுக்கட்டி உரைப்பது திருச்சபைக்கு அடுத்ததல்லவே.

தித்திருப்பதை நேராகவும் தெளிவாகவும் போதிப்பதே அதின் கடமை. நுட்பவிஷயங்களில் நுண்ணியைபாராட்டி சாதனை பகருவது அதற்கு ஏற்காது. இப்போப்பட்ட அறிவீனரும் கூட, விசுவாசப்பிரமாணத்தை அங்கிகரித்து, தாங்கள் அறிந்திருக்கும் திருவசன உரைப்பிரகாரம் அமைந்து நடந்து இரட்சிப்பைத் தேடிக்கொள்ளலாம். சத்தியத்தை அறியாதிருக்கிறவர்களுக்கு அருளப்படவேண்டிய தாட்சணியங்களைப்பற்றி தர்க்கிப்பதிலும், விவாதிப்பதிலும் முயற்சியாயிருப்பது நமக்கு அடுத்ததல்ல. இப்பேர்ப்பட்டவர்களுக்கு திருச்சபையானது ஆண்டவரின் வசனிப்புப்பிரகாரமே உத்தரவுவழுத்துகிறது. அதாவது, உனக்கென்ன; நீ என்னைப் பின்செல்லு, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள் தீர்க்கப்படுவான் என்பதே. 1யோவா. 2. 22. Mark xvi. 16.

20. வின. இவ்விசுவாசப்பிரமாணத்தின்பேரில் சில வெறுப்பாயிருப்பதற்கு உள்ள காரணமென்ன? மற்ற விசுவாசபிரமாணங்களுக்கும் இதற்கும் வித்தியாசம் என்ன?

விடை. மெய்யுபதேசத்தைவிட்டு யாரேனும் தப்பாய் சொல்வதற்காவது தப்பறையான கொள்கைகளை ஸ்தாபிக்கிறதற்காவது இடமில்லாமல் இதுபொருள், வசனம், வார்த்தை முதலியவற்றில் திடமாயும் தீர்க்கமாயும் இயற்றப்பட்டு நூதன கோட்பாடுகளை நிக்கிரகிக்கத்தக்க சத்திய அரணாயிருப்பதால் சிலர் இதை வெறுக்க இடமுண்டாயிற்று மற்ற விசுவாசப்பிரமாணங்களுக்கும் இதற்கும் பொருளில் வித்தியாசம் இல்லையென்றாலும் நடையில கவனிக்கப்படத்தக்க வித்தியாசம் உண்டு. மற்றவைகளில் தர்க்கவாதமுறையாயாவது நியாயங்களைக்கொண்டாவது உபதேசங்களை மெய்ப்பிக்காமல் சாதாரண நடையாய் அவ்வுபதேசங்களை அறியப்படுத்திமாத்திரம் இருக்கிறது. நாம் அறிகைபிடவேண்டிய உபதேசங்களை அவை அறிவிப்பதேயன்றி அதசாட்சிப்படுத்துகிறதில்லை இதுவோ நியாயமாய் முன் கூறியபிரகாரம் உபதேசங்களை மெய்ப்பித்து தேவத்துவத்தைப் பிரிக்கவும் திரித்துவத்தைக் கலக்கவும் கூடாதென்று தீர்க்கமாய் காண்பிக்கிறது. ஆரியு (Arius), எபியோன் (Ebion), செரிந்து (Cerinthus), மகதோனியோ (Macedonius.), நெஸ்தோரியு முதலியவர்களுடைய வேதப்புரட்டு இதில் கண்டிக்கப்பட்டிருக்கின்றன.

21. வின. திரித்துவ உபதேசம் புத்திக்கு விரோதமானதல்லவென்று காட்டு.

விடை. ஏகத்துவம்பொருந்திய தேவத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்தாவி என்னும் திரித்துவம் உண்டென்பதே திரித்துவ உபதேசமாம். தேவத்துவமானது ஏகத்துவமாயும் திரித்துவமாயும் இருக்கிறதென்று விசுவாசிக்கிறோம். பிதா ஒருவராலும் உண்டாகாதவராயிருப்பதால் முதலாவதாகவும், குமாரன் பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவராதலால் இரண்டாவதாகவும், பரிசுத்தாவி பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுவதால் மூன்றாவதாகவும், ஒழுங்குக்கேற்கச் சொல்லப்படுவது சரிதான என்று ஒப்புக்கொள்ளுகிறோம். நித்தியத்துவம், மகிமைமுதலிய விஷயங்களில் எல்லாம் மூவரும் சரி சமானர்தான் என்று சாதிக்கிறோம். தெளிந்தபுத்திக்காவது இயல்பான உணர்வுக்காவது இது பின்னமல்லவே. இவ்வுபதேசத்தை திருப்திகரமாய் அல்லது குறையறப் பூரணமாய் கிரகித்து உணர்ந்துகொள்வது நம்மால் கூடாது. அது நமது புத்திக்கு எட்டாததும் மேற்பட்டதுமான பரம ரகசியந்தான். என்றாலும் அதைக் கிரகித்து உணர்ந்துகொள்ளவேண்டுமென்றல்ல, ஒப்புக்கொண்டு விசுவாசிக்கவேண்டுமென்றே நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அது மனித கட்டுப்பாடாயிராமல் தேவ வசனப்போதனையாகவே இருக்கிறது.

22. வினா. திரித்துவ உபதேசத்தை விசுவாசிப்பது மிகவும் அவசியமென்று காட்டு.

விடை. இவ்வுபதேசம் கிறிஸ்துமார்க்க விசுவாசப்பிரமாணம் ஒவ்வொன்றோடும் சம்பந்தப்பட்டதாயிருக்கின்றது. திரித்துவ உபதேசத்தை ஒருவன் ஒப்புக்கொள்ளாவிட்டால் பாவநிவிர்த்தியையாவது தேவனண்டைக்கு மனந்திரும்புதலையாவது தேவன் பாராட்டும் இரக்கத்தையாவது கிருபாகர அனுக்கிரகங்களையாவது நீதிமானாகுதலையாவது தொகையாக ரட்சிப்பையாவது கண்டடையமாட்டான். ஏனென்றால் திரித்துவ கடவுளின் செயலாலேயே ரட்சிப்பு நடப்பிக்கப்படுகிறது. வேத உபதேசங்களெல்லாம் இவ்வுபதேசத்தில் சார்ந்து நிற்பதுமன்றி இதனோடு இணைபிரியக்கூடாதவிதமாய் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆதலால் இப்போதப்பட்ட உபதேசத்தை நாம் விசுவாசிக்கவேண்டியது மிகவும் அவசியமே.

23 வினா. நமது இரட்சகரில் இரண்டு தன்மைகளும் சேர்ந்திருப்பதைக் காண்பிக்க வழங்கப்பட்டிருக்கிற உவமானங்கள் எவை?

விடை. சரீரமும் ஆத்துமாவும்பொருந்தி ஒரே மனிதனு

யிருக்கும் உவமானமே. ஆவியும் சடமும் ஒன்றுக்கொன்று எதிரான பொருட்களாயிருந்தாலும் அவை மரணம்வரைக்கும் ஒன் [illegible] ஒன்று பிரியாதிருக்க [illegible] ரித்தபின் பொதுவான [illegible] உயிர்த்தெழுதலில் மறுபடி [illegible] தவுந்தக்கதாக இணைச் [illegible] கிறது. இது எப்படி [illegible] வகைவிவரத்தை [illegible] மல் [illegible] ஆச்சரியமா [illegible] கிறது. என்றாலும [illegible] பொருந்திய [illegible] அறிவாளிகளால் [illegible] அறிவீன [illegible] ஒப்புக்கொள்ளப் [illegible] கிறது. அப்படியே கிறிஸ்து [illegible] இருதன்மைகள் [illegible] ருப்பது எப்படியென்று [illegible] உணரக்கூடாமல் [illegible] யமாயிருந்தாலும் [illegible] கொள்ளத் தகுமென்று [illegible] வே இவ்வுபமானம் [illegible] கிறது. என்றாலும் [illegible] மாம்சத்தில் வெளிப்பட்ட [illegible] பரம ரகசியத்தை [illegible] இது போதுமான [illegible] என்பதைமாத்திரம் நாம் [illegible] அமைத்திருப்பது [illegible].

24. வினா. [illegible] என்று வழங்கியிருக்கிற வார்த்தையின் கருத்தென்ன?

விடை. கேடும் [illegible] தண்டனைகளினின்று [illegible] அதற்குரிய சாதாரண கருத்து. என்றாலும் [illegible] பாட்டில் இதைப்பார்க்கிலும் விரிவான [illegible] தாய் அது வழங்குவதுண்டு. தேவமைந்தனால் சமபாதிக்கப்பட்ட மீட்பையும் நீதியையும் தழுவிய கிறிஸ்துமார்க்க வாக்குத்தத்தங்கள் யாவையும் அது குறிக்கும். மோசம் அல்லது தண்டனையினின்று நிவிர்த்தி அடைதல்மாத்திரமல்ல நன்மை பாக்கியங்களுக்கு சுதந்தரவாளியாகுதலும் அதில் குறிக்கப்படும். இரட்சிப்பு அடைவதென்பது, கிறிஸ்து இயேசுவிலுள்ள ரட்சிப்பை நித்திய மகிமையோடேகூட அடைதல் என்று பரி. பவுலால் வருணிக்கப்படுகிறது. (2 Timothy, ii. 10.)

25. வினா. இவ்விசுவாசப் பிரமாணத்தின் அருமையைக் காண்பிக்கத்தக்க சில விசேஷங்களைச் சொல்லு. இதை ஆராதனையில் வழங்குவது அவசியமா?

விடை. கிறிஸ்துமார்க்கத்துக்கு அஸ்திபாரமான முக்கிய உபதேசங்கள் இதில் தீர்க்கமாயும் திட்டமாயும் புகட்டப்பட்டதால் பல பேதகங்களுக்கு இடமற விசுவாச ஒருமையை உபயோகமாவரவும், விசுவாசமுறைமையின் விபரம் [illegible] டிருப்ப

திட்டப்படவும் மிக ஏதுவுண்டு. குருமார் தாங்கள் போதிக்க வேண்டிய உபதேசங்களையும் தாங்கள் தடுத்துவரவேண்டிய புரட்டுகளையும்பற்றிப் போதனை பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட முறைமையைச் சபையில் வழங்குவது மிகவும் அவசியமான காரியந்தான். ரட்சிப்புக்கு அவசியமில்லாத விஷயங்களில் பிறருக்கு இடறலுண்டாகாதபடிக்கு ஒத்து நடப்பது நன்றுதான் (Rom. xiv. 21.) ரட்சிப்புக்கு அவசியமான விஷயங்களிலோ அப்படியல்லவே. இவ்விசுவாசப்பிரமாணத்தை வாசிப்பது பலருக்குப் பிரியமில்லாதிருந்தாலும் அது நாம் அறிக்கையிடவேண்டிய முக்கிய அறிக்கையாயிருப்பதால் அதைச் சபையில் வழங்காமல் அசதியாயிருப்பது குற்றமென்றே கூறலாகும்.

26. வினா. இந்த விசுவாசப்பிரமாணத்தின் முடிவில் சொல்லப்படும் ஆமென் என்ற மொழி எவ்வித கருத்துக்கொள்ளும்?

விடை. ஆமென் என்ற மொழி முடிவுரையாக வருவதால் அதற்கு முன்னுள்ள உறுப்புகள் ஜெபம் என்சலாகாது. தேவகோபாக்கினை கூறல்முறைமையால் அது கொள்ளும் ஆத்தசத்துக்கு ஒப்ப, இவ்விடத்திலும் சம்மதத்தையே குறிக்கும்.

27. வினா. (Luther) லுத்தர் இந்த விசுவாசப்பிரமாணத்தைப்பற்றி உரைத்திருக்கிறதென்ன? குறிக்கப்பட்ட நாட்களில் குருமார் இதை வாசியாமல் விடலாமோ?

விடை. குருமார் தாங்கள் பண்ணியிருக்கிற பொருத்தனைப்படி இதை வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். புரொட்டெஸ்தாந்தரில் சில விசுவாசப்பிரமாணத்தை லேசிட்டு மதிக்கிறதுண்டு. ஆனால் லுத்தர் என்பவர் இது அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தின் அரணாகவும் திரித்துவத்தை நிந்திக்கவும், தேவன் மனுஷாவதாரமெடுத்ததை அவமதிக்கவும் வெட்காதவர்களை வாயடைப்பதற்குப் பலத்த ஏதனமாகவுமிருக்கிறதென்று உரைத்திருக்கிறார்.

28. வினா. மூன்றாவதான விசுவாசப்பிரமாணம் நிசேயா விசுவாசப்பிரமாணம் எனப்படுவதேன்? அதற்கு வேறே நாமமுண்டா?

விடை. இது A. D. 325ல் நிசேயாவில் கூடின சங்கத்தாரால் ஒப்புக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட உபதேசங்களின் சுருக்கமாயிருப்பதால், நிசேயா விசுவாசப்பிரமாணம் என்று அழைக்கப்படலாயிற்று. அக்காலத்தில் பரிசுத்தாவியை விசு

வாசிக்கிறேன் என்ற உறுப்போடு அது ஈறுபெற்றிருந்தது. அந்த ஆவியானவருடைய பண்பைக்காட்டும் உறுப்புகளில் ஒன்றுதவிர மற்றவைகளும் பினவரும் அறிக்கைகளும் கிறிஸ்து பிறந்த 381ல் Constantinople–ல் கூடின சங்கத்தாரால சேர்க்கப்பட்டன. இவ்வித நிமித்தத்தையிட்டு அதற்கு கொனஸதந்தின்புரி விசுவாசப்பிரமாணம எனற பேர் வழங்கலாயிற்று.

29. **வினா.** கடைசியாக அதில் சேர்க்கபபட்ட வார்த்தை எது? அது எப்போது கூட்டபபட்டது?

விடை. பரிசுத்தஆவியின் புறபபடுதலைப்பற்றிய உறுபபில் குமாரனிலும் என்பதுதான. இது 5–ம நூற்றாணடில் கூட்டபபட்டது.

30. **வினா.** இது எந்தத் தப்பறைகளை தண்டித்து, எந்த உபதேசங்களை ஸதாபிக்கிறது?

விடை. ஆரியருடைய கொள்கைகளைக் கண்டிதது குமாரனானவர் பிதாவோடே ஏகத்தன்மையுளளவராயிருக்கிறார எனபதைச் சாதிதது, பரிசுதத ஆவியானவருடைய தெய்வீகத்தனமையும் அந்த ஆவியானவர் பிதாவிலும் குமாரனிலும்நின்று புறபபடுகிறதையும நிரூபிக்கிறது.



IX. CHAPTER.

THE DERIVATION AND DEFINITION OF THE WORDS LITURGY AND LITANY

The four parts of the Litany. Explanation of important words and phrases. Necessity of intercessory prayers. The seven prayers connected with the Litany.

ஒன்பதாம் அதிகாரம்.

லித்தானியாவைப் பற்றியது.



1. **வினா.** (Liturgy) லிற்றர்ஜி, (Litany) லித்தானியா என்ற மொழிகளுக்கு அர்த்தமெனன?

விடை. இவ்விரு பெயர்களும் வெவ்வேறுவகையான அர்த்தங்கொள்ளும். இவைகளில் லிற்றர்ஜி என்பது தேசாசாரத்துக்காவது மதாசாரத்துக்காவது அடுத்த பொது அல்லது சமுதாய

ஊழியம் என்று அர்த்தங்கொள்ளும். என்றாலும் யூதரும் புறச்சாதியாரும் பரிசுத்த பணிவிடைகளைக் குறிக்கும் மொழியாக இதைப் பெரும்பான்மையாய் பிரயோகித்துவந்தார்கள். இந்தடவாய் கிறிஸ்துமார்க்கச் சடங்குநிறைவேற்றத்தைக் குறிக்கும்படி அது வழங்கப்பட்டிருக்கிறது (அப. 1. 3. Rom. v. 15.). பின்பு நற்கருணைமுறைமையை ஆதிகிறிஸ்தவர்கள் இந்தப் பெயரால் அழைத்தார்கள் சிலபொழுதோ நற்கருணைமுறைமை உட்படச் சகல பரிசுத்த முறைமைகளையும் குறிக்கும்படி பிரயோகிக்கப்பட்டுவருகிறது. லித்தானியா என்னும் வார்த்தையோ பதவனைக்கொப்ப வெளிப்பிரங்கமாயாவது தனிமையாயாவது செய்யப்படும் சகல விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் குறிக்கும். இவ்விதப் பொதுக் கருத்தாகவே ஆதிகிறிஸ்தவர்களால் வழங்கப்பட்டது; பின்போ அது யாதொரு விசேஷித்த ஜெபத்துக்கு நாமமாக இடப்பட்டது. முக்கியமாய் நாலாம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் அடிக்கடி நேரிடுவதாயிருந்த பொழுது குருமாரும் சபையாரும் வலஞ்சுற்றி நடப்பித்த ஆராதனைமுறைமைக்கு இப்பெயர்தானுண்டு இம்முறைமைக்கு ரொகேஷன் (Rogation) என்ற பெயருமுண்டு.

2 வினா. வேதாகமத்தில் லித்தானியா ஜெபங்களுண்டா? அவைகளில் சிலவற்றைச் சொல்லு.

விடை. வேதாகமத்தில் லித்தானியா ஜெபங்கள் பல உண்டு. 51-ம் சங்கீதம் தாவீது அரசனின் லித்தானியாவாகவும், யோவே 2. 17ல் காணப்படுவது குருக்களால் விதிக்கப்பட்ட லித்தானியாவாகவும், லூக். 22. 42ல் சொல்லியிருப்பதும் எபி. 5. 7ல் எடுத்துரைத்திருப்பதுமான மெய்ய நமது இரட்சகருடைய லித்தானியாவாகவும் ஒப்புக்கொள்ளப்படும். (1 தீமோ. 2. 1ல் காண்க.)

3. வினா இங்கிலீஷ்சபை லித்தானியாவானது பூர்வ லித்தானியாக்களுக்கும் விசேஷமாய் ரோமானித்தருடைய லித்தானியாக்களுக்கும் வித்தியாசப்பட்டிருப்பதெப்படி?

விடை. பூர்வ லித்தானியாக்களைப்போல் இங்கிலீஷ்சபை லித்தானியாவானது வலஞ்சுற்றுதலுக்கானதல்ல; ரோமானித்தருடைய லித்தானியாக்களைப்போல் கன்னிமரியாளையும் பரிசுத்தவான்களையும் நோக்கிச் செய்யப்படும் மன்றாட்டுகளையுடையதுமல்ல. இவ்வித மனிதவணக்கம் 5-ம் நூற்றாண்டில் தோன்றினதாய் ஒப்புக்கொள்ளப்படும்.

4. **வினு.** பிந்தினவகை விசற்பதகைப் பொதுவாக ஒரு உதாரணத்தைக்கொண்டு திருஷ்டாநதபபடுத்திக் காட்டு.

விடை. நமது வித்தானியாவிலுள்ள மன்றாட்டுகள் பரிசுத்த திருத்துவத்திலுள்ள மூவரைமாத்திரமேநோக்கித் தனித்தனியாகவும் செய்யப்படுகின்றன. இது பொதுவாய கவனிக்கபபடத தக்க விகற்பந்தானே. இவ்வித விசற்பத்துக்கு உதாரணத்தை கிரிசொஸ்தம் எனபவருடைய ஜெபததுககு முந்தின ஜெபத்திலும் காணலாம். அந்த ஜெபம் பூர்வ ஜெபமுறைமையில 'பிதாவே! எங்கள் பலவீனஙகளை இரககமாய் நோக்கிப்பார்தது நியாயமாய் எங்களுககு வரவேணடிய தீயதுகள் எல்லாவற்றையும் உமசெல்லாப பரிசுததவான்களுடைய மன்றாட்டுகள நிமித்தம் இரங்கி அருளும்' என்று கணடிருந்தது. அநத ஜெபததிலிருந்து இபபொழுதோ வேதவசனததுக்கு விரோதமான வார்த்தைகள் தள்ளபபட்டிருக்கிறதனறி 'எங்களுககுவரும் எல்லாத்துன்பங்களிலும் நாஙகள் உமது இரககததை நமபிப பற்றிக்கொள்ளவும' என்னும வார்த்தைகள் கூட்டபபட்டிருககின்றன.

5. **வினு.** இந்த வித்தானியா யாரால் செய்யப்பட்டது?

விடை. இதைச் செய்தவர்கள் திருசசபைச் சீர்திருததகாலை நடப்பித்தவர்களல்ல. ஆனால் 6-ம் நூற்றாண்டின் கடையிலிருந்த பெரிய கிரெகோரி என்பவர் செய்த ஜெபமுறைமையிலிருந்து எடுக்கபபட்டு, பிற்காலததுப பிரபுககள் கூடின சஙகத்தில் பழுதுகளறத் திருத்திச சுருககபபட்டது.

6. **வினு.** விததானியாவானது தனி ஆராதனை முறையோ, அல்லது காலை ஆராதனையின் ஓர் பஙகோ?

விடை. ஜெபபுஸ்தகம் சடைசியாக பழுதுபார்க்கபபட்டதற்குமுன் அது தனி ஆராதனையாகவே இருந்தது. அதற்கென்று மணியடிககபபடுவதும ஜனஙகூடிவந்து அவ்வாராதனையைத தனிப்புற நடபபிபபதும் அபபொழுது வழககமாயிருந்தது. இப்பொழுது காலை ஆராதனைமுறைமையைச் சேர்ந்திருநதாலும் தனிமையாக இட அமைபபும் பெற்றிருககிறது.

7. **வினு.** வித்தானியா எந்தெந்த நாட்களில் வாசிக்கப்படும்?

விடை. ஞாயிறு, புதன், வெள்ளிக்கிழமைகளிலும் கண்காணியார் கட்டளையிடும் மற்ற நாட்களிலும் வாசிககப்படும். பூர்வத்தில் இதைப்பற்றி யாதொரு சட்டமில்லை. ஆனால் டாலிடோ (Talido) என்றவிடத்தில் கூடின சங்கத்தார் மாதம்

ஒருவிசை தவறின்றி அது வாசிக்கப்படும்படி திட்டஞ்செய்தார்கள். நாளடைவில் காலிக்கன் சபையிலும் அதற்கொப்ப இங்கிலாந்து சபையிலும், வாரந்தோறும் உபவாசநாட்களில் வாசிக்கப்படும்படி குறிக்கப்பட்டது. இவற்றிலும் சபை திரளாய்க் கூடிவரும் ஞாயிறிலும் வாசிக்கப்படலாயிற்று.

8. வி. லித்தானியாவை ஜனங்களும் குருவானவரும் மாற்றி மாற்றிச் சொல்லுகிற நோக்கமென்ன?

விடை. லித்தானியா இயற்றப்பட்டிருக்கிற ஜாடைக்கேற்க குருவானவர் விண்ணப்பங்களைச் செய்ய, ஜனங்கள் மறுமொழி உரைப்பதற்கு அவர்களில் பணிவிருப்பையும் உட்கருத்தையும் பிறப்பித்து அனலான பக்தியை எழுப்பவேண்டுமென்பதே காரணமென்னத்தகும்.

9. வி. எட்வார்ட், எலிசபேத் என்பவர்கள் காலத்தில் லித்தானியா எவ்விடத்திலிருந்து வாசிக்கப்படும்படி பிரமாணிக்கப்பட்டிருந்தது? அப்பிரமாணத்தின் நோக்கமென்ன? அது இக்காலத்திலும் நிறைவேற்றப்பட்டுவருகிறதா?

விடை. வெளிச்சுற்றலைத் தவிர்த்து யோவேல் தீர்க்கதரிசியின் வார்த்தைக்கிசைக்கொப்ப (2. 17) லித்தானியாவானது கோவிலின் நடுமையத்திலிருந்து வாசிக்கப்படும்படி அல்லது பாடும்படி 6-ம் எட்வார்டின் முதலாம் ஜெபபுஸ்தகத்தில் விதித்திருந்தது. எலிசபேத் ராஜாத்தி இதை உறுதிப்படுத்தினாள். இவ்வழக்கம் நடந்துவருகிற சில பிரதான ஆலயங்களில் அது பெரும்பான்மையும் பாடப்படுகிறதுண்டு. ஆனாலும் அநேக இடங்களில் அது நின்றுபோய் இடமுக்கியமற்று வாசிக்கப்படுவதே வழக்கமாயிருக்கிறது.

10. வி. எவ்வித நிலையினின்று இதை வாசிக்கத்தகும்? அதைப்பற்றி திட்டமான யாதொரு சட்டமுண்டா?

விடை. கிழமைக்குரிய சுருக்க ஜெபத்துக்கு முன்னிற்கிற ரூபிரிக்கில் காலையாராதனைக்குரிய சுருக்கஜெபங்கள் முழங்காலில்நின்று சொல்லப்பட சட்டமுண்டு. லித்தானியா முகப்பில் அதற்கு விகற்பமான திட்டம் ஒன்றுமில்லை. ஆனால் எலிசபேத் என்ற ராஜாத்தியும் (Edward) எட்வார்ட் என்ற ராஜாவும் இதைப்பற்றிய பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மனத்தாழ்மைக்கு குறிப்பாக இம்முறைமையை முழங்காலில் நின்று சொல்வதே தகுதி.

11. **வினு.** *வித்தாணியா எத்தனை பங்காய் வகுக்கப்படும்?*

விடை. *இரக்கத்துக்காகக் கெஞ்சும் மன்றாட்டுகள், தீமை நிவிர்த்தி மன்றாட்டுகள், பரிந்துசெய்யும் மன்றாட்டுகள், பொதுவான விண்ணப்பங்கள் என நான்கு பங்காய் பெரும்பாலும் வகுக்கப்படும்.*

12. **வினு.** *இரக்கத்துக்காகக் கெஞ்சும் மன்றாட்டுகள் யாரை நோக்கிச் செய்யப்படும்? அவைகளால் மெய்ப்பிக்கப்படும் உபதேசமெது? இம்மன்றாட்டுகளைப்பற்றிய விசேஷமென்ன?*

விடை. *இரக்கத்துக்காகவும் பொறுத்தலுக்காகவும் பண்ணப்படும் மன்றாட்டுகள் தேவத்துவத்தில் தனிப்பட்ட ஒவ்வொருத்தரையும் நோக்கி முந்தவும், பொதுப்பட தேவத்துவத்தை நோக்கி பிந்தவும் செய்யப்படும். அம்மூவர் ஒவ்வொருவரையும் ஆராதனைப் பொருளாகவும் மெய்யான தேவனாகவும் இவைகளில் அறிக்கையிடுகிறோம். அவைகளில் விசுவாச அறிக்கையும் பாவ அறிக்கையும் கிருபைக்காக மன்றாட்டும் உண்டாயிருப்பதே கவனிக்கப்படத்தக்க விசேஷம். திரித்துவத்தில் ஒவ்வொரு வஸ்துவை நோக்கித் தனிமையிலும், திரித்துவத்தை நோக்கி பொதுவிலும் ஜெபித்தால் ஏகத்துவத்தில் திரித்துவமும் திரித்துவத்தில் ஏகத்துவமும் உண்டென்று விசுவாச அறிக்கை செய்கிறோம். ஏழைப்பாவிகளாகிய என்பதில் நமது பாவத்தை அறிக்கையிடுகிறோம். எங்களுக்கிரங்கும் என்பதில் கிருபைக்காக பிரார்த்திக்கிறோம்.*

13. **வினு.** *திரித்துவத்தில் ஒவ்வொரு வஸ்துவையும் நோக்கி தனிமையில ஜெபிப்பதேன்?*

விடை. *ஒவ்வொருவருடைய தொழிலுக்கு விரோதமாகவும் நாம் குற்றஞ்செய்திருக்கிறோம். பிதாவானவரை நமது சிருஷ்டிகராகவும் தற்காப்போராகவும் மகிமைப்படுத்தாதிருப்பதாலும் அவருடைய செயல்களைக் கவனியாமல் மறந்துவிடுவதாலும் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்திருக்கிறோம். குமாரனானவரால் சம்பாதிக்கப்பட்ட ரட்சிப்பை மதியாமலும் பெற்றுக்கொள்ள முயலாமலும் அசட்டையாயிருப்பதினாலும் அவருடைய அழைப்புக்குச் செவிகொடாமலும் அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசியாமலும் அவருடைய சுவிசேஷக் கட்டளையைக் கவனியாமலும் அவருடைய மரணத்துக்காக நன்றியறிதல் பாராட்டாமலும் அவர்காட்டிய மாதிரியைப் பின்பற்றாமலும் விலையேறப்பெற்ற ஆத்துமாக்களின் அருமையை எண்ணாமற்போவதினாலும் அவருக்கு விரோதமாய்ப் பாவம்*

செய்திருக்கிறோம். பரிசுத்தாவியின் அழைப்பைச் சட்டை செய்யாதிருப்பதாலும் அவருடைய அருள் அனுக்கிரகங்களை அருமையாக மதியாதிருப்பதாலும் கிருபையின் யத்தனங்களை கையாடாதிருப்பதாலும் தீய எண்ணங்களையும் நினைவுகளையும் மனதில் பேணுவதினாலும் அவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்திருக்கிறோம். இந்தவிதமாய திரித்துவத்தில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் விரோதமாக நாம் பாவஞ்செய்திருப்பதால் ஏழைப் பாவிகளாகிய நமக்கிரங்கும்படி திரித்துவத்தில் ஒவ்வொருவரையும் நோக்கிப் பிரார்த்திப்பது தகுதியே.

14. வினா. இவைகளில் யாருடைய வேதப்புரட்டு கண்டிக்கப்படுகிறது?

விடை. தேவன் என்ற நாமம் விகற்பமின்றி ஏகார்த்தமாய் மூவருக்கும் வழங்கப்பட்டிருப்பதால் சொசினியருடைய வேதப்புரட்டு கண்டிக்கப்படுகிறது.

15. வினா. பரம என்பதற்குரிய பொருளென்ன?

விடை. குமாரன் ஒருவிசை இந்தாரணியில் சஞ்சரித்திருப்பதாலும் பரிசுத்தாவியானவர் உலகத்தில் விசுவாசிகளுடைய இருதயத்தில் இன்னும் வாசஞ்செய்கின்றமையாலும் பரம என்ற பதம் வானத்தை தமது ஆசனமாகக் கொண்டிருக்கப்பட்ட பிதாவுக்குச் சிறப்புப் பண்பாக வழங்கப்படுகிறது. மற்றப்படி அவ்விருவரும் பிதாவைப்போல பரமண்டலத்திலிருக்கிறதாகச் சொல்லப்படுவது பங்கமல்லவே. லித்தானியாவில் கண்டிருக்கிற "பரம" என்ற மொழியும் கர்த்தருடைய ஜெபத்தில் கண்டிருக்கிற "பரமண்டலங்களிலிருக்கிற" என்ற சொல்லும் விகற்பமற்ற ஏகார்த்தத்தை உணர்த்தும் "பிதா" என்றமொழி "பரம" என்பதினோடு பொருந்துவதைப்பார்க்கிலும் தேவனாகிய என்பதினோடு இசைவது அதிகம்.

16. வினா. தீமைநிவாரண மன்றாட்டுகளெவை? அவை யாரைநோக்கிச் செய்யப்படும்? அதற்கு முகாந்தரமென்ன? அவைகளின் பொதுக் கருத்தென்ன?

விடை. பாவத்தினின்றும் அதனால்விளையும் கொடிய மோசங்களினின்றும் பாதுகாக்கப்படும்படி செய்யப்படும் ஜெபங்களே தீமைநிவிர்த்தி மன்றாட்டுகள். இவை திரித்துவத்திலுள்ள இரண்டாம் வஸ்துவாகிய குமாரனைநோக்கிச் செய்யப்படும். பாவத்துக்காகவும், பாவிகளுக்காகவும் நிறைவாகவும் திருப்திகரமுமுள்ள பிராயச்சித்தத்தை இவர் சிலுவையின்மீது செலுத்

தியிருப்பதே இதற்கு முகாந்தரமாம். ஆத்துமத்துக்கும் சரீரத் துக்குமுரிய தீமைகள் இதில் பொதுமொழியாக எடுத்துரைக் கப்பட்டபின் சில முக்கிய குற்றங்களும் மோசங்களும் ஆக்கி னைகளும் விசேஷித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இவைக ளில் மரணத்துக்கேதுவான பாவங்கள், சடுதியாய் வரும் மர ணம், வேதபுரட்டு, சபைப்பிரிவினை என்பவை விவரிக்கப் படவேண்டியவையாம்.

17. வினு. எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே என்பதைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. அந்தந்த மன்றாட்டில் காட்டிய தீமைகளினின்றும் நம்மை ரட்சித்தருளவேண்டும் என்பதே. இவ்வாரதனைக ளின் கருத்து குருவானவர் உரைப்பதற்கு இது முடிவுரை போல் இருக்கிறது. இதை அடிக்கடி வழங்கினாலும் வீண்வச னிப்பென்றாவது, வெகு வசனிப்பென்றாவது பழுதுசொல் லத்தகாது. குருவானவரும் சபையாரும முறைமாற்றி வச னித்தாலும் யாவரும் மனதில் ஒத்து ஜெபிப்பது அவசியமே

18. வினு. இப்பங்கில் கடைசி மன்றாட்டென்ன? இதி லுள்ள மன்றாட்டுகள் அருளப்படும்படி யாரை முன்னிட்டுக் கேட்கிறோம்? தேவ இரக்கம் எவ்வேளைகளில் அதிக தாப பிரியத்துடன் தேடப்படும்?

விடை. இருதயகடினத்திலும் வேதவசனத்தையும் கற்ப னையையும் அசட்டைபண்ணும தன்மையினின்று விடுதலை யடையவேண்டியதே கடைசியும் முக்கியமுமான மன்றாட் டாம். இதுவும் இதற்குமுந்தின மன்றாட்டுகளும் கிறிஸ்துவா னவருடைய மனுஷாவதாரத்தையும் மனத்தாழ்மையையும். பின்பு அவர் அடைந்திருக்கிற மேன்மையையும் முன்னிட்டு விசுவாசத்தின் வழியாய்க் கேட்கப்படுகின்றன மேலும் நாம் துக்கப்படுங்காலத்தில் மாத்திரமல்ல, சுகப்படுங்காலத்திலும் மரணவேளையிலும் நியாயத்தீர்ப்புநாளிலும் இரட்சகருடைய சகாயம் நமக்கு அவசியமென்று பிரார்த்திக்கிறோம.

19. வினு. மரணத்துக்கு ஏதுவான பாவம் என்பதை இங்கி லாந்துசபையாரும் ரோமானசபையாரும் எவ்விதமாய் அபிப்பி ராயப்படுத்துகிறார்கள்?

விடை. ரோமான்சபையார் மன்னிக்கப்படத்தக்க பாவமெ ன்றும், மரணத்துக்கேதுவான பாவமென்றும் இருவகையாய் பாவத்தை வகுத்து, பிந்தினதுக்கு நேராயுண்டாகும் பலன் சாவு

என்று சாதித்துவருகிறார்கள். இங்கிலாந்துசபையாரோ பாவமானது இயல்புபபடி தன்னில்தானே மன்னிக்கப்படத்தக்கதல்லவென்று சாதித்து, துணிகரததோடும் ஆறுவத்தோடும் மன நிர்ணயத்தோடும செய்யப்படுவதினிமித்தம தேவசமுகத்தில் அதிக குற்றமுள்ளதாயிருக்கும பாவமே மரணத்துக்கேதுவான பாவமெனறு அரத்தம்பண்ணிவருகிறார்கள். இப்பேர்ப்பட்ட பாவத்தினின்று தற்காக்கப்படும்பொருட்டு சங்கீதக்காரன் அதிக உட்கருத்தாய் ஜெபித்திருக்கிறார். (சங். 19. 13.)

20. வினு. சடுதியில்வரும் மரணத்தினின்று தற்காக்கவேண்டும் என்கிற மன்றாட்டின கருத்தென்ன?

விடை. இது மரணத்துக்கு முற்றிலும் ஆயத்தப்படாதிருக்கப்பட்டவர்கள் செய்யப்பட்ட விசேஷ மன்றாட்டாயிருந்தாலும், நல்லவர்களும் மரணத்துக்கு தங்களைத் தகுதியாய் ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படி அவாவுள்ளவர்களாயிருப்பதனறி, தங்களுக்கென்றல்லாவிட்டாலும் மற்றவர்களுக்கென்றுவது பிழைத்திருக்க மனமுற்றவர்களாயிருப்பதால் இது எவர்களுக்கும் சொல்லத்தக்க சாதாரண மன்றாட்டு எனத்தகும்.

21. வினு. வேதபபுரட்டுக்கும் சபைபபிரிவினைக்கும் வித்தியாசம் என்ன?

விடை. உபதேசவிரோதம் வேதப்புரட்டு; சபை ஆசாரவிரோதம் சபைபபிரிவினை. முந்தினது கிறிஸ்துவின்பேரிலுள்ள விசுவாசத்தைப புரட்டுதலும, பிந்தினது திருச்சபையின் ஐக்கியத்தில் பிரிவினை உண்டுபண்ணுதலுந்தான.

22. வினு. வேதபபுரட்டென்று திருப்பப்பட்டுவரும் மொழி கிரேக்கமூலத்தில் என்ன அரத்தமாம்? வேதபபுரட்டு எதினுல் பாவமாகிறது? அது கொடிய தோஷமுள்ளதென்று வேத உதாரணத்தைக்கொண்டு காட்டு.

விடை. வேதபபுரட்டென்று திருப்பப்பட்டுவருகிற மொழிக்கு கிரேக்கமூலத்தில் தெரிந்துகொள்ளுதல் என்று அர்த்தமுண்டு. கிறிஸ்துவானவரானும் அவருடைய அபபோஸ்தலராலும் புதிய ஏற்பாட்டில் உரைக்கப்பட்டிருப்பதும பொதுவான திருச்சபையால் அனுசரிக்கப்பட்டுவருகிறதுமான சத்திய உபதேசங்களைத் துணிந்து மறுத்து, வேறுமையான உபதேசங்களை மனதறியத் தெரிந்து அங்கிகாரஞ்செய்தலுக்கு வேதப்புரட்டென்ற நாமம் பிரயோகிக்கப்பட்டுவருகிறது. வேதப்புரட்டானது அப்போஸ்தலர் போதித்த ரட்சிபபின் வகைக்கு

வேறுபாடாக நவமான வகையை அல்லது பரி. பவுல் சொல் லியிருக்கிறபடியே வேறேர் சுவிசேஷத்தைப் போதிக்கிற தாயிருக்கிறதால் உபதேச மாறுபாடென்றும் விசுவாசமாறுபா டென்றும் சொல்லப்படத்தகும். அது கொடிய பாவமென்று வேதத்தில் பல வாக்கியங்களால் காட்டப்பட்டிருக்கிறது. வே தப்புரட்டனொருவனுக்கு இரண்டொருவிசை புத்திசொன் னபின் அவனைவிட்டு விலகு என்னும் இதுமுதலிய எச்ச ரிப்புகளால் இதை அறிந்துகொள்ளலாம். (Romans xvi. 17. 2 Cor. xi. 3, 4. 2 Thes. iii. 6, 14. Gal. i. Chapter. Titus, iii. 10, 11. 2 Peter, ii. 1. James, iv. 17. 1 John, 10 verse. Judah, 22, 23 verses.)

23. வினு. சபைப்பிரிவினை என்பதற்குச் சரியான கிரேக் கமொழியின கருத்தென்ன? சபைபபிரிவினையிலுள்ள குற்ற மென்ன? அப்போஸ்தலமார் அதைக் கண்டித்திருக்கிறார்களா? சபைப் பிரிவினைக்காரர் திருச்சபையின் அவயவங்களென்று முற்றிலும் எண்ணத்தகுமா? ராஜாங்கத்தார் அவைகளைக் கண்டி யாமலும் இருப்பது அவர்கள் குற்றததைத் தணிவிக்கும் காரண மாமோ?

விடை. சபைப்பிரிவினை என்ற மொழிக்கு கிரேக்கமூலத் தில் "அறுத்துத்தறிகிறது" அல்லது கிழிதது பாகப்படுத்தல் என்றர்த்தமுண்டு. வேதசாஸ்ரததில் அம்மொழி நியாயமான கா ரணமின்றி பொதுவான திருச்சபையின் கட்டுப்பாட்டையும் ஐக்கியத்தையும்விட்டுப பிரிதலைக் குறிக்கும். இசதால் கிறிஸ துமார்க்க அன்புக்கும் ஒருமைக்கும் பினனம் நேரிடுவதாலும கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினை உண்டாகாதிருபபதாக என்ற அப்போஸ்தலன் கட்டளைக்குப் பேதமுணடாவதாலும இது பாவமாம். இதைப்பற்றிய எச்சரிப்புகளை அடிக்கடி வேதத் தில் தீர்க்கமாய் கண்டிருக்கிறது. இது மாங்கிஷக் கிரியை யென்றும் ரட்சிப்புக்குத் தடையென்றுங் குறிககப்பட்டும் கண்டிக்கப்பட்டுமிருககிறது (John, xiii. 34. Romans, xv. 5. 1 Cor. I. 10. & 12 iii. 3. 10. 17. 2 Cor. xiii. 11. Ephe. iii. 3. & 4. Philip. i. 27. ii. 1, 2. iii. 16. Col. iii. 14. 1 Peter iii. 8.). பிரிவினைக்காரரைத் திருச்சபையின் அவயவங்க ளென்று முற்றிலும் அங்கிகரிப்பது தகுதியல்ல. ராஜாங்கத்தார் அவர்களைக் கண்டியாமலும் தண்டியாமலும் அவர்களைவிட்டி ருந்தாலும் அவர்கள் குற்றமற்றவர்களென்ருவது சொற்பக் குற்றவாளிகளென்ருவது எண்ணலாகாது. சபைப்பிரிவினை

யானது கொலை, களவு, கள், பொய் என்னும் பாதகங்களுக்கு இணையான பாவமாயிருக்க இவைகளுக்கு இடங்கொடாத துரைத்தனத்தார் அதற்குமாத்திரம் அனுமதிகொடுப்பது சரியல்லவே.

24. வினா. சுகசௌக்கியமாய் வாழ்ந்திருக்குங்காலத்தில் தேவ உதவிக்காக கெஞ்சவேண்டியதேன்? நியாயத்தீர்ப்புநாளில் இரக்கங் கிடைக்கும்படி வேண்டிக்கொள்ளுதல் வேதவுரைக்கு விகற்பமாகுமோ?

விடை. ஐசுவரியம் சுகம் முதலிய உலக இன்பத்திலும் தீமையிலாதால் சுபமங்களகாலத்திலும் தேவ உதவிக்காக கெஞ்சவேண்டியது அவசியந்தான். மரணவேளையில் ஆத்துமாவின் நித்திய நிலைமை தீர்மானிக்கப்படுவது மெய்தான். ஆனாலும் நியாயத்தீர்ப்புநாளில் இரக்கங் கிடைக்கும்படி மரணத்துக்கு முன்னதாக ஜெபிப்பது வேதவசனத்திற்கு விகற்பமல்ல. (2 Timothy i. 18.)

25. வினா. பிறருக்காகப் பரிந்து ஜெபிப்பதற்கு வேத அனுமதியும் பொதுநியாயமும் உண்டா?

விடை. எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டுங்கள் என்று சங். 122. 6ல் சங்கீதக்காரன் சொல்லியிருப்பதாலும், உங்களைத் தூஷணிக்கிறவர்களுக்காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்களென்று Matt. v 44ல் நமது இரட்சகர் கற்பித்திருக்கிறதாலும், அப்போஸ்தலர் எழுதிய நிருபங்களில் பல உதாரணங்கள் உண்டாயிருப்பதாலும் பிறருக்காக ஜெபிப்பது நமக்குச் சலாக்கியமாகவும் கடமையாகவும் இருக்கிறதென்று நாம் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். மேலும் மரித்த ஆத்துமாக்களின் அருமையையும் கிறிஸ்துநாதர் சம்பாதித்தருளிய எண்ணிமுடியாத புண்ணியபலன்களின் மேன்மையையும் தகுதியாய் நாம் உணர்ந்துகொள்வோமானால் பிறருக்காக பரிந்து பிரார்த்திப்பது நமது கடமையும் சலாக்கியமுமாய் இருக்கிறதென்று பிரத்தியட்சமாய் அறிந்துகொள்வோம்.

26. வினா. பரிந்துசெய்யும் மன்றாட்டுகளை எப்படி ஆரம்பித்துக்கொள்ளுகிறோம்?

விடை. நமக்காக ஜெபிக்க முதலாய் அபாத்திரராகிய நாம் பிறருக்காக ஜெபிப்பது துணிகரமென்று தோன்றும். ஆதலால் அம்மன்றாட்டுகளை ஆரம்பித்துக்கொள்ளுமுன் பாவிகளாகிய எங்களுக்குச் செவிகொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்

ளுகிறோம். ஆபிரகாம் சோதோமுக்காகப் பரிந்துபேசினதில் எப்படிப் பிரார்த்தித்துக்கொண்டாரோ அதற்கிசைவாக நாமும் செய்கிறோம். (Genesis xxiii. 33.)

27. வினு. பரிந்து செய்யும் மன்றாட்டுகளின் சுருக்கம் என்ன?

விடை. எவ்வகையிலுள்ள நிலைமையோர்க்காகவும் செய்யப்படும் இந்த மன்றாட்டுகளில் முதலாவது, சாதாரண கிறிஸ்து சபைக்காகவும், ராஜாதிக்காகவும், அவர்கீழ் அதிகாரம்பெற்றிருக்கிற யாவருக்காகவும், எல்லாக் கண்காணிமார் குருமார் உதவிக்குருமாருக்காகவும், மற்றும் நமது உடன்கிறுட்டிகள் அனைவருக்காகவும் ஜெபிக்கிறோம்; பின்பு விசேஷமாய்ச் சோதனையினாலும் உபத்திரவங்களாலும் தவிக்கிறவர்களுக்கு ஆறுதலும் ஆதரவும், விசுவாசப் பெலவீனருக்கு விசுவாசத்திடனும், மனநோவுள்ளவர்களுக்குத் தேறுதலும், சன்மார்க்கத்தைவிட்டுத் தடுமாறினவர்களுக்குச் சீர்பாடும், காவலிலாவது வியாதியிலாவது வேறெந்த மோசத்திலாவது அகப்பட்டவர்களுக்கு ரட்சிப்புண்டாகும்படி செய்யப்படும் மன்றாட்டுகளும், அடுத்துவரும். இவற்றோடே விதவைகள், தந்தை, தாயற்ற பிள்ளைகள், திக்கற்றவர்களென்னும் இவர்களுக்குத் தகுந்த பராமரிப்பும், நம்மைப் பகைக்கிறவர்களும், துன்பப்படுத்துகிறவர்களும், அவதூறுபண்ணுகிறவர்களுமான விரோதிகளுக்கு மனமாறுதலும், நமக்கு அவசியமும் பிரயோஜனமுமான தகுந்த காலச்செழிப்பும், தேவ வசனத்துக்கேற்க நமது நடக்கையில் சீர்பாடு உண்டாகும்படி செய்யப்படும் மன்றாட்டுகளும் தொடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த மன்றாட்டுகளையெல்லாம் திரித்துவத்தில் இரண்டாம் வஸ்துவாகிய நமது இரட்சகரிடத்திலேயே சொல்லி ஜெபிக்கிறோம். தேவகுமாரனாகிய இவர் தமது திவ்விய தன்மையின்படி அவைகளை அங்கிகரிக்கவும், தேவாட்டுக்குட்டியாகிய அவர் இம்மையில் நமது சமாதானத்துக்கும் மறுமையில் நமது பாக்கியத்துக்கும் அனுகூலமாகத் தமது மனுஷீகத்தில் பாடுபட்டுச் சம்பாதித்த புண்ணியபலன்களை நமக்கு அருளிச்செய்யவும்வேண்டுமென்று அவரை நோக்கி உட்கருத்தாய் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பரிந்து செய்யும் மன்றாட்டுகள் இத்தோடுமுடிய, மேற்காட்டிய நன்மைகள் நமக்குப் பலவிதமாகும்படி திரித்துவத்திலுள்ள மூவருடைய ஒத்தாசையையும் ஏகோபித்துக்கேட்கும் மன்றாட்டுகள் தொடுக்கின்றன.

28. வினு. மேற்காட்டிய மன்றுட்டுகளுக்குச் சரிநிற்கத்தக்க ஜெபமெது? அது எப்போது வழங்கப்படும்? அது ஜெபபுத்தகத்தில் சேர்க்கப்பட்ட காலமென்ன? அது யாரால் இயற்றப்பட்டது?

விடை. லித்தானியாவின் அந்த மூன்றும் பங்கோடு பற்பல நிலைமையுள்ள மனிதருக்காகச்சொல்லிய சுருக்கஜெபம் ஒத்தி வரும் லித்தானியா வாசிக்கக் குறிக்கப்பட்டிராத வேளைகளில் அது வசனிக்கபபடும். ஜெபபுஸ்தகம் கடைசியாக திருப்பப்பட்டபொழுது அது சேர்க்கப்பட்டது. கன்னிங் (Gunning) என்ற கண்காணியாராவது (Sanderson) சான்றர்ஸன் என்ற கண்காணியாராவது இதை இயற்றியிருக்கலாம்.

29. வினு. பிரசங்கம், பாவங்கள், அஜாககிரதை, அறியாமை என்பவைகளுககு அர்த்தமென்ன?

விடை. பிரசங்கமென்பது போதகமாருக்குரிய சகல கடமைகளையும் குறிக்கும்படி வழங்கியிருக்கிறது. பாவங்கள் என்பது மனஅறிய செய்திருக்கும் கொடிய துர்க்கருமங்களையும், அஜாக்கிரதையென்பது நமது கடமைப்படி நடவாமல் கவலைத்தாழ்ச்சியாலும் விழிப்பின்மையாலும் நாம் செய்யாமல் விட்ட காரியங்களையும், அறியாமையென்பது அறிவை அடைந்துகொள்வதற்கான எத்தனங்களைக் கையாடாமல் அசட்டராயிருப்பதால் நமதுபேரில் சுமரும் குற்றங்களையுங் குறிக்கும்

30. வினு. கர்த்தருடைய ஜெபம் இங்கே சேர்க்கப்பட்டிருப்பதேன?

விடை. லித்தானியாவானது தனித்ததான ஓர் ஆராதனை முறைமையாக, இயற்றப்பட்டதாலேயும், எவ்வாராதனைமுறைமையிலானாலும் சரி, கர்த்தருடைய ஜெபம் வராவிட்டால் கடுங்குறைபோல் பாவிக்கப்படுவதாயிருப்பதாலும் இம்முறையிலும் அச்செபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

31. வினு. லித்தானியாவின் கடைசியில் வரும்பொது விண்ணப்பங்கள் எப்பொழுது சேர்க்கப்பட்டன? இக்காலத்துக்கும் அவை ஏற்றவையாமோ? முந்தின மன்றுட்டுகளுக்கு இது வித்தியாசப்பட்டிருப்பதெப்படி?

விடை. இவ்விண்ணப்பங்கள் 7-ம் நூற்றுண்டில் நாகரீகம் அறியாத மிலேச்சரால் கிறிஸ்துமார்க்க தேசங்களில் பல இடையூறுகள் நேரிட்டபோது செய்யப்பட்டன; என்றாலும் திருச்சபை சத்துருக்களுடைய விரோதம், குரோதம்முதலிய இவை

பலவீனத்திலும் மித்துருக்களுடைய அசதி, அனல்தாழ்ச்சிமுதலிய ஐக்கிய பங்கத்தினாலும் உள்ளாகவும், புறம்பாகவும் மோசங்களுக்கு ஏதுவாயிருக்கிற இக்காலத்துக்கும் அவை ஏற்பனவே. இவை கொஞ்சங்குறைய முழுவனவும் குருவானவரால்மாத்திரம் உரைக்கப்படுவதே முந்தின மன்றாட்டுகளுக்கும் இவைகளுக்குமுள்ள விகற்பம்.

32. வினா. இவ்விண்ணப்பங்களின் தொகுப்பென்ன? இந்தக் கடைசிப்பங்கு துவக்கி முடிகிற விதத்தைக்கொண்டு வித்தானியா தனியாராதனை முறைமையாக இயற்றப்பட்டதென்று காட்டு.

விடை. இப்பங்கானது கர்த்தருடைய ஜெபத்தோடும் அதற்குரிய வழக்க முகவுரையோடும் தொடங்கி, கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபத்தோடும் அப்போஸ்தல ஆசீர்வாதத்தோடும் முடிவதால், வித்தானியாவானது தனியாராதனை முறைமையாகவே இயற்றப்பட்டதென்று விளங்கும். இக்கடைசி பங்கில் தேவன் நமது பாவங்களுக்குத்தக்கதாக தண்டனை செலுத்தாமல் தமது மிகுந்த இரக்கங்களின்படி (Psalm ciii. 10.) நமது பெலவீனங்களைப் பொறுத்தருளுவதற்கான சிறுமன்றாட்டுகள் முந்த வரும். துன்பகாலத்தில் தேவ உதவிக்காகச் செய்யப்படும் ஜெபம் அவைகளுக்குப் பின்னால் வரும். தேவன் பூர்வ காலத்தில் தாம் காணபித்த இரக்கங்களினிமித்தவும் தமது நாமத்துக்கு மகிமையாகவும் தமது வலுசெயல்களின் மாட்சிமையினிமித்தமும் நமக்கிரக்கம்புரியவேண்டுமென்கிற சுருக்கவிண்ணப்பங்களும், மாட்சிமைதங்கிய வலுசெயல்களுக்குத் துதியான திரித்துவ கீர்த்தனையும் தொடர்ந்தேற்றியாய் வரும். பின்பு சபையாரும் குருவானரும் முறைமுறையாக கிறிஸ்துவானவரைநோக்கி தயவுக்காகவும், அரவணைப்புக்காகவும், தங்கள் ஜெப அங்கிகரிப்புக்காகவும் வேண்டிக்கொள்வார்கள். கடைசியாக உண்டாகும் தீங்குநாளில் விடுதலையாகவும் நேரிடுந்துன்பங்களில் திடநம்பிக்கையையும் நடக்கையில் சுத்தாங்கத்தையும் கட்டளையிடும்படி பிதாவாகிய தேவனைநோக்கி குருவானவரால் ஓர் ஜெபம் செய்யப்படும்.

33. வினா. மேன்மையான கிரியைகள் என்பதென்ன?

விடை. பாப்புமார்க்கத் தவறுகளிலும் அவபக்தியிலும் மருளாட்டத்திலுமிருந்து திருச்சபையைத் தேவன் விடுவித்தருளினதே.

34. வினா. *பிதாவே, எங்கள் பெலவீனங்களை என்னும் ஜெபத்தைப்பற்றிய விசேஷமென்ன?*

விடை. *அது 6-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. பிற்காலத்திலோ பரிசுத்தவான்களின் பரிந்துபேசுதலினிமித்தம் தேவன் நமது வேண்டுதலைக் கேட்கவேண்டுமென்பதாய் அதில் கூட்டுரைகள் சேர்க்கப்பட்டன. ஜெபபுஸ்தகத்தை இயற்றினவர்கள் அவைகளை அகற்றிப்போட்டு எங்களுக்குவரும் எல்லாத் துன்பங்களிலும் நாங்கள் உமது இரக்கத்தைப் பூரணமாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும் என்பதைச் சேர்த்துக்கொண்டார்கள்.*

35. வினா. *லித்தானியா தன்னில்தானே நிறைவுள்ள முறைமையா? விசேஷ காலங்களுக்கு திருச்சபை ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்கென்ன?*

விடை. *மனிதருக்கு நேரிடும் சகல குறைவுகளும் அபாயங்களும் லித்தானியாவிலுள்ள பொதுமொழிகளில் அடக்கமாயினும், தேவகோபத்துக்குக் குறிப்புகளாயும் குணப்படுதலுக்கு எச்சரிப்புகளாகவும் வருகிற யுத்தம், பெருவாரிவியாதி, பஞ்சம்முதலியவை நீங்கலாகும்பொருட்டு விசேஷ மன்றாட்டுகள் செய்யப்படும்படி திருச்சபையால் குறிக்கப்பட்டிருக்கிறது. தோத்திரஞ்செலுத்துவது கிறிஸ்தவர்களுடைய ஆராதனையைச் சேர்ந்த விசேஷித்த பாகந்தான். தினசரி ஜீவன், சௌக்கியத்துக்காகவும் பொதுவான நன்மைகளுக்காகவுமாத்திரம் அல்ல, விசேஷ இரக்கங்களுக்காகவும் நாம் முக்கியமாய் தோத்திரஞ்செலுத்தவேண்டியது. இதற்கான ஜெபங்களும் தோத்திரங்களும் லித்தானியாவின் முடிவில் வாசிக்கப்படும்படி இங்கிலாந்துசபையில் திட்டஞ்செய்திருக்கிறது. மற்றுமுள்ள சபை ஜெபபுஸ்தகங்களில் இவை காணப்படுவதரிது.*

36. வினா. *இச்செபங்களையும் தோத்திரங்களையும்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?*

விடை. *இவைகளில் முதல் ஐந்து தீமையகற்றும் மன்றாட்டுகளையும், பிந்தின மூன்று ஜெபிக்கும் மன்றாட்டுகளையும் உடையது.*

37. வினா. *இச்செபங்களையும் தோத்திரங்களையும் எவ்விடத்தில் வாசிக்கும்படி குறித்திருக்கிறது? அவைகளில் எது விடாமல் வாசிக்கப்பட்டுவருகிறது?*

விடை. லித்தானியாவிலாவது காலை மாலை ஜெபமுறைமையிலாவது கடைசியான இரண்டு ஜெபங்களுக்கு முன்னதாக இது வாசிக்கப்பட ஒழுங்குண்டு. இந்தப் பங்கில் பார்லிமெந்து என்னும் சிரேஷ்ட ஆலோசனைச்சங்கத்தார் கூடியிருக்கும்பொழுது செய்யவேண்டிய ஜெபமும் இம்முறைமையோடு சேர்த்து வாசிக்கப்படும். எப்போதாகிலும் லித்தானியா வாசியாமல் விடப்படும்பொழுது பற்பல நிலைமையுள்ளோருக்காக செய்யப்படும் ஜெபம் அதற்குப் பதிலாக வாசிக்கப்படும். பொதுவான தோத்திரமோ எப்பொழுதும் வாசிக்கப்படும்.

38. வினா. எம்பர் என்னும் நாட்களில் குருப்பட்டம் பெறுகிறவர்களுக்காகச் செய்யவேண்டிய இரு ஜெபங்களைப்பற்றி கவனிக்கப்படத்தக்க விசேஷமென்ன?

விடை. இவைகள் இரண்டும் எம்பர்நாட்களில் வழங்கப்படத்தக்கவைதான். முந்தினது வாரத்தின் துவக்கத்தில் வழங்கப்படத்தக்கது; குருப்பட்டம் கொடுக்கிறவர்களுக்காகவும் குருப்பட்டம் பெறுகிறவர்களுக்காகவும் அதில் ஜெபிக்கிறோம். பிந்தினது வாரத்தின் முடிவில் வழங்கப்படத்தக்கது; திருப்பணிவிடைக்கு அழைக்கப்படுகிற யாவருக்கும் அவசியம் தேவையான ஆவியானவரின் அருள் அனுக்கிரகங்களுக்காகச் ஜெபிக்கிறோம்.

39. வினா. பார்லிமெந்து என்னும் சிரேஷ்ட சங்கத்துக்காகச் செய்யப்படுகிற ஜெபம் பூர்வீகமான யாதாமொரு வழக்கத்துக்கு ஒத்திருக்குமா? அச்சங்கம் உடனே கூடாமல் இன்னோர் சமயத்துக்கென்று நாள் கடத்திவைக்கப்படும்பொழுதும், முழுதுமாக நிறுத்தப்பட்டிருக்கும்பொழுதும் இச்செபம் வழங்கப்படவேண்டுமோ?

விடை. இச்செபத்துக்கு ஒத்து இணங்கத்தக்க ஜெபம் பூர்வீக ஜெபமுறைமைகளில் தோன்றுகிறதற்கு அரிதாயினும் அச்செபமானது பூர்வ கிறிஸ்தவர்கள் (Senate) என்னப்பட்ட ரோமசங்கத்தாருக்காக ஜெபம்பண்ணும் வழக்கத்துக்கு ஒத்திருக்கிறது. பார்லிமெந்து என்னும் சங்கம் கடத்திவைக்கப்பட்டிருக்கும்பொழுதும் அது வாசிக்கப்படத்தக்கதுவே.

40. வினா. இச்செபத்தில் ராஜாத்திக்காக சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிற பக்தியும் தயவுமுள்ள என்ற மொழிகளின் கருத்தென்ன?

விடை. இந்தப் பண்புச்சொற்கள் ராஜரீக உத்தியோகத்தைப்

பற்றுமேயன்றி ராஜாத்தியைத் தழுவாது. கிறிஸ்தமான அரசர்களுக்குள்ளிருக்கவேண்டிய குணங்கள் இவைகளால் குறிக்கப்படும். இவ்வித சங்கைமொழிகள் பூர்வமாய் ராஜாக்களுக்காகச் செய்யப்படும ஜெபங்களில காணப்படும். இப்படியே (Basil) என்பவருடைய ஜெபமுறைமையில் "கர்த்தாவே, மிகவும் உத்தமமும் பக்தியுமுள்ள எங்கள் ராஜாக்களின்மேல் கிருபையாயிரும" என்று கண்டிருக்கிறது.

41 வினு. முந்தின எந்த ஜெபத்துக்குப் பின்பாகிலும் வாசிக்கத்தக்க ஜெபம் என்று பேர்வழங்கிய ஜெபமானது பூர்வ ஜெபமுறைமைகளில் உண்டா?

விடை. இச்செபம் பூர்வ இங்கிலீஷ் ஜெபமுறைமை பலவற்றில் உண்டு லத்தீன்பாஷையில் செய்யப்பட்ட (Gregory) கிரெகோரியின் சாக்கரமெந்தரியிலும் உண்டு.

42 வினு. மேற்காட்டிய முந்தின ஜெபமெது?

விடை. ஜெபபுஸ்தகத்தின் சில பதித்தல்களில் இச்செபம் பற்பல நிலைமையுள்ள மனிதருக்காகச் செய்யப்படும ஜெபத்திற்குப் பின்னர் அமைக்கப்பட்டிருப்பதுண்டு. ஆனால் பார்லிமெந்தாருக்காகச் செய்யப்படும் ஜெபத்துக்கு முன்னுள்ள ஜெபங்களுக்குப்பின் அதை வழங்குவதே தகுதி.



X. CHAPTER.

THE INTROITS AND THEIR CONNECTION WITH COLLECTS.

THE MEANING OF THE WORD

The Compilation, Modification and Selections of the Collects. The different parts of a Collect The formation of the Epistles and Gospels The Gradual before and after the Gospel. Discretion to be used when a Saints' Day occur on a Sunday.

பத்தாம் அதிகாரம்.

சுருக்கஜெபங்களையும் நிருப சுவிசேஷ வாசகங்களையும் பற்றியது.



1. வினு. பொதுவான ஜெபபுஸ்தகத்தின் இப்பங்கு முன்னமே எப்படி அழைக்கப்பட்டது?

விடை. ஆறும் Edwardன் 1-ம் ஜெபபுத்தகத்தில் இப்பங்கின் முகப்பிலே "வருஷமுழுதும் கர்த்தருடைய இராப்போசனமாகிய சாக்கிரமெந்தைப் பரிமாறும்பொழுது வழங்கப்படவேண்டிய இன்றாயற்ஸ் (Introits) என்னுங் கீதங்களும் சுருக்க ஜெபங்களும் நிருப சுவிசேஷ வாசகங்களும் பற்பல பண்டிகைகளுக்கும் நாட்களுக்குமுரிய விசேஷித்த பாடங்களும் சங்கீதங்களும" என்று கண்டிருநதது.

2. வினா. மேற்காட்டியபடி Introits என்னும் கீதங்களவை? இந்த நாமத்திற்கு அர்த்தமென்ன? இவை நின்றுபோனபின் சங்கீதப் பாடவொழுங்கில உண்டான மாறுதலென்ன?

விடை. 1500ல் ஜெபபுஸ்தகம் திருப்பப்படும் முன்னதாக பூர்வ ஜெபமுறைமைப்படி குருவானவர் நற்கருணைக் கிராதிக்குச் சற்று வெளியேநின்று கர்த்தருடைய ஜெபத்தையும் சுத்தாங்கத்துக்கான சுருக்க ஜெபத்தையும் வாசித்தானபின் கிராதிக்குள் பிரவேசிக்கையில் ஒரு சங்கீதமும், "கர்த்தாவே எங்களுக்கிரங்கும்" என்று அர்த்தங்கொள்ளும் "கெரீயே எலிய்சன்" (Kyrie Eleison) என்ற கீதமும் "உன்னதங்களில் மகிமையும்" என்று அர்த்தமுள்ள "குளோரியாஇன் எகஸெல்ஸிஸ்" (Gloria in Excelcis) என்ற கீதத்தையும் அந்நாளுக்குரிய சுருக்க ஜெபத்துக்கு முன்னதாக வாசிக்க அல்லது பாடப்படும். அந்தந்த நாளின் ஆராதனைக்கேற்க தெரிந்துகொள்ளப்பட்ட மேற்காட்டிய சங்கீதங்களே "இன்ற்ராயற்ஸ்" என்னப்படும். இதற்கு அர்த்தம் உட்பிரவேசித்தல் என்பது. இவ்வழக்கம் நின்றுபோனபின் சஙகீதம் வாசிக்கபபடுவதைபபற்றி ஒரு ஒழுங்கு செய்யப்பட்டதுமன்றி விசேஷநாளுக்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட சஙகீதங்கள் ஜெபபுஸ்தகத்தின் துவக்கத்தில் காட்டிய விசேஷித்த பாட அட்டவணையோடு சேர்க்கப்பட்டன.

3. வினா. இன்ற்ராயற்ஸ் (Introits) என்னப்பட்ட சங்கீதங்களுக்கும் சுருக்க ஜெபங்களுககும் என்ன சம்பந்திருந்தது?

விடை. ஆறும் எட்வார்ட் ராஜாவின் முதலாம் ஜெபமுறையில் குருவானவர் நற்கருணைக்கிராதிக்குள் பிரவேசித்து சுருக்க ஜெபங்களை வாசிக்குமுன்னமே அதற்கிடையில் மேற்படி சங்கீதங்கள் பாடப்பட்டுவந்தன. கிறிஸ்துபிறந்த பண்டிகையில் முதலாந்தரம் பரி. நற்கருணை பரிமாறப்பட்டபோது 98-ம் சங்கீதமும், இரண்டாந்தரம் பரிமாறப்பட்டபோது 8-ம் சங்கீதமும், பெரியவெள்ளிக்கிழமைக்கு 22-ம் சங்கீதமும், ஈஸ்தர்பண்டி

கையில் முதலாந்தரம் 16-ம் சங்கீதமும், இரண்டாந்தரம் 3-ம் சங்கீதமும பாடினார்கள். இதை கி. பி. 1552ல் நீக்கிப்போட்டார்கள்.

4. வி[ன]ா. சுருக்க ஜெபங்களுக்குரிய லக்ஷணக்கூறுகள் எவை? பொதுவான ஆராதனையில் அவ்வித ஜெபங்களை வழங்குவதினாலுண்டாகும் பிரயோஜனங்களெவை?

விடை. சுருக்க ஜெபங்கள் வார்த்தைச்சுருக்கமும் பொருள் நிறைவுமுடையவைகளாயிருக்கிறதன்றி உள்ளம் எளிதிற்கொள்ளத்தக்க இயல்புடையவைகளாயும் இருக்கின்றன. அவை பெரும்பான்மையும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்குச் செலுத்தப்பட்டாலும் சில ஜெபங்கள் கிறிஸ்துவானவருக்கே செலுத்தப்படுகிறதும் உண்டு. உதாரணமாக, அடுவெந்து 3-ம் ஞாயிறு, லெந்து 1-ம ஞாயிறு, பரி. கிறிசொஸ்தம் என்பவரின் ஜெபம் அவற்றில் ஆத்துமா அல்லது சரீரநன்மையைப் பற்றிய மன்றாட்டுகளும அவைகளைக் கேட்கிறதற்கான முகாந்தரங்களும் இசைய தொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரே தொடர்பான நீடிய ஜெபத்துக்குப பதிலாக பற்பல பாகமான சுருக்க ஜெபங்களைப் பொதுவான ஆராதனையில் வழங்குகிறதற்கு பல நல்ல நியாயங்களுண்டு அவையாவன:-(1) கவலைத்தாழ்ச்சியை நீக்கி உட்கருத்தைப் பிரயோசனமாக்கி, பக்க நினைவுகளைத் தவிர்த்து ஒரே சிந்தையை நிலைப்படுத்தவும், அசதி சோம்பலை அகற்றி அமைந்த பக்தியை அனலூட்டி எழுப்பவும் இவை உபயோகமுள்ளவை. (2) சுருக்கமான வேண்டுதல்கள் பரனுடைய பண்ணியங்களையும் மகிமையையும் அடிக்கடி முன்னிட்டு சர்வவல்லமையுள்ள கடவுளைநோக்கி விண்ணப்பங்கள் செய்யப்படுவதாலே புகழ்ச்சியையும், மனவுருக்கத்தையும், பக்தியையும் உண்டாக்குமாறு நம்மில் அதிகரிக்கலாகிறது. (3) அவசிய மற்ற வார்த்தைகளை அடிக்கடி அலப்புவதற்கு இடமில்லாமல் கூறியது கூறலைத் தவிர்க்கத்தக்கவை; யூதருடைய மாதிரியைத் தொடர்ந்துசென்ற பூர்வ கிறிஸ்தவர்களுடைய வழக்கத்துக்கு அவை வேறுபாடற்றவை. (4) சீஷருக்கு மாதிரியாகச் சுருக்க ஜெபமொன்றை இயற்றுவித்த நமது இரட்சகருடைய நன் மாதிரிக்கு ஒத்தவை என்பவைகளே. இப்படியிருப்பதால் சுருக்கஜெபங்களை வழங்குவது நலமும் நியாயமுமென்றே கூறவேண்டும்.

5. வினா. சுருக்கஜெபம் என்ற மொழியின் மூலமும் உண்மையும் என்ன?

விடை. சுருக்க ஜெபம் என்பதற்கு மூலம் "கலெக்ற்ஸ்" என்பதே. இபபதத்துக்கு அர்த்தம் சேர்க்கை என்பதே. என்றாலும் சுருக்க ஜெபம் என்ற நாமமே இதற்கு உரையாக தமிழில் வழங்கிவருகிறது. அது நிருப சுவிசேஷ வாக்கியஙக ளின் பொருள் சுருக்கமாயிருப்பதினாலே சுருக்க ஜெபமென்று அழைக்கப்பட்டதென்று சிலர் சாதிப்பார்கள். பல மன்றாட்டுகள் சுருக்கி சேர்க்கப்பட்டிருப்பதால் அப்பெயர் அதற்குண் டாயிற்றென்று அபிப்பிராயஙகாட்டுவாருமுண்டு.

6. வினா. சுருக்க ஜெபம் என்ற மொழிக்கு கருத்து தெளிவற்று சருகலாய காணப்படுவதற்குக் காரணமென்ன? இப்பொழுது வழங்கப்பட்டுவருகிற சுருக்க ஜெபங்களுககு மூலம் என்ன?

விடை. சுருக்க ஜெபங்களின் புராதனமே அந்நாமத்தைப் பற்றி விபரம் தெரியாதிருபபதற்குக காரணமாம். நமது ஜெப புஸ்தகங்களிலுள்ள சுருகக ஜெபஙகளில் 44 சுருகக ஜெபங்கள் கிரெகோரி என்பவருடைய சாககிரமெந்தேரியிலுண்டு. அவர் அவைகளைப் பூர்வ ஜெபமுறைமையிலிருந்து தேர்நதுகொண டார். மீதியானவைகளில் அநேகம் 1662ல் புதுப்பிககபபட் டது. அவைகளில் 24 சுருக்கஜெபங்கள் பூர்வ ஜெபங்களினமா திரிப்படி முற்றிலும் நவமாய இயற்றப்பட்டன.

7. வினா. சுருக்கஜெபங்கள சேரககபபட்டிருக்கிற விபரம சொல்லு?

விடை. 1. சில சுருக்கஜெபங்கள் பூர்வ ஜெபமுறைகளிலிருந்து இருந்தபடியே மாற்றபபடாமல் தெரிநதெடுத்துச் சேர்க கப்பட்டிருக்கிறது.

2. சில ஜெபங்கள் சில தபபறைகளையும் அவசியமில்லாதவைகளையும் அகற்றி திருததிச சேர்க்கப்பட்டிருககிறது.

3. சில ஜெபஙகள் புதிதாய் உண்டாக்கப்பட்டது. பூர்வ ஜெபமுறைகளில் முககியமான மூன்றுபேருடைய சுருகக ஜெபங்கள் இதற்கு ஆதாரம்.

4. சுருக்க ஜெபங்கள் பரி. லீயோவின் நற்கருணைமுறையிலிருந்து சேர்க்கப்பட்டது; இது கி. பி. 451ல் உணடானது. 21 சுருக்கஜெபங்கள் கலேசியஸ் என்ற ஜெபமுறைமையிலிருந்து சேர்க்கப்பட்டது; இது கி. பி. 492ல் உண்டானது. 28 சுருக்கஜெபங்கள் பரி. கிரெகோரி என்பவருடைய ஜெபமு

றையிலிருந்து சேர்க்கப்பட்டது; இது கி. பி. 590ல் உண்டானது.

24. சுருக்கஜெபங்கள் புதிதாய் உண்டாக்கப்பட்டது. அவைகளாவன:—

கி. பி. 1549.

1 அத்வெந்து 1-ம் ஞாயிறு.
2. ,, 2-ம் ஞாயிறு.
3. கிறிஸ்துவின் பிறப்பு நாள்.
4. பிரசன்னத் திருநாள்
5. கின்குவகெசிமா ஞாயிறு.
6. சாம்பற் புதன்கிழமை.
7. லெந்து 1-ம் ஞாயிறு.
8. உயிர்த். 1-ம் ஞாயிறு.
9 ,, 2-ம் ஞாயிறு.
10 பரி. தோமாவின் நாள்.
11. பரி. மத்தியாவின் நாள்.
12 பரி. மாற்குவின் நாள்.
13. பரி. பர்னபாவின் நாள்.
14. பரி. யோவான்ஸ்நானன் நாள்.
15. பரி பேதுருவின் நாள்.
16 பரி யாக்கோபின் நாள்.
17. பரி மத்தேயுவின் நாள்.
18. பரி. லூக்காவின் நாள்.
19. பரி. யூதா, சீமோன் நாள்.
20. சகல பரிசுத்தவான்களின் நாள் கி. பி. 1582.
21. பரி. அந்திரேயாவின் நாள் கி. பி. 1662.
22. அத்வெந்து 3-ம் ஞாயிறு.
23. பிரசன்னத்திருநாள் 6-ம் ஞாயிறு.
24. உயிர்த்தெழுதலுக்கு முந்தின சாயங்காலம்.

8. வினா. இச்ஜெபபுஸ்தகத்தை இயற்றினவர்கள் திருச்சபை சீர்திருத்தலுக்குமுன் வழங்கிவந்த சுருக்க ஜெபங்களில் சிலவற்றைத் தள்ளி மற்றவைகளைத் திருத்திப் புதிப்பித்த நோக்கம் என்ன?

விடை. ரோமான்மார்க்கத்தார் தங்கள் கேடான கொள்கைகளுக்கிசைவாய் ஊடே ஊடே கூட்டியிருந்த தப்பறைகளை நீக்கவும் பழுதுள்ளவைகளைத் தள்ளிவிட்டு பழுதற்றவைகளைச் சேர்த்துக்கொள்ளவும் நோக்கங்கொண்டவர்களாய் இப்படிச் செய்தார்கள். இவ்விதமாய் வேதவுரைக்கு விரோதமாக பரிசுத்தவான்களின் புண்ணியங்களின்பேரில் சார்பும், அவர்களுடைய உதவிக்காக மன்றாட்டும், அவர்களுடைய மத்தியஸ்தத்துக்காக விண்ணப்பமுமுள்ள தப்பறையான ஜெபங்கள் நீக்கப்பட்டு, அவைகளுக்குப் பதிலாக இப்பொழுது பரிசுத்தவான்களின் நாட்களில் வழங்கப்படுகிற சுருக்க ஜெபங்களில் 12 புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

9. வினா. ஒவ்வொரு சுருக்க ஜெபத்திலும் எத்தனை பங்குகள் காணப்படும்?

விடை. ஐந்து பங்குகளுண்டு.

(1) தேவனுடைய ஒரு விசேஷித்த லக்ஷணம்.

(2) விண்ணப்பத்துக்கு ஆதாரமான ஒருகாரணம்.

(3) அவ்விலக்ஷணத்துக்கும் காரணத்துக்குமேற்ற விண்ணபபம்.

(4) அவ்விண்ணப்பத்துக்கேற்ற ஒரு முகாந்திரம் அல்லது நோக்கம்.

(5) திரித்துவ தோத்திரத்துடன் முடிவுரை இவைகளே.

உதாரணமாக லெந்தென்னும் நாளுக்குரிய சுருக்க ஜெபத்தில்,

(1) சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே என்பதுமுகவுரை.

(2) உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாதவரும் தங்கள் பாவஙகளினிமித்தம் மனஸ்தாபபபடுகிற யாவருக்கும் மன்னிக்கிறவருமாயிருக்கிறீர் என்பது மூலிய காரணம்.

(3) எங்களுக்குள்ளே நொறுங்குண்ட புதிதான இருதயத்தைச் சிருஷ்டிக்கவேண்டுமென்று என்பது விண்ணபபம்.

(4) எங்களுடைய பாவங்களைக்குறித்து நாங்கள் துக்கித்துப் புலம்பி எங்கள் நிர்ப்பாக்கியதகைத அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெறத்தக்கதாக என்பது முகாநதிரம் அல்லது நோக்கம்.

(5) எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம் என்பது முடிவுரை.

10. வினு. அடுவெந்திலுள்ள முதலாம் இரண்டாம் ஞாயிறுகளுக்கும் கிறிஸ்துபிறந்த பண்டிகைநாளுக்குமுரிய சுருக்க ஜெபங்களுக்கு மூலமென்ன?

விடை. அடுவெந்திலுள்ள முதலாம் ஞாயிறு சுருக்க ஜெபம் கொலோசெயுவின் (Golasius) சாக்கிரமெந்தேரியிலிருந்து எடுக்கப்பட்டது. அதில் கண்டிருக்கிறதாவது:—உம்முடைய ஜனத்தின் ஜெபங்களை இரக்கமாய்க் கேட்டருளவேணடுமென்று கர்த்தாவாகிய உம்மை மன்றாடுகிறோம். உம்முடைய ஒன்றான குமாரன் மாம்சத்தில் வெளிப்பட்டதற்காக களித்துச் சந்தோஷப்படுகிற நாஙகள் அவர் இரண்டாந்தரம் தம்முடைய மகத்துவத்தில் வரும்போது நித்திய ஜீவபாக்கியத்தை அடையும்படிக்கு எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபைபுரிந்தருளும்.

கிரெகோரி என்பவருடைய சாக்கிரமெந்தேரியில் கிறிஸ்து பிறந்த பண்டிகைக்குரிய ஒரு சுருக்க ஜெபமுண்டு. அப்பண்டிகையில் இப்பொழுது வழங்கப்பட்டுவருகிற ஜெபமானது அதினின்று மொழிபெயர்க்கப்பட்டிராவிட்டாலும் அதற்கு மிகவும் ஒத்திருக்கிறது. அது வருமாறு, "சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, உம்முடைய வார்த்தையானவர் மனிதத்தன்மையை எடுத்ததினாலும் அவர் பரிசுத்த கன்னிகையாகிய மரியாளிடத்தில் பிறந்ததினாலும இந்நாளை பிரதிஷ்டைசெய்தீரே. உம்முடைய ஜனங்களாகிய எங்களுக்கு இதை ஆசரிப்பதில் மெய் ஐக்கியத்தையளித்து உம்முடைய கிருபையால் மீட்கப்பட்ட நாங்கள் தேவரீர் அளிக்கும் புத்திர சுவீகாரத்தால் கவலையின்றி காக்கப்படும்படிக்கு அந்த இயேசுகிறிஸ்துவின்மூலமாய் கிருபைசெய்தருளும்" அடுவெந்திலுள்ள இரண்டாம் ஞாயிறுக்குரிய சுருக்க ஜெபத்தில் நிருபவாக்கியத்திலிருந்து நேராய் எடுக்கப்பட்ட பங்குதவிர மற்றப பங்கு பரிசுத்த யாக்கோபு என்பவருடைய பெயரால் வழங்கிய ஜெபபுஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம்.

11. வினு. பரிசுத்தவான்களுடைய பரிந்துபேசுதலைப்பற்றிய பூர்வ சுருக்க ஜெபமொன்றைச் சொல்லு?

விடை. ரோமான்சபை ஜெபமுறைமையில் பரிசுத்த அந்திரேயாவின் பண்டிகைக்குரிய சுருக்க ஜெபம் இதற்கான உதாரணமாம். அதாவது, உம்முடைய திருச்சபைக்கு அப்போஸ்தலனுகிய பரி. அந்திரேயா பிரசங்கியும் அதிகாரியுமாயிருந்தது போல அவர் உம்மிடத்தில் எங்களுக்காக எப்பொழுதும் பரிந்துபேசுகிறவராயும இருக்கும்படிக்கு உம்முடைய மகத்துவத்தை இயேசுகிறிஸ்துவின்மூலமாய் மனத்தாழ்மையாய் பிரார்த்திக்கிறோம் கர்த்தாவே. ஆமென்.

12. வினு ஒவ்வொரு சுருக்க ஜெபத்துக்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கிற நிருப சுவிசேஷவாக்கியங்கள் இப்பொழுது வாசிக்கக் குறிக்கப்பட்ட நாளுக்கே பூர்வீகமாயும் குறிக்கப்பட்டதென்று எப்படித் தெரியவரும்? அவைகளைத் தேர்ந்தெடுத்து ஒழுங்குப்படுத்தினதார்? அவைகள் தேர்ந்தெடுத்து ஒழுங்குப்படுத்தப்பட்டனவென்று தோன்றுவதெப்படி?

விடை. பரிசுத்த நற்கருணைக்கு முன்னதாக புதிய ஏற்பாட்டில் ஒருபங்கை வாசிப்பது வழக்கமென்று பூர்வ பிதாக்களின் ஆகமங்களால் தெரியவருகிறதன்றி நிருப சுவிசேஷவாக்கியங்கள் நமக்குள் வழங்கப்பட்டுவருகிற ஒழுங்குப்படி மேற்சபை

களிலுள்ள ஜெபமுறைமைகளிலுங் குறிக்கப்பட்டிருப்பதும் நிருப சுவிசேஷ வாக்கியங்களைப்பற்றி இப்பொழுது ஒப்புக் கொள்ளப்பட்டுவருகிற ஒழுங்கே 1200 அல்லது 1400 வருஷங்களுக்கு முன்னதாகவும ஒப்புக்கொள்ளப்பட்டதென்பது பிரதிபட்சமாயிருக்கிறது. இவைகளை ஏற்படுத்தினவர் எரோம் என்பவர்தானென்று சிலர் சொல்லுவார்கள். இவையும் புதிய ஏற்பாட்டில் அதிக படிப்பினையுள்ள பங்குகள். இவைகளில் நிருபவாக்கியமானவை சுவிசேஷ வாசகங்களிலுள்ள சரித்திரத்துக்கும் அத்தாலுண்டாகும் படிப்பினைக்கும் ஒத்திருப்பதால் அவை தகுந்த யோசனையோடு தேர்ந்தெடுத்து ஒழுங்கு படுத்தப்பட்டனவென்றும் விளங்கும்.

13. வினா. கிறுடுயல் (Gradual) என்பதென்ன? சுவிசேஷவாசகத்துக்கு முன்னும் பின்னும் தேவனுக்கு தோத்திரக் கீர்த்தனை பாடப்பட்டுவருகிற வழக்கத்துக்கு ஆதாரமென்ன?

விடை. ரோமான்சபையாருடைய ஆலயங்களில் முன் போல இப்பவும் நிருபவாசகத்துக்குப்பின் ஒரு சங்கீதம் பாடப் பட்டுவருகிற வழக்கமுண்டு. அது பொற்பதத்தின் படியினின்று பாடப்பட்டதால் அப்படிக்கு உரியதென்று அர்த்தங்கொள்ளுகிற கிறுடுயலென்ற நாமம் அதற்குண்டாயிற்று.

6–ம் எட்வார்டின் (Edward.) முதலாம ஜெபபுஸ்தகத்தி லுள்ள ரூபிரிக்கில் கற்பிக்கப்பட்டிருக்கிறபடி இங்கிலாந்து சபையிலுள்ள ஆலயங்களிலும சுவிசேஷவாசகத்துக்கு முன் "தேவரீருக்கே மகிமையுண்டாவதாக" என்ற மொழிகள் சொல்லப்படும்.

14. வினா. நிருபவாசகமும் சுவிசேஷவாசகமும் வாசிக் கப்பட்டுவருகிற நிலை முறையென்ன அதினால் முந்தினதை விட பிந்தினது நன்குமதிக்கப்படலாகிறதோ?

விடை. வேத எழுத்துகளெல்லாம் தேவ ஆவியினாலுண்டா யிருப்பதால் (1 பேது. 3. 16.) ஒன்றைவிட மற்றொன்றை நன்குமதிக்கவும் தாழ்வாய் எண்ணவும் இடமற்றிருப்பதினாலே இரண்டும் ஒரே அதிகாரம்பொருந்தியதென்பது யதார்த்தமா யிருக்கிறது. என்றாலும் அப்போஸ்தலமாரைவிட நமது ஆண்டவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருப்பதால் சுவிசேஷ வாசகம் நின்றுகொண்டு வாசிக்கப்படுகிற வழக்கமுண்டா யிருக்கலாம். கிறிஸ்துவானவருடைய தெய்வீக தன்மையை மறுத்த ஆரியுவினுடைய வேதப்புரட்டே அவ்வழக்கத்துக்கு

மூலமென்று தோன்றுகிறது. ஊழியக்காரருடைய போதனை அவர்களுடைய எஜமானாகிய ஆண்டவருடைய போதகத்துக்கு வழியை ஆயத்தப்படுத்துவது நேர்மையானதால் நிருப வாசகம் முன்னும் சுவிசேஷவாசகம் பின்னும் வாசிக்கப்படுவது நியாயமாயிருக்கலாம்.

15. வினா. ஞாயிறுகள் யாதொன்றில் பரிசுத்தவானுடைய நாள் வந்து நேரிடுமானால் எதற்குரிய முறைமை பெரும்பான்மையும் வாசிக்கப்படும்?

விடை. முக்கியமான பண்டிகைநாளாயிராத யாதொரு ஞாயிற்றில் பரிசுத்தவானுடைய நாள் வந்து குறுக்கிடுமானால் பரிசுத்தவானுடைய நாளுக்குரிய நிருப சுவிசேஷ வாசகமுதலானவை பெரும்பான்மையும் வாசிக்கப்படும். என்றாலும் காலை மாலை ஜெபங்களில் இரண்டுக்குமுரிய சுருக்கஜெபங்களையும் வாசிக்கவேண்டும்.

16. வினா. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் ஞாயிறுகள் இருபத்தைந்துக்கு அதிகப்படுமானால், அதிகப்படும் ஞாயிறுகளில் (முன்னர் வெளிப்படுதலுக்குப் பின்வரும் ஞாயிறுகளில் விடப்பட்ட ஞாயிறுகளுக்குரிய சுருக்க ஜெபங்களில்) வாசிக்கப்படவேண்டிய சுருக்க ஜெபங்களெவை?

விடை. அவைகளில் வாசிக்கப்படவேண்டியவை இன்னவையென்று ரூபிரிக்கில் திட்டங்கூறப்பட்டிருக்கவில்லை; திட்டஞ்செய்துகொள்வது குருவானவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலர் வெளிப்படுத்தலுக்குப் பின்வரும் ஞாயிறுகளுக்குரிய சுருக்கஜெபங்களில் கடைசியாய் வாசிக்கப்பட்ட சுருக்க ஜெபத்துக்கடுத்த சுருக்க ஜெபத்தைத் தொடர்ந்து வாசிப்பதுண்டு ஆனால் அவைகளில் கடைசியாவது அவசியமானால் கடைசி இரண்டையாவது வாசிப்பது தகுதி; ஏனெனில் அடுத்தவருஷத்தில் வெளிப்படுதலுக்குப் பின்வரும் ஞாயிறுகளுக்குரிய சுருக்க ஜெபங்களெல்லாம் வாசிக்கப்பட குறிக்கப்பட்டிருக்குமாகில் ஒரே ஆராதனை முறையே சீக்கிரம் திரும்பிவருவதாலும் வெளிப்படுதலுக்குப் பின்வரும் கடைசி ஞாயிறுக்குரிய சுருக்க ஜெபமானது அடுவெந்தென்னும் ஞாயிறுக்குமுன்னேர் வருவதற்கேற்ற தன்மையுள்ளதாயிருப்பதாலும் அக்கடைசி ஞாயிறுக்குரிய சுருக்க ஜெபத்தை வாசிப்பது தகுதியெனக் கூறலாயிற்று.

XI. CHAPTER.

THE COMMENCEMENT OF THE CELEBRATIONS OF THE DAYS OF THE SAINTS.

The Council of Trent and the Roman distinction of Latria, Hyperdulia and Dulia. A short account of each saint with the moral application of the Day.

பதினோராம் அதிகாரம்.

பரிசுத்தவான்களையும் திருநாட்களையும் பற்றியது.

1. **வினா.** *பரிசுத்தவான்களின் திருநாளாசரிப்பு எவ்வித மாய் உற்பத்தியாயிற்று?*

விடை. *இரத்தச்சாட்சியாய் மரித்தவர்களை அந்தந்த இடத் திலுள்ளவர்கள் அவர்கள் இறந்தநாளிலே நினைவுகூர்ந்தே. சிமிர்னாசபை பைலோமியம் என்ற இடத்திலுள்ள கிறிஸ்தவாக ளுக்கு எழுதிய நிருபத்தில் கி. பி. 167ல் ரத்தச்சாட்சியாய் மரித்த பரி. போலிகார்ப்பு என்பவரைப்பற்றிச் சொல்லியதா வது:—யூதர்கள் ரத்தச்சாட்சியாய் மரித்த இந்தப் பரிசுத்தவானு டைய உடலை கிறிஸ்தவர்கள் வணங்குவார்களென்றெண்ணி, அதை அவர்கள் வைத்துக்கொள்ள பிரியமற்றவர்களாயிருந் தார்கள்; நாங்கள் இயேசுகிறிஸ்துவை விட்டுவிட்டு இன்னொரு வரை வணங்கமாட்டோம் என்பது கொஞ்சமாகிலும் அவர்க ளுக்குத் தெரியவில்லை; இரத்தச்சாட்சிகளை நாங்கள் கனஞ் செய்து தங்கள் ராஜாவும் எஜமானுமாகிய இரட்சகரை அவர்கள் நேசித்து அவருடைய சீஷர்களாய் அவரைப் பின்பற்றினதற் காக வருஷத்தில் ஒருநாள் அவர்கள் கல்லறையில் அவர்களை நினைவுகூருகிறோம் என்பதே. மேற்சொல்லியபடியே அந்தி யோகியா பட்டணத்துச் சபையும் கி. பி. 107ல் இரத்தச் சாட்சியாய் மரித்த பரி. இஞ்ஞேசியு என்பவருடையநாளைக் கொண்டாடிவந்தார்கள். பரிசுத்தவான்களின் நற்குணங்கள், பிரயாசங்கள், துன்பங்களின் விபரம் அந்தந்த திருநாட்களிலே ஜனங்களுக்குச் சொல்லப்பட்டது.*

2. **வினா.** *பிந்தியகாலத்தில் இது மாறின விதத்தையும் திரெண்டு (Trent) என்னுஞ் சங்கத்தின் ஏற்பாட்டையும் சொல்லு?*

விடை. *பரிசுத்தவான்களின் நினைவுகூருதல் படிப்படியாய் காலஞ்செல்லவே கட்டுக்கதைகளின் உற்பத்தியினாலும்*

பொய்யான அற்புதங்களின் பிரசித்தங்களினாலும் விக்கிரக ஆராதனையாக மாறி பின்வரும் சட்டம் திரெனடு சங்கத்தில் தீர்மானமாயிற்று. கிறிஸ்து வோடே அரசாளுகிற பரிசுத்தவான்கள் மனிதருக்காக தேவனை நோக்கி ஜெபஞ்செய்கிறார்கள். ஆகையால் தேவனிடத்திலிருந்து இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நன்மைகளை பெற்றுக்கொள்ளும்படிக்கு பரிசுத்தவான்களை நோக்கி உதவி ஒத்தாசைக்காக ஜெபம்பண்ணுவது நன்றும் பிரயோஜனமுள்ளதுமாயிருக்கிறது. இதை மறுக்கிறவர்கள், அல்லது பரிசுத்தவான்கள் மனிதருக்காக ஜெபம்பண்ணமாட்டார்கள் என்று சொல்லுகிறவர்கள், அல்லது அப்படிச்செய்வது விக்கிரகாராதனையென்பவர்கள், அல்லது அது வேதத்துக்கு விரோதமும் மனிதருக்கும் தேவனுக்கும் ஒரே மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு விரோதமுமாயிருக்கிறதென்பவர்கள், அல்லது அவர்களை நோக்கி ஜெபம்பண்ணுவது வீணும் அவபக்தியுமாயிருக்கிறதென்று சொல்லுகிறவர்கள் பக்தி அற்றவர்களென்று தீர்மானிக்கிறோம் என்பதே. மேருமானித்தா (Latria) லாட்ரியா என்பது தெய்வ வணக்கமென்றும், (Hyperdulia) ஐப்பர்டியூலியா என்பது கிறிஸ்துவின் மனித தன்மைக்கும் பரி. கன்னி மரியாளுக்குமுரிய வணக்கமென்றும், (Dulia) டியூலியா என்பது பரிசுத்தவான்களுக்குரிய வணக்கமென்றும் பிரித்தபிரிவு அறிவீன ஜனங்களுக்கு விளங்காமல், அவர்கள் எல்லாரையும் ஏகமாய் [illegible] நம்பிவிட்டதினாலே தேவன் ஒருவருக்கே சேரவேண்டிய மகிமை ஸ்தோத்திரம் எல்லாம் அவரைவிட்டு எடுபட்டுப்போய் செய்து போட்டார்கள்.

3. வினா. அப்படியானால் இங்கிலாந்துசபை அந்தத் திருநாட்களை என கொண்டாடுகிறது?

விடை. இங்கிலாந்துசபை பரிசுத்தவான்களை மகிமைப்படுத்தாமல் அவர்களைப் பரிசுத்தராக்கின தேவனை மகிமைப்படுத்தி அவர்கள்காட்டிய நன்மாதிரியையும் அதினால் தேவனுக்குண்டான மகிமையையும் நினைவுகூரும்படி செய்கிறது. நாம் அவர்களை நோக்கி ஜெபம்பண்ணாமல் அவர்கள் பக்தியுள்ள நடக்கைகளையும் உபதேசங்களையும் பின்பற்றி நடக்கும்படி நமக்காகவே ஜெபம்பண்ணிக்கொள்ளுகிறோம். ஜெபபுஸ்தக அட்டவணை முகவுரையையும் விக்கிரகாராதனையின்பேரிலும் ஜெபத்தின்பேரிலும் செய்யப்பட்ட ஓமிலி பிரசங்கங்களையும் வாசிப்போருக்கு இது தெரியவரும்.

4. வினா. *பரிசுத்தவான்களின் நாட்களிலே பரிசுத்த நற்கருணையைப் பரிமாறவேண்டுமென்பது நம்முடைய சபை ஒழுங்குதானா?*

விடை. ஆம். இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்துசபையனைத்துக்கும் சீருண்டாகப பண்ணும் ஜெபத்தின் கடைசியில் "உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியுமுள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாருக்காகவும்" முதலிய பாகம் அதற்காகவே சேர்க்கப்பட்டிருக்கிறதுமன்றி, அந்தந்த நாளுக்கு விசேஷித்த சுருக்க ஜெபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் குறிக்கப்பட்டிருக்கிறது.

5. வினா. *பரி. அந்திரேயாவின் சரித்திரமும் அவர் நாளின் போதனையுமென்ன?*

விடை. பரி. அந்திரேயா முதலாவதாக அழைக்கப்பட்டவரானதாலும், அவரே தம்முடைய சகோதரனாகிய பரி. பேதுருவை இரட்சகரண்டை அழைத்துவந்தவரானதாலும் அவருடைய நாள் முதலாவதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷ சரித்திரத்தில் தெரிந்து கலிலேயாவில் அழைக்கப்பட்ட மூன்றுபேரோடு (மத். 4 19) இவர்பேர் சேர்ந்தும், எருசலேமின் அழிவு முன்னறிவிக்கப்பட்டபோது (மாற். 13. 3.) இவர் பேர் சேர்ந்தும், யூதேயாவில் முதலாவது அழைக்கப்பட்டதன் ஊராகிய பிலிப்புவின் சம்பந்தமாயும், ஐயாயிரம்பேர் போஷிக்கப்பட்டதில் சம்பந்தமாயும், பரிசுத்தவாரத்தில் கிரேக்கர்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்த சம்பந்தமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய குணசீலங்களைப்பற்றியும் வேலைகளைப்பற்றியும் சுவிசேஷத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. பாரம்பரியத்தினால் இவர் அநேக இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கடைசியாக கிரேக்கத்தேசத்திலுள்ள மோரியாவைச் சேர்ந்த பத்திரியாஸ்பட்டணத்தில் தம்முடைய பேரால் அழைக்கப்படுகிற நட்சத்திரங்கள் இருக்கப்பட்ட சாய்ந்தமாதிரி சிலுவையில் அறையப்பட்டு ரத்தச்சாட்சியாய் மரித்தார். இவருடைய திருநாளில் 1–வது பரி. அந்திரேயா கிறிஸ்துவின் அழைப்புக்கு உற்சாகமாய்க் கீழ்ப்படிந்ததுபோல் நாமும் கீழ்ப்படியவேண்டுமென்றும், 2–வது தேவனுடைய பரிசுத்த வசனத்தின் சத்தத்துக்கு உற்சாகமாய்க் கீழ்ப்படிய ஜெபம்பண்ணவேண்டுமென்றும் போதிக்கப்படுகிறோம்.

6. வினா. *பரி. தோமாவின் சரித்திரமும் அவர் நாளின் போதனையும் என்ன?*

விடை. தோமா என்ற எபிரேய நாமமும் திதிமு என்ற கிரேக்க நாமமும் இரட்டைபபிள்ளை என்ற அர்த்தமுள்ளது. பரி. தோமாவின் பெயர் எப்பொழுதும் பரி. மத்தேயுவோடே சேர்ந்துவருவதால் அவருடைய சகோதரனென்று எண்ணப் பட்டுவந்தது. அவருடைய குணசீலத்தைப்பற்றி பரி. யோவான் சுவிசேஷத்தில் சில குறிப்புகளுண்டு. சகலத்தையுங் கேட்டு அறிந்தும் அவரில் காணப்பட்ட அறியாமையினால் இயேசுநாதரின் உயிர்த்தெழுதலைக்குறித்துப் பிடிவாதமாய சந்தேகத்தில் உழன்றதும் அதற்கப்பால் தன இரட்சகரோடே மரிக்கத்தக்கதாய் திடனான விசுவாசங்கொண்டதும் இவருடைய சுபாவம் இன்னதென்று காட்டுகிறது. அவருடைய பிந்தியகால சரித்திரத்தைப்பற்றி வேதத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. பாரம்பரியத்தினால அவர் பார்சியாவரைப் போய் பிரசங்கம்பண்ணினார் என்றும் அதற்கப்பால் இந்தியாவுக்கு வந்து அங்கே ரத்தச்சாட்சியாய் மரித்தார் என்றும் அறியவருகிறே[illegible]. இவருடைய திருநாளில் 1–வது தோமாவின் சந்தேகத்தை நீக்கி விசுவாசத்தை உறுதிப்படுத்தினதை நினைவுகூருதலும், 2–வது நம்முடைய விசுவாசக்குறைவு இப்படிக் கண்டிக[illegible] [illegible]திருக்க ஜெப[illegible] செய்தலுமே.

7. வினா. பரி. பவுல் குணப்பட்ட[illegible]ன் விசேஷமும் போதனையும் என்ன?

விடை. இந்தத் திருநாள் பரி. பே[illegible]ன் திருநாளோடு இருவரும் ஏககாலத்தில் ஒரே இடத்[illegible] [illegible]த்தச்சாட்சிகளாய் மரித்தார்கள் என்பதையிட்டு ஒன்றாய் [illegible]பட்டது. பிந்தியகாலத்தில் அவருடைய குணப்படுத[illegible] [illegible]வேறாகப் பிரிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தேநாளு[illegible] அவருடைய குணப்படுதலும் வேலையும் முக்கிய ச[illegible]னதாலும் கிறிஸ்தவ ஆத்துமாவுக்கு முக்கிய ஞானபோதனையையும் தைரியத்தையும் கொடுக்கிறதாயிருப்பதாலும் இப்படிப் பிரிக்கலாயிற்று. இவர் நாளில் 1–வது இவருடைய மிஷனெரி வேலைகளை நினைவுகூருதலும், 2–வது நாம் நன்றியறிதலோடே அவருடைய உபதேசத்தைக் கைக்கொள்ளுவதும் ஜெபிப்பதும் நமது கடமையாயிருக்கிறது.

8. வினா. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்பின் திருநாளின் விசேஷமும் அதின் போதனையும் என்ன?

விடை. இதற்கு கிறிஸ்துநாதர் தேவாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாளென்றும், சிமியோன் அன்னாள் என்பவர்

களுடைய சந்திப்பின் நாளென்றும், மெழுகுவர்த்தித் திருநா ளென்றும் வேறே பேர்களுமிருந்தது. நம்முடைய ஜெப புத்தகத்தில் பிந்தின இரண்டுவிஷயங்களுக்கும் ஆதாரங்காணப் படுகிறது. சுத்திகரிபபின் திருநாள் என்பது ரோமச்சபையில் வழங்கி பிந்தியகாலத்தில் சேர்க்கப்பட்ட பேராயிருக்கிறது. இந்தப் பண்டிகை கிறிஸ்துவின் ஜெநந திருநாளுக்கு அடுத் துவரும்படி தேதி குறிக்கபபட்டும் இருக்கிறது. செரெஸ் என்ற அஞ்ஞானதிருநாளில் அஞ்ஞானிகள் பந்தங்கள் தீவ ட்டிகளை பிடித்து பெப்ருவரி மாதத்தின் துவக்கத்தில் கொண் டாடின உற்சவத்தைக் குலைக்கும்படியாக கிறிஸ்தவர்கள் இந்த நாளில் மெழுகுவர்த்திகளைப் பிடித்துக்கொண்டு ஊர்சுற்றிப் பவனிசென்றமையாலும் புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளி யாகவும் கிறிஸ்துநாதர் தேவாலயத்தில பிரதிஷ்டைசெயயப் பட்டபடியினாலும் இந்த நாளுக்கு மெழுகுவர்த்தி திருநாள் என்றபேர் உண்டாயிற்று. சுத்திகரிப்பு நியாயப்பிரமாணத் தின்படி நடத்தப்பட்டதால் அதுவும் இந்த நாளுககேற்றதாகவே இருக்கிறது. நம்முடைய மாமசத்தில் தேவாலயத்தில் சென்ற இரட்சகனை நினைப்பதும் நாம் நம்மை சுத்த இருதயத்தோடு தேவனுக்கு காணிக்கையாகப் படைப்பதும் இந்தநாளுக்குரிய கடமையும் போதனையுமாயிருக்கிறது.

9. வினா. பரி. மத்தியாவைப்பற்றிய விசேஷமென்ன?

விடை. இந்த அப்போஸ்தலன் அப்போஸ்தலப்பட்டத் துக்கு தெரிந்துகொள்ளப்பட்ட விஷயந்தவிர வேறேயாதொ ன்றும் சொல்லப்படவில்லை. பாரம்பரியத்தினால் இவர் கப்ப தோக்கியாவில் சுவிசேஷத்தைப் பிரசஙகித்து அவ்விடத்தில் ரத்தச்சாட்சியாய் மரித்ததாக அறியவருகிறோம். கிழக்குச் சபையில் இவருடைய திருநாள் ஆகஸ்துமாதம் 9-ம் தேதியில் கொண்டாடப்படுகிறது; மேற்குச்சபையில் சகல அப்போஸ் தலர் திருநாளுக்கு கடைசியாகச் சேர்க்கப்பட்டது. யூதாசுக் குப் பதிலாக இவர் தெரிந்துகொள்ளப்பட்டதினாலே திருச் சபை எப்பொழுதும் கள்ள அப்போஸ்தலருக்கு விலக்கிக் காக் கப்பட்டு உண்மையுள்ள மேய்ப்பர்களால் நடத்தப்படவேண்டு மென்பது நமது ஜெபமாயிருக்கவேண்டியது.

10. வினா. மங்களவாக்குத் திருநாளின் போதனையென்ன?

விடை. கிறிஸ்மஸ்பண்டிகைக்கு அடுத்தவரும் இந்தத் திரு நாள் ஏழாம் நூற்றாண்டுமுதல் கைக்கொள்ளப்பட்டுவருகிறது. சுருக்க்ஜெபத்தினால் தெரியவருகிறபடி சுத்திகரிப்பின் நாளைப்

போல் இதுவும் நம்முடைய இரட்சகருடைய சரிதையையே போதிக்கிற திருநாளாயிருக்கிறது. வாழ்க் கிருபைபெற்றவளே என்று சொல்லப்பட்டிருப்பதையிட்டு சிலர் இதைப் பரி. கன்னிமரியாளைக் கொண்டாடும் நாளாக எண்ணித தகாதவித மாய் கர்த்தருடைய தாயாரை வணங்கிப பூசைசெய்யும நாளாக மாற்றிவிட்டார்கள். கர்த்தருடைய தாயாரை ஆதிகிறிஸ்த வர்களும் வேதவசனமும் கனப்படுத்தினாலும் தேவ்வணக்கம் கொடுத்திருப்பதாயத் தெரியவில்லை. சுருக்கஜெபத்தில் பரிசுத்த மரியாளைப்பற்றி ஒன்றும் சொல்லாமல கிறிஸ்துவின் பிறப் பைபபற்றி தேவதூதன் அறிவித்ததும் அவருடைய சிலுவை யினாலும் பாடுகளினாலும் அவருடைய மகிமையுள்ள உயிர்த் தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

11. வினா. பரி. மாற்குவின் சரித்திரத்தையும் அவர்நாளில் நாம் கற்றுக்கொள்ளவேண்டியதையும் சொல்லு?

விடை. மாற்கு என்று மறுபேர்கொண்ட யோவான் இவர் தானென்றும், பரி. பேதுரு சிறைச்சாலையிலிருந்துபோன வீடு இவருடைய தாயாகிய மரியாளுடைய வீடென்றும், இவர் பர்னபாவுக்கு மருமகனாயிருந்து முதலாம் பிரயாணத்தில் பரி. பவுலோடே போனாரென்றும, மனஸ்தாபத்தினாலே பொசெயி லிருந்து திரும்பி அப்புறம் சீப்புருதீவில் பரி. பர்னபாவோடே சேர்ந்தாரென்றும், பரி. பேதுருவினாலே என் பிரிய குமாரனாகிய மாற்கு என்று சொல்லப்பட்டவர் இவர்தானென்றும்; பரி. பவு லோடும் இவர் ராஜியாகி அவருடைய சிறையிருப்பின் காலத் தில் உதவிசெய்துவந்தாரென்றும் அப்போஸதலர் நடபடி களினாலும் நிருபங்களினாலும் தெரியவருகிறது. நம்பப்படத் தக்க பாரம்பரியத்தினால் இவர் பரி. பேதுருவின் சொற்படி தம்முடைய சுவிசேஷத்தை எழுதினாரென்றும் அலெக்சந் திரியாவில் கண்காணியாராயிருந்து அங்கே ரத்தச்சாட்சியாய் மரித்தாரென்றும் தெரியவருகிறது. பரி. மாற்கு சுவிசேஷ கனாய் திருச்சபைக்குச் செய்த பணிவிடையை நினைவுகூர்ந்து அவருடைய சுவிசேஷத்திலுள்ள சத்தியத்தில் ஸ்திரப்படும்படி இந்நாளில் ஜெபஞ்செய்கிறோம்.

12. வினா. பரி. பிலிப்பு, யாக்கோபு என்பவர்களின் சரித் திரம் என்ன?

விடை. இந்த இரண்டு அப்போஸ்தலர்களையும் ஒன்றாய்ச் சேர்த்ததற்குக் காரணம் தெரியவில்லை. கிரேக்கச்சபை இவர்

களைப் பிரித்து பரி. பிலிப்புவின் நாளை நவம்பர்மாதம் 14-ம் தேதியிலும் பரி. யாக்கோபின் நாளை அக்டோபர்மாதம் 9-ம் தேதியிலும் ஆசரித்துவருகிறார்கள். ஒருவேளை இருவரும் அறிவுடைய ஆசைகொண்டவர்களாயிருந்ததினாலே ஒன்றாய்ச் சேர்த்திருக்கலாம்; அல்லது கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபை சின்னயாக்கோபு என்று எண்ணியிருக்கலாம். பரி. பிலிப்புவைப்பற்றி பரி. யோவான் சுவிசேஷத்தில் மாத்திரம் கண்டிருக்கிறது. அவர் துவக்கத்தில் கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவராயும் நாத்தானியேலை அவரண்டை கொண்டுவந்தவராயுமிருந்தார். ஐயாயிரம்பேரை போஷித்தபோதும் கிரேக்கர் கிறிஸ்துவண்டை வந்தபோதும் இவர் கூட இருந்தார்; பாரம்பரியத்தினால் தெரிகிறபடி இவர் பிரிகியாவில் பிரசங்கித்து மரணமடைந்தார். அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபே சின்னயாக்கோபு என்றும் கர்த்தருடைய சகோதரன் என்றும் சொல்லப்படுவதுண்டு. இவர் எருசலேமின் கண்காணியாயும் அப்போஸ்தலசங்கத்துக்கு முதலாளியாயும் பரி. பவுலுக்குச் சிநேகிதனும் நீதிமானென்று பெயர்பெற்றவராயும் பரிசேயரால் ரத்தச்சாட்சியாய் மரித்தவராயும் இருந்தார். அவர் எழுதிய நிருபத்தில் உபதேசங்கள் தெளிவாயும விரிவாயும் சொல்லப்படாவிட்டாலும் அது தேவபக்திக்கும் சன்மார்க்க விருத்திக்கும் ஏதுவாக யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. தேவனை அறிகிற அறிவின் பாக்கியத்தையும், கிறிஸ்துவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் என்பதின் பாக்கியத்தையுங்குறித்து சுருக்கஜெபத்தில் சொல்லியிருக்கிறது.

13. வினா. பரி. பர்னபாவின் சரித்திரமும் அவர் திருநாளின் போதனையும் என்ன?

விடை. சீப்புரு தீவானும் லேவியனும் முதலாவது தன் நிலத்தை திருச்சபை பொதுச்செலவுக்கு விற்றுக்கொடுத்தவனும் யோசே என்று மறுபேர்கொண்ட ஆறுதலின் மகன் என்றர்த்தமுள்ள பர்னபா பரி. பவுல் குணப்பட்டபொழுது அவனை எருசலேமிலுள்ள சகோதரரண்டைக்கு அழைத்துப்போய் அந்தியோகியாவில் அவரோடே பிரசங்கஞ்செய்து எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களுக்குத் தருமகாணிக்கைகளைக் கொண்டுபோனார். இவர் பரி. பவுலின் முதலாம் பிரயாணத்தில் சீப்புரு தீவுக்கும் சின்ன ஆசியாவுக்கும் போய் மாற்குவைப்பற்றிய மனஸ்தாபத்தினால் பிரிந்துபோனதுமுதல் யாதொன்றும் அவரைப்பற்றிச் சொல்லப்படவில்லை; நம்பப்படத்தக்க பாரம்பரி

யமும் இல்லை. அவர்பேரால் சொல்லப்படுகிற நிருபம் வெகுகாலத்துக்கு முன்னுள்ளதாயினும் இவர் அதை எழுதினரென்பதற்கு ரூபகாரமில்லை. தெற்துல்லியான் என்பவர் எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம் இவருடையதென்பதாய்ச் சொல்லுகிறார். இவர் யூதர்களால் தம் சுயதீவில் சாலமி பட்டணத்தில் கல்லெறியுண்டு செத்ததாகச் சொல்லுகிறார்கள். பரி. பர்னபாவுக்களிக்கப்பட்ட பரிசுத்தாவியின் விசேஷித்த வரங்களை நினைவுகூர்ந்து, நாம் தேவனுடைய பலவிதமான வரங்களையும் கிருபைகளையும் அவருடைய மகிமைக்காகப் பிரயோகிக்கும்படி இந்நாளில் ஜெபஞ்செய்கிறோம்.

14. வினு. பரி. யோவான்ஸ்நானனின் திருநாளைப்பற்றிச் சொல்லு.

விடை. இந்தத் திருநாள் அவர் ரத்தச்சாட்சியாய் மரித்ததைப் பற்றியல்ல, அவருடைய பிறப்பைப்பற்றினதாகையால் கிறிஸ்மஸ்பண்டிகைக்கு அடுத்துவருகிறது. பழைய ஏற்பாட்டு எலியாதீர்க்கதரிசியைப்போல் பரி. யோவானும வனவாசியும், சன்னியாசியும், தன்னை வெறுத்தவருமாய பாவிகள்மேல் வருங் கோபாக்கினையையும் குணப்படுதலின் அவசரத்தையும் போதித்து எச்சரித்து அநேக அற்புத அடையாளங்களால் புதுசுவிசேஷத்தை அறிவியாமல் கிறிஸ்துவின் வருகைக்கு முன்தூதனய் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றினர். வானராஜ்யத்தில் சிறியவன் இவனைப்பார்க்கிலும் பெரியவனுயிருக்கிறன் என்று இரட்சகர் சொல்லியிருக்கிறார். இந்த நாள் ஒன்றில்மாத்திரம் நாம் பரிசுத்தவான்களின் பிறப்புநாளை ஆசரித்து வருகிறோம். இவர் அற்புதவிதமாய்ப் பிறந்து கிறிஸ்துவுக்கு முன்தூதனுய் குணப்படுதலைப் பிரசங்கித்தாரென்பதும், ராஜாக்களையும் அதிகாரிகளையும் பயமில்லாமல் தைரியத்தோடே எலியாவைப்போல அதட்டி புத்திசொல்லி அவர்கள் தப்பிதங்களைக் கண்டித்து சத்தியத்துக்கு சாட்சிகொடுத்து மரித்தாரென்பதும், நாமும் குணப்பட்டு சத்தியத்தை எப்போதும் தைரியமாய்ப் பேசி பொல்லாப்பைக் கண்டித்து சத்தியத்தினிமித்தம் ஜீவனைக்கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டுமென்பதும் இந்நாளின் போதனையாயிருக்கிறது.

15. வினு. பரி. பேதுருவின் திருநாளைப்பற்றிச் சொல்லு.

விடை. பரி. பேதுருவும் பவுலும் வற்றிக்கன் என்ற இடத்தில் ரோமாபுரியில் ஒரேதினத்தில் ரத்தச்சாட்சிகளாய் மரித்தார்கள் என்ற பாரம்பரியத்தையிட்டு நாலாம் நூற்றுண்டுமுதல்

இருபேருக்கும் ஒரு திருநாள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பிற்பாடு பரி. பவுலின் திருநாள் பிரிக்கப்பட்டது. பன்னிரண்டு அப போஸ்தலருக்குள் பரி. யோவானைததவிர மற்றவர்களைப்பற்றி இவ்வளவு தெளிவாய் அவர்கள் குணம், நடக்கை, வேலைததிற மை பரி. பேதுருவைப்போல சொல்லப்படவில்லை. கிறிஸது நாதர் இருந்தபோதும் இல்லாதபோதும் எச்சமயததிலும் பரி. பேதுரு சீஷர்களின் தலைவனுயிருந்துவந்தார். அவர் மூன்று தரம் மறுதலித்த குற்றம் உயிர்த்தெழுந்தபின் மூன்றுதரம் செய்த அறிக்கையினுல் துடைத்துத் துபபுரவாகி அந்த அறிக்கை செய்த அவர்பேரில் இரட்சகர் தம்முடைய திருச்சபையைக் கட்டி விசுவாசத்தின் கதவைத் திறக்க வானராஜ்யத்தின் திறவு கோல்களை அவருக்குக் கொடுத்து அப்படியே பெந்தெகொஸ தே நாளில் யூதரையும் கிரேக்கரையும் சபையில் சேர்த்தார். அவருடைய சுபாவமுங் குணமும் அனலுள்ளதும் பலனுள்ள தும் வைராக்கியமுள்ளதுமாய் இருந்ததினுலே திருச்சபைக்கு வெகுவான நன்மைகள் அவரால் உண்டாயிற்று. உலகத்தை தம்மிடத்துக்கு இழுத்து அசைக்கும்படிக்கு விரும்புகிற ஆண டவர், சாந்தமும் தன்னைப்பேணும் சுபாவமுள்ள ஊழியககார ரைவிட இப்படிபபட்டவர்களுக்கு அதிக கனத்தையும் பொ றுப்பையுங் கொடுக்கிருரென்பதற்கு இது திருஷ்டாந்தமாயி ருக்கிறது. கடைசியாகப் பரி. பேதுரு கி பி. 63ல் தலைகி ழாகச் சிலுவையில் அறையப்பட்டு கிறிஸ்துவுக்காக ரததச் சாட்சியாய் மரித்தார். பரி. பேதுருவுக்கு அநேக மேன்மை யான வரங்கள் கிடைத்து மந்தையைப் போஷிக்கும்படி கட் டளைகொடுக்கப்பட்டது. அதுபோல கண்காணிமார்களும் குருமார்களும் ஜாக்கிரதையுடனே வசனத்தைப பிரசங்கித்து தங்கள் மந்தை அதைப் பின்பற்றும்படி செய்விக்கவேண்டிய ஜெபமும் இநத நாளின் கடமையாக இருககிறது. நிருப சுவி சேஷவாக்கியங்கள் அப்போஸ்தலனுடைய சரித்திரததிலுள்ள முக்கிய விசேஷங்களை எடுத்துக்காட்டுகிறது.

16. வினு. அப்போஸ்தலனுகிய பரி. யாக்கோபின் திரு நாளைப்பற்றிச் சொல்லு.

விடை. இவர் தம்முடைய சகோதரனுகிய பரி. யோவா னேடும், பரி. அந்திரேயா,பேதுருவோடுங்கூட அழைக்கப்பட் டார். நமது ஆண்டவர் தெரிந்து கூட்டிப்போன மூன்றுபேரில் இவர் ஒருவர். இவருக்கும் இவருடைய சகோதரனுக்கும் இடி முழக்கத்தின் மக்கள் என்றர்த்தமுள்ள பொவனெர்கேஸ் என்ற

பேரிடப்பட்டது. இந்தப் பெயரின் குணசீலமாகிய தேவ வைராக்கியம் இவரிடத்தில் காணப்பட்டதினாலே முதலா வது எரோதே அகிரிப்பா இவனைக் கொலைசெய்தான். இவ்வி தமாய் வானராஜ்யத்தில் தாயார் கேட்டுக்கொண்ட கனமான இடம் பாத்திரத்தைக் குடித்ததினாலும் கிறிஸ்துவின் ஞான ஸ்நானத்தால் ஸ்நானஞ்செய்யப்பட்டதினாலும் மகனுக்குக் கிடைத்தது. இவர் வேதத்தில் சொல்லப்பட்ட முதலாம் ரத்தச் சாட்சியாயிருப்பதினாலே பெரிய யாககோபு என்று பேர்வந் திருக்கலாம். பாரம்பரியத்தினால் தெரியவருகிறபடி இவனை அகிரிப்பாவின் நியாயாசனத்துக்கு இழுத்துக்கொண்டுபோன ஒரு யூதன் வழியில் அவருடைய குணசீலமான தோற்றத்தைக் கண்டு தானும் அவரோடே மரிக்கவேண்டுமென்று பிரார்த்தித் தான். அப்போஸ்தலன் அவனுக்குச் சமாதான முத்தங் கொ டுத்து இருபேரும் ஒன்றாய்த் தலைவெட்டப்பட்டார்கள். அப் போஸ்தலன் எல்லாவற்றையும் விட்டு இயேசுவைப் பின்சென் றதுபோல நாமும் தேவனுடைய பரிசுத்த கற்பனைகளைப் பின் செல்ல ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று இந்தநாளில் போதிக்கப்படுகிறோம்.

17. வினா. பரி. பர்தலொமேயுவின் திருநாளைப்பற்றிச் சொல்லு.

விடை. இவர் நாத்தானியேல் என்ற மறுநாமமுள்ளவராயும் இரட்சகரால் பரி. பிலிப்பு கூட்டிவந்தபொழுது கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று பேர்பெற்றவராயும் இருந்தார். இவருடைய பேர் எப்போதும் அப்போஸ்தலவரிசையில் பரி. பிலிப்புவோடே சேர்ந்துவருகிறது. பாரயோனா, பார்யேசு, பர் னபா என்ற பெயர்களைப்போல இதுவும் தாலமாய் என்பவ ரின் மகனென்று அர்த்தங்கொள்ளும். திபேரியாக்கடலில் உயிர்த்தெழுந்தபின் ஆண்டவர் தரிசனையானபோது இவரும் மற்ற சீஷர்களோடேகூட இருந்தார். பரி. பர்தலொமேயுவின் பேரைச் சொல்லுகிற சுவிசேஷகர்கள் நாத்தானியேலின் பே ரைச் சொல்லவில்லை; நாத்தானியேலின் பேரைச் சொல்லுகிற பரி. யோவான் பர்தலொமேயுவின் பேரைச் சொல்லவில்லை. பர்தலொமேயு அழைக்கப்பட்ட சங்கதி ஒருவராலும் சொல் லப்படாமல் நாத்தானியேல் அப்போஸ்தலனாக அழைக்கப் பட்ட சங்கதி சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாத்தானி யேல் என்பது பர்தலொமேயுவுக்கு மறுபேர் என்பது வெளி யரங்கமாயிருக்கிறது. பாரம்பரியத்தினால் நாம் அறிகிறபடி

இவர் உயர்ந்த ஐசுவரியமுள்ள குடும்பத்தில் பிறந்தவராயிருந்தா ரென்றும், இந்தியாவுக்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தா ரென்றும், அதற்கப்பால் கஸ்பியன் கடலோரத்திலுள்ள அல னுப்பாலிஸ் பட்டணத்தில சரீரத்தின தோல உரிக்கப்பட்டு ரத்தச்சாட்சியாய் மரித்தாரென்றும் விளங்குகிறது. வேதபாட அட்டவணையில் அவர் அழைக்கபபட்ட சரித்திரத்தைப பாட மாகக் குறியாமல் பொதுவாய அப்போஸ்தல ஊழியத்தைப்பற் றிய பாடங்கள் வாசிக்கபபடுகிறது. சுருக்க ஜெபத்தில சுவி சேஷத்தை விசுவாசிக்கவும் பிரசங்கிக்கவும் பர்த்தலொமேயு வுக்குக் கிருபையளிக்கப்பட்டதை நினைத்து, திருச்சபையும் வேதவசனத்தை நேசித்து அதை மற்றவர்களுக்குப் பிரசங் கிக்கவேண்டுமென்று சொல்லுகிறது.

18. வினு. பரி. மத்தேயுவின் திருநாளைப்பற்றிச் சொல்லு.

விடை. இவருடைய அழைபபைபபற்றியும இவரால் எழு தப்பட்ட சுவிசேஷத்தைபபற்றியும் திட்டமாயச் சொல்லி யிருக்கிறது. இவரைப் பரி. மாற்கு 2. 14ல் அல்பேயுவின் குமாரனாகிய லேவியென்று சொல்லியிருப்பதால் இவர் சின்ன யாக்கோபுக்கும் பரி தோமாவுக்கும் சகோதரனாயிருந்தாரென்று தோன்றுகிறது. மத்தேயு என்பது அப்போஸ்தலனானபிற்பாடு சேர்க்கபபட்ட துணைப்பேராயிருக்கலாம பரி. மத்தேயுவை அழைத்ததினிமித்தமும் அவன்பேரில் பட்சங்காட்டினதினி மித்தமும் தங்கள் சத்துராதிகளுக்குத தயவுகாட்டினுரென்று யூதர்கள் நமது ஆண்டவரைபபற்றி முறுமுறுத்து எரிச்ச லடைந்தார்களென்று காணபபடுகிறது. பரி. மத்தேயுவினுல் எபிரெயு பாஷையில் எழுதபபட்ட சுவிசேஷம் மற்றவைகளை விட இரட்சகருடைய சம்பாஷணைகளையும் உவமைகளையும் அதிகமாய் எடுத்துக்காட்டுவதினாலே பரி. மத்தேயு இரட்சகரைத் தன்மேசியாவாக உண்மையாய் அன்புகூர்ந்தாரென்று விளங்கு கிறது. இவருடைய பிந்தியகாலதது நடபடிக்கைகளைபபற்றி வேதம் மவுனமாயிருக்கிறது. பாரம்பரியத்தினுல் அவர் எத்தி யோப்பியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ரத்தச்சாட்சி யாய் மரித்ததாக தெரியவருகிறது. பரி மத்தேயு லோக ஆதா யத்தை வெறுத்து இயேசுவைப் பின்சென்றதுபோல் நாமும் தகாத பொருளாசையை வெறுத்துத்தள்ளும்படிக்கு வேண்டு தல்செய்கிறோம்.

19. **வினு.** பரி. மிகாவேல் முதலான தூதர்களைப்பற்றிச் சொல்லு.

விடை. தானி. 10. 13; 12. 1-ம் வாக்கியங்களில் மிகாவேலைப்பற்றி பிரதான அதிபதிகளில் மிகாவேல் என்றும் உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் என்றும், யூதா 9-ம் வாக்கியத்தில் மோசேயின் சரீரத்தைக் குறித்து பசாசோடே போராடுகிற பிரதான தூதனென்றும், வெளி. 12. 7ல் மிகாவேலும் அவனைச்சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மிகாவேல் என்ற பெயருக்கு கர்த்தருக்கு ஒப்பானவன் யார் என்றர்த்தம். இந்த அர்த்தத்தினாலும் அவனைப் பற்றி மேன்மையாய்ச் சொல்லப்பட்டிருப்பதினாலும் திரித்துவத்தில் இரண்டாவதான அதிபதி இவனே என்று நினைத்தார்கள். இது தப்பான எண்ணமென்பது தானி. 10. 13னால் விளங்கும். அவனோடே பேசினவர் கிறிஸ்துவாயிருக்கக்கூடாது. பரி. மிகாவேல் யூதர்கள் பக்தியற்று அஞ்ஞானத்துக்குத் திரும்பினபோது அவர்களுக்குக் காவலாளியாய் இருந்தானென்று பழைய ஏற்பாட்டினாலும், உலகத்தில் போராடுகிற திருச்சபைக்கு உதவியாயிருந்தானென்று புதிய ஏற்பாட்டினாலும் தெரியவருகிறது. பரிசுத்த வேதாகமத்தில் மிகாவேலோடே காபிரியேலுடைய பெயரும் சொல்லப்பட்டிருக்கிறது. ரப்பாயேல், ஊரியேல் என்ற தூதர்களின் பெயர்கள் தள்ளுபடி ஆகமங்களில் காணப்படுகிறது. முற்பிதாக்களுடைய சரித்திரத்தில் தூதர்கள் கர்த்தருடைய ஜனங்களைக் காவல்செய்கிறவர்களாகவும், நியாயாதிபதிகளின் காலத்தில் தூதுபோகிறவர்களாகவும், சிறையிருப்பின் காலத்தில் அன்னிய ஜாதிகளோடு காவல்செய்கிறவர்களாகவும், ஆண்டவருடைய காலத்தில் அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களாகவும் சொல்லப்படுகிறார்கள் பரிசுத்த தூதர்கள் பணிவிடை ஆவிகளென்று எபி. 1. 14ல் திட்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அப். 5. 19, 8, 26; 10. 3; 12. 7, 27. 23. முதலிய வாக்கியங்களில் அவர்கள் சாதாரணமான விதமாய் வேளாவேளைகளில் கிறிஸ்து மனிதஅவதாரம் பண்ணின பிற்பாடு பரியக்ஷமாய் காணப்பட்டு உதவிசெய்தார்கள். பரி மத். 18. 10ல் கிறிஸ்துவின் சிறுவர்களை அவர்கள் காவல்காக்கிறதாகவும், பரி லூக். 15. 10ல் குணப்படுகிற பாவிக்காகச் சந்தோஷப்படுகிறவர்களாகவும், 1 கொரி. 11. 10ல் கிறிஸ்தவர்களுடைய தேவாராதனையில் பிரசன்னமாயிருக்கிறதாகவும், வெளி. 8. 3, 14ல் அவர்கள் ஜெபங்களைத் தேவனண்டைக்கு கொண்டுபோகிறவர்களாகவும், பரி. லூக். 16. 22ல் மீட்கப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பாலிக்கக் கொ

ண்டுபோகிறவர்களாகவும், பரி. மத். 13. 39–49; 16. 27; 24. 31ல் சொல்லப்படுகிறார்கள். அவர்கள் இப்பொழுது கிறிஸ்துவின கிருபையையளிக்கும் ஊழியஞ்செய்வதுபோல் இனிவரும நியாயத்தீர்ப்பிலும் ஊழியஞ்செய்கிறவர்களாகவும் சொலலப படுகிறார்கள். அவர்களை வணங்குவது விககிரகாராதனையெனறு கொலோ. 2. 18லும், அவாகள் அப்படிபபட்ட வணககத தை வெறுப்புடனே அருவருக்கிறார்கள் என்று வெளி. 22 8, 19லும அறியவருகிறோம. இந்தத திருநாள் பரி. எரோம காலத்துக்கு முன்னதாகவே ஆசரிக்கப்பட்டது. தேவன தேவ தூதரும் மனிதரும் செய்யவேண்டிய பணிவிடைகளை ஒழுங காய் ஏற்படுத்தியிருக்கிறதைச் சிந்திக்கவும், பரலோகத்திலதே வனுக்கு ஊழியஞ்செய்கிறதூதர்கள் உலகத்தில் நம்மை ஆதரித துக் காக்கும்படி ஜெபிக்கவும் இந்நாளில ஏவபபடுகிறோம.

20. வினா.—பரி. லூக்காவைபபற்றி என்ன தெரியும்?

விடை. இவர் பரி. பவுலின் கூட்டாளியாயிருந்து தம்மு டைய பேரால் அழைக்கபபடுகிற சுவிசேஷத்தையும் அப போஸ்தலர் நடபடிகளையும் எழுதினார். பரி. பவுலோடேகூட இரண்டாம் பிரயாணத்தில் துரோவாவிலிருந்து பிலிப்புபபட்ட ணம்வரைக்கும், மூன்றாம் பிரயாணத்தில பிலிப்பியிலிருந்து எருசலேம் வரைக்கும் செசரியாவில் காவல்பணணபபட்டபிற் பாடு ரோமாபுரிவரைக்கும் கூடபபோனார். அவருடைய முத லாம் சிறையிருப்பில் இவர் ரோமாபுரியில் அவரோடேகூட இருந்து கடைசிவரையில் உத்தம சிநேகிதனாய் விளங்கினா இவர் சித்திரம்வரையப படித்தவரும் பிரியமுள்ள வைத்திய னென்று பேர்பெற்றவருமாயிருந்தார். இவர் எழுதிய சுவிசே ஷம் மற்றவைகளைவிட உயாநத நடையும கல்வித்திறமையும் போதனையளிக்கும் சக்தியும் பாவநிவாரணத்தையும் பாவமன னிப்பையும் திட்டமாய் விபரிக்கிறதுமாயிருக்கிறது. அப போஸ்தலர் நடபடிகள் சுவிசேஷத்தின் தொடர்ச்சியாயும் திருச சபையின் விர்த்தியைக் காட்டுகிறதாயும் இருக்கிறது. பாரம் பரியத்தினால் இவர் அந்தியோகியாவில் பிறநதாரென்றும் எண்பதாம் வயதில் சிலுவையில் அறையப்பட்டு ரத்தச்சாட்சி யாய் மரித்தாரென்றும் அறியவருகிறோம். இந்தநாள் ஐந்தாம் நூற்றாண்டுமுதல் ஆசரிக்கப்பட்டுவருகிறது. சரீரவைத்தியனா கிய பரி. லூக்கா ஆத்துமவைத்தியனும் சுவிசேஷகனுமாகும் படி அழைக்கப்பட்டதை நினைவுகூர்ந்து, நம்முடைய ஆத்தும ரோகங்களெல்லாம் அவருடைய உபதேசமாகிய மருந்தினால் குணமாகும்படி ஜெபஞ்செய்ய ஏவப்படுகிறோம்.

21. வினா. பரி. சீமோன், யூதா என்பவர்களைப்பற்றிச் சொல்லு.

விடை. இவ்விருபேரும் அப்போஸ்தலருடைய அட்டவணையில் அல்பேயுவின் குமாரனாகிய யாகப்புக்குப் பிற்பாடு தொடுத்துச்சொல்லப்படுகிறார்கள். கர்த்தருடைய சகோதரர் என்ற வகுப்பில் யாகப்பு, யூதா, சீமோன் என்பவர்களின் நாமங்களைக் காணலாம். ஆகிலும் கானானியனாகிய சீமோன் என்றும் செலோத்தே என்னப்பட்ட சீமோன் என்றும் இரண்டு துணைப்பெயர்கள், ஒன்று சீரியாக்பாஷை மொழியும் மற்றொன்று அதே அர்த்தமுள்ள கிரேக்கபாஷை மொழியுமாய்க் காணப்படுகிறது. இதற்குமுன் சொல்லிய சகோதர இனபாந்தத்துக்கு விரோதமாய்க் காணப்பட்டாலும் பரிசேயருக்குள் செலோத்தர் அல்லது வைராக்கியர்கள் என்னப்பட்ட ஒரு வகுப்பார் தோன்றி நியாயப்பிரமாணத்தை மீறினவர்களைக் கண்டிப்பாய் தண்டித்துவந்ததில் இவரும் ஒருவராயிருந்திருக்கலாம், இவர் குணப்பட்டபிறபாடு கிறிஸ்துவின் ஊழியத்தில் தன் வைராக்கியத்தைக் காட்டும்படி பழைய பெயரையும் சேர்த்து வழங்கியிருக்கலாம். இவர் பாரசீகதேசத்தில் வாளால் அறுக்கப்பட்டார். பரி. யூதா, லூக்காவின் சுவிசேஷத்தில் யாகப்பின் சகோதரன் அல்லது மகன் என்றும், மத்தேயு மாற்கு சுவிசேஷங்களில் லெபேயு அல்லது ததேயு என்றும் இரண்டு துணைப்பெயருள்ளவராயச் சொல்லப்படுகிறார். இந்தத் துணைப்பெயர்களுக்குரிய பாஷையும் பொருளும் திட்டமாய்த் தெரியாவிட்டாலும் பெரும்பான்மையோர் இருதயம், மார்பு என்றர்த்தமுள்ள எபிரேயுபாஷையிலுள்ள செல்லப் பிள்ளைகளைப் பிரியத்தினாலே கூப்பிடுகிற பெயர்களென்று சொல்லுகிறார்கள். பரி. யோவான் 14 22ல் சொல்லிய ஒரே விசேஷந்தவிர இவர்களைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. அதினாலே சுருக்க ஜெபமும் நிருப சுவிசேஷவாக்கியங்களும் பொதுவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இருபேரும் சகோதரராயிருந்ததையிட்டும் திராயான் என்ற ராயன்காலத்தில் ஒருமிக்க ரத்தச்சாட்சிகளாய் மரித்ததினாலும் ஒரே திருநாளில் அவர்களை நினைவுகூருகிறோம். திருச்சபை சரித்திரத்தினால் பரி. யூதாவின் இரண்டு பேரப்பிள்ளைகள் யூதருடைய ராஜவம்சத்தைச்சேர்ந்த பட்டத்துக்குரிய பிள்ளைகளென்று சத்துருக்கள் தொமிஷியான் இராயனுக்கு முன்பாகக் கொண்டுவந்துவிட்டபொழுது இராயன், கடினமாய் வேலை செய்தா காய்ப்புப்பிடித்திருந்த அந்தப் பிள்ளைகளின் கைகளைப்

பார்த்து பயப்படவும் சந்தேகிக்கவும் இடமில்லாமல் அனுப்பிவிட்டாரென்று தெரியவருகிறது. இநதத திருநாளில அபபோஸ்தலர் தீர்க்கதரிசிகளுடைய அஸ்திபாரததில் இயேசுகிறிஸ்துவையே மூலைக்கல்லாகவைத்து கட்டப்பட்ட திருச்சபையிலுள்ள உபதேசத்தில் நாம இசைவிணைப்பாய் கட்டப்பட்டு தேவனுக்குப் பிரியமான பரிசுதத ஆலயங்களாகவேண்டுமென்று ஜெபிக்கிறோம்.

22. வினா. சகல பரிசுத்தவான்களின் திருநாளைபபற்றி என்னதெரியும்?

விடை. இந்த திருநாள் எல்லாப் பரிசுத்தவான்களையும் மொததமாய் அடக்கி ஆசரிபபதினாலே சிறந்த தியானதததைப பிறபிக்கிறது. பாந்தியன் (Pantheon) என்னபபட்டவர்கள் திருச சபையில்சேர்ந்துகட்டின தேவாலயம கி பி 610ல பரி. கன்னிமரியாள் பெயராலும் சகல பரிசுததவான்களின் பெயராலும பிரதிஷ்டையாக்கபபட்டது. எழாம்நூற்றாண்டில ஆசரிக்கத் துவக்கின இந்த நாளை நாலாவது கிரெகோரி பாபபானவர் தமமுடைய கட்டளையால் கி. பி. 834ல் எல்லா இடஙகளிலும் ஆசரிக்கும்படி திட்டஞ்செய்தார். இதின் நோக்கம் என்னவென்றால், சகலகாலங்களிலும சகல தேசஙகளிலும் சகல ஜாதிகளிலும கிறிஸ்துவுக்குள்ளான கிறிஸ்தவர்களுடைய ஒருமைமையயும் ஐக்கியததையும் இநத லோகததில் மாததிரமல்ல, உயர வானததிலேயுமுள்ள பூரணராக்கப்பட்ட வெற்றிசிறந்த பரிசுததவான்களின் ஐக்கியத்தையும் சேர்த்துக் கூட்டி தியானிக்கவேண்டுமென்பதே. தேவன் தாம் தெரிந்துகொணடவாகளை கிறிஸ்துவின் ஞானசரீரததில் ஒரே ஐககியமாக இணைததிருக்கிறபடியால் நாமும் நமக்காக ஆயத்தஞ்செய்திருக்கிற நிததிய சநதோஷங்களை அனுபவிக்கும்படி பரிசுத்தவானகளைப பின்பற்றிநடக்கப போதிக்கப்படுகிறோம்.



XII. CHAPTER.

ANNOTATIONS OF THE ANTE-COMMUNION SERVICE.

The Communion proper—The Post Communion, Collects, and Rubricks—The Position of the Celebrant—The views of Zuinglians, Lutherans, Calvins, Romish Church and the Church of England on the doctrine of the Sacrament.

பன்னிரண்டாம் அதிகாரம்.

பரிசுத்த நற்கருணையைப் பரிமாறும் முறைமையைப் பற்றியது.

1. வினா. பரி. ஞானஸ்நானம், பரி. இராப்போசனமாகிய இரு சாதகிரமெந்துகளை ஒன்றுக்கொன்று இணைபிரியாச் சம்பந்தம் பொருந்தியிருக்கின்றனவென்று காண்பிக்கத்தக்க சில விசேஷங்களைச் சொல்லு.

விடை. ஞானஸ்நானம், பரி. இராப்போசனமுமாகிய இரு சாதகிரமெந்துகளில் ஞானஸ்நானமானது பரி. நற்கருணைக்கு ஆதாரமேபோலவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஞானஸ்நானத்தில் நாம் பெற்றுக்கொள்ளுகிற மறுஜென்மமாகிய புதுஜீவனானது பரி. இராப்போசனத்தால் நடந்தேறிப் பலபாகப்படலாகிறது. ஞானஸ்நான முறைமையில் கிறிஸ்துவோடே கூட மரிக்கவும் அவரோடே உயிர்த்தெழுந்திருக்கவும் அவருக் கொப்பாயிருக்கவும் வருந்தி அழைக்கப்படுகிறோம். இராப்போசன முறைமையில் நாம் கிறிஸ்துவானவருடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய ரத்தத்தைப் பானம்பண்ணவும் அவர் நம்மிலும் நாம் அவருக்குள்ளும் வாசமாயிருக்கவும் அவர் நம்மோடும் நாம் அவரோடும் ஒன்றாயிருக்கவுமாக வருந்தி அழைக்கப்படுகிறோம். முந்தினதில் பராபரனுக்குப் பிள்ளையாக்கப்பட்டதையும் அதைக் காட்டும் முறைமைக்கு அவசியந் தேவையான புறம்பான அடையாளங்களையும் உள்ளாக நடந்தேறுங் கிறிஸ்துமார்க்க விருத்தியையும் நோக்குகிறோம்; பிந்தினதில் பராபரனுக்குப் பிள்ளையானவன் போஷிக்கப்பட்டு வளர்ந்தேறுவதை அனுபவத்தால் உணருகிறோம். ஞானஸ்நான முறைமை சிறந்ததும் அத்தியந்த நடை பொருந்தியதும் எழுப்புதலை பிறப்பிக்கத்தக்கதுமாயிருக்கிறது; இராப்போசன முறைமை மாட்சிமைபொருந்தியதுந் துயர நடையுள்ளதுந் தரும்

ஆயத்தங்கொண்டிருக்கும் உத்தம பக்தனுக்கு நற்பிரியத்தைத் தரத்தக்கதுமாயிருக்கிறது. ஒன்று நாம் செல்லவேண்டிய மார்க்கத்தை தீர்க்கமாய்க் காணபிக்கிறது; மற்றது அம்மார்க்கப் படியே செலல நம்மை வழிநடத்தி ஆதரித்து பெலபபடுத்து கிறது. தொகுப்பாக ஒன்று கிறிஸ்தமான உபதேசங்களின் ஆதி நியாயங்களை நமக்குள் தைககத்தக்க விதமாய் புகட்டுகிறது; மற்றது நாம் பூரண சற்குணராகத்தக்கதாக சாதுவாயுஞ் சந்தியோடும் நமது மனதை ஆண்டுகொள்ளுகிறது. இந்தடவாய் சாக்கிரமெந்துகளிரண்டும் ஒன்றைவிட்டு மற்றது இளை பிரியக் கூடாத விதமாய் ஒன்றியிணைக்கப்பட்டும் ஒன்றோடொன்று இசைபொருந்தியுமிருக்கிறது.

2. வினா. நற்கருணைக்கு நாம் அடிக்கடி சேர்வது அவசியமென்று காட்டும்பொருட்டு திருச்சபை அமைத்திருக்கிற ஒழுங்குகளென்ன?

விடை. நற்கருணைக்குமுன் கூறப்படும் உருக்கமான எச்சரிப்பும், அதற்குப்பின் வரும் ரூபிரிக் சட்டமும், இந்தச் சாக்கிரமெந்தும் ஞானஸ்நானமும் ரட்சிப்புக்குப பொதுப்பட அவசியமென்று ஞானோபதேச வினாவிடையிற் புகட்டியபோதனையும், அதற்குச் சேரத்தகுமானவர்கள் இன்னாரென்பதைப பற்றி யெடுத்துக்காட்டிய குணசாலங்களும், திடபபடுத்தலைப் பெற்றிருக்கிறவனையும் அதைப பெறுவதற்கு ஆசையாயும் ஆயத்தமாயும் இருக்கிறவனையுமல்லாமல் மற்றவர்களை பரிசுத்த நற்கருணைக்குச் சேர்க்கக்கூடாதென்று திடபபடுத்தலின் ஒழுங்கில் வழுத்திய சட்டமும், விவாகஞ்செய்கிறவர்கள் விவாகஞ்செய்யுந் தருணத்திலாவது அதற்குப பிறகு முதலாவது நேரிடுந்தருணத்திலாவது பரிசுத்த நற்கருணைக்குச் சேருவது தகுதியென்றும், பிரசவித்த ஸ்திரீ ஸ்தோத்திரஞ்செலுத்த வந்திருக்கிற தருணத்தில் பரிசுத்த நற்கருணை பரிமாறபபடுகிறதாயிருந்தால் அவளும் அதை வாங்குவது தகுதியென்றும் கண்டிருக்கிற திட்டஙகளும், வியாதிஸ்தருக்கு நற்கருணையை பரிமாறும்படி விதித்திருக்கிற விசேஷித்த ஒழுங்குமாகிய இவைகளெல்லாம் பரிசுத்த நற்கருணைக்கு நாம் அடிக்கடி சேர்வது அவசியமென்று காட்டும்பொருட்டு திருச்சபை எவ்வளவு கருத்தும் கரிசனமும் பாராட்டியிருக்கிறதென்பதை மெய்ப்பிக்கின்றன.

3. வினா. பரிசுத்த நற்கருணைக்குச் சேர அபாத்திரராய் தீர்க்கப்படுபவர்கள் யார்?

விடை. திடப்படுத்தலைப் பெறாதவர்களும், திருச்சபையால் குற்றவாளிகளென்று தீர்க்கப்பட்டவர்களும், பித்தம் மீறி மருளபிடித்திருப்பவர்களும், கிறிஸ்தவர்களுக்கேற்றிராத சீர்கேடுகளில் பேர்போன துன்மார்க்கருமே.

4. வினா. பரிசுத்த நற்கருணைக்குச் சேரத்தக்கவர்களுந் தகாதவர்களும் இன்னின்னாரென்பதைப்பற்றி நமது சபையில் சட்டங்களில்லையென்பதாய் டிசென்றர்கள் சொல்வதுயதார்த்தமா?

விடை. திருச்சபை 29-ம் பிரமாணத்திலும் மேற்சொல்லிய ரூபிரிக்கிலும் நற்கருணைவிளம்பரங் கூறப்படும்பொழுது உரைக்கப்படும் புத்திமதியிலும் இவ்விஷயத்தைப்பற்றி கண்டிப்பான ஒழுங்குகளை அமைந்திருக்க இவ்விதம் ஆட்சேபிப்பது யதார்த்தமல்ல. மேற்சொல்லிய ஒழுங்குகளைத்தவிர போதகன்மார் தாங்கள் பண்ணும் பிரசங்கங்களிலும் அவ்விஷயத்தைப் பற்றி திட்டமாய் எடுத்துரைத்தது, பரிசுத்த நற்கருணைக்குச் சேர பாத்திரர் இன்னின்னாரென்றும், அபாத்திரர் இன்னின்னாரென்றுந் தீர்க்கமாய் எடுத்துக்காட்டுவதுமுண்டு. இதற்கு மிஞ்சி செய்யத்தக்கதுதான் என்ன? மிஞ்சினதெல்லாம் அவரவருக்கும் தேவனுக்கும் அடுக்குமேதவிர மற்றப்படியல்ல. ஆயத்தப்பாடில்லாமல் துணிந்து சேருகிறவனுடைய குற்றம் அவன் தலைமேலே சுமத்தப்படும். ஆவிகளை ஆராயும் வல்லமை தனக்குண்டென்று திருச்சபை பாராட்டுகிறதில்லை. புறம்பான நடக்கையைப்பற்றிய அத்தாட்சி திருப்திகரமாயிருக்கும்பொழுது உள்ளானதை நிதானிக்கத் துணிவது அவசியமல்ல. அது தேவனுக்கு அடுக்குமேயல்லாது திருச்சபைக்கல்ல. அப்படிச் செய்யத் துணிவதால் நெறிந்த நாணலை முறிப்பதுபோலவும் பராபரன் துக்கப்படுத்தாதவர்களை துக்கப்படுத்துவதுபோலவும் நேரிடுவதாயிருக்கலாமே. இம்மையிலிருக்குமளவும் உத்தமர் இன்னாரென்றும், அவபக்தர் இன்னாரென்றும் நாம் நமது புத்தியால் மட்டிடுவது எளிதல்லவே. அவரவருடைய கனிகளினால் அவரவரை அறியலாம். ஆனாலும் பல விஷயங்களில் வேறுபாடுகள் காணப்படுவதுண்டு, ஆதலால் இவ்விஷயத்தில் ஆட்சேபமுறை யதார்த்தமல்ல.

5. வினா. டிசென்றர்களுடைய முறைமையில் உண்டாயிருக்கப்பட்ட சீர்தாழ்ச்சிகளைச் சொல்லு.

விடை. ஆவிகளையறிந்து நிதானிக்கத்தக்க வரம் பெற்றிருந்த, அப்போஸ்தலருடைய காலத்தில் எப்படியோ அப்படியே இக்காலத்திலுஞ் சபையை நடத்திவர அவர்கள் துணிகிறார்

கள். ஆவிகளை நிதானிக்கும் வரம் அவர்களுக்கு இல்லாதிருந்தாலும் தன்புத்தியாலுஞ் சுயநிதானிப்பினாலேயிலுங் குணத்தை மட்டிட்டுவருகிறார்கள்.

6. வினா. நமது ஆண்டவருடைய இராப்போசனமாகிய சாக்கிரமெந்தை பூர்வ கிறிஸ்தவர்கள் எந்த நாமத்தினால் அழைத்துவந்தார்கள்? அந்த நாமத்துக்கு மூலமும் உரையுமென்ன?

விடை. இராப்போசனம் என்ற சாக்கிரமெந்து ஏற்படுத்தப்பட்டதைப்பற்றி சொல்லுகிற சுவிசேஷ சரித்திரத்தில் நமது ஆண்டவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியில் அப்பத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டாரென்றும், அப்படியே அவர் பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணின பிற்பாடு அவர்களுக்குக் கொடுத்தாரென்றுங் கண்டிருக்கிறதை யதார்த்தமாய்க்கொண்டு, பூர்வ கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போசனமாகிய சாக்கிரமெந்தை (Eucharist) யூகரிஸ்ற் என்றழைத்தார்கள். அம்மொழிக்கு தோத்திரமென்று அர்த்தமுண்டு கிறிஸ்தவர்களுடைய துதிதோத்திரபலியாக மதிக்கப்பட்டுவருகிற சாக்கிரமெந்தின் லட்சணம் இன்னதென்று இம்மொழி காட்டுகிறது.

7. வினா. பரிசுத்த நற்கருணையாகிய யூகரிஸ்ற் என்கருத்தின்படி பலி என்னப்படும்? கர்த்தருடைய பந்திமேசை, பீடம் என்றழைக்கப்படலாமா?

விடை. உள்ளபடி சுவிசேஷ ஏற்பாட்டின் காலத்தில் பீடமுமில்லை, ஆசாரியனுமில்லை, பலியுமில்லை நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து ஒரேவிசை நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் உத்தரவாதத்தையும் பரிகாரத்தையுஞ் சர்வலோகத்தின் பாவங்களுக்காக தமது சிலுவையாகிய பலிபீடத்தில் செலுத்தித் தீர்த்தாயிற்று. கர்த்தருடைய பந்திமேசை சில சமயங்களில் பீடம் என்றழைக்கப்படுகிறதுண்டு; என்றாலும் இங்கிலாந்து தேசத்திலுள்ள ஜெபமுறைமைகளிலும் ரூபிரிக்குகளிலும் அப்படி அழைக்கப்பட்டிருப்பதில்லை. தோத்திரமென்ற கருத்தின்படி யூகரிஸ்ற் என்பது துதி தோத்திரங்களென்று அழைக்க. ப... பீடமென்ற மொழியும் உவமைப் பொருளாய்... ... அல்ல.

8. வினா. பந்தி மேசை, பீடம் என்னும் நாமங்கள் கிறிஸ்த மார்க்க ஆசிரியரால் வழங்கப்பட்டதா?

விடை. பந்திமேசை என்பது எப்பொழுதும் ... இப்பொழுது

அழைக்கப்படவில்லை. பீடம் என்பது முதல் 3-ம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தமான ஆகமக்காரரால் வழங்கப்பட்டது. பிற்காலங்களில் இவ்விரு நாமங்களும் விகற்பமின்றி பிரயோகிக்கப்படலாயின. இவைகளில் முந்தினது இராப்போசன புசித்தலையும், பிந்தினது இயேசுவானவர் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்ததின் நினைவுகூருதலையுங் காட்டி, இவ்வாறு பொதுவமைதி பெற்றன.

9. வினா. ரோமான சபையாருடைய கோவில்களில் கற்பீடங்கள் வைக்கப்பட்டிருப்பதற்கு முகாந்தரமென்ன? இதற்கு அப்போஸ்தலருடைய ஆகமங்களில் யாதோர் ஆதாரமுண்டா? இதைப்பற்றிய பூர்வ வழக்கமென்ன? அவ்வழக்கம் திருச்சபை சீர்திருத்தலின் காலத்தில் திரும்ப ஸ்தாபிக்கப்பட்ட முகாந்தரமென்ன?

விடை. ரோமானசபையார் நற்கருணையை மெய்யான பலியாகப் போற்றி அப்பமும் ரசமுமாகிய காட்சிப்பொருள்கள் கிறிஸ்துவானவருடைய மெய்யான சரீரமும் இரத்தமுமாகப் பலியிடப்படுகிறதென்று எண்ணியிருக்கிறபடியால் அந்த அனுசாரத்துக்கேற்ற கற்பீடமொன்று அவசியமென்று சாதிப்பார்கள். அப்போஸ்தலர் அப்பமும் ரசமும் ஆசீர்வதிக்கப்பட்ட முன்னேயாகிலும் பின்னேயாகிலும் அவைகளைப் பலியென்றும், கர்த்தருடைய பந்திமேசை பீடமென்றும், குருவானவரை ஆசாரியனென்றும் அழைத்திருக்கிறதற்கு யாதேனும் திருஷ்டாந்தரமில்லை. பூர்வசபையில் மரப்பீடங்கள் வழங்கப்பட்டு வந்தது மெய்யே. ஆதலால் திருச்சபை சீர்திருத்தலானகாலத்தில் மாம்சபலியிடுதலுக்குங் கற்பீடத்துக்குஞ் சம்பந்தமுண்டென்று பேதையர் எண்ணிவந்த பேதைமையை அறுத்திடும்பொருட்டு கற்பீடத்திற்குப்பதிலாக மரப்பீடம் வைக்கப்படவும் அது மேசையல்லது நற்கருணைப் பந்திமேசை என்றழைக்கப்படவும் ஒழுங்குசெய்யப்பட்டது.

10. வினா. பரிசுத்த நற்கருணை என்னும் கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறுவதைப்பற்றி இங்கிலாந்துசபை ஏற்படுத்தியிருக்கிற முக்கிய சட்டங்களெவை?

விடை. பரிசுத்த நற்கருணையைப் பெற விரும்புகிறவர்கள் தாங்கள் அதற்குச் சேரும்நாளுக்கு முன்னதாக தங்கள் பெயரை குருவானவருக்கு அறிவிக்கவேண்டுமென்றும், துஷ்டராகப் பெயரெடுக்கிறவர்களையாவது பிறரை வன்மிக்கிறவர்களாகப் பெயர்பெற்றிருக்கிறவர்களையாவது அதிற் சேர்க்கவொண்ணு

தென்றும், நற்கருணை பரிமாறுகிற தருணத்தில் பந்திமேசை யானது மெல்லிய துப்பட்டியால மூடப்பட்டிருக்கவேண்டு மென்றும், நற்கருணை பரிமாறும் நாளுக்கு முந்தின ஞாயிற்றுக் கிழமையில் அல்லது பரிசுத்த நாளில் சபையார தருந்த ஆயத்த முள்ளவர்களாயிருக்கும்படியாக குருவானவர் எச்சரிப்புககூற வேண்டுமென்றும், காணிக்கைவாசகம் வாசிக்கபபடுகிறபோது ஜனங்களுடைய தருமங்களுங் காணிககைகளுஞ் சேர்க்கப் பட்டு வணக்கமாய் குருவானவரண்டைக்கு கொணடுவரப் பட, அவர் அக்காணிக்கைகளை வாங்கி தாழ்மையாய் பந்தி மேசையில் வைக்கவேண்டுமென்றும் நாலு, அல்லது மூனறு பேருக்குக் குறைவானவர்கள் குருவானவரோடே நற்கருணை ஆசரிக்கக்கூடாதென்றும், திடபபடுத்தலப பெறமுன்னதாக அல்லவென்று திடப்படுத்தலப்பெற ஆசையும் ஆயத்தமுமாயி ருக்குந்தருவத்துக்கு முன்னுக எவனும் நற்கருணையைச் சேரப் படாதென்றும், அந்தந்தச் சேகரத்தாரில் ஒவ்வொருவனும் வரு ஷாவருஷம் கிறிஸ்து உயிர்த்தெழுந்தநாள்முதலான மூன்று நாட்களிலாகிலும் நற்கருணைக்குச் சேரவேண்டுமென்றும, இங் கிலாந்துசபைக்குரிய ரூபிரிக்குகளிலும சட்டங்களிலுங் கட் டளையிடப்பட்டிருக்கிறது.

11. வினு. கர்த்தருடைய இராப்போசனத்தைப்பற்றிய விஷ யத்தில் இங்கிலாந்துசபைக்கும் ரோமான்சபைக்கும் இருக்கிற வித்தியாசமென்ன?

விடை. கர்த்தருடைய இராப்போசனத்தில் நம்முடைய சபை அனுசரிக்கிற கொள்கைகள் ரோமான்சபைக் கோட்பாடு களுக்கு ஒத்திராமல் பிரதானமான விஷயங்களில் வித்தியாச முள்ளதாயிருக்கின்றன. அது தேவவசீகர உபதேசத்தைத் தள் ளிப்போடுகிறது. கிறிஸ்துவின் சரீரமும் ரத்தமும் மெய்யா கவும் நிச்சயமாகவும் விசுவாசிகளால் வாங்கி உட்கொள்ளப் படுகிறதென்று அது சொன்னுலும், அவருடைய தேகம் பொரு ளாகவல்ல ஆவிக்குரிய பிரகாரமாகவே அவை அனுபவிக்கப் படுகின்றனவென்று போதிக்கிறது. பிரதிஷ்டைசெய்யப் பட்ட அப்பத்தையும் ரசத்தையும் தொழுதேற்றுவது விக்கிரக ஆராதனைக்குச் சரியென்று கண்டிருக்கிறது. பிரதிஷ்டையாக் கப்பட்டதில் மீதியான அப்பமும் ரசமும் வேறே கவை காரி யங்களுக்காக மீத்துவைக்கப்படாமல் நற்கருணை பரிமாறப் பட்ட விடத்தில்தானே பொசிக்கவேண்டுமென்று கற்பிக்கி றது. அப்பமும் ரசமுமாகிய இரண்டும் எல்லாருக்கும் பரிமா

றப்படவேண்டுமென்று விதிக்கிறது. குருவானவர் சபையாரி னிமித்தம் கிறிஸ்துவைப் பலியிடுகிறதென்று வழக்கமாய்ச் சொல்லிய பூசைப் பலிகள் தேவதூஷணமுள்ள கட்டுக்கதைக ளாயும் மோசம் நிறைந்த வஞ்சனைகளாயுமிருக்கின்றனவென்று கண்டிருக்கிறது (மெய்சமயப் பிரமாணங்கள். 25, 30.)

12. வினு. நற்கருணை பரிமாறுதலுக்கான யாதொரு முறை மையை நம்து ஆண்டவர் ஏற்படுத்தியிருக்கிறதுண்டா? திருச்ச பைசீர்திருத்தலை நடப்பித்தவர்கள் அந்த முறைமையை பொது வான ஜெபபுஸ்தகத்தில் எவ்வித நோக்கத்தோடு ஏற்படுத்தியிருக் கிறார்கள்?

விடை. நமது ஆண்டவர் யாதொரு முறைமையை ஏற்படுத் தாததால் பல சபைகளில் அது பற்பல விதமாய் பரிமாறப் பட்டுவருகிறது. கர்த்தருடைய ஜெபமும் இராபபோசனக்கட் டளையுமே அவசியம் தேவையான முறைமையாம். மற்றுமுள்ள கூட்டுதல்கள் தேவபக்திக்கும் ஒழுங்கான கட்டுதலுக்கும் உபயோ கந்தான் திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் இந்த நோக்கத்திற்கேற்கவே தெளிவும் சிறப்புமான முறைமையை ஜெபபுஸ்தகத்தில் அமைத்திருக்கிறார்கள்.

13. வினு. மேற்சொல்லிய முறைமையை அமைத்தவர்க ளுக்கு விரோதமாய் சாற்றப்பட்ட இரு குற்றங்களெவை? இரண டும் ஆதாரமற்றதென்று காட்டு.

விடை. பரி. நற்கருணைக்கடுத்த இங்கிலாந்து ஜெபமுறை மையைச் செய்தவர்கள் பூர்வயாயுள்ள முறைமைகளை அடி யோடே தள்ளிப்போட்டார்களென்று சிலர் குற்றங்கூறினார் கள்; வேறு சிலர் அது பூர்வ இங்கிலீஷ் மிசால் நகலேயன்றி வேறல்லவென்று படாந்தரமாய்ச் சொன்னார்கள் இரண்டும் உண்மைப்பிசகுள்ளதே. சாலிஸ்புரி மிசாலை (Salisbury Misal. அவர்கள் மூலமாகக் கொண்டிருந்தாலும் இடையிலுண்டான சகல தப்பறைகளையும் நீக்கல்செய்து பழுதற்ற பூர்வ முறைமை களை இருந்தபிரகாரமே அமைத்துக்கொண்டார்கள்.

14. வினு. நற்கருணை முறைமையானது பெரும்பான்மை யும் எத்தனை பங்காய் வகுக்கப்படும்?

விடை. நற்கருணை முன்முறைமை (Ante Communion,' (Com. Proper.) நற்கருணை தன்முறைமை, (Post Communi on.) நற்கருணை பின்முறைமை என மூன்று பங்காய் வகுக்க படும்.

15. வினா. நற்கருணை முன்முறை என்பதென்ன? அது வழங்கப்படும் காலமும் நோக்கமுமென்ன?

விடை. நற்கருணை பரிமாறுமலிருக்கும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றப் பண்டிகைநாட்களிலும் வாசிக்கப்படும்படி ரூபிரிக்கில் குறிக்கப்பட்டிருக்கிற பாகமே நற்கருணை முன்முறை எனனப்படும். பரி. நற்கருணை வாங்குவது நமது கடமையென்று ஞாயிறுதோறும் நமக்கு நினைப்பூட்டவும், நாம் நமது கடமையை அசட்டைசெய்தாலும் திருச்சபையானது அசதியுற்றிருக்கவில்லையென்று காட்டவும் நோக்கமாய் அது வாசிக்கப்பட்டுவருகிறது.

16. வினா. பரி. நற்கருணைமுறைமைக்கு கர்த்தருடைய ஜெபத்தைக்கொண்டு துவக்குவது தகுதியென்று காட்டு.

விடை. பரி. நற்கருணைமுறைமைக்கு கர்த்தருடைய ஜெபத்தைவிட்டாலன்றே தகுதியான முகவுரையுண்டாயிருப்பது அரிதெனத் துணிவுடன் சாதிக்கலாம். இச்சாக்கிரமெந்தை ஏற்படுத்தின கர்த்தரே இச்செபத்துக்குங் கர்த்தராவாம். இச்செபத்திலுள்ள விண்ணப்பங்களுக்கும் கர்த்தருடைய இராப்போசன பரிமாற்றத்தாலுண்டாகும் பக்திக்குரிய நலங்களுக்கும் இணைபிரியா சம்பந்தமுண்டு. ஆங்கிலத்திருச்சபையார் இச்செபத்தை நற்கருணைமுறைமையில் எப்பொழுதும் வழங்கிவந்தார்கள்.

17. வினா. கர்த்தருடைய ஜெபமானது இக்காலத்தில் அமைக்கப்பட்டிருக்கிற இடத்திலேயே பூர்வகாலத்திலும் அமைக்கப்பட்டிராத முகாந்தரமென்ன? அது இம்முறைமையின் துவக்கத்தில் சேர்த்துவைக்கப்பட்ட காலமென்ன?

விடை. பூர்வ கிறிஸ்தவர்கள் இச்செபத்தை விசுவாசிகளுக்கே உரிமைப்பட்ட ஜெபமென்று நினைத்துவந்தமையால் ஞானஸ்நானம்பெறத் தகுந்தபடி ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கேயல்லாது மற்றவர்களுக்கு அதனைக் கற்பிக்கமாட்டார்கள். ஆதலால் அதை வாசகங்களுக்குமுன் சொல்லமாட்டார்கள்; ஏனெனில் அஞ்ஞானிகளிலுஞ் சிலர் பிரசங்கங் கேட்கவருகிறதுண்டு; ஆனால் அவ்வழக்கம் நின்றுபோனபிற்பாடு இடம்பேர்த்தலும் உண்டாயிருக்கவேண்டும்; என்றாலும் இச்செபமும் இதற்குப் பின்னிற்குஞ் சுருக்கஜெபமும் முகப்பில் சேர்க்கப்பட்ட காலத்தைத் திட்டமாய்க் குறிப்பிடுவது கூடியதல்ல. சாலிஸ்பரி மிசாவில் இவ்வொழுங்குப்படி அவை நிற்கின்றன.

அவ்வொழுங்குப்படிக்கே 6-ம் எட்வார்டின் 1-ம் புத்தகத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கர்த்தருடைய ஜெபத்திற்குப் பின்னிற்கும் சுருக்க ஜெபமானது 10-ம் நூற்றுண்டில் தோன்றியிருக்கலாம்

18. வினா. இவ்விடத்தில் கர்த்தருடைய ஜெபத்தைக் குருவானவர்மாத்திரஞ் சொல்லவேண்டுமா?

விடை. முன்னிற்கும் ரூபிரிக்கில் யாதொரு சட்டமும் இதைப்பற்றி கூறப்படாமையால் இந்த ஒரேயொன்றைக் குருவானவர் அவர்த் தாமாகச் சொல்லுகிறார். ஆனால் ஜெபபுஸ்தகத்தில் இது முதலாவதாகக் கண்டிருக்கிறவிடத்திலுள்ள ரூபிரிக்கில் தேவாராதனையில் இச்செபம் வழங்குகிற எப்பொழுதும் குருவானவரோடே ஜனங்களும் ஏகோபித்துச் சொல்லுகிறார்கள். ஆனால் ஜெபபுஸ்தகத்தில் இது முதலாவதாகக் கண்டிருக்கிறவிடத்திலுள்ள ரூபிரிக்கில் தேவாராதனையில் இச்செபம் வழங்குகிற எப்போதும் குருவானவரோடேகூட ஜனங்களும் ஏகோபித்துச் சொல்லவேண்டுமென்ற சட்டமுண்டு. இப்போது மேற்படி விதிக்கு இவ்விடத்தில் புறநடை தோன்றுவதற்கு போந்த முகாந்தரஞ்சாதிக்க ஏதுவில்லை.

19. வினா. கர்த்தருடைய ஜெபத்துக்கும் பத்துக் கற்பனைகளுக்கும் இடையில சுத்தாங்கத்துக்கான சுருக்கஜெபஞ் சேர்க்கப்பட்டிருக்கிற முகாந்தரமென்ன?

விடை. கைகளை குற்றமில்லாமையில் கழுவுதல் என்பதாய் சங்கீதக்காரன் (26. 6) உவமிக்குப்பேசுகிற சுத்தாங்கமின்றி நாம் கர்த்தருடைய பீடத்தைக்கிட்டிச் சேரவொண்ணாதிருப்பதும் இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய்பர்வதத்தில் பத்துக்கற்பனைகளைப் பெற்றுக்கொள்ளுமுன்னர் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டதுபோல் இச்செபமானது நாம் கர்த்தருடைய பந்திக்குச் சேருமுன்னர் நமமை ஆயத்தப்பட்டவர்களாக்க இசைமபொருந்தியிருப்பதும் அது இவ்விடத்தில் வைக்கப்பட்டிருப்பதற்கு முகாந்தரமாம்.

20 வினா. சுத்தாங்கத்துக்காக சொல்லிய சுருக்க ஜெபத்தின் முகவுரையைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. சர்வஞானம் சர்வவல்லமை என்னும் இரண்டு லட்சணங்களும் இம்முகவுரையிற் கண்டிருக்கின்றன. இச்செபத்துக்கும் அது பண்ணப்படுஞ் சமயத்துக்கும் இது மிகவும் ஏற்றதுதான். பராபரனுடைய திருலட்சணங்களில் நமக்குள்

பயபக்தியை பிறப்பிக்கத்தக்க முக்கியலட்சணங்களில இவை இரண்டுமே. நாம் அவரண்டை நெருங்கிச்சேரும் இச்சமயத்தில் அத்தியந்த வணக்கத்தோடும் சுத்தாங்க இருதயத்தோடும் வருவது அவசியமானதாலும், இவைகள நம்மில தோன்றி விளங்குவதற்கு தேவஅருள் அவசியமானதாலும் இவைகளுக்காக பண்ணும் ஜெபத்தில் மேற்சொல்லிய திருலட்சணங்கள் முகவுரையாக அறிகையிடப்படுவது மிகவுந் தகுதியே.

21. வினு. நாஙகள் தேவரீரிடததில் பரிபூரணமாய் அன்புகூர என்று இச்செபத்தில் கண்டிருக்கிறதே. இப்படி பரிபூரணமாய் அன்புகூர நம்மால் கூடுமா?

விடை. இம்மையில் இருக்குமட்டும் நாம் பராபரனை பூரணமாய் நேசிக்கவாவது அவருக்குச் செல்லவேண்டிய நேசத்தை குறையறச் செலுததவாவது நமமாற் கூடாது; என்றாலும் நாம் உத்தமமாய் அவரை நேசித்தால் அதுவே பூரணமானதாக ஒபபுக்கொள்ளப்படும். பெலட்சயத்தாலும அறிவீனததாலும் இவ்விதமான வேறே காரணங்களாலும நாம் பழுதுகளுககுஉடந்தையாயிருப்பதுண்டு. ஐயங்களும், அபாயங்களும், துன்பங்களும், சோதனைகளும் நம்மை அணுகுவதுணடு. என்றாலும் விசுவாசம், ஜெபம், நன்மனச்சாட்சியின எச்சரிப்பு, ஆவியானவரின் தூண்டுதல் இவைமுதலிய பலகாரணங்களால் தீமைகள் தடுக்கப்பட்டுபோவதுமுண்டே. பரிசுத்தமாககுகிற ஆவியானவரால் நமக்குள் வாசம்பண்ணும் கிருபைக்கு பங்கமற உத்தமராய் நாம் நிலைத்திருப்போமேயானுல் பொல்லாங்கன் நம்மைத் தொடாதபடி நம்மைப் பேணிக்கொள்ளவும் விசுவாசத்தை நன்மனச்சாட்சியிலே காத்து நல்லபோராட்டத்தைப் போராடவும் மாம்சத்தின் செய்கைகளை அழித்து ஜெபத்திலும் நற்கிரியைகளிலும் சுறுசுறுப்பு பாராட்டவும் எதுவுண்டாயிருக்கும். நாம் ஆவியை அணைத்துப்போடாமல் ஓய்வின்றி ஜெபம்பண்ணி தீமையென்று காணப்படுகிறதெதையும் புறக்கணித்து நலமானதெதையும் நத்திக்கொள்வோமேயானுல் சமாதானத்தின் தேவன் தாமே நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்கி நமது முழுஆவியையும்ஆத்துமத்தையும் சரீரத்தையும் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாள்மட்டுங் குற்றமற்றதாக தற்காத்துக்கொளவார். ஏனென்றால் அப்போஸ்தலன் வசனித்திருக்கிறபடி நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் அதைச் செய்கிறவருமாயிருக்கிறார். எபி. 6. 1ல் இப்பூரணம் சுட்டிப் பேசபபட்டிருக்கிறது. வேறு அநேக வாக்கியங்களிலும் நாம் பூரண சற்குணராகும்படி வருந்தியழைக்கப்படுகிறோம்.

22. வினா. பத்துக் கற்பனைகள் பரி. நற்கருணைமுறைமை
யில் சேர்க்கப்பட்டிருப்பதால் பிரயோஜனமுண்டா?

விடை. முக்கியமான இரண்டு பிரயோஜனங்களுண்டு. (1)
பரிசுத்த இராபபோசனத்தை அனுபவிக்க நம்மை தகுந்தபடி
ஆயத்தப்படுத்தவும், நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவண்
டைக்கு நடத்துகிற வழிகாட்டியென்று கலா. 3. 24ல் கண்
டிருப்பதை மெய்ப்பிக்கவும் பத்துக் கற்பனைகள் மிகவும் உகந்த
வை. ஒருவன் கர்த்தருடைய பந்திக்குச் சேர பாத்திரவானாகும்
பொருட்டு பராபரனுடைய கற்பனைகளின் பிரமாணத்தைக்
கொண்டு தன் நடக்கைகளையுந் திட்டமாய் பரிசோதிப்பது
அவசியமான முதற்கடமையாயிருப்பதினாலே பத்துக்கற்பனை
கள் இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருப்பது தகுதியேயன்றி
வேறல்ல. மேலும் இப்பிரமாணங்களை கைக்கொள்ளுதல் நாம்
ஞானஸ்நானத்திற்பண்ணின மூன்று பிரதிக்கினைகளிலொன்றா
யிருப்பதாலும், அப்பிரதிக்கினை இப்பரிசுத்த இராபபோசனத்
தில் நினைவுகூர்ந்து உறுதிப்படுத்தப்படுவதாலும் பத்துக்கற்
பனைகள் இதில் வழங்கப்படுவது உபயோகமான காரியந்தான்
என்பதற்குச் சந்தேகமில்லை. (2) பொதுப்பட எக்காலத்தி
லும் தேவகற்பனைகளைக் கருதி அவைகளுக்கு ஒத்து
நடக்கும்படி கடமைப்பட்டிருக்கிறவர்களாகிய நாம் லௌ
கீக குதாவடைகளால் அவைகளை எளிதாக மறந்துவிட இணை
யானவர்களாயிருப்பதால் இந்தடவாய ஞாபகப்படுத்தி நினைப்
பூட்டுவது மிகவும் உத்தமந்தான். ஒவ்வொரு கற்பனைக்கும்
பிறகு கடந்துபோன மீறுதல்களை மன்னிக்க தேவ இரக்கத்
துக்காகவும், இனிமேற்பட புதுசீவனுள்ளவர்களாய் நடக்க
தேவகிருபைக்காகவும் செய்யப்படும் மன்றாட்டானது இந்
நோக்கத்துக்கு பொருந்தியதல்லவா!

23. வினா. சன்மார்க்கப்பிரமாணமாகிய இக்கற்பனைகளின்
பொருளையும் பூரணதன்மையையும் விளக்குவிக்கத்தக்க பொது
வான சில விதிகளைச் சொல்லு.

விடை. 1. தீமையைத்தவிர்க்குங் கற்பனைகளில் நன்மையை
விதிக்குங் கற்பனைகளும், நன்மையை விதிக்குங் கற்பனைக
ளில் தீவினையைத் தவிர்க்குங் கற்பனைகளுந் தொக்கியிருக்கி
ன்றன. உதாரணமாக, பராபரனுடைய நாமத்தை வீணில் வழ
ங்கக்கூடாதென்ற கற்பனையில் அவருடைய நாமத்தைப் பரிசுத்
தமாய் ஆசரிக்கவேண்டுமென்ற கற்பனையுமுண்டு. மேலும்
-ம் கற்பனையில் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டு

மென்பது, அந்நாளை பரிசுத்தக் குலைச்சலாக்கக்கூடாதென்ற கற்பனையும் அடங்கியிருக்கிறது. இதன்றி 5-ம் கற்பனையில் பெற்றாரைக் கனம்பண்ணவேண்டுமென்பது அவர்களுக்கு கீழ்ப்படியாதிருப்பதையுஞ் சேதம் வருத்துவிப்பதையுந் தவிர்க்கிறதாயிருக்கிறது.

2. யாதொரு விசேஷித்த பாவம் எடுத்துரைக்கப்பட்டிருக்குங் கற்பனைகளில் அதற்கினமான சகல பாவங்களும் விலக்கப்பட்டிருக்கிறது.

3. தீமையை அல்லது பாவங்களைமாத்திரமல்ல, அவைகளுக்கினமான ஏதுக்களையுங் காரணங்களையும்முதலாய் நாம் தவிர்த்துப்போடவேண்டும்.

4. இக்கற்பனைகள்வெளியரங்கமான நடத்தைகளையுஞ்செய்கைகளையும் மாத்திரமல்ல, இருதயத்திலுள்ள சிந்தைகளையுங் கூட்டிக்கொள்ளும். மனுஷர் விதிக்கும் பிரமாணங்கள் வாக்கையுஞ் செய்கையையும்மாத்திரம் பற்றிநிற்கும் மனதையளவிட அவர்களுக்கு சமர்த்தில்லை. பராபரனே எல்லா இரகசிய எண்ணங்களையும் விருப்பங்களையும் முதலாய் அறிகிற சர்வஞானமுள்ளவராயிருப்பதால் அவர் விதித்திருக்கிற பிரமாணங்கள் இருதயத்தையுந் தழுவுகிறவைகளாயிருக்கின்றன. இந்நான்கு பொதுவிதிகளையும் தகுதியாய் கிரகித்துக்கொள்ளுகிறவர்கள் சன்மார்க்கபிரமாணத்தின் பொருளையும் பூரணதன்மையையும் அறிந்துகொள்ளுவார்கள்.

24. வினா. பத்துக்கற்பனைகள் கூறப்படும்பொழுதும் நற்கருணை பரிமாறப்படும்பொழுதும் குருவானவரும் ஜனங்களும் முறையே எவ்வித நிலையை அனுசரித்துவருகிறார்கள்? அதற்கு ஆதாரமென்ன?

விடை. குருவானவர்பத்துக் கற்பனைகளை தேவநாமத்திற்கூறுகிறபடியால் திரும்பி ஜனங்களைப்பார்த்து கற்பனையின் முக்கியத்தைப்பொருந்தும் விதமாய் தொனியோடும் அதிகாரத்தோடும் அவற்றைக் கூற, சபையார் வல்லமையுள்ளசிருஷ்டிகரின் சந்நிதிமுன் பாவமுள்ள சிருஷ்டிகளுக்கேற்கும் மனத்தாழ்மையோடும் வணக்கத்தோடும் அமரிக்கையாய் முழங்காலில் நின்று செவிகொடுக்கிறார்கள். குருவானவர் பாவ அறிக்கை செய்யும்பொழுதும் பிரதிஷ்டை ஜெபத்துக்கு முந்தின சுருக்க ஜெபத்தை வாசிக்கும்பொழுதும் தாம் நற்கருணையை அனுபவிக்கும்பொழுதும் முழங்காலில் நிற்கிறாரேயல்லாமல் மற்ற வேளைகளிலெல்லாம் நின்றுகொள்ளுகிறார். பழைய ஏற்பா

ட்டு ஆசாரியர் நின்றுகொண்டு பலிகளைச் செலுத்தினதால் இக்காலத்துக் குருமாரும் அம்மாதிரியைப் பின்பற்றி துதி தோத்திரபலிகளைச் செலுத்திவருகிறார்கள்; சபையாரோ சிலவேளைகளில்தவிர மற்ற வேளைகளிலெல்லாம் முழங்காலில் நிற்கிறார்கள்; திருவசனம் வாசிக்கப்படும்பொழுது இருந்துகொள்ளுகிறார்கள்; சுவிசேஷவாசகமும் விசுவாசப்பிரமாணமும் தாணிக்கைவசகமும் எச்சரிப்புங் குளோரியா இன் எக்ஸெல்ஸிஸ் என்னும் கீர்த்தனையும் வாசிக்கப்படும்பொழுது நிற்கிறார்கள். என்றாலும் இந்நிலைகளைப்பற்றி திட்டமாய் கூறப்பட்டிராததால் அவைகளை ஒப்புக்கொள்வதை கடமையாகவுஞ் சாதிக்கலாகாது.

25. வினா. அப்பமும் ரசமும் வாங்கும்பொழுது முழங்காற்படியிடவேண்டுமென்ற ஆசாரப்பிரமாணத்துக்கு கிறிஸ்துவானவர் சாக்கிரமெந்தை ஏற்படுத்திய வேளையில் தாமும், அப்போஸ்தலருங் காண்பித்த ஆசாரம் ஆதாரமாமோ? இவ்வாசாரத்தைப்பற்றி திருச்சபை வழுத்தியிருக்கிறதென்ன? இது எவற்றினுஞ் சிறந்த ஆசாரமோ?

விடை. பிரதிஷ்டைசெய்யப்பட்ட அப்பத்தையும் இரசத்தையும் வாங்கும்பொழுது குருவானவருஞ் சபையாரும் முழங்காலில் நிற்கும்படி கற்பித்திருக்கிறது. நமது ஆண்டவர் நற்கருணையை ஏற்படுத்திய ஆசாரத்தைப்பற்றி பரி. மத்தேயு அவர் பன்னிருவரோடுங்கூட பந்தியமர்ந்தார் (26. 20.) என்கிறார். ஆனால் பூர்வத்தாருடைய சாதாரண வழக்கப்படி சாய்ந்துகொண்டார் அல்லது படுத்துக்கொண்டார் என்பதே மூல பாஷையின் கருத்து. இவ்வழக்கம் பஸ்காவை நின்றுகொண்டு சாப்பிடும்படி கற்பித்த மோசேயின் கற்பனைக்கு விரோதமாயிருந்தபோதிலும் (யாத. 12. 11.) தன்னிலேதான் அவசியமற்றதாயிருந்த தமது ஜாதியாருடைய மாதிரியைப் பின்பற்றினார். கர்த்தருடைய இராபோசனத்தை வாங்கும் ஆசாரநிலை பற்பல சபைகளில் வெவ்வேறாயிருக்க, இன்னின்னவிதமாய்த்தான் அதை வாங்கவேண்டுமென்று சாதிக்க அவசரமில்லையென்றாலும், முழங்காலில் நின்று வாங்குவது மிகவும் மனத்தாழ்மைக்கு குறிப்பாயிருக்கிறதுமன்றி, கிறிஸ்துவானவருடைய மரணத்தால் சம்பாதிக்கப்பட்ட உபகாரங்களை அதிக நன்றியோடும் பயபக்தியோடும் அறிக்கையிடுதலுக்குப் பொருந்தியதாயுமிருக்கிறது. ஆனால் முழங்காலில் நிற்றலால் சாக்கிரமெந்துக்குரிய அப்பமும் ரசமும் என்பவைகளை

யாவது கிறிஸ்துவானவருடைய சுபாவ மாம்சமும் இரத்தமுமாகிய சரீரப் பிரசன்னத்தையாவது தொழுதேற்றல் குறிக்கப்படாதென்று திருச்சபையானது உணர்ந்திருக்கிறது. மேலும் நமது ஆண்டவர் அப்பத்தையும் ரசத்தையும் ஆசீர்வதித்த பொழுது சாயமான வழக்கத்தைவிட்டு தகுந்த ஆசாரத்தைக் காண்பித்திருப்பாரென்றும், அப்போஸ்தலமார் ஏற்றமரியாதை ஆசாரத்துடன் அவற்றை வாங்கியிருப்பார்களென்றும் நம்ப இடமுண்டு.

26. வினா. ஆதிக்கிறிஸ்தவர்கள் அதை வாங்கின ஆசார நிலையென்ன? சாதாரணமாயுள்ள இவ்வழக்கத்துக்கு வேறுபாடுண்டா?

விடை. ஆதிக்கிறிஸ்தவர்கள் நின்று பணிவாய் குனிந்தாவது பீடத்தண்டையில் முழங்காற்படியிட்டாவது அவற்றை வாங்குவார்கள். கிறிஸ்துவானவருடைய தெய்வீகத்தை மறுத்த ஆரியரே இருந்துகொண்டு நற்கருணை வாங்கும்வழக்கத்தை முதலாவதாய் அனுசரித்தவர்கள். தன்னைக் கிறிஸ்துவுக்கு பிரதி கர்த்தனாகச் சாதனைசெய்துவரும் பாப்புவும் இவ்வழக்கத்தை அனுசரித்துவருகிறார், இவ்விதமாய் தன்னைப் பராபரனென்று காண்பித்து பராபரனுடைய ஆலயத்தில் உட்காருகிறவன் என்று பரி. பவுல் குறித்துப்பேசுகிற (2 தெச. 2. 4.) அந்திக்கிறிஸ்து தானேயென்று தனக்குச் சாட்சியுரைத்துவருகிறார்.

27. வினா. பத்துக் கற்பனைகளுக்குப் பிறகு வாசிக்கப்படுகிறதென்ன? அதின் அவசியமென்ன?

விடை. பத்துக் கற்பனைகளுக்குப் பிறகு ராஜாத்திக்காகச் செய்கிற ஜெபம் வாசிக்கப்படும் ராஜாங்க அதிபதிகள் நீதிபிரமாணத்தைச் செலுத்தும் முக்கிய காரியகர்த்தராயிருப்பதாலும் இதையிட்டுப் பரி பவுல் எல்லாருக்கு முந்தி இவர்களுக்காக ஜெபிக்க கற்பித்திருப்பதாலும் (1 தீமோ. 2. 1, 2.) அச்செபம் தகுமிடத்தில் சேர்க்கப்பட்டிருப்பது விளங்கும். இவ்வகையான இரண்டு ஜெபங்களுண்டு; அவைகளில் முந்தினதிலே திருச்சபையைப்பற்றிய மன்றாட்டுகளுமுண்டு.

28. வினா. இதற்குப்பின் வரும் ஆராதனைமுறைமையை சம்பந்தமுறக் காட்டு.

விடை. ஆராதனைமுறைமையில் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குப் பிறகு கிறிஸ்துவின் சுவிசேஷ பிரமாணமடுத்து

நிற்கும். இதில் அன்றைய தினத்திற்குரிய நிரூப சுவிசேஷ வாசகங்களும அவைகளுக்குமுன் அவற்றின பொருளாகிய சுருக்கஜெபமும் வாசிக்கபபடும். நிசேயா விசுவாசபபிரமாணம் இவற்றைத் தொடர்ந்துவருவது தகுதியே. பாடங்கள் வாசிக்கப்பட்டபின் அபபோஸ்தல விசுவாசப்பிரமாணம் கூறப்பட்டதற்கு சொல்லும் நியாயமே இதற்கும் ஏற்கும். கேள்வியினால் விசுவாசமுண்டாமென்ற வேதவுரைபபடி வேத வசனம் வாசிக்கப்பட்டபின் அவ்வசனத்தில் அடங்கிய உப தேசங்களின்பேரிலுள்ள நமது விசுவாசததை வெளியரங்கமாய் அறிக்கையிடுவது தகுதியென்பதே அந்த நியாயம். இராப் போசனமாகிய சாக்கிரமெந்தை வாங்குமுன் நமது விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கு போந்த நியாயமுண்டு. அதாவது, இரட்சிப்புக்குரிய இரகசியங்களின்பேரில் உண்மையும் நேர்மையுமுள்ள விசுவாசமின்றி ஒருவனும் அதை வாங்கக் கூடாதென்பதே.

29. வினா. நிசேயா விசுவாசப்பிரமாணம் இங்கே சேர்க்கப் பட்டிருப்பதற்கு விசேஷித்த நியாயங்களென்ன?

விடை. (1) அவிசுவாசி அல்லது சுன்னத்தில்லாதவன் பஸ்காவைப் புசிக்கக்கூடாதென்று சட்டம் உண்டாயிருந்தது (யாத். 12. 43–48.). அப்படியானால் அதினால் குறிக்கப்பட்ட சாக்கிரமெந்தாகிய இராப்போசனத்தை அவிசுவாசியாவது கிறிஸ்துமார்க்க விசுவாசத்துக்கு அந்நியமானவனாவது அனுபவிக்கக்கூடியதெப்படி? ஆதலால் இச்சாக்கிரமெந்தை அனுபவிக்கிறவர்கள் தாங்கள் கிறிஸ்தமான விசுவாசிகள்தான் என்பதைக் காண்பிக்கும்படி வெளியரங்கமாய் விசுவாசஅறிக்கை செய்வது அவசியமே.

(2) கிறிஸ்துமார்க்க விசுவாசப்பிரமாணங்களை விசுவாசிப்பது ஞானஸ்நானத்தில் நாம் பண்ணிக்கொண்ட ஓர் பிரதிக்கினையாயிருப்பதாலும், பரி. நற்கருணையில் பிரதிக்கினைகளை நாம் புதுப்பித்துக்கொள்வதாலும் அப்பிரதிக்கினைக்கேற்க விசுவாசத்தை அறிக்கையிடுவது அவசியமே. மேலும் ஒருவன் விசுவாசப்பிரமாணத்தை உரைப்பது வீண்சடங்காயும், மற்றச் சபையார் முன்புக்குத் தன் விசுவாசத்தை அறிக்கையிடுதலாயும் மாத்திரமிராமல், தேவனுடைய தன்மையையும் அவர் நமக்காக நடப்பித்திருக்கிற நன்மைகளையும்பற்றி அவரை மகிமைப்படுத்தி ஆராதித்தலாகவுமிருக்கிறது.

30. வினா. அப்போஸ்தல விசுவாசப்பிரமாணத்தைப் பார்க்கிலும் நிசேயா விசுவாசப்பிரமாணமானது, இடமுறைமையில் வழங்கப்படத் தகுந்ததுதானோ?

விடை. அதைப்பார்க்கிலும் இதுவே வேதப்புரட்டுகளை வெகுவாய் கண்டிக்கிறதால் பரம பதிக்குச் சேருகிறவர்கள் வேதப்புரட்டுக்கு இடங்கொடாமல் பொதுவான திருச்சபையோடு சற்றேனும் பின்னமற ஐக்கியமுற்றிருக்கிறார்களென்பதை பாராட்டுவதற்கு இது தகுந்ததுதான்.

31. வினா. விசுவாசப்பிரமாணங்கள் விரிக்கப்பட்டதைப் பற்றிக் கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. விசுவாசப்பிரமாணங்கள் ஒன்றைப்பார்க்கிலும் மற்றொன்று விரிவாக்கப்பட்டாலும் உபதேசங்கள் அதிகரித்ததாலல்ல, ஐயந்திரிபற்றிருந்த உபதேசங்களை வேதப்புரட்டர் அடாத விதமாய் விஸ்தரித்ததாலேயே திருச்சபை தன் விசுவாசப்பிரமாணங்களை அதிக தெளிவுந்தீர்க்கமுமான நடையாய் அமைக்க அவசியம் நேரிட்டது. மூன்று விசுவாசப்பிரமாணங்களிலும் சுவிசேஷ உபதேசங்களின்பேரில் அமைக்கப்படும் எந்தெந்த விசுவாசப்பிரமாணத்திலும் அடங்கிய மொத்தப் பொருள் ஞானஸ்நானத்தில் நாம் செய்த அறிக்கையின் கருத்தேயல்லாது வேறல்ல. ஞானஸ்நானத்தால் நாம் கிறிஸ்துவின் சபையில் சேர்கிறோம். கிறிஸ்துவின் கற்பனையால் நாம் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுகிறோம். கிறிஸ்துமார்க்க உடன்படிக்கையில் நாம் சேருவதற்கு வழி இதுவொன்றே. ஆதலால் விசுவாசப்பிரமாணத்தை உரைப்பதில் நாம் நமது ஞானஸ்நான உடன்படிக்கையின் திட்டங்களைத்தான் அறிக்கையிடுகிறோம். இப்படி அறிக்கையிடுவதில் கிறிஸ்து நாதர் அருளியகற்பனைக்கொப்ப பிதாவையுங்குமாரனையும் பரிசுத்தாவியையும் விசுவாசிக்கிறேனென்றுமாத்திரம் உரைக்கலாம். இவ்வறிக்கையின் பயனை விரித்துரைக்க அவசியமிருந்தாலேயல்லாது மற்றப்படி இவ்வளவே போதும். இக்கருத்துப்பிரகாரம் விசுவாசப்பிரமாணம் விசுவாசிக்கவேண்டிய உபதேசங்களடங்கிய பிரமாணமென்றல்ல, நமது மார்க்கத்துக்குரிய ஆதார அறிக்கையின் விருத்தியுரையென்றே சொல்லத்தகும். வேதாகமத்தில் விசுவாசப்பிரமாணமொன்றும் விதிக்கப்பட்டிராததற்கு முகாந்தரமிதென்று இத்தால் விளங்கலாகும்.

32. வினா. நிசேயா விசுவாசபபிரமாணத்தின் விருத்தியுரையைச் சொல்லு?

விடை. பலதேவர் உண்டென்று சாதிக்கிற அஞ்ஞானிகளுடைய கொள்கைக்கும், கத்தோலிக சபையாரை முத்தேவத் தொழுவரென்று அழைத்த வேதபுரட்டருடைய அவதூறுக்கும் எதிரிடையாக ஒரே தேவன் உண்டென்று நான் மனதார விசுவாசித்து வாயார அறிக்கையிடுகிறேன். அளவற்ற ஆவியாயிருக்கிற அவர் மூன்று ஆளாயிருக்கிறார்; இவர்களில முதலாவதானவர் சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவன்தான். இவர் வானத்தையும் பூமியையும் அவைகளில் அடங்கிய சராசரமனைத்தையும், புவியில் காணப்படுகிறதும் சடப்பொருளுள்ளதுமான சமஸ்தத்தையும், வானிலுள்ள காணப்படாததும் ஆவிக்குரியதுமான அனைத்தையும் படைத்த சிருஷ்டிகராயிருக்கிறார்.

இயேசு வேறே, கிறிஸ்து வேறே என்று சொல்லி தெய்வீகமும் மனுஷீகமும் பொருந்தாமல பிரிந்து இரண்டாட்களாயிருந்ததென்று சாதித்தவர்களுடைய கொள்கைக்கு எதிரிடையாக ஒரே கர்த்தாவாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். இவர் மகத்தான திரித்துவத்தில இரண்டாம் ஆளாயிருக்கிறார். இவர் சுவீகாரபபுத்திரனாயிராமல் தேவனுடைய ஒரேபேறான குமாரனாயிருக்கிறார். இவர் காலஅளவுக்குட்பட்டவரல்ல; சகல உலகங்களுமுண்டாவதற்கு முன்னே அநாதியாய் தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர். இவர் பிதாவோடே ஒரே தன்மையுடையவர்; சோதியானது ஜோதியால் பற்றவைக்கப்படுவதுபோல இவர் தாமும் ஆச்சரியவிதமாய் பராபரனால் ஜெனிப்பிக்கப்பட்டு மெய்த்தேவனில் மெய்த்தேவனாயிருக்கிறார். இவர் சிருஷ்டிகளைப்போலல்ல, நித்திய ஜெனமியால் ஜெனிப்பிக்கப்பட்டவர். இவர் பிதாவோடு ஒரேதன்மையும் மகத்துவமுமுடையவரும், மகிமையிலும் வல்லமையிலும் அவருக்குச் சமானருமாயிருக்கிறார். ஒன்றுமில்லாமையிலுமிருந்து சமஸ்தத்தையும் படைத்த நித்திய வார்த்தையானவர் இவரே. இவர் மனிதராகிய நமக்காகவும் பாவிகளும் நிர்ப்பாக்கியருமாகிய நமது இரட்சிப்புக்காகவும் பரத்திலிருந்திறங்கி, தமது மகிமைகளை இழந்து மனிதனாய் அவதரித்தார். அவதரித்த மனுஷீகம் நம்முடையதுபோலவே இருந்தது. ஆனால் பாவமொன்று மாத்திரம் அதிலிருந்ததில்லை. ஏனென்றால் அவர் கன்னி மரியாயின் கர்ப்பத்தில் பரிசுத்தாவியின் வல்லமையால் உற்பவித்

தார். இந்தடவாய் அவர் இன்னம் மெய்த்தேவனாயிருந்தாலும் மனிததன்மையைத் தரித்துக்கொண்டபடியால் மெய்மனிதனாயு மிருக்கிறார். அவர் தமது ஜீவகாலத்தில் தமது பிரமாணங்களால் நம்மைப் போதித்து தமது மாதிரியால் நம்மை வழிநடத்தியருளினார். கடைசியாக அவர் பாடுபட்டு, குருசிலறையுண்டார்; நித்திய வேதனையை உத்தரிக்கவேண்டியவர்களான நமதுநிமித்தமாய் கொடிய வேதனையும், மகா இலப்பமுமான சிலுவையின் உபாதையையும் சகித்தார்; அவர் தம்மில்தானே குற்றம் ஏதுமற்றவராயிருந்தாலும் அக்காலத்தில் யூதேயாவுக்குத் துரையாகிய பொந்தியுபிலாத்துவினால் அநியாயமாய்த் தீர்ப்படைந்தார்; சொல்லிமுடியாப் பொறுமையோடு இவ்வுபாதைகளை உத்தரித்து அவ்வேதனைகளோடுமரித்து அடக்கம்பணணப்பட்டார். என்றாலும் பாவங்களுக்கு நிவிர்த்திப்பொருள் பூரணமாய்ச் செலுத்தப்பட்டு நிராகரதின்பேரில் அவர் தாம் சிலுவையில் அறையுண்ட மூன்றாந்தினத்தில் பழைய புதிய ஏற்பாடுகளில் அடங்கிய தீர்க்கதரிசனப்பிரகாரம் உயிர்த்தெழுந்தார். அதன்பிறகு அவர் தமது சீஷரோடு நாற்பது நாளளவாய்ச் சஞ்சரித்து அவர்கள் கண்காணப் பரமேறி, தமது சகல மகிமையையும் பெற்றவராய் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து, நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவர் உயிருள்ளோரையும், மரித்தோரையும் அவரவர் கிரியைகளின்படியே நியாயந்தீர்க்க மகா மகிமையோடு உலகமுடிவிலே திரும்பவருவார்; அப்பொழுது பொல்லாதவர்களை முடிவில்லா உபாதைக்குட்படுத்தி, நீதிமான்களைத தம்மோடு மகிமையில் அரசாளுவதற்கு அழைத்துக்கொள்வார். உலகம் முடியுங்காலத்தில் அவர் தமது மத்தியஸ்த ராசரீகத்தை ஒபபுவித்துவிடுவதாயிருந்தாலும் அவருடைய தத்துவ இராசரீகம் முடிவடைகிறதில்லை. மகிமைபொருந்திய திரித்துவத்தில் மூன்றாம் ஆளாகிய பரிசுத்தாவியையும் விசுவாசிக்கிறேன்; இவர் மெய்யான தேவனும் கர்த்தருமாயிருக்கிறார் (2 கொரி 3. 18.); ஞானஉயிரையும பரிசுத்தமாகும் கிருபையையும் அருளுகிறவர் அவரே(2 கொரி. 3. 6.); இவர் குமாரனைவரைப்போல் ஜெனிப்பிக்கப்பட்டவராயிராமல் புறப்படுகிறவராயிருக்கிறார்; இவர் பிதாவிலும் குமாரனிலும்நின்று புறப்படுகிறார் (யோவா. 14. 26; 15. 26; 16. 7.); என்றாலும் மகிமையில் தாழ்வானவரல்ல. திருச்சபையார் தங்கள் ஆராதனையாவிலும் பிதாகுமாரனோடேகூட இவரையும் தொழுது ஆராதிக்கிறார்கள். இவர் பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்க

தரிசிகளைக்கொண்டும் புதிய ஏற்பாட்டின் காலத்தில் அப்போஸ்தலமாரைக்கொண்டும் விளம்பினவர். மெய்விசுவாசத்தைப் பற்றிப் பிடித்திருக்கிற கிறிஸ்தவர்களின் கூட்டமாகிய ஒரே பொதுவான சாதாரண அப்போஸ்தலத் திருச்சபையுண்டென்று விசுவாசிக்கிறேன். சபையில விசேஷித்த சிலாக்கியங்களும் பாவமன்னிப்புமென்று கிறிஸ்துவானவரால் ஏற்படுத்தப்பட்ட ஒரே ஞானஸ்நானமுண்டு. (புது உடன்படிக்கை சிலாக்கியங்களில இது மிகவும் முக்கியமானது.) இச்சபையில் ஓர் அவயவமாகிய நான் மாம்ச உயிர்த்தெழுதல் உண்டென்றும், மாண்டு உருவழிந்த எப்போபபட்ட தேகமும் அப்பொழுது உயிர்த்தெழுமென்றும எதிர்நோக்கியிருக்கிறேன்; கிறிஸ்துவானவர் தம்முடையவாகளுக்கு வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிற நித்திய ஜீவமகிமையால் பங்குபேறடையலாமென்று நம்பியிருக்கிறேன். நான் விசுவாசிக்கிறபடி ஆவதாக. ஆமென்.

33. வின. விசுவாசப்பிரமாணமானது நின்றுகொண்டு சொல்லப்படுகிற காரணமென்ன? இயேசு என்னும் நாமத்தைச் சொல்லும்பொழுது தலைகுனிகிற வழக்கததுககு ஆதாரமென்ன? இது வீண்பத்தியும் ஆகாததுமான வழக்கமா?

விடை. நின்றுகொணடு விசுவாசப்பிரமாணத்தைச் சொல்வதால் நாம் அறிக்கையிடும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்போமென்று காட்டுகிறோம். இயேசுவின் நாமத்தில் தலைகுனிகிற வழக்கத்துக்கு வேதகற்பனையே ஆதாரமாம் (பிலி. 2. 10.). மேலும் 18-ம கனொனில் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை ஆராதனைவேளையில் உச்சரிக்கும்பொழுது கூடிவந்திருக்கிறவர்கள் தாழ்மையான சிந்தையோடும், தகுதியான மரியாதையோடும் உச்சரிககவேண்டும என்று கற்பிக்கப்பட்டிருக்கிறது யூதரும் அஞ்ஞானிகளும் இயேசுவானவருடைய நாமத்தை அவமதித்துத் தூஷணித்ததினிமித்தம் பூர்வ கிறிஸ்தவர்கள் இவ்வழக்கததை எதிர்பபாடாக உண்டாக்கினார்களென்று தோன்றுகிறது. இவ்வழக்கம் அவசியமற்றதும் கனொனுக்கிசைந்த ருபிரிக் சட்டமற்றதாயிருந்தபோதிலும் வீண்பத்தியும் ஆகாத தன்மையுமுள்ளதல்ல, பாப்புமார்க்கத்து முறைமைகளோடு சம்பந்தபபட்டதுமல்ல.

34. வின. குருவானவர் அந்தந்த வாரத்தில் ஆசரிக்கவேண்டிய திருநாட்களும் உபவாசநாட்களும் இன்னின்னவென்று

அறிவிக்கவேண்டும் என்பதாய் ரூபிரிக் சட்டம் அமைக்கப் பட்டதேன்?

விடை. ஆசரிக்கப்பட்டுவந்து திருச்சபை சீர்திருத்தலின் காலத்தில் நிறுத்தப்பட்டுபோன யாதொரு நாள் ஆசரிக்கப் படாமல் தடுக்கும்பொருட்டே இந்த ரூபிரிக் அமைக்கப் பட்டது. இத்தவறுசகு இப்பொழுது இடமில்லை; என்றாலும் இந்த ரூபிரிக் இன்னமும் அவசியந்தான். ஏனென்றால் முந் தினதவறுக்கு எதிரிடையாக பலா திருநாட்களை அனுசரியாமல் முற்றிலும் கவலையற்றதனமாயிருக்கிறார்கள். இப்பேர்ப்பட் டவர்களுக்கு எழுப்புதலாகவும் எசசரிபபாகவும் விளம்பரம் கூறப்படுவது உத்தமமே. இவ்விளம்பரத்தைக கேட்டும் அச ட்டையாயிருப்பவர்கள் அக்குற்றத்துக்குத் தாங்களே உத்தர வாதிகளாயிருக்கிறார்கள்.

35. வினா. நிசேயா விசுவாசப்பிரமாணம் கூறப்பட்ட பின் பிரசங்கம்பண்ணுகிறது பூர்வ வழக்கத்துக்கு ஒத்திருக் கிறதா? பிரசங்கத்துக்கு முன்வரும் ஜெபததைபபற்றி பிரசங் கிக்கிறவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளையென்ன?

விடை. ஆதிச்சபையில் வேதாகமப்பங்கு வாசிக்கப்பட்டு விசுவாச அறிக்கை கூறப்பட்டபின் பிரசங்கம்பண்ணுகிற ஒழுங்குண்டு. என்றாலும் வேண்டிய வேளைகளில் அடுத்து வரும் பண்டிகைகள், நற்கருணையெச்சரிப்பு, திருச்சபைக்க டுத்த சட்டங்கள் முதலியவற்றைப்பற்றி அறிக்கை கூறப்ப டுவது பிரசங்கத்துசகு முன்னேசத்தான. பூர்வசபையில் இச் சமயத்திலேயே சபைக்குப புறம்பாக்குந் தீர்ப்புகள் வாசிக் கப்படுவதும் வெளியரஙகமான பாவங்கள் மன்னிக்கப்படு வதுமுண்டு. பிரசங்கிக்கிறவர் பிரசஙகத்துக்கு முன்னர் ஜனங்கள் தம்மோடு சோந்து ஜெபிக்குமபடி கோரிககொண்டு சமயத்துக்குத்தக்கதாக சுருக்கமாய் ஜெபமபண்ணி காத்தரு டைய ஜெபத்தோடு முடிக்கவேண்டுமென்று கற்பித்திருக்கி றது.

36. வினா சபையிற் பண்ணப்படும் பிரசங்கத்தைப்பற்றிய வரலாறென்ன?

விடை. பூர்வகாலங்களில் நெகே. 8. 8ல் காட்டிய மாதி ரிப்பிரகாரம் திருவாக்கியத்திலிருந்தாவது சுவிசேஷவாக்கி யத்திலிருந்தாவது விசேஷித்த பாடத்திலிருந்தாவது பிரசங் கவாக்கியம் தெரிந்து; அதின்பேரில் மிஞ்சினால் ஒருமணித்

தியாலமளவும் விஸ்தரிப்புச் சொல்வது பொதுவாயுள்ள வழக்கம். பாப்புமார்க்கக் கொடுமைகள் நடந்தேறியகாலத்தில் இவ் வழக்கம் நின்றுபோகலாயிற்று, என்றாலுந் திருச்சபை சீர்திருத்தல் நடந்தகாலத்தில் திரும்பவும் ஏற்படுத்தப்பட்டது. சபையார்க்கு இப்பேர்ப்பட்ட பிரசங்கம்பண்ணப்படுவது மிகவும் உத்தமந்தான். பிரசங்கம்பண்ணுகிறவர் கொன்ஸ்தந்திபுரியில் கூடின சங்கத்தார் உண்டுபண்ணின 19-வது கனென்சட்டப்படி திருச்சபையின் சாதாரண வேதவியார்த்தியை தகுதியாய்க் கவனித்துக்கொள்ளவேண்டியது. இக்கனனுக்கு இசைவாக எலிசபெத்து ராஜாத்தியின் காலத்துக் கனனில் கண்டிருக்கிறதாவது: பிரசங்கிக்கிறவர்கள் தங்கள் பிரசங்கத்தைக் கேட்கிற ஜனங்கள் அனுசரிக்கவும் விசுவாசிக்கவும்வேண்டியதாக நூதனமான தற்போதனைகளைப் புகட்டாமல், பழைய புதிய ஏற்பாடுகளில் அடங்கிய உபதேசத்துக்கும் அவ்வுபதேசத்தைக்கொண்டு கிறிஸ்தமார்க்க ஆதாக்களும் பூர்வ கண்காணிமாரும் உரைத்திருக்கும் வசனங்களுக்கும் ஒத்திணங்கவே போதிக்கவேண்டுமென்பதுதான்.

37. வினா இங்கிலாந்து சபையில் வழங்கும் பிரசங்கித்தலின் வளமையைக் காட்டத்தக்க சில விசேஷங்களைச் சொல்.

விடை. இவ்விஷயத்தில் எந்தச்சபையானாலும் மேன்மை பாராட்டத் தகுமேயானால் நமது சபையோ அதிலும் அதிகம் சிறப்பலங்காரத்தைப் பார்த்தாலும் சரி, மிகுந்து வழங்குதலைப் பார்த்தாலும் சரியே. பிரசங்கத்தின் சிறப்பலங்காரத்தை புரொடெஸ்தாந்தரும ரோமானிதத்தரும் வெகுவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் வாரத்தில் ஒருமுறை கர்த்தருடைய நாளிலே பிரசங்கம்பண்ணப்படுவது திருச்சபைச் சட்டம்; முற்காலங்களில் நடந்த காரணங்களைக் கவனித்தால் இது மிகவும் போதுமானதென்கவேண்டும். திருச்சபை சீர்திருத்தல் நடந்தகாலத்தில் பிரசங்கம் மகா அபூர்வமாயிருந்தது. மூன்று மாதத்துக்கொருமுறை பிரசங்கம் பண்ணப்படவேண்டுமென்பது 6-ம் எட்வார்டின் காலத்துச் சட்டமாயிருந்தது. வெகு வருஷங்களுக்குப்பின் எலிசபெத்து ராஜாத்தியின் காலத்தில் மாதார்தரம் பண்ணப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டது. அப்படியானால் வாரந்தோறும் பிரசங்கம் நடந்தேறுவது மிகவும் போதுமானதுதானே. இதைப்பார்க்கிலும் அதிகமாய் வழங்குவதாயிருந்தாலும் அது தகுந்தபடி மதிக்கப்படவும் பலித

மாக்கிக்கொள்ளப்படவும் கூடாமல் அற்பமாய் மதிக்கப்படக் கூடுமே.

38. வினு. பிரசங்கமோ, தேவாராதனையோ, எது சிறந்தது?

விடை. தேவாராதனையே சிறந்தது. பிரசங்கம் எவ்வளவு சிறந்ததானாலும் தேவாராதனைக்கு நிகரற்றதாமே. நாம் தேவாலயத்தில் வந்து கூடுவதேன்? பராபரனை ஆராதிக்கவா? மனிதனை மெச்சிப் புகழவா? பராபரனுடைய நன்மை தன்மையின் மாட்சிமையைத் துதிக்கவா? மனிதருடைய சாதுரியத் திறமையைப் புகழவா? மனிதஞானத்திலூன்றி நிற்கும் பிரசங்கத்தில் மார்க்கத்தை நிலைப்படுத்துஞ் சபை நிலைநிற்பது இல்லையென்பது கவனிக்கப்படத்தக்க முத்திரையல்லவா?

39. வினு. பிரசங்கத்துக்கும் ஜெபத்துக்குமிருக்கிற வித்தியாசங்களைச் சொல்லு.

விடை. ஜெபமானது ஜெபிக்கிறவனுடைய மனதின் முயற்சியைச் சேரும்; பிரசங்கித்தலோ நமக்கு இதமியமானபடி புறக்காரணததால் நம்மில் கிரியை உண்டுபண்ணும். பிரசங்கித்தலில் நமது எண்ணங்கள் மனிதனைப் பற்றும்; ஜெபித்தலிலோ அவை தேவனை நோக்கும். பிரசங்கித்தல் நம்மில் பெருமையையும் குறைகூறலையும் பிறப்பிக்கத்தக்கது; ஜெபித்தலோ மனத்தாழ்மையையும் அடக்கவொடுக்கத்தையும் பிறப்பிக்கத்தக்கது. பிரசங்கம்பண்ணப்படுகையில் உட்கார்ந்துகொள்ளுகிறோம்; ஜெபம்பணணுகையில் முழங்காற்படியிட்டிருக்கிறோம். பிரசஙகித்தல் பலிதமாவது நிலைவரமல்ல; ஜெபம் பண்ணுதல் தவறிப்போகாமல் அனுகூலமாகத்தக்கது. பிரசங்கம் அறிவீனத்தை அகற்றத்தக்கது; ஜெபமோ உள்ள விசுவாசத்தைப் பெலப்படுத்தத்தக்கது. பிரசங்கம் நமது இருதயத்தில் வந்து தைக்கத்தக்கது; ஜெபமோ நம்மைப் பரவசமாக்கத்தக்கது. பிரசங்கம் நமக்குமாத்திரமே ஆசீர்வாதமாக முடிகிறது; ஜெபமோ ஆயிரங்களானபேருக்கும் ஆசீர்வாதமாயிருக்கத்தக்கது. பிரசங்கத்தில் தேவன் அனுப்பிய செய்தியைக் கேட்கிறோம்; ஜெபத்தில் தேவனோடு சம்பாஷிக்கிறோம். பிரசங்கமானது ஜெபத்தைச்சார்ந்து நிற்கிறது; பக்தியும் உட்கருத்துமான ஜெபமே பிரசங்கிக்கப்படும் சத்தியத்தை அங்கிகரித்துக்கொள்ள மனதை வழிப்படுத்தும். ஜெபமில்லாதவன் பண்ணும் பிரசங்கம் எவ்வளவு சிறந்ததானாலும் முழங்கும் வெண்கலமும் ஓசைதரும் கிண்கிணியுமேயல்லாது அதிகமல்ல. இந்தவாய்

கவனிக்குமிடத்து பிரசங்கத்தைப்பார்க்கிலும் ஜெபமே மிகச் சிறந்ததென்று பிரத்தியட்சமாயிருக்கிறதே.

40. வினு. ஓமிலி என்னும் பிரசங்கங்கள் யாரால், ஏன் உண்டுபண்ணப்பட்டன?

விடை. திருச்சபை சீர்திருத்தல் நடந்த ஆரம்பத்தில் போதகன்மார் அதிக அறிவுத்தாழ்ச்சியுள்ளவாகளாயிருந்தார்கள். அவர்களில் சிலர் ரோமான்சபைபபோதனைக்கு இதமியபபட்டவர்களாகக் காணப்பட்டார்கள். இககாரணஙகளையிட்டு ஓமிலி என்னும் பிரசங்கஙகள் அடங்கிய இரண்டு புஸ்தகங்கள் அமைக்கப்படலாயின. இவைகளில் முந்தினது கிறன்மர் (Cranmer), ரிட்லி (Redley), லாற்றிமர் (Latimer), தோமாஸ் பேக்கன் (Thomas Bacon) என்பவர்களாலும், இரண்டாவதானது எலிசபெத்து ராஜாத்தியின் காலத்தில பல கண்காணிமாராலும், விசேஷமாய் யூவெலினாலும் (Jewel) உண்டுபண்ணபபட்டன.

41. வினு. ஓமிலி என்னும் பிரசங்கங்கள் எப்பேர்ப்பட்டவை?

விடை. அவைகளில் உபதேச விஸ்தரிப்புகளும், நல்லொழுக்கப் போதனைகளும் உண்டு, ஒபபுகசொள்ளுதலுக்கும் செய்து நடபபித்தலுக்கும் அடுத்த விஸ்தரிபபுகள அவைகளிலுண்டு; பாபபுமார்க்கத் தபபறைகளுக்கு எதிரிடையாக சுத்த சுவிசேஷ உபதேசங்கள் இவைகளில் புகட்டப்பட்டிருக்கின்றன; பாப்புமார்க்கச் சீர்கேடுகளுக்கும, தீய நடத்தைகளுக்கும் இடங்கொடாமல் சீராய் நடப்பதற்கு எழுப்பிவிடத்தக்க போதனைகள் அவைகளில் அடங்கியிருககின்றன. இவை உண்டுபண்ணப்பட்டகாலத்து இயற்கைக்குத தக்கதாக மிகவும் சிறந்தவைதான்.

42. வினு. இப்பிரசங்கங்கள் இக்காலத்தில் வழங்கிவருகிறதுண்டா?

விடை. இங்கிலீஷ்பாஷையில் அவை இயற்றப்பட்டிருந்தாலும் அப்பாஷை அக்காலத்திலிருந்ததைப்பார்ககிலும் இப்பொழுது வெகுவாய் மாறுதலடைந்திருபபதாலும்,பொதுவான சபையாருக்கு அவைகளின் நடை தெளிவாய் விளங்காது. இதையிட்டு அவை நாளடைவில் வழங்கப்படாமல் நின்று போகலாயின; திருச்சபை அதிகாரிகளும் அதை ஜாடையாய் விட்டுவிட்டார்கள். என்றாலும் சுவிசேஷப்போதகன்மார்

அவைகளை வாசித்து அவைகளிலுள்ள பல பங்குகளை வழங்கி வருவது மிகவும உபயோகமாயிருக்கும்.

43. வினா. இப்பிரசங்கங்களுக்குச் சிலர் சொல்லும் நாம மென்ன? அது சரியானதுதானா?

விடை. இங்கிலாந்து சபையின் ஒமிலிப் பிரசங்கங்கள் (Homilies of the Church of England) என்ற நாமத்தில் சிலர் இதை அழைப்பார்கள். இப்பெயரால் அவைகள் திருச்சபை அதிகாரம்பெற்று வழங்குபவையாக பாவிக்கப்படுவதற்கு இடமுண்டு. அவைகளோ அப்படியிராமல் வாசிக்கப்படத் தக்க பிரசங்கங்களாய்மாத்திரமிருக்கின்றன. பொதுவான ஜெப புஸ்தகத்துக்கும் வேதாகமப பிரமாணங்களுக்கும் போதகன் மார் கையொப்பம் வைத்து அவைகளை ஒப்புக்கொள்ளச் சட்ட முண்டு. இவைகளைப்பற்றியோ அப்படியல்ல. அக்காலங்களுக்கு அவசியமானதும தேவபத்திக்கும் திவ்விய ஆரோக்கியத் துக்கும் ஏதுகரமான உபதேசமுள்ளவைகளுமென்று மாத்திரம் அவைகளைப்பற்றி அறிக்கையிடுவதுணடு. (வேதமாகமப பிர மாணம் 35ல் காண்க.)

44. வினா. காணிக்கைவாசகம் என்பதென்ன? இதற்கு ஆதாரமென்ன? முற்காலத்தில் சேர்க்கப்பட்ட காணிக்கை செலவிடப்படுவதெப்படி? காணிக்கைவாசகத்திலுள்ள வேத வாக்கியங்களின் நோக்கமென்ன?

விடை. பிரசங்கத்துக்குப்பின் குருவானவர் கர்த்தருடைய பந்திமேசையருகே போய் காணிக்கைவாசகத்தை வாசிப்பார். அது அல்லவென்றால் அதிலொரு பங்கு வாசிக்கப்படும் சமயத் தில் நியமிக்கப்பட்டவர்கள் ஏழைகளுக்காகவும, மற்றும்பத் தியுள்ள கவைகளுக்காகவும் சபையார் செலுத்தும் தருமங்களை யும் காணிக்கைகளையும் சேர்ப்பார்கள். உங்களில் அவனவன் வாரத்தின்முதல்நாளதோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதை யாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கக்கடவன் (1கொரி. 16. 2.) என்று பரிசுத்த பவுல் கொரிந்துசபையாருக்கு கற்பித்திருப் பதே இவ்வழக்கத்துக்கு ஆதாரம் பூர்வகிறிஸ்தவாகளுக்குள் இப்படிச் சேர்க்கப்படும் காணிக்கை அதிகமாயிருந்தால் அது நாலுபங்காக வைக்கப்பட்டு ஏழைகளுக்கு ஒரு பங்கும், கண் காணியாருக்கு ஒரு பங்கும், கோவிலுக்கு ஒரு பங்கும், குரு வானவருக்கு ஒரு பங்குமாகக் கொடுக்கப்படும். காணிக்கை வாசகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள் மிகவும் அனுகூலமானவைதான். ஏனெனில் அவை ஆத்தும சரீர நன்

மைகளை அடக்கிக்காட்டித் தரும் காணிக்கைகள் எவ்வித முகாந்தரத்தோடும் குணத்தோடும் செலுத்தப்படவேண்டுமென்று புகட்டுகின்றன.

45. வினா. காணிக்கைவாசகத்தில் அடங்கிய இரு விசேஷங்களெவை?

விடை. பிறருடைய சரீர நன்மைக்கும் ஆத்தும நன்மைக்கும் உபயோகமாக நாம் செய்யவேண்டிய முயற்சிகளைக் காட்டுகிற வாக்கியங்களே.

46. வினா. காணிக்கை சேர்ப்பதையும் பீடத்தில் வைப்பதையும்பற்றிய ஒழுங்கென்ன?

விடை. ஆதிச்சபையில் உதவிக் குருமாராதான் காணிக்கை சேர்ப்பது வழக்கம். ஆனாலும் அவர்களாவது கோவிற்காரியக்காரராவது இக்காரியத்துக்கென்று நியமிக்கப்பட்ட மற்றவர்களாவது அவைகளைச் சேர்க்கலாம்; என்றாலும் அவர்கள் அவைகளைப் பீடத்தில் வைக்கக்கூடாது. அவர்கள் குருவானவர் கையில் கொடுக்க அவர் தாழ்மையாய் பீடத்தில் படைத்துவைக்கவேண்டுமென்பதே சட்டம். இது யூதருடைய வழக்கத்துக்கிசைவாக இருக்கிறது. அவர்கள் தாங்கள் தேவாலயத்துக்குக் கொண்டுவரும் பலி காணிக்கைகளை ஆசாரியன் கையில் ஒப்புவிக்க, அவன் தான் அவைகளை தேவனுக்குப் படைப்பான். இப்பொழுது நடப்பதும் அவ்வாறே இருக்கிறது.

47. வினா வாரந்தோறும் காணிக்கை சேர்க்கும் வழக்கம் நடந்துவருகிறதா?

விடை. இங்கிலாந்துசபையைச் சேர்ந்த ஐரோப்பியருக்குள் வாரந்தோறும் காணிக்கை சேர்க்குதல் மிச்சமாய் வழங்குகிறதில்லை; என்றாலும் அது நடபடியில் உண்டாகிக்கொண்டுவருகிறது. நற்கருணை பரிமாறப்படும் ஞாயிறுகளில்மாத்திரம் சேர்க்கப்படும். இங்கிலாந்துசபையைச்சேர்ந்த இந்துக்களுக்குள்ளே பூர்வமரிதிரிப்படி வாரந்தோறும் காணிக்கை சேர்க்குதலுண்டு.

48. வினா. போராட்டச் சபைக்காக செய்யப்படும் ஜெபமானது காணிக்கை வாசகத்துக்கடுத்து சேர்க்கப்பட்டிருப்பதென்ன? போராட்டச்சபை என்பதென்ன? இச்செபத்தின் பொருளென்ன?

விடை. கிறிஸ்தவர்கள் பிறர்பேரில் கொண்டிருக்கும் சகோதரபட்சத்தை அவர்களுடைய ஆத்தும நன்மைக்காக ஜெபிக்கிறதினாலேயும் காண்பிக்கவேண்டியிருப்பதால், காணிக்கைவாசகத்துக்குப்பின் இவ்வுலகத்தில் போராடுகிற திருச்சபையினைத்துக்கும் சீருண்டாகச் செய்யப்படும் ஜெபம் சேர்க்கப்பட்டிருப்பது யதார்த்தமே. போராட்டச் சபை என்பது விசுவாசிகளின் சபைக்கூட்டமுழுவதையும் குறிக்கும். இவர்கள் ஞானஸ்நானத்தின் மூலமாய் கிறிஸ்துவானவரின சேவகராக பேரெழுதப்பட்டு, மரணம் ஜெயமாய் விழுங்கப்படுமட்டும் அவர் கொடியின்கீழடங்கி பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்படி முடிவுபரியந்தம் போராடினவர்கள் மோட்சத்திலுள்ள வெற்றிசிறந்த சபையில் மகிமையின் கிரீடத்தைப் பெறுவார்கள். பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்குக் கொடுத்திருக்கிற கட்டளை ஒத்துமைக்காக (1 தீமோ. 2. 12.) செய்யப்பட்ட சிறப்பும் பொழிப்புமான இச்செபத்தில் பல மன்றாட்டுகள் உண்டு. நற்கருணைக்குச் சேருகிறவர்களால் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும் தருமங்களையும் தேவனுக்குப் படைத்தபின் சாதாரண சபையிலெங்கும் உண்மையும் ஐக்கியமும் ஏகசிந்தையும் விளங்கச்செய்வதற்காகவும், பட்சபாதமில்லாமல் உண்மையாய் நீதிசெலுத்தப்பட ராஜாக்கள், பிரபுக்கள் அதிகாரிகளுக்காகவும், நடக்கையாலும் போதகத்தாலும் சத்தியமும் ஜீவனுமுள்ள தேவனுடைய வசனத்தைப் பிரசித்தப்படுத்தி அவருடைய பரிசுத்த சாக்கிரமெந்துக்களை ஒழுங்காயும் செம்மையாயும் பரிமாற கண்காணிமார் குருமாருக்காகவும, விசேஷமாய்க் கூடிவந்திருக்கிற சபையாருக்காகவும், சரீரத்திலும் மனதிலும் வருத்தப்படுகிற யாவருக்காகவும், தேகவியோகமாய்ப் போன விசுவாசிகளுடைய நன்மாதிரியைப் பின்பற்றி அவர்களோடேகூட நாமும் பரம ராஜ்யத்தை அநுபவிக்கும் கிருபைக்காகவும், வேண்டிக்கொள்ளுகிறோம்.

49. வினா சாக்கிரமெந்துக்களை ஒழுங்காயும் செம்மையாயும் பரிமாறுதல் என்பதென்ன?

விடை. நியமமுறைக்கேற்க ஒழுங்காயும் சமயத்துக்கேற்க செம்மையாயும் பரிமாறுதலென்றர்த்தமாம்.

50. வினா. போராட்டச் சபைக்காகச் செய்யப்படும் ஜெபத்தின் முடிவுரைக்கும் அதற்கு நிகரான ரோமான்மார்க்க ஜெப

த்துக்கும் வித்தியாசமென்ன? மரித்தோருக்காக ஜெபித்தலை இங்கிலாந்துசபை ஒப்புக்கொள்ளாதிருப்பதேன்?

விடை. ரோமான்சபையார் பிரிந்துபோன ஆவிகளின் ஆசோதை வசிப்புக்காக ஜெபிக்கிறார்கள்; இங்கிலாந்துசபை பாரோ அவர்கள் கனத்துக்குரிய பாத்திரங்களானதை நன்றியோடு நினைவுகூர்ந்து, அவர்கள் நன்மாதிரியைத் தாங்கள் பின்பற்றும் கிருபைக்காக மன்றாடுகிறார்கள். ஜீவித்துப்போனவர்களுக்காக ஜெபித்தல் இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய வழக்கமேயல்லாமல் அதற்கு முன்னுள்ளதல்ல. இவ்வழக்கம் அவசியமற்றதும் வேதாதாரமற்றதும் உத்தரிக்கும் ஸ்தலமுண்டென்ற உபதேசத்துக்கு இசைபொருந்தியதுமானதால், திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் யதார்த்தமாய் இதைத் தள்ளிப்போட்டார்கள். மரித்தோருக்காக ஜெபிக்கும் வழக்கம் பூர்வசபையில் உண்டாயிருந்தது மெய்தான். மரணத்துக்கும் உலகமுடிவுக்கும் உண்டாயுள்ள காலத்தில உத்தமர் குறைவான நன்மைப் பாக்கியங்களைமாத்திரமே அனுபவிப்பார்களென்றும், சகல காரியங்களும் நிறைவாகரமடையுங் காலத்தில் தங்கள் பாக்கியமும நிறைவாகரமாகும்பொருட்டு எதிர்பார்த்திருப்பார்களென்றும் நம்பியிருந்தார்கள். மரித்துப்போனவர்களுக்காக தங்கள் அன்பையும் மரியாதையையும் செலுத்தி பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை தாங்கள் விசுவாசித்தார்களென்று காண்பிக்கவும், ஆத்துமா அழியாவஸ்துவென்று தாங்கள் தீர்க்கமாய் உணர்ந்திருக்கவுந்தக்கதாக இப்படிச் செய்துவந்தார்கள். பிற்காலங்களிலோ இவ்வழக்கம் பழுதுபட்டுப்போய் உத்தரிக்கும் ஸ்தலத்துக்கும் அங்கே விடப்பட்டிருக்கும் ஆத்துமாக்களுக்காகச் செய்யப்படும் பூசைபலிகளுக்கும் ஆதாரமாக அமைத்துக்கொள்ளப்படலாயிற்று. பூர்வசபையில் வழங்கின ஜெபங்களோ இப்பேர்ப்பட்டவைகளல்ல; அவை முற்பிதாக்களுக்காகவும் தீர்க்கதரிசிகளுக்காகவும் பண்ணப்பட்டவை. இவர்கள் உத்தரிக்கும் ஸ்தலத்தில் விடப்படவுமில்லை; அங்கிருந்து அவர்கள் ஆத்துமாக்கள் விடுதலைபெறும்படி இவர்கள் சற்றேனும் மன்றாடவுமில்லை.

51. வினா. ரோமான்சபை நற்கருணைமுறைமையில் மரித்தோருக்காக ஜெபித்திருப்பது அச்சபையின் கொடிய சீர்கேட்டுக்கு அத்தாட்சியென்று காட்டு.

விடை. நமது ஒன்றான மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணத்தை இம்முறைமையில் நாம் அதிக உட்கருத்தோடு

தியானித்து ஆசரிக்கிறோம். அப்படியிருக்க அவர்களோ இவ்விடத்திலுங்கூட கன்னிமரியாள், பரிசுத்தவான்கள் முதலியவர்களுடைய நாமங்களையும் சேர்த்து நாட்டியிருக்கிறார்கள். இதினால் அவர்கள் காண்பிக்கிறதென்னவென்றால், கன்னிமரியாளும் மற்றெல்லா பரிசுத்தவான்களும் தேவனுக்குப பிரியமாக நமக்கென்று பரிந்து ஜெபிக்கும் விண்ணப்பம் தனனில் தானே போதுமானதாயிருப்பதுபோல கிறிஸ்துயானவர் பட்டபாடுகளும் மனறாட்டுகளும் தன்னில்தானே போதாமையுள்ளவைகளாயிருக்கின்றன என்பதே. நமக்கோ வேறே மத்தியஸ்தரும் காரியகாத்தரும் வேண்டியதில்லை; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு எல்லாமாயிருக்கிறார். (1 தீமோ. 2. 5.)

52. வினா. இராபபோசனமாகிய சாககிரமெந்து பரிமாறப்படும் சமயத்திலும் பரிமாறபபடாதசமயத்திலும் நற்கருணைமுன்முறை முடிந்தவுடன் செய்யபபடுகிறதென்ன?

விடை. சாக்கிரமெந்து பரிமாறபபடாவிட்டால் போராட்டசபைக்காகச் செய்யபபடும் ஜெபத்துக்குப்பின் குருவானவர் நற்கருணைமுறைமையின் கடைசியில் குறிக்கப்பட்ட ஆறு ஜெபங்களில் தமக்கிஷ்டமான இரண்டொன்றை வாசிப்பார். பின்பு குருவானவராவது கண்காணியாரிருந்தால் அவராவது அப்போஸதலனுடைய ஆசீர்வாதமுறைமையைக் கூறி (பிலி. 4. 7.) சபையாரை அனுபபிவிடுவார். சாககிரமெந்து பரிமாறப்படுகிறதாயிருக்குமானால் காணிக்கைவாசகமானபின் குருவானவா சாக்கிரமெநதுக்குரிய பொருள்களை மேசையின் மேல் கொண்டுவந்துவைககக் கற்பனையுண்டு. பின்பு நற்கருணைக்குச் சேராதவர்கள் அனுப்பிவிடபபட்டதினமேல் போராட்டச் சபைக்காக செய்யபபடும் ஜெபத்துக்குப்பின் குருவானவர் நற்கருணை முறைமையைத் தொடர்ந்து வாசிப்பார்.

53. வினா பூர்வசபையிலேஅப்பமும் இரசமும் எப்பொழுது எவ்விதமாய் மேல் வைக்கப்பட்டது?

விடை. பூர்வசபையில் நற்கருணைக்குச் சேருகிறவர்கள் செலுத்தும் அப்பம், இரசம் என்பவைகளில் சாக்கிரமெந்துக்கென்று எடுக்கப்பட்டவை காணிக்கை சேர்த்தலுககுபபின் மேசையின்மேல் வைக்கப்பட்டது. குருவானவர் தருமங்கள் என்ற பணத்தையும் காணிக்கைகள் என்ற (Oblations) அப்பம், இரசத்தையும் படைக்குமட்டும் (Credence Table) என்ற மேசையிலிருந்தது. கார்த்திக்குமேனர் அனுப்பிவிடப்பட்ட

பிறகே குருவானவர் மெல்லிய வெள்ளைத் துப்பட்டியால் பீடத்தை மூடுவார். சில ஜெபமுறைமைகளில் பீடம் துப்பட்டியால் மூடப்பட்டபிற்பாடு செய்யப்படும் ஜெபம் (Oratu super sundonesu) என்று கண்டிருக்கும்.

54. வினு. பரி. நற்கருணையைப் பரிமாறப்போகிற நாளுக்குமுன் அதைப்பற்றி ஏற்கனவேதானே அறிவிப்பது அவசியமா?

விடை. ஆம். (1) நமது பஸ்காவாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருந்த பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட நாலுநாளைக்கு முன்னதாய் அதைத் தெரிந்து பத்திரப்படுத்த வேண்டியதாயிருந்தது (யாத். 2. 3-6.). (2) தேவன் நியாயப் பிரமாணத்தைக் கொடுப்பதற்கு மூன்றுநாளைக்குமுன்னதாய் அதைப்பற்றி இஸ்ரவேலருக்கு அறிவித்தருளினார் (யாத். 19. 15.). (3) அவர்கள் பண்டிகைகள் வருவதற்குமுன்னதாகவே அவைகளைப்பற்றி கூறியறிவிக்கப்படவேண்டுமென்று தேவ கட்டளை உண்டாயிருந்தது (லேவி. 25. 9.). (4) எசேக்கியா ராஜா தான் பஸ்காவைக் கொண்டாடும்முன் ஏற்கனவே தானே அதைப்பற்றி விளம்பரஞ்செய்தான் (2 நாளா. 30 அதி.). இப்படியிருக்க இவைகளைப்பார்க்கிலும் மகா சிறந்ததும் மேம்பாடுள்ளதுமான பரிசுத்த நற்கருணைக்குச் சேருகிறவர்கள் அதற்கென்று ஏற்கனவேதானே தங்களைத் தகுதியாய் பரிசோதித்து தங்கள் நடக்கையை ஆராய்ந்துபார்த்து, போந்தபடி தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்வது மிகவும் அவசியமே. இப்படி அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படியாக முன்னறவே நற்கருணை விளம்பரம் கூறப்படுவதும் அவசியமே.

55. வினு. ஆதிக் கிறிஸ்தவர்களுக்குள் இப்படி விளம்பரம் கூறப்படுவது வழக்கமாயிருந்ததா?

விடை. இல்லை. அக்காலத்தில் எல்லாரும் தாமாகவே வந்து ஆஜராவது வழக்கமாயிருந்தது. நாடோறுமென்றாலும் சரி, வாரந்தோறுமென்றாலும் சரி, ஜனங்கள் நற்கருணைக்குச் சேர ஆயத்தமாவார்கள். அதைப்பற்றி விளம்பரம் கூறப்படுவதுமில்லை; கண்டிப்பு தண்டிப்பு வழுத்தப்படுவதுமில்லை. இக்காலத்திலோ, இன்ன சமயத்தில் நற்கருணை பரிமாறப்படுமென்று பெரும்பாலும் முழுநிச்சயமில்லை; இதையிட்டு அறியாமையாலாவது மறதியாலாவது கவலைத்தாழ்ச்சியாலாவது வேறே

காரணத்தாலாவது பலர் ஆயத்தப்படாதிருப்பதற்கு ஏதுவாயிருக்கும். ஆதலால் இக்காலத்தில் நற்கருணை விளம்பரம் கூறப்படுவது அவசியந்தான்.

56. வினு. நற்கருணை தன் முறைமையை எப்படித் துவக்குகிறது?

விடை. மொழியில் வேற்றுமை தோன்றினும் பொருளில் நற்கருணை விளம்பரத்துக்கு ஒற்றுமை விளங்கிய ஒரு எச்சரிப்பு முதலாவதாக வாசிக்கப்படும். பரமபந்திக்குச் சேருகிறவர்கள் அதற்கென்று தகுந்தவிதமாய் ஆயத்தப்படுவதும் உத்தமகுணப்படுதலும் விசுவாசமும் அன்பும் தங்களில் உண்டோவென்று பரீட்சை செய்வதும் அவசியமென்றும், இப்படிக்கில்லாமல் கர்த்தருடைய சாக்கிரமெந்துக்கு அபாத்திரராயும் இரக்கமற்ற நெஞ்சமுடையோராயும் சேருவதினால் அல்லது கிறிஸ்துவானவரால் சமபாதிக்கப்பட்ட விலை உயர்ந்த மீட்பைத் தகுந்தபடி எண்ணாமல், அதைப் பெறத் துணிந்து சேர்வதினால் கடுமோசமுண்டாகுமென்றும் இதில் காட்டியிருக்கிறது.

57. வினு. இந்த எச்சரிப்பை வாசிப்பதில் குருவானவர் பேரிலும் சபையார்பேரிலும் விழுந்த கடமை என்ன?

விடை. குருவானவர் தமது சபையில் எத்தனைபேர் தகுந்த அறிவில்லாமலும் தகுந்த ஆயத்தமில்லாமலும் இருப்பார்களோ என்று தாம் வாசிக்கும் விளம்பரத்தால் அவர்கள் பலன் பெறத்தக்கதாக அவர்கள் மனதை வசப்படுத்துவதற்கான விதமாய் அத்தியந்த பத்தியோடும் ஒடுக்க வணக்கத்தோடும் சீராய் வாசிக்கக் கருத்துள்ளவராயிருக்கவேண்டும். சபையாரும் வாசிக்கப்படுவதை கருத்தாய் கவனித்து உட்கொள்வதுமன்றி, தனிமையில் தாங்களே அதை வாசித்து பலிதப்படுத்திக்கொள்ளவும் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

58. வினு. இவ்வெச்சரிப்பில் கவனிக்கப்படவேண்டிய எத்தனை காரியங்கள் காட்டியிருக்கின்றன?

விடை. இரண்டு காரியங்களே. அவையாவன: இந்தப் பரம இரகசியங்களின் மேன்மையைபற்றி தியானித்துக்கொள்வதும், அதைப் பெற நாம் பாத்திரரோவென்றும் நம்மை நாமே பரிசோதனை செய்வதுமே. இவற்றுள் முந்தினது பரி. பவுல் வசனித்திருக்கிறபடி கர்த்தருடைய சரீரம் இன்னதென்று எண்ணுதல்தான் (1 கொரி. 2. 29.). அதாவது, வழக்கமான

ஆகாரமென்று அற்பமாய் மதியாமல் அது எவ்வளவு மேம்பா டுள்ளதென்று தகுதியாய்க் கிரகித்துணர்ந்துகொள்வதேயாம். இரண்டாவதைப்பற்றி மனிதன் தன்னைத்தான் பரிசோதித்தறியவேண்டுமென்று பரி. பவுல் வசனித்திருக்கிறார் (1 கொரி. 2. 28.). இவை இரண்டும் அவசியமான காரியங்கள்தான். ஒருவன் யாதொரு விசேஷித்த காரியத்தில் கையிட்டுக்கொள்ளுமுன் அக்காரியத்தின் தன்மையையும் அதில் கையிட்டுக் கொள்ளத் தனக்குத் தகுதியுண்டாவென்பதையும் முன் தானே யோசித்துக்கொள்வானே. அப்படியானால், பரி. நற்கருணையைப்பற்றிய விஷயத்தில் நாம் இவ்விருகாரியங்களைச் சிந்தித்துக்கொள்வதும், அந்தப் பரம இரகசியத்துக்கு பாத்திரராகும்படி வேண்டிய கிருபைக்காக பிரார்த்தித்துக்கொள்வதும் கடமைதானல்லவா?

59. வினா. பரிசுத்த நற்கருணைக்குச் சேருகிற ஒவ்வொருவனும் தன்னைத்தானே ஆராய்ந்து பரிசோதிப்பது அவசியமென்று காட்டு.

விடை. நடப்பித்திருக்கிற பாவங்கள் இன்னதென்று உணர்ந்தறியாதவன் பாவமன்னிப்பைத் தேடுவது மாயஜாலந்தானே. செய்யவேண்டிய ஒப்பந்தங்களை சீர்தூக்கிப் பாராதவன் உடன்படிக்கைபண்ண ஏற்படுவது மதிகெட்ட துணிகரச் செய்கையே. நமது பாவங்களின் ஏராளத்தையும் கொடிய தன்மையையும் உணர்ந்து அவைகளுக்காக நமக்கு நியாயப் பிரமாணப்பிரகாரம் வரவேண்டிய தண்டனைக்கு அஞ்சிக்கையுடையவர்களாய் நாம் இருந்தாலேயல்லாது நமதாண்டவருடைய மரணத்தைத் தியானிக்க நாம் பாத்திரரல்ல. பாவ உணர்வே பாவநாசகரின் அவசியத்தையும் அருமையையும் காண்பிக்கும். ஆதலால் பரிசுத்த நற்கருணைக்குச் சேருகிற ஒவ்வொருவனும் தன்னைத்தானே ஆராய்ந்து பரிசோதிப்பது மிகவும் அவசியம்.

60. வினா. அபாத்திரனாய்க் கர்த்தருடைய பந்திக்குச் சேருகிறவனுக்கு உண்டாகிற மோசத்தைக் காட்டுகிற சுலோகம் என்ன? அதை எவ்விதமாய் தாற்பரியப்படுத்தலாம்?

விடை. அபாத்திரமாய் நற்கருணையை வாங்குதலால் நேரிடும் மோசம் பரிசுத்த பவுல் மொழிந்திருக்கிறபடி, "நியாயத் தீர்ப்பைப் புசித்துக் குடிக்குதல்" என்றுரைக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் நியாயத்தீர்ப்பு என்ற மொழி நித்திய

அதாவது மறுமைக்கு அடுத்த தண்டனையைமாத்திரமல்ல, அநித்திய அதாவது இம்மைக்கடுத்த தண்டனையையும் குறிக்கும். பிந்தின கருத்தாகவே அப்போஸ்தலன் அம்மொழியைப் பிரயோகித்து அபாத்திரமாய்ச் சேர்ந்தவர்களுக்கு பற்பல வியாதிகளும் மரணங்களும் நேரிட்டதென்று ஐயமகல வசனித்திருக்கிறார். அம்மொழிகள் இவ்விதம் பயன்படுவதாயிருக்க அமைந்த மனச்சாட்சியுற்றோர் மட்டுமிஞ்சி, அஞ்சியொடுங்கக் காரணமில்லை. ஏனென்றால் கொரிந்துசபையில் நடந்த சீர்மாறும், கேடுபாடும், பரிசுத்தக்குறைவும இப்பொழுது நடப்பிக்கப்படுவதரிது. என்றாலும் குணப்படுதல்முதலிய பாத்திரத்தன்மையில்லாமையால் தேவகோபத்துக்கு இலக்காகத்தக்கவர்கள் எக்காலத்திலும் உண்டாயிருப்பதால் அஞ்சிக்கையற்று கடினப்பட்டிருப்பது மோசமென்று அறிந்துகொள்வோமாக.

61. வினா. இப்பங்கிலுள்ள மற்றும் விசேஷங்களைச் சுருக்கமாய் எடுத்துரை.

விடை. சபையாருடைய மனது தகுதியாய் ஆயத்தப்பட்டபிற்பாடு நற்கருணை வாங்கும்படிக்கான அழைப்பு கூறப்படும். பின்பு பாவ அறிக்கையும் பாவவிமோசனமும் வாசிக்கப்படும். பாவஅறிக்கைசெய்து குணப்படுவோர்க்கு மன்னிப்பு வாக்குத்தத்தம் அருளிய வேதவாக்கியங்கள் அடுத்து நிற்கின்றன. நற்கருணைமுகவுரையும் நமது மனதைப் பரவசமாக்கத்தக்க தெர்சான்கற்றஸ் (Tersanctus) என்ற சேராபின்களின் கீர்த்தனையும் தொடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பின்பு நமது அபாத்திரத்தையும் தேவ இரக்கத்தையும் அறிக்கையிட்டு மெய்யான தாழ்மையைக் கூறுகிற ஜெபமும், பிரதிஷ்டை ஜெபமும், பிரதிஷ்டை செய்யப்பட்ட பொருள்கள் பரிமாறப்படும் முறையும் முறைமுறையே வாசிக்கப்படும்.

62. வினா. இரண்டாவது கண்டிருக்கிற எச்சரிக்கைவிளம்பரத்தில் அடங்கிய விசேஷங்களெவை?

விடை. ஜனங்கள் பரிசுத்த நற்கருணைக்குச் சேராமல் அசட்டையாயிருக்கிறதாகக் காணப்படுஞ்சமயங்களில் வாசிக்கப்படுவதாகிய இது முக்கியமான மூவிசேஷங்களை உடையது. (1) நற்கருணை கொடுக்கப்படும் காலத்தைப்பற்றிய அறிவிப்பும், (2) கூடிவந்திருக்கிறவர்களெல்லாரும் அதற்குச் சேரும்படி வருந்தியழைத்தலும், (3) இப்படிச் செய்வதற்கு எழுப்புதலான நியாயங்களுமே. இந்த நியாயங்கள் பலவாறாயிருக்

கிறது. ஒருவன் சம்பிரமமான விருந்தை ஆயத்தப்படுத்தியிருக்க அழைக்கப்பட்ட விருந்தாடிகள் அதை அசட்டைபண்ணி அல்லத்தட்டுவது கொடிய அபகாரமும் அநியாயமுமாயிருப்பதுபோல, இந்தப் பரமவிருந்தை அசட்டைபண்ணுவதும் இருக்குமென்றும் லௌகீக அலுவலாலாவது கொடும்பாவியென்ற அச்சத்தாலாவது தடைபட்டிருக்கிறதாக சொல்லும் போக்குகளெல்லாம் செல்லாதென்றும் காட்டி, சுவிசேஷத்தில் கண்டிருக்கிற விருந்தாடிகளின் உபமானத்தால் மெய்ப்பித்து குருமார் பரமபந்தியைப் பரிமாறும்படி படும் கவலையையும், எல்லாரும் அதற்குச் சேரும்படி கொண்டிருக்கும் விருப்பத்தையும், சபையார் கிறிஸ்துவானவருக்கு நன்றியறிதலாக அதற்கு சேரவேண்டிய கடமையையும், அப்படி செய்யாதே போனால் வரும் கனமோசத்தையும் எடுத்துக்காட்டி, அவர்கள் சீர்ப்படுவார்களென்ற நம்பிக்கையோடும் சீர்பொருந்தும்படிக்கான ஜெபங்களோடும் முடித்திருக்கிறது.

63. வினா. நாம் அப்பொழுது ஞானப்பிரகாரமாக கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவோம் என்பதின் கருத்தென்ன?

விடை. நாங்கள் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவோ, நாங்கள் பிட்கிற அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவோ என்று அப்போஸ்தலன் வசனித்திருக்கிறார் (1 கொரி. 10. 16.). அதாவது, அவரோடும் அவர் தமது மரணத்தால் நமக்காகச் சம்பாதித்தருளிய புண்ணிய பலன்களோடுங்கூட நமக்குண்டாயிருக்கும் இரட்சணிய ஐக்கியமென்பதே. அப்பலன்கள் பாவமன்னிப்பும் (மத் 24. 28.), பரிசுத்தாவியானவருடைய அருள் அனுக்கிரகங்களின் வாத்திப்பும் (1 கொரி. 12. 13.), நித்திய ஜீவனுமே. (யோவா. 6. 54–56.)

64. வினா. கிறிஸது நமக்குள்ளே வாசமாயிருக்க என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. தயவான அவருடைய சமுகம் நம்மோடு தரித்குதல் என்பதே.

65. வினா. நாம் அவருக்குள்ளே வாசமாயிருப்போம் என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. அவருடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாய் நிலைத்திருப்போம் என்பதே.

66. வினு. கிறிஸ்து நம்மோடு ஒன்றுயிருக்க நாம் அவரோடு ஒன்றுயிருப்போம் என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. சரீர அவயவங்கள் சிரசோடு பொருந்தியிருப்பது போல் நாமும் மேன்மேலும் நமது இரட்சகரோடே இசைந்து பொருந்தியிருப்போம். நமது ஆத்துமம் பரிசுத்தத்தில் பெலன்கொள்ளும்படி செய்யத்தக்க ஞானத்திறமைகளும் அனுக்கிரகங்களும் உதவி சகாயங்களும் அவர்மூலமாய நமக்குண்டாகின்றன. கிறிஸ்துவானவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் ஆத்துமப்பிரகாரம் அருந்துவதால் அவசியமாயுண்டாகும்பலன்கள் இவைதான். இப்பலன்களை உண்டாக்குவதற்கென்றுதான் தேவன் அவைகளை ஏற்ற எத்தனங்களாக ஏற்படுத்தியருளினுர் என்பதே.

67. வினு. எல்லாவற்றிலும் முக்கியமாக நீங்கள் தாழ்மையாய் முழுஇருதயத்தோடே தோத்திரஞ் செலுத்தவேண்டுமென்பதற்கு அர்த்தமென்ன?

விடை. துதிதோத்திரத்தைப்போல விசுவாசமும் குணப்படுதலும் அதிக அவசியமானவைகளாயிராமல், அற்பமானவைகள்தான் என்பது இவ்வார்த்தைகளின் கருத்தல்ல. அவைகளெல்லாம் அவசியமானவைதான். ஆனாலும்அவை முன்தானே நம்மிற் காணப்படவேண்டியவை. இப்போதோ நன்றியறிதலான துதிதோத்திரந்தான் மிகவும் அவசியமானது. பரி. இராப்போசனத்துக்குச் சேருமுன் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளத்தக்கதாக அவை நமக்குண்டாயிருக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் பரிசுத்த இராப்போசனத்தை வாங்கி அனுபவிக்கையில் நமக்குள் முக்கியமாயுண்டாயிருக்கவேண்டியது நன்றியறிதலான துதி தோத்திரந்தான். பரிசுத்த பவுல் எபி. 13. 15ல் வசனித்திருக்கிற வார்த்தைகளுக்கு ஒத்துவரக் குருவானவர்இவைகளை வசனிக்கிறுர். பிதாவானவருடைய நித்திய அன்பும், குமாரனுனவருடைய ஒப்பில்லா கிருபையும், பிரத்தியட்சமாய் விளங்கியிருக்க, தேவதூதரைப்போல் நாம் துதியின் பலிகளைச் செலுத்துவது அவசியமே. நம்மில் நற்குணங்களும் நற்செய்கைகளும் எக்காலத்திலும் உண்டாயிருக்கவேண்டியது தான். என்றாலும் அந்தந்த சமயத்துக்கேற்ற நற்குணங்களும் நற்செய்கைகளும் அப்போதைக்கப்போது அதிக சிறந்த விதமாய் துலங்கி விளங்குவது பிரதானமே.

68. வினா. எச்சரிக்கை விளம்பரத்துக்கப்பால் வருகிறதென்ன?

விடை. குருவானவர் கூறும் வருந்தியழைத்தலே. இதில் மூன்று காரியங்கள் உண்டு. அவையாவன: வருந்தியழைக்கப்படுகிறவர்களிடத்தில் காணப்படவேண்டிய சற்குணங்களும், அப்பேர்ப்பட்டவர்களுக்குக் கூறப்படும் வருந்தியழைத்தலும், மனத்தாழ்மையாய் அவர்கள் பாவஅறிக்கை செய்வதற்கு எழுப்பிவிடுதலுமே. சற்குணங்கள் எவையெனறால், உத்தமமனஸ்தாபமும், அன்பும், நல்லதீர்மானமுமே.

69. வினா. நற்கருணை வாங்கும்படி வந்திருக்கிறவர்கள் பீடத்தைச் சேருகிறது எப்பொழுது? இதைப்பற்றி ஐயங்கொடுக்கிற மொழியை எப்படித் தாற்பரியப்படுத்துவாய்?

விடை. அவர்கள் பீடத்தைச் சேரவேண்டிய சமயத்தைப்பற்றி சற்று சந்தேகமுண்டு. ஜெபபுஸ்தகம் கடைசியாய் திருத்தப்பட்டபொழுது சேர்க்கப்பட்டதும், நற்கருணை எச்சரிப்புப் பிரசங்கமுகப்பிலுள்ளதுமான ரூபிரிக்கில் கண்டிருக்கிறபடி அவ்வெச்சரிப்பு பிரசங்கம் வாசிக்கப்படுமுன்னறவே அவர்கள் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெறும்படி ஒழுங்காயிருக்கவேண்டும். ஆனால் அழைப்புமுறையில் கண்டிருக்கிறபடி விசுவாசத்தோடே சேர்ந்து என்ற மொழியே சந்தேகத்தைக் கொடுக்கிறதாக எண்ணப்பட்டாலும், விசுவாசத்தோடே என்பது அத்தோடு கூட்டியுரைக்கப்பட்டிருப்பதால் அது சரீரப்பிரகாரமான சேர்க்கையையல்ல, ஆவிப்பிரகாரமான சேர்க்கையையே குறிக்கும். (எபி. 10. 22.)

70. வினா. பாவ அறிக்கையும் பாவவிமோசனமும் செய்யப்பட்டிருக்கிற ஒழுங்கென்ன?

விடை. 7-ம் அதிகாரம் காலை மாலை ஜெபம் காண்க.

71. வினா. இம்முறைமையில் பாவஅறிக்கை செய்வது மிகவும் அவசியமான காரியமென்று காட்டு.

விடை. கிறிஸ்துவானவருடைய பாடுகளை நினைவுகூரவும் கொண்டாடவும் அவரது பந்திக்குச் சேருகிறபடியால், அப்பாடுகளுக்குக் காரணமாயிருந்த நமது பாவங்களை இச்சமயத்தில் நாம் அறிக்கையிடுவது அவசியமே. நமது பாவங்களின் மன்னிப்பு உறுதிப்படவும் முத்திரைதானம் பெறவும் நம்பி, இப்பந்திக்குச் சேருகிற நாம் அப்பாவங்களை வெட்கத்தோடும், துக்கத்தோடும் முன்தானே அறிக்கையிட்டுப் புலம்புவது நியா

யுந்தானே. மேலும் பாவஙகளுக்காக தயவுசெய்யும் பூர்வசபை வழக்கம் நின்றுபோயிருப்பதால் இப்படிச் செய்வது அவசியந்தான் என்பதற்குச் சநதேகமில்லை

72. வினா. நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும் என்பதைப்பற்றி கவனிக்கபபடத்தக்கதென்ன?

விடை. நாம் செய்த பாவங்களையெல்லாம் ஒவ்வொன்றாயும் வகைவிபரமாயும் எடுத்துரைக்க இவ்வறிக்கைக்கு ஒத்துக்கொள்ளமாட்டாததால், அவைகளைப் பொதுமொழியாய் இம்மூன்று வகைகளில் அடக்கிக் காட்டியிருக்கிறது. ஒவ்வொரு அந்தரங்க நினைவுக்காகவும் தேவன் நம்மை நியாயத்திலே கொண்டுவருவார் என்று சாலொமோனும், ஒவ்வொரு வீண்வார்த்தைக்காகவும் நாம் கணக்கொபபுவிக்கவேண்டுமென்று கிறிஸ்துவானவரும், ஒவ்வொரு துற்கிரியைக்காகவும் தேவன் நம்மை நியாயம் விசாரிபபாரென்று பரி. பவுலும் வசனித்திருக்கிறார்கள். ஆதலால் தேவனுடைய நியாயவிசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு ஆக்கினைத்தீர்ப்பை நமதுபேரில் வருத்திக்கொள்ளுகிறவர்களாயிராமல், நமமை நாமே இவ்விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து பரிசோதிப்பது அவசியமான காரியம். நாம் அறிந்தும் அறியாமலும் செய்த எப்பாவங்களும் இம்மூவகைகளில் அடங்குமாதலால் நாம் செய்யும் பாவஅறிக்கையில் அவை மூன்றையும் அறிக்கையிடுவது தகுதியே.

73. வினா. பாவ அறிக்கைசெய்வதிலும் பாவமன்னிப்புக்காக பிரார்த்திப்பதிலும் புதுச் சீரடைவதற்கான மன்றாட்டுகள் சேர்ந்துவருவது சரிதானா?

விடை. தேவனுடைய இரக்கத்துக்காக மன்றாடுகிறவர்கள் இனிமேல் அவருடைய பரிசுத்தத்துக்கு பின்னமற நடந்துவரும்படி சாவதானமாயிருக்கவேண்டும். தற்காலத்தில் தனக்குள் உண்டாயிருக்கும் மா பயத்தை நீக்கும்படியாகமாத்திரம் பாவமன்னிப்பை நாடித்தேடுகிறவன் அப்பயம் தீர்ந்தவுடனே தன் முற்சீரைப்பார்க்கிலும் பிற்சீரைக் கேடாக்கிக்கொள்வான். பாவ பாரத்தைத் தகுதியாய் உணர்ந்து அதால் தனக்கு வரும் நிர்ப்பந்தத்தை உள்ளபடி கிரகித்துக்கொள்ளும் உத்தமனோ தான் நடப்பித்த பாவங்கள் மன்னிக்கப்படும்படிமாத்திரமல்ல, இனிமேல் பாவஞ்செய்யாமல் தற்காக்கப்படும்படியாகவும் கருத்தாய் பிரார்த்தித்துக்கொள்வான்.

74. வினா. பாவவிமோசன அறிக்கைகள் எத்தனை? அவைகள் ஒன்றுக்கொன்று விகற்பமானவைகளா?

விடை. பொதுவான ஜெபபுஸ்தகத்தில் பாவவிமோசன அறிக்கைகள் மூன்று கண்டிருக்கிறது. அவையாவன: காலை மாலை ஜெப ஒழுங்கிலுள்ளதும், வியாதிஸ்தனைச் சந்திக்கும் முறையிலுள்ளதும், பரி. நற்கருணை ஒழுங்கிலுள்ளதுமே. இம் மூன்றும் விபரீதமுள்ளதுபோல தோன்றினாலும் ஒரே விதமானவைதான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு ராஜா தாம் காவலில் வைத்திருந்த குற்றவாளிகளை விடுதலையாக்கும்படி தமது ஊழியக்காரரில் ஒருத்தனுக்கு உத்தரவு கொடுத்திருக்க, அவ்வூழியக்காரன் குற்றவாளிகளைப் பார்த்து, ராஜாவின் கையாலும் முத்திரையாலும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அனுமதிப்பிரகாரம் நான் இவனை விடுதலைபண்ணுகிறேன் என்று சொன்னாலுஞ் சரி; எனக்கு இந்த அனுமதியைக் கொடுத்த ராஜா உன்னை மன்னித்துப்போட்டார் என்றாலுஞ் சரி; ராஜா ஜைக்குள் நின்றுகொண்டு ஊழியக்காரன் சொல்வதை உறுதிப்படுத்துகிறவனாய் நிற்க, ராஜா உன்னை மன்னித்து விடுகிறார் என்று அவன் சொன்னாலுஞ் சரி; பொருள் ஒன்றேதவிர வேறில்லை. குருவானவர் கூறும் பாவவிமோசன அறிக்கைகளும் இப்படியே. பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்கு பாவவிமோசனத்தைக் கூற எனக்கும் குருமாரெல்லாருக்கும் அதிகாரத்தை அருளிச்செய்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன் பாவங்களை மன்னித்து, விமோசனஞ்செய்கிறார் என்று காலை மாலை ஜெப ஒழுங்கிலுள்ளதிலும், எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற தேவனுடைய அதிகாரத்தினாலே நான் உனது பாவங்களெல்லாவற்றையும் விமோசனஞ்செய்கிறேன் என்று வியாதியஸ்தனை விசாரிக்கும் ஒழுங்கிலுள்ளதிலும், மனந்திரும்புகிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச்செய்வோமென்று வாக்குத்தத்தஞ்செய்திருக்கிற தேவன் தமது பணிவிடைக்காரனாகிய என்னைக்கொண்டு உங்கள் பாவங்களை மன்னித்தருளுவாராக என்று நற்கருணையொழுங்கிலுள்ளதிலும் கண்டிருக்கிறது. இவை மூன்றும் பொருளில் யதார்த்தமுள்ளவை தவிர வேறல்ல. கட்டளையிடப்பட்டிருக்கிற உத்தரவே இவைகளைப் பயனபடச்செய்யும்போது அனுமதி முந்தின இரண்டிலும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது; மற்றதில் தொக்குநிலையாய்ச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

75. வினா. பாவவிமோசன அறிக்கைக்குப்பின் கூறப்பட்டிருக்கிற வாக்கியங்களின் நோக்கமென்ன?

விடை. கூறப்பட்டிருக்கும் அறிக்கையில் கண்டிருக்கிற விசேஷங்களை மெய்ப்பித்து உறுதிப்படுத்தி, உத்தம மனஸ்தாப.

யுடைய பாவிகளின் விசுவாசத்தைப் பெலப்படுத்தவும் அவர்களுக்குள் நம்பிக்கையைப பிறபபிக்கவுநநக்கதாக இவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. குருவானவர் தாம் பொது வசனமாய் உரைத்ததை இபபோது வேதவசனமாய் உரைக்கிறார்.

76. வினா. "தெற்சான்க்றறஸ்" (Tersanctus) என்பதை நாம் உணர்க்கும்போது பரமசேனையும் நம்மோடு சேர்ந்துகொள்ளுகிறதென்பது சரியா?

விடை. பரமசேனைகள் மகிமையின் ஆசனத்துக்கு முன்னின்று இபபடிப பாடினதாக ஏசாயா தீர்க்கதரிசி 6. 3ல் உரைத்திருபபதாலும், ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆராதனைக்குக் கூடும் கூட்டங்களில் தேவதூதர் பிரசன்னமாயிருக்கிறதாக எண்ணிவந்ததாலும் (1 கொரி. 11. 10.), அவர்கள் இந்தப பரம இரகசியங்களுக்குள் குனிந்துபார்க்க ஆவல் தாபங்கொண்டிருக்கிறதாக பரி. பேதுரு வசனித்திருபபதாலும் (1 பேது. 1. 12.) இப்படிச் சொல்வது சரியே. மேலும் இதில் கிறிஸ்து மார்க்க ஆதி உபதேசமாகிய திரித்துவ உபதேசம் அடங்கியிருப்பதால், மீட்பின் அளவைக் கொண்டாடுதலாக இது தேவதூதரும் மனிதரும் சேர்ந்து பாடத்தகக கீர்த்தனைதானென்று ஒப்புக்கொள்ளபபடலாயிற்று.

77. வினா. முகவுரைகள் என்பதென்ன? திருச்சபை சீர்திருத்தலை நடபபித்தவாகள் அவற்றில் செய்திருககிற திருத்தமென்ன? இவைகளைபபற்றி கவனிககப்படத்தக்க விசேஷமென்ன?

விடை. சுருக்கமான தோத்திரமுறைமைகளே முகவுரைகள் எனபபடும். சேராபின்களின கீத்தனை என்னபபட்டதற்கு முன் விசேஷித்த 5 பண்டிகைகளிலும் கொண்டாடபபடும தேவ இரக்கங்களுக்காக தேவனுககு ஸ்தோத்திரஞ்செலுத்தபபடவேண்டிய பொதுவான கடமையைபபற்றிய அறிக்கை சேர்க்கப்பட்டிருக்கும். இவை பூர்வமாயுள்ளவைகளும ஒவ்வொரு பண்டிகைகளிலும் விளங்கிய தேவ இரக்கத்தின் கொண்டாட்டங்களுமாயிருக்கின்றன. பரிசுத்தவான்களின் திருநாளுக்கடுத்த முகவுரைகளும் ரோமானிததரால் சேர்க்கப்பட்டிருந்தன. திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்களோ அப்பேர்ப்பட்டவைகளையெல்லாந் தள்ளிவிட்டு இப்பொழுதிருக்கிற ஐந்தைமாத்திரந் திருததியமைத்துககொண்டார்கள். அவைகள் அந்தந்தப் பண்டிகைக்கும் பின்வரும் ஏழு நாட்களுக்குமாக எட்டு நாட்களுக்குரியவைகளாய் அமைக்கப்பட்டிருப்

பது சவனிக்கப்படத்தக்க விசேஷம். யூதர் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற முக்கிய பண்டிகைகளை ஏழு நாளளவாகவும், கூடாரப்பண்டிகையொன்றை எட்டு நாளளவாகவும் கொண்டாடும்படி தேவ உத்தரவுண்டாயிருந்தது. கிறிஸ்துமார்க்கப் பண்டிகைகள [illegible]ல் முன் குறிக்கப்பட்டவைகளாகவேயிருக்க, [illegible] குறைவாய் கொண்டாடப்படுவது சரியல்லவென்று [illegible] தயிட்டு அவர்களது பண்டிகைகள் கொண்டாடப்பட [illegible] தொகையில் மிச்சமான தொகைக்கொப்ப [illegible] கொண்டாடப்படவும் அமைக்கப்படலாயிற்று.

78. வினா. பெரிய வெள்ளிக்கிழமைக்கு விசேஷித்த முகவுரை குறிக்கப்படாதிருப்பதேன்?

விடை. பெரிய வெள்ளிக்கிழமை உபவாச நாளேயன்றி பண்டிகைநாளல்ல ஆதலால் அதில் நற்கருணை பரிமாறப்படாததையிட்டு அதற்கு விசேஷித்த முகவுரை குறிக்கப்படவில்லை. அந்நாளுக்குரிய ஆராதனைமுறைமைமுழுவதும் கிறிஸ்துவானவருடைய மரணத்தால் சமபாதிக்கப்பட்ட புண்ணிய பலன்களைக் கொண்டாடும் முறைமையாயிருப்பதும் ஓர் முகாந்தரமாகலாம். ஆகிலும் பரி நற்கருணை பரிமாறப்படும்படி நிருப சுவிசேஷ வாக்கியங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது.

79. வினா. தெற்சான்க்ற்றஸ் (Tersanctus) என்பதென்ன? ஜனங்கள் அதின் முழுமையையும் சொல்லாமல் ஓர் பங்கை மாத்திரம் சொல்லவேண்டுமோ?

விடை. தெற்சான்க்ற்றஸ் என்பது ஏசாயா தீர்க்கதரிசியினால் 6. 3ல் குறிக்கப்பட்டிருக்கிற சேராபின்களின் கீர்த்தனைக்கு சற்றேறக்குறைய ஒத்ததேயாம். துதிக்கப்படத்தக்க திரித்துவத்துக்கு மகிமையாக இதில் பரிசுத்தர் என்ற மொழி மூவிசை கூறப்படுவதையிட்டு இதற்கு முப்பரிசுத்தர் என்றர்த்தமுள்ள தெற்சான்க்ற்றஸ் என்ற பெயருண்டாயிற்று. இதைச் சொல்வதைப்பற்றி ரூபிரிக் சட்டமில்லாமையால் சபையார் பெரும்பான்மையும் கீர்த்தனையை மாத்திரமல்ல, முகவுரையிலும் "ஆதலால்" என்ற வார்த்தை தொடங்கிச் சொல்லுகிற வழக்கமுண்டு. ஆனால் இது பூர்வ வழக்கமல்ல; ஜெபபுத்தகத்தை திருத்தினவர்களுடைய நோக்கமுமல்ல; முகவுரையின் இயல்பு இதற்கு ஆதாரமாகவுமாட்டாது. ஆதலால் கீர்த்தனையைமாத்திரம் அதாவது, "சேனைகளின் கர்த்தாவாகிய தேவனே" என்ற வார்த்தைகளைத் தொடங்கியே சபையார் சொல்லவேண்டியது.

80. வினு. பின்னுகக் கண்டிருக்கும ஜெபத்தின் நோக்க மென்ன?

விடை. இதில் குருவானவர் தாமும் பரிசுத்த நற்கருணைக் குச் சேரும் மற்றவர்களும் எவ்வளவு அபாத்திரர் என்பதைத் தாழ்மையாய் ஒத்துக்கொண்டு, தேவனுடைய கைம்மாறில்லாத இரக்கத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடுகிருர், மேன்மை யில் தாழ்மையைப் பாராட்டவேண்டுமென்று இதில் காட்டி யிருக்கிறதற்கொப்பான வசனங்கள் புதிய ஏற்பாட்டில் மிகுதி யாயுண்டு. நமபிக்கையும் பயபக்தியும், மனத்தாழ்மையும், மனவெழுச்சியும் நம்மில் கலந்து காணப்படவேண்டும். நாம் பயத்துடனே கர்த்தரைச் சேவித்து நடுக்கத்துடனே களிகூர வேண்டியது.

81. வினு. இயேசுவின் சரீரத்தால் எங்கள் பாவமுள்ள சரீ ரம் சுத்தமாகி, அவருடைய விலையுயர்ந்த இரத்தத்தால் எஙகள் ஆத்துமாவும் கழுவப்படுவதற்கு என்பதைப்பற்றி சொல்லப் படும் ஆட்சேபமும், சமாதானமுமென்ன?

விடை. கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய இவ்விரண் டில் ஒன்ருல் முடியாததை மற்றது செய்து நடபபிக்கத்தக்கதாக அவை வெவ்வேறு தத்துவமுள்ளவை என்ற கருத்து இவ்வார்த் தைகளில் உண்டென்று சிலர் ஆட்சேபிப்பார்கள். ஆனலும் கருத்து அப்படியல்லவென்று பின்வரும் வார்த்தைகளால தெளி வாய் விளங்கும். நமது சரீரமும் ஆத்துமாவும் நித்திய ஜீவன்மட் டும் காப்பாற்றப்படும்படி அவருடைய சரீரத்தையும் இரததத் தையும் அருந்துவது அவசியமென்று தனித்தனியே காட்டி யிருக்கிறது; வேதாகமத்திலும் இதற்கிசைவாகவே கண்டிருக் கிறது. (எபி. 10. 10.)

82. வினு. பிரதிஷ்டைஜெபம் எத்தனை பங்காகப் பிரிக்கப் பட்டிருக்கிறது? அதற்கு ஆதாரமென்ன?

விடை. இது இரண்டு பங்குள்ளதாம். முதலாவது ஜெபமும், இரண்டாவது நமதாண்டவர் அச்சாக்கிரமெந்தை ஏற்படுத்திய சமயத்தில் உரைத்த வார்த்தை கொண்டாட்டமுமே. இவ் வார்த்தைகளை நற்கருணைமுறைமையில் உரைப்பது அவசிய மென்று எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்போஸ் தலருடைய காலமுதல் சபைகளில் அவை வழங்கினதுமன்றி இச்சாக்கிரமெந்தால் உண்டாகும் சிலாக்கியங்களை கர்த்தர் சபையாருக்கு அருளிச்செய்யவேண்டுமென்ற விண்ணப்பம் அவற்றிற்குமுன் சேர்க்கப்பட்டிருந்ததுண்டு.

83 வினு. பூர்வ முறைமைகளிலும் 6-ம் எட்வார்டின் முதலாம புஸ்தகத்திலும் அச்செபம் எவ்விதமாய் கண்டிருந்தது? அது திருத்தப்பட்ட நோக்கமும் வகையுமென்ன? உண்டான திருத்தல பிரதிஷ்டை ஜெபத்தின் முக்கியத்தைக் குறைக்குமா? ஞானஸ்நானமுறைமையில் இதற்கு நேரொத்தான பங்கென்ன?

விடை. பூர்வ முறைமைகளிலும் 6-ம் எட்வார்டின் முதலாம் புஸ்தகத்திலும் அப்பமும், ரசமும் நமக்கு கிறிஸ்துவானவருடைய சரீரத்தைப்போலும், இரத்தத்தைப்போலும் இருக்கும்படியாக சர்வவல்லமையுள்ள தேவன் தமது பரிசுத்தாவியானவரை அவற்றின்மீதில் அனுப்பவேண்டுமென்ற மன்றாட்டு கண்டிருந்தது. ஆதலால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட பொருள்கள் கிறிஸ்துவானவருடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாறிப்போயின என்று யாராகிலும் தப்பாய் நிதானிப்பதற்கு இடமற்றுப்போகும்பொருட்டு எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த ஏற்பாட்டின்படி அவருடைய மரணத்தையும் பாடுகளையும நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டிகளாகிய இந்த அப்பத்தையும, திராட்சரசத்தையும் வாங்குகிற நாங்கள் மிகவும் பரிசுத்த அவருடைய சரீரத்தையும், ரத்தத்தையும் பெற்றனுபவிக்கும்படி கிருபைசெய்தருளும என்ற மன்றாட்டு அதற்குப் பதிலாக அமைக்கப்பட்டிருக்கிறது என்றாலும் பரிசுத்த ஆவியின வருகையைப்பற்றிய மன்றாட்டு விட்டுவிடப்பட்டிருப்பதால் இம்முறைமையின முக்கியம் தணிந்துபோகாது. ஏனெனில், பிரதிஷ்டைக்கான மன்றாட்டில் பிரதிஷ்டைசெய்யம் வசனம குறிக்கப்படுகிறதே. இவ்விதமாய் ஞானஸ்நானமுறைமையிலே ஜலமானது ஞானஸ்நானக் கட்டளையிலும வசனாங்களின் ஜெபத்திலும் பிரதிஷ்டையானதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

84. வினு. பிரதிஷ்டை ஜெபத்தை வாசிக்கையில் குருவானவர் செய்வதென்ன? ரோமான்சபை வழக்கத்துக்கும இதற்கும் வித்தியாசமுண்டா?

விடை. குருவானவா நற்கருணை மேசைக்கு முன்னே நின்று ஜனங்கள் காணத் தடையில்லாமல் மரியாதையாய் அப்பத்தைப் பிட்கவும, கையிலே பாத்திரத்தை எடுத்துக்கொள்ளவுந்தக்கதாக அப்பத்தையும் திவ்விதிராட்சரசத்தையும் ஒழுங்காய் வைத்து, அப்பிரதிஷ்டை ஜெபத்தை வாசிக்கும்படி கற்பித்திருக்கிறது. ரோமான்சபைக் குருவானவரோ, ஜனங்கள்

பார்க்கக்கூடாதபடிக்கு அவர்களுக்கு நேராக முதுகைத் திருப்பிக்கொண்டு நிற்பார். அத்தறுவாயில் அப்பம், ரசம் என்பவைகளில் அற்புதம் நடக்கிறதாக அம்மார்க்கத்தார் சொல்லிக்கொள்ளும் கொள்கையையிட்டே இப்படிச் செய்ய ஏற்பாடாகியிருக்கிறதேதவிர வேறல்ல.

85. வினா. பரி. நற்கருணைமேசை இருக்கும்படி குறிக்கப்பட்ட முந்தின இடமெது? பிந்தின இடமெது?

விடை. 1552-ம் வருஷத்தின் ரூபிரிக்குச் சட்டத்தில் பரிசுத்த மேசையில் வெள்ளைத் துப்பட்டியை விரித்து கோவிலின் நடுமத்தியில் அல்லது கிராதியில் வைக்கவேண்டுமென்று கண்டிருந்தது. ஆனால் 1559-ம் வருஷத்துச் சட்டத்தில் பரிசுத்த மேசைப்பீடம் கிராதியிருந்த இடத்தில் கிழக்கே வைக்கப்படவேண்டுமென்றும், பரி. நற்கருணை பரிமாறப்படுகிறபோது அதை மறுபடியும் முன்னிருந்தபடி கோவிலின் நடுமத்திய இடத்துக்குகொண்டுவரவேண்டுமென்றுங் கண்டிருந்தது. படிப்படியாய் இந்த வழக்கம் நின்றுபோய், பரிசுத்த மேசை கோவிலின் மத்திபத்தில் நீளமாய் வைக்கப்படாமல் கோவிலின் கீழ்கடைசியில் இப்போதிருக்கிறபடி வைக்கப்பட்டு பரி. நற்கருணை பரிமாறப்பட்டது. இதைப்பற்றி உண்டான தர்க்கத்தினால் லாட் என்பவரின காலத்தில் மேற்படி நடு மத்தியஸ்தானம் முற்றிலும் நின்றுபோகும்படி ஏதுவாயிற்று. அப்படியே 1637-ம் வருஷத்திலுண்டான ஸ்கொத்லாந்து சபை ஜெபமுறைமையிலும் ரூபிரிக் சட்டம் பரிசுத்த மேசை கோவிலின் கடைசியில் கிராதிக்குள்ளாக வைக்கப்படவேண்டுமென்று திட்டமாய் கண்டிருந்தது. 1662-ம் வருஷத்தில் காவின் கண்காணியார் ஸ்கொத்துலாந்து சபை முறைமையைப்போல் நம்முடைய ரூபிரிக் சட்டத்தையும் மாற்றவேண்டுமென்று கேட்டதில், புதுச் சட்டம் உண்டாகாவிட்டாலும் நடந்துவந்த வழக்கம் நின்றுபோகவுமில்லை, பழைய வழக்கந் தலைப்படவுமில்லை; இப்போதிருக்கிற வழக்கமே அதுமுதல் சட்டமாகிப் போச்சுது.

86. வினா. பரி. நற்கருணையைப் பிரதிஷ்டை செய்யுங் குருவானவர் எந்த முகமாய் நின்று அதைச் செய்யவேண்டியது?

விடை. 1549-ம் வருஷத்து ஜெபபுஸ்தகத்தில் குருவானவர் பரிசுத்த மேசை அல்லது பீடத்தின் மத்தியில் அதின் முன்னுக்குப் பணிவாய் நிற்கவேண்டுமென்று கண்டிருந்தது. ஆனால்

பழைய சாரம்பட்டணத்து மிஸால் புஸ்தகத்தின் ஆராதனை யில் ஒருபாகம் வலதுபக்கத்து மூலையில் அல்லது மேற்பாகத் தின் வடகடைசியிலும், மற்றது பீடத்தின் மத்தியிலும் திரும்ப வேண்டிய சமயந்தவிர மற்ற வேளைகளில் கீழ்முகமாய் ஜனங் களுக்கு தன் பின்புறந் தெரியும்படியாய் வாசிக்கும்படி திட் டஞ்செய்யப்பட்டிருந்தது. 1552-ம் வருஷத்தில் இப்போதிரு க்கிற ரூபிரிக் சட்டம கோவிலின் நடுமத்திபத்தில் பரிசுத்த மேசையிருக்கவேணுமென்பதை அனுசரித்து வடகடைசியில் என்றல்ல, வடபக்கத்தில நின்று என்று மாற்றப்பட்டது. இதி னாலே மேசையின் இடம் மாறினாலும் குருவானவருடைய இடம் மாறவில்லை. அதற்கப்பால பரிசுத்த மேசை கீழ்ப்பக்கத தில் கிராதிக்குள்ளாக வைக்கப்பட்டபோது மறுபடியும் அதைப பற்றி தர்க்கமுண்டாகி, குருவானவர் பழையபடி முன னுக்கு நிற்கவேணுமோ அல்லது ரூபிரிக்கில் கண்டபடி வட கடைசிபக்கத்தில் நிற்கவேணுமோ என்பது சந்தேகமாயிருந் தது. 1637-ம் வருஷத்து ஸ்கொத்லாந்து ஜெபமுறையில் கண்ட வடபக்கம், வடகடைசி என்ற வார்த்தைகள் முன்னு க்கு நிற்கும் வழக்கத்துக்கே ஆதாரமாயிருந்ததென்பது 1662-ம் வருஷத்தில் நடந்த திருத்தல்களினாலே தெரியவருகிறது. உள ளபடி வடபக்கத்தில் நின்று தென்முகமாய் பார்ப்பதே வெகு காலமாய் சட்டத்தின் பொருளாயிருந்தாலும் கிழக்குமுகமாய் ஜனங்களுக்கு முதுகைக்காட்டி நிற்கும் வழக்கம் தலைப்பட்டு, அதைப்பற்றி எப்போதும் தாக்கமாகிக்கொண்டேவந்தது. 1662-ம் வருடத்தில் உண்டான பிரதிஷ்டை ஜெபத்துக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற ரூபிரிககு சட்டததில் குருவான வர் பரிசுத்த மேசைககுமுன நின்று அப்பத்தையும், ரசத்தை யும் ஜனங்களுக்கு முன்னே தாராளமாயும் ஒழுங்காயும பரி மாற ஒழுங்குபபடுத்திவைக்கவேண்டியதென்று கண்டிருக கிறது. இதில் மேசைக்கு முன் என்பது கீழ்முகமாய் நிற்கும்படி கற்பிக்கிறது. ஆனால் ஜனஙகளுககு முன் என்பது ஜனங்கள் காணும்படி நிற்கவேண்டுமென்று சொல்லுகிறது. இந்த இரண் டும் ஒன்றையொன்று விரோதிக்கிறது. மேசைக்கு முன்னின்று அப்பம், ரசம் முதலியவற்றை ஒழுங்குப்படுத்தி வடபக்கம் போய் பிரதிஷ்டைஜெபம் சொல்லவேண்டியது கிரமம்; ஆகி லும் இந்த வழக்கம் இப்போது அநேக இடங்களில் முற்றிலும் நின்றுபோய், கீழ்த்திசையை நோக்கி நிற்பதே சாதாரண வழக்க மாயிருக்கிறது. குருவானவரின் வார்த்தைகள், தொனி யாவுந் தெளிவாயும், ஜனங்களுக்கு அவர் செய்வது மறைவில்லாமலும்

இருக்குமானால் எல்லா ஆராதனைகளிலும் சிறந்த இந்த ஆராதனையில் அவர் ஜனங்களோடே சேராது, அவர்கள் தலைவனாய் நின்று விசுவாசபபிரமாணத்தில் நிறபதுபோல் கிழ்த்திசையை நோக்கி நின்று நடத்துவதில் யாதொரு தீமையுமில்லை. சீர்திருத்தலின் காலத்தில் ரோமான் சபை வழக்கங்கள் திருத்தப்பட்ட போது இதிலும் ஏதோ தீமையிருக்கிறதாக எண்ணினதே வேற்றுமைக்குக் காரணம்.

87. வினா. பரி. நற்கருணை உபதேசத்தைப்பற்றி மற்ற வகுப்பாருடைய கொள்கையென்ன?

விடை. 1. சீர்திருத்தலின் காலத்தில் பிரிந்துபோன ஸ்விங்கிளியன் (Zuuglians), பியூரிட்டன் முதலியவர்கள் பரிசுத்த நற்கருணையை கிருபையின் எத்தனமாக ஏற்றுக்கொள்ளாமல் கிறிஸதவர்கள் எனபதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது என்றும், அபபம் ரசம் இரணடும் வெறும் அபபம் ரசமேதவிர கிறிஸ்துவின் சரீரமும் ரததமுமல்லவென்றும் சாதிக்கிறாகள்.

2. அதற்கு எதிரிடையாக லுததரும் அவரைச் சேர்ந்தவர்களும் பரிசுத்த சாககிரமெந்துகளின பலனைபபற்றி பாவமன்னிப்பும் நித்திய ஜீவனும் அவைகளில் உணடாயிருக்கிறதென்றும், பரிசுதத நற்கருணையை வாஙகுகிறவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் பெற்றனுபவிக்கிறாகள் என்றும், அப்பமும் ரசமும் பொருள் திரிந்து மாறாதேபோனாலும் (Transubstantiation) அத்தோடு கிறிஸ்துவின் சரீரமும ரததமும் சேர்ந்து பொருந்தி, அபபம் ரசததுக்குரிய தன்மையும், கிறிஸ்துவின் சரீரம் ரத்ததநுக்குரிய தன்மையும் ஒன்றாயிருக்கிறதென்றும் (Consubstantiation) சாதிக்கிறார்கள்.

3. ரோமான் சபையானது பரிசுத்த நற்கருணை ஏற்பாட்டில் நமது ரட்சகர் தாமே, என் சரீரம் என் இரத்தமென்று சொல்லிய வார்த்தைகளின்பிரகாரம் குருவானவர் பிரதிஷ்டை ஜெபம் வாசித்து ஆண்டவருடைய வார்த்தைகளை உசசரித்தவுடனே, முன்னமே அப்பமும் ரசமுமாயிருநத வஸ்துக்கள் பொருள் திரிந்து மாறி, கிறிஸ்துவின் மெய்யான சரீரமும் ரத்தமும ஆகிவிடுகிறது என்கிறார்கள. (Transubstantiation.)

4. கால்வின் என்பவரும் (Calvin) அவரைச் சேர்ந்தவர்களும் சாக்கிரமெந்துக்கள் அடையாளங்களாயிருந்தபோதிலும் நிர்வாணமான வெறும் பாழான அடையாளமல்லவென்றும், உண்மையாய்ப் பெறுகிறவாகளுக்கு அவைகள் கிருபையை

அளிக்கிற கிருபையின் எத்தனங்களென்றும், கிறிஸ்துநாதர் தம்முடைய சீஷர்களின்மேல் ஊதினபோது அவர்கள் அவருடைய காற்றைமாத்திரமல்ல, பரிசுத்தாவியையும் அத்தோடு பெற்றுக்கொண்டதுபோல பரிசுத்த நற்கருணையில் கிறிஸ்துவின் சரீரத்தினாலும், இரத்தத்தினாலும் விசுவாசிகள் ஆவிக்குரியபிரகாரமாய் மெய்யாகவே போஷிக்கப்படுகிறார்களென்றும், ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு மறுஜெனனமும், நற்கருணையைப் பெறுகிறவர்களுக்கு கிறிஸ்துவின் சரீரத்துக்குரிய மெய்யான ஆவிக்குரிய பிரசன்னமும், கிருபையும் கிடைக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

88. வினா. இதைப்பற்றி இங்கிலாந்து திருச்சபையின் கொள்கை என்ன?

விடை. கால்வின் என்பவருடைய கொள்கைப்படி ஆவிக்குரிய மெய்யான பிரசன்னம் (Real and spiritual presence) பரிசுத்த நற்கருணையில் உண்டென்பது தன் உபதேசமாக பல இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறது. 25-ம் பிரமாணத்தில் சாக்கிரமெந்துக்கள் குறிப்படையாளங்களாக மாத்திரமல்ல, தேவ கிருபைக்கும் பிரியத்துக்கும் நிச்சயமான சாட்சிகளாகவும், பலன்செய்யும் அடையாளங்களாகவும், அவர் நமக்குள்ளே அந்தரங்கமாய் கிரியைசெய்கிற எத்தனங்களாகவும் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறது. ஓமிலி என்ற பிரசங்கத்தில் பாவமன்னிப்பும் பரிசுத்தமும் கிறிஸ்துவுடன் சேர்த்துக்கையும் கொடுப்பேன்று வாக்களிக்கப்பட்ட, காணப்படுகிற அடையாளங்கள் என்று விரித்துச்சொல்லியிருக்கிறது. ஞானோபதேச வினாவிடையில், ஆவிக்குரிய உள்ளான கிருபைக்குக் காணப்படுகிற புறம்பான அடையாளமாகவும், அந்தக் கிருபையைப் பெறுவதற்கு எத்தனமாகவும் அதைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தாட்சியாகவும் இருக்கிறதென்றும், கர்த்தருடைய ராப்போஜனத்திலே மெய்யாகவும் நிச்சயமாகவும் விசுவாசிகள் வாங்கி உட்கொள்ளுகிற கிறிஸ்துவின் சரீரமும், இரத்தமும் உள்ளான பங்கென்றும் சொல்லியிருக்கிறது. பரிசுத்த நற்கருணையைப் பெற வந்திருக்கிறவர்களுக்குச் சொல்லும் பிரசங்கத்தில், நாம் அப்பொழுது ஞானப்பிரகாரமாய் கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவோம், கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க, நாம் அவருக்குள் வாசமாயிருப்போம்; கிறிஸ்து நம்மோடு ஒன்றாயிருக்க, நாம் அவரோடு ஒன்றாயிருப்போம் என்று சொல்லியிருக்கிறது.

குருவானவர் பரிசுத்த நற்கருணையைக் கொடுக்கும்போது உனக்காகக் கொடுக்கபபட்ட இயேசுகிறிஸ்துவின சரீரம என றும், உனக்காகச் சிந்தபபட்ட இயேசுகிறிஸ்துவின் இரததம் என்றும் சொல்லும்படி திட்டஞ்செய்யபபட்டிருககிறது

89. வினு. பிரதிஷ்டை ஜெபம் பண்ணுவது அவசியமா?

விடை. நாம் போஜனம் சாப்பிடுமுன் ஜெபம்பண்ணிக் கொள்வதுண்டே; அபபடியானுல நமது ஞானுகாரத்தை அருந்து முன் நாம் இபபடி ஜெபிபபது அவசியந்தான். மேலும் கிறிஸ துவானவா தாமும் இராபபோசனமுறைமையை ஒரு விசேஷி த்த ஜெபமுறைமையோடுதான ஏற்படுத்தினுர். (மத. 26. 26. 1 கொரி. 11. 24.). இதையிட்டு அப்போஸ்தலருடைய கால முதற்கொணடு எல்லாச் சபைகளிலும் இவ்வித ஜெபமுறைமை வழங்கப்படலாயிற்று. இவ்வாறுண்டான பிரதிஷ்டை ஜெபங் கள் பலதிலும் பூர்வமாயுமிருந்துவருவது பரிசுத்த இராபபோ சனக் கட்டளையே.

90. வினு. அப்பத்தையும் இரசத்தையும் பிரதிஷ்டைசெய் வதில் விபரீதங்களுணடோ?

விடை. இவ்விஷயத்தில் ரோமான்மார்க்கத்தார், லுத்தர் சபையார், கால்வினிஸ்தர் முதலியவர்களுடைய முறைமை நமது முறைமைக்கு வேறுபாடாயிருக்கிறது. எப்படியென் ருல், நமது சபை பூர்வ திருச்சபையாசாரத்துக்கொப்ப இச்சா க்கிரமெந்திலும் பரிசுத்த ஞானஸ்நானத்திலும் சபையின் நாமத் தால் குருவானவர் செய்யும் ஜெபத்தாலும், அதோடு சேர்ந்து உரைக்கப்படும் கிறிஸ்துவானவருடைய வார்த்தைகளாலும் பிரதிஷ்டை நடந்தேறுகிறதாக ஒப்புக்கொள்ளுகிறது. மற்ற வர்களோ, இராப்போசனக் கட்டளையைமாத்திரம் உரைப்பதே போதுமென்று ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

91. வினு. கிறிஸ்துவானவர் அடைந்த மரணத்தைப்பற்றி இச்செபத்தில் சொல்லியிருககிறதென்ன?

விடை. போந்ததும் நிறைவும் பூரணமுமான பலியாயும், காணிக்கையாயும், பரிகாரமாயும் அது இருக்கிறதென்று சொல் லியிருக்கிறது. அவருடைய மரணமானது யாருககாக நடந்த தென்று கவனிக்குமிடத்து, மனிதருக்காகப் பலியாயிருக்கிறது. அதைச் செலுத்தினவர் யாரென்று கவனிக்குமிடத்து, கைம்மா றில்லாக் காணிக்கையாயிருக்கிறது. அது யாருக்குச் செலுத்தப்

பட்டதென்று கவனிக்கவேண்டும், பரிகாரமாயிருக்கிறது. இவ் விஷயம ஒவ்வொன்றிலும் அது போதுமான நிறைவும பூரண முமானதாயிருக்கிறது. ... பரிகாரமாயும் நிறைந்த காணிக்கையாயும் ... இருக்கிறது. நியா யபபிரமாணப் ... களுக்காக அலலது ஒரு ஜாதியா... செலுத்தப் பட்டதல்ல; சர்வலோக ... பிரா யசசித்த பலியாகவிருக்கிறது

92. வினா. ஏகபலி என்பதின் ...?

விடை. கிறிஸ்துநாதர் ஒரேதரம் ... பலியிட் டார்; அவர் அதை திரும்பவும பலியிட ... ரோமானித் தாரோ தாஙகள் மாஸ என்னும் பூசைபப... போதெ ல்லாம் உள்ளபடி அவரைப பலியிடுகிறதா ... கொள்ளு கிறாகள். ஆனால் அப்படிச் செய்ய அவசியம் ... அப்படிச் செய்வது கூடியகாரியமுமல்ல. அவாகளுககுள ... செலு ததபபடுகிற பூசைபபலிகளுக்கு எதிரிடையாகவே ஏகபலி எனனும் வாசகமும் சேர்ககபபடலாயிற்று. மேலும பரி பவுல வசனித்திருபபதற்கு அது முற்றிலும் எதிரிடையாகவேயிருக கிறது. (எபி. 9. 26; 10. 12; 14. 18ல் காணக.)

93. வினா மிகவும் பரிசுத்த அவருடைய சரீரத்தையும் இரத் தத்தையும் பெற்றனுபவிககும்படி என்பதின் கருத்தென்ன?

விடை. இராபபோசனத்தில் நாம் அபபத்தையும், இரசத்தை யும் அனுபவித்தாலும உத்தமவிசுவாசி கிறிஸ்துவானவருடைய திருச்சரீரத்தையும், இரத்தத்தையும் அனுபவிககிறார் என்றே சொலலவேணடும். ஏனென்றால், ஆவிக்குரிய உள்ளான கிரு பைக்குரிய உள்ளான கிருபைக்கு இவைகள் காணப்படுகிற புறம்பான அடையாளங்களே யன்றி வேறல்ல. அந்தக் கிரு பை அவருடைய சரீரமும இரத்தமுமே; அதாவது, அவர் பட்ட பாடுகளால் உண்டாகும் புண்ணியபலன்களே. மேரிபாவின் கசப்புத் தண்ணீர் மரக்கிளையால் தித்திப்பானதுபோலும், கம் பத்தில் தொஙகின வெணகல சர்ப்பம் எட்டிப்பார்த்தவர்களு க்கு சுகங்கொடுத்ததுபோலவும், பரிசுத்த சாக்கிரமெந்து இரட்சி ப்பைக் கொடுக்கிறது.

94. வினா. அநேகருக்காக என்பதின் கருத்தென்ன?

விடை. எல்லாருக்காக என்பதே இதின் கருத்து. ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினால் அநேகர் பாவிகளான

துபோல என்று ரோம. 5. 19ல் சொலலயிருப்பதில், அநேகர் எனபது மனிதஜாதியார் அனைவரையும குறிககுமாப்போல இவ் விடத்திலும அபபடியே குறிககும.

95. வினு. நமது ஆண்டவர் நற்கருணையை ஸ்தாபித்தபொழுது வழஙகின அபபமும, ரசமும் எப்பேர்ப்பட்டவை? இரசத்தோடு தண்ணீர் கலக்குவதைபபற்றி பூர்வ வழக்கமென்ன?

விடை. நமது ஆண்டவர் நற்கருணையை ஸ்தாபித்தபொழுது புளிபபிலலா அபபததையும், தணணீா கலந்த இரசததையும தெரிந்துகொணடார் என்று நமபத்தகும. ஏனெனில் இவையே பஸகாபண்டிகையில் வழஙகின. ஆனால் சாகக்ரமெந்து பிரயோஜனமும் முக்கியமும் பொருந்தியிருக்க, அவை அகத்தியமெனறு சாதிககலாகாது. ஆதலால் இஙகிலாந்த சபையில் அந்த அபபம் வழக்கமாய் சாபபிடுகிற உத்தமவகையான கோதுமையை அப்பமாயிருககவேணடுமெனறு கற்பிககபபட்டிருககிறது. இரசத்தோடு தண்ணீர் கலககவேணுமெனறு விதிக்கபபட்டிருக்கவுமிலலை, விலககப்பட்டிருக்கவுமில்லை; ரசத்தோடு தணணீர் கலக்கும் வழக்கம் ஆதிசசபையில் பெருமபான்மையும் இருந்தது.

96. வினு அபபமானது பிரதிஷ்டையாக்கபபடுமுன்னும பிரதிஷ்டையாககபபட்டபின்னும் எதறகுக குறிபபாயிருக்கிறது? அபபத்தைப பிட்குதல் பிரதிஷ்டைமுறையில அவசிய விஷயமா?

விடை. பிரதிஷ்டையாக்கபபடுமுன் அப்பம பிட்கபபடாமல் முழுமையாயிருப்பது திருச்சபையின ஐககியத்துக்குக் குறிப்பெனறு அபபோஸ்தலன் சொல்லுகிறார் (1 கொரி. 10. 17.). ஆனாலும் அபபத்தை லேசாய்ப பிட்கிறதற்கேதுவாக ஏற்கனவே அதைக் கீற்றுககீற்றாய் கீறிவைத்திருககவேண்டுமென்று கனோன சட்டத்தில் பிரமாணிககப்பட்டிருபபது இதற்கு விரோதமல்ல. ஏனெனில், இது கீறபபட்டிருக்குமேயொழியப் பிட்கப்பட்டிராது. நமது இரட்சகர் அப்பத்தைப பிரதிஷ்டைசெய்தபின் அதைப் பிட்டு தமது சீஷருக்குக் கொடுத்தார். கொடுக்கையில், இது உஙகளுககாகப் பிட்கபபட்ட என்னுடைய சரீரமாயிருக்கிறது என்று விளம்பிவிடுத்ததனையால், தாம் சிலுவையின் மீதில் செலுத்தபபோன பலியைக் கருதிப்பேசினரென்று பிரத்தியட்சபபடுகிறது. அப்பத்தைப் பிட்குதல் சாக்கிரமெந்துக்கு அவசியந் தேவையான முறைமையாகாவிட்டாலும் கிறிஸ்துவின் மாதிரிப்படி தொன்முறையாய்

வழங்கப்பட்டும், அவருடைய பாடுகளுக்கேற்ற குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டும வருகிறது.

97. வினு. அப்பமும், ரசமும் பரிமாறப்படுமுன்னதாக பூர்வ கிறிஸ்தவர்கள் நடப்பித்துவந்த வழக்கமென்ன? அவ்வழக்கம் நாளடைவில் மறைந்து திருச்சபை சீர்திருத்தலின் காலத்தில் முற்றிலும தொலைந்துபோன காரணமென்ன?

விடை. சகோதர பக்ஷத்தைக் காண்பிக்கும்படிக்கு சமாதான முத்தமிடும் வழக்கம பூர்வ கிறிஸ்தவர்களுக்குள்ளே நிலைபெற்றிருந்தது. ஆனால் இது சன்மார்க்க வழுவுக்கு ஏதுகரமாகத் துலங்கியபொழுது நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக ஓஸ்கியுலேற்றோரியம் (Osculatorium) என்று அழைக்கப்பட்ட பரிசுத்த பண்டமொன்றை ஒவ்வொருத்தராய் முத்தஞ்செய்வது வழக்கமாயிற்று. திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் இதை முற்றிலும தள்ளிப்போட்டார்கள். அதற்குப் பதிலாகவும் அப்போஸ்தலனுடைய மினவுதல்கொள்ளுங் கருத்துக்கேற்கவும் (ரோம. 16. 16.) அன்பைப் பயிற்சி செய்வதற்கான புத்திமதி சேர்க்கப்பட்டிருக்கிறது.

98. வினு. பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்கள் பரிமாறப்படும் ஒழுங்கும் முறைமையுமென்ன? பரிமாறப்படும் விதத்திற்கு ஆண்டவர் காட்டிய மாதிரியாவது ஆதிக்கிறிஸ்தவர்கள் நடத்திய வழக்கமாவது ஆதாரமாகுமா? பரிமாறப்படும்பொழுது உரைக்கப்படுகிற வார்த்தைகளின் நோக்கமும் பொருளுமென்ன?

விடை. குருவானவரே முந்தி நற்கருணையை இருவகையிலும வாங்குவார்; பின்பு வந்திருக்கப்பட்ட மற்றுந் தேவஊழியக்காரருக்குப் பரிமாறுவார்; கடைசியாக சபையாருக்குப் பரிமாறப்படும். பரிமாறப்படும்பொழுது குருவானவர் குறிக்கப்பட்டிருக்கிற வார்த்தைகளைச் சொல்லவேண்டியது. அப்பத்தை நமது ஆண்டவர் பிட்டபின் எப்படி தாமே துணிக்கைகளை ஒவ்வொருவருக்காய பங்கிட்டுக் கொடுத்தாரோ, அல்லது சீஷர்களே முறைப்படி எடுத்துக்கொண்டார்களோவென்று தெளிவாய்க் கூறவில்லை. என்றாலும், முந்தின விதப்படியே நமது ஆண்டவர் பங்கிட்டிருப்பாரென்று சுவிசேஷ சரித்திரங்களால் அனுமானிக்க இடமுண்டு. அப்படியே இங்கிலாந்து சபையானது பூர்வ வழக்கப்பிரகாரம் அவற்றைப் பகிர்ந்து பரிமாறவும், அப்பத்தையும் ரசத்தையும் யாவருக்குங் கொடுக்கவுமதிட்டஞ்செய்திருக்கிறது. இதற்கென்றே அப்பமும், ரசமும்

பரிமாறப்படும்பொழுது சொல்லத்தக்க சுருக்கமும் தெளிவு மான வெவ்வேறு முறைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை சுருக்க ஜெபமாயிருந்தபோதிலும் ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைகளுக்கேற்க ஒத்தவை; அவரடைந்த மரணத்தின் நோக்கங்களை பிசகின்றி வழுத்துகிறவை; பரி சுத்த பந்திக்குச் சேருகிறவனுடைய சரீரமும் ஆத்துமாவுங் காப் பாற்றப்படும்படிக்கான எண்ணமுள்ளவை. ஆண்டவருடைய பாடுகளுக்கும் மரணத்துக்கும் நினைவுகூறுதலாக அப்பத்தை யும் ரசத்தையும் விசுவாசத்தோடும், பக்தியோடும், நன்றியோ டும் வாங்கும்படி புத்திபோதனையுள்ளவையே.

99. வினு. பிரதிஷ்டையான அப்பத்தைக் குருவானவர் ஒவ் வொருவருக்கும் பரிமாறுவது (லூக். 22. 17.) நமது இரட் சகரிட்டிருக்கிற கற்பனைக்கு விரோதம் அல்லவென்று காட்டு.

விடை. நமது ஆண்டவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரித் து, நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள் ளுங்கள் என்று சொன்னதாக இவ்வசனத்தில் சொல்லியிருப் பது மெய்தான். ஏனென்றால், இது இராப்போசன பாத்திரத் தையல்ல, பஸ்கா பாத்திரத்தையே குறிக்குமென்று முன் வரும் வாக்கியங்களின் சம்பந்தத்தால் விளங்குகிறது. அப் பாத்திரம் குடித்ததற்குமுன் இராப்போசனம் ஏற்படுத்தப்பட வில்லையென்று இவ்வாக்கியங்களே தெளிவாய்க் காண்பிக் கின்றன (லூக். 22. 19, 20.). பிரதிஷ்டையான அப்பத்தை யும், இரசத்தையும் பரிமாறவேண்டிய வகையைப்பற்றி வேத வாக்கியங்களில் யாதேனும் சொல்லப்படவில்லை; ஆதலால் ஆதிக்கிறிஸ்தவர்களுடைய வழக்கத்தையே நாமும் நடத்திக் கொண்டுவருகிறோம.

100. வினு. ரோமானித்தர் தாங்கள் ஒப்புக்கொள்ளும் தேவவசீகரம் என்னும் உபதேசத்துக்கொப்ப அமைத்திருக்கிற ஒழுங்கென்ன?

விடை. அப்பத்தை பரிசுத்த இராப்போசனத்தில் வழங்கி னல், அது பிட்கப்படுவதில் பொடிகளாவது விழுந்துபோவதா யிருக்குமாதலால் அதற்குப்பதிலாக உவேபர்களை (Wafers) வழங்கிவருகிறார்கள். அவைகள் எடுத்து உயர்த்தப்படும். உட னே எல்லாரும் அதற்கு வணக்கஞ்செலுத்துவார்கள். அப்புறம் முழுமையுமாக அவைகளில் ஒவ்வொன்றை இராப்போசனக் காரர் வாய்க்குள்ளே போடுவதுண்டு. இரசம் சிந்தப்பட்டுப்போ

கலாகாதபடிக்கு பாத்திரத்தை ஜனங்களுக்கு கொடுக்கவே கூடாதென்று ஒழுங்குண்டு.

101. வினா. பரிசுத்த இராப்போசனத்தை வாங்கும்பொழுது முழங்காற்படியிடுவதைப்பற்றி சொல்லப்படும் ஆட்சேபனையும் சமாதானமுமென்ன?

விடை. முழங்காற்படியிட்டு அவைகளை வாங்குவது அவைகளை வணங்குவதற்கு ஒப்பாயிருக்கிறதென்றும், தேவ வசீகரத்தைப்பற்றி பாப்புமார்க்க கொள்கையிலிருந்து இவ்வழக்கம் தோன்றியிருக்கிறதென்றும் சிலர் சொல்லுவார்கள். ஆனால் பரிசுத்த நற்கருணையொழுங்கின் முடிவில் திருச்சபையானது சேர்ந்துரைத்திருக்கிற அறிக்கை இவ்வாட்சேபனை அபத்தமென்று காண்பிக்கும். அதாவது, இராப்போசனக்காரர் முழங்காலில் நின்று கர்த்தருடைய இராபபோசனத்தை வாஙகவேண்டுமென்று பரிசுத்த நற்கருணை பரிமாறும் ஒழுங்கில் விதித்திருக்கிறதே; அதைப் பத்திரமாய் வாஙகிக்கொள்ளுகிற எல்லாருக்கும் கிறிஸ்துவானவர் அருளும் நன்மைகளைத் தாழ்மையாயும் நன்றியறிதலோடும் அறிக்கையிடுவதற்கு குறிப்பாகவும் இருக்கிறது. பாப்பானவரும் அரியானா கொள்கையைப் பின்பற்றின பல பிரிவினைக்காரரும் மரியாதை இல்லாமல் உட்கார்ந்துகொண்டு வாங்கின வழக்கத்தைக் கண்டித்து, ஒழுங்குத் தாழ்ச்சியையும் ஒழுக்க பேதகத்தையும் வியாத்திசெய்ய ஏதுகரமாகவும் இவ்வொழுங்குஅமைக்கபபட்டிருக்கிறது. என்றாலும், இந்த நோக்கத்துக்கு வேறுபாடாக கருதிக்கொண்டு அறிவீனத்தாலும் பலவீனத்தாலுமாவது, வன்மத்தாலும் மூர்க்கத்தாலுமாவது யாரேனும் தப்பெண்ணங் கொள்வதற்கு இடங்கொடாமல் அறியப்படுத்துகிறது என்னவென்றால், அந்தப்படியாய் மாம்சப்பிரகாரம் வாங்கிக்கொள்ளுகிற சாக்கிரமெந்துக்குரிய அப்பம் இரசம் என்பவைகளையாவது, கிறிஸ்துவானவருடைய நரதேகம் இரத்தம் என்பவைகளின் சரீரப்பிரசன்னத்தையாவது வணங்குதல் அதால் குறிக்கப்படுகிறதில்லை, வணங்கவுங்கூடாது. ஏனென்றால் சாக்கிரமெந்துக்குரிய அப்பமும், ரசமும் நமது சுபாவ இயற்கைப்படியே இன்னமும் இருக்கின்றன. அப்படியிருக்க அவைகளை வணங்குவது தகாது; ஏனெனில், அப்படிச் செய்வது உத்தம கிறிஸ்தவர்களனைவராலும் அருவருக்கப்படத்தக்க விக்கிரக ஆராதனையாய் பாவிக்கப்படும். நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவானவரின் சுபாவ சரீரமும் இரத்தமும் இங்கேயல்ல, பரத்திலிருக்கின்றன. கிறிஸ

துவானவருடைய சுபாவ தேகமானது ஒரே நேரத்தில் பல இடங்களிலுமிருப்பது சத்தியத்துக்கு எதிரிடைதான் என்பதே.

102. வினா. அப்பத்தையும் ரசத்தையும் பரிமாறும்பொழுது சொல்லப்படும் வார்த்தைகளில் எத்தனை காரியங்கள் உண்டு?

விடை. மூன்று காரியங்கள் உண்டு. அவையாவன:—போதனையும், ஜெபமும், கட்டளையுமே. உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம் என்பது போதனை; நாம் புசிக்க அல்லது பானம்பண்ணப்போகிறது இன்னதென்று இதில் போதனைபெறுகிறோம். 'உன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் நித்தியஜீவன் உண்டாகும்படி காக்கக்கடவது என்பது ஜெபம். பின்வருகிறது நாம் செய்யவேண்டிய கடமையைக் காட்டிய கட்டளை. இப்படிக்கும் பொதுப்பட இவ்வார்த்தைகளெல்லாம் கிறிஸ்துவானவர் உரைத்த இராப்போசனக்கட்டளைக்கு ஒத்து இணங்கியேயிருக்கிறது.

103. வினா. நற்கருணையை வாங்கும்பொழுது நாம் செய்யத்தக்கதென்ன?

விடை. மவுனத்தோடு மனத்தியானம்பண்ணி குருவானவர் பண்ணும் ஜெபங்களை உட்கருத்தாய்க் கவனித்து, அவைகளுக்கு ஆமென் என்று கூறுவதுதான். இதைப்பற்றி திட்டமான சட்டமில்லாவிட்டாலும் பாரம்பரையான வழக்கமே தேர்ந்த பிரமாணமாய் மதிக்கப்பட்டுவருகிறது.

104. வினா. பூர்வ கிறிஸ்தவர்களுக்குள் அச்சமயத்தில் நடந்த வழக்கமென்ன?

விடை. அச்சமயத்தில் ஒரு சங்கீதத்தைப் பாடிவந்தார்கள். ஆனால் இவ்வழக்கம் அச்சமயத்துக்கடுத்த முயற்சிகளில் சபையாருடைய மனதை இசையவொட்டாதபடி தடுக்கிறதாயிருக்கும். நற்கருணையைப் பெற்றவர்கள் மனத் தெளிவோடு தோத்திரம் செலுத்துவதற்கும், பெறப்போகிறவர்கள் ஏகமனதோடு ஆயத்தப்படுவதற்கும் இவ்வழக்கம் தடுக்கலாயிருக்குமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அநேகர் தேவநன்மை வாங்கும்போது கீதங்கள் தியானத்துக்கு உதவியாகவே யிருக்கும். ஆதலால் கீதங்களைப் பாடுவது அநேகருடைய மனதைப் பரவசப்படுத்தி, கவலையீனத்துக்கு விலக்கும்படியான எத்தனமானதால் அதை வழங்குவது நன்மையாக இருக்கும்.

105. வினா. எல்லாரும் நற்கருணையை வாங்கினபின் செய்யப்படுவதென்ன?

விடை. நற்கருணைமுறைமையாகிய இப்பங்கில் கர்த்தரு டைய ஜெபமும் ஏற்ற ஒரு தோத்திரமுறையும் சொல்லப்பட்டபின் குளோரியா இன் எக்ஸெல்ஸிஸ் என்ற உன்னதக்கீதம் பாட அல்லது வாசிக்கப்படும். கடைசியாகப் பூர்வ வழக்கப்படி ஆசீர்வாதம் கூறப்பட்டபின் சபையார் அனுப்பிவிடப்படுவார்கள். சில வேளைகளில் அதற்கு முன்னதாக நற்கருணை இல்லாத வேளைகளுக்கொப்பாய் குருவானவருடைய இஷ்டப்படி சுருக்க ஜெபம் ஒன்றும் வாசிக்கப்படும்.

106. வினா. நற்கருணை பின்முறையில் கர்த்தருடைய ஜெபம் முதலாவதாய் அமைக்கப்பட்டிருப்பதேன்? இப்பங்கில் தோத்திர கீர்த்தனை சேர்க்கப்பட்டிருக்கிற காரணமென்ன?

விடை. பொது ஆராதனையைச் சேர்ந்த எப்பங்கிலானாலும் சரி, கிறிஸ்துநாதருடைய ஜெபமானது தன்னிடம் தப்பிவருகிறதென்று எண்ணலாகாது. நமது ஆண்டவரடைந்த பாடுகளையும் மரணத்தையுங் கொண்டாடினபின், அவரருளிய இச்செபத்தைச் சொல்வது தகுதிதான். இப்பங்கு தோத்திரமுறையாயிருப்பதால் அச்செபத்தை தோத்திர கீர்த்தனையோடும் முடிப்பது ஏற்றது.

107. வினா. கர்த்தருடைய ஜெபம் இவ்விடத்தில் சொல்லப்படத்தக்கதுதான் என்று மெய்ப்பி.

விடை. தேவனுடைய குமாரன் தம்மை அங்கிகரிக்கிறவர்கள் எததனைபெயரோஅததனைபேருக்கும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுப்பதால் நாம் இப்போது தேவனை நமது பிதாவென்று அழைக்கலாம். அவர் நமக்குப் பாராட்டின அவருடைய சகல தயவுகளுக்காகவும் அவருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவது அவசியந்தான். அவரோடு சமாதானமாயிருப்பதால் அவருடைய ராஜ்யம் வரும்படி ஜெபிக்கத்தக்கதுதான. அவருடைய சித்தமே நமது பாக்கியமென்று நாம் இப்பொழுது பூரண நிச்சயம் பெற்றிருப்பதால் அவருடைய சித்தம் பரமண்டலத்தில் எப்படியோ அப்படியே பூமியிலேயும் செய்யப்படும்படி நாம் ஜெபிக்கலாம். ஞானாகாரத்தை நமது ஆத்துமங்களுக்கு அருளியதுபோல் சரீரப் பிழைப்பூட்டுதலுக்கென்று அன்றாடக அப்பத்தை நமக்குத் தந்தருளும்படி ஜெபிக்கலாம். கிறிஸ்துவானவர் உண்டுபண்ணிய ரட்சணியத்தைக் கொண்டாடியிருப்பதாலும் அதைக் கொண்டாடும்படி நமக்கு விரோதமாய் குற்றஞ்செய்தவர்களுக்கு மன்னித்திருப்பதாலும் நமது பாவங்கள் மன்னிக்கப்படும்படி ஜெபிக்கலாம். தீமைகள்யாவை

யும் வெறுத்துவிடுவதாய் நாம் தீர்மானம்பண்ணியிருக்க, அத்தீர் மானப்பிரகாரம் நிலைநிற்பதற்கான கிருபைக்காக ஜெபிப்பது தகுதியே.

108. **வினா.** இவ்விடத்தில் இச்செபத்தைச் சொல்லுகிறவர்களைக்குறித்து கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. நற்கருணையொழுங்கின் ஆரம்பத்தில் இது குருவானவரால்மாத்திரம் உரைக்கப்படுவதாயிருக்க, இவ்விடத்திலோ ஜனங்களும் இவர்களோடுசேர்ந்து உரைக்கிறார்கள். நாம் கிறிஸ்துவோடு ஐக்கியமாகிப்போகிறோமென்பதையுங் கர்த்தருக்குட்பட்ட சகோதரராகிய நாம் ஆவியில் ஐக்கியமுள்ளவர்களாயிருப்பதையுமபற்றி நாம் இதில் நினைப்பூட்டப்படுகிறோம்.

109. **வினா.** கர்த்தருடைய ஜெபத்துக்குப்பின் கண்டிருக்கிற இரண்டு தோத்திரங்களின் பொதுக கருத்தென்ன? இரணடுக்குமிருக்கும் விகற்பமென்ன?

விடை. கர்த்தர் நமக்கு கிருபையாயூட்டி அருளிய ஞான போசனத்துக்காகச் செலுத்தப்படும் தோத்திரமே இரண்டிலுங் கண்டிருக்கும். என்றாலுங் கிறிஸ்துவானவருடைய திருவுதிரப் புண்ணியங்களின்பேரிலுள்ள விசுவாசத்தின்மூலமாய் அருளப்படும் பாவவிமோசனத்துக்காக நாம் செலுததுந் துதி தோத்திரபலியைக் கர்த்தர் அங்கிகரித்தருளும்படியான மன்றாட்டு முந்தினதிலுண்டு. பிந்தினதிலோ, அவருடைய பரிசுத்த மார்க்கசபதின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து செய்யவேண்டிய கிரியைகளெல்லாவற்றையும் நிறைவேற்ற தேவகிருபைக்காக மன்றாடும் விண்ணப்பமுண்டு. பிந்தின தோத்திரமுறைமை பூர்வ முறைமைகளுக்குக் கொஞ்சங்குறைய ஒத்துவரும். முந்தினதோ, ஏற்ற முறையும் வேதவாக்கியத்துக்கு இணங்கினதுமாம்.

110. **வினா.** இவைகளில் முதற் ஜெபத்தைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. நாம் செய்கிற பக்திமுயற்சிகளின் நோக்கங்களில் ஒன்று இதிற் கண்டிருக்கிறது. அதாவது, நமது துதிதோத்திரபலியை அங்கிகரிக்கும்படி நாம் பராபரனை நோக்கிப் பிரார்த்திப்பதில், சரீரமும் ஆத்துமாவுமாகிய நம்மை முழுதும் புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுடைய பலியாகச் செலுத்தும்படி விரும்புவதுதான்.

111. வினு. துதி தோத்திரபபலி என்ற வார்த்தையைப் பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. பரிசுத்த நற்கருணையானது இப்பெயரால் இங்கே அழைக்கப்பட்டிருக்கிறது. ஆதித் திருச்சபையாரும் இந்நாமத்தை வழங்கிவந்தார்கள்; ரோமானித்தரோ அதைப் பலி என்ற நாமத்தால் அழைததுவருகிறார்கள். ஆனல் அது கிறிஸ்துவானவர் செலுத்திய பலியலல. ஏனெனில அப்பலி தேவனுக்குகந்ததாயும் அறைகுறையற்றதாயும் இருநததே. அப்பலியைக் கொண்டாடுவதில் நமது சமாதான பலியாக நாம் செலுத்துவதையே துதிதோத்திரப்பலி என்கிறோம். இப்பலியில் பல குறைபாடுகள் உண்டாதலால், தேவன் கிருபையாய் அதை அங்கிகரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். புதிய ஏற்பாட்டின் காலத்து ஆராதனைமுறைமைகளை பழைய ஏற்பாட்டுக் காலத்து நாமங்களால் அழைப்பது வேதாகம நடைதான். ஏசாயா தீர்க்கதரிசி கிறிஸ்துசபையின் மகிமையையும், மரண தன்மையையும் முன்னறிவித்ததில் தேவனுடைய பீடம், பலி என்னும் நாமங்களை வழஙகியிருக்கிறா (ஏசா. 60. 7. ரோ. 15. 16. பிலி.1. 17. எபி. 13. 10.). மேலும் மல்கி. 1. 11ல் சூரியன் உதிக்குந்திசைதுவக்கி அது அஸ்தமிக்கும் திசைவரைக்கும் நமது நாமம் ஜாதிகளுக்குள்ளே பெரிதாயிருக்குமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று புதிய ஏற்பாட்டுக்காலத்துத் திருச்சபையைப்பறறி உரைக்கபபட்டிருக்கிற தீர்க்கதரிசனமானது ரோமானித்தர் செலுத்தும் பூசைப்பலியைக் குறிக்குமென்று அம்மதஸ்தர் சொல்லிககொள்வார்கள். என்றாலும், பூர்வ பிதாக்களான கிறிஸ்தவர்கள் இது சிலசமயஙகளில் பொதுப்பட கிறிஸ்துமார்க்கச் செய்கைகள், முறைமைகள் அனைத்தையும் குறிக்குமென்றும், சில விஷயங்களில் முக்கியமாய் பரிசுத்த நற்கருணையைக் குறிக்குமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இதில் அவர்கள் கருத்து என்னவெனில், நமக்காக கிறிஸ்துவானவர் சிலுவையின்மீதில் ஒரேதரம் செலுத்தின பலி நாம் செலுத்தும் ஜெபதோததிரமென்பதே. இவ்விஷயத்தில் நம்முடைய சபை வேதநடைக்கும் கிறிஸ்தவர்களான முற்பிதாக்களின் உரைக்கும் ஒத்திருக்கின்றதென்று விளங்குகிறதே. (சங். 9. 14. ஓசி. 4. 2. எபி. 13. 5. வெளி. 5. 8; 8. 3. சங். 41. 2.)

112. வினு. இந்தச் செபத்தை எப்படி முடித்துக்கொள்ளுகிறோம்?

விடை. பரிசுத்த நற்கருணையை வாங்கியிருக்கிற யாவரை யும் தேவனுடைய கிருபையினாலும் பரம ஆசீர்வாததத்தினாலும் நிரப்பியருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டபின்பு, நமது சுய அபாத்திரத்தையும் நாம் செலுத்தியிருக்கிற துதிதோத்திரப பலியின் குறைவுபாடுகளையும் தாழ்மையாய் அறிக்கையிட்டு, அப்பலியைச் செலுத்தும்படி நம்மை நடத்தியருளுகிற கரா கிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் பாவமன்னிபபையும் அங்கிகரிப்பையும் பெற்றுக்கொள்ளலாமென்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தி, இதில் திரித்துவ கடவுளின் செயலால் நாம் பெற்றிருப்பவை முக்கிய நன்மைகளாயிருப்பதால் அவைக ளுக்காகத் திரித்துவநாமத்தில் துதிதோத்திரம் செலுத்தி இச் செபத்தை முடிக்கிறோம்.

113. வினா. பரிசுத்த நற்கருணைமுறைமையை குளோரியா-இன்-எக்செல்ஸிஸ் என்ற கீர்த்தனையைக்கொண்டு முடிப்பத ற்கு ஆதாரமென்ன? அது யாரால் இயற்றப்பட்டது? அதற்கு மூலமென்ன? அது தோன்றிய காலமென்ன?

விடை. நமது அருமைரட்சகர் நற்கருணையை ஏற்படுத்திய பின் ஒரு சங்கீதம் பாடி, தமது சீஷரோடு ஒலிவமலைக்குப போனாரென்று சுவிசேஷங்களில் சொல்லியிருக்கிறது (மத். 26. 30. மாற். 14. 26.). இது பஸ்கா பண்டிகையின் முடிவில் பா டப்பட்ட பெரிய அல்லேலூயா (Great Alleluia) என்ற கீத மேயன்றி வேறல்ல. கிறிஸ்தவர்களுந் தங்கள் பரம பஸ்காவிருந் தின் முடிவில் உன்னத கீதமொன்றை வாசித்து அல்லது பாடி வருகிறார்கள். பரமவாசிகள் நமதருமைரட்சகருடைய அதிசய ஜெநநவுதயத்தில் பாடின கீர்த்தனையும், ஸ்நானக யோவான் அகமலர்ந்து மினவுதலும் இதிற்சேர்த்து இசைக்கப்பட்டிருக்கின் றன (லூக். 2. 14. யோவா. 1. 26.). இதைச் செய்வித்தோனை இனமறியக் கூறுவது அரிது; என்றாலும அனுமானங்கள் பல வுண்டு. கி. பி. 150ல் ரோமாபுரியின் கண்காணியாயிருந்த தெலஸ்போரு (Telesphorus) என்று சொல்வாரும், நான்காம் நூற்றாண்டிலிருந்த பாய்கற்றியர்விலுள்ள இலாரி (Hailary of Poictiers.) என்று சொல்வாருமுண்டு. கீதமோ அதிக பூர்வ தோ ற்றமுள்ளதென்பதும், இங்கிலாந்துசபையில் 1200 வருஷங் களுக்கு முன்னதாக வழங்கிவந்திருக்கிறதென்பதும் பிரத்தி யட்சமாய் சாதிக்கப்படத்தக்கவையாம்.

114. வினா. குளோரியா-இன்-எக்செல்ஸிஸ் என்பது கூறி யது கூறலுள்ளதென்று டிசென்றர்கள் சொல்லுகிறார்களே, அதற்குச் சமாதானமென்ன?

விடை. இவைகள் வீண் வசனிப்பென்றும், கூறியது கூற லென்றும் குற்றப்படுத்துவதாயிருக்குமானால் வெளி. 7. 12லும், 5. 13லும் சொல்லப்பட்டிருக்கிற தோத்திர கீர்த்தனைகளைப் பற்றியும் அப்படியே சொல்லவேண்டியதாயிருக்கும். ஏனென்றால், இது அவைகளுக்கு ஒத்ததேசவிர வேறல்ல அப்படியிருக்க இதிலுள்ள வார்த்தைகள் வீணானவையென்றாவது, பொருளற்றவையென்றாவது, பலனைக்கெடுக்கத்தக்க வெகு வசனிப்புகளென்றாவது, கூறியது கூறலென்றாவது குற்றப்படுத்துவது சரியல்லவே. இதற்கெதிரிடையாக இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையுங் கருத்துப்பொருந்தியுஞ் சிறந்த அர்த்தமுள்ளதாயிருக்கிறது. ஆண்டவருடைய மகத்துவத்தை வெளிப்படுத்துவதால் அவரைத் துதிக்கிறோம்; அவருடைய நன்மைத்தன்மையைக் கூறியறிவிப்பதால் அவரைப் புகழுகிறோம்; நமது உதடுகளினால் அவரை மகிமைப்படுத்துகிறோம், நமது இருதயங்களில் அவருக்குத் தோத்திரஞ்செலுத்துகிறோம். இந்த மொழிகளெல்லாம் மிகவுந் தீர்க்கமாயும் உற்சாகமாயும் நாம் பாராட்டும் நன்றியறிதலையுஞ் சந்தோஷபூரிப்பையுங்காண்பிக்கத்தக்கது இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று நமது அருமை ரட்சகர் தாமே வசனித்திருக்கிறார். அவருடைய அன்பை சம்பூரணமாய் ருசித்திருந்தவர்கள் அதைப்பற்றித் தங்கள் மனதில் ஆனந்த பூரிப்பும் நன்றியறிதலும் அடைவதும், அவைகளை கெம்பீரிப்பான உதடுகளால் அறிக்கையிடுவதும் ஆச்சரியமல்லவே கிறிஸ்துவானவருடைய அன்பை எடுத்துரைத்துத் துதிக்கிறவர்களின் வாய் ஆவென்று விரிவாய் திறவுண்டிருப்பது இயல்புதானே. அப்படியிருக்கும் மொழிகளைப்பற்றி அடாதவிதமாய் வசனிப்பது ஏற்காத காரியம்.

115. வினா. நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர் என்ற வார்த்தைகளின் கருத்தென்ன?

விடை. நமது ஆண்டவராகிய கிறிஸ்துவானவரை இப்பெயர்களால் அழைக்கிறோம். வெளி. 4. 11ல் ஆண்டவரே! மகிமையையும், கனத்தையும், வல்லமையையும், ஏற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் தேவரீர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர் என்று இவரைக்குறித்து சொல்லியிருக்கிறது. இதில் சொல்லப்பட்டிருப்பது திரித்துவத்தில் ஒவ்வொருவரையுங்குறித்து தனித்தனியே சொல்லப்படக் கூடாததாயிருந்தாலும் இவரைக்குறித்து மற்றும் இடங்களில் சொல்லப்பட்டிருப்பது எப்படியோ அப்படியேதான் இங்கேயும் சொ

ல்லியிருக்கிறது. தெய்வத்தில் தெய்வமாகவே இப்படிச் சொல்லி யிருக்கிறது. ஏனெனில இவர்மாத்திரமல்ல, பிதாவாகிய தேவ னும பரிசுத்தாவியாகியதேவனுங்கூட பரிசுத்தர்தானே. ஆனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா வஸ்துக்களுக்கும் மேலான சிருஷ் டிகராகவும், சிருஷ்டிக்கப்படாத உன்னத தேவவஸ்துவாக வும் அவர் ஒருவரே பரிசுத்தா என்கிறோம். அவர்தாமே தேவனு யிருப்பதால் அவர் தாமே பரிசுத்தராயிருக்கிறா. தேவன் ஒரு வரே பரிசுத்தராயிருபபதுபோல் இவர் ஒருவரே பரிசுத்தர் என்றழைபபது சரியே. மேலும் தேவன் ஏக சக்கரவர்த்தி; அதா வது, ஒன்றான கர்த்தர் என்னப்பட்டிருபபதாலும (1தீமோ. 1. 15.) நமது இரட்சகர் தேவனுயிருபபதாலும அவரே கர்த் தரென்று அவரை நாம் அழைக்கத்தகும. அவர் ஒருவரே பரிசுத தராயிருப்பது எப்படியோ, அபபடியே அவா ஒருவரே கர்த்த ராயிருக்கிறார். தேவதூதரும் பரமவாசிகளும் பரிசுத்தவான்கள் தான்; அநேக கர்த்தர்கள் உணடென்பதும் மெய்தான் (1கொரி. 8. 5.). என்றாலும் அவாகளில் யாராகிலும் இந்தச் சிறந்த பட்டப்பெயரால் அழைக்கபபட பாத்திரரல்ல; ஏனென் றால் அவர்களுடைய பரிசுததம் குறைவானதும் பெற்றுக்கொ ள்ளப்பட்டதுமேதவிர மற்றபபடியல்ல. இவரோ, தம்மிலும் தம்மாலும் பரிசுத்தராயிருக்கிறார். அவருடைய பரிசுத்தத்திலே நாமெல்லாரும் பங்குபெற்றுக்கொள்ளுகிறோம். பரிசுத்த அகு ஸ்தீன் என்பவர் சொல்லியிருக்கிறதாவது, அவருக்கு மேலாக கர்த்தரில்லாதிருப்பதால் அவர் ஒருவரே கர்த்தர்; ஏனென்றால், பரிசுத்த ஆவியோடுங்கூட பிதாவுக்குச் சரிசமானமானவரும் என்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுமானவர் இவர் ஒருவரே; ஆதலால் அவரை மகிமைப்படுத்துவதில் நீரே பரிசுத்த ரென்றும், நீரே கர்த்தரென்றும் சொல்ல நியாயமே. நாம் பரி சுத்தவான்களையாவது தேவதூதரையாவது நோக்காமல், இவ ரையே நோக்கவேண்டுமென்று இத்தால் கற்றுக்கொள்ளவேண் டும்; ஏனென்றால் இவர் ஒருவரே பரிசுத்தர், இவர் ஒருவரே கர்த்தர், இவர் ஒருவரே பரிசுத்தநாதராகிய தேவன்.

116. வினு. ஆசீர்வாதக்கூறலின் முறைமையைப்பற்றி கவ னிக்கப்படத்தக்க விசேஷங்களெவை?

விடை. பழைய ஏற்பாட்டின் காலத்தில் சில சமயங்களில் இராசாவால் ஆசீர்வாதங் கூறப்படுவதுண்டு (2 சாமு. 6. 17, 18. 1 இரா. 8. 54, 55.). ஆனால் கர்த்தருடைய நாமத் தினலே சபையை ஆசீர்வதிப்பது ஆசாரியருக்கே உரிமைப்

பட்டது (உபா. 10. 8. நாளா. 6. 23.). நமது ஆண்டவர் தாம் பரமேறிய சமயத்தில் தமது அப்போஸ்தலரை ஆசீர் வதிக்கிறவராய் எடுத்துக்கொள்ளப்பட்டார் (லூக். 24. 50.). அவரவாகளோடு வைத்துவிட்டுப்போன ஆசீர்வாதம் அவரு டையசமாதானமே(யோவா.14.21.).சபைகூடிய கூட்டத்திலும் ஆராதனைமுடிவில் ஆசீர்வாதங்கூறப்படும்பொழுது கண்காணி யார் அத்தருணத்தில் வந்திருப்பாராஞல் அவர் தாமே அதைக் கூறுவார். ஏனென்றால், எபி. 7. 7ல் சொல்லியபடி பெரியதி ஞல் சிறியது ஆசீர்வதிக்கப்படும் என்கிறதற்கு எதிர்பேச்சொ ன்றும் இல்லையே. நற்கருணைமுறைமையில் கூறப்படும் ஆசீர் வாதத்தில் "எல்லாப புத்திக்கு மேலான தேவசமாதானம் உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காப்பாற்றக்கடவது" என்று குருவானவர் விரும்புகிருர். தேவசமாதானம் அதாவது, தேவன் நமக்குப பாராட்டியிருக்கிற நன்மைகளைபபற்றிய தக்க உணா வு எல்லாப் புத்திக்கும் மேலாயிருக்கிறது. பரிசுத்த நற்கரு ணையை அனுபவித்ததில் இந்தடவாய் தேவ அன்பை ருசித் திராதவர்களுக்கு இதின் உண்மை தெரியாது. ருசித்தறிந்த வர்களோ, இம்மையில் அதைத் தங்களுக்கு நற்பிரியமான சுகிர்த சலாக்கியமாக அறிந்துகொள்வதுமன்றி இப்பொழுது உணர்வதைப்பார்க்கிலும் மகா தீர்க்கமா யுணர்ந்துகொள்ளும் திறமையை இம்மைக்குப் பின்ஞக அடைந்துகொள்வார்கள். இருதயம் என்பது நிதானிப்புகளையும், சிந்தை என்பது விருப் பங்களையும் குறிக்கும். மேற்சொல்லிய விருப்பத்துக்கு முகாந் தரமுங் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, "தேவனையும் அவருடைய குமாரஞகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து வையும் அறிந்து நேசித்துக்கொண்டேயிருக்கும்படிக்கு" என் பதே. அவரையறிவதே மெய்யறிவு, அவரையறிவதே நித்திய ஜீவன். பின்வருகிற ஆசீர்வாதம் திரித்துவ கடவுளின் நாமத் தில் கூறப்பட்டிருக்கிறது. இது ஆசீர்வாதக் கூறலாய்மாத்திரம் இராமல் பாவவிமோசனக் கூறலாயும் ஆசீர்வாதம், சமாதானம் என்றவைகளின உறுதிவாக்காயும் இருக்கிறதென்று ஜனங் கள் அறிந்துகொள்ளவேண்டியது. ஏனென்றால், குருவானவ ரால் கூறப்படும் ஆசீர்வாதவாக்கை பெறத்தக்கவர்களாயிருக்கப் பட்ட உத்தமரை தேவன் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார். கிறி ஸ்துவானவருடைய தானுபதிகளும் பணிவிடைக்காரருமா னவர்கள் பூமியிலிருந்து கூறும் பாவவிமோசனங்கள் பரமண் டலத்திலும் உறுதிப்படும். ஆதலால் சபையார் மனிதவாக்காக மாத்திரம் எண்ணி அற்பமாய் மதிக்காமல், தேவகிருபைக்

காக மதித்து பயபக்தியோடே வரப்பற்றிக்கொள்ளும்படி மகா சாவதானமுள்ளவர்களும், குருவானவரால் உரைக்கப்படும ஆசீர்வாதவாக்கை தேவன் தாமே உறுதிப்படுத்தியருளவேண்டுமென்று பிரார்த்திக்க உட்கருத்துள்ளவர்களுமாய் இருக்க வேண்டும்.

117. வினா. நற்கருணையொழுங்கின்முடிவில் சேர்க்கப்பட்டிருக்கிற சுருக்க ஜெபங்களைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. இவைகள் தெளிவாயும் பொழிவாயுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பொதுப்பட இவைகளிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டதுதான். இவைகளில் முதலாவது ஜெபம், உலகமாறுதல பலவற்றிலும் தேவன் நம்மை தற்காத்தருளவேண்டுமென்று மன்றாட்டுள்ளது. இரண்டாவது சுருக்கஜெபத்தில், நமது சரீரமும் ஆத்துமாவுங் காப்பாற்றப்படவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம. மூன்றாவது சுருகக ஜெபத்தில், வாசித்த அல்லது விஸதரித்த அல்லது பிரசங்கிக்கபபட்ட தேவவசனத்தை ஆசீர்வாதமாக பலிககச்செய்யவேண்டுமென்று மன்றாடுகிறோம. நான்காவது சுருக்கஜெபத்தில், நாம் கையிட்டுக்கொள்ளுஞ் சகல முயற்சிகளிலுந் தேவநடத்துதலும் அனுகூலசித்தியும் அவசியமென்று ஜெபிக்கிறோம். ஐந்தாவது சுருக்க ஜெபத்தில், நாம் முன் பண்ணியிருக்கும் ஜெபங்களிலேயுண்டாயிருக்கும் அறைகுறைகளை பொறுத்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். பரி. பவுல் எபேசியருக்கெழுதின நிருபத்திலிருந்து இது சேர்க்கப்பட்டிருக்கிறது. கடைசியாக வரும் சுருக்க ஜெபத்தில், தேவனுக்கு இதமியமாய் பண்ணபபடும் நமது விண்ணப்பங்களனைத்தையும் அருளிசசெய்யவேண்டுமென்று ஜெபித்துக்கொள்ளுகிறோம். சரியான ஜெபத்தின் தன்மையைக் காட்டத்தக்க மூன்று குறிப்புகள் இதிலுண்டு. அவையாவன: கிறிஸ்துவானவருடைய நாமத்தைக்கொண்டு வேண்டிக்கொள்வதும் (யோவா. 14. 13; 16. 23.), தேவசித்தத்துக்கு ஏற்றபடி ஜெபிக்குதலும் (யோவா. 5. 14.), விசுவாசமாய்க் கேட்டுக்கொள்ளுதலுமே (மத். 21. 22. யாக். 5. 15.)

118. வினா. இவைகளில் முதலாவது சுருக்க ஜெபத்தில் உதவிசெய்து என்பதின் கருத்தென்ன?

விடை. உதவிசெய்து என்று திருப்பப்பட்டிருக்கிற மொழியானது "கூடவிருந்து" என்ற கருத்தாய் லத்தீனில் வழங்கியிருக்கிறது. ஜெபங்களிலும் விண்ணப்பங்களிலும் உதவி

செய்தல் என்பது இந்த கருத்துப்பிரகாரம் அவைகளில் நம மோடுகூட இருக்குதல் என்றாவது, அவைகளைச் செலுத்துகிற வர்களோடே வாசமாயிருக்குதல் என்றாவது பொருள்கொள் ளும். தேவன் நம்முடைய ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டு அங்கீகரித்துக் கொள்ளும்பொழுது, அவர் அப்படிக் கூடவிருக் கிறதாகச் சொல்லப்படுவதுண்டு.

119. வினா. சாவுக்கினமான இந்த ஜீவகாலத்தில் மாறிவரு கிற எல்லா சுகதுக்கங்களிலும் என்று வழங்கியிருக்கிற வாசகம் யதார்த்தமானதுதானா ?

விடை. இதற்கிசைவாக நமது ஆண்டவர் தாமே வசனித்தி ருப்பதால் அது இவ்விடத்தில் வழங்கப்பட்டிருப்பது யதார்த் தமே (லூக். 10. 30.). மேலும் பிரச. 9. 10ல் காண்க. ஆனால் தற்செயலாய் யாதேனும் உலகில் நடந்தேறிவருகிற தென்ற கருத்து இவ்வார்த்தைகளில் குறிக்கப்படமாட்டாது. தேவப்பிராமரிப்பின் செயலால் மாறிமாறிவருகிற சகலநிலைமை களுஞ் சம்பவங்களுமே இவ்வாசகத்தில் குறிக்கப்பட்டிருக கிறது.

120. வினா. முந்திக்கொண்டு என்பதின் கருத்தென்ன?

விடை. முந்திக்கொள்ளுதல் என்பதில் இரு பொருளுண்டு ஒருவன் மற்றொருவனுக்கு வழியை ஆயத்தப்படுத்தவாவது வழிமறிக்கவாவது முன் போவான். இவ்விருவிதக் கருத்தும் உவமானமாய் பிரயோகிக்கப்படத்தக்கதுதான். தேவன் நம்மை நன்மையால் வழிநடத்தும்படியாகவும் நமக்கு முந்திக்கொள் வதுண்டு. இவ்விடத்திலோ முதற்கருத்துதான் குறிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் நாம் நன்மையை நடப்பிக்கும்படி நம்மை வழிநடத்த முந்திக்கொள்வதில் நாம் தீமையிற் செல்லாதபடி நம்மைத் தடுக்கும்படி முந்திக்கொள்ளவும்வேண்டுமே.

121. வினா. தேவகிருபையும் சுயாதீன சித்தமும் ஒன்றித் திருத்தலைப்பற்றி இந்தச் சுருக்க ஜெபத்தால் நாம் அறிந்து கொள்ளத்தக்கதென்ன?

விடை. முந்திக்கொள்ளும் தேவகிருபையினாலேயல்லாது நாம் யாதொரு நற்கிரியையும் செய்யக்கூடாது. சன்மார்க்கத் துக்கும் நல்லொழுக்கத்துக்கும் அடுத்த யோக்கிய நடத்தை கள்முதலாய் நம்மில் காணப்படமாட்டாது. உதவிசெய்யும் கிருபையல்லது நமக்குள் வாசஞ்செய்கிற ஆவியானவருடைய அனுக்கிரகங்களின்றி ஞானப்பிரகாரமான நன்மை யாதொன் றையும் நாம்செய்து நடப்பிக்க நம்மால் கூடாது. இடைவிடாத

சகாயம் என்று இச்சுருக்க ஜெபத்தில் கண்டிருப்பது அந்தக் கிருபைதான். தேவனுடைய கிருபை நம்மைத் தீமைக்கு விலக்கி நன்மைக்கு உட்படுத்துவதுமாத்திரம் போதாது. இன்னமும் நாம் நன்மையைவிட்டுத் தீமையில் செல்லாதபடிக்கு தீமையைத் தடுத்து நன்மையில் நிலைப்படுத்திக்கொண்டே வரவும்வேண்டும். அப்படிச் செய்யும் கிருபை நமக்கு அனுக்கிரகிக்கப்பட்டிராவிட்டால் நாம் நன்மையில் நிலைகொளவது கூடாதகாரியம்.

122. வினு. நற்கிரியைகளைபபற்றிச் சுருக்க ஜெபத்தால் நாம் அறிந்துகொள்ளத்தக்கதென்ன?

விடை. நாங்கள் எந்தக் கிரியைகளையுஞ் செய்துவருகையில் உமக்குஅடங்கினவர்களாய் அவைகளைத்தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைபபடுத்தவும், கடைசியாய் உமதுஇரக்கத்தினலே நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளவும் என்று சொல்லியிருக்கிறது. நற்கிரியைகளின் அவசியத்தைப்பற்றி ரோமான்சபையார் போதிக்கிறவை என்னென்ன உண்டோ அவையெல்லாம் இவ்வளவுக்குள்அடக்கந்தான். கிரியைகளின்றி விசுவாசத்தினலே நீதிமானுவதைப்பற்றி சீர்திருத்தலான சபையார் ரோமான் சபையாருக்கு விரோதமாய்ப போதிக்கிறதென்னென்னவுண்டோ அவைகளும் இவ்வளவுக்குள்அடக்கந்தான். நமது நற்கிரியைகளினலே பராபரனுடைய பரிசுத்த நாமத்தை மகிமைபபடுத்த என்பதில், நற்கிரியைகள் அவசியமென்றும், நீதிமானுகுதலுக்கல்லவென்றாலும் ரட்சிப்புக்கு அவை அவசியந்தானென்பதும் பிரத்தியட்சமாயிருக்கிறது. நாம் நமது நற்கிரியைகளினலே தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினபின், கடைசியாய் அவருடைய இரக்கத்தினலே நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள என்பதில், நாம் எபபேர்ப்பட்ட கிரியைகளை நடப்பித்தாலும் அவைகளை நாம் இடைவிடாமலே நடப்பித்துக்கொண்டுவந்திருந்தாலும், அவைகளைச்சாரவும் அவைகள்மேல் பற்றுதல்வைக்கவுங்கூடாதென்றும், பராபரனுடைய இரக்கத்தின்மேலுங் கிறிஸ்துவானவருடைய புண்ணியங்களின்மேலுமே நாம் நம்பிக்கைவைக்கத் தகுமென்றும் பிரத்தியட்சமாயிருக்கிறது. நாம் கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தினல்மாத்திரமே நீதிமான்களாக்கப்படுகிறோமென்று அப்போஸ்தலன் வசனித்திருப்பதற்கு இது இசைவான தெளிவுதானல்லவா?

123. வினா. ஐந்தாவது சிருக்க ஜெபத்தில், நாம் பண்ணும் விசேஷித்த மன்றாட்டுகளைபபற்றி சொல்லியிருக்கிறதென்ன?

விடை. குருட்டுத்தனமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவைகளை என்று இதிற் சொல்லியிருக்கிறது. இது நாம் பண்ணும் விசேஷித்த மன்றாட்டுகளைபபற்றும் எல்லாவித நன்மைகளையுந் தழுவிகொள்ளத்தக்க பொதுவான மன்றாட்டுகளை நாம் தேவனுக்குச் செலுத்தினாலும், நம்மில அவரவருக்கும் தனித் தனியே தேவையான விசேஷித்த நன்மைகளுமுண்டே. அப் பேர்ப்பட்ட விஷயங்களில் நாம் கேட்கத்தக்க நன்மைகள் இவைகளென்றும் நமக்குத் திட்டமாய்த் தெரியாது. என்றாலும் சாவ ஞானமும் மகா இரக்கமுமுள்ள தேவன் குருட்டுத்தன முள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத்தெரியாதவைகளையும் நமககு அனுக்கிரகித்தருளும்படி பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

124. வினா. கிறிஸ்துமார்க்க ஆரம்பகாலத்தில் பரி. இராப் போசனம் பரிமாறப்பட்டுவந்த கால ஒழுங்கென்ன? அது தவறிப்போன காரணமென்ன? திருச்சபை சீர்திருத்தலில் ஏற்படுத் தபபட்ட ஒழுங்கென்ன?

விடை. அவர்கள் அனுதினமும் ஒருமனப்பட்டு தேவாலயத் தில் தரித்திருந்து, அங்கங்கே வீடுகளில் அப்பம்பிட்டு போஜனத்தை மகிழ்ச்சியோடுங் கபடில்லாத இருதயத்தோடும் வாங்கி, தேவனைப புகழ்ந்துகொண்டு ஜனங்களனைவரிடத்திலுங் கிருபைபெற்றிருந்தார்களென்று அப். 2. 46ல் சொல்லியிருக்கிற தற்கொப்ப, பூர்வ திருச்சபையில் பரி. இராப்போசனம் நாடோறும் பரிமாறப்பட்டுவந்தது. அப்பொழுது கிறிஸ்தவர்கள், விசுவாசத்திலும் தேவபத்தியிலும் பெலவான்களாயிருந் தார்களாதலால், பாத்திரராய் எண்ணப்பட்டவர்கள் அன்றாடகங் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கிவந்தார்கள். சுய புத்தியில் சார்ந்து பக்தி தணியலானதின்பேரிலோ அவ்வழக்கந் தவறிப்போகவும் நாடோறும் அனுசரிக்கப்பட்டுவந்த பரி. இராப்போசனம் வாரந்தோறும் ஓய்வுநாட்களிலும் பண்டிகை நாட்களிலும் அனுசரிக்கப்படவுமாயிற்று. அவ்வழக்கமானது நிலைகொள்ளாமல் வருஷத்துக்கு ஒருவிசைமாத்திரம் பரிமாறப் பட்டது. அது நமதாண்டவர் உயிர்த்தெழுந்தநாளாகிய ஈஸ் தர்பண்டிகையில்தான். திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர் களோ, பரி. இராப்போசனம் அடிக்கடி பரிமாறப்படவும், சபையார் யாவரும் அடிக்கடி அதைப் பெற்றுக்கொள்ளவும், செய்யத்தக்க முயற்சிகளை நடப்பித்துவர, மகா சாவதானமுள்ளவர்களாயிருந்தார்கள். அப்படியே மாஸ் என்கிற தனிப்

பூசைபலியிடும் வழக்கத்தை நிறுத்திப்போட்டார்கள். ஆனா லும் கர்த்தருடைய நாள்தோறும் பரி. இராப்போசனத்தைப் பரிமாறும் வழக்கத்தை நாட்டுவது அரிதாயிருந்தது. இப்போது நடந்தேறிவருகிறது.

125. வினா நற்கருணையொழுங்கின் முடிவிற் கண்டிருக் கிற ரூபிரிக்குகளைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. இந்த ரூபிரிக்குகளினால் விளங்குகிறபடி ஞாயிற்றுக் கிழமைகளிலும் பண்டிகைநாட்களிலும் பரி. நற்கருணையைப் பரிமாற ஆயத்தப்பாடாயிருக்கிறதென்றும், அப்படி பரிமாறப் படாதிருப்பது ஜனங்களுடைய குற்றந்தானென்றும்,அப்படிப் பரிமாறப்படாதிருந்தாலும் அதிலுள்ள பல பங்குகள் ராபபோ சனக்காரருக்குமாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் வாசிக்கப்படத் தக்கதாயிருப்பதால் நற்கருணை பரிமாறப்படாமலிருக்கும் ஞா யிறுகளிலும், பண்டிகைநாட்களிலும் அவைகளையாவது வாசிக் கவேண்டுமென்றுங் காட்டியிருக்கிறது.

அப்பங்குகளாவன:—

1. பத்துக்கற்பனைகள்; இவைகள் ஜனங்களுக்குப் பலதர மும் நினைப்பூட்டப்படுவது அவசியமே.
2. ஞாயிற்றுக்கிழமைகளுக்கும் திருநாட்களுக்கு முரிய விசேஷித்த சுருக்கஜெபங்கள் நிருப சுவிசேஷவாக் கியங்கள், இவைகளையின்றி, இந்தப் பண்டிகைகள் ஒன்று மற்றொன்றிலிருந்தாவது மற்றநாட்களிலிருந் தாவது வித்தியாசப்படவுமாட்டாது; அது ஏற்படுத் தப்பட்ட நோக்கத்துக்கும் பொருந்த அனுசரிக்கப் படவுமாட்டாது.
3. நிசேயா விசுவாசப்பிரமாணம்; இதில் நமது இரட்சக ருடைய தெய்வீகம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.
4. காணிக்கைவாசகம்; நமக்குண்டாயிருப்பதெல்லாம் கர் த்தருடையதென்றும், நமக்கு அவர் அருளியதிலிருந்து அவருக்கு நன்றியறிதலாக எதையாகிலும் நாம் செ லுத்துவது அவசியமென்றும், அது நமக்கு ஞாபகப் படுத்துகிறது. (1 கொரி. 16. 2.)

கடைசியாக இவ்வுலகத்திற் போராடுகிற கிறிஸ்துசபைய னைத்துக்குஞ் சீருண்டாகும்படி சொல்லிய ஜெபம்; இவைகளில் மிச்சமானவை வாசிக்கப்படுந்தருணத்தில் காற்றிக்குமேனரும் கூட இருக்கும்படி ஆதிக் கிறிஸ்தவர்களிடங் கொடுத்தார்

ன். அப்படியே இக்காலத்திலும் இவைகள் வாசிக்கப்பட்டு வருகின்றன.

முதலாம் ரூபிரிக்குக்குப் பின்வருகிற ஐந்து ரூபிரிக்குகள் ரோமான்மார்க்கப் பழுதுகளுக்கு எதிரிடையாக அமைக்கப்பட்டவைதானே. அப்பழுதுகளாவன:—குருவானவர் தனிமையில் மாஸ் என்னும் பூசை பலியிடுவது; நற்கருணையப்பத்தையும் இரசத்தையும், அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் இனமான கெட்ட நோக்கங்களுக்கென்றும் கையாடுதல்; இவை முதலியவைகளே. மேலும் அந்தந்த சேகரத்தாரில் ஒவ்வொருவனும் வருஷாவருஷம் மூன்று நாட்களிலாகிலும் நற்கருணைக்குச் சேரவேண்டுமென்று ரூபிரிக்கில் சொல்லியிருக்கிறது. அதாவது, ஈஸ்தர்பண்டிகை, பிறப்பின்பண்டிகை, பரிசுத்தாவியின்பண்டிகை என்பவைகளில்தான். யூதர் வருஷாந்தரம் புளிப்பில்லா அப்பங்களின் பண்டிகை, வாரங்களின் பண்டிகை, கூடாரப்பண்டிகை என்னும் விசேஷித்த மூன்று பண்டிகைகளில் கர்த்தருக்குமுன்பாக வந்து காணப்படவேண்டுமென்று சட்டமுண்டாயிருந்ததற்கொப்ப, இந்த ரூபிரிக்கும் அமைக்கப்பட்டிருக்கலாம். இதைப்பார்க்கிலும தொடுத்துப் பரிமாறுவது அக்காலத்தில் கூடாதகாரியமாய்க் காணப்பட்டதையிட்டும் இப்படி அமைத்திருக்கும். ஆனால் மூன்று முறைக்கதிகமாய் நற்கருணைக்குச் சேரக்கூடாதென்பது இந்த ரூபிரிக்கின் கருத்தல்ல. உத்தம கிறிஸ்தவனெவனும் இச்சட்டத்தைப் பிடித்துக்கொண்டு மூன்று விசைக்கதிகமாய நற்கருணைக்குச் சேரவேண்டியதில்லையென்று எண்ணிக்கொள்ளாதிருப்பானாக. ஒவ்வொரு போதகருந் தமது சபையார் அடிக்கடி அதற்குச் சேரசமயமும் தகுதியுமுள்ளவர்களாயிருப்பார்களானால் அவர்களுக்கு அதைப் பரிமாற சாவதானமாயிருப்பதும் அவசியம்.

126. வினா. இந்த நற்கருணைமுறைமையின் சிறப்பையும் அலங்காரத்தையுங் காண்பிக்கத்தக்க சில விசேஷங்களைச் சொல்லு?

விடை. இந்த முறைமை நூதனமாயுள்ளதல்ல, புராதனமாயுள்ளது; மனித தோற்றலான கட்டுப்பாடல்ல, வேதாகமத்துக்குப் பொருந்தியது. தேவனாகிய கர்த்தருக்கு நாம் செலுத்தும் வணக்கமும், இரட்சகருக்கு நாம பாராட்டும் அன்பும் இதில் விளங்குகிறது. உத்தம துயரத்தையும் நல்லுணர்வையும் இது நம்மில் பிறப்பிக்கத்தக்கது; பாவத்தைப்பற்றிய உணர்வை தீர்க்கமாய் நம்மில் உண்டுபண்ணத்தக்கது; சுத்தாங்கமான நல்

விருப்பங்கள் நம்மில் எழும்படி செய்கிறது; கிறிஸ்துவானவர் உண்டுபண்ணிய பாவநிவாரணையை அது எவ்வளவு உருக்கமாய்க் காட்டுகிறது! கிறிஸ்துவானவரோடு கூடவும் நாம் ஐக்கியப்பட்டிருப்பதையும் அவர்மூலமாய் பெலனையும் ஆறுதலையுஞ் செய்ததையும், பெற்றுக்கொள்வதையும்பற்றி இது எவ்வளவாய் நமக்குத் திட நிச்சயமளிக்கிறது! இது கிறிஸ்துவானவரைக் கொண்டாடுதலாய்மாத்திரமல்ல, ஜீவகாருண்ணியராகிய அவர்மூலமாய் ஆத்துமாவுக்கு ஞான உயிரையுஞ் சத்தியையும் கொடுக்கும்படி பராபரனால் ஏற்படுத்தப்பட்ட நியமமாயுமிருக்கிறது. சரீரப்பிரகாரம் நாம் ஜீவனை ரட்சித்திருக்கச் செய்யும்படி வெகுவாய் பிரயாசப்படுகிறோம் ஆத்துமப் பிரகாரம் நாம் ஞானவுயிரைப் பெற்று வாழ்ந்திருப்பதைப்பற்றிக் கவலைத்தாழ்ச்சியாயிருக்கலாமோ! இரட்சிப்படைய விரும்புகிறவர்கள் இரட்சகர் அமைத்திருக்கிற எத்தனங்களைக் கைவிடாதிருப்பார்களே!

கிறிஸ்துவானவரை நேசிக்கிறவர்கள் அவர் ஏற்படுத்திய நற்கருணைக்கு சேராதிருப்பார்களோ? இது அவர் தமது ஜீவிய முடிவில் நியமித்த ஏற்பாடல்லவா? ஆதிக்கிறிஸ்தவர்கள் இதை வெகு பத்திரமாய் அடிக்கடி வாங்கினார்களே, நாம் அடிக்கடி பாவஞ்செய்கிறவர்களாயிருக்கிறோமே அந்தப் பாவங்களினின்று நாம் சுத்திகரிக்கப்படவேண்டாமா? இயேசுகிறிஸ்துவின் ரத்தமல்லோ நம்மை எல்லாப் பாவங்களுமறச் சுத்திகரிக்கிறது. பெலவீனராகிய நமக்குப் பெலனும் உதவியும் வேண்டாமா? நம்முடைய கிருபை உனக்குப் போதும், பெலவீனத்திலே நம்முடைய பெலன் நிறைவேறுகிறது என்றாரே. நாம் கொண்டாடவும் அறிக்கையிடவும் வேண்டிய நன்மைப் பாக்கியங்கள் நமக்கு அனுகிரகிக்கப்படவேண்டுமே. கர்த்தர் நமக்குச் செய்தருளிய எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னபதிலைக் கொடுப்போம்! இரட்சணிய பாத்திரத்தை வாங்கிக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிடுவேன். இந்தமட்டும் நமது பொதுவாராதனையைப்பற்றி நாம் கவனித்திருக்க, இப்பொழுது இவ்வாராதனை முறைமையைப் பற்றிச் சொல்லத்தக்கதென்ன?

உன்னைக் காட்டினவர்கள் உன்னைப் பூரணவடிவாய்க் கட்டினார்கள் என்று நாம் தாராளமாய்ச் சொல்லத்தகுமே. (எசேக்கியேல், 27. 4.)

XIII. CHAPTER.

THE PUBLIC AND PRIVATE BAPTISMS OF INFANTS AND ADULTS.

The Introduction. The Baptismal Covenant. The Rite and the Conclusion The doctrine of Regeneration. The differance between the Baptismal offices of Infants and Adults.

பதின்மூன்றும் அதிகாரம்.

ஞானஸ்நான முறைமைகளைப்பற்றியது.

1. வினா. இங்கிலாந்துசபையிலுள்ள சமய முறைமைகள் எவை?

விடை. ஞானஸ்நானமுறைமைகள், ஞானோபதேச வினா விடையைப பின்கொண்டிருக்கும் திடபபடுததல் முறைமை, விவாக முறைமை, வியாதியஸ்தரைச் சநதிதது அவர்களுககு இராப்போசனத்தைப் பரிமாறும் முறைமை, மரித்தோரை அடக்கம்பண்ணும் முறைமை, பிரசவித்த ஸ்திரீகளின் ஸ்தோத்திரமுறைமை என்பவைகளே.

2. வினா. இம்முறைமைகள் எந்தெந்த சமயங்களுக்கடுத்தவை? இவைகளுக்கு கிறிஸ்துவானவருடைய ஜீவிய விருத்தாந்தத்தில் ஆதாரமுண்டா?

விடை. இம்முறைமைகள் நமது ஜீவியத்தில் நடந்தேறிவரும் பற்பல சமபவங்களுக்கும் நேரிடும் நானாவித சமயங்களுக்கும் ஏற்றிருப்பதுமன்றி, நமது விசுவாசத்துக்குக் காரணராகிய நமது இரட்சகர் நாட்டின மாதிரிப்படி இயற்றப்பட்டிருக்கின்றன. அவர் தினந்தோறும் தேவாலயத்திலும் ஓய்வுநாள்தோறும் ஜெபகோகுகளிலும் போதித்துத் தமது சீஷருடன் பரி. நற்கருணையை ஏற்படுத்தினதுபோலவே ஞானஸ்நானமாகிய சாக்கிரமெந்தையும் கட்டளையிட்டு, தம்மண்டை கொண்டுவரப்பட்ட குழந்தைகளை ஆசீர்வதித்தாரென்றும், தமது திருச்சமுகப் பிரசன்னத்தால் விவாகக் கட்டுப்பாட்டை கனப்படுத்தினாரென்றும், வியாதிஸ்தரைச் சந்தித்து கஸ்திப்பட்டோரைக் கைதூக்கி ஆதரித்தாரென்றும், அவருடைய தாயார் நியாயப்பிரமாண ஏற்பாடு தன்னைச் சுத்திகரித்துக்கொண்டாரென்றும், அவர் லாசருவின் மையக்குழிக்கு ஏகின சமயத்திலும் தம்மை

யே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகக் கூறினரென்றும் சுவி சேஷ சரித்திரத்தால் அறியவருகிறோம்.

3. வினு. சாக்கிரமெந்துக்களாகிய ஞானஸ்நானத்துக்கும், இராப்போசனத்துக்கும் இருக்கப்பட்ட சம்பந்த விகற்பக் குறிப்புகள் எவை?

விடை. இரண்டும் கிறிஸ்துவானவராலே ஏற்படுத்தப் பட்டவைகளாயிருப்பதாலும், காணப்படாத [illegible] ஆவிக் குரிய உள்ளான கிருபைக்குக் காணப்படுகிற புறம்பான அடையாளங்கள் இரண்டுக்கும் உண்டா[illegible] சாக் கிரமெந்துக்குரிய ஏகதன்மையில் அவை [illegible] ளவையாம். ஆனால் விகற்ப குறிப்புகள் [illegible] சபையில் சேர்க்கையாகுதலின் முத்திரையா[illegible] நிலைநிற்பதின் முத்திரையாம். முந்தினது [illegible] நடப்பது, பிந்தினது அடிக்கடியும் நடந்தேற [illegible] முந்தினது அந்தக் கொள்கை குழந்தைகளுடைய சம்[illegible] தேடப்படுகிறதில்லை; பிந்தினதில் பூரண [illegible] ன்றி ஒரு வரும் சேரலாகாது.

4. வினு. ஞானஸ்நானமுறைமை பொது [illegible] ஜெபபுஸ்த கத்தில் அமைக்கப்பட்டிருக்கிற இடத்தைப் [illegible] படத்தக்கதென்ன?

விடை. ஞானஸ்நானமானது இராப்போசனத்துக்கு முன் நடப்பதாயிருப்பதால் நற்கருணையொழுங்கு [illegible] முறையை அமைக்கவேண்டும். என்றாலும் [illegible] திருச்சபையி லும் திருச்சபை சேர்திருத்தல் நடந்தகாலத்திலே இராப்போசன மானது அன்றாடகஞ் செய்யவேண்டிய [illegible] தேவ ஆராதனையைச் சேர்ந்த முக்கிய பங்காக [illegible] பட்டதாலும், ஞானஸ்நானமானது சமயாச [illegible] நடப் பதாயிருப்பதாலும், நற்கருணையொழுங்குக்கு [illegible] பின்னே நிற்கும் படி அமைக்கப்படலாயிற்று.

5. வினு. ஞானஸ்நான முறைமைகள் எத்தனை வகை?

விடை. தேவாலயத்தில் குழந்தைகளுக்கு வெளிப்பரங்கமாய் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையும், வீடுகளில் பிள்ளை களுக்குத் தனிமையாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறை மையும், இளமைப்பருவம் கடந்து தங்களுக்காக உத்தரவாதஞ் செய்யத்தக்கவர்களுக்குக் கொடுக்கும் ஞானஸ்நான முறை மையும், ஆக மூன்று முறைமைகள் திருச்சபையால் அமைக்கப் பட்டிருக்கின்றன.

6. வினு. ஞானஸ்நானமானது திருச்சபையாரால் எவ்விதமாய் ஒப்புக்கொள்ளப்பட்டுவருகிறது?

விடை. சுவிசேஷ உடம்படிக்கைக்கு உட்படுவதற்கு முத்திரையாகிய ஞானஸ்நானமானது, நமதாண்டவரும் அவரது அப்போஸ்தலரும் போதித்திருக்கிறபடி நாம பராபரனுடைய பிள்ளைகளாகிறதற்கு ஏதுவாகிய நவ ஜென்மத்திற்கு அடையாளமாகவும், அதற்கென்று அருளப்படுகிற பரிசுத்தாவியானவரின் கிருபைமூலமாய் நாம பாவமன்னிப்பை பெற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்கிறதற்கு யத்தனமாகவும் திருச்சபையாரால் எண்ணப்பட்டுவருகிறது.

7. வினு. ஞானஸ்நானமானது இரட்சிப்புக்கு முற்றிலும் அவசியமென்று இங்கிலாந்துசபை சாதிக்கிறதோ? இதைப் பற்றி நமதாண்டவரும் அப்போஸ்தலரும் பூர்வ பிதாக்களும் சொல்லியிருக்கிற வசனிப்புகளையும், இதற்கும் யூதருக்குள் வழங்கின சுன்னத்துக்கும் உண்டாயிருக்கிற ஒத்துமையையுங்கொண்டு நியாயமானபடி நாம் அனுமானித்துக்கொள்ளத் தக்கதென்ன?

விடை. ஞானஸ்நானமின்றி இரட்சிப்பில்லையென்று சாதிக்க இங்கிலாந்துசபை துணியவில்லை. ஆனுல் இரட்சிப்புக்குக் காரணராகிய இயேசுநாதர், ஒருவன் ஜலத்தினுலும் ஆவியினுலும் பிறந்தாலொழிய தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று தெளிவுறக் கூறியிருப்பதால், மற்றச் சாக்கிரமெந்துக்கொப்பாய் இதுவும் ரட்சிப்புக்குப் பொதுப்பட அவசியமென்று எண்ணப்படுகிறது. இவ்வாக்கியத்தில் தேவனுடைய ராஜ்யம் என்பது இவ்வுலகத்திலிருக்கிற கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் குறிப்பது சதத்தியமானுல், ஞானஸ்நானம் பெருதவர்கள் அதையின்றி ரட்சிக்கப்படக்கூடாதோ என்று விசாரிக்கத்தேவையில்லை. திருச்சபைக்குப் புறத்தியில் உடம்படிக்கைக்குரிய இரட்சிப்பின் மார்க்கம் இல்லையே. அப்படியானதால், கிறிஸ்துவானவருடைய உடம்படிக்கைக்குரிய அந்த முத்திரையை அகத்தியமாய் அடையவேண்டியது அவசியந்தான். நோவாவும் அவன் குடும்பத்தாரும் ஜலப்பிரளயத்துக்கு தப்புவிக்கப்பட்டதைக்குறித்து பரி. பேதுரு வசனித்திருப்பதில் இதின் ஒப்பனையாகிய ஞானஸ்நானம் நம்மையும் இரட்சிக்கிறது என்கிருர். பரி. பவுலும் தேவன் தம்முடைய இரத்தத்தின்படியே மறுஜெநந முழுக்கினுலும், பரிசுத்தாவியுடைய புதிதாக்குதலினுலும் இரட்சித்தார் என்கிருர்.

இதையிட்டு இரத்தச்சாட்சியாகிய யுஸ்தீன் என்பவர் ஞான ஸ்நானத்தைப் பாவஙகளின் மன்னிபபுககாக மறுபிறப்பின் தொட்டியென்று அழைக்கிருர். மேலும் அப்போஸ்தலமாரு டைய காலத்தில் பரிசுத்தாவியினுல் ஞானஸ்நானம் பண்ணப படுமுன் ஜலத்தில் ஞானஸ்நானம்பண்ணப்படுகிறது வழக்க மாயிருந்தது (அப். 10 44; 11. 16.) கடைசியாக பழைய உடம் படிக்கையின் காலத்தில் சுன்னத்து முத்திரையைப பெருத ஆத்துமா தேவனுடைய சபையிலிருந்து தறிப்புண்டு போகக் கடவான் என்ற கட்டளைக்குப் புதிய உடன்படிக்கைக்குள் ளானவர்கள் தன்னீங்கலானவர்கள் என்று எணணிக்கொள்ளக் கூடாது.

8. வினு. மறுபிறப்பு என்ற மொழியால் குறிக்கப்படுகிற தென்ன? தண்ணீரால் கழுவுவது மறுஜென்மத்தைக் குறிககத் தக்கதுதான் என்பதைத் திருஷ்டாந்தப் படுத்திக் காட்டு.

விடை. சுபாவத்தின்படி பாவத்திலிருந்து தேவகோபத்துக் குட்பட்ட பிள்ளைகளாகிய மனிதஜாதியார் சுபாவந்தப்பி பாவத்துக்கு மரித்து, நீதிக்கு உயிர்க்கும் மாறுதலைக் குறிக் கும்படியாக மறுபிறப்பு என்னும் மொழி வேதவாக்கியங்களி லிருந்து திருச்சபையால் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டிருக் கிறது. இதினுலேயே நாம் ஞானஸ்நானத்தில் தேவகிருபைக் குட்பட்ட பிள்ளைகளாகிறேரம். இந்த ஞானபபிறப்பு சுபா வப் பிறப்பைப்போல ஒருவிசைமாத்திரம் நடந்துவரும். ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவன் கிருபையின் நிலைமையை விட்டுத் தவறிவிழுவதுண்டு; பின்பு குணப்படுதலினுலும் சீரான நடக்கையினுலும் தன்னைச் சீர்பபடுத்திக்கொள்வதும் உண்டு. மறுபிறபபு அல்லது இரண்டாம்விசை மறுபடியும் பிறக்கலாம் என்பது வேத உரைக்கும் ஆதிச்சபை உபதேசத் துக்கும் சரியாயிருக்கிறது. சுபாவப்படி நாம் பிறந்தவுடனே நமக்குச் செய்யப்படுவது எதுவோ அதுவே ஆத்துமப்பிரகார மான மறுபிறப்பிலும் நமக்கு நடக்கிறது. நாம் பிறந்தவுடனே தண்ணீரால் கழுவப்படுகிறேரம்; அப்படியே நாம் தேவ னுக்குப் புத்திரராய் பிறபபதிலும் தணணீரால் கழுவபபடு கிறேரம். யூதர் தங்கள் மார்க்கத்தை யடைந்த புறச்சாதியா ருக்கு ஞானஸ்நானங்கொடுப்பதை மறுஜென்மம் அல்லது புதுப்பிறப்பு என்றே அழைத்துவந்தார்கள். ஆனபடியினுலேநம தாண்டவர் நிக்கொதேமுடனே மறுபிறப்பைப்பற்றி பேசின பொழுது அவன் மிகவும் ஆச்சரியப்பட்டான்.* சபையிலும்

பாவத்தினால் பராபரனுக்குள் மரித்திருக்கிறவர்கள் மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலினாலும் அவருக்குள் மறுபடியும் பிறக்கிறார்கள். தண்ணீர் என்பது பரிசுத்தாவியானவரைக் குறிக்கத் தக்க உவமானமாகப் பல வேதவாக்கியங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. (எசா. 44 அதி. 3 யோ. 4, 14, 7. பரி. யோவா. 3 37–40)

9. வினா. உடன்படிக்கையாவதென்ன? நியாயப்பிரமாண சுவிசேஷ உடன்படிக்கைகளுக்குள் பேதமென்ன? சுவிசேஷ உடன்படிக்கைக்குரிய திட்டங்களென்னவை?

விடை. சிலாக்கியங்களையும் கடமைகளையுந் தழுவி இரு பாரிசத்தார் பண்ணிக்கொள்ளும் ஒப்பந்தமே உடன்படிக்கையாம். ஆனால் பராபரனும் மனிதனும் இரு பாரிசத்தாராகும்பொழுது கடமைகள் முழுமையும் ஒரு பாரிசத்துக்குரியவாம், சிலாக்கியங்கள் மறு பாரிசத்தையும் தழுவிநிற்கும். மத்தியஸ்தனாகிய மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கைப்படி இஸ்ரவேல் ஜனங்கள் கானான்தேசத்தை சுதந்தரமாக்கிக்கொள்ளும்பொருட்டு தேவசித்தத்திற்கு முற்றிலும் அமைந்தொழுக கடமையுற்றிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவானவருடைய மத்தியஸ்தமூலமாய் அருளப்பட்டிருக்கிற சுவிசேஷ உடன்படிக்கைப்பிரகாரம் கிறிஸ்தவர்கள் அதற்குரிய திட்டங்களை நிறைவேற்றினதின்பேரில் நித்திய ராஜ்ய சிலாக்கியத்துக்குச் சுதந்தரராகிறார்கள். விசுவாசமும் குணப்படுதலும் இதற்குரிய திட்டங்களாம். பாவமன்னிப்பு தேவாவியின் உதவி, மறுமையில் நித்திய பாக்கியமாகிய இவை சிலாக்கியங்களாம்.

10. வினா. குழந்தைகள் உதாரமான உடன்படிக்கைக்குட்படுவது நியாயமாகாதோ? அவர்கள் ஞானஸ்நானத்தின்மூலமாய் தேவனோடு உடன்படிக்கைக்குள்ளாகக்கூடாதோ?

விடை. பெற்றோராலும் மற்றவர்களாலும் பிள்ளைகளுக்காக உதார உடன்படிக்கை செய்யப்படுவது நியாயமென்பதற்கு மனித ஜாதியாரின் சர்வ சம்மதியுண்டு. பழைய ஏற்பாட்டின் காலத்தில் குழந்தைகள் பிறந்த எட்டாம் நாளிலே தேவ உத்தரவுப்பிரகாரம் சுன்னத்தின்மூலமாய் மோசேயின் உடன்படிக்கைக்குள்ளானார்கள். கண்டிப்பான அந்த உடன்படிக்கையின் காலத்தில் இவ்வாறு நடந்திருக்குமானால் வாசியான வாக்குத்தத்தங்கள்மேல் ஸ்தாபகமாயிருக்கிற வாசியான உடன்

படிக்கையின் காலத்தில் குழந்தைகள் தேவ இரக்கத்துக்கு அபாத்திரரென்று சொல்லக்கூடுவதெப்படி?

11. வினு. ஞானஸ்நானமாகிய சடங்கையும் அதற்குரிய கொள்கையையும் உபதேசத்தையும் இயேசுவானவர் தெரிந்து அமைத்தார். இந்த அமைப்பே குழந்தை ஞானஸ்நானத்துக்கு ஆதாரமாகாதா?

விடை. ஞானஸ்நானமாகிய சடங்காசாரம் உற்பத்தியான காலம் இன்னதென்று உரைப்பது எளிதல்லவென்றும், அது கிறிஸ்துவானவர் தோன்றினகாலத்துக்கு முன்னதாகவே யூதருக்குள் நெடுநாளாய் வழங்கிற்றென்றும் திட்டமுடன் கூறலாம். இச்சடங்கினுல் அஞ்ஞானிகளான முதியோரும் இளைஞரும், ஆண்களும் பெண்களும், அநேகமானபேர்கள் இஸ்ரவேலுடன்படிக்கையின் சலாக்கியத்துக்காகச் சேர்க்கப்பட்டார்கள். தெளித்தல், அமிழ்த்தல் ஆகிய இவ்விருவகையில் எவ்வகையாய் அது நடத்தப்பட்டாலும் சரியே; மறுபிறப்புக்குக் குறிப்பாக அவர்கள் வழங்கிவந்தார்கள். சுபாவ ஜென்மித்தலின்படியே குழந்தைகள் பிறந்தவுடன் கழுவப்படுகிறதினுல் ஞானப்பிறப்புக்கு குறிப்பாக இயற்றப்பட்டிருக்கிற இச்சடங்கானது குழந்தைக்குரியதாய் இருக்கக்கூடியதுதானே. அப்படியே திருச்சபையில் எக்காலமும் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றுவந்திருக்கிறதற்குப் பலவித திருஷ்டாந்தங்கள் உண்டு.

12. வினு. புதிய ஏற்பாட்டைக்கொண்டும் ஆதித்திருச்சபை சரித்திரத்தைக்கொண்டும் பாலியர் ஞானஸ்நானத்தை ஸ்தாபிக்கத்தக்க நியாயங்கள் எவை? அதை விரோதித்தவர்கள் யார்?

விடை. பாலியர் ஞானஸ்நானத்தை நேராய்க் கற்பிக்கும் உடன்பாடான பிரமாணங்களும், திருஷ்டாந்தப்படுத்திவைக்கும் தீர்க்கமான உதாரணங்களும் புதிய ஏற்பாட்டில் இல்லாவிட்டாலும், இதற்குச் அநுமதியுரைத்து ஆதாரங்காட்டும் பல நியாயங்களுண்டு. ஆண்டவர் சிறுபிள்ளைகளைத் தமது சிஷருக்கு மாதிரியாக எடுத்துரைத்திருக்கிறூர். ஒரு சமயத்தில் குழந்தையொன்றைக் கையிலெடுத்துக்கொண்டு தம்மை விசுவாசிக்கத்தக்க திறமை அதற்குண்டென்று காட்டியிருக்கிறூர். அவர் தமது சிஷருக்குக் கொடுத்த கடைசி உத்தரவில் சகல ஜாதிகளையும் சிஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்க கற்பித்திருக்கிறூரேயன்றி, குழந்தைக்குமாத்திரம் இல்லையென்று அந்த மொழியினின்று தனி நீங்கலாக பிரித்துப் பேசவில்லை.

இதற்கிசைவாய் அப்போஸ்தலன்மார் முழுவீட்டாருக்கும் ஞானஸ்நானங்கொடுத்ததாக வாசிக்கிறோம். இதில் விரகறிந்தவர்களும் பாலியரும் சேர்க்கப்பட்டிருக்கவேண்டியது. மேலும் பெந்தெகொஸ்தே நாளிலும் மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்று, திருச்சபையில் சேர்க்கப்பட்டவர்களுடைய பிள்ளைகள் வாலிபரானவர்களானபின்பு ஞானஸ்நானம் பெற்றதாகச் சரித்திரமில்லை. முதலாம் நூற்றாண்டிலேதானே சாதாரணமாய் [illegible]ற்றப்பட்டுவந்த குழந்தை பாலியர் அல்லது சிசு ஞானஸ்நானமானது (Paedo Baptism) புதுமையாய் ஏற்படுத்தப்பட்டதுமல்ல. அப்படியிருக்குமானால் உண்டாயிருக்கப்பட்ட [illegible]தலைப்பற்றி சற்றுவது கண்டுகொள்ளக்கப்பட்டிருக்கும். அப்போஸ்தல பிதாக்களான ரோமாபுரி கிளெமெந்து, [illegible] என்பவர்களும், இரண்டாம் நூற்றாண்டிலுள்ள [illegible], ஜரினியு என்பவர்களும், மூன்றாம் நூற்றாண்டி[illegible]ர்களாலும், தங்கள் காலத்தில் குழந்தை ஞானஸ்நான[illegible]த்தைக் எழுதியிருக்கிறார்கள். பைடஸ் (Fidess) என்ப[illegible] பழமொழியாக கார்தேஜ்புரிக் கண்காணியாகிய (Carthage) சிப்பிரியான் என்பவர் எழுதிய உத்தரமும் இதை [illegible]றது. தெர்த்துல்லியான் என்பவர் தற்சுய[illegible] [illegible]காந்தரத்தையிட்டு அதற்கு ஆட்சேபனை சொன்னாலும் [illegible] சாதாரணமாய் நடந்துவந்த வழக்கந்தானென்று [illegible] கொண்டதுமன்றி, அவஸ்தை ஞானஸ்நானம் கொடுக்க[illegible]யமென்று [illegible]முண்டு. எந்தச் சங்கத்த[illegible]டின் எந்தக் [illegible]லானாலும் சரி, குழந்தை ஞா[illegible]த்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதில்லை; அதைச் சட[illegible]ட்டியிருக்கிறதுமில்லை. ஆகையால் ஆதிச் சபையில் [illegible]ப்பற்றி விரோதங்களுண்டாயிருக்கவில்லை என்ப[illegible] அத்தாட்சியல்லவா? பதினாறாம் நூற்றாண்டிலிரு[illegible] [illegible]ருயிஸ் என்பவன்தான் இதைப்பற்றி முதலாவதாக ஆட்சேபனை பண்ணினவன். ஜெர்மானிய தேசத்து அனா-பாப்டிஸ்டர் பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றினவர்கள்தான். ஆனாலும் கிறிஸ்து பிறந்து 1640 வருஷத்துக்கு முன் இங்கிலாந்தில் அவர்கள் சபை யாதேனும் ஸ்தாபகமாகியிருந்ததேயில்லை.

13. வினா. ஆண்டவர் தமது சீஷருக்குக் கொடுத்த உத்தரவு குழந்தை ஞானஸ்நானத்துக்கு ஆதாரமற்றதா? அவ்வுத்தரவின் கருத்தை விளக்கிச்சொல்லு.

விடை. சகல ஜாதிகளையும் போதித்து சீஷராக்கி, அவர்களு

க்கு ஞானஸ்நானங்கொடுங்கள் என்று கிறிஸ்துவானவர் தமது சீஷருக்குக் கற்பித்ததால் போதிக்கப்படத்தக்கவர்களே ஞானஸ்நானம் பெறத் தக்கவர்களென்று ஆட்சேபிக்கப்படும். போதித்து என்ற மொழி மூலபாஷையில் சீஷராக்கி என்று கண்டிருப்பதால் அவ்வாட்சேபனை தரித்துநில்லாது. (அப். 14. 21. காண்க.)

14. வினா. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று பரி. மாற்கு உரைத்திருப்பது குழந்தை ஞானஸ்நானத்துக்கு ஆட்சேபமாகுமா?

விடை. குழந்தைகள் விசுவாசிக்கும் சத்துவமற்றிருப்பதால் அவைகளுக்கு ஞானஸநானம் கொடுக்கலாகாதென்று இவ்வாக்கியத்தைக்கொண்டு பாப்திஸ்தர் ஆட்சேபிப்பதுண்டு. ஆனால் இவ்வாக்கியம் குழந்தை ஞானஸ்நானத்தை மறுக்காமல் சுவிசேஷத்தைக் காதாரக்கேட்டும் விசுவாசிக்க அசட்டராயிருப்பவர்களுக்கு ஞானஸ்நானம் கொடாதபடிக்கே திட்டமாய் எச்சரிக்கிறது. ஆட்சேபனைக்காரர் விசுவாசியாதவனேனெனில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்ற இரண்டாம் பங்கையும் சேர்த்துக் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனிக்குமிடத்து இவ்வாக்கியம் குழந்தை ஞானஸ்நானத்தை மறுக்குமானால் குழந்தைகள் இரட்சிபபுக்கு நீங்கலானவர்களாகத் தீர்க்கிறதென்றுஞ் சாதிக்கவேண்டியதாகுமே.

15. வினா. ஞானஸ்நானம் பெறாதவர்களாய் மரித்துப்போன குழந்தைகளின் வருங்கால நிலைமையைப்பற்றி நாம் அறிந்துகொள்ளத்தக்கதென்ன?

விடை. குழந்தைகள் கருமபாவத்தால் கறைப்பட இனமற்றவர்களாயிருக்க, அவர்களுக்கு நடக்கும் புகல் ஏதாகிலுமுண்டோவென்று சிலர் கேட்பார்கள். ஆனால் இதை ஆராய்ந்து நிதானிப்பது நமக்கடுத்ததல்ல. இப்படிச்செய்வது துணிகரமே தவிர வேறல்ல. *பெற்றோரின் அசட்டையால் ஞானஸ்நானம் பெறாதிருந்தாலும் தங்களில்தானே யாதொரு கருமபாவமுமற்றிருக்குங் குழந்தைகளை ஞானஸ்நானமின்றி இரட்சிக்க தேவன் சித்தமாவாரென்று சொல்லலாம். அவ்விஷயத்தில் அசட்டையாயிருந்த பெற்றோருக்கோ இவ்வித தாக்ஷணியம் கிடையாது. இரட்சிப்புக்குக் காரணரானவர் தாமே ஞானஸ்

* ஸ்திரியானும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபோது அந்த வீட்டுக்குழந்தைகளும் பெற்றிருக்கவேண்டியதே.

ஞானம்பெறுவது அவசியமென்று கற்பித்திருக்க, ஞானஸ்நா னம் பெறுதவர்களுக்கு இரட்சிப்புக் கிடைக்குமோ என்று விசாரிக்கவேண்டியதில்லையே. கற்பிக்கப்பட்டபடி செய்வதே நம்முடைய கடமை. செய்யாதேபோனால் நேரிடும் மோசத்தை உத்தரித்து நீங்குவதே நமக்குக் கடமை. மோசே தன பிள்ளையை [illegible] அசதியாயிருந்தபொழுது தேவகோபம் அக்குழந்தையின் பேரிலல்ல, அவன்பேரில் எழும்பிற்று. ஞானஸ்நானம் [illegible] குழந்தைகளைப்பற்றியும் இவ்வாறே கருதிக்கொள்ளத்தகும்.

16 வினா [illegible] சபையில் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு விசேஷித்த [illegible] தாகிலும் நியமிக்கப்பட்டிருந்ததா? பிற்காலத்தில் நடந்த[illegible]?

விடை. அக்காலத்தில் பற்பல துன்பங்களுண்டாயிருந்ததால் ஞானஸ்நானத்துக்கென்று தனிமையான யாதொரு இடம் அமைக்கப்படவில்லை. மேலும் உஷ்ணதேசத்தில் இந்தச் சடங்கு [illegible] பட்டபடியால் அப்போஸ்தல காலத்தில் ஞானஸ்நானம் [illegible] கிறவன் சரீரமுழுவதும் தண்ணீரில் முழுகப்படுவது [illegible]. ஆற்றிலாவது, குளத்திலாவது, ஏரியிலாவது இப்படிச் செய்யப்பட்டது. தண்ணீரை வாரி அல்லது தெளித்து [illegible] னங் கொடுப்பதும் அக்காலத்து வழக்கந்தான் [illegible]. பிற்காலங்களில் ஞானஸ்நானத்தொட்டிகள் [illegible] ாயின. ஞானஸ்நானத்தின்மூலமாய் நமது திருச்சபை [illegible] ர்க்கப்படுவதைக் காண்பிக்கும்படி ஞானஸ்நானத் [illegible] னது கோவில் உட்புறமுகப்பில் பதிக்கப்பட்டிருக்க[illegible].

17 வினா [illegible] ஸ்நானமாகிய சாக்கிரமெந்துக்கு அவசியம் தேவையான [illegible] காரியங்களெவை? பற்பல காலங்களில் அது எவ்விதமுறைமைகளோடு நிறைவேற்றப்பட்டது? திருச்சபை [illegible] நடப்பித்தவர்கள் அம்முறைமைகளில் தெரிந்துகொண்டவைகளும் தள்ளிப்போட்டவைகளும் எவை?

விடை. [illegible] வழங்கப்படுவதும் ஒழுங்காய் நியமனம் பெற்ற தேவ பணிவிடைக்காரரொருவரால் குறிக்கப்பட்ட மொழிமுறைப்படி நடத்தப்படுவதுமேதவிர, அதிகமொன்றும் இச்சாக்கிரமெந்துக்கு அவசியம் தேவையானதல்லவென்பது [illegible] டைய ஏற்பாட்டால் விளங்கத்தக்கது. என்றாலும், இது [illegible] ந்தொட்டு தருந்த ஜெபமுறைமைகளோடும்

பற்பலவிடங்களில் பலவித சடங்காசாரங்களோடும் நிறை வேற்றப்பட்டுவந்தது.

18. வினா. ஞானஸ்நானங்கொடுக்கும் விதம் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறதா? அப்போஸ்தலமாருடைய மாதிரியாவது சடங்கின் அர்த்தமாவது ஞானஸ்நானம் என்ற மொழியின் பயனாவது தெளித்தலைவிட முக்கல் அல்லது முக்கலைவிடத்தெளித்தல் விசேஷமானதென்று காட்டுமா?

விடை. ஞானஸ்நானங்கொடுக்கும விதம் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கவில்லை; அப்போஸ்தலமாா அதை நிறைவேற்றிய வழக்கத்தைத் தெளிவித்தலும் அரிது. யோவான்ஸ்நானன் ஜலத்தை தெளித்திருப்பானென்று சாதிக்க ஏதுவில்லை. அப்போஸ்தலமார்களின் சங்கற்பத்துக்குத் தக்கதாக இருவகையையும் அவர்கள் கையாடியிருப்பார்களென்று நிச்சயிக்கலாம். 3000 பேர் ஒருமிக்க ஞானஸ்நானம் பெற்றபொழுது ஜலம் தெளிக்கப்பட்டிருக்கலாமென்று துணிந்துரைக்கலாம். இங்கிலாந்து சபையானது இருவகையையும் ஒப்புக்கொண்டு, குருவானவர் தமது இஷ்டப்படி இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்ளவிட்டிருக்கிறது இருவகையும் அச்சாக்கிரமெந்தின் தன்மையை விகற்பமின்றி தெரியக்காட்டுகின்றன. எப்படியெனில், தேகம் ஜலத்தால் தெளிக்கப்படுதல் ஆத்துமா பாவத்தினின்று சுத்திகரிக்கப்படுவதற்கு முன்குறிப்பாட. முக்கலானது ஞானஸ்நானத்தின் மூலமாய் கிறிஸ்துவுடனேகூட மரணத்துக்குள் அடக்கம்பண்ணபபடுதலுக்கும், முக்கிய பின் எடுத்தல் புதிய ஜீவனுக்குயிர்த்தலுக்கும் அடையாளங்களாம். ஞானஸ்நானம் என்ற மொழி மூலபாஷையில் தோய்த்த . . ற்றர்த்தமானாலும், தண்ணீரவார்த்துச் சுத்தம்பண்ணுதல் என்ற கருத்தாய் பெரும்பாலும் பிரயோகிக்கப்படுவதுண்டு.

19. வினா. சபையாரில் யாதொருவனால் கொடுக்கப்படுவதாகிய ஞானஸ்நானத்தைப்பற்றி இங்கிலாந்துசபையாரும் ரோமான்சபையாரும் முறையே கொண்டிருக்கிற கொள்கை என்ன?

விடை. இச்சாக்கிரமெந்து ஏற்படுத்தப்பட்டதைப் பற்றிச் சொல்லிய சுவிசேஷ சரித்திரத்தால் விளங்குகிறபடி ஞானஸ்நானங்கொடுத்தல் குருவுத்தியோகத்துக்கடுத்த தொழில்தான். ஆனால் ரோமான்மார்க்கத்தார் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் முற்றிலும் அவசியமென்று ஒப்புக்கொண்டுவருவதால் அவசிய வேளைகளில் சபையாரிலொருவன் ஞானஸ்நானம் கொடுக்க

லாமென்றெண்ணிவருகிறார்கள். இவ்வழக்கம் எக்காலமும் நடக்கவில்லை. ஞானஸ்நானமானது தகாதவிதமாய்க் கொடுக்கப்பட்டாலும் கிருபை நிச்சயமாகவே அருளப்படுமென்று வார்த்தைப்பாடுண்டாயிராததாலும், குருவுத்தியோகத்தைத் திருட்டளவாய் நிறைவேற்றுவதைப்பார்க்கிலும் தேவனோடு உடன்படிக்கைக்குள்ளாகத் தகுந்த சிலாக்கியமும் சமயமும் உள்ள குழந்தைகளை இலவசமான அவருடைய இரக்கத்துக்கு ஒப்பளிப்பதே உத்தமமாயிருப்பதாலும், அப்படிச்செய்வது சரியல்ல. இங்கிலாந்து சபையானது வீடுகளில் குழந்தைகள் ஞானஸ்நானமானது அந்தச் சபைக்குருவானவரால், அவரில்லாதகாலத்தில் ஒழுங்காய்க் குருப்பட்டமடைந்த வேறொருவர் சமுகத்திலிருந்தால் அவரால், கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானம்பண்ணியிருக்கிறது. ஞானஸ்நானம் கொடுக்க அதிகாரமற்றவர்கள் அச்சடங்கைப் பிரயோகிப்பார்களானால், மற்றப்பிராட்டஸ்டண்டுகள் கொடுக்கும் ஞானஸ்நானம் பலமுள்ளதாகவென்று அங்கீகரிக்கப்படலாகும். இது சிப்பிரியானகால முதல் சாதிக்கப்பட்டுவந்தது.

20. வினா. ஞானத்தகப்பன்மாரை ஏற்படுத்தும் வழக்கத்துக்கு ஆதாரமென்ன? அவர்கள் பிணையாளிகள் என்னப்படுவானேன்?

விடை. ஞானஸ்நான முறைமைக்கொப்பாய ஞானத்தாய் தகப்பன்மாரை ஏற்படுத்துகிற வழக்கமும் யூதருக்குள் முதலாவதாய் உற்பத்தியாயிருந்தது. இவர்கள் சில சமயங்களில் பெற்றோருடைய அநுமதியின்றிப் பிள்ளைகளுக்கு நாமந்தரித்து, அவர்கள் தேவனோடு உடன்படிக்கைக்குள்ளானதற்குச் சாட்சியிடுவார்கள். இவர்கள் குழந்தைகளுக்காகப் பிணைப்பட்டு வாக்குத்தத்தம்பண்ணுவதாலும், அவர்களைக் கிறிஸ்துமார்க்கத்தின்படி தேவபக்தியிலும் சன்மார்க்கத்திலும் வளர்ப்போமென்று திருச்சபைக்கு உறுதிசொல்லுகிறபடியாலும், இவர்கள் பிணையாளிகள் எனப்படுவார்கள்.

21. வினா. இந்தப் பிள்ளை இதற்குமுன் ஞானஸ்நானம் பெற்றதோ, இல்லையோ என்று குருவானவர் கேட்பானேன்?

விடை. ஒருதரம் ஞானஸ்நானம்பெற்ற குழந்தைக்கு திரும்பவும் ஞானஸ்நானங் கொடுப்பது தேவவசனத்துக்கும் திருச்சபை வழக்கத்துக்கும் மாறுபாடாயிருக்கும். ஞானஸ்நானம் பெற்ற வெகுபேரைப் பற்றி வேதாகமத்தில் சொல்லியிருந்தாலும் இரண்டாந்தரம் ஞானஸ்நானம் பெற்ற யாதொருவனைப்

பற்றியாகிலும் சொல்லியிருக்கிறதேயில்லை. இராப்போசனத்தை அடிக்கடி வாங்கினதாக தெளிவாய்ச சொல்லியிருக்கிறது. ஞானஸ்நானமோ திருச்சபையில் உட்பிரவேசிககுதலைக காண்பிக்கும் சடங்காக இருக்கிறது. அதில் நாம் ஒரேதரமாகப பிரவேசிக்கவேண்டியதாயிருக்க, திரும்பத திரும்ப ஞானஸ்நானங்கொடுபபது தகுதியலலவே. ஒரே விசுவாசமென்றும, ஒரே ஞானஸ்நானமென்றும், ஒரேதரம வெளிச்சமாக்கப்படுதலென்றும் சொல்லப்பட்டிருப்பவை யெல்லாம இதையே பற்றுமென்று காணப்படுகிறது.

22. வினு. இந்த முறைமையை எத்தனை பங்காய் வகுக்கலாம்?

விடை. மூன்று பங்காய் வகுக்கலாம். முகவுரைப்பாடான முந்தினது, சுவிசேஷ வாசகத்துக்குச் எச்சரிப்புக்கும் பின்வருகிற ஜெபம்வரைக்குமுள்ளது. ஆயத்தப்பாடான இரண்டாவது பங்கு, பிரதிக்கினைகளையும் அறிக்கைகளையும் தழுவிக் கொள்ளும். கடைசியான மூன்றாவது பங்கு, ஞானஸ்நானம் கொடுத்தலும் முடிவுரையுமுள்ளது

23. வினு. இந்த முறைமை எப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? அது சரிதானு?

விடை. ஜெபத்தைக்கொண்டு துவக்கிக்கொள்வதற்கான எச்சரிப்போடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இச்சாக்கிரமத்தில் தேவனுக்கும மனிதனுக்கும் உடன்படிக்கைப்பொருத்தம உண்டாயிருக்கிறது. இவ்விருதிறத்தாரையும கவனிக்குமிடத்து, ஒருவருக்கொருவர் நிகரிடத்தக்கவர்களல்லவே. சர்வ வல்லமையுள்ள தேவன அற்பரும அபாத்திரருமான பாவிகளுக்கு இதினமூலமாய் நன்மைபாராட்டச் சித்தமாயிருப்பது இலவசமான சுத்த இரக்கமேதவிர வேறல்லவே. ஆதலால் ஜெபத்தோடே இம்முறைமை ஆரம்பித்துக்கொள்வது சரிதான. ஞானஸ்நானம பெறுவதற்குக் கொண்டுவரும் குழந்தையின் பாவத்தைக் கவனித்தாலும் இது விளங்கும் அது பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டு அக்கிரமத்திலே பிறந்த பிள்ளை. முற்காலத்தில் அப்போஸ்தலரும இக்காலத்திலுள்ள அவர்கள் பின்னடியாரும் அப்படியே போதித்துவருகிறார்கள் சொசோனியரும், அன–பாபதிஸ்தரும் இதை மறுத்தாலும் வேதாகமத்தில் இது தெளிவாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது (சங் 51 5. ரோம. 5. 12-18. யோபு. 14. 4, 5.). அஞ்ஞானிகள்முதலாய் இயற்கை அறிவால் அதை ஒப்புக்கொண்டார்கள். யூதரும் கிறிஸ

தவர்களும் வெளியரங்கமாய் இப்படி அறிக்கையிட்டிருக்கிறார்கள். ஜென்மபாவத்தை மறுத்தலானது குழந்தை ஞானஸ்நானத்தைப் புறக்கணித்தலுக்குக் காரணமானதால் திருச்சபையானது ஞானஸ்நானமுறைமைக்கு அஸ்திபாரமாக இதை அமைக்க அவசியமாயிற்று. குழந்தையினுடைய சுபாவநிலைமை இவ்வாறிருக்க, ஜெபத்தைக்கொண்டு இம்முறைமையைத் துவக்கிக்கொள்வதற்கான எச்சரிப்பு முதலில் கண்டிருப்பது நிச்சயம் யதார்த்தமே.

24 வி. "ஜீவனுள்ள அவயவமாகும்படி" என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதை விசுவாசிக்கவும் அதிலடங்கிய வாக்குத்தத்தங்களையும் சிலாக்கியங்களையும் அங்கீகரிக்கவும், அதில் விதிக்கப்பட்டிருக்கிற சட்டதிட்டப்பிரகாரம் உண்மையாய் நடக்கவுந்தக்க உயிரான விசுவாசத்தையுள்ளதாயிருத்தல் என்பதே.

25. வி. ஞானஸ்நானத்தின் அவசியத்தைக் காட்டத்தக்கதாக இம்முறைமையில் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. எல்லாமனிதரும் பாவமுடையவர்களாய் உற்பவித்துப் பிறந்திருப்பதால் சுபாவமாய் ஒருவரும் புத்திரசுவிகாரத்துக்குப் பாத்திரரல்ல. மேலும் ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்தாவியினாலும் மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டுப் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடாதென்பது கிறிஸ்துநாதரால் அமைக்கப்பட்ட விதிமுறையாயிருக்கிறது (யோபு 3.5. 1பேது. 3. அதி.) நாம் ஜென்மபாவத்தால் நமக்குண்டாயிருக்கிற தீட்டைச் சுத்திகரிப்பதற்கு என்று ஜலத்தினாலும் பரிசுத்தாவியினாலும் பண்ணப்படும் ஞானஸ்நானமே தேவனால் அருளப்பட்டிருக்கிறது. ஜலம் புறம்பாகவும், பரிசுத்தாவி உள்ளாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படியாகத்தானே. ஆகையால் ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களுங்கூட ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று பரி. பேதுரு கற்பித்தார். (அப் 10 47, 48)

26 வி. ஞானஸ்நானமானது திவ்விய அமைப்பாய் அருளப்பட்டிருப்பது தகுதிதானென்று காட்டு.

விடை. மனிதருடைய சுபாவநிலைமை ஈடேறமாட்டாத நிர்ப்பாக்ய நிலைமைக்குட்பட்டதாதலால் தேவ கிருபையினால் மாத்திரமே அவர்கள் சீர்பொருந்தவேண்டியதாயிற்று. இவ்வி

தம் நடந்தேறும்பொருட்டு ஞானஸ்நானமே ஏற்ற யத்தனம். ஏனென்றால் மனிதரால் யாதொன்றும் ஆகமாட்டாதென்றும், கைம்மாறில்லாத தேவனுடைய இலவசமான தயாள செயலாலேயே ரட்சிப்பு நடந்தேறக்கூடுமென்றும், ஞானஸ்நானத்தால் தெளிவாய் அறியவருகிறோம். தேவனே எல்லாமாயிருக்கிறார். மனிதனோ ஒன்றுமில்லை என்பது இதில் நமக்குத் தெளிவாயும் தீர்க்கமாயும் புகட்டப்பட்டிருக்கிறது. புறம்பான அடையாளத்தை கவனித்தாலும் சரி; மேற்சொல்லிய போதக சரித்திரம் பிரத்தியட்சமாகவே விளங்கும். ஏனெனில், புறம்பான அடையாளம் தன்னில்தானே பலமாக பற்றாது. உள்ளான கிருபை முற்றிலும் தேவச்செயலாலேதானே நடக்கிறது. மறுஜென்மத்தை நடப்பிக்கவல்லவர் தேவனொருவரே.

27. வினா. இந்த முறைமையில் காணப்படுகிற முதலாம் சுருக்க ஜெபத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிற இரு முன்னடையாளங்கள் எவை? அவை ஞானஸ்நானத்துக்கு முன்குறிப்புகள்தானோ?

விடை. நோவாவும் அவன் குடும்பத்தாரும் ஜலப்பிரளயத்தினின்று தற்காக்கப்பட்டதும், இஸ்ரவேலர் சிவந்தசமுத்திரத்தில் அழியாமல் வழிநடத்தப்பட்டதுமாகிய இவ்விரண்டுமே ஞானஸ்நானத்துக்கு முன்னடையாளங்களாக இச்செபத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரண்டும் அப்படியே இருந்தன என்பதற்கு வேத அனுமதி உண்டாயிருக்கிறது. எப்படியென்றால், இஸ்ரவேலரைப்பற்றி எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள் என்று கொரிந்தியர் 2ல் பரி. பவுல் வசனித்திருக்கிறார். இதன் கருத்தென்னவெனில், அவர்கள் மோசேயின் சீஷரானதுபோல நாமும் கிறிஸ்தமான ஞானஸ்நானத்தினால் நமது இரட்சகருக்குச் சீஷராகிறோம் என்பதும், இந்தடவாய் அந்த ஞானஸ்நானம் இதற்கு முன்னடையாளமாயிருந்ததென்பதுமே. மேலும் நோவாவைப்பற்றி அந்தப் பேழையில் கொஞ்சம்பேராகிய எட்டு ஆத்துமாக்கள் உட்பட்டு தண்ணீரால் காப்பாற்றப்பட்டார்கள். இதன் ஒப்பனையாகிய ஞானஸ்நானம் மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனுடனே நல்மனச்சாட்சியான உடன்படிக்கையாயிருந்து, இப்போது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலால் இரட்சிக்கிறது என்று பரிசுத்த பேதுரு வசனித்திருக்கிறார். (1 பேது. 3. 20, 21)

28 வினா. நோவா ஜலப்பிரளயத்தினின்று தற்காக்கப்பட்டது ஞானஸ்நானத்துக்கு முன்னடையாளமாய் இருப்பது எப்படி?

விடை. மிகவும் [illegible] தண்ணீர் நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் [illegible] கொண்டதுபோல, கிறிஸ்தமான குழந்தையானது பாவப் பிரவாகத்தால் சூழப்பட்டிருக்கிறது. நோவா [illegible] ஆழியில் [illegible] போகாமல் சமாதானத்தோடே [illegible] தற்காக்கப்பட்டது போல, [illegible] சந்நிதிக்குட்பட்ட உத்தம கிறிஸ்தவன் [illegible] முடிவுபரியந்தம் [illegible] எல்லா மாறுதல்களிலும் [illegible] காப்பாற்றப்பட்டு, முடிவில் [illegible] பாவத்தில் என்னும் நிலைகொள்ளும்படியாக [illegible].

29. வினா. [illegible] "பாவ மன்னிப்பு அடையும்படி" [illegible] என்ன?

விடை. பாவங்களின் மன்னிப்பு அடையும்படி என்று இங்கே [illegible] குழந்தைகளுக்கு உண்டாயிருக்கும் [illegible] காயப்பாவத்துக்குக் காரணமும் [illegible], பாவங்களொன்று பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது. அல்லவென்று, பாவங்களின் மன்னிப்பு அல்லது பாவமன்னிப்பென்பது பாவங்கள் மன்னிக்கப்படும் நிலைமையைக் குறிக்கலாம். அந்த நிலைமை எதுவென்றால், ஜென்மப்பாவங்களும் காமப்பாவங்களும் மன்னிக்கப்படத்தக்கதாகிய பாவமன்னிப்புக் கிடைக்கும்பொருட்டு கிறிஸ்துவினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற உடன்படிக்கையின் நிலைமைதான். குழந்தைகள் ஞானஸ்நானத்தில் அந்த நிலைமைக்கே உடன்படுகிறார்கள். அவர்களுடைய ஜென்மப்பாவம் மன்னிக்கப்பட்டுப்போகிறது. அவர்கள் தங்கள் கடமைப்படி நடந்துகொண்டுவருவார்களேயானால் இனிமேல் செய்யும் காமப்பாவங்களும் மன்னிக்கப்படுமென்ற நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

30 வினா. மறுஜென்மம் அல்லது மறுபிறப்பு என்பதும், ஜலத்தினாலும் பரிசுத்தாவியினாலும் புதிதாகப் பிறக்குதல் என்பதும் எவ்வாறு வழங்கப்படும்?

விடை. இவ்விரண்டும் ஒரே பொருளுடையதாக வேதாகமத்திலும் அவ்வாறே ஞானஸ்நான முறைமையின் ஆரம்பத்

திலும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாக்கிரமெந்தில் நமக்கருளப்படுகிற உள்ளான கிருபை ஞானோபதேசத்தில் கண்டிருக்கிறபடி பாவத்துக்கு இறப்பும், நீதிக்குப் புதுப்பிறப்புமே. எப்படியெனில், சுபாவத்தின்படி பாவத்திலே பிறந்து தேவகோபத்துக்குட்பட்ட பிள்ளைகளாகிய நாம், அதினாலே தேவகிருபைக்குட்பட்ட பிள்ளைகளாகிறோம். மேலும் கிறிஸ்து பிதாவின் மகிமையினாலே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் நவமான ஜீவனில் நடந்துகொள்ளும்படிக்கு ஞானஸ்நானத்தில் அவரோடேகூட மரணத்துக்குள் அடக்கம் பண்ணப்பட்டோம் என்று ரோமர், 6. 4ல் பரி. பவுல் வசனித்திருக்கிறதுமன்றி, ஞானஸ்நானத்தை மறுஜெனன முழுக்கென்று தீத்து, 3. 5ல் அழைத்தும் இருக்கிறார். எவ்வாறெனில், ஞானஸ்நானத்தில் புதுப்பிறப்புக்கொப்பான மாறுதலை பரிசுத்தாவியானவர் நம்மில் நடந்தேறச்செய்கிறார். ஆதாமுக்குள் நமக்குண்டாயிருக்கப்பட்ட சுபாவ நிலைமையிலிருந்து கிறிஸ்துவுக்குளளான ஆவிக்குரிய நிலைமையில் நம்மை உட்படுத்துகிறார். சகல ஆவியின் அனுக்கிரகமும் இந்த மறுஜென்மத்திற்கு ஒத்தாயிருக்கிறது. சரீரப்பிரகாரம் நாம் ஒரேதரமாய் பிறப்பதுபோல ஞானப்பிரகாரமும் நாம் ஒரேதரம் பிறக்கிறோம். ஒரேதரம் ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, ஒரேதரம் மறுஜென்மம் அடைகிறோம். ஞானஸ்நானம் பெறும்பொழுது இந்த மறுஜெனன நிலைமைக்குள்ளாகிறோம்.

31. வினா. பரி. மாற்கு சுவிசேஷத்திலிருந்து எடுத்துரைக்கப்பட்டிருக்கிற சுவிசேஷ வாசகத்தைப்பற்றிச் சொல்லப்படும் ஆட்சேபனையும், அந்த ஆட்சேபனைக்குச் சமாதானமுமென்ன?

விடை. அந்தச் சுவிசேஷ வாசகத்தில் குறித்துப்பேசப்பட்டிருக்கிற குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கென்று கொண்டுவரப்பட்டதில்லையே. அப்படியிருக்க, அந்தச் சுவிசேஷவாசகம் இம்முறைமையில் வாசிக்கப்படுவது தகுதியோ என்பதுதான் சொல்லப்படும் ஆட்சேபனை. இவ்வாட்சேபனை சொல்லத்தகாதென்று எளிதாய்த் தெரியவரும். உடன்படிக்கையானது இருதிறத்தாருடைய சம்மதியின்பேரில் நடக்கவேண்டிய காரியம். ஞானஸ்நான உடன்படிக்கையானது சர்வவல்லமைபொருந்திய கடவுளுக்கும் ஞானஸ்நானம்பண்ணப்படும் குழந்தைக்கும் நடுவாயச் செய்யப்படுவதாயிருக்க, அக்குழந்தையின் பிணையாளிகள் அவ்வுடன்படிக்கையில்

என்பதின் தேவனுடைய தயவுள்ள சித்தத்தையும் உடன்ப டிக்கைக்குட்பட்டிருக்க, அவர் கொண்டிருக்கும் இதமிய மான பட்சத்தைப்பற்றி ஆறுதலான உறுதிப்பாட்டையும் பெற றுக்கொள்ளத் அவசியமே அவர்களுக்குத் திருப்திகரமுண டாகும்பொருட்டே தேவனுடைய [illegible] [illegible] [illegible] எடுத்து [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மிகவும் தகுதி.

32 வினா பெற்றோர்கள் பிணையாளிகளாக ஏற்படாததற்குக் காரணமென்ன?

விடை 29-ம் கேள்வியில் இவ்வாறு கற்பிக்கப்பட்டிருக்கிறது என்னவெனில் அவர்கள் சபைக்கு முன்னமே தானே தேவனால் ஒப்புவிக்கப்பட்டிருப்பதால் பாகத்திலும் அதனுடைய உடன்படிக்கை அவர்களால் ஏலாது வேறு பிணையாளிகளாக ஏற்படுகிறவர்கள் தங்கள்மேல் வாங்கிக் கொள்ளும் கடமையைப்பற்றி அறிவீனமுள்ளவர்களாயா, வது, கவலைத்தாட்சியுள்ளவர்களாயாவது காணப்படாதபடிக்கு, அக்கேள்வியிலேதானே இராப்போசனக்காரரே அப்படிப்பட் டவர்களாகத்தக்குமென்றும் கற்பித்திருக்கிறது.

33 வினா குழந்தைகளுக்காகப் பிணையாளிகளை ஏற்படுத்தும் வழக்கத்துக்கு அனுமதியுண்டா?

விடை. ரோமருக்குள் நியாயாதிபதியாகிறவன் தன் உத்தியோகத்தைக் கொண்டுசெலுத்துவதாய் தானே பிரமாணிக்க கொடுக்கக்கூடாத காரணங்களுண்டாயிருக்குமானால் பிரதியாரொருவனைக்கொண்டு அப்படிச் செய்வது வழக்கம். யூதருக்குள் அவர்கள் மார்க்கத்தை அமைய வரும் புரசாதியால் வயதாகியிருப்பானேயானால் அவன் நியாயஸ்தலமுன்பாகக் கொண்டுவரப்பட்டு தான மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொண்டு நடப்பதாய் வாக்குக்கொடுப்பது வழக்கம். இறுவனாயிருந்தாலோ கிறிஸ்தவர்களுக்குள் பிணையாளிகள் செய்வதுபோல் நியாயஸ்தலத்தார் தாங்களே தங்கள்பேருக்கு அவ்வார்த்தைப்பாடு சொல்லப்படுவதுண்டு. இளவரசுகள் ராஜபட்டம் சூட்டப்படுவதாயிருக்கும்பொழுது யாதாமொரு பிரபு அவர்களுக்குப் பிரதியாய்நின்று, வழக்கப்படி ஆணைசத்தியம் கொடுப்பதுண்டு. இவ்வாறே முதலாளிகளுக்கு ஸ்தானாபதிகளும், இளைஞோருக்கு அவர்கள்மேல் விசாரிப்புப்பெற்றிருக்கும் பெரியோரும் பிரதிகளை நியமித்தாய நடந்துகொள்ளுவார்கள். ஞானஸ்நானம்பெறும் குழந்தைகளுக்குப் பிணையாளிகள் ஏற்படுத்துவதும் இவ்வழக்கத்துக்கு ஒத்ததேயல்லாது வேறல்ல.

34. வினா. ஞானஸ்நானத்தில் பண்ணப்படும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு பிணையாளிகளல்ல பிள்ளைகளே கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவைகளை மீறிநடப்பதாலுண்டாகும் பயனை இவர்களே உத்தரிப்பார்களென்றும் காட்டு.

விடை. விவாகப் பிரமாணங்கள் அவ்விவாக விஷயத்தில் காரியக்காரனாக ஏற்பட்டிருக்கும் ஸ்தானாதிபதியையாவது, உடன்படிக்கைத் திட்டங்கள் அவ்வுடன்படிக்கை விஷயத்தில் காரியக்காரனாக நின்று உறுதிபேசி கையொப்பம்வைக்கும் ஸ்தானாதிபதியையாவது சாராமல், இவர்களால் குறிக்கப்படும் அந்தந்த வகையாரைச் சாருமாப்போல ஞானஸ்நானத்தில் பண்ணப்படும் உடன்படிக்கைகளை நிறைவேற்றப் பிணையாளிகளல்ல, பிள்ளைகளே கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படியே 6-ம் எட்வார்டின் முதலாம் புஸ்தகத்தில் இப்பொழுது பிணையாளிகளிடத்தில் கேட்கப்படுகிற கேள்விகள் பிள்ளைகளிடத்திலேயே கேட்கப்படும்படியாக ரூபிக்கப் பிரமாணம் உண்டு. நமது ஜெபபுஸ்தகத்திலும் அவைகள் முன்னிலை ஒருமையில் வினவப்பட்டிருக்கிறதே. ஆகையால் வாக்குத்

தத்தங்களை நிறைவேற்றுங் கடமையும் அத்தாலுண்டாகும் சலாக்கியங்களும் அந்தந்தப் பிள்ளைகளுக்கே உரிமை.

35 வினா. பிள்ளைகளினாலே பிணையாளிகளிடத்தில் விளைவுப்பட்ட நெருக்கமான உறவுகளைத் தொடுத்த செல்வங்கள் புதிய ஏற்பாட்டிலுண்டா?

விடை. இவைகளுக்குத் தெளிவான திருஷ்டாந்தங்கள் அப் போஸ்தலனானவருடைய சரித்திரத்திலுண்டு. ஞானஸ்நானமா னது தேவனோடு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை அதா வது தேவனுக்கு முன்பாக நல்மனச்சாட்சியின் உத்தரவென்று பரி. பேதுரு அப்போஸ்தலர் சொல்லுகிறார் (1 பேது 3. 21). குழந் தைகள் தேவனுடைய கிறிஸ்துவானவருடைய ஊழியத்துக்கு பிரதிஷ்டையாக்கப்படும்பொழுது அவர்கள் பிசாசையும் அதின் சகல கிரியைகளையும் வெறுத்துவிடுவதும், கிறிஸ்து மார்க்க உபதேசங்களை விசுவாசிப்பதாய் அறிக்கையிடுவதும், ஜீவகாலபரியந்தம் அவருடைய பரிசுத்த சித்தத்தையும் கற்ப னைகளையும் கைக்கொள்ள வாக்குக்கொடுப்பதும் தகுதிதான்.

36. வினா. ஞானஸ்நான முறைமையில் கேள்விகள் கேட் கப்படுகிறதற்கு பூர்வ திருச்சபை வழக்க அனுமதியுண்டா? இறி னேயுஸ், சிப்பிரியான், தெர்த்துலியான், ஸிரில், அகுஸ்தீன் முதலியவர்கள் எழுதிய ஆகமங்களிலுள்ள பற்பல வாக்கியங் களால் விளக்குகிறபடி, பூர்வ சபையில் ஞானஸ்நானம் பெற வருகிறவர்களிடத்தில் கேட்கப்படும் கேள்விகள் நான்கும் தகுந்தவைகளும் உகந்தவைகளுமாமென்று காட்டு.

விடை. (1) நாம் தேவனோடு உடன்படிக்கைக்குட்படும்பொ ழுது அவருக்குச் சத்துருக்களும் மித்துருக்களுமாயிருப்பவர்க ளெவர்களோ அவர்கள் நமக்கும் அப்படியே இருக்கிறார்கள். ஏனென்றால், அவருக்குச் சத்துருக்களாயிருக்கிறவர்கள் நமது இரட்சிப்புக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். குழந்தைகள் சுபாவப்படி பிசாசுக்கு அடிமைகளாயிருக்கிறபடியாலும் அவர் கள் பிசாசுக்குப் பணிவிடைசெய்யும்படி இதுவரை உடன்பட் டிருந்தாலும் அதற்குடன்படும்படி உலக ஆடம்பரத்தாலும் மகி மையாலும் மாம்ச இச்சையாலும் இழுப்புண்கிற இனமாயிருப் பதாலும் அவர்களைத் தேவனுக்கு ஏற்கனவேதானே படைப் பதும் இவைகளையெல்லாம் ஜென்மப்பகையாய்ப் பகைக் கும்படி இவைகள் அவர்களுக்குச் சத்துராதிகளென்று ஒப்புக் கொள்ளச்செய்வதும் அவசியமான காரியம். ஆதலால் முதலா வது கேள்வி யதார்த்தமானதுதான் என்பது பிரத்தியக்ஷமே.

(2) ஞானஸ்நானம் பெறுகிறவர்களிடத்தில் காணப்பட வேண்டிய அவசிய லட்சணம் விசுவாசமே (பரி. மாற். 16. 16.). பிலிப்பு மந்திரிக்கு ஞானஸ்நானங் கொடுக்கு முன் அவன் முழுஇருதயத்தோடும் விசுவாசித்தால் தகுமென்று சொல்ல, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருக்கிறதை விசுவாசிக்கிறேனென்று அவன் அறிக்கையிட்டதின் பேரில்தான் ஞானஸ்நானங்கொடுத்தான் (அப. 8. 37.) ஆதலால் கிறிஸ்துமார்க்கப் பிரமாணங்களெல்லாவற்றையும் விசுவாசிக்கிறாயா என்று இரண்டாவது கேட்கப்படும் கேள்வியும் யதார்த்தமானதுதான் என்பது பிரத்தியக்ஷமே.

(3) ஞானஸ்நானம் பெறுகிறவன் கிறிஸ்தவர்கள் கூட்டத்தைச் சேர விருப்பமுள்ளவனாயிருப்பதும் அவசியம். கிறிஸ்துமார்க்கத்தின் தன்மை இதனால் விளங்குகிறது. தன் விருப்பத்தோடும் உற்சாகத்தோடும் வருகிறவர்களையே தேவனு அங்கிகரிப்பார். கட்டாயமொன்றுமில்லை. ஆதலால் இந்த விசுவாசத்தில் நீ ஞானஸ்நானம்பெற விரும்புகிறாயா என்ற கேள்வி கேட்கப்படுவது யதார்த்தமே.

(4) ஞானஸ்நானம் பெற்றவன் நவமான ஜீவனில் நடந்து கொள்ளவேண்டுமென்று ரோமர், 6. 4ல் பரி. பவுல் சொல்லியிருக்கிறார். ஆதலால் கடைசியாக கேட்கப்படும் நான்காவது கேள்வியும் யதார்த்தமானதுதான் என்பது பிரத்தியக்ஷமே.

37. வினா. இந்தக் கேள்விகளில் கடைசிக் கேள்விக்குச் சொல்லப்படுகிற மறுஉத்தரவென்ன? அதின் கருத்தென்ன?

விடை. அப்படியே நடந்துகொள்வேன் என்பதே. இது ஞானோபதேசத்திலுள்ள ஓர் கேள்விக்குச் சரியானதுமாய் அத்தால் விளங்குகிறதுமாயிருக்கிறது. அக்கேள்விக்கு அப்படியே நினைக்கிறேன், தேவனுடைய உதவியினாலே அப்படியே செய்வேன் என்று மறுஉத்தரவு சொல்லப்படும். ஞானஸ்நானத்தினால் நாம் நமது சுபாவத்திறமைக்கு மிஞ்சின கடமைக்குட்படுகிறோம். ஆனாலும் அந்த ஞானஸ்நானமே நமக்குத் தேவையான தேவசகாயத்தை அளிக்கும் யத்தனமாயிருக்கிறது.

38. வினா. ஞானத்தாய் தகப்பன்மார்பேரில் விழுங்கடமை இவர்கள் செய்து நிறைவேற்றுவதற்கு அரிதாமோ?

விடை. இப்படி ஆட்சேபிப்பாருமுண்டு; குழந்தைகளின் பாவங்களுக்கு இவர்களே உத்தரவாதிகளென்று நினைக்கிறவர்களுமுண்டு. ஆனாலிது சரியல்ல. இவர்கள் பண்ணின வாக்குத

தத்தத்தையும் அறிக்கையையும் படித்தறியத்தக்க திராணியான வுடனே அப்பிள்ளைகளுக்கு அதைப் புகட்டுவதே இவர்கள் மேல்விழுந்த கடமை. அக்கடமைகளை இவன் ஒத்துக்கொண்டு அவற்றிற்கேற்க நடந்தாலுஞ்சரி, நடவாவிட்டாலுஞ்சரி, அவனே அதற்கு உத்தரவாதம்பண்ணவேண்டும். ஏனென்றால், பிரதிக்கினைகள் இவனுக்காகச் செய்யப்பட்டவைகளேயல்லது வேறல்ல. அவைகளுக்காகச்செய்த வாக்குத்தத்தத்தின்படி நீ விசுவாசிக்கவும் நடக்கவும் கடனாளியென்று நினைக்கிறதில்லையா என்று கேட்கும்போது, அக்கேள்விக்குப் பிரதியுத்தாரமாக, அப்படியே நினைக்கிறேன், தேவனுடைய உதவியினால் அப்படியே செய்வேன் என்று சொல்லும்படி ஞானோபதேச வினாவிடையில் போதித்திருப்பது இதைத் திருஷ்டாந்தப்படுத்தி ருக்கும்.

39. வினா பிரதிக்கினைகள் பண்ணப்பட்டபிற்பாடு வருகிற விண்ணப்பங்களின் பொருளென்ன?

விடை. ஞானஸ்நானத்திலுண்டாகும் கிருபையானது தக்க விதமாய்க் கையாடப்பட்டாலொழிய மற்றப்படி தவறிப் போகத்தக்கதாயிருக்குமாதலால், திருச்சபையானது குழந்தைக்காகத் தேவனை நோக்கிப் பின்வரும் விண்ணப்பங்களைப் பண்ணுகிறதுண்டு. இவைகளிலடங்கிய மன்றாட்டுகள் நான்கு வகையாம்.

(1) மறுஜென்மத்தை நடப்பிக்கவும்,

(2) பரிசுத்தம் நடந்தேறச்செய்யவும்,

(3) ஆத்தும சத்துருக்களை மடிவிக்கும்படி பெலப்படுத்தவும்;

(4) கிருபையில் வர்த்தியடையச்செய்யவும் வேண்டுமென்பதே.

40. வினா இவைகளின் முதலாம் விண்ணப்பத்திலே அடங்கிய உவமானத்தைத் தெளிவாய்க் காட்டு.

விடை. பழைய ஆதாம் என்பது நமது ஆதித்தாய் தந்தையால் நமக்கு லபித்தஜென்மச் சீர்கேட்டையும், புதிய மனிதன் என்பது இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய ஆவியானவரால் நம்மில் நடந்தேறும் கிருபாகரச் சீர்ப்பாட்டையும் குறிக்கும். மேலும், பழைய ஆதாம் அடக்கம்பண்ணப்படுதல் என்று சொல்லப்படுவது ஜென்மச்சீர்கேடு மடிவிக்கப்படுவதையும், நற்சீரும் புதிய தன்மையும் வர்த்தித்துப் பெலப்படுதலையும் குறிக்கும்.

41. வினா. குழந்தையின் சுத்திகரிப்புஜெபம் வைக்கப் பட்டிருக்கிற இடத்தில், முன்னிருந்த பேயோட்டும் மந்திரத் தைச் சொல்லு.

விடை. "அசுத்தமான ஆவியே, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஞானஸ்நானத்தினாலே தமது சரீரமாகிய பரிசுத்த சபையின் அவயவமாகும்படி வரவழைத்திருக்கிற இந் தக் குழந்தையைவிட்டு வெளியே புறப்பட்டுப்போ என்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன். சபிக்கப்பட்ட ஆவியே, உனக்கு விதிக் கப்பட்டிருக்கிற தீர்ப்பையும் தண்டனையையும் நினைத்துக் கொண்டு, உனக்கும் உன் தூதருக்கும் நீங்கள் சாபமாய்ப் போகும்படி குறிக்கப்பட்ட நாள் சமீபமாயிருக்கிறபடியால் கிறிஸ்து தமது ரத்தத்தால் மீட்டுக்கொண்டு பரிசுத்த ஞானஸ் நானத்தின்மூலமாய் தமது மந்தையின் ஆட்டுக்குட்டியாகச் சேர்க்கப்படுகிற இந்தப் பிள்ளையின்மேல் உன் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு இனிமேல் ஒருபோதும் துணியாதிருப்பா யாக" என்பதே.

42. வினா. ஞானஸ்நான முறைமையில் வரும் பிரதிஷ்டை ஜெபத்தில் கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. தேவன் தமது ஆவியானவரைக்கொண்டு ஜலத்தைப் பிரதிஷ்டைசெய்தருளும்படி நாம் பிரார்த்திக்கவேண்டுவது மிகவும் அவசியமான காரியம். ஆதியிலே தேவனுடைய ஆவி யானவர் ஜலத்தின்மேல் அசைவாடுகையிலே பூமியானது இருளாலும் அந்தகாரத்தினாலும் பரவப்பட்டிருந்தது (ஆதி 1. 2.). ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடினதின் பேரிலே சடமானது ஒழுங்கீனமும் சீர்தாழ்ச்சியுமற ஒழுங் காயும் அலங்காரமாயும் சீர்பெறலாயிற்று. முதலாஞ் சிருஷ் டிப்பில் நடந்ததுபோலவே கிறிஸ்தமான புது சிருஷ்டிப்பிலும் ஆவியானவர் ஜலத்தின்மீது அசைவாடுவதால் ஒளியையும் உயி ரையும் பிறப்பிக்கிறார். பாவத்தால் விளைந்த குழப்பத்துக்கும் அந்தகாரத்துக்கும் பதிலாக நல்லொழுக்கங்களையும் சீர்பாகத் தையும் உண்டுபண்ணுகிறார். ஞானஸ்நானம் பலமாகப்படும் படி ஆவியானவருடைய செயல் இன்றியமையாய் நடந்தேறு வது அவசியமாயிருப்பதால், அந்த ஆவியானவருடைய அருள னுக்கிரகத்தால் ஜலம் பிரதிஷ்டையாகும்படி ஜெபஞ்செய்வது மிகவும் அவசியமே. இப்பிரதிஷ்டைஜெபத்துக்கு ஒத்ததான ஒன்று ஆதிசபையிலும் வழங்கப்பட்டுவந்தது.

43. வினா. ஜலத்தைப் பிரயோகிப்பதில் இங்கிலாந்து சபைக்கும் ரோமான்சபைக்குமிருக்கிற வித்தியாசமென்ன?

விடை. நமது சபை, ஜலத்தைப் பிரதிஷ்டை செய்யும்படி ஒரு ஜெபம்மாத்திரம்பண்ணி அதைத் தனிமையில் வழங்குவதுண்டு. ரோமான்சபையாரோ, இதுவுமல்லாமல் வேறே நூதனமும் அவபக்தியுமான சடங்காசாரங்களையும் சேர்த்து நடப்பித்துவருகிறார்கள். ஜலத்திற்குள் சுவாசமிடுதல், ஜலத்தின் மேல் விளக்கை அணைத்தல், ஜலத்துக்குள் எண்ணெய் முதலியவைகளைக் கலந்துகொள்ளுதல், இவை முதலியவைகளே அச்சடங்குகளாம். நமது சபையில் கீழ்தேசத்துச் சபைகளெங்கும் நடந்துவந்த சாதாரணமான பூர்வ வழக்கப்பிரகாரம் ஞானஸ்நானங் கொடுக்கும் ஒவ்வொரு சமயத்திலும் புதுஜலம் கொண்டுவந்து பிரதிஷ்டைசெய்வது வழக்கம். ரோமான்சபையாரோ, ஜலத்தை மாற்றிக்கொள்வதும் ஞானஸ்நானத்தொட்டியிலுள்ள ஜலம் முற்றிலும் கெட்டுப்போவதாயிருந்தால் புது ஜலம்கொண்டுவந்து பிரதிஷ்டை செய்வதுமுண்டு.

44. வினா. ஞானஸ்நானம் கொடுக்குஞ்சமயமே கிறிஸ்தமான நாமத்தைப் பெற்றுக்கொள்வதற்கேற்ற சமயமென்று காட்டு.

விடை. குழந்தைக்கு விசேஷித்த சடங்கு யாதொன்றை நடத்தும் நாளில் பேர்தரிப்பது எச்சாதியிலுமுள்ள வழக்கந்தான். யூதர் தங்கள் குழந்தைகளுக்கு சுன்னத்துபண்ணப்படும் நாளிலே பேரிடுவதுண்டு (ஆதி. 21. 3, 4. பரி. லூக். 1. 59, 60; 2. 21.). அவர்களுடைய சுன்னத்தே ஞானஸ்நானமென்னும் முறைமையாக நமது இரட்சகரால் மாற்றப்பட்டது. என்றாலும், நாமம் கொடுக்கப்படுங் காலத்தைப்பற்றியாவது வழக்கத்தைப்பற்றியாவது வேறுபாடு யாதொன்றும் ஆண்டவரால் அமைக்கப்படவில்லை. ஆதிக் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கும்போதே நாமமிடுவதுண்டு. அவ்வழக்கப்பிரகாரமே நடந்தேறிக்கொண்டேவருகிறது.

45. வினா. ஞானஸ்நானத்தில் தண்ணீரைத் தெளிப்பதற்கு பழைய ஏற்பாட்டு வாக்கியங்களில் எங்கேயாவது அனுமதியுண்டா?

விடை. உண்டு. ஏசாயா, 52. 15-ம் வாக்கியத்திலும், எசேக். 36. 25லும் "ங்கள் சுத்தமாகும்படி உங்கள்பேரிலே சுத்தமான தண்ணீரைத் தெளிப்போமென்று சொல்லியிருக்

கிறது. மேலும் பரி. பவுல் இருதயம் துன்மனச்சாட்சியறத் தெளிக்கப்பட்டவர்களாகவும் என்று எபி. 10. 22ல் சொலலி யிருப்பதினாலே, இந்த விசேஷத்தைச் சுட்டித்தான் பேசியிருக கிறாரென்று நாம் அறிந்துகொள்ளவேண்டியது.

46. **வினா.** ஞானஸ்நானம் கொடுப்பதில் குருவானவர் கவ னித்துக்கொள்ளவேண்டியதென்ன?

விடை. கிறிஸ்துவானவர் அருளிய கட்டளைப்பிரகாரம் அச் செய்கை கழுவுதலாயிருக்கும்படியாகவும் இங்கிலாந்துசபை விதிப்பிரகாரம் அது தண்ணீரை வார்த்துவிடுதலாயிருக்கத்தக்க தாகவும் குருவானவர் கவனமாயிருக்கவேண்டியது. மேலும் முழுக்காட்டி ஞானஸ்நானங்கொடுப்பதாய் ஆதிச்சபையில் நடந்துவந்த வழக்கம் இன்னபடியென்று தெரியாமலிருப்ப தால், தண்ணீரைத் தெளிப்பதே போதுமென்று நிதானிக்கத் தகும்.

47. **வினா.** திரித்துவ நாமத்தால் ஞானஸ்நானங் கொடுபப தாய்க் காண்பிக்கப்படுகிறதென்ன?

விடை. பிதா, குமாரன், பரிசுத்தாவியாகிய திரித்துவ கடவு ளின் அனுமதியாலும் அதிகாரத்தாலும் ஞானஸ்நானங் கொடுக் கபபடுகிறதென்பது மாத்திரமல்ல; பரிசுதத திரிததுவத்தைப் பற்றிய விசுவாசத்துக்குள் நாம் ஞானஸ்நானம் பெறுகிறோ மென்பதும், சகல கள்ள மார்க்கஙகளுக்கும் வேறுபட ஏகத் துவத்தில் திரித்துவமும் திரித்துவத்தில ஏகததுவமும் உண டென்பதை விசுவாசிக்கிறவாகளின் கூட்டத்தில் சேர்க்கப படுகிறோமென்பதும் அத்தால் காண்பிக்கப்படும்.

48. **வினா.** சிலுவையின் அடையாளத்தை வரையும் வழக்கத துக்கு அனுமதிகொடுக்கத்தக்கது ஏதாகிலுமுண்டா?

விடை. சிலுவை அடையாளத்தை நெற்றியில் வரைவது ஆதிக்கிறிஸ்தவர்களுக்குள்ளும் நடநதுவந்தது. இதற்கு அனு மதிகொடுக்கத்தக்க ஓர் வழக்கமுமுண்டு. எஜமான்களும் சேனு பதிகளும் தங்கள் ஊழியக்காரரும் சேவகரும் இன்னாரைச் சேர்ந்தவர்களென்று விளங்கும்பொருட்டு அவர்கள் நாமங்களை அல்லது குறிப்புகளை நெற்றியில் வரைவதுண்டு. வெளி. 7. 3 14. 1லும் தேவதூதன் இவ்வழக்கத்தையே குறித்துப பேசி யிருக்கலாம். மேலும் இவ்வதிகாரத்தில் கண்டிருககிறபடி கிறிஸ்துவினுடையவர்கள் அவருடைய அடையாளத்தை தங்கள் நெற்றியில் கொண்டிருந்ததுபோல அவருடைய சத்த

ராதியாகிய மிருகத்தினடையாளத்தை நெற்றியில்கொண்டிருந் தவர்களுமுண்டாயிருந்தார்கள். இவைகளை அனுமதியாகக் கொண்டே ஞானஸ்நானத்தில் சிலுவையடையாளத்தை வரை யும் வழக்கம் நடப்பிக்கப்படலாயிற்று.

49. வினு. இந்த அடையாளம் தெரிந்துகொள்ளப்பட்ட தற்கு விசேஷித்த காரணமுண்டோ?

விடை. உண்டு. பூர்வக் கிறிஸ்தவர்கள் குருசிலறையுண்ட ஒரு குற்றவாளியைத் தொழுகிறதாய் அஞ்ஞானிகளால் இக ழப்பட்டார்கள். அப்படி அவர்கள் இகழ்ச்சியாகச் சொன் னதை தங்களுக்குப் புகழ்ச்சியாக தாங்கள் ஒப்புக்கொண் டார்களென்று மெய்ப்பிக்கவும், கிறிஸ்துவின் சிலுவையிலேயே தங்களுக்கு மேன்மை பாராட்டலுண்டென்று காண்பிக்கத்தக்க தாகவும் (கலா. 6. 14.) இப்படிச் சிலுவையினடையாளத்தை வரையும் வழக்கத்தையும் நடத்திவந்தார்கள்

50. வினு. சிலுவையினடையாளம் வரையப்படும் நோக் கத்தைப்பற்றித் தெரியக்காட்டியிருக்கிறதென்ன?

விடை. அவ்வடையாளத்தால் வரையப்படும் குழந்தையா னது கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதற்கு அவ்வடையாளம் அத்தாட்சியாயி ருக்கிறதுமன்றி, அது கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத் தையே வெட்கமற அறிக்கையிட்டு அவர் கொடியின்கீழ் போரா செய்து அவருக்குள் உண்மையாய் நிலைத்திருக்கவேண்டுமென்ப தற்குக் குறிப்பாகவுமிருக்கிறதென்று காட்டியிருக்கிறது. ஆனால் அடையாளத்தில்தானே யாதொரு விசேஷமுண்டென்றும் குறிக்கப்படும் பொருளை நிறைவேற்ற அது பல பாகமுள்ள தென்றும் நாம் சாதிக்கிறதில்லை. ஆனால் வெட்கக்குறி வெ ளிப்படையாய் துலங்குமிடமான நெற்றியிலே அவ்வடையா ளம் வரையப்படுவதால் அவ்வடையாளத்தைப்பெற்ற குழந்தை கிறிஸ்துஇயேசுவின் சிலுவைக்காக வெட்கப்படாமலும், அவர் பேரிலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட கூச்சங்கொள்ளாம லும் இருக்கவேண்டுமென்பதே காரியம். என்றாலும் ரோமான் சபை சீர்கேட்டுக்குட்பட்டதின்பேரில் இச்சடங்கும் அடங் காதவிதமாய்ப் பிரயோகிக்கப்படலாயிற்று. திருச்சபை சீர் திருத்தலை நடப்பித்தவர்கள் பாப்புமார்க்க சீர்கேட்டுக்குட் பட்ட பலவற்றைத் தள்ளிப்போட்டாலும் இதையோ அமைத் துக்கொண்டார்கள். ஆனால் அம்மார்க்க அவபக்திக்கும் தப்ப றைக்கும் ஒத்துமையற எதிரிடையாகவும் ஆதிச்சபை ஆசாரப்

பிரகாரமாகவும் பிரயோகிக்கப்படவேண்டுமென்று கண்டிப்பாய் விதித்திருக்கிறார்கள்.

51. **வின**. சிலுவையின் அடையாளத்தை வரைதலானது ஞானஸ்நானமாகிய சாக்கிரமெந்தோடு அகத்திய சம்பந்தம பொருந்தியதா?

விடை. இல்லை. 30-ம் கனோனில் இது திட்டமாய் தாண பிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனறால், குருவானவர் பிள்ளையை ஜலத்தில் முழுக்காட்டி அல்லது அதின்மேல் ஜலத்தை வார்த்து பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினால் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேனென்று சொல்வதினால் ஞானஸ்நானத்தோடுதானே நிறைவாகரமாயும் குறையறவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்பின போடப்படுகிற சிலுவையடையாளத்தால் ஏதாவது கூடுகிறதுமில்லை, போடபபடாதிருப்பதால் குறைவதுமில்லை. ஆதிச்சபையில் அவ்வடையாளம் முந்திப் போடப்படுவதும், அப்புறம் ஞானஸ்நானம கொடுப்பதும் வழக்கமாயிருந்தது. இப்பொழுதோ, நமது சபையில் அவ்வொழுங்கு மாற்றப்பட்டு சிலுவையடையாளம் பிந்தி வரையப்படலாகிறது. மேற்சொல்லிய கனோனில்தானே தெளிவாய்க் கண்டிருக்கிறபடி பிள்ளையானது சிலுவையினடையாளத்தில் உண்டாயிருக்கும் யாதொரு சக்தியாலல்ல, அவ்வடையாளம் வரையப்படு முன்னதாகவே கிறிஸ்துவின் மந்தையில் பூரண அவயவமாகச் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. வீடுகளில் பிள்ளைகளுக்குத் தனிமையாகக் கொடுக்கபபடும் ஞானஸ்நான முறைமையில் அவ்வடையாளம வரையபபடாததற்கு முகாந்தரம் இதுவே.

52. **வின**. சிலுவையினடையாளத்தைபபற்றி முன்னமே ஆட்சேபிக்கப்பட்டதும், அவ்வாட்சேபனைக்குச சமாதானம் உரைக்கப்பட்டதுமுண்டா?

விடை. ஞானஸ்நான முறைமையைப்பற்றிய பல ஆட்சேபனைகளில் இதுவும் ஒன்று. ஆம்ற்றன் கோர்ட்டு என்னுமிடத்தில் கூடிய சங்கத்திலொருவர் (Dr. Burgess) அவ்வாட்சேபனைகள் நிவர்த்தியாகத்தக்கதாக திருச்சபையின் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டினார் சிலுவையடையாளத்தைப்பற்றிய ஆட்சேபனைக்கு வேறொருவர் (Bf. Rudd.) பிரபு ரித தானரே அறிக்கையிட்டபடி மேரையாயுஞ் சாதுவாயுந் தகுந்த கருத்தோடுந் தீர்க்கமான நியாயங்களோடுமெடுத்து உரைத்ததின் பேரில், பிரபு ரித்தாரைச் சேர்ந்திருக்கும் முதலாளியாயிருந்

தவர் (Dr Reynalds.) தாம அதைப்பற்றி இனி ஒருக்காலும் எதிர்பேசுவதில்லையென்பதாய்ச் சாதித்தார்.

53. வினு. ஞானஸ்நானம்பெறும் குழந்தைகளை மறுஜென்மமடைந்தவாகளென்று அழைபபதற்கு வேத அனுமதி உண்டா?

விடை. அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணபபடடிருபபதாலும் (1 கொரி. 12 13.) கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக எத்தனைபேர் ஞானஸ்நானம் பெற்ருர்களோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களாயிருப்பதாலும் (கலா. 3. 27)

54. வினு. மறுஜென்மம் என்ற மொழியின் பயனைப்பற்றி சிலர் சொல்லும் தாறபரியமென்ன?

விடை. மறுஜென்மம் என்பது ஞானஸ்நான உடம்படிக்கையை மீறி மார்க்கத்தைவிட்டு மருளவிழுந்துபோனவன் குணப்பட்டு மனந்திரும்பி சீரடைவதைக் குறிக்குமென்று சிலர் தாற்பரியஞ் சொல்லுவாாகள்; வேதாகமத்திலோ இவ்வார்த்தை ஞானஸ்நானத்தையே குறிக்கிறதாய் மறுஜென்ம முழுக்கென்று துலாம்பரமாய்ச் சொல்லியிருக்கிறது (தீத்து, 3. 5). நமதாண்டவர் தாமே இதற்கொபப வசனித்திருக்கிருர். ஒருவன் மறுபடியும் பிறந்தாலொழிய தேவனுடைய ராஜ்யத்தைக் காணக்கூடாதென்று சொன்னபின், அவ்வார்த்தைகளின் பொருள் விளங்க உரைத்ததில, ஒருவன் ஜலத்தினலும் ஆவியினலும் பிறந்தாலொழிய தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமாட்டானென்று வசனித்து, மறுபடியும் பிறக்குதல் என்பது ஞானஸ்நானத்தையே குறிக்குமென்று இந்தவிடைவாய்க் காண்பித்தருளினர். கிறிஸ்தமான ஆகமக்காரரும இக்கருத்தாகவே அம்மொழியைப் பிரயோகித்திருக்கிருர்கள்.

55. வினு. ஞானஸ்நானத்தில் மறுஜென்மம் நடக்கிறதென்பது விபரீதமாய்ப் புரட்டபபடக்கூடுமோ?

விடை. ஞானஸ்நானத்தில் மறுஜென்மம் நடந்தேறுவதால் அப்புறம் நாம் பத்திமான்களாய் நடக்கத் தேவையில்லையென்று நினைப்பாருமுண்டு. திருச்சபையுபதேசமோ, இப்பேர்பபட்ட தப்பெண்ணங்களுக்கு எதிரிடையாகப் போதிக்கிறது ஞானஸ்நானமானது அன்றுடகம் நம்மில் நடந்தேறவேண்டிய புதுச்சீரை நம்மில் உண்டுபண்ணிப்போடுகிறதென்றல்ல; அப்புதுச்சீருக்கு ஆதாரமும் ஊற்றுமாயிருக்கிறதென்றே அது போதிக்கிறது. (கிறிஸ்துஜநநநாள் சுருக்கஜெபங் காண்க.) கிறிஸ்தவனின்

நிலைமை நீதிக்குப் புதுபபிறப்பாய்ப் பிறந்திருக்குதல்தான் என்று அது புகட்டினாலும், கிறிஸ்துமார்க்கச் சலாக்கியங்கள் நீதிக்குப பதிலாக அருளபபடுகிறவையென்றல்ல, நீதிக்கு நடத்துகிற வையென்றே காண்பிக்கிறது. நீங்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்தவர்களானதே போதுமென்று நமக்குப போதியாமல், நீங்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்தவர்களானதால் கிறிஸ்தவர்களைப போல் நடந்துகொள்ளுங்கள் என்றே போதிக்கிறது; ஞானஸ்நானத்தில் உங்களுக்குக் கொடுக்கபபட்ட புதுச்சீவனை ஜெபத்தாலும் கிருபையின் மற்ற எத்தனங்களாலும் வளாப்பித்து பிழைப்பூட்டிவாருங்களென்று சொல்லுகிறது. கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற தேவபத்தியுள்ளவாகளாய் சனமார்க்கத்தில் நடப்பதும் நமது பொல்லாத இச்சைகளெல்லாவற்றையும் அழித்துச சகல புண்ணியத்திலும் தேவபத்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறிக்கொள்வதும அவசியமென்று போதிக்கிறது ஞானஸ்நானமானது இந்தவிடைவாய் மனிதனுடைய நடக்கையை மேன்மேலுஞ் சீாபபடுத்தத்தக்கதேயல்லாது மற்றபபடியல்ல. ஞானஸ்நானம்பெற்றவர்கள மகா உன்னத ஆசீர்வாதத்துக்கும் மகா கொடிய சாபத்துக்கும் நடுவே நிற்கிறார்கள். ஒன்று அவர்கள் தேவனோடு வாசம்பண்ணுகிறவர்களும் கிறிஸதுவோடு உடன்சுதந்தரருமாயிருக்கவேணடும; அல்லவென்று அவாகள் மருளவிழுந்தவர்களும், இரணடுவிசை மரித்தவாகளுமாயிருக்க வேண்டும்.

56. வினா மிச்சப் புண்ணியக் கிரியைகளைப்பற்றிய ரோமான்சபை உபதேசத்தை நமது சபை ஒப்புககொளளுகிறதா?

விடை. இல்லை. ஞானஸ்நானமாகிய சாக்கிரமெந்தில் புறம்பான சடங்கைப் பெறுவதினாலேயே மறுஜெனனம் தானாக நடந்தேறுமென்றாவது, ஞானஸநானம் பெறுகிறவர்கள் யாவரிலுஞ் சந்தேகமற நடந்தேறுமென்றாவது நமது சபை சாதிக்கிறதுமில்லை, போதிக்கிறதுமில்லை. ஆனால் விரகறிந்தவர்களாய் ஞானஸ்நானம் பெறுகிறவர்களில் உத்தம மனஸ்தாபமும் விசுவாசமுமுள்ளவர்கள் எவர்களோ அவர்களுக்குள்ளும், குழந்தைகள் அவ்விரண்டையும்பற்றி தங்கள் பிணையாளிகள்மூலமாய் வாக்குத்தத்தம்பண்ணுவதாலும், அவர்கள் குற்றமற்றவர்களாய் அல்லது கருமபாவத்துக்கு உடன்படாதவர்களாயிருக்க, அவை அவர்களை தேவகிருபைக்கு வந்தெட்டாதபடி தடுக்கக் கூடாதிருப்பதாலும், அவர்களுக்குள்ளும் இந்த மறுஜெனனம் நடந்தேறுகிறதென்றுமாத்திரம் போதிக்கிறது. (ஞானஸ்நான முறைமை காண்க.)

57. வினா. ஞானஸ்நானம் பெற்றபின்னும் மனிதர் அருவருக்கப்படத்தக்க பாவங்களை நடப்பிக்கிறார்களே; அப்படியிருக்க மறுஜென்மம் ஞானஸ்நானத்தில் நடந்தேறுகிறதென்று சொல்லலாமா?

விடை. சகல தீர் ஆசாபாசங்களையும் முற்றிலும் மடிவித்தவர்களாய் ஒவ்வொருவரும் மறுஜென்மம் அடைகிறதில்லை. நம்முடைய மாம்சம் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது. என்றாலும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாய் இச்சிக்கிறதற்கான கிருபையை தேவன் கட்டளையிட்டருளுகிறார (கலா 5. 17). நம்மைப் பரீட்சிக்கவும் பக்குவப்படுத்தவும் இவ்வாறு விட்டிருக்கிறார். ஆனால் ஞானஸ்நானத்தில் பழையதை விட்டுப் புதிய தன்மையைக் காக்கவும் பரிசுத்தாவியானவருடைய நடத்துதலுக்கொத்து நடக்கவும் நாம் சாவதானமாயிருந்தால், அதற்கேற்ற திறமையையும் சக்தியத்தையும் அவர் தாமே நமக்குத் தந்தருளுவார். நாம் அசதி அசட்டையுள்ளவர்களும், மாம்சத்துக்கேற்க நடக்கிறவர்களுமாயிருந்தாலோ அந்தக் கிருபையை மறுபடியும் இழந்துவிடுகிறவர்களாயிருப்போம்.

58. வினா. கர்த்தருடைய ஜெபம் மற்றும் இடங்களில் கண்டிருப்பதுபோல ஆரம்பத்திலல்ல, முடிவிற் கண்டிருப்பதற்கு முகாந்தரமென்ன?

விடை. குழந்தையானது ஞானஸ்நானத்தில் தேவனுடைய பிள்ளையாக சுவீகாரம்பெற்று திருச்சபை சேர்ந்ததின் பேரில்தான் நாம் அதற்காக தேவனை பிதாவென்று அழைக்கத்தகும். ஆதிச் சபைவழக்கத்துக்கு இது திட்டமாய் ஒத்திருக்கிறது ஏனென்றால், அவர்களுக்குள் காற்றிக்குமேனர் (Catectiumaner) என்னப்பட்டவர்கள ஞானஸ்நானத்திலுண்டாகும் மறுஜென்மத்தால் தேவனுக்குப பிள்ளைகளாக அங்கிகரிக்கப்படுமுன் இச்ஜெபத்தை சொல்லக்கூடாதென்று ஒழுங்குண்டாயிருந்தது. இதையிட்டு இச்ஜெபம் "மறுஜென்மமடைந்தவர்களின் ஜெபம்" அல்லது "விசுவாசிகளின் ஜெபம்" என்று பலதரமும் பூர்வ ஆசமக்காரரால் அழைக்கப்படலாயிற்று. ஏனென்றால், அதை உரைக்குஞ் சலாக்கியமும் பிறப்புச் சுதந்தரமும், இவர்களுக்கே உரிமைப்பட்டதென்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

59 வினா. முடிவுரையாக வரும் ஜெபத்தில் கண்டிருக்கிறதென்ன?

விடை. துதிதோத்திரமும் விண்ணப்பமுமே. குழந்தைகள் ஞானஸ்நானத்தின் மூலமாய் திருச்சபையிற் சேர்க்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளானதற்காக துதிதோத்திரமும், அவர்கள் தங்கள் மார்க்கத்துக்கும் தாங்கள் பண்ணிக்கொண்ட பிரதிக்கினைகளுக்குமேற்க நடக்கும்படிக்கான கிருபையை கட்டளையிடவேண்டுமென்ற விண்ணப்பமுந்தான். யூதரும் ஆதிக்கிறிஸ்தவர்களும் நடத்திவந்த வழக்கத்தைப் பார்த்தே இவ்வாறு அமைத்திருக்கிறது. விரகறிந்தவர்கள் தங்கள் உடம்படிக்கையை மீறிபபோட்டதாக பின்னடக்கையால் வெளிப்படும்வரைக்கும் ஞானஸ்நானத்தின் பலன் அவர்களுக்கு செல்லுமென்று இவர்கள் ஒப்பியிருந்தார்கள். அப்படியானால் தேவனுடைய கிருபைக்குத் தடைசெய்ய சத்துவமற்றிருக்கிற குழந்தைகளைப்பற்றி இப்படிச்சொல்வது மிகவும் யதார்த்தமே.

60. வினா. ஞானத்தாய் தகப்பன்மாருக்காகச் சொல்லப்படும் புத்திமதிகளின் அடக்கத்தைச் சொல்லு?

விடை. இப்புத்திமதிகளில் ஞானத்தாய் தகப்பன்மாரின் கடமைகளைக்காட்டுகிற மூன்று விஷயங்கள் உண்டு:—

(1) அவர்கள் தாங்கள் குழந்தைகளின் பேரால் பண்ணிய உடம்படிக்கையையும் பொதுபபட ஆத்துமரட்சிப்பைபபற்றி அறியத்தக்க விஷயங்களையும் அதற்குப போதிப்பதும், அதற்கேற்ற எத்தனங்கள் என்னென்ன உண்டோ அவைகளைக் கையாடுவதும்;

(2) அப்போதனைப்பிரகாரம் அப்பிள்ளை நடந்துவரும்படி தாங்கள் தங்களால் கூடிய முயற்சியைப் பிரயோகித்து வருவதும்;

(3) தகுந்த பிராயமும் தகுந்த அறிவுமுண்டானதின்பேரில் திடப்படுதலைப் பெறும்படி கண்காணியாரிடத்தில அழைத்துவரக் கருத்தாயிருப்பதுமே.

61. வினா. பக்திமான்களாயிருப்பவர்கள் குழந்தைகளுக்குப் பிணையாளிகளாக ஏற்படுவதே உத்தமமென்றும், ஆனால் அல்லத்தட்டுவது நியாயமல்லவென்றுங் காட்டு?

விடை. (1) அவர்கள் தாங்கள் ஞானஸ்நானம் பெற்றபொழுதும் பிணையாளிகள் அவர்களுக்காக ஏற்பட்டதுண்டு. அப்படியானால் இவர்களும் மற்றவர்களுக்காக ஏற்பட நியாயமுண்டே (பரி. மத். 7. 12.). ஏற்படாதேபோவதால் மற்றவர்களுடைய ஆத்துமங்களுக்கு மாத்திரமல்ல,

தங்களுடைய ஆத்துமங்களுக்குங்கூட மோசம் நேரிடு வதாயிருக்கலாமே.

(2) ஞானத்தாய் தகப்பன்மார் நிறைவேற்றுகிற கடமையானது கிறிஸ்தமான தங்கள் சிலத்துக்கும் அன்புக்கும் அத் தாட்சியான சிறந்த மேம்பாடாயிருக்கிறது. ஒருவன் மற்றொருவனை நித்தியஜீவனுக்குச் செல்லும் நேர் வழியில் உட்படுத்துவதைப்பார்க்கிலும் அதிக சிலமான தயவு வேறுண்டோ?

(3) இப்பேர்ப்பட்டவர்கள் தங்கள்பேரிலுந் தாங்கள் பிணைப் பட ஏற்றுக்கொண்ட பிள்ளையின்பேரிலுந் தேவகிரு பையையும் பரமாசீர்வாதத்தையும் பேரின்ப பாக்கியத் தையுஞ் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால், பாவியை அவனுடைய வழியின் மோசத்திலிருந்து திருப்புகிறவன் அல்லது அம்மோசத்தில் விழாமல் தற் காக்கிறவன், ஓர் ஆத்துமத்தை மரணத்திலிருந்து ரட்சி த்து பாவங்களின் திரளை மூடுகிறவர்களிலொருவனாக இருக்கிறான (யாக. 5. 20.). அநேகரை நீதிக்குள் திருப்புவோர்கள் என்றென்றைக்கும நட்சத்திரங்களைப் போல பிரகாசிப்பார்கள். (தானி. 13. 3.)

62. வினா. ஞானஸ்நானம் பெற்றவர்களும் பெறாதவர்களுமான குழந்தைகளைப்பற்றி திருச்சபையின் தாற்பரியமென்ன?

விடை. ஞானஸ்நானம் பெற்றிருக்கிற பிள்ளைகள் கர்ம பாவத்தைச் செய்யாதவர்களாயிருந்தால் இரட்சிக்கப்படுவார் களென்பது வேதவசனத்தால் நிச்சயமாகவேயிருக்கிறதென்று இம்முறைமையின் முடிவிலுள்ள முடிவிற் கண்டிருக்கிறது. சகல குழந்தைகளுக்கும் பண்ணப்பட்டிருந்த சாதாரண வாக் குத்தத்தமும் அவர்கள்பேரில் பாராட்டிய தயவு தாட்சண்ணி யங்களுமே இதற்கு அனுமதி. ஞானஸ்நானம்பெறாமல் மரிக் குங் குழந்தைகளைப்பற்றியோ, யாதொன்றும் சொல்லியிருக்க வில்லை. ஆனாலும் அப்படி மரிக்குங் குழந்தைகளுக்கும் இரட் சிப்பில்லையென்று சாதிக்கவுங்கூடாது. சாக்கிரமெந்துக்கள் இரட்சிப்புக்குப் பொதுப்பட அவசியமென்று ஞானோபதேசத் தில் இவ்விசேஷம் ஏராளமாய்ச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

63. வினா. குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்குங்கா லத்தைப்பற்றி திருச்சபையில் அமைக்கப்பட்டிருக்கிற சட்ட மென்ன?

விடை. பிள்ளைகள் பிறந்து, முதலாவது அல்லது இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையிலாவது 2-ம் ஞாயிற்றுக்கிழமைக்குள் வரும் பண்டிகைநாளிலாவது ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும், குருவானவர் ஒப்புக்கொள்ளுந் தகுதியான முகாந்தரமில்லாவிட்டால் அந்தக் காலத்தைக் கடத்தக்கூடாதென்றும் ரூபிரிக் சட்டத்தில் விதித்திருக்கிறது. இந்தச் சாக்கிரமெந்து கிறிஸ்துவானவராலும் (பரி. யோவா. 3. 5, 6. பரி. மத். 19. 16.) அவருடைய அப்போஸ்தலனாலும் (தீத். 3. 5.) அறிவிக்கப்பட்டிருக்கிறபடி பரிசுத்தாவியானவருடைய அருள்செயல்மூலமாய் நாம் ரட்சிக்கப்படுவதற்கும், பூமியிலுள்ள தேவனுடைய ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கும், பரத்திலுள்ள தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கத் தகுமானவர்களாயிருப்பதற்குமேற்ற எத்தனமாயிருக்கிறது. ஆனபடியால், பிள்ளைகள் கூடிய சீக்கிரத்துக்குள்ளாகவே ஞானஸ்நானம்பண்ணப்படுவது புத்தியும் விவேகமும் நலமுமான காரியமென்று நாம் அறியவேண்டும்.

64. வினா. ஞானஸ்நானமானது எந்தச் சமயங்களில் எந்த முகாந்திரத்தையிட்டு வெளியரங்கமாய் கொடுக்கும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறது.

விடை. ஞானஸ்நானமானது ஞாயிற்றுக்கிழமைகளிலும் பரிசுத்தநாட்களிலுங் கொடுக்கப்படும்படி ரூபிரிக்கில் கற்பிக்கப்பட்டிருக்கிறது. பிள்ளையானது ஞானஸ்நானமூலமாய் திருச்சபையிற் சேர்க்கப்பட்டதற்கு சபையார் சாட்சியாகிறதன்றி, அவர்கள் ஞானஸ்நானத்தில் தாங்கள் பண்ணின உடம்படிக்கைகளை நினைவுகூரும்படியாகவும், அவர்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்காக ஜெபிக்கிறதோடுங்கூட தங்கள் கடமையையும் நிறைவேற்ற தங்களுக்காய் தேவகிருபையைத் தேடிக்கொள்ளவும் தக்கதாக வெளியரங்கமாய் ஞானஸ்நானங்கொடுக்கும்படி திருச்சபையால் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

65. வினா. வீடுகளில் பிள்ளைகளுக்குத் தனியாய்க் கொடுக்கும் ஞானஸ்நானத்தைப்பற்றி திருச்சபை விதித்திருக்கிற சட்டமென்ன?

விடை. தகுதியான முகாந்தரமும் அவசரமுமுண்டாயிருந்தால் அல்லது குழந்தை மரணத்தறுவாயிலிருக்குமானால் அவஸ்தைஞானஸ்நானங் கொடுக்கலாம். ஒழுங்காய்ப் பட்டமடைந்த குருவானவர்மாத்திரமே அதைக் கொடுக்கக்கூடும். ஆனாலும்

இவ்விதமாக ஞானஸ்நானம்பெற்ற பிள்ளை பிழைத்தால் அது சரியான ஒழுங்கின்படி வீட்டில் ஞானஸ்நானம்பெற்றதென்று சபையாருக்கு நிச்சயமாய்த் தெரியவரும்படி அதைத் தேவாலயத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஆனால் தகுதியான முகாந்தரமும் அவசரமும் இல்லாவிட்டால் வீடுகளில் ஞானஸ்நானங் கொடுக்கத்தகாது.

66. வினா. வீடுகளில் பிள்ளைகளுக்குத் தனிமையாய் கொடுக்கும் ஞானஸ்நானமானது ஒழுங்காய் குருபட்டமடைந்த குருவானவராலேயே கொடுக்கப்படவேண்டுமா?

விடை. ஆம். ஏனென்றால் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஞானஸ்நானங்கொடுக்கும் அதிகாரமானது நமதாண்டவரால் அவரது அப்போஸ்தலருக்கும் இவர்களால் அவர்கள் பின்னடியாரான போதகன்மாருக்குங் கையளிக்கப்பட்டது. கிறிஸ்துவானவருடைய அனுமதியால் அனுப்பப்பட்டவர்களேயல்லாது மற்றெவர்களாவது இத்திருப்பணிவிடையைச் செய்யத்தகாது. ஏனென்றால், கிறிஸ்துவானவருடைய நாமத்தில் யாதாமொருவன் செய்து நடப்பிக்குங்காரியம் அதிகாரம்பொருந்தியதாயிருக்கவும், அவனால் கொடுக்கப்படும் ஆசீர்வாதம் நிச்சயப்பட்டதாயிருக்கவுந்தக்கதாக அவன் கிறிஸ்துவானவரால் நியமித்து ஏற்படுத்தப்பட்டவனாயிருப்பது அவசியமே. திருச்சபை சீர்திருத்தலை நடத்தினவர்கள் ஞானஸ்நானமின்றி இரட்சிப்பு நடந்தேறுவது கூடாதகாரியமென்று ரோமான்சபையாரைப் போல் எண்ணியிருந்ததால், எப்பேர்ப்பட்டவர்களாலும் அவஸ்தைஞானஸ்நானங் கொடுக்கப்படலாமென்று எண்ணியிருந்தாலும் அப்படியல்லவென்று நிதானித்ததின்பேரில் அதை நிறுத்திப்போட்டார்கள்.

67. வினா. இம்முறைமையை நடப்பிக்கும்படி அமைந்திருக்கிற சட்டமென்ன?

விடை. கர்த்தருடைய ஜெபத்தைச்சொல்லி தேவாலயத்தில் வெளியரங்கமாய் கொடுக்கும் ஞானஸ்நானமுறைமையில் வாசிக்கக் குறித்திருக்கிற சுருக்க ஜெபங்களில் சில சுருக்க ஜெபங்களைச் சொல்லக்கடவரென்று ரூபிரிக்சட்டத்தில் கண்டிருக்கிறது; இச்செபங்களில் பிரதிஷ்டை ஜெபம் முக்கியமானதாயிருப்பதால் அதை வாசிப்பது அவசியம்; அப்புறம் பிள்ளைக்குப் பேரிட்டு ஜலத்தைவார்த்து ஞானஸ்நானங் கொடுக்கவேண்டியது. பிள்ளை வியாதிப்பட்டதாயிருந்தால் முழுக்கிட்ட ஒத்துக்கொள்ளமாட்டாதே. இப்படிக்கு பிள்ளைக்குத்

கொடுத்திருக்கிற ஞானஸ்நானம் ஒழுங்காயுந் தகுதியாயுமிருக் கிறதென்றும், அது திரும்ப ஞானஸ்நானம் பெறவேண்டியதில் லையென்றும் இன்னொரு ரூபிரிகயில் சொல்லியிருக்கிறது. என்றாலும், மேற்சொல்லியபடி அந்தச் சேகரத்துக் குருவானவ ராலே அது ஞானஸ்நானம்பண்ணப்பட்டதென்றும், ஒழுங்குப் பிரகாரம் ஞானஸ்நானம்பண்ணப்பட்டதோவென்றுஞ் சபை யாருக்குத் தெரியப்படுத்தும்பொருட்டு அதைத் தேவாலயத் தில் கொண்டுவரவேண்டியது.

68. வினா. இந்த முறைமையில் கவனிக்கப்படத்தக்க யா தொன்று விடப்பட்டிருக்கிறதா?

விடை. கண்காணியாரால் திடப்படுதலைப்பெறும்படி கொ ண்டுவருவதைப்பற்றிச் சொல்லப்படவேண்டிய எச்சரிப்பு விடப்பட்டிருக்கிறது. என்றாலுஞ் சமயத்துக்குத்தக்கதாக குருவானவர் அதை தெரியப்படுத்துவது தப்பிதமல்ல.

69. வினா. இளமைப்பருவம் கடந்தவர்களுக்குக் கொடுக் கும் ஞானஸ்நானமுறைமை, எப்பொழுது ஏன் சேர்க்கப் பட்டது?

விடை. பொதுவான ஜெபபுத்தகம் கடைசியாக பார்வை யிடப்பட்டு திருத்தலானபொழுது இம்முறைமை சேர்க்கப்பட் டது. பற்பல ஜாதியாருங் கிறிஸ்தவர்களானதின்பேரில் ஞா னஸ்நானமானது எப்பொழுதும் குழந்தைகளுக்குக் கொடுக் கப்பட்டது. ஆனால் தேசத்தில் எழும்பின மகா கலாதியால் அனாபாப்திஸ்தர் மதமும் (Quakerism) தலைப்படலானதை யிட்டு முதியோர் ஞானஸ்நானமுறைமையொன்று அமைக் கப்படுவதாயிற்று. இக்காலத்திலும் அஞ்ஞானமார்க்கத்திலிரு ந்து குணப்படுகிறவர்களுக்கு இந்த முறைமை உபயோகமாக வேயிருக்கிறது.

70. வினா. இளமைப்பருவங் கடந்தவர்களுக்காக தனிமை யான ஓர் முறைமை அமைக்கப்படுவது அவசியமா?

விடை. குழந்தைகள் ஞானஸ்நானத்தில் வராத பல விஷ யங்கள் இதில் சேர்க்கப்படவேண்டியதாயிற்று. ஆதலால் இது தனிமுறைமையாக அமைக்கப்படுவது அவசியமே. அவர் கள் போதனைபெறத்தக்க திறமையுள்ளவர்களாயிருப்பதாலும் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு குணப்படுதலைக் காட் டவேண்டியதாயிருப்பதாலும் நமது சபை அவர்களுக்கடுத்த விசேஷித்த முறைமையை நியமித்திருக்கிறது: அவர்கள்

முந்தி உபதேசிக்கப்படவேண்டும் என்றும், அவர்களுடைய விசுவாசத்தையுங் குணப்படுதலையும்பற்றிப் பரிசோதிக்கப்பட வேண்டுமென்றும் (லூக். 3 8–11.), கடைசியாக அவர்கள் பெறப்போகிற பிரமாணிபின் முத்திரையாகிய ஞானஸ்நானத்துக்கென்று உபவாசத்தாலும் ஜெபத்தாலும் தங்களை ஆயத்தப்படுத்தி, பண்ணப்போகிற உடம்படிக்கையின் தனிமையை திட்டமாய்க் கிரகித்துணர்ந்துகொள்ளுமபடி எச்சரிக்கப்பட வேண்டுமென்றுந் திருச்சபையிற் சட்டமுண்டு. முற்காலத்தில லெந்திலுள்ள 40 நாட்கள்தோறும் அவர்கள் உபதேசிக்கப்படுவது வழக்கமாயிருந்தது.

71. வினு. குழந்தைகளுடைய ஞானஸ்நானத்தையும் விரகறிந்தவர்களுடைய ஞானஸ்நானத்தையும முறையே இங்கிலாந்துசபை மதித்துவருகிறதெப்படி?

விடை குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாதென்று சாதிக்கிற பாபதிஸ்தா அல்லது அன்றிபீடோ-பாபதிஸதா (Antepaedobaptist) எனபவர்களுடைய கொள்கைக்கு விரோதமாய் இங்கிலாந்துசபையானது இருவகையாருக்குங் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் கிறிஸ்துவானவருடைய ஏற்பாட்டுக்கு விரோதமல்லவென்று சாதிக்கிறதன்றி (27-ம் பிரமாணம்) குழந்தை ஞானஸ்நானத்தை பொதுவிதியாக மதித்து குழந்தைப்பருவம் கடந்தவர்கள் ஞானஸ்நானத்தை புறநடையாமாத்திரம எண்ணிவருகிறது.

72. வினு. இவ்விரு முறைமைகளுக்குமுண்டாயிருக்கிற சம்பந்தங்களையும் வித்தியாசங்களையுஞ் சொல்லு.

விடை. ஞானஸ்நானமானது ஆவிக்குரிய மறுஜென்மமாயிருக்கிறதென்றும, அதைப் பெற்றுக்கொள்ளுகிறவனிடத்தில் குதாவஷைக் காணப்படாதிருக்குமிடத்து சாக்கிரமெந்தாலுண்டாகும பலன்களுக்கு அவன் பங்காளருகவேயிருப்பான் என்றும், இம்முறைமையை இயற்றினவர்கள பூரண நிச்சயமுடையவர்களாயிருந்ததால் குழந்தை ஞானஸ்நானமுறைமையை ஏறக்குறைய முழுமையுமாக இம்முறையில் அமைத்துக்கொண்டார்கள். இவ்விஷயத்தில் குழந்தைகளைபபற்றிச் சொல்லபபடுகிறதேதுண்டோ, அதெல்லாம் விரகறிந்தவர்களையும்பற்றிச் சொல்லப்படலாம் என்ற காரணத்தையிட்டு இவ்விதமாய் அமைத்திருக்கிறார்கள். வாசிக்கப்படுஞ் சீவிசேஷவாசகமோ வெவ்வேறுள்ளது. ஒருவன் புறம்பாக தண்ணீரால் மேசியாவின் ராஜ்யத்துக்குட் பிரவேசிக்கத்தக்க வகையையும்,

உள்ளாக ஆவியானவரால் அதில் அருளப்படுகிற புதுப்பிறப்பின் சலாக்கியங்களையும்பற்றி கிறிஸ்துவானவர் நிக்கொதேமுவுக்குப் போதனைகொடுத்த வரலாறு அடங்கிய சுவிசேஷவாசகம் இம்முறைமையில் தெரிந்து நியமிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஞானஸ்நானம் பெறுகிறவன் ஞானத்தாய் தகப்பனமாரைக்கொண்டல்ல, தானுகவே நின்று யாவையும் ஒப்புக்கொள்ளுகிறான். குருவானவரும் அவன் முன்னிலைக்கே சொல்லவேண்டிய யாவையுஞ் சொல்லுவார். இம்முறைமைக்கும், குழந்தை ஞானஸ்நான முறைமைக்கும் உண்டாயிருக்கிற சம்பந்தங்களும் வித்தியாசங்களும் இவைகளே.

73. வி௵. கிரேக்கசபையில் பருவங்கடந்தவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கப்படுகிற விதமென்ன?

விடை. (1) குருவானவர் ஞானஸ்நானத்துக்குமுன் ஒரு வஸ்திரந்தவிர மற்றதையெல்லாம் எடுத்துப்போட்டு அவன் முகத்தில் மூன்றுதரம ஆவியை ஊதி, மூன்றுதரம் நெற்றியிலும் மார்பிலுஞ் சிலுவைபோடுவார

(2) அவன் சிரசில் கையைவைத்து பிசாசையும், உலகத்தையும், மாம்சத்தையும் ஜெயிக்கவந் தேவகட்டளைகளைக் கைக்கொள்ளவும் ஜெபஞ்செய்வார்.

(3) அதின்பின்பு ஞானஸ்நானம் பெறப்போகிறவனை மேற்குமுகமாய்த் திருப்பிவிட்டு, நீ பசாசையும் அவனுடைய கிரியைகளையும் அவனுடைய தூதர்களையுஞ் சேவியாமல், அவனுடைய ஆடம்பரங்களை வெறுக்கிறுயா என்று கேட்பார்; அவன் வெறுக்கிறேன என்று மூன்றுதரஞ் சொல்வான். பிசாசைப புறக்கணித்து துப்புமபடி சொல்லுவார; அவன் அப்படியே துப்புவான்.

(4) அதின்பின்பு அவனைக் கிழ்முகமாய்த் திருப்பிவிட்டு, கிறிஸ்துவுடனே சேருகிறுயா? அவரை விசுவாசிக்கிறுயா? என்ற கேள்விகளைக் கேட்டு மறுபடி ஜெபம்பண்ணுவார்.

(5) தண்ணீரின்மேல் சிலுவைபோட்டு மூன்றுதரம் ஊதிப் பிரதிஷ்டைசெய்வார். ஞானஸ்நானத்துக்குமுன் அவனுடைய சரீரம் தைலத்தால் பூசபபட்டு, நிற்பான்.

(6) திரித்துவநாமத்தால் ஞானஸ்நானங்கொடுத்துப் புது வஸ்திரங்கொடுத்து உடுத்தி, ஸ்தோத்திர ஜெபங்களை வாசித்துமுடிப்பார்.

———

XIV. CHAPTER.

CATECHIZING IS THE BEST METHOD OF IMPARTING INSTRUCTION.

The Compilers of the Church Catechism — Usefulness of catechising openly in the Church—Exegesis and short analysis of the Catechism.

பதினான்காம் அதிகாரம்

ஞானோபதேசத்தைப்பற்றியது.

—•—

1. வினா. காற்றிக்கிஸம் என்ற வார்த்தைக்கு மூலமும் உரையுமென்ன?

விடை. அறிவுவளாசசிக்கடுத்த மூலாதாரங்களை வாய விசேஷமாய வினாவிடையாக போதித்தல் என்ற கருததைக கொளளுங் கிரேககவாாத்தை இதற்கு மூலம் (லூக. 1 4. கலா. 6 6). இது தமிழில் ஞானோபதேசம் என்ற மொழியால வழங்குகிறது. (1 கொரி. 14 9. அப. 10. 25. ரோம. 2. 18.)

2. வினா. ஞானோபதேசம உபதேசிக்கபபடுவது புராதன மாயுள்ள வழககந்தானென்று காட்டு.

விடை. அப்போஸ்தலர் காலமுதலே இவ்வழக்கம் நடந்துவந்ததென்று காட்டததக்க ஓா உதாரணமுணடு. பரிசுதத லூக்கா தாம் எழுதின சுவிசேஷத்துக்கு முகவுரையாகத் தேயோபபிலுவை நோக்கிச் சொல்லியிருககிறதாவது.—உமககு உபதேசிக்கபபட்ட வர்த்தமானஙகளின் நிலவரத்தை நீா அறிய வேண்டுமென்பதே. பரி. லூககா எழுதின சுவிசேஷமானது தேயோபபிலு என்பவர் கிறிஸதவனானபொழுது உபதேசிக கபபட்ட ஞானோபதேசத்துககுச சரிததிர நடையான விளத தீப்பாய் எழுதபபட்டதெனறு இதனால் விளங்குகிறதல்லவா!

3. வினா. ஞானோபதேசம் போதிக்கப்படுகிற நோகக மென்ன? முற்காலத்திலும் இக்காலத்திலும் நடப்பிக்கபபட்டு வருகிறதெபபடி?

விடை. பூர்வத்தில் ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு உபதேசி நியமிககபபட்டிருந்தான். காற்றிககுமேனர் என்னப பட்டவர்களை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்தும்படியாக தேவனுடைய வாக்கியங்களின் ஆதி நியாயங்களை அவங்

ளுக்குப் போதிப்பதே இவனுடைய கடமை. இக்காலத்திலோ இது ஒவ்வொரு குருமாரையும்பற்றின கடமையாயிருக்கிறது. இம்மையில் ஞானஸ்நானம்பெற்றவர்கள் திடபபடுத்தப்படுவதால் தங்கள் உடம்படிக்கைகளைப் புதுப்பித்துக் கொள்ளும்படி செய்யவும், முதியவர்கள் தங்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களின் உண்மையை உணர்ந்துகொள்ளச் செய்யவும் இவர்கள் முயற்சிக்கவேண்டியது.

4. **வினா.** ஞானோபதேச வினாவிடையானது யாரால் இயற்றப்பட்டது?

விடை. நோவெல் (Novel) என்பவரால் என்று சிலரும், பாய்னெற் (Poinet) என்பவரால் என்று சிலருஞ் சொல்லுவார்கள். யாரொன்றாலுஞ் சரி, கிறுனமர் என்பவரும் ரிட்லி என்பவருஞ் சேர்ந்து இதைப் பார்வையிட்டு செம்மைபபடுத்தினார்களென்று தோன்றுகிறது. என்றாலுஞ் சாக்கிரமெந்துக்களைப்பற்றிய பங்கு பிற்காலத்தில்தான் சேர்க்கப்பட்டது.

5. **வினா.** இப்பொழுதிருக்கப்பட்ட ஞானோபதேசத்துக்கும் ஜெபபுஸ்தகத்தின் முந்தின பதித்தல்களிலுள்ள ஞானோபதேசத்துக்கும் வித்தியாசமென்ன? முந்தினதைத் திருத்தி மறுபடியும் பதிப்பித்ததா?

விடை. ஜெபபுஸ்தகத்தின் முந்தின பதித்தல்களிலுள்ள ஞானோபதேசத்தில ஞானஸ்நானப பொருத்தனையும் விசுவாசப்பிரமாணமும் பத்துக்கற்பனைகளுங கர்த்தருடைய ஜெபமும் அவற்றிற்குரிய விஸ்தரிப்பும் அடங்கியிருந்தன. ஆனால் முதலாம் யாக்கோப் என்ற அரசன், மகுடாபிஷேக சிம்மாசனம் ஏறியபின் (Hampton Court Conference) ஹாம்படன் கோர்ட் சங்கத்தில் ஓவரால (Overal) என்ற கண்காணியாரால் சாக்கிரமெந்துக்களைபபற்றிய விஸ்தரிபபு கூட்டப்பட்டது. இவ்விதமாய் திருத்தப்பட்ட ஞானோபதேசமானது உபதேச கடமைகளில் பொழிப்பான தெளிவையும் வினா விடை இயல்பாய் நாடோடிய இயற்சொற் சேர்ந்த வாசகபோங்கு முற்றதானதால், இங்கிலாந்துசபை ஞானோபதேசமானது மற்றெந்த சபையிலுள்ளதைப்பார்க்கிலும் முதற்றரமான சிறந்த தன்மையுள்ளதாயிருக்கிறது.

6. **வினா.** ஞானோபதேசத்தைப் போதித்தலைப்பற்றி ரூபிரிக்குகளிலுங் கனோன்களிலுங் குருமாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளையென்ன? அவர்கள் அதை நிறைவேற

றவேண்டியதெப்படி? அவற்றை உண்மையாய் நிறைவேற்று வதால் உண்டாகுஞ் சிலாக்கியங்களெவை?

விடை. ஆரும எட்வர்டின் முதலாம் ஜெபபுஸ்தகத்தில் ஞானோபதேசமானது ஆறு வாரங்களுக்கு ஒருவிசையாவது விறைவப்படவேண்டுமென்று சற்பிக்கப்பட்டிருக்கிறது. இப பொழுதிருக்கிற ரூபிரிக்கிலோ ஒவ்வொரு சேகரத்திலுள்ள குருவும ஞாயிற்றுக்கிழமை திருநாட்கள்தோறும், தமது சேக ரத்திலிருந்து தமமண்டை அனுப்பப்படும் பிள்ளைகளை மாலை ஜெபத்தில் இரண்டாம்பாடத்துக்குப் பின்னா ஞானோபதே சத்தில் தமக்கு ரம்மியமான பாகத்தில் விறைவி, உபதேசிப் பாராக என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரமாணத்தை 59-ம கனோனோடு சம்பந்தப்படுத்துவது அரிதாயினும், அப்ப டிச்செய்ய அவசியமில்லை. கோவில்களில் ஞானோபதேசத்தை விறைவவேண்டிய அவசியம் ஞாயிற்றுக்கிழமைப பள்ளிக்கூ டங்களில் நடந்தேறிவருகிற முயறசியாய் குறைந்ததாகத் தோன்றினும் மாமூல்வழக்கத்தை முற்றிலும் நெகிழ்ந்து விடுவது நன்றல்ல. லெந்துநாட்களில் ஞானோபதேசமானது சிறுபிள்ளைகளால் மனப்பாடமாக்கிக்கொள்ளப்பட்டுஞ் சபை களில் தெளிவாய் விஸ்தரிக்கப்பட்டும் வருமானால், ரூபிரிக் குப பிரமாணத்தின் நோக்கம் பயன்பட்டு முதியோருக்கும் இளையோருக்கும் மிகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்குமே!

7 வினா ஞானோபதேச விறைவிடையைப்பற்றி சிலா கொண்டிருக்கும் தப்பெண்ணமென்ன?

விடை. இச்சிறுவருக்கு அடுத்ததேயல்லாது முதியோருக்கு அடுத்ததல்லவென்று இதை அவமதிப்பாாகள். ஆனால் அப்ப டிச்செய்வது சரியல்ல. அது எல்லாருக்கும் எக்காலத்திலும ஒத்ததுதான். நமது ஞானஸ்நான பொருத்தனைகளை அது நமக்கு நினைப்பூட்டத்தக்கது. அப்பொருத்தனைகளை நிறை வேற்றும்படி அது நம்மை எச்சரிக்கத்தக்கது. இரட்சிப்புக்கு அவசியமாய் நாம் அறியத்தக்கதும் விசுவாசத்துக்கும் பரி சுத்த நடக்கைக்கும் அடுத்ததுமான போதனைகள் திரட்டி உரைக்கப்பட்டிருக்கின்றன. அதை அவமதிப்பதுஞ் சிறுவருக் குத்தான் அடுத்ததென்று நினைப்பதும் போதாது.

8. வினா. இதிலடங்கிய பிரதான ஐந்து பங்குகளுமென்ன?

விடை. (1) ஞானஸ்நான உடம்படிக்கை. அவ்வுடம் படிக்கையும் அதின் தன்மையும் அந்த நிறைவேற் றவேண்டிய கடமையும் இதில் புகட்டப்பட்டிருக்

(2) விசுவாசப்பிரமாணம். அபபிரமாணத்தின் பொருளை இதில் தொகுத்துக் காட்டியிருக்கிறது.

(3) பததுக்கற்பனை. தேவனுக்கும் பிறருக்குஞ் செய்ய வேண்டிய கடமைகளிற் காட்டியபடி அவைகளின் விருத்தியுமா இதில் அடங்கியிருக்கிறது.

(4) கர்த்தருடைய ஜெபம். அதின் பொருளும் அடக்கமும் பொதுப்பட ஜெபத்தின தன்மையும அவசியமும இதிற் கண்டிருக்கிறது.

(5) இரண்டு சாக்கிரமெந்துககளைபபற்றிய வரலாறு கடைசியாகக் கண்டிருககிறது.

9. வினு. உலகத்தைப் பொல்லாத உலகமென்று அழைதத்திருப்பதேன்?

விடை. உலகத்தார் பெரும்பான்மையும் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள் (1 யோ. 5. 19.). கிறிஸ்தவர்கள் தெரிந்து கொள்ளபபட்ட சந்ததியும் சொந்தமான ஜனமுமாயிருக்கும படி உலகிலிருந்து அழைககபபட்டிருககிறாகள (எபே. 4 1. 1 பேது. 2. 9.). நாம் எவ்வளவாய் உலகததை வெறுததுததள்ளுவது அவசியமென்று காட்டும்பொருட்டு அதை பொலலாத உலகமென்று அழைததிருபபது சரியே.

10. வினு. "வெறுததுவிடுவேன்" என்பதின் கருதமென்ன?

விடை. பசாசையும் அதின் கிரியைகளையும் வெறுததுவிடுவேன் என்பதில், பசாசின் சோதனை நம்மை அணுகாமலும தொந்தரிக்காமலுமிருக்கும்படி செயவோமெனறுவது; இநதப பொல்லாத உலகத்தின் ஆடமபரத்தையும் வீணமகிமையையும் வெறுத்துவிடுவேன் என்பதில், உலகம் தன சிற்றின்பததால் நம்மை இழுககப பாரககாதபடிக்கு செயவோமெனறுவது; பாவமான மாமச இசசைகளை வெறுத்துவிடுவேனெனபதில, நமது சீர்கெட்ட சுபாவம் தீமைககு நம்மை ஒருக்காலும ஏவிவிடாமலிருக்கும்படி செயவோமென்றுவது நாம் வாககுக் கொடுக்கிறதில்லை இபபடிச செய்வது கூடியகாரியமுமல்ல. ஆனுல் நாம் வேண்டுமென்றுவது கவலைத்தாழ்ச்சியால் மேற் சொல்லிய சத்துராதிகளுக்கிடஙகொடாமல் நம்மால் இயன்ற மட்டும் அவைகளுக்கு எதிாததுநிற்போமென்றே வாக்குக்கொடுக்கிறோம்.

11. வினு இந்த இரட்சண்ணிய நிலைமைக்கு என்னை வரவழைத்தல் என்பதற்கருத்தமென்ன?

விடை. நான் சேர்ந்திருக்கிறதும் இரட்சிப்புக்கு அவசியமான எத்தனங்கள் நமக்கு அருளப்படுகிறதுமான (ரோம. 1. 16. 2 தீமோ. 3. 15) கிறிஸ்துமார்க்கத்துக்குள் நம்மை ஞானஸ்நானத்தின் மூலமாய் சேர்த்துக்கொண்டதுதான்.

12. வினா இயேசுகிறிஸ்துவைக்கொண்டு என்று சொல்லியிருப்பதேன்?

விடை. அவருடைய புண்ணியங்களினிமித்தமும் பரிந்து பேசுதலினிமித்தமுமே நாம் ரட்சிக்கப்படுகிறோம். சாவலோகத்தின் பாவங்களையும் நீக்கத்தக்க அளவற்ற பிராயச்சித்தமுண்டுபண்ணினது (ரோம. 5. 10. 1 யோ. 2. 2.) அவருடைய இரத்தமாத்திரமே (அப. 20. 28. 1 பேது. 1. 18, 19.). அவர் தமது பிதாவினிடத்தில் பரிந்துபேசுவதால்தான் நாம் நித்திய பாக்கியசுதந்தரராக சிலாக்கியம் பெறக்கூடும். (எபி. 9. 21; 7. 25, 12. 24.)

13. வினா "நான் ஜீவனுள்ளமட்டும் அதிலே நிலைகொண்டிருக்கும்படி தமது கிருபையை எனக்குத் தந்தருள்" என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. தேவனுடைய கிருபை என்பது தேவன் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு கொடுப்பதாய் வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிற பரிசுத்தாவியின் அருள் அனுக்கிரகமும் உதவி சகாயமுமேயாம். அந்தக் கிருபையானது நமது நன்முயற்சிகளோடு துணைநின்று உதவுவதால் நமது கடமைகள் நமக்கு வெகுவாய்க் காணப்படுவதன்றி, அவைகளைச்செய்து நிறைவேற்றத்தக்க திராணியுள்ளவர்களாகவும் நாம் வெளிப்படுகிறோம். நாம் இரட்சண்ணிய நிலைமையில் நிலைகொண்டிருக்கும்பொருட்டு தேவனுடைய கிருபை நம்மோடு நிலைகொண்டிருப்பது அவசியம்.

14. வினா. விசுவாசப்பிரமாணம் அமைக்கப்பட்டிருக்கிற இடத்தையும் அதின் பொருளையும்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. ஞானஸ்நான உடம்படிக்கையின் தன்மையையறிந்து அதைக் கைக்கொள்வது நமது கடமையென்று அறிக்கையிட்டபின்பு நாம் கற்றுக்கொள்ளவேண்டிய அடுத்தகாரியம் எதுவென்றால், நாம் விசுவாசிக்கிறதாகவும் கைக்கொள்ளுகிறதாகவும் அறிக்கையிட்ட தேவவசனமே. இதன்படி விசுவாசப்பிரமாணமும் முந்தி கண்டிருக்கிறது. ஏனென்றால், செம்மை

யான விசுவாசமே பரிசுத்த நடக்கைக்கு ஊற்றாயிருக்கிறது. அப்போஸ்தல விசுவாசப்பிரமாணமானது சுருக்கமும் பொருளடக்கமுள்ளதும் பாலகர் மனப்பாடம்பண்ணுவதற்கு மிகவும் தகுந்ததாயுமிருப்பதால் அது இங்கே அமைக்கப்பட்டிருப்பதே யதார்த்தம். தேவத்துவத்தில் மூன்றாட்களிருப்பதும், அவர்கள் மனித இரட்சிப்பில் நடத்துஞ் செயலும் இதில் காணபிக்கப்பட்டிருக்கிறது. இதில் நமது சுபாவ சீர்கேட்டை அறிக்கையிடுகிறோம்; மற்றப்படி நமக்கு இரட்சகா வேண்டியதில்லையே. நமது பரிசுத்த தாழ்ச்சியையும் அசுத்த தன்மையையும் அறிக்கையிடுகிறோம; மற்றப்படி பரிசுத்தமாக்கும் ஆவி நமக்கு வேண்டியதாயிராதே. கிறிஸ்துவானவா தேவனென்று மதிக்கும்படி போதிக்கப்படுகிறோம்; அவரே நமது இரட்சகரென்று திடநம்பிக்கையாய் நாம் நம்புவதற்கு இதற்கு ஏற்ற காரணமல்லவா!

15. வினா. விசுவாசப்பிரமாணத்துக்குப்பின் பத்துக்கற்பனைகள் கண்டிருப்பதென்ன?

விடை. தேவனை நமது சிருஷ்டிகராகவும் மீட்பராகவும பரிசுத்தமாக்குகிறவராகவும அறிகிற அறிவே பரிசுத்தநடக்கை காட்டப்படத்தக்க நல்ல ஸதிரமாயிருக்கிறது. இக்கற்பனைகள் இஸ்ரவேலருடைய சன்மார்க்க நடக்கையை ஒழுங்குபடுத்தத்தக்க விதிமறையாக தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்டன. சடங்குப்பிரமாணமும் அப்போதுதானே கொடுக்கப்பட்டது. ஆனால் அது கொடுக்கப்பட்ட நோக்கம் நிறைவேறிப்போனதால் அது நின்றுபோகலாயிற்று. சன்மார்க்கப்பிரமாணமோ நித்தியகாலமும நிலைக்கத்தக்க விதிமறையாக அமைக்கப்பட்டதால், அப்படியே கிறிஸ்துவானவராலும் அவருடைய அப்போஸ்தலராலும் ஸ்தாபிக்கப்பட்டது.

16. வினா. இப்பிரமாணங்களை குறையற நிறைவேற்ற நாம திராணிமான்களல்லவே; அப்படியானால் அவைகளை அசட்டை செய்யலாமோ?

விடை. இம்மையில் நாம் பூரண நீதிக்கு வந்தெட்டுவது கூடாத காரியமாயிருந்தாலும், பூரண நீதியின்பேரில் நாம் பசிதாகமுள்ளவர்களாகவே இருக்கவேண்டும். மறுமையில் நமது ஆண்டவர்க்கொப்பாக மகிமைப்படுத்தப்பட விரும்புகிறவர்கள் இம்மையில் அவருடைய சாயலைத் தரித்தவர்களாய் விளங்க வேண்டியது. சுவிசேஷமானது நமது சுபாவ பெலக்கேட்டை எடுத்துரைக்கிறதுமன்றி, தேவனுடைய கற்பனைக்ளைக் கைக்

கொள்ளத்தக்க சத்துவத்தை யாரால் நாம் எவ்விதமாய் பெற்றுக் கொள்ளக்கூடுமென்று காண்பிக்கிறது. (1 யோ. 15. 5. 1 கொரி. 2. 9. பிலி. 4. 13. யோவா. 16 24)

17 வினா. பின்வருகிற பங்கில் ஜெபமும் அதன் தன்மையும் புகட்டப்பட்டிருப்பது யதார்த்தமென்று காட்டு.

விடை. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளத்தக்க சத்துவத்தை ஜெபத்தின்மூலமாய் நாம் பெற்றுக்கொள்ளக்கூடுமானதால், இப்பங்கில் ஜெபத்தைப்பற்றி புகட்டியிருப்பது யதார்த்தமே.

18. வினா. மேற்சொல்லியவைகளையல்லாமல் இரட்சிப்புக் கடுத்ததாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறவைகளெவை?

விடை. பரிசுத்த சாக்கிரமெந்துகளே. இவைகள் தேவனுடைய தயவுக்கும் ஆசீர்வாதத்துக்கும் குறிப்படையாளங்களாகவும், ஞானஉயிர் நமக்குள் உண்டாகி வளர்ந்தேறிப் பெலப்படும் வித்தனங்களாகவுமிருக்கின்றன.

19. வினா. சாக்கிரமெந்துக்களின் தொகையைப்பற்றியவிஷயத்தில் நமது சபைக்கும் ரோமான்சபைக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசமென்ன?

விடை. ரோமான்சபை, ஞானஸ்நானமும் இராப்போசனமுமாகிய சாக்கிரமெந்துக்களையல்லாமல் திடப்படுத்தல், பச்சாத்தாபம், அவஸ்தைபூசுதல், விவாகம், பட்டாபிஷேகம் என்னும் வேறே ஐந்து சாக்கிரமெந்துக்களுண்டென்றும் ஒப்புக்கொள்வதே அவ்வித்தியாசம். இவைகளிலெதையாகிலும் சாக்கிரமெந்தல்லவென்று சாதிக்கிறவனைச் சபிப்பது அச்சபையின் வழக்கம். ஆனால் பிந்தின ஐந்தில் எதுவாகிலும் சாக்கிரமெந்துக்குரிய விசேஷித்த குறிப்படையாளங்களுள்ளதல்ல. சிலகாலத்துக்கு முன்னதாகத்தான் அச்சபையார் இப்படிச் சாதனையாகச் சொல்லி உறுதிப்படுத்தினார்கள்.

20 வினா ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போசனமும் சாக்கிரமெந்துக்கள்தான என்று ருபி

விடை. (1) இவ்விரண்டிற்குங் காணப்படுகிற புறம்பான அடையாளங்களுண்டு. அதாவது, ஞானஸ்நானத்தில் ஜலமும் கர்த்தருடைய இராபபோசனத்தில் அப்பமும் திராட்சரசமுமே.

(2) இவ்வடையாளங்களால் குறிக்கப்படுகிற உள்ளான கிருபையுமுண்டு. ஒன்றில் மறுஜென்மமுழுக்கு, மற்றதில் கிறிஸ்துவானவருடைய சரீரமும் இரத்தமுமே.

(3) இவ்விரண்டும் திவ்விய நியமிப்புள்ளவை. ஞானஸ்நான கட்டளை மத். 28. 19-ம் வசனத்திலும், கர்த்தருடைய இராப்போசனக்கட்டளை லூக். 22. 19, 20-ம வசனத்திலும் கண்டிருக்கிறது.

(4) இவ்விரண்டும் அவற்றால் குறிக்கப்படும். கிருபைகளை நாம் பெற்றுக்கொள்ளத்தக்க எத்தனங்களாகவும் அவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோமென்று நமக்கு நிச்சயப படுத்துகிற அத்தாட்சிகளாகவுமிருக்கின்றன. ஞானஸ்நானம் நம்மில் மறுஜென்மத்தை உண்டுபண்ணவும், கர்த்தருடைய இராபபோசனம் கிறிஸ்துவானவருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நமக்குப் பரிமாறவுந்தானே. இந்த முகாந்தரங்களையிட்டு இவை இரட்சிப புக்குப் பொதுபபட அவசியமானவை. கிறிஸ்தவர்களெல்லாரும் இவைகளிற் பங்குபெறக்கூடும். இவைகளிற் பங்குபெறத்தக்க சமயமும் ஏதுககளுமுடையவர்கள் இவைகளை அசட்டைசெய்தால், அவைகளால் குறிக்கபபடும் கிருபைக்கு அபாத்திரராகவே யிருபபார்கள்.

21. வினா. ஞானஸ்நானமாகிய சாக்கிரமெந்தைப்பற்றிய விஸ்தரிப்பில் கவனிக்கபபடத்தக்க ஓர் விசேஷமென்ன?

விடை. ஞானத்தாய் தகப்பன்மார் குழந்தையின்பேரால் வாக்குத்தத்தம்பண்ணிய விஷயங்களில் குணப்படுதல், விசுவாசம், கீழ்ப்படிதல் என்னும் மூன்றையும்பற்றி ஞானோபதேச ஆரமபத்தில் சொல்லியிருக்கிறது. இவ்விடத்திலோ குணப்படுதல், விசுவாசம் என்னும் இரண்டுமாத்திரம் எடுத்துரைக்கப்பட்டிருக கிறது. கீழ்ப்படிதல் அதாவது, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நமது ஜீவகாலமுதல் நடக்குதலானது குணப படுதலை ஒழுங்காயும் விசுவாசத்தின் பலனாயுமிருப்பதால் மூந்தின இரண்டில் அடங்கியதாக விடப்பட்டிருக்கிறது.

22. வினா. கர்த்தருடைய இராப்போசனம் ஏற்படுத்தப் பட்ட நோக்கத்தைபபற்றி இதிலே சொல்லியிருக்கிறதென்ன?

விடை. கிறிஸ்து பலியாக அடைகிற மரணத்தையும் அதினால் நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளையும் இடைவிடாமல் நினைவுகூருகிறதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஏனென்றால், அது பஸ்கா இராப்போசனத்தைப்போல் வருடத்தில் ஓரவிசை [illegible] யகாயிராமல், உலகமுடிவுபரியந்தம்

கொண்டாடப்பட்டுவரவேண்டியதாயிருப்பதால் அது நீடை-டிடா ஞாபகக்குறிப்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

23 வினா. மெய்யாகவும் நிச்சயமாகவும் விசுவாசிகளால் பாங்கி உட்கொள்ளப்படுகிற கிறிஸ்துவின் சரீரமும் ரத்தமும் என்பதில் இருக்கிறதென்ன?

விடை. அப்பத்துக்குந் திராட்சரசத்துக்குமுரிய பொருள்திரிகலாகிய தேவவசீகரமென்னும் உபதேசத்துக்கு இதமாய் இப்படி சொல்லியிருக்கிறதேயில்லை. நமது மீட்பருடைய மரணபுண்ணிய பலன்களை உத்தமவிசுவாசிகளும், பாத்திரமாய்ப் பந்திக்குச் சேருகிறவர்களுமாத்திரமே மெய்யான பங்கில் உட்கொள்ளுகிறார்கள். இப்போப்பட்டவர்களே ஞானவுயிரையும் பெலனையுமடைந்து விசுவாசத்தால் அவரோடொன்றாகி, எபே. 5. 30ல் வசனத்திருக்கிறபடி அவருடைய மாமசத்தின் அவயவங்களும் அவருடைய எலும்புகளுமாயிருக்கிறார்கள் என்ற கருத்தை உணர்த்தவென்றே இவ்வாறு இவ்வார்த்தைகள் ஞானக்கருத்தாயும் உவமானப்பொருளாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

24. வினா. கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் செய்யவேண்டிய பரிசோதனையைப்பற்றி இதில் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. அவர்கள் தங்கள் குணப்படுதலையும், விசுவாசத்தையும், அன்பையும்பற்றிப் பரிசோதனைசெய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தப் பரிசோதனைசெய்ய வேண்டிய வகையாவது சமயமாவது சுட்டிக்காட்டியிருக்கவில்லை. பொதுப்பட எக்காலத்திலும் நமது வழிகளைச் சீர்தூக்கிப்பார்ப்பதே நலம். இப்பரிசோதனைசெய்வதில கவலைத்தாழ்ச்சியாயாவது பிடப்பாயாவதிராமல், ஆறியமாகதுஉட்கருத்தாயிருப்பது அவசியம். இளக்கரிப்புக்கிடங்கொடாமலும், நய இச்சகமாய் நம்மைநாமே மோசம்போக்காமலும் பட்சபாதமற பரிசோதனைசெய்யவேணடும்.

25. வினா. ஞானோபதேசவினாவிடையைப் படிப்பிப்பதைப் பற்றிய ரூபிரிக்குச் சட்டமென்ன?

விடை. ஞாயிற்றுக்கிழமைகளிலும் பண்டிகைநாட்களிலும் மாலைச்செப ஒழுங்கில் இரண்டாம்பாடம் வாசித்தபின் அந்தந்தச் சேகரத்துக் குருவானவர் தமது சேகரத்தில் அனுப்பப்படும் பிள்ளைகளிலும் எத்தனைபேரைத் தெரிந்துகொள்வாரோ அத்தனைபேருக்கும்இந்தஞானோபதேசவினாவிடையில் ஒருபங்கைய

போதித்துச் சோதிக்கவேண்டுமென்று ரூபிக்கிற சொல்லியிருக்கிறது. இப்படிச்செய்வதால் ஒரு கணேனிலும் இதற்கிசைவாயச் சொல்லியிருக்கிறது. இப்படிச்செய்வதால் பிள்ளைகள கருததாய் கற்றுக்கொள்ளவும் கற்றுக்கொடுக்கிறவர்கள் தாங்களே அவைகளைத் தருந்தபடி கிரகித்துக்கொள்ளவும் கூடிவந்திருக்கும சபையார் அவைகளைப்பற்றி ஞாபகப்படுத்தப்படவும் எதுவாயிருக்கும். ஆதலால் இவ்வாறு நடத்திவருவது உத்தமமே.

26. வினு. ஞானோபதேச வினவிடையின் பொழிப்புரை என்ன?

விடை. I. ஞானஸ்நான உடம்படிக்கை.

1 அதின் சலாக்கியங்கள்.

2. அதின் கடமைகள்.

(a) வெறுக்கும ஆணை.

(b) விசுவாசிக்கும ஆணை

(c) கீழ்ப்படியும் ஆணை.

II விசுவாசப் பிரமாணமும் அதின் வியாக்தியம். சிறுபிள்ளைகள இரண்டாவது ஆணையைக் கைக்கொள்ளும்படி இது அவர்களைப் போதிக்கிறது.

III. பத்துக்கற்பனைகளும் அதின் வியாக்தியம். ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் மூதலாவது மூன்றாவது ஆணைகளைக் கைக்கொள்ளும்படி போதிக்கிறது.

IV. கர்த்தருடைய ஜெபமும் அதின் வியாக்தியம். ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு ஊழியஞ்செய்யும்படி தேவனுடைய உதவியைத் தேடும்படி போதிக்கிறது

V. பரிசுத்த சாக்கிரமெந்துக்கள்.

1. அவைகளில் காணப்படுகிற புறம்பான அடையாளம்.

2. அவைகளின் ஆவிக்குரிய உள்ளான கிருபை

3. அவைகளைச்சேர்ந்த கடமைகள்.

———»»««———

XV. CHAPTER.

THE ORIGIN OF THE RITE OF CONFIRMATION.

Objections against it answered. The Primitive customs of the Rite-Imposition of Hands-Beneficial results of Confirmation Invocation of the Holy Ghost explained.

பதினைந்தாம் அதிகாரம்.

திடப்படுத்தலைக்கொடுக்கும் முறைமையைப் பற்றியது.

1. வினா. திடப்படுத்தல் என்பதென்ன? இப்பெயரின் கருத்தென்ன?

விடை. பாலியத்தில் ஞானஸ்நானம்பெற்ற பிள்ளைகளைத் தங்கள் பாலியவயதில், தாங்கள் பண்ணின ஞானஸ்நான உடம்படிக்கையின் தன்மையையும் கடமைகளையும்பற்றித் திட்டமாய்ப் போதிக்கப்பட்டபின்பு தேவனுக்குத் திருச்சபைக்கு முன்பாக அவைகளைத் தங்கள்பேரில் ஏற்றுக்கொண்டு உறுதிபண்ணும் திடப்படுத்துஞ் சடங்குக்கே திடப்படுத்தல் என்னப்படும், அல்லது சிலர் சொல்லுகிறபடி அவர்கள் தங்கள் பேரால் செய்யப்பட்ட பொருத்தனைகளை நிறைவேற்றத்தக்க பெலனை அச்சமயத்தில் தேடி தேவனுடைய ஆவியின் கிருபையால் திடப்படுத்தப்படுவதைப்பற்றி இப்பெயர் அமைந்திருக்கலாம்.

2 வினா. இச்சடங்கின் உற்பத்திமூலத்தைப்பற்றி என்ன தெரியும்? அது திருச்சபையில் நிலைபெற்று வழங்கிவருவதற்கு ஆதாரமென்ன? இச்சடங்கு யாரால்மாத்திரம் நிறைவேற்றப்படும்?

விடை. உதவிக்காரனாகிய பிலிப்பு சமாரியரைக் குணப்படுத்தி ஞானஸ்நானம்பண்ணுவித்ததின்பேரில் அப்போஸ்தலராயிருந்த பேதுருவும், யோவானும் அவன் தொடங்கின கிரியையை நிறைவாக்கும்படி அனுப்பப்பட்டார்கள். ஏனெனில் பிலிப்பு அதை நிறைவேற்றத்தக்க அதிகாரமற்றவனாயிருந்தான். அனுப்பப்பட்டவர்கள் வந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் மேல் கைகளை வைத்தபொழுது அவர்கள் பரிசுத்தாவியைப்

பெற்றார்கள் (அப். 8. 17.). அதுபோல இக்காலத்திலும் கண்காணிமார் அப்போஸ்தலர்களுடைய பட்டத்தில் வந்த பின்னடியாராக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதினாலே அவர்களாலே இப்போது நடப்பிக்கப்பட்டுவருகிறது. சிரசின் மேல் கைகளை வைக்குதலானது கிறிஸ்துமார்க்கத்தின் விதிகிரியாயங்களில் ஒன்றாக ஞானஸ்நானத்தோடு சேர்க்கப்பட்டிருப்பதால், அச்சடங்கெங்கும் நிலைபெற்றுவருவதற்கு ஆதாரத்தைக் காணலாகிறோம்.

3. வினா. இது முற்காலத்தில் கொடுக்கப்பட்ட விதமென்ன? அதற்கும் இங்கிலாந்துசபை வழக்கத்துக்கும் இருக்கிற வித்தியாசமென்ன? தனித்தனியாய் ஒவ்வொருத்தர்பேரிலும் கைகளைவைப்பது அவசியமோ?

விடை. 2-ம் நூற்றாண்டின் முடிவிலே பரிசுத்தாவியானவருடைய ஈவையைக் குறிக்கும்படி கண்காணியாரால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட கிறிஸ்ம் (Chrism) என்ற ஒர்வகைத் தைலத்தால் அபிஷேகஞ்செய்யும் வழக்கம் உண்டாயிற்று. இங்கிலாந்துசபையிலோ, கைகளை மேல்வைத்தலாகிய ஒரே சடங்குமாத்திரம் அப்போஸ்தலரால் பிரயோகிக்கப்பட்டு அநுமதிபெற்றதாக ஒப்புக்கொள்ளப்பட்டும் வழங்கப்பட்டும்வருகிறது. அப்போஸ்தலருடைய பின்னடியார் கண்காணிமாரானதால் அவர்களே திடப்படுத்தலைக் கொடுக்கவேண்டுமென்ற சட்டமும் இங்கிலாந்துசபையிலுண்டு. வேறு சில சபைகளிலோ அது நிறைவேற்றப்பட்டுவருகிறதில்லை. மேலும் கண்காணியார் ஒவ்வொருத்தர்பேரிலும் கைகளை வைக்கவேண்டுமென்று ரூபிரிக்கில் கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கெலாசுவுடைய சாக்கிரமெந்தேரியிலும் (Sacramentary of Gelasius) மற்றுஞ் சில பூர்வ ஆகமங்களிலும் திடப்படுத்தலைப்பெற வந்திருக்கிறவர்களனைவருக்கும் மேலாக கைகளையுயர்த்தி ஆசீர்வாதங் கூறும் வழக்கம் உண்டென்று கண்டிருக்கிறது. இருவழக்கங்களும் பழுதுள்ளவையல்ல.

4. வினா. திடப்படுத்தலைப் பெற்றவர்களுக்குண்டாகும் பலனைப்பற்றிய விஷயத்தில் முற்காலத்துக்கும் இக்காலத்துக்கும் வித்தியாசமென்ன?

விடை. அக்காலத்தில் திடப்படுத்தலைப் பெற்றவர்கள் பரிசுத்தாவியின் அருள் அனுக்கிரகங்களை வெளியரங்கமாய்ப் பெற்றுக்கொண்டு பல புதுமைகளை நடப்பித்தார்கள். இக்காலத்தில் அதைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள், பசாசுக்களைத் துரத்த

வாவது, மறுபாஷைகளைப் பேசவாவது, சர்ப்பங்களை மிதிக்கவாவது, சாவுக்கினமானவைகளைக் குடித்தும் அதால் சேதமடையாதிருக்கவாவது, வியாதியஸ்தர்மேல் கைகளைவைத்துக் குணமாக்கவாவது வரம்பெற்றுக்கொள்ளுகிறதில்லை. என்றாலும், தீய ஆசாபாசங்களுக்கு வழிவிடுகிற அசுத்த ஆவியைத் துரத்தவும், பெருமைக்குத் தூண்டிவிடும்பேயை மடிவிக்கவும், ஆத்தும சத்துராதிகளை மேற்கொள்ளவும், நோய்கொண்ட ஆவிக்கு ஆறுதல் பகரவும், சோதனை, துன்மாதிரி, தீயோரின் சாவகாசம் இவை முதலியவைகளால் சேதமடையாதிருக்கவும் வரமும் சக்தியும் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

5. வினா. திடப்படுத்தல் பெறுகிறவர்களில் அநேகர் அதால் பலன் பெறாதிருக்கிறார்களேயென்று இம்முறைமைக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைக்குச் சமாதானமென்ன?

விடை. இம்முறைமையைப்பற்றி இவ்வாட்சேபனை சொல்லப்படுவதாயிருந்தால் மற்ற முறைமைகளைப்பற்றியும் இப்படியே சொல்லவேண்டியதாய் நேரிடும். ஜெபம், ஆராதனை, ஞானஸ்நானம், இராபபோசனம் முதலிய முறைமைகளை அனுசரித்துவருகிறவர்களில் எத்தனைபேர் அவைகளால் சீர்பாடு அடையாதேபோகிறார்கள். என்றாலும் இம்முறைமைகள் அவபத்தியென்று சாதிக்கலாமா? திடப்படுத்தலைப்பற்றியும் இப்படி கருதிக்கொள்ளவேண்டுமேயல்லாது வேறல்ல.

6. வினா. திடப்படுத்தலைப் பெறுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும்?

விடை. (1) ஞானஸ்நான உடம்படிக்கையையும் அதில் தேவன் தங்களுக்கருளிய வாக்குத்தத்தத்தையும் தாங்கள் அவருக்குப்பண்ணிய வார்த்தைப்பாட்டையுங் கிரகித்துணர்ந்துகொள்ளத்தக்க புத்தியடைந்த வயதுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(2) அவர்கள் இவைகளை அறிந்துகொள்ளத்தக்க புத்தி திறமையுடையவர்களாயிருப்பதுமன்றி அவைகளைப்பற்றி திட்டமாய் போதிக்கப்பட்டுமிருக்கவேண்டும்.

(3) தங்கள் ஞானத்தாய் தகப்பன்பேரால் பண்ணப்பட்ட உடம்படிக்கையை தாங்களே ஒப்புக்கொண்டு அங்கீகரிக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(4) தாங்கள் பண்ணுகிற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றல் நிர்ணயம் பண்ணியிருப்பதற்கு அத்தாட்சியாக இச்

போதே அவர்கள் தங்கள் பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, தங்கள் ஜீவகாலமெல்லாம் தேவனுடைய கற்பனைகளின்படி நடக்கத் தேவ கிருபையைமுன்னிட்டு உறுதியாய் தீர்மானம்பண்ணியிருக்க வேண்டியது.

7. வி்னு. ஜெபபுத்தகத்தில் கண்டிருக்கிறபடி திடப்படுத்தலை கொடுக்கும் முறைமையை சுருக்கமாய்ச் சொல்லு

விடை. முதலாவதாக திடப்படுத்தப்பட வந்திருக்கிறவர்களை நோக்கி ஒரு அறிக்கை வாசிக்கப்படும். அதில் அவர்களுக்கு ஞானஸ்நான உடம்படிக்கைகள் நினைப்பூட்டப்படுகிறதன்றி, அவைகளைப் புதுப்பித்துக்கொள்ள அவர்கள் ஆயத்தப்பட்டிருக்கிறார்களோ என்று கண்காணியாரால் அவர்களிடத்தில் கேள்விகேட்கப்படுகிறதுண்டு. அதற்கு பறுமொழியாக அவர்கள் சம்மதம் உரைத்தபின்பு, தகுதியான சில சுருக்கவாசகங்களும் எதிர்மொழிகளும் திடப்படுத்தலை பெறுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவருடைய நானுவித கிருபைவரங்கள் அருளப்படுகிறதற்காக ஜெபமும் கண்டிருக்கிறது இவைகளில் இச்செபமே முக்கியமானதும் இங்கிலாந்துசபையில் 1200 வருஷங்களாய் வழங்கிவருகிறதுமாயிருக்கிறது இச்செபத்துக்குபபின் கைகளை மேல்வைக்குதலும கண்காணியாருடைய ஆசீர்வாதமுறைமையும், அவைகளுக்குப்பின்பு கர்த்தருடைய ஜெபமும், சிறப்பலங்காரமான இரு சுருக்க ஜெபங்களும், முடிவுரையான ஆசீர்வாதமும் முறைமுறையே அடுத்து வரும்.

8. வினு. சம்மதிக்கிறேன் என்பதில் கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. இது தேவனை நோக்கிச் சொல்லப்படும் அறிக்கையாயிருக்கிறது. உத்தமமாய்ச் சொல்லப்படாவிட்டால் அவரிடத்தில் பொய்சொல்லுவதற்கு ஒத்திருக்கும்; கவனத்தாழ்ச்சியாய்ச் சொல்லப்பட்டால் அவரை அவமதிப்பதற்கு ஒத்திருக்கும்; ஆதலால் மனமும் நாவும் ஒத்து இதை உரைக்கவேண்டும். மனிதருக்கு மனிதர் உடம்படிக்கை மீறுவது பாவமானால்,தேவனேடு பண்ணின உடம்படிக்கையை மீறுவது எவ்வளவு அகோரமானபாவம்! இவைகளையெல்லாம் உணர்ந்து உத்தமமாய் இவ்வார்த்தைப்பாட்டை உரைக்கிறவனே அதின்படி செய்ய முயற்சிப்பான்.

9. வினா. நமக்கு சகாயம் முதலியவை என்பது இவ்விடத்தில் வழங்கப்பட்டிருக்கிறதென்று காட்டு.

விடை. நம்மாலே நாமாய் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்பது வேதசத்தியமாயிருக்கிறதுமன்றி, ஒவ்வொருவரும் தன்தன அனுபவத்தினாலே அறிந்துகொள்ளும் உண்மையாயுமிருக்கிறது. நமக்குண்டாயிருக்கிற ஆத்தும சத்துருக்கள் பலவாயிருந்தாலும் நாம் சோர்வடையத்தேவையில்லை. ஏனெனில் நமக்குச் சகாயம் கர்த்தரிடத்திலிருக்கிறது. அவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு நச் சகாயம் அருள சித்தமும் சத்துவமும் உள்ளவராயிருக்கிறார். நாம் இச்சத்துருக்களுக்கு எதிர்த்து நிற்கும்படி நம்முடைய பெலப்படுத்துவதற்கென்றே திடப்படுத்தல் முறைமை நியமிக்கப்பட்டிருக்கிறது.

10 வினா. பின்வருகிற ஜெபத்தைப்பற்றி கவனிக்கவேண்டியதென்ன?

விடை. இச்செபத்தில் பரிசுத்தாவியானவருடைய அருளுக்காக மன்றாடுகிறோம். கி பி. 494லுள்ள ஒரு Ritual என்னும் புஸ்தகத்தில் இச்செபம் கண்டிருக்கிறது. இதற்கு முன்னதாயுள்ளதென்று சொல்லுகிறவர்களுமுண்டு. பன்னிரு நூற்றாண்டளவாய இச்செபம் நமது சபையில் வழங்கப்பட்டுவருகிறது. தேவன் நமக்குப் பாராட்டிய இரக்கத்துக்காக துதி தோத்திரமும், அவ்விரக்கத்தை நமதுபேரில் பெருகச்செய்வதற்குப் பண்ணும் மன்றாட்டுகளும் இதிலுண்டு. ஏசாயா, 11. 2ல் கண்டிருக்கிற ஆவியின் ஏழுவரங்களை நமக்கு அனுக்கிரகிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

11. வினா. கைகளை மேல்வைக்குதல் புராதீனமாயுள்ள சடங்குதானென்று காட்டு.

விடை. ஆதி. 48. 14. எண். 27. 18. பரி. மத். 19. 13. பரி. மாற். 10 16. பரி. லூக். 4. 40. அப். 8. 15. எபி. 6. 2. திருச்சபையிலும் இது முக்கியமாய் வழங்கப்பட்டுவருகிறது. இது அபபோஸ்தலரால் அனுமதிபெற்ற சடங்கென்று லுத்தர், கால்வின் முதலியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரோமானித்தரோ பூர்வ வழக்கத்தைவிட்டு தங்கள் சொந்தக் கட்டுப்பாடான மற்றச் சடங்குகளால் அதை பழுதுபடுத்தியிருக்கிறார்கள்.

12. வினா. கண்காணிமார் தங்களுக்குச் சித்தமானபடி பரிசுத்த ஆவியை கொடுக்கும்படி திருச்சபை கற்பிக்கிறதோ?

விடை. இல்லை. பரிசுத்தாவியின் வரத்தை தேவன்தாமே அருளிச்செய்யும்படி அவர்கள் வேண்டிக்கொள்ளுவாரகள்; அவர்கள் வேண்டுதலின்படி கர்த்தர் கட்டளையிடவும் செய்கிறார். ஆனால் திடப்படுத்தல்பெற வருகிறவர்கள் அபாத்திரராயிருந்தால் அப்படி நடவாது.

13. வினா. கர்த்தருடைய ஜெபத்துக்குப் பின்வருகிற சுருக்க ஜெபத்தைபபற்றி கவனிக்கபபடத்தக்கதென்ன?

விடை. கண்காணியார், தாம் கைகளை மேல்வைத்த சடங்கு உபயோகமற்றதாய்ப போகாமல் பலிதமாகும்படி இதில் பிரார்த்திக்கிறார். அப்போஸ்தலருடைய மாதிரிப்படி தாமும் கைகளை மேல்வைத்தாலும் கர்த்தர்தான் பல பாகத்தை கட்டளையிடவேண்டுமாதலால், அவர் தமது தயவுள்ள கரத்தை அவர்கள மேல் வைத்தருளவும், அவருடைய ஆவியானவர் எபபொழுதும் அவர்களிடத்தில் தங்கித்தரித்திருக்கவும்வேணடுமென்று ஜெபிக்கிறார்.

14. வினா. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கைகளை வைப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. பழைய ஏற்பாட்டில் ஆசீர்வாதங்கொடுப்பதற்கும் பட்டங்கொடுபபதற்கும்சிரசின்மேல கைகள்வைக்கப்பட்டது. உதாரணமாக, யாக்கோபு தன் கைகளை வைத்து எப்பிராயீமையும் மனாசேயையும் ஆசீர்வதித்தான்; மோசே தன் கைகளை யோசுவாவின்மேல் வைத்து தனககுபபின் தன் பட்டத்துக்கு வரும்படிசெய்தான் (எண். 27. 18-20.). புதிய ஏற்பாட்டில் நம்முடைய ஆண்டவர் சிறுபிள்ளைகள்மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்; வியாதிஸ்தர்மேல் கைகளை வைத்து அவர்களைச் சுகப்படுத்தினார். எபி. 6: 1, 2ல் கைகளை வைக்குதல் தேவநியமகம் பெற்றதும் கிறிஸ்துவின் உபதேசத்தைப்பற்றிய சடங்காகவும் சொல்லபபட்டிருக்கிறதால், திடப்படுத்தலைக் குறிக்குமென்று தோன்றுகிறது. பரி. பேதுருவும் யோவானும் சமாரியர்மேல் கைகளைவைத்துத் திடப்படுத்தினார்கள். பரி. பவுல் யோவான்ஸ்நானகனுடைய சீஷர்களாயிருந்த எபேசியர்மேல் கைகளை வைத்தார்; அப்பொழுது பரிசுத்தாவி அவர்கள்மேல் இறங்கினார். (அப். 19. 6. 1 கொரி. 12. 10.)

15. வினா. பரிசுத்தாவியின் ஏழு கனிகளெவை?

விடை. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். (கலா. 5: 22, 23.)

16. வினா. பரிசுத்தாவியின் ஏழுவரங்களின் அர்த்தமென்ன?

விடை. ஞானம், தேவையானவொன்றைத் தெரிந்துகொள்ளு தல்.

விவேகம், அதை எப்படி பெறலாமென்று அறிதல்.
ஆலோசனை, தேவ உதவியை அதற்கென்றுதேடுதல்.
பெலன், அவர் நடத்தும்வழியில் பின்செல்லுதல்.
அறிவு, தேவனை அறியும்படி படித்தல்.
மெய்த்தேவபக்தி, அவனையறிந்து அவனைப்போல் ஆகுதல்.
பரிசுத்த பயம், வணக்கத்துடனே அவனைத் தொழு துகொள்ளுதல்.

17 வினா. திருபங்களில் திடப்படுத்தலை எதற்கு ஒப்பிட்டிருக்கிறது?

விடை. பரி. பவுல் எபே. 1. 13, 14ல் பரிசுத்தாவியால் முத்திரைபோடப்பட்டீர்களென்றும், ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின அச்சாரமாயிருக்கிறார் என்றுஞ் சொல்லுகிறார். எபே. 4. 30ல் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற தேவனுடைய பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் என்கிறார். கிரேக்கச்சபை திடப்படுத்தலில் முத்திரையொன்று கொடுக்கும வழக்கம் இருந்தது; சிலவேளைகளில் தைல அபிஷேகமும் நடந்தது. பரி. பவுல் 2 கொரி. 1. 21ல் அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தையுங் கொடுத்திருக்கிறார். நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே என்கிறார். அப்படியே 1. யோவான், 2. 20ல் நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம்பெற்றீர்கள் என்கிறார்.

18. வினா. ஆதிச்சபையில் திடப்படுத்தல் கொடுக்கப்பட்ட காலமும் விதமுமென்ன?

விடை. சிறுபிள்ளைகளுக்குமுதலாய் ஞானஸ்நானம் பெற்றவுடனே கொடுக்கப்பட்டது. கண்காணியார் முதலாவது தைலத்தால் அபிஷேகஞ்செய்து அதின்பின்பு கைகளை வைத்தார். இப்படிச் செய்ததாக தெற்துல்லியான் சாட்சிபகருகிறார். அவருடைய காலத்துக்குப்பின்னும் தைல அபிஷேகம் நடந்து வந்ததாகத் தெரியவருகிறது. மத்தியகால இங்கிலீஷ் முறைமையில் திடப்படுத்தல்முறைமை ஞானஸ்நானத்தைவிட்டுப் பிரிக்கப்பட்டு, ஏழுவயதுவரை திடப்படுத்தல் கொடுக்கப்படவில்லை.

19. வினு. தற்கால இங்கிலீஷ்முறைக்கும் முந்தினதுக்கும் வித்தியாசமென்ன?

விடை. (1) தைலஅபிஷேகமும் சிலுவைவரைதலும் நின்றுபோயிற்று.

(2) பகுத்தறிவுள்ள வயதுவருமட்டும் திடப்படுத்தல் கொடுக்கவில்லை.

(3) திடப்படுத்தற்காரர் யாவர்மேலும் பொதுவாய் கைகளை உயர்த்தி ஆசீர்வாதங்கூறாமல், ஒவ்வொருவருடைய சிரசின்மேலும் கைகள் வைக்கப்படுகிறது.

20. வினு. கிரேக்கச்சபை ஒழுங்குக்கும் லத்தீன்சபை ஒழுங்குக்கும் இருக்கப்பட்ட வித்தியாசமென்ன?

விடை. (1) கிரேக்கச்சபை கைகளை சிரசின்மேல் வைக்கிறதில்லை.

(2) குருமாரை திடப்படுத்தல் கொடுக்க விட்டிருக்கிறார்கள்.

(3) ஞானஸ்நானத்தோடே திடப்படுத்தலும் நடந்துவருகிறது.

21. வினு. திடப்படுத்தல்முறையின் சுருக்கத்தைச் சொல்லு.

விடை. i. முகவுரை. ii. திடப்படுத்தல் பெறுகிறவர்கள் செய்யும் உறுதிப்பாடு. iii. கண்காணியார் அவர்களை உறுதிப்படுத்தி திடப்படுத்தல். iv. ஜெபங்களும் ஆசீர்வாதமுமே.

XVI. CHAPTER.

MARRIAGE ORDAINED BY GOD.

Marriage ordained by God Impediments to lawful marriage. The Espousals—The Betrothal—The Wedding, The Prayer, and Benediction—Change lately made in England in the law regarding marriage—seasons in which marriages are stopped.

பதினாறும் அதிகாரம்.

பரி. விவாகத்தை நிறைவேற்றுகிற முறைமையைப் பற்றியது.

---

1. வினு. விவாகசம்பந்தமானது மார்க்கத்துக்கடுத்த சடங்கென்று தெரியவருவதெப்படி?

விடை. இப்பரிசுத்த நிலைமையை ஏற்படுத்தினவர் தேவனே என்பது பிரத்தியட்சப்படுவதால் இது மார்க்கச்சடங்

கேயன்றி வேறல்லவென்று நாம் நிச்சயித்துக்கொள்ளலாம். ஆதிவிவாகத்தை ஏற்படுத்த ஆசாரியர் தேவனே. இந்த நிலைமை தேவனால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட இணைப்பென்றும் அதை பிரிக்கும் அதிகாரம் அவருக்கேயன்றி வேறொருவருக்கும் அடுத்ததல்லவென்றும் ஆண்டவர் காட்டியிருக்கிறார். கிறிஸ்து மார்க்க ஆரம்பமுதல் தேவதிருப்பணிவிடைக்காரரே விவாகத்தை நிறைவேற்றிவந்திருக்கிறார்கள்.

2. வினா. கிறிஸ்துசபையில் எக்காலமும் விவாகமானது மார்க்க ஆசாரமாக மதிக்கப்பட்டதுண்டா?

விடை. திருச்சபை பிதாக்களில் அநேகர் விவாகமானது மார்க்க ஆசாரமென்று சாட்சிபகர்ந்திருக்கிறார்கள். தெர்த்துல்லியான் என்பவர் சொல்லியிருக்கிறதாவது, திருச்சபையை ஒரு ப்பந்தஞ்செய்த கருணையை உறுதியாக்கி ஆசீர்வாதக்கூறலால் முத்திரைபோட்டு, தேவதூதர்களால் பிரஸ்தாபப்படுத்தி பிதாவானவர் தாமே ஒப்புக்கொண்டிருக்கிற விவாகமங்களத்தை தகுந்த விதமாய் விவரித்துச்சொல்ல யாராலே கூடுமென்பதே.

3. வினா. பரி. விவாகத்தை நிறைவேற்றுகிற முறைமை பூர்வீகமாயுள்ளதுதானா?

விடை. கிரேக்கச்சபையிலும் லத்தீன்சபையிலும் விவாகம் நிறைவேற்றுகிற முறைமைகள் பூர்வீகமாயத்தானே அமைக்கப்பட்டிருந்தனவென்றாலும், வரவர அவபத்தியான சடங்குகளால் அது அலட்சியபண்ணப்பட்டதால் திருச்சபை சீர்திருத்தலை நடத்தினவர்கள் அவைகளைத் தள்ளிப்போட்டு மிகவும் மேன்மையாகவும். பூர்வீகமுறைமைக்கு இணக்கமாகவும் இம்முறைமையை அமைத்தார்கள்.

4. வினா. ஒழுங்கீன விவாகத்தைத் தவிர்க்கும்பொருட்டு இம்முறைமைக்கு அடுத்த சட்டதிட்டங்களென்ன?

விடை. (1) ஒழுங்காய் பட்டம்பெற்ற குருவானவரேயல்லாது வேறெவராவது விவாகத்தை நிறைவேற்றக்கூடாது.

(2) அந்தரங்கமாயாவது அடாதவிதமாயாவது அது நிறைவேற்றப்படாதபடிக்கு மூன்று ஞாயிறுகளில் அல்லது திருநாட்களில் அறிக்கை கூறப்படவேண்டும். லைசென்ஸ் என்னும் (License) விவாக உத்தரவைப் பெற்றிருந்தாலோ இப்படிக் கூறப்படத் தேவையில்லை.

(3) பகல்வேளையில் எட்டுமணிநேரத்திற்கும் 12 மணி நேரத்திற்குமுட்பட அது நிறைவேற்றப்படவேண்டும்.

(4) தேவாலயத்தில் அது நடப்பிக்கப்படவேண்டும்.

(5) இனஜனத்தார் கூட்டத்தில் அது நடப்பிக்கப்படவேண்டும்.

(6) நியாயமான தடங்கலிருக்குமானல் அதை ஏற்கனவே தெரியப்படுத்தவேண்டும்.

5. வினு. நியாயமான தடங்கல்களெவை?

விடை. மூன்றென்று சொல்லலாம்.

(1) முன் விவாகம்பண்ணிய தாரம் இன்னுமிருக்கிறது.

(2) லேவி. 18-ம் அதிகாரத்தில் வெளியரங்கமாய் அல்லது குறிப்பாய்ச்சொல்லிய இனவகைப்பட்டிருக்கிறதும்.

(3) தகுந்த பிராயம் இல்லாமலும் பெற்ருேர் அல்லது பிள்ளையாளிகள் சம்மதியில்லாமலுமிருக்கிறதுமே.

6. வினு. முற்காலத்தில் ஆராதனையின் எச்சமயத்தில் விவாகஅறிக்கை கூறப்பட்டது? இக்காலத்தில் எப்பொழுது கூறப்படுகிறது? இம்மாறுதலுக்கு முகாந்தரமென்ன?

விடை. ஆதி பூர்வீக வழக்கமாகிய விவாகஅறிக்கை முற்காலத்தில் நிசேயாவிசுவாசப்பிரமாணத்திற்குப் பின் கூறப்பட்டது; இச்சமயத்திலேயே மற்றுந் திருச்சபைசட்டங்களும் பிரசித்தஞ்செய்யப்படும். பிற்காலத்திலோ விவாகஅறிக்கையை அதிக வெளியரங்கமானதாக்கும்பொருட்டு இரண்டாம ஜார்ஜ் என்ற அரசரின் (ii George.) இரண்டாம் வருடமுதல் இரண்டாம்பாடத்திற்குப் பின்னர் பிரசித்தமாய்க் கூறப்படவேண்டுமென்று கட்டளைபிறந்தது.

7. வினு. விவாகஞ்செய்யப்போகிறவர்கள் வெவ்வேறு சேகரத்தாராயிருந்தால் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றியரூபிரிக்கென்ன?

விடை. இரண்டு சேகரங்களிலும் அறிக்கை கூறப்படவேண்டும். மூன்றுதரம் அறிக்கையாயிற்றென்று ஒரு சேகரத்துக் குருவானவர் அத்தாட்சி எழுதிக்கொடாவிட்டால் வேறு சேகரத்துக் குருவானவர் அவர்களுக்கு விவாகத்தை நிறைவேற்றக்கூடாது.

8. வினு. விவாகசம்பந்தம் திருச்சபையினுலும், இராசாங்கத்தாரினுலும் நேர்நிலையாய் மதிக்கப்பட்டுவருகிறதா? நமது,

ஆண்டவருடைய உபதேசத்தால் நிலைநிறுத்தப்பட்டிருக்கிற போதனையென்ன?

விடை. குராம்வெல் (Cramwell) என்ற மந்திரி ஆலோசனைக்கருத்தனின்காலத்தில ஒப்புக்கொள்ளப்பட்டபடியேஇராசாங்கத்தார் விவாகசம்பந்தத்தை தேசானுசாரபொருத்தமாகவே எண்ணிவருகிறார்கள். ஆனால் மெய்க்கிறிஸ்தவர்கள் யாவரும திருச்சபைச்சாதனைபபடி தேவனுடைய வசனங்களுக்கு எற்றவிதமாய் விவாகசம்பந்தத்திற்கு உட்படாதவர்கள் தேவனால் இணைக்கப்பட்டவர்களல்லவென்று ஒப்புக்கொண்டு, விவாகத்தை வைதீகச்சடங்காக மதித்துவருகிறார்கள். நமது ஆண்டவருடைய காலத்திலிருந்த யூதர் விவாகத்தை தேசாசாரமாக எண்ணிக்கொண்டுவந்தார்கள். ஆனால் அவர் அவ்வழக்கத்திற்கு மூலமான இருதயக்கடினத்தைமாத்திரம் கடிந்துகொண்டபோதிலும் அவ்விவாகசம்பந்தத்தைக் குற்றபபடுத்தி பேசியிராவிட்டாலும், விவாகமானது திவ்விய எற்பாடுதான் என்பதைத் தெளிவாய்க் கூறியிருக்கிறா அதனால அது மாராக அனுசாரந்தானென்று ஒப்புகக்கொள்ள நியாயம் விளங்குகிறது.

9 வினா. எஸ்பவுஸலஸ் (Espousals) என்பதென்ன? பூர்வீகத்தில் அது நிறைவேற்றபபட்ட ஒழுஙகென்ன?

விடை இம்முறைமையின் முதற்பங்கு எஸ்பவுஸலஸ் என்னபபட்டது. ஏனெனில், பூர்வீகசபையிலே இவ்விவாகசம்பந்தத்துக்குட்பட்டவர்கள் சாட்சிகளுக்குமுன்பாக கண்காணியாருடைய அல்லது குருவானவருடைய சமுகத்தில் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளுகிறதுண்டு. இதின்பேரில் அகுஸ்தீன் என்பவர் சொல்லுகிறபடி, விவாகடாப்புகளென்று அர்த்தங்கொள்ளும் தாபுலி மாற்றி முனிஎலிஸ் என்ற ரிஜிஸ்தர் புத்தகத்தில் அவ்விருவருடைய கையெழுத்துப்போடப்படும். மணவாளனானவன் தான்பண்ணின உடன்படிக்கைக்கு அத்தாட்சியாக ஸ்திரீக்கு ஒரு மோதிரங் கொடுப்பான்; கழுத்தில்தாலியைக் கட்டுவான்.

10 வினா. இம்முறைமைக்கு ஆரம்பமாகக் கண்டிருக்கிற முகவுரையின் நோக்கமென்ன?

விடை. இவ்விவாகம் செய்யபபோகிறவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாய் அதை மதிக்கவும் எவ்விதமாய் நடந்துகொள்ளவும்வேண்டுமென்று இதில் காட்டியிருக்கிறது. இந்த ஏற்பாடு துய்யதானதும், திவ்விய அனுமதியுள்ளதும், ஞானார்த்

தமுள்ளதும், மனிதருக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதும், இருதயத்தைத் துய்யசுத்தாங்கத்தில் உட்படுத்தத்தக்கதும், மனிதன் பாவமற்ற நிலைமையிலிருந்தபொழுதே ஏற்படுத்தப்பட்டதும், கிறிஸ்துவானவருக்கும் அவருடைய சபைக்குமுரிய ஞானஐக்கியத்தைக் காண்பிக்கத்தக்கதுமாயிருக்கிறதென்றும், நமது இரட்சகர் தாமே தமது திருச்சன்னிதானத்தால் அதை மேன்மைப்படுத்தி தமது முதல் அற்புதத்தை அதில் நடப்பித்தார் என்றும் கவனித்துக்கொள்ளுகிறதும், அவர்கள் தகுந்த பயபக்தியோடு அதை நடத்திக்கொள்ள கருத்துள்ளவர்களாயிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

11. வினா. இவ்விவாகஞ் செய்யப்போகிறவர்கள் இருவருடைய சம்மதியை கேட்டுக்கொள்வது அவசியமா?

விடை. இவ்விவாகமானது தேசாசார உடன்படிக்கையாக பாவிக்கப்படுமிடத்து இருவருடைய சம்மதியும் உண்டாயிருப்பது அவசியந்தான். ஈசாக்கு ரெபெக்காள் என்பவர்களுடைய உதாரணத்தால் இதை அறிந்துகொள்ளலாம்.

12. வினா. புருஷன்கொடுக்கும் வார்த்தைப்பாடென்ன?

விடை. தன் பெண்ஜாதியை நேசிப்பதாக முதலாவது வார்த்தைப்பாடு கொடுக்கிறான் (எபே. 5 29.). சிநேகமாகிய இது அவனிலிருந்தால் மற்றக் கடமைகளெல்லாம் அவனுக்கு மகா அருமையாய்க் காணப்படும்; அப்புறம் துன்பத்திலும் துக்கத்திலும் அவளைக் கனவீனம்பண்ணாமல், அவள் புருஷனுக்குத் தகுந்த துணையும் ஆறுதலுமாக அமைக்கப்பட்டிருப்பதற்காக அவளை கனம்பண்ணுவதாகவும், சுகத்திலும் துக்கத்திலும் அவளுக்குவேண்டிய உதவிகளைச் செய்து காப்பாற்றுகிறதாகவும் (எபே. 5. 29.), விவாக உடன்படிக்கையின் பிரதான நோக்கத்தை தவிர்க்கும் விபசாரம், பல மனைவி படைத்தல், கொண்டவளைத் தள்ளிவிடுதல், இவைமுதலியவைகளுக்கு இடங்கொடாமல் இருவரும் உயிரோடிருக்குங் காலமெல்லாம பிறர்முகம் பாராமல் அவளுக்கே புருஷனாயிருக்கிறதாகவும் (மல். 2. 15, 16. 1 கொரி. 7. 10) வார்த்தைப்பாடு கொடுக்கிறான்.

13. வினா. ஸ்திரீயானவள் கொடுக்கும் வார்த்தைப்பாடென்ன?

விடை. முந்தின வார்த்தைப்பாட்டைப்போலவே இதுவுமிருக்கிறது; கீழ்ப்படிந்து பணிவிடைசெய்வேன் "என்கிற ஒன்

றதான் இதில் கூட்டியிருக்கிறது. தேவன்தாமே இப்படி கற்பித்திருக்கிறார். புருஷர் பெண்சாதிகளைச் சிநேகிக்கும்படி கற்பித்துமிருக்கிறது, பெண்சாதிகள் புருஷருக்குக் கீழ்ப்படியவுங் கற்பித்திருக்கிறது.

14. வினா. மனைவியானவள் கீழ்ப்படிந்து பணிவிடைசெய்யவேண்டுமென்கிற காரியத்தைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. மனிதர் நித்தியபிதாவின் திருச்சந்நிதானத்தை விட்டுத் தள்ளப்பட்டதும், நமது ஆத்துமா அசுத்தத்தால் நிரப்பப்பட்டதும், வானவரின் சாபத்துக்கு நாம் உட்படவும் பண்ணினதும், நமக்கு ஏற்பட்ட இராட்சகாரிமித்தமேயல்லாது ஸ்திரீயைச் சத்துருவாக்கிப் பயமுறுத்தினதினாலும் இருக்கிறதே அதிகப் பாவத்தை அது நமக்கு நினைப்பூட்டுகிற ஞாபகக் குறிப்புதான். மனைவியானவள் தன் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து பணிவிடைசெய்வதாலும் புருஷன் அவளை அடிமையைப்போல் நடத்தவேண்டுமென்பதல்ல; ஒருவருக்கொருவர் இணங்கி இசைந்து பொருந்தி நடந்துகொள்ளவேண்டுமென்பதே காரியம். மனைவியானவள் அதிக கனத்தைச் செலுத்துமிடத்து புருஷனானவன் அதிக அன்பைப் பாராட்டுவது கடமை.

15. வினா. விவாகத்தில் உபயோகிக்கப்படுகிற மோதிரம், தாலி என்னும் அடையாளங்களைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. எஸ்பவுஸல்ஸ் என்பது விவாகமுறைமையோடு சேர்க்கப்பட்டதுமுதல் உடம்படிக்கைசெய்தபிற்பாடே அவ்வடையாளங்கள் பிரயோகிக்கப்படும். இங்கிலாந்து முறைமைப்படி இவ்வடையாளங்கள் விவாகஞ்செய்த இருவரும் பண்ணிக்கொண்ட உடம்படிக்கைக் குறிப்புகளாக இருக்கிறதன்றி, அவர்கள் ஒப்புக்கொண்ட கடமைகளை எப்பொழுதும் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறவைகளாயுமிருக்கின்றன.

16. வினா. மோதிரம் கொடுத்தல் பூர்வமாய் நடந்துவந்த வழக்கந்தானென்று காட்டு.

விடை. சட்டதிட்டங்கள் மோதிரத்தால் முத்திரிக்கப்படுவது பூர்வவழக்கம்; பொருளுடைமைக்கு அடையாளமாக அதை வைக்கப்படுவதுமுண்டு. நெருங்கிய நட்புக்கும் மேற்பட்ட நம்பிக்கைக்கும் ஆஜராயிருப்பதைக் குறிக்கும்படியாக மோதிரம் போடப்படுவதுமுண்டு. பார்வோன் யோசேப்புக்கும்,

கெட்டகுமாரனுடைய தகப்பன் தன் மகனுக்கும் இப்படிச் செய்ததாக வேதாகமத்தில் வாசிக்கிறோம் (ஆதி. 41. 42. பரி. லூக். 15. 22.)

17. வினா. பூர்வீக விவாகமுறைமை எவ்விதமாய் முடிந்தது? இங்கிலாந்து ஜெபமுறைமையில் நவமாய்க் கூட்டப்பட்டிருக்கிறதென்ன?

விடை. ஆதிச்சபை வழக்கப்படி பெண்ணை பிடித்துக் கொடுக்கிற பாரனிம்பஸ் (Paranymphus) ஆகிறவன் இருவருடைய கையைப் பிடித்துக்கொடுப்பதின்பேரில் குருவானவர் ஆசீர்வாதஞ்சொல்லி முடித்துப்போடுவார். இங்கிலாந்து ஜெபபுஸ்தகத்திலோ தோத்திரப்பாட்டு, கர்த்தருடைய ஜெபம், பிரதிமொழி வாசகங்கள் விவாகஞ்செய்துகொண்டவர்களது ஆத்துமத்துக்காகவும், சந்தானவிர்த்திக்காகவும் விவாகமானது இரகசியபொருளாய் உணர்த்தும் கடமைகளை நிறைவேற்றத்தக்க கிருபைக்காகவும் குருவானவரால்மாத்திரம் செய்யப்படும். மூன்று ஜெபங்கள் ஆசீர்வாதமாகிய இவை முறையே சேர்க்கப்பட்டிருக்கின்றன. கடைசியாக, புருஷனும் ஸ்திரீயும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிய பிரசங்கமும், புதிதாய் விவாகமார்க்கத்துக்குட்பட்டவர்கள் பரி. இராப்போசனத்துக்கு சேரவேண்டியதைக் காட்டிய ரூபிரிக்குமுண்டு.

18. வினா. என் சரீரத்தால் உன்னை மேன்மைப்படுத்தி என்பதற்கர்த்தமென்ன?

விடை. என் சரீரத்துக்குச் சுதந்தரவாளியாக்கிக்கொள்ளுகிறதுமன்றி மனைவியாகவும் குடும்பத் தலைவியாகவும் ஏற்றுக்கொண்டு, எனக்குரிய கனத்திலெல்லாம் உன்னையும் பங்காளியாக்கிக்கொள்வேன் என்பதே.

19. வினா. விவாக உடம்படிக்கைக்குப் பின்னாக கண்டிருக்கிற ஜெபத்தின் பொருளென்ன?

விடை. நமது இரட்சகருடைய காலத்துக்கு முன்னர் உடம்படிக்கைகள் இரத்தத்தால் உறுதிப்படுத்துவதுண்டு; சுவிசேஷகாலத்திலோ தங்கள் சுயபெலனை நம்பாமல், தேவ ஆதரவுக்காக தாழ்மையாய் பண்ணிக்கொள்ளும் ஜெபத்தால் உடம்படிக்கைபண்ணிக்கொண்ட புருஷனும் மனைவியும் உண்மையாய் ஒருமித்து வாழவும், இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாகும் சமாதானத்திலும் அன்பிலும் நிலைத்திருக்கவும், ஆண்டி தேவனானவர் தாமே தமது ஆசீர்வாதத்தை அவர்கள்

மேல்பொழிந்தருளும்படி பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். ஈசாக்கும் ரெபெக்காளும உண்மையாய் ஒருமித்து வாழ்ந்ததுபோல இவர்களும் வாழும்படி விரும்பி ஜெபிக்கிறோம். முற்பிதாக்களுக்குள் ஈசாக்கு என்பவர் தானே பெண்களைப் படையாமல், தேவனியமிப்பப பிரகாரம் விவாக நிலைமையில் ரெபெக்காளோடு வாழ்ந்துவந்தவரானதால் அவருடைய உதாரணம் தெரிந்தெடுக்கப்படலாயிற்று.

20 வினா. பண்ணப்பட்ட உடம்படிக்கை வெளியரங்கமாய் உறுதியாக்கும்படி இதற்குப்பின்னாக நடக்கிறதென்ன?

விடை. உடம்படிக்கையும் தேவாசீர்வாதத்துக்காக ஜெபமும் பண்ணப்பட்டபின், திருச்சபை அதனை தேவநாமத்தால் உறுதிப்படுத்துகிறது எப்படியென்றால்;

(1) அவ்வுடம்படிக்கைக்குண்டாயிருக்கிற திவ்விய அதிகார அனுமதியைத் தெரியக்காட்டுவதால் அந்த நிலைமையை ஏற்படுத்தினவர் தேவன். இந்த உடம்படிக்கையும் பிரதிக்கினையும் அவருடைய சன்னிதானத்திலும், இந்த வாக்குத்தத்தம் அவரை நோக்கியும் அவருடைய நாமத்திலும் பண்ணப்பட்டது. ஆதலால் தேவன் இணைத்தவர்களை மனிதனொருவனும் பிரியாதிருப்பானாக என்று குருவானவர் நமது இரட்சகருளிய திருவசனத்தையெடுத்துக் கூறுகிறார்.

(2) குருவானவர் கூடிவந்திருக்கிற சபையாரை சாட்சியாகக் கோரிக்கொண்டு உடம்படிக்கைபண்ணப்பட்ட விதத்தை அவர்களுக்குத் தெரியக்காட்டி, அவ்வுடம்படிக்கைப்பிரகாரம் இவர்கள் புருஷனும் மனைவியுமாய் இருக்கிறார்களென்று தமக்குரிய அதிகாரப்பிரகாரம் திரித்துவ நாமத்தினாலே கூறியறிவிக்கிறார்.

(3) குருவானவர் அவர்களுக்காக உட்கருத்தாய்ப் பரிந்து பிரார்த்தித்து எண்ணாகமம், 4-ம் அதிகாரத்தில் கண்டிருக்கிற ஆசீர்வாதப்பிரகாரம் தேவத்துவத்திலுள்ள மூவரும் இவர்களைத் தீமையினின்று தற்காத்து, அவர்கள் இம்மையிலிருக்குமட்டும் ஒருவருக்கொருவர் ஆதரவாய் இன்பத்திலும் துன்பத்திலுமிருக்கும்படிக்கும், கொள்வினையுங் கொடுப்பினையுமில்லாத மறுமையிலே நித்தியஜீவனையடையும்படிக்கும், கிருபைக்காகப் பிரார்த்திப்பார்.

21. வினா. பின்வருகிற சங்கீதங்களின் நோக்கமென்ன? அப்பால் வரும் ஜெபங்களின் பொழிப்பென்ன? முடிவுரையான புத்திமதியும் ரூபிரிக்கு சட்டமுமென்ன?

விடை. 128-ம் சங்கீதமாவது, 67-ம் சங்கீதமாவது வாசிக்க
அல்லது பாடப்படும். கூடிவந்திருக்கிற ஜனங்களும் குருவான
வரோடு சேர்ந்துரைத்து தங்கள் பட்சத்தைப் பாராட்டத்தக்க
தாக இப்படி அமைந்திருக்கிறது. அப்புறம் கர்த்தருடைய
ஜெபமும் அதைச்சேர்ந்த சில சுருக்க மன்றாட்டுகளுங் கண
டிருக்கிறது. அவைகளுக்குப் பின்பு, குருவானவரால் தனி
மையிற் பண்ணப்படும் ஜெபங்கள் மூன்றாம். அவைகளில்
முந்தினதில் விவாகநிலைமைக்குட்பட்டவர்கள் பெறவேண்
டிய ஞானாசீர்வாதங்களுக்காக ஜெபித்திருக்கிறது; இரண்டா
வதில் புத்திரவிருத்திக்காகவும், பிறகும் புத்திரரை தேவபக்தி
யில் நற்குணராய் வளர்ப்பதற்காகவும் ஜெபிக்கிறது. புத்திர
விர்த்தியானது நமது ஆதித்தாய் தகப்பன்மாருக்கு தேவன்
கொடுத்த ஆசீர்வாதங்களானதால் அதற்காக ஜெபிப்பது நியா
யமே ஸ்திரீயானவள் பிள்ளைபெறும் பருவம் கடந்தவளாயிருந்
தால்மாத்திரம் இச்ஜெபத்தைச் சொல்லாதிருக்கவேண்டும்.
கடைசியான ஜெபத்தில் பரிசுத்த விவாகத்தின் பிரிக்கக்கூ
டாத தன்மையைக்காட்டி, அந்த நியாயத்துக்கேற்க அவர்கள்
நடந்துகொள்ளவேண்டியதும் நிறைவேற்றவேண்டியதுமான
கடமைகளைக் கண்டிப்பாய் நிறைவேற்ற போந்த கிருபையை
தேவன் அவர்களுக்கு அருளிச்செய்யும்படி பிரார்த்தித்து,
அப்புறம் அவர்கள் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கட
மைகளைப்பற்றி பரி. பவுலும், பேதுருவும் உபதேசித்திருக்கிற
வார்த்தைகளால் புத்திமதி வாசிக்கப்படும். விவாகம் செய்கிற
வர்கள் அத்தருணத்திலாவது அதற்குப்பின்பு முதலாவது நேரி
டும் தருணத்திலாவது, பரிசுத்த நற்கருணைக்குச் சேரவேண்டு
மென்று ரூபிரிக்சட்டத்தில் கண்டிருக்கிறது.

22. வினா. விவாகத்தைப்பற்றிய சட்டத்தில் ஏதாகிலும் மாறுத
லுண்டாயிருக்கிறதா? அதைப்பற்றி நாம அறிந்துகொள்ளத்
தக்கதென்ன?

விடை. விவாகம் செய்துகொள்ளுகிறவர்கள், திருப்பணி
விடைக்காரனல்லாத உத்தியோகஸ்தன் முன்புக்கு விவாக
முறைமைக்கடுத்த தேசாசார உடம்படிக்கையைப் பண்ணிக்
கொள்ளலாமென்று விவாகசட்டத்தில் ஓர்மாறுதலுண்டாயிற்று.
இப்படிச் செய்வது கொடுக்கல் வாங்கல் செய்வதுபோலவும்
வியாபாரஞ் செய்வதுபோலவும் காணப்படும். நாகரீகமும் கல்
வியுமற்ற மிருக குணமுள்ள ஜனங்கள்முதலாய் பரிசுத்த
விவாகத்தை மேம்பாடாக எண்ணி தங்கள் குடும்பத்தாரோடு

கடவுளை நோக்கிப் பிரார்த்தித்து, அவருடைய ஆசீர்வாதத்தோடு
விவாகம் நிறைவேற்றப்படவே தங்களுக்கு ஆசீர்வாதமா
யிருக்குமென்று நடத்திவருகிறார்கள். அப்படியிருக்கக்கொள்ள
நாகரீகமுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் தேவனை மறந்தவர்களாய்
முக்கியமான இந்தச் சடங்கைச் செய்வது அவருக்கு ஏற்குமா?
புருஷனும், ஸ்திரீயும் ஒரு புதிய நிலைமைக்கு உட்படுவதா
யிருக்க அதைத் தெய்வக்கிருபையை முன்னிட்டுத் துவக்கிக்
கொள்ளாதிருப்பதும், நம்முடைய ஜீவியகாலமெல்லாம் நமக்குத்
துணையாயிருக்கப்போகிற மனைவியை சம்பாதித்துக்கொள்
வதில் தேவனைப்பற்றியாவது மார்க்கத்தைப்பற்றியாவது பக்தி
முறையைப்பற்றியாவது கவலையில்லாமல் அசட்டையாயிருப்பதும்
நியாயமா? நம் இன்பத்திலும் துன்பத்திலும், சுகத்திலும்
துக்கத்திலும், பெலத்திலும் பெலவீனத்திலும், ஐசுவரியத்தி
லும் தரித்திரத்திலும் நம்மோடுகூட உடன்பங்காளியாயிருப்ப
தற்கு ஏற்கத்த மனைவியை சம்பாதித்துக்கொள்வதாயிருக்கும்
போது, மனிதனைமாத்திரம் சாட்சியாக சேர்த்துக்கொண்டு தேவ
னை புறக்கணிப்பது ஏற்குமா? இம்மையில் நாம் துவக்கிக்
கொண்ட இந்தக் காரியம் மறுமையில் முடிவுபெறும்படியாக
கிருபாசனத்தண்டை சேர்ந்து, நமது மன்றாட்டுகளை செலுத்திக்
கொள்ளவேண்டாமா? பண்ணப்படும் நம்பிக்கைப் பிரதிக்
கினைகளை கெட்டியாக்க தேவ நியாயப்பிரமாணம் போதாமை
யாதானால் மனிதனாலுண்டாக்கப்படும் சட்டங்களும் வாக்
குத்தத்தங்களும் அதற்குச் செல்லுமோ? கர்த்தர்பேரில் நம்
பிக்கையாய்க் காணப்படும் ஸ்திரீயானவள் அந்தக் காரியத்தை
தேவனுடைய நாமத்தால் நடப்பிக்காமலிருக்க சம்மதிப்பாளோ?
விவாகஞ்செய்தபிறகு கர்ப்பவேதனையின் கொடிய ஆபத்துக
ளுண்டாகும் வேளைகளில் எவ்வித நிலைமையிலுள்ளவர்களுக்
கும் கிருபையளிக்கிற தேவனையல்லவோ நான் மறந்து விவா
கஞ்செய்தேன் இனி எனக்கு வேறு சகாயரில்லையேயென்று
சொல்லி மனமடிவாகி அழமாட்டாளோ! தனக்காகவாவது,
பிள்ளைக்காகவாவது அவள் துக்கம் மிகுதியாயுண்டாகுமானால்
அல்லது அபாயங்கள் நேரிடுமானால் அப்பொழுது அக்குடும
பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் தாங்கள் தேவநாமத்தை
முன்னிட்டு மேற்படி கலியாணத்தை நிறைவேற்றாமற்போன
தற்காக அங்கலாய்க்கும்படி நேரிடுமே! ஆதலால் விவாக
ஓலை அல்லது அறிக்கை கூறப்பட்டாலும் சரியே, கூறப்
படாமல் லைசென்ஸ் என்னும் உத்தாரப்பத்திரம் பெற்றிருந்
தாலும் சரியே; தேவனுடைய வீட்டில் சென்று தேவாசீர்

வாதத்துக்காக பிரார்த்தித்து, பூர்வீகமாயுள்ள திருச்சபை வழக்கத்தின்படியே தேவநாமத்தை முன்னிட்டு விவாகத்தை நிறைவேற்றி, தேவாசீர்வாதத்தோடே மனைக்குத் திரும்புவது ஆரோககியமுாமே. ஆதலால் விவாகஞ்செய்யப்போகிறவர்கள் இவைகளை தகுதியாய் கிரகித்து உணர்ந்து நன்மையும், செம்மையுமானபடி நடந்துகொள்ள கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டியது.

23. வினா. எந்தெந்தக் காலங்களில் விவாகங்கள் நடத்தப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தது?

விடை. கலியாண உற்சவங்களின் கொண்டாட்டங்களை தபசுநாட்களாகிய லெந்துநாட்களில் முற்றிலும் ஆதித் திருச்சபையார் நிறுத்திப்போட்டார்கள். பதினோராம் நூற்றாண்டில் அட்வெந்து முதல் பிரசன்னத் திருநாளுக்குப் பிந்தின எட்டு நாள்வரைக்கும், செபதுவெகெசிமா ஞாயிறுமுதல் ஈஸ்தர்பண்டிகைக்குப் பிந்தின எட்டுநாள்வரைக்கும், பரி. யோவான்ஸ்நானன் திருநாளுக்கு முந்தின பதினாலுநாட்களிலும், ரொகேஷன், எம்பர், விழிப்புமுதலிய உபவாசநாட்களிலும் கலியாணங்கள் நடத்தப்படக்கூடாதென்று கண்டிப்பான சட்டம் விதிக்கப்பட்டது.

XVII. CHAPTER.

GREAT PROMISES ARE ANNEXED TO THIS DUTY—EXTREME UNCTION IS NOT A SACRAMENT.

Exhortation to the sick explained Wisdom of the Church in appointing the Absolution in this office. The Communion to the sick-judicious Rubrick in this Office. The Spiritual Communion.

பதினேழாம் அதிகாரம்.

வியாதியுள்ளவர்களைக் கண்டு விசாரிக்கும் முறைமையையும் அவர்களுக்கு நற்கருணை பரிமாறும் முறைமையையும் பற்றியது.

1. வினா. வியாதிஸ்தரைக் கண்டு விசாரிக்கும் கடமை விசேஷமாய் யாருக்குரித்தது?

விடை. வியாதிஸ்தரைக்கண்டு அன்புபாராட்டுவது கிறிஸ்தவர்கள் யாவருக்கும் உரிய சாதாரண கடமை (பரி. மத். 25. 36.

பரி. யாக். 1.2.). அவர்களுடைய ஆத்துமா தேற்றரவடையும்பொருட்டு முக்கியமாய் குருமார்கள கண்டு விசாரிப்பது அவர்கள் கடமையாக விதிக்கபபட்டிருக்கிறது. வியாதிஸ்தரைக்கண்டு சந்தித்து அவர்களோடு சம்பாஷித்து அவர்கள் விசுவாசத்தை எழுப்பி குணப்படுதலுக்கு அவர்களைத் தூண்டுவதும், பாவ விமோசனஞ்செய்து திருச்சபையோடு அவாகளை ஒப்புரவாக்குவதும், அவாகளுக்கு நற்கருணையை பரிமாறுவதும் கிறிஸ்துமார்க்க ஆரமபகாலமுதலே குருமாருடைய உத்தியோக கடமைகளாக ஒபபுக்கொள்ளப்பட்டும நடபபிக்கபபட்டும்வந்தன.

2. வினு. வியாதிஸ்தரைக் கண்டு சந்திப்பது பூர்வீகமாயுள்ளதும் பிரயோசனத்தை தரத்தககதுமான வழககம் என்று காட்டு.

விடை. பூாவ கிறிஸ்தவர்கள் தங்களன்புக்கு அத்தாட்சியாக வியாதிஸதரைக் கணடு சநதிபபதை பிரதானமான கடமையாக ஒபபுக்கொணடுவந்தார்கள். அப்படிச் செய்கிறவர்களுக்குண்டாகும் நன்மைகளைப்பற்றி சிறந்த வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் அறிவிக்கபபட்டிருக்கின்றன (சங். 41. 1. பரி. மத். 25. 34-36. பரி. யாக். 1. 27. பிர. 7. 35. காண்க.).

3. வினு. ரோமான்மார்க்கத்தாருககுள் வழங்கிவருகிற அவஸ்தைபூசுதல் தோன்றிய விதமென்ன? திருச்சபை சீர்திருத்தலின் காலத்தில் அது நீக்கபபட்டுபபோனதற்கு முகாந்தரமென்ன?

விடை. ரோமான மார்க்கத்தார் இறந்தைவரையும் வியாதிஸ்தரை எணணெயால் அபிஷேகித்துவருகிறார்கள்; தங்களுடைய கொள்கைக்கு பரி. யாககோபு அபபோஸ்தலனுடைய வசனங்களை ஆதாரமாக எடுத்துககாட்டியுமிருக்கிறார்கள். (பரி. யாக.5. 14, 15). ஆனால் அவ்வசனங்களை திட்டமாய்பரிசோதிக்குமிடத்து வியாதிஸ்தருககு அற்புத சுகத்தையருள்வது மேற்படி சடங்காசாரத்தின் நோக்கமென்று திருஷ்டாந்தப்படும். ரோமான்மார்க்கத்தாரோ, அவஸ்தைபூசுதலே மரித்துப்போகிறவனுடைய ஆத்துமத்துக்கு கிருபையளிக்கும் சாக்கிரமெந்தாக எணணிவருகிறாாகள். இவ்வித சடங்கு பூர்வசபையில் இல்லாமையாலும், அற்புதசுகமளிக்கும் வரம் நின்றுபோயிருப்பதாலும், மற்ற இரண்டு சாக்கிரமெந்துக்குரிய தன்மை அதற்கு இல்லாமையாலும், திருச்சபையால் சீர்திருத்தலின் காலத்தில் அவஸ்தைபூசுதல் நீக்கப்பட்டது.

4. வினு. வியாதிஸ்தரைக்கண்டு விசாரிக்கும் முறைமையின் சுருக்கமென்ன? அதில் குருமாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற திட்டங்களென்ன?

விடை. குருவானவர் வியாதிஸ்தருடைய இலவிடஞ்சென்று குறிக்கப்பட்ட முறைமையை வழங்க ரூபிரிக்கில் திட்டமாய் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதின்படியே வியாதிஸ்தன் வீட்டுக்குக் குருவானவர் சென்று சில ஜெபங்களை வாசித்தபின்பு அவனுக்கு வியாதிவந்த நோக்கத்தையும் அதைச் சகிக்கவேண்டிய விதத்தையும் அதைத் தன் ஆத்தும சுகத்துக்கு உபயோகமான எத்தனமாகப் பிரயோசனப்படுத்திக்கொள்ளவேண்டிய கடமையையும் எடுத்துக் காண்பிப்பார்; தனக்கு உத்தம விசுவாசமும் மெய்யான குணப்படுதலும் சகலரோடும் சமாதானமும் உண்டோவென்றும் தன்னைச் சோதிக்க ஏவுவார்; தனக்கு விரோதமாய் குற்றஞ்செய்தவர்களுக்கு மன்னித்து குற்றஞ்செய்தவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்டு தன்னால் நஷ்டப்பட்டவர்களுக்கு தன்னாலியன்றமட்டும் பரிகாரஞ்செலுத்தும் கடமையும் காட்டுவார்; வீட்டுக்காரியங்களைத் திட்டப்படுத்திக்கொள்ள எச்சரிப்பார்; தன்னால் கூடியமட்டும் ஏழைகளுக்கிரங்க புத்திசொல்வார். இதன்பேரில் வியாதிஸ்தன் பாவ அறிக்கைசெய்து அதை நீக்கிக்கொள்ள முயற்சிப்பான். பின்பு குருவானவர் அவன் மெய்யாய் குணப்பட்டிருப்பானானால் அவனுக்குப் பாவமன்னிப்பு கிடைக்குமென்று கூறுவார். கடைசியாக 71-ம் சங்கீதமும், மூன்று ஆசீர்வாத முறைமைகளுமுண்டு.

5. வினா. இந்த முறைமை எப்படித் துவக்கப்பட்டிருக்கிறது?

விடை. குருவானவர் வியாதிஸ்தருடைய வீட்டில் வந்தவுடனே இந்த வீட்டுக்கும் இதில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் சமாதானமுண்டாவதாக என்று சொல்லுவார். சமாதானத்தைக் கூறுகிறவர்களான தேவனுடைய தாசர் தங்கள் தால் நிரப்பப்பட்டிருக்கிற வீட்டில் பிரவேசிக்குந் தருணத்தில் சொல்லுவதற்கு இது ஏற்றவாசகந்தானல்லவா! அப்புறம் தேவன் நமது பாவங்களையாவது நமது முன்னோர் பாவங்களையாவது நினையாமல், தமது குமாரனின் இரத்தத்தையே நினைவுகூர்ந்து கிருபைபுரிந்தருளும்படி மன்றாடப்படும். பின்வருகிற சுருக்கமன்றாட்டுகள் நமது ஆண்டவரிடத்தில் ஆரோக்கியம் பெறவந்த பலர் சொன்னவைகளேயல்லாது வேறல்ல (பரி. மத். 20. 30; 9. 27; 15. 22; 17. 15.). பின்னாக கர்த்தருடைய ஜெபம் கண்டிருக்கிறது. இதிலுள்ள பல மன்றாட்டுகள் வியாதிஸ்தருக்கு ஏற்றவைதான். அவன் பிள்ளைபக்தியாய் பரமபிதாவை

நோக்கி: உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று ஜெபிப்பதில், அவர்பேரிலுள்ள அன்பையும்; உம்முடைய ராஜ்யம் வருவதாக என்பதில், தன் மனதிலுள்ள மோட்சவாஞ்சையையும்; உம்முடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக என்பதில், தேவசித்தத்துக்குத் தான் அடங்கியிருப்பதாயும்; அன்றன்றுள்ள அப்பத்தைத் தாரும் என்பதில், தனக்குவேண்டிய இம்மைக்குரிய ஆறுதலையும், குற்றங்களைமன்னியும் என்பதில், தான் செய்த பாவங்களுக்கு வேண்டிய மன்னிப்பையும்; சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் என்பதில், தன்னடக்கையை சீர்ப்படுத்தும்படி அவன் கொண்டிருக்கும் நல்ல நிர்ணயங்களையும், தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும் என்பதில், பாவத்தாலுண்டாகும் தண்டனைக்கு விடுதலையையும் எடுத்துக்காட்டிப் பிரார்த்திக்கிறான்.

6. வினா. முதலாவது சுருக்க ஜெபம் யதார்த்தமானதுதான் என்று காட்டு.

விடை. கஸ்திப்படுகிறவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு அவர் பரமண்டலங்களிலிருந்து தங்களை நோக்கிப்பார்க்கும்படி பிரார்த்தித்துக்கொள்ளவேண்டுமென்று அவர்தாமே கற்பித்திருக்கிறார் (உபா 26. 15. எசா. 63. 15.). அப்படிப் பிரார்த்திக்கிறவர்களுக்குத் தாம் செவிகொடுப்பதாயும் வாக்குக்கொடுத்திருக்கிறார் (1 இரா. 8. 37. 2 நாளா. 20. 9.). வியாதிஸ்தனை சாத்தான் பலவித மோசங்களுக்குட்படுத்த முயற்சிப்பான். அவன் கவலைத்தாழ்ச்சியாய் காலங்கழித்திருப்பானானால் முற்றிலும் நம்பிக்கையற்றுப்போகவும், பக்திமானாய் ஜீவனம் பண்ணியிருப்பானானால் துணிகரத்துக்கும், பெலக்ஷயப்பட்டவனாயிருந்தால் அவிசுவாசத்துக்கும், உலக சிந்தைக்காரனாயிருந்தால் மரிப்பதின்பேரில் சீரவெறுப்புக்கும் இந்தவிதமாய் அவனவன் இயற்கைக்குத் தக்கதாய் பற்பல மோசங்களுக்குட்படுத்தப்பார்ப்பான். இவ்வித சோதனைகளால் மோசம்போகாதபடி தேவன்தாமே தற்காத்து சமாதானத்தினாலே அவனை நிரப்பியருளவேண்டும் என்று இச்செபத்தில் விண்ணப்பம் செய்யப்படும்.

7. வினா. இரண்டாம் சுருக்கஜெபமும் தகுந்ததுதான் என்று காட்டு.

விடை. வியாதிஸ்தனும் அவனைப் பற்றியவர்களும் தற்கால சுகத்தைமாத்திரம் விரும்புகிறவர்களாயிருக்கலாம். ஆனால் தேவன் பிதாவடைவான தமது சிட்சையால் அவனில் நடப்பிக்க

நோக்கிய சீர்ப்பாடு நடந்துவருமுன்னாக வியாதிநீங்கி சொஸ்தமாகும்படிமாத்திரம் நாம் விரும்புவது ஏற்கா்தே. ஆதலால் அவனில் உத்தமமனஸ்தாபமும தேவபக்தியும் மனத்தாழ்மையும் பரிசுத்தமும் விளங்கத்தக்கதாக தேவன்தாமே அச்சிட்சையை அவனுக்கு பிரதிஷ்டைசெயதருளவேணடுமெனறு இச்செபத்தில் பிராாததிக்கிறோம்.

8. வினா. திருச்சபையானது தன் அவயவங்களைபபற்றி உடம்படிக்கையில நிலையுள்ளவர்களாகப பாராட்டுவது நியாயந்தானா?

விடை. ஆம். பரி. பவுல் தாம் கிருபம் எழுதிய சபைகளைப்பற்றி இவ்வாறே பேசியிருக்கிறார். நமதாண்டவர் தமது காலத்து யூதர்களோடு பேசினதில் உடம்படிக்கைக்குட்பட்ட ஜனங்களாக அவர்களுக்குரிய சிலாக்கியங்களையும் அவர்கள் ராஜ்யத்தின் புத்திரராயிருபபதையும் வலையையும் களைகளையும்பற்றிய உவமைகளில் காட்டியபடிக்கு, திருச்சபையில நல்லோரும் தீயோரும் கலந்திருபபதையும் அறிவித்திருக்கிறார். ஆதலால் ஒருவன் வெளியரங்கமான துன்மார்க்கனென்று விளங்கினாலேயல்லது மற்றப்படி இவ்வாறு பாராட்டுவது நியாயந்தான்.

9. வினா. புத்திமதியடங்கிய முதலாம் பங்கிலுள்ள விசேஷங்களைவை?

விடை. (a) உபத்திரவத்தை வரவிடுகிறவர் இன்னாரென்பது, சர்வவல்லமையுள்ள தேவன். (b) அது வரவிடப்படும் நோக்கங்கள் இவை என்பது, மற்றவர்களுக்கு மாதிரியாகத்தக்கதாக வாவது, அவனுடைய பொறுமையை பரிசோதிக்கவாவது, அவனில் கண்டிருக்கும் எலாதவைகள் நீங்கவாவது, கண்டித்து சீர்படுத்தவாவது உபத்திரவம் வரவிடபபடும். (c) அவன் அதைப்பட்டு உத்தரிக்கவேண்டியவிதம் எப்படி என்பது, குணப்படுதலோடும் பொறுமையோடும் கிறிஸ்துவின்மூலமாய் தேவனுடைய இரக்கத்தின்பேரில் வைக்கும் நம்பிக்கையோடும் மனத்தாழ்மையோடுங்கூடிய நன்றியறிதலோடும் சர்வாங்க கீழ்ப்படிதலோடும் சகிக்கவேண்டும். (d) இப்படி சகிப்பதாலுண்டாகும் பிரயோசனம், நித்திய வழியிலேசெல்ல உதவியாயிருக்கிறது.

10. வினா. இரண்டாம் பங்கிலுள்ள பொருளென்ன?

விடை. வியாதிஸ்தன் தனக்குண்டாயிருக்கும் தஸ்திகளை பொறுமையோடு சகிக்கும்படியாக நியாயங்களைக்கொண்டும்

வேதப்பிரமாணங்களைக்கொண்டும் முன்மாதிரிகளைக்கொண்டும் புத்திமதி சொல்லியிருக்கிறது. எபிரெயர், 12-ம் அதிகாரத்தில் பரி. பவுல் வசனித்திருக்கிற நியாயங்களும் வேதவசனத்திலடங்கிய பல கற்பனைகளும் கிறிஸ்துநாதருடைய நன்மாதிரியும் எடுத்துப் புகட்டப்பட்டிருக்கிறது. அவன் தன் நடக்கையை சீராக்கிப்பார்த்து தன்னைத்தானே பரிசோதனை செய்யவேண்டியது அவசியமென்று அப்புறம் காட்டியிருக்கிறது. அவன் பண்ணின ஞானஸ்நான பொருத்தனைகள் அவனுக்கு நினைப்பூட்டப்படுகிறது.

11. வினா. அப்புறம் அவனுக்குச் சொல்லப்படுவதென்ன?

விடை. அவன் தன் பாவங்களைப்பற்றி உண்மையாய் மனஸ்தாபப்படவும் (ரோம. 3. 23.), தனக்கு விரோதமாய் குற்றஞ்செய்தவர்களுக்கு அவர்கள் குற்றங்களை மன்னிக்கவும் (பரி. லூக். 23. 34. அப. 7. 60. பரி. மத. 18. 23.), முதல் தான் இடறல்வருத்தியிருப்பவர்களுக்கு சரிக்கட்டவும் (கொலோ. 3. 25. மத். 5. 25.) அவனுக்கு போதனை சொல்லப்படும்.

12. வினா. அவன்வீட்டுக் காரியங்களைப்பற்றி அவனுக்குச் சொல்லப்படுவதென்ன?

விடை. அவன் தன் ஆஸ்திகளைக்குறித்து ஒழுங்குசெய்யாதிருந்தால் மரணசாதனம் எழுதவும், கொடுக்கல் வாங்கல் அறியிக்கவும், அவனுக்குப் போதனைசொல்லப்படும். குழப்பங்களுக்கும், கலாதிகளுக்கும், வியாஜ்யங்களுக்கும் இடம்வராதபடிக்கு இவ்வாறு ஒழுங்குசெய்யப்படுவது நன்றாதலால், குருவானவர் அதைப்பற்றி கவலைப்படும்படி சட்டம்வைத்திருப்பது நியாயந்தான்.

13. வினா. தானதர்மஞ்செய்யவும் பாவஅறிக்கை செய்யவும் வியாதிஸ்தனுக்குப் போதனைசொல்லுவதைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. தானதருமத்தால் மோட்சத்தையடையலாமென்று யாரேனும் தப்பெண்ணங்கொள்ளலாகாது. ரோமானித்தார் அப்படி எண்ணிக்கொள்வார்கள்; நாமோ அப்படி எண்ணலாகாது (1 பேது. 1. 18.). என்றாலும் பூமியில் எளியவர்களை ஆதரித்தவர்கள் பரமண்டலத்தில் சகாயத்தைக் கண்டடைவார்கள் என்று பரி. மத். 25. 42ல் காட்டியிருப்பதால், சுயபுண்ணியத்தையிட்டல்ல தேவகிருபையைக்கொண்டே மோட்சம்பெற நாடி இப்படிச் செய்யவேண்டும். மேலும் வியாதியஸ்

மிகவும் கஸ்திப்படுகிற மனுஷன் தன் பாவங்களை நினைக்கவும் அவைகளை யோசிக்கவும் கருத்துள்ளவனாயிருப்பான்; அப்பொழுது அவனுடைய இருதயம் இளகியிருக்கும். இப்போப்பட்ட சமயத்தில் அவன் தன் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புப்பெற்றுக்கொள்ளும்படிசெய்வது மிகவும் உத்தமமே.

14. வினா இம்முறைமையில் கண்டிருக்கிற பாவவிமோசனத்தைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. இதில் பாவவிமோசனம் குருவானவர்தாமே கூறும் பாவனையாய் கூறப்படுகிறது. காலைமாலை ஜெபஒழுங்கிலும் பரி. நற்கருணை ஒழுங்கிலுமுள்ள பாவவிமோசன அறிக்கைகளோ இப்படியல்ல. அவை சபைமுழுமைக்கும் பொதுவாய் கூறப்படும். அவர்களில் சிலர் உத்தமமனஸ்தாபமற்றவர்களாயிருக்கலாம். அப்பேர்ப்பட்டவர்களும் பாவவிமோசனம் தங்களுக்கு உண்டாயிற்றென்று நினைக்காதபடி அவைகளில் ஒருவிதமாய் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஓர் வியாதிஸ்தன் பாவங்களை உண்மையாய் அறிக்கையிட்டு மனத்தாழ்மையோடும் மனதாரவும் பாவமன்னிப்பை தேவனிடத்தில பெற்றுக்கொள்ள ஆசையுள்ளவனாயிருக்க, இப்பேர்ப்பட்டவனை சமுசயத்தில் அலசடிப்படவிடுவது சரியல்லவே. ஒழுங்குப்பிரகாரம் பட்டம்பெற்ற குருமார் தேவனுடைய ஸ்தானாபதிகளாயிருப்பது மெய்யானால், அவர்கள் தேவனுடைய நாமத்தில் தாராளமாய் பாவவிமோசனம் கூறலாமே; அவருடைய சித்தப்பிரகாரம் அவர்கள் உரைக்கும் வாக்கு தேவவாக்காக ஒப்புக்கொள்ளப்படவுந் தகுமே.

15. வினா. உத்தம மனஸ்தாபமுள்ள பாவிகளுக்கு மன்னிப்பருளப்படுமென்று வேதாகமத்தில் வெளிப்பரங்கமாய்ச் சொல்லப்பட்டிருக்க, அதை மனிதர்களால் உறுதிப்படுத்தவேண்டியதென்ன?

விடை. இப்படி ஆட்சேபனை உரைப்பாரும் உண்டு. இது ஒப்புக்கொள்ளப்படத்தக்கதானால் கிறிஸ்துநாதர் இவ்வதிகாரத்தை மனிதருக்கு அளித்ததேன்? ரோமான்மார்க்கத்து குருக்கள்மார் பாவசங்கீர்த்தனஞ் செய்வதுபோல நமது சபையில் செய்யப்படுகிறதில்லை. குணப்பட்டு உத்தமமாய் மனஸ்தாபப்படுகிற பாவிகளுக்கு தேவன் மன்னிப்பைக் கட்டளையிட்டிருக்கிறார் என்று கூறி அறிவிக்கும்படி, அதிகாரத்தையும் வல்லமையையும் கிறிஸ்துநாதர் தாமே தமது பணிவிடைக்காரருக்கு அருளிச்செய்திருக்கிறார். விசுவாசமில்லா மாறுபாடான

சந்ததி இதை எவ்வளவாயிகழ்ந்தாலும், பாவபாரத்தால் நொந்துபோயிருக்கும் பாவிக்கு பாவவிமோசனஅறிக்கையானது விலையேறப்பெற்ற தைலம்போலிருக்குமே.

16. வினா. இவ்விமோசனத்துக்கும் ரோமான்மார்க்கத்தார் வழங்கும் விமோசனத்துக்கும் வேறென்ன வித்தியாசமுண்டு?

விடை. நமமுடைய கர்த்தராகிய கிறிஸ்து உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கக்கடவர் என்று இவ்விமோசனத்தில் சொல்லியிருக்கிறது, திருச்சபை சீர்திருத்தத்திற்கு முன்போ, ரோமான்சபையின் முறைமையில் பரி. பேதுருவின் நாமம் கண்டிருக்கிறது.

17. வினா? பின்னுக்குக் கண்டிருக்கும் சங்கீதம் சமயத்துக்கு ஏற்றதுதான் என்று காட்டு.

விடை. 71-ம் சங்கீதமாகிய இது சோதனை, துக்கம், மரணம் என்பவை நேரிடுங் காலத்திற்கேற்ற ஆறுதலை தரத்தக்க சிறந்த சங்கீதந்தான். வியாதிஸ்தன் தன் விருப்பங்களையும் முறைப்பாடுகளையும் அறிக்கையிடவும், தன்விசுவாசத்தைப்பாராட்டவும், தன் ஆனைப ஆனல்மூட்டிஎழுப்பவும், தன்பொறுமையை விளங்கச்செய்யவும், தன் நம்பிக்கையை எழுப்பிக்கொள்ளவும் இது ஏற்ற சங்கீதந்தான். இச்சங்கீதத்திலுள்ள கடைசி ஐந்து வசனங்கள் வியாதிஸ்தனின் நிலைமைக்குத்தகுந்தவைகளல்லவென்று விடப்பட்டிருக்கிறது.

18. வினா. வியாதிஸ்தனைக் குருவானவர் ஆசீர்வதிக்கும் முறைமைகள் எத்தனை இதில் கண்டிருக்கின்றன?.

விடை. மூன்று முறைமைகளே. இவைகளில் முந்தினது. குமாரனாகிய தேவனைநோக்கி உரைக்கப்படுவது, பாவமன்னிப்பை அவருடைய பாடுகள் மரணம் என்பவற்றால் பெற்றுக்கொள்ளும் நோக்கமாய் இப்படி அமைந்திருக்கிறது. இரண்டாவதானது, பிதாவாகிய தேவனைநோக்கி உரைக்கப்படுவது. இவ்விரண்டும் இங்கிலாந்துசபையின் ரீத்துவரவில் மாத்திரமுண்டு. மூன்றாவதானது, யாத். 6. 24-26ல் கண்டிருக்கிற திவ்விய ஆசீர்வாதத்திற்கொத்த வியாக்கியானமுந் திரித்துவத்தின் நாமத்தில் உரைக்கப்படுவதுமாயிருக்கிறது. இந்த முறைமை கடைசியாய் ஜெபபுத்தகம் பழுதுபார்க்கப்பட்ட சமயத்தில் சேர்க்கப்பட்டது.

19. வினா இவ்வற்றில் முந்தினதைப்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. இதில் மீட்பனைநோக்கிப் பண்ணியிருக்கிற ஜெபம் மிகவும் உசிதமானது. இயேசுவின நாமம் சுகமும் இனபமு முள்ளகாலத்திலும், சோதனையும் துன்பமும் மனபபோராட் டமும் உளளகாலத்திலும் ஜெபிக்கத்தக்கதான பகாவிலேயே நபமெபற்றது. அபபடியானால் தன் சரீரமாகிய கூடாரததைப போட்டுவிடுவதாய் எண்ணமுற்றிருக்கும் மனிதன், சர்வலோக மீட்பனை தியானித்து ஜெபிபபது அவருக்கு மிகவும் அதிப பிரியமாய்த் தோனறுமலலவா?

20. வினா. பின்னாகக் கண்டிருக்கிற விசேஷித்த ஜெபங் கள் எவை?

விடை. வியாதிப்படுகிற பிள்ளைகளுக்காக செய்யத்தக்க ஜெ பமும்; வியாதியுள்ளவன் பிழைப்பானோ என்று சநதேசப்படு கிற காலத்தில் அவனுக்காக செயயததகக ஜெபமும்; மரணா வஸ்தையில் தேவனுககு ஒபபுவிக்கததக்க ஜெபமும்; மனசகி லேசத்தினாலாவது குற்றஞ்சாட்டும் மனச்சாட்சியினாலாவது வருத்தப்படுகிறவர்களுக்காகச் செய்கிற ஜெபமுமாகிய நான குமே.

21. வினா. இவைகளில் முந்தினதைப்பற்றி கவனிககப் படத்தக்கதென்ன?

விடை. பெற்றோர் தங்கள் புதல்வர் வியாதிப்பட்டிருந்தால் தங்களால் இயனறமட்டும் ஆகத்தக்க பிரயத்தனங்களையெல் லாம் கையாடி ஆரோக்கியப்படுத்தப் பிரயாசப்படுவது இயல புதானே. சுபாவ அன்பால் ஏவப்பட்டு அவர்களுககாக கருத்தாய் ஜெபிப்பதும் அவசியமே. சூனேமியாளும் (2 இரா. 2 அதி.), யவீரும்(பரி. மாற். 5.22. பரி.லூக். 8. 41.)தங்கள் பிள் ளைகள் மரித்தபின்முதலாய் தங்கள் விசுவாசத்துக்குப் பலனாக அவர்களைத் திரும்பக் கண்டடைந்தார்கள். அபபோர்ப்பட்ட அற்புதம் இப்பொழுது நடக்கவேண்டுமென்று நாம் எதிர்நோக் கக்கூடாது. என்றாலும் நமது உட்கருத்தான விண்ணப்பம் பிள்ளையின் ஆரோக்கியத்துக்கு உபயோகமாகும்படி கடவுள் கிருபைபுரிவதாயும் இருக்கலாமே. ஆதலால் இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் ஜெபத்தில் தேவன் தமக்குச் சித்தமா னால் அப்பிள்ளை தமது மகிமைக்கென்று நான் நீடித்திருக்கத் தக்கதாக ஆரோக்கியமருளவேண்டுமென்றும், இல்லாவிட்டால் பரமவாசஸ்தலங்களில் இப்போதே சேர்த்துக்கொள்ளவேண்டு மென்றும் பிரார்த்திக்கிறோம்.

22. **வினா.** பிரிந்துபோகிற நமது ஆவியை தேவனுக்கு ஒப்புவிப்பதற்கு அனுமதியுண்டா?

விடை. சரீரம் மண்ணுக்குத் திரும்பும்போது ஆவி தன்னைத் தந்த தேவனண்டைக்குப் போகிறது (பிரச. 12. 7.). நமது இரட்சகர் தமது பிதாவைநோக்கி, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று சொல்லி, ஜீவனை விட்டார் (பரி. லூக். 23 46) அவருடைய மாதிரிப்பிரகாரம் ஸ்தேவான் தன் மீட்பராகிய அவரிடத்தில் தன் ஆவியை ஒப்புவித்து ஜீவித்துப்போனான் (அப. 7 59.). அம்மாதிரிப்படியே பிறகாலத்தாரும் செய்துவந்தார்கள்.

23. **வினா.** வியாதிஸ்தருக்கு தனித்து நற்கருணை பரிமாறும் வழக்கத்திற்கு ஆதாரமென்ன? ஆதிச்சபை வழக்கமென்ன?

விடை. தனித்து நற்கருணை பரிமாறப்படாதென்பது நமது சபைக்குரிய சாதாரணப் பிரமாணமாயிருந்தாலும், வியாதிஸ்தன் விஷயத்தில் அனுக்கடையாளமாக திருச்சபையானது தன் விதிதவறி நிற்கலாகாது. இதற்கு ஆதிச்சபையார் அனுமதியுண்டு. நோலா (Nola)பட்டணத்து கண்காணியாகிய பாலினஸ் (Paulince) என்பவர் தமது ஜீவ அந்தத்துக்கு சற்று நேரத்துக்கு முன்னதாக சுயவீட்டிலே நற்கருணை வாங்கினார். கிரெகோரி நாஸியான் (Gregory Nazian zen), அம்புரோஸ் (Ambrose) என்பவர்களும் இதற்கு அனுமதிகொடுத்திருக்கிறார்கள். பூர்வகாலத்தில் பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்களில் மீந்தவைகளை வியாதியினால் வருத்தப்படுகிறவர்களுக்கு கொண்டுபோய் கொடுப்பதுண்டு.

24. **வினா.** அவசியகாலத்துக்குத் தக்கதாய் விதிக்கப்பட்டிருக்கிற இன்னும் சில பிரமாணங்கள் எவை?

விடை. வியாதிஸ்தரோடு இரண்டுமூன்று பெயராவது நற்கருணை வாங்கவேண்டும். பெருங்காய்ச்சல் முதலான ஒட்டுவியாதியுள்ள காலத்தில் மற்றவர்கள் வரப் பயப்படுவார்கள், அப்பொழுது குருவானவர் தனிமையாய் அவனோடு நற்கருணை வாங்கலாம். வியாதிஸ்தன் பானம்பண்ணிய பாத்திரத்தில் பானம்பண்ண அநேகர் பயப்படுவார்கள், ஆனதால் அவனுக்குகடைசியில் பாத்திரத்தைக் கொடுப்பது தகுதி. நியாயமான யாதொரு தடையினாலே வியாதிஸ்தன் நற்கருணை வாங்காதபடி தடைபட்டுப் போனால் குருவானவர் அவனை நோக்கி: நீ வியாதியினாலே சாக்கிரமெந்தை வாங்காமலிருந்தும், நீ உன் பாவங்களினிமித்தம் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு உனக்காக இயேசுகிறி

ஸ்து சிலுவையில் மரணமடைந்து, உனக்கு மீட்புண்டாகும்
படி தமது இரத்தத்தைச் சிந்தினாரென்பதை உறுதியாய் விசுவா
சித்து, அதினாலே உனக்கு வருகிற நன்மைகளை நன்றாய் எண்
ணிக்கொண்டு அவருக்கு முழுஇருதயத்தோடே தோத்திரஞ்
செலுத்தினால், உன் ஆத்துமத்துக்கு சவுக்கியமுண்டாக நீ, நம்
முடைய காத்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சரீரத்தை
யும் இரத்தத்தையும் புசித்து பானம்பண்ணியிருப்பாய் என்று
போதிக்கவேண்டும் என்பவைகளே.

——•••——

XVIII. CHAPTER.

REASONS FOR A DECENT BURIAL OF THE DEAD.

The place for the burial. Persons to whom this office is denied. Charitable hope of the Salvation of the dead. The service explained. Prayers for the dead and quotation from Bishop Heber

பதினெட்டாம் அதிகாரம்.

மரித்தோரை அடக்கம்பண்ணும் ஒழுங்கைப் பற்றியது.

——•——

1. **வினா.** மரித்தோரை அடக்கம்பண்ணும் வழக்கத்துக்கு
உபசரணையான நியாயங்களைச் சொல்லு.

விடை. நமதாண்டவர் தமக்குப பிரேத அலங்காரஞ்செய்த
ஸ்திரீகளை அந்த நற்செய்கைகளுக்காகப புகழ்ந்துகொண்டார.
அஞ்ஞானிகள் தங்கள் மரித்தோர்க்கு ஆசார உபசாரம் செய்வ
தாயிருக்க, கிறிஸ்தவர்களுடைய தேகங்களை நாம் அலட்சிய
மாய் விடுவது ஏற்குமா? அவைகள் பரிசுத்தாவியின் ஆலயங்க
ளாயும் (1 கொரி. 6. 19.), தேவனுக்குப் பணிவிடைசெய்யு
பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளாயும், மார்க்கப்பிரகார
மான கடமைகளை நிறைவேற்றும் பாகமுடையவைகளாயும்,
விசுவாசம் பொறுமை சுயவெறுப்பு தன்னடக்கம் முதலியவை
களில் நல்லபோராட்டம் போராடினவைகளாயும், மரணநித்தி
ரையிலிருந்து ஓர்நாளில் உயிரோடெழுப்பப்படுபவைகளா
யும், கிறிஸ்துவின் மகிமைபொருந்திய சரீரத்துக்கொப்பாய்
மறுரூபப்படுபவைகளாயும் (பிலி. 3. 21. 1 கொரி. 15. 42–44.),
ஆத்துமாவோடுகூட நித்திய மகிமையில் உடன்பங்கனுபவிப்

பவைகளாயும், மரணத்திலுங்கூட தேவபராமரிப்புக்குட்பட்ட வைகளாயும் இருக்க, அவைகளை மரியாதையாய் அடக்கம்பண்ணுவது நியாயமும் அவசியமுமான காரியமாயிருக்கிறது.

2. வினா? யூதரும் கிறிஸ்தவர்களும் மனித சடலத்துக்கு மரியாதை எவ்விதமாய நடபபித்துவருகிறார்கள்? அஞ்ஞானிகளுடைய வழககமென்ன? இதுவிஷயததில் கிறிஸ்தவர்களுக்கு நிந்தனையாகச் சத்துருக்கள் செய்ததென்ன?

விடை. மரித்தோருக்கு மரியாதை காண்பிப்பது மனிதஜாதிக்கு இயல்பே. மரித்துபபோன சகோதரனின் சரீரம் மகிமையாய உயிரததெழும் எனற நம்பிக்கையால் கிறிஸ்தவர்கள் யூதருடைய மாதிரிபபடி அதை மரியாதையாய் க்ஷேமித்துவருகிறாகள். முற்காலததிலோ, சத்துருக்கள் கிறிஸ்தவர்களுக்கு நிந்தனையாக இரத்தச்சாட்சிகளுடைய சரீரத்தை தகனித்துப் போட்டார்கள். இபபடியே போலிகாாப்பினுடைய சடலம் சாமபலாய் தகனிக்கப்பட்டது; லியோன்விலும்,வியென்னுவிலுமுள்ள இரத்தசசாட்சிகளின் சரீரங்கள் சுடப்பட்டு சாம்பல்கள் நதிகளிலே போடபபட்டன.

3. வினா. கிறிஸ்தவர்கள் சரீரங்களை க்ஷேமிக்கும் ஸ்தானம் என்ன? அவர்களுடைய க்ஷேமஸ்தலங்கள் அழைககபபட்டது எப்படி? கோவில்களில் அடக்கஞ்செய்யும் வழக்கமுண்டானது எவ்விதம்?

விடை. ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் மரித்தோரை திறபபான வெளிகளில் அல்லது பாதைமார்க்கமாயுள்ள கெபிகளில் அடக்கஞ்செய்வதுண்டு. இவைகளிலேயே அஞ்ஞானிகளும் தங்கள் பிரேதங்களை தகனித்து சாம்பலைச் சேர்த்து வைத்தாாகள். ஆனால் கோயில்கள் பெருத்தபோது அவற்றிற்குச் சற்று தூரததிலுள்ள ஓரிடம் க்ஷேமஸ்தானமாகப் பிரதிஷ்டையாககப்பட்டதுண்டு. இதற்குக் கிரேக்கப்பாஷையில் Kasimeterson அதாவது, துஞ்சும் ஸ்தானம் என்று பெயர். கிறிஸ்துவுக்குள் நித்திரையானோர்க்கு இது ஆசோதைஸ்தானமாதலால் இபபெயரால் அழைககப்பட்டது. முதல்முதல், கோயிலுக்குள் அடக்கம்பண்ணப்பட்டவன் கொனஸ்தந்தீன் என்ற ராயனே. ஆனால் ஆதாயப்பிரியரான சந்நியாசிகள் இவ்வழக்கத்தை ஸ்தாபிக்க முயன்றதுமுதல் எங்கும் பிரபலமாய் நடந்தேறிவருகிறது.

4. வினா. மரித்தோரை அடக்கம்பண்ணும் முறைமை நிலைட்டியம்பண்ணப்பட்டதெப்படி?

விடை. உத்தரிக்கும் ஸ்தானத்தைப்பற்றிய ரோமான்மார்க்க உபதேசத்தால் இம்முறைமை மிகவும் பழுதுபடுத்தப்பட்டது. அந்தலத்தில் ஆத்துமாக்கள் சுத்திகரிப்பு சிட்சை அனுபவிக்கிற தென்று அவர்கள் ஒப்புக்கொண்டு, மரித்தோருக்காகவே பணமும் ஜெபங்களைச் செய்தார்கள். இம்முறைமையானது மரித்தோருக்கு உபயோகமாக அல்ல, உயிருள்ளோருக்கு ஆறுதலும் தேறுதலுமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. பரி. ஆகுஸ்தின் என்பவர் சொன்ன விதியை நினைவுகூர்ந்து மேற்சொல்லிய வீண்பக்தியான வசனிப்புகளையெல்லாம் போக்கிவிட்டு, மரித்தோரை அடக்கம்பண்ணுகிறவர்களுக்குப் போதனையாகவும் ஆறுதலாகவும் எச்சரிப்பாகவும் இம்முறைமையை பூர்வ சோதகத்துக்கும் வழக்கத்துக்கும் ஏற்க இயற்றினார்கள்.

5. வினா. பூர்வத்தில் சரீரமானது எவ்வித சடங்குகளோடு ஆலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டது? இங்கிலீஷ் ரீத்துவலானது பூர்வ வழக்கத்துக்கு ஏற்கச் செய்யப்பட்டிருக்கிறதோ?

விடை. அப்போஸ்தலர் ஏற்பாட்டாகமங்களினால் விளங்குகிறபடி சரீரமானது சங்கீதங்கள் பாடல்களுடன் ஆலயத்துக்குக் கொண்டுவரப்படும். கோயிலுக்குள் பிரவேசிக்கும்போது தேவவசனம் வாசிக்கப்படும். இதற்கு இசைவாய் ஜெபபுஸ்தகத்தில் குருவானவர் கோவிலின், வீதியில் பிரேதத்திற்கு எதிர்சென்று, அங்கிருந்து கோவிலுக்காவது கல்லறைத் தோட்டத்துக்காவது வேதத்திலிருந்து தெரிந்து நியமிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்களை (பரி. யோவா. 10. 1, 25, 26. யோபு. 19. 25–27. 1 தீமோ. 6. 7. யோபு. 1. 21.) பாடி அல்லது வாசித்துச் சொல்லவேண்டுமென்று கற்பிக்கப்பட்டிருக்கிறது.

6. வினா. முற்காலத்தில் சரீரத்தை ஆலயத்துக்குள் கொண்டு வைத்திருக்கும்போது செய்யப்பட்டதென்ன? அப்போது செய்யப்பட்ட ஆராதனைமுறைமையின் யாதாமொரு பங்கு இன்னமிருக்கிறதா?

விடை. சரீரம் கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டபொழுது மரித்துப்போனவனுடைய சிநேகிதருக்கு நற்கருணை பரிமாறும் வழக்கம் சில கோவில்களில் உண்டாயிருந்தது எலிசபெத்து ராஜாத்தி காலத்தில் 1560-ம் வருஷம் இச்சமயத்திற்கென்று சுருக்கஜெபமும், நிருபம், சுவிசேஷ வாக்கியங்களும் நியமிக்கப்பட்டிருந்தன. அவ்வழக்கம் நின்றுபோனாலும் நிருபவாக்கியம் இன்னம் ஒப்புக்கொள்ளப்பட்டுவருகிறது. (1 கொரி. 15. 20.)

7. வினா. இம்முறைமையின் சுருக்கமென்ன?

விடை. கோயிலைவிட்டு வந்தபின் குருவானவர் முன்னனி யத்தில கல்லறைத்தோட்டத்துக்கு நேரசெல்வார். பின்வரும் முறைமை ரோமானசபையார முறைமைக்கு விகற்பப்பட்டிருந்தாலும் ஆதிசசபையிலுள்ள வழக்கத்துக்கு முற்றிலும் ஒத்திருக்கிறது. ஆதிச்சபையிலுள்ள முறைமை பூரவமாயுள்ள முறைமைதான. பின்பு ஒரு கீதம் வாசிக்க அலலது பாடப்படும்; கடைசியாக சின்ன லித்தானியும, கர்த்தருடைய ஜெபமும், இரண்டு சுருக்கஜெபங்களும், ஆசீர்வாதமும முறையே வரும்.

வினா. இம்முறைமையின் ஆரம்பத்தில்வரும் மூன்று வாக்கியங்களும கருத்தைத்தொன்று காட்டு.

விடை. இவ்வாக்கியங்களில் நாம் பாராட்டவேண்டிய முக்கியமான மூன்று குணசாலங்கள புகட்டப்பட்டிருக்கின்றன. அவையாவன:—விசுவாசம, பொறுமை, நன்றியறிதலான துதி என்பவைகளே. விசுவாசம் பொறுமையையும், பொறுமை ஸ்தோத்திரத்தையும் பிறப்பிக்கும். இதற்கு இசைவாக கண்டிருக்கிற மூன்று வாக்கியங்களில் முந்தினது சகோதரனுக்காகத் துக்கித்த மார்த்தாளுக்கு நமது இரட்சகர் உரைத்த ஆறுதலான வசனந்தான. அவள் சகோதரன் மரித்ததால் அவளுக்குண்டான துக்கமும் துயரமும அவளுடைய விசுவாசத்தைக் கொஞ்சங்குறைய பேதலிக்கச்செய்தது. இயேசுவானவர் தேவனுடைய நித்தியசுதன் என்பதை மறந்துவிடப்பண்ணிற்று. என்றாலும் இரட்சகர் உரைத்த இவ்வசனத்தாலுண்டான பொறுமையும் விசுவாசமும் அவளுக்குத் திடனளித்தது போல் நாமும் நம்பிக்கையற்றவர்களைபபோல் துக்கிக்காதபடி நமக்குத் திடனளிக்கிறது. இரண்டாவது வாக்கியம் யோபின் ஆகமத்திலிருந்து எடுத்துரைக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவிக்கப்படும் வெகுகாலத்துக்குமுன் புறச்சாதியார் நடுவில் வாசம்பண்ணின யோபு மூதலாய உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையால் தன்னைத் தேற்றிக்கொண்டிருக்க, எத்தனை அதிகமாய் நாமும் இவ்வார்த்தைகளால் நம்மைத் தேற்றிக்கொள்ளக்கூடும்! மூன்றும் வாக்கியம் நாம் கவலைப்படக் காரணமில்லை என்று காண்பிக்கிறது. நமது சிநேகிதனை இழந்துவிட்டோம் என்று நாம் கவலைப்படவேண்டியதில்லை. ஏனெனில், நாம் சிநேகிதருடையவர்களாய் உலகத்தில் பிறக்கவில்லை. மரிக்கிற நமது சிநேகிதர் நிர்வாணமாய் பிறந்ததுபோல நிர்வாணமாகவே

உலகத்தைவிட்டுப் பிரிந்துபோகிறீர்கள். கர்த்தா கொடுத்தார், கர்த்தா எடுத்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக என கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்துக்கு துதிசெலுத்துவதே நமது கடமை.

9. வினா. இம்முறைமையில் அமைக்கப்பட்டிருக்கிற சங்கீதங்கள் சமயத்துக்கு தகுந்தவைதான் என்று காட்டு.

விடை. அமைக்கப்பட்டிருக்கிற இரண்டு சங்கீதங்களில் முந்தினதாகிய 39-ம் சங்கீதம் அப்சலோம் மரித்ததின்பேரில தாவீது பாடின துயரக்கீதம். உபத்திரவமானது தேவசெயலால் விடப்படுவதால் அதைப் பணிவோடே சகிக்கவேண்டுமென்று இதில் காட்டப்பட்டிருக்கிறது. நாம் வீணான முறைப்பாடுகளுக்காவது அடாத பாவங்களுக்காவது இடங்கொடாமல், ஜெபத்தாலும் தியானத்தாலும் நம்மை ஆற்றித் தேற்றிக்கொள்ளவேண்டுமென்று இதால் நாம் கற்றுக்கொள்ளக்கூடும். பின் வருகிற 90-ம் சங்கீதமானது வனாந்தரத்தில் இஸ்ரவேலர் செய்த பாவங்களுக்காக அவர்களில் திரளான பெயர் மடியத்தக்கதாக தீர்ப்புபிறந்ததையிட்டு மோசே பாடின கீதமாயிருக்கிறது. நாம் தேவசெயலைப்பற்றி முறைப்பாடு பண்ணாமல் நமது ஆத்துமநிலைமையை சீரபடுத்தத்தக்கதாக நமது சரீரநிலைமையைபபற்றி தீர்மானித்துக்கொள்ளவேண்டும் என்று இச்சங்கீதத்தால் நாம் கற்றுக்கொள்ளக்கூடும். ஆதலால் இவ்விரு சங்கீதங்களும் இம்முறைமையில் வழங்கபபடுகிறதற்கு மிகவும் ஏற்றதுதான்.

10. வினா. இவைகளுக்குப்பின் வருகிற பாடத்தில் அடங்கிய பொருட்கள் என்ன?

விடை. பரி. பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தின் பதினைந்தாம்அதிகாரத்தில் 20-ம் வசனமுதல் வாசிக்கப்படும். கிறிஸ்துவானவர் உயிரோடெழுப்பப்பட்ட விஷயத்தைப்பற்றியும் பொதுவான உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைப் பற்றியும் பரி. பவுல் ரூபிக்கத் துவக்கி, முதலாம் ஆதாமால் பூமியில் உண்டான தீமையையும், இரண்டாம் ஆதாமால் மனிதருக்குச் சம்பாதிக்கப்பட்ட மகிமையையும் எடுத்துப் புகட்டுகிறார். கிறிஸ்துநாதர் முதற்பலபாகமானவரென்று காட்டி, கடைசி நியாயத்தீர்ப்புக்குமுன் கிறிஸ்துவினுடையவர்கள் அவருடைய வருகையால் எழுப்பப்படுவார்கள் என்றும்,மத்தியஸ்தருடைய ராஜ்யம் பிதாவானவருடைய கையில் ஒப்புவிக்கப்பட்டு தேவன் எல்லாருக்கும் எல்லாமாயிருக்கும்பொழுதுதான்

முடிவுவருமென்றும் காட்டுகிறார்; அப்புறம் உயிர்த்தெழுதலுக்கு எதிரிடையாய்ச் சொல்லப்படும் சில ஆட்சேபனைகளுக்குச் சமாதானமுரைக்கிறார். இரத்தச்சாட்சிகள் தங்கள் உயிரை கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுத்தும் புதிதாய் குணப்படும் பேர் மரித்தோர் ஸ்தலத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதாகிய இவையெல்லாம் உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையாலேயே நடந்ததென்று காண்பிக்கிறார். இப்பிரபஞ்சத்தில் பூராமரிப்பின் செயலால்நடந்தேறிவருகிற காரியங்களைக்கொண்டு உயிர்த்தெழுதல் நடப்பது கூடாத காரியமல்லவென்று ரூபிக்கிறார். கடைசிநாளில் உயிரோடிருக்கிறவர்கள் மரிக்காமல் சடுதியாய் மாறுதலடைவார்கள் என்ற விசேஷத்தை எடுத்துரைக்கிறார். இவ்விதமாய் இவைகளைக் கருத்தாய் எடுத்துரைத்து தியானித்து, மரணமே உன் கூரெங்கே, பாதாளமே உன்ஜெயமெங்கே என்று ஆர்ப்பரித்து, இயேசுகிறிஸ்துவின்மூலமாய் மரணத்துக்கு நீங்கும் வழியையருளின தேவனுக்குத் துதிசெலுத்தி, விசுவாசிகள் கர்த்தருக்கேற்ற கிரியைகளில் பெருகிவர ஏவுகிறார்.

11. வினா. சமாதிக்குழியில் பிரேதத்தை அடக்க எத்தனிக்கையில் சொல்லப்படுகிறதென்ன?

விடை. மரித்துப்போனவனுக்காக யாதொரு ஜெபம் பண்ணப்படாமல், உயிரோடிருக்கிறவர்களுக்காக போதனையளிக்கத்தக்கதாக தியானமொழிகளே சேர்க்கப்பட்டிருக்கிறது.

12. வினா. மரித்துப்போனவனுடைய ஆத்துமத்தை தேவன் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளச் சித்தமானதாக சொல்லியிருப்பது எல்லாவகைக்கும் சொல்லத்தக்கதுதானோ?

விடை. பொல்லாரும் நல்லோருமாகிய யாவரும் மரிக்கையில் அவர்களின் ஆவி தந்த தேவனண்டை போகிறதென்று ஞானியாகிய சாலொமோன் சொல்லுகிறார் (பிர. 12. 7). எல்லா மனிதருடைய ஆவிகளும் தேவனண்டைக்குப் போகிறதேயானால், தேவன் அவைகளை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளச் சித்தமானார் என்பது யதார்த்தமே.

13. வினா. நித்திய ஜீவனுக்கு உயிர்த்தெழுதல் உண்டென்று நம்பி..........பூமிக்கு ஒப்புக்கொடுக்கிறோம் என்பதின் கருத்தென்ன?

விடை. ஒழிந்துபோன பிரேதமாக எடுத்தெறிந்துவிடாமல் பூமியில் நித்தியஜீவனின் வித்து உண்டாயிருக்குமாப்போல் அதிலே அடக்கிவைக்கிறோம் என்பதே. நித்தியஜீவனுக்கு

உயிர்த்தெழுதல் உண்டாகுமென்பது ஒரு பொது வசனமே அல்லாது, ஒவ்வொருவனுக்கும் தனிமையில் சொல்லத்தக்க தான வசனமல்ல.

14. வினா. அப்புறம் வாசிக்கப்படுவதென்ன?

விடை. வெளி. 14. 13ல் உரைக்கப்பட்டிருக்கிற ஆறுத லான வசனமே. கர்த்தருக்கு உட்பட்டு மரிக்கிறவர்கள் அதுமுதல் தங்கள் பிரயாசங்களைவிட்டு ஒழிந்து இளைப்பாறு வதால் பாக்கியவான்களாயிருக்கிறார்கள் என்று இதிற் சொல்லப் பட்டிருக்கிறது. இப்படியிருக்க, அவர்களுக்காக நாம் துக்கிப்பது நியாயமல்லவென்று இதனால் அறிந்துகொள்ளத்தகும்.

15. வினா. கர்த்தருடைய ஜெபம் இம்முறைமையில் அமைக் கப்பட்டிருப்பது சரிதான் என்று காட்டு.

விடை. அதிலுள்ள மன்றாட்டு இச்சமயத்துக்கு உகந்தவை தான். எப்படியென்றால், நாம் பூமியில் நமது பிரிய சகோத ரன் ஒருவனை இழந்துபோனால் பரமண்டலங்களிலிருக்கிற நமது பிதா நமக்கு என்றும் அநுசாரியாயிருக்கிறார் என்று அறிந்து, அவரைநோக்கிக் கூப்பிட்டு அவருடைய செயலுக் காக முறுமுறுக்காமல் அவருடைய நாமம் பரிசுத்தப்பட வும் அவருடைய உத்தமர் மகா சுத்தாங்கமும் நிலைமையு முள்ள ஐக்கியத்துக்கு உட்படத்தக்கதாக அவருடைய ராஜ்யம் வரவும் ஜீவனிலும் மரணத்திலும் தேவசித்தமே நடந்தேறவும் வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். இதுவுமன்றி, இம்மையில் நமக்கு அவசியமான அன்றாடகப் பிழைப்புக்கு ஒப்பாக இம் மைக்கும் மறுமைக்கும் செல்லத்தக்க பாவமன்னிப்பு தீமை நிவர்த்தி என்பவைகளும் நமக்கு அருளப்படவேண்டுமென்று மன்றாடிக்கொள்ளுகிறோம். இந்தவிதமாய் கவனிக்குமிடத்து இச்செபம் இவ்விடத்தில் வழங்கப்பட்டிருப்பது தகுதியென்று பிரத்தியட்சமாய் விளங்குமே!

16. வினா. பின்வருகிற இரண்டு ஜெபங்களில் கண்டிருக் கிறதென்ன?

விடை. இவைகளில் முந்தினது கூடிவந்திருக்கும் அனை வருக்காகவும், பிந்தினது மரித்தவனின் இனத்தாருக்காகவும் பண்ணப்படும்.

17. வினா. இவைகளில் முந்தின ஜெபத்தில் மரித்துப்போன வனுக்காக துதிசெலுத்தியிருப்பது சரியா?

விடை. மனுஷமார்க்கமாய் நாம் துக்கிக்கவேண்டியதானாலும் கிறிஸ்துமார்க்க ஒழுக்கத்துக்கு ஏற்றபடி அதை நன்மையாய் மதிப்பதும் கடமையே. மேலும் மரித்துப்போனவன் பாவச் செய்கைகளினின்று விடுதலைபெற்றிருப்பதை நாம் கவனிக்கும் பொழுது தேவனைத் துதிப்பது சரியே.

18. **வி.** பிந்தின சுருக்க ஜெபத்தில் "நாங்கள் நம்புகிற" என்றும், நம்பியிருக்கிற நாங்கள் என்றும் சொல்லியிருக்கிற விசேஷத்தைப்பற்றி கவனித்துக்கொள்ளத்தக்கதென்ன?

விடை. நாம் விரும்புகிற காரியம் எதுவோ அது நம்பிக்கையாக உரைக்கப்படுவதுண்டு. அக்காரியத்தை விசுவாசிக்க போதிய நியாயங்கள் உண்டாயிராவிட்டாலும் அது நடக்கக் கூடியதல்லவென்று நிச்சயமற்றிருக்கும்பொழுது அது நடக்கும்படி விரும்புவதற்கொப்பாக இப்படிச் சொல்லப்படும். நிச்சயத்தைத் தழுவிய நம்பிக்கையுமுண்டு. நிச்சயங்களின பேரில் நம்பப்படும் மன நட்பாலுண்டாகிய நம்பிக்கையுமுண்டு; விருப்பத்தைத் தழுவிய நம்பிக்கையுமுண்டு. இங்கே குறிக்கப்பட்டிருப்பது பிந்தின வகையையே. சாகும் ஒருவனைப்பற்றி தீதாயச்சொல்ல தீர்ந்த நியாயமில்லாதிருந்தாலல்லாது அவனைப்பற்றி நன்மையே விரும்புவது நன்று. ஆதலால் மரித்துப்போனவன் நரகத்துக்குத் தீர்மானிக்கப்பட்டவன் என்று போந்த நிச்சயம் நமக்குண்டாயிருந்தாலேயல்லாது மற்றப்படி அவன் கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து இளைப்பாறுகிறான் என்று நம்புவது சரியே. காரியம் இப்படியிருக்க மரித்துப்போன யாதொருவனைப்பற்றி நாம் குற்றத் தீர்ப்புரைப்பது வேதவசனத்துக்கு விரோதமாயிருப்பதுமன்றி, நமதுபேரில் குற்றமாயும் இருக்குமே (ரோம. 14. 4. பரி. மத். 7. 1. பரி லூக 13. 12. காண்க.). இத்தால் பாவிகளுக்கு இளக்காரங்கொடுப்பதுபோலிருக்குமென்று நினைக்க இடமில்லை. ஏனென்றால், இம்முறைமை முழுவதும் அத்தப்பெண்ணத்துக்கு எதிரிடையாகவே கண்டிருக்கிறதுமன்றி நாம் குறித்துப் பேசுவதற்கு முந்தின பக்கத்தில்தானே அது துலாம்பரமாய் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பாவமரணத்திலிருந்து எழும்பாதவன் நல்லமரணம் அடைவதுமில்லை, சந்தோஷமான உயிர்த்தெழுதலை கண்டடைவதுமில்லை. நாமோவென்றால்; மரித்துப்போனவனைப்பற்றி நமது நம்பிக்கையை பாராட்டுகிறதாயிருக்க நம்மைப்பற்றி கவலையற்றவர்களாயிருக்கலாகாது. நாம் மறுமையில் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இம்மையில்

பரிசுத்தமாய் நடந்துவரவேண்டும். நாம் ஆராதிக்கிற தேவன் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறார்; நாம் நாடித்தேடும் மோட்சமும் பரிசுத்தமுள்ளது; அங்குள்ள தூதரும் பரிசுத்தவான்களும் பரிசுத்தவான்களாயிருக்கிறார்கள். அப்படியிருப்பதாலே பரிசுத்தமில்லாதவன் அங்கே பிரவேசிபபதில்லை. அப்பேர்ப்பட்டவனுக்கு அந்த ஸ்தலம் பிடிபடவுமாட்டாது; உத்தமனுக்கோ அது பேரின்ப சந்தோஷ ஸ்தலமாயிருக்கும். அந்த ராஜ்யத்தில் நாம் போய்ச் சேருமளவும் நமக்குமுன் மரித்துப் போனவர்களுக்காக மட்டுமின்றி துக்கிக்காமல் நாம், நாமே மரணத்துக்கு ஆயத்தமாயிருக்கும்படி எக்காலத்திலும் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டியது.

19. வினா. இம்முறைமை வழங்கப்படக்கூடாத சமயம் உண்டோ?

விடை. நமது ஆண்டவர் காட்டிய மாதிரிப்படி திருச்சபையானது யாதொருவனையும் குற்றமாய் நிர்ணியாமல் தனக்குட்பட்டு மரித்துபபோன யாவரையும் இம்முறைமைப்படியே அடக்கஞ்செய்ய திட்டஞ்செய்திருக்கிறது. ஆகையால் ஞானஸ்நானம் பெறாதவர்களையும் திருச்சபைக்கு புறம்பாக்கப்பட்டவர்களையும் தற்கொலை செய்துகொண்டவர்களையுந்தவிர, மற்றவர்களை இம்முறைமைப்படி அடக்கம்பண்ணுதிருப்பது குற்றமாம். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை கிறிஸ்துமார்க்க முறைமைப்படி அடக்கம்பண்ணுவது நன்றல்ல. தற்கொலைசெய்து கர்த்தர் அழைக்குமுன் அவரது சமுகத்துக்குட்படுகிறவர்கள் அவரால் எடுத்துக்கொள்ளப்பட்டவர்களல்ல. ஆதலால் இவர்களையும் கிறிஸ்துமார்க்க ஆசாரப்படி அச்செபத்தோடே அடக்கஞ்செய்வது சரியல்ல.

20. வினா. மத்தியகால ஜெபமுறைமைகளில் அடங்கியிருந்த காரியங்களென்ன? அவை நீக்கப்பட்ட மூகாந்தரமென்ன?

விடை. 1. மரணத்துக்கும் அடக்கத்துக்கும் நடுவில் மரித்தோருடைய ஆத்துமாவைத் தேவனுக்கு ஒப்புவித்து வீட்டில் ஜெபம் நடத்தப்பட்டது; 2. அடக்கத்துக்குரிய ஆராதனை; 3. ரிகுவையம் (Requiem) என்ற கீர்த்தனையுடன் மரித்தோருக்காகப் பூசை நடப்பித்தல்; 4. ஐந்தாம் சங்கீதம் எட்டாம் வாக்கியத்தின் டர்ஜி (Dirge) என்ற பாட்டுடன் தொடங்கிய ஆராதனை; 5. மரித்தபின்பு முப்பதுநாள் செய்யத்தக்க திரண்டல் (Trentals) என்ற பூசை ஆராதனைகள்; 6. வருஷாந்தரம் மரித்தோருடைய நாளைக் கொண்டாடும்போது செய்

யத்தக்க ஜெபங்கள் முதலியவைகளே. கி. பி. 1549ல் உண்டான 1-ம் ஜெபபுஸ்தகத்தில் மரித்துப்போனவர்களின் ஆத்துமாக்களுக்காகச் செய்யப்படும் ஜெபங் கண்டிருக்கிறது. அந்த ஆத்துமாவுக்காக பரி. நற்கருணை ஆசரிக்கும் வழக்கம் ஐந்தாம் நூற்றாண்டில் ஆரம்பித்தது. மரித்தவனின் இனஜனங்கள் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை விசுவாசித்து, அதினால் ஆறுதலடையும் நோக்கத்துடனே ஆசரிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் காலஞ்செல்லவே உயிரோடிருக்கிறவர்களின் உபயோகத்துக்காக ஆசரிக்கப்பட்ட நற்கருணை மரித்தோருக்காகச் செய்யும் பூசைபலியாக மாறிப்போனதினாலே கி. பி. 1552ல் உண்டான 2-வது ஜெபபுஸ்தகத்தில் அவை நீக்கப்பட்டது. அத்தோடுகூட "நான் உன் ஆத்துமாவைத் தேவனுக்கு ஒப்புவித்து, உன் சரீரத்தை பூமிக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" என்ற வார்த்தைகளும் நீங்கிப்போயிருக்கிறபடிக்கு மாற்றப்பட்டது. இந்த வார்த்தைகள் பிர. 12. 7. ஆதி. 3. 19. முதலிய வாக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்டதாயிருந்தபோதிலும் உண்டான அவபத்தியினிமித்தம் எடுத்துவிட நேரிட்டது.

21. வி.று. மரித்தோருக்காக ஜெபஞ்செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்ட காரணமென்ன? இதைப்பற்றி பிளன்டு (Blunt) என்பவர் ஹீபர் கணகாணியார் (Bp. Heber) எழுதியதாகச் சொல்வது என்ன?

மறுவிடை. 1-வது ஜெபபுஸ்தகத்தில் மரித்தோருக்காக வேண்டிக்கொள்ளும் வாக்கியங்களெல்லாம் தள்ளப்பட்டபோதிலும் மரித்தோருக்காக ஜெபஞ்செய்யக்கூடாதென்று ஜெபபுஸ்தகத்தில் விதிக்கப்படவில்லை. அங்கீகாரம்பெற்ற வேதாகமத்தில் அதற்கு ஆதாரங் காணப்படாத முகாந்தரத்தையிட்டும் சீர்திருத்தலின் காலத்தில் அது அநேக அவபத்திக்கும் தீய ஒழுக்கங்களுக்கும் ஏதுவாயிருந்த முகாந்தரத்தையிட்டும் அந்த பாகங்களை நீக்கிவிட்டார்கள். இதைப்பற்றி ஹீபர் கண்காணியார் சொல்லுகிறதாவது, "நம்முடைய இரட்சகருடைய காலம்வரையும் யூதருடைய அபிப்பிராயங்களையும் வழக்கங்களையும் பார்க்கும்போது, அவர்கள் இறந்துபோன தங்கள் சிநேகிதர்களைத் தேவனுடைய இரக்கத்துக்கே ஒப்புவித்தார்களென்று அறிகிறோம். 2 மக்கபே 12. 46-ம் வாக்கியத்தைப் பார்க்கும்போது, மரித்தோருக்காக ஜெபம்பண்ணுவது முற்றும் பரிசுத்தமுமான சிந்தையாகவே தோன்றுகிறது. எவ்வகையாய்ச் செய்தாலுஞ் சரி, இந்த வழக்கம் அவர்களுக்குள் இரட்சகர்பிறக்குமுன்னே இருந்திருக்கிறது. இந்த வழக்கத்தை

அது தகாதவழக்கமென்று கண்டால் கிறிஸ்துவானவராவது அவருடைய அப்போஸ்தலர்களாவது தங்கள் சம்பாஷணையி னால் அல்லது எழுத்துக்களினால் கண்டித்திருப்பார்களேயென்று நினைக்கவேண்டியதாயுமிருக்கிறது; அப்படி கண்டிக்கவு மில்லை. இதுவுந்தவிர கிரேக்கச்சபையும் கிழக்கத்துச் சபைகள் யாவும் உத்தரிக்கும் ஸ்தலத்தை விசுவாசிக்காவிட்டாலும் மரித்தோருக்காக ஜெபஞ்செய்துவருகிறார்கள். இந்த வழக்கம் அவர்களுக்குள் மாத்திரமல்ல, கிறிஸ்து பிறந்த ஏறக்குறைய 150 வருஷங்களுக்குப்பின்பு பூலோகமெங்குமுள்ள சபை களிலும் சாதாரணமாய் நடந்துவந்ததாகவும் காணப்படுகிறது. இது சாதாரணவழக்கமென்று தொத்துல்லியன், எலிப்பானியு என்பவர்கள் சாட்சிபகர்ந்தும் இருக்கிறார்கள். அகுஸ்தீன என்பவர் தாமெழுதிய அறிக்கை (Confessions) என்ற புஸ்த கத்தில் இறந்துபோன மோனிக்கா (Monica) என்ற தம்மு டைய தாயாருக்காகத் தாமே செய்துவழங்கிவந்த ஒரு நேர்த்தி யான ஜெபத்தையும் எழுதிவைத்திருக்கிறார். புரோடெஸ் டாண்டருக்குள்ளே லுத்தர் என்பவரும், டாக்டர் ஜான் சன் (Dr. Johnson) என்பவரும் அப்படியே செய்துவந்தி ருக்கிறார்கள். பிந்தினவர் தம்முடைய மனைவிக்காகச் செய்த ஜெபத்தை எழுதிவைத்திருக்கிறார். இதின்படிக்கு நானும் சில வருஷங்களாகக் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங் கினபின்பு இறந்துபோன என் சிநேகிதர்களைப் பேர்பேரா கச் சொல்லி அவர்களை 'தேவனுடைய இரக்கத்துக்கும் நன் மைக்கும் அவருடைய குமாரன்மூலமாய் ஒப்புவித்துவருகி றேன். இது அவர்களுக்கு மோசமாயிராமல் உதவியாகவே இருக்குமென்று நம்பியிருக்கிறேன். நான் எப்பொழுதும் எச் சரிக்கையுடனே நினைக்கிறதென்னவென்றால், இதிலே நான் தெரியாமல் துணிகரமாய் இப்படி செய்கிறேனோ, அல்லது மற்ற வர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதில் எங்கே என் சொந்த ரட்சிப்பையும் கிருபையையும் அசட்டையாய் விட்டுவிடுகி றேனோ என்பதே. 2 தீமோ. 1. 18ல் "அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவ னுக்கு அனுக்கிரகஞ்செய்வாராக" என்ற வாக்கியத்தைப பரி. பவுல் எழுதியபோது ஒநேசிப்போரு மரித்திருந்தானென் றே சொல்லக்கூடியதாயிருக்கிறது. 2. 16லும், 4. 19லும் ஒநே சிப்போருவின் வீட்டைப்பற்றிச் சொல்லியிருக்கிறதேதவிர ஒநேசிப்போருவைப்பற்றிச் சொல்லப்படவில்லை" என்பதே.

———»«———

XIX. CHAPTER.

THE RITE OF PURIFICATION AMONG THE JEWS AND THE EXAMPLE OF THE HOLY MOTHER.

Reasons for the thanksgiving in the Church. The appropriateness of the two Psalms and prayers. The meaning of the Rubricks.

பத்தொன்பதாம் அதிகாரம்.

ஸ்திரீகள் பிரசவித்தபின்பு தேவாலயத்தில் பிரவேசித்து செய்யவேண்டிய ஸ்தோத்திரத்தைப்பற்றியது.

---

1 வினா ஸ்திரீகள் பிரசவித்தபின் தேவாலயத்தில் செய்யும் ஸ்தோத்திரமுறையை திருச்சபை ஏற்படுத்தியிருப்பது ஏன்? இதற்கொப்ப யூதருக்குள் நடந்த சடங்காசாரம் என்ன?

விடை. நாம் எவ்வித மோசங்களினின்று ரட்சிக்கப்பட்டாலும் இரக்கங்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செய்வது நமது கடமையே. ஆனால் பேறுகால அவஸ்தையானது தேவனால் விதிக்கப்பட்ட விசேஷ குறிப்பாயிருப்பதினால் ஆதிச்சாபம் ஆசீர்வாதமாய் நடக்கச்செய்யப்பட்டதை நினைவுகூரும்படி ஸ்தோத்திரமுறைமையானதை திருச்சபை ஏற்படுத்தியிருக்கிறது. யூதருக்குள் பிரசவித்த ஸ்திரீகள் நியாயப்பிரமாண ஒழுங்குப்படி தங்களை சுத்திகரித்துக்கொண்டு பலி காணிக்கைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவார்கள். கன்னி மரியாளுடைய பிள்ளைப்பேறு சாதாரணமுறைமைக்கு வேறுபாடானதாயிருந்தாலும் அவள் முதலாய் தன் ஜாதியாசாரப்படி நடந்துகொண்டாள். யூதர் செலுத்திவந்த பலி கிறிஸ்தவர்களுக்குள் செலுத்தப்பட்டுவருகிற ஸ்தோத்திரபலிக்கு குறிப்புத்தான் (லேவி. 12 அதி.). ஆதலால் திருச்சபையில் இம்முறைமை அமைக்கப்பட்டிருப்பது மிகவுந் தகுதியே.

2. வினா. ஸ்திரீயானவள் பிரசவித்தபின்பு தேவாலயத்தில் பிரவேசித்து துதிஸ்தோத்திரங்களைச் செலுத்துவது உத்தமமென்று காட்டத்தக்க வேறு சில நியாயங்களைச் சொல்லு.

விடை. தேவன் தம்முடைய நாமத்துக்கு மகிமையாக குழந்தையை உருவாக்குவதிலும் சுகமான பிரசவத்தைக் கட்டளையிடுவதிலும் பாராட்டிய அதிசயிக்கத்தக்க செய்கைகளை ஸ்திரீயானவள் சபைமுன்புக்கு வெளியரங்கமாய் அறிக்கை

.ழிவதால் மற்றவர்களும் அவர்பேரில் நம்பிக்கைவைக்க கற்றுக்கொள்ளும்படியாக இப்படிச் செய்வது நலமே. (2) சபையாரனைவரும் தங்கள் பிறபபில் விளங்கிய தேவகிருபையை எளிதாய் மறந்துபோகிறவர்களாயிருக்கிறதால் அவர்கள் அதை நினைத்து தேவநாமத்தை துதிக்கும்படி போந்த ஏதுவுண்டாயிருக்கத்தக்கதாக இவ்வாறு செய்வது நலமே. (3) ஸ்திரீயானவள் தனக்குக் கிடைத்த தேவனுடைய கிருபையை உணர்ந்து அவருடைய பரிசுத்தவான்களின் சபையிற் சேர்ந்து அவரை ஆராதிக்கும் பாக்கியமான சலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள இவ்விதம் செய்வதே நலமும் உத்தமுமான வழக்கம். இப்படியிருக்க தேவாலயத்தில் பிரவேசித்துச் செய்யவேண்டிய துதிதோத்திரத்தை வீடுகளில் செய்யத் துணிவது சரியா? இம்முறைமையின் நாமத்துக்கே அது எற்காதே. இம்முறைமையின் நோக்கத்துக்கும் அமைப்புக்கும் அது பொருந்தியிருபபதெப்படி? (சங். 116. 18, 19. காண்க.) ஸ்திரீயானவள் மிகவும் பலவீனமுள்ளவளாயிருந்தால் அவள் தீர்ந்த சுகமும் பெலனும் அடையுமட்டும் வீட்டிலிருந்து, பிற்பாடு தேவாலயததுக்கு வந்து தன் நன்றியறிதலை செலுத்திக்கொள்ளலாம்.

3. வினா. இம்முறைமையின் பொழிப்பென்ன? இது இயற்றப்பட்ட காலமென்ன?

விடை. ஸ்தோத்திரஞ்செயயவேண்டிய கடைமைக்கு முகாந்தரம் உரைக்கிற முகவுரை முதலாவதாகவும, ஸ்தோத்திரப்பாடலான இரண்டு சங்கீதங்கள் அடுத்தும் நிற்கும். இவ்விரு சங்கீதங்களிலே முந்தினதில் தப்பித்துக்கொண்ட மோசமும், பிந்தினதில் பெற்றுக்கொண்ட நன்மையும் சுட்டிப்பேசப்படுகிறது. கடைசியாக, சின்ன லித்தானியும் காத்தருடைய ஜெபமும் பிரதிமொழி வாசகங்களும் சுருக்க ஜெபமுமுண்டு. சற்றேறக்குறைய இதற்கொத்த தோத்திரமுறைமை சாலிஸ்புரி செபபுஸ்தகத்திலுண்டு. ஆனால் இதில் சங்கீதங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன; முகவுரையும் புராதனமாயுள்ளது.

4. வினா. ஆராதனையின் எச்சமயத்தில் இது வாசிக்கத்தக்கது? இத்தோடே பொதுவான தோத்திரத்தில் விசேஷ சமயததுக்கென்று குறிக்கப்பட்டிருக்கிற வாக்கியத்தை வாசிப்பது தகுதியோ?

விடை. இது வாசிக்கப்படவேண்டிய சமயத்தைப்பற்றி ரூபிரிக்கில் பிரமாணங் கூறப்பட்டிராததினால் சிலர் காலை மாலை ஜெபம் வாசிக்கப்படுமிடத்தினின்றும், சிலா நற்கருணைப்பந்தி

மேசையருகாய் நின்றும் இதைவாசித்துவந்தாலும், பொதுவான ஸ்தோத்திரத்துக்கு முன்னதாக இதை வாசிப்பது தகுதியாம். ஏனெனில், விசேஷதோத்திரஜெபம் இவ்விடத்திலேயே பெரும்பான்மையும் வாசிக்கப்படும். ஆனால் தங்களுக்காக மன்றாடும்படி கேட்டுக்கொண்டவர்களுக்காகச் செய்யப்படும் தோத்திரபாகத்தை இச்சமயத்தில் வாசிக்கலாகாது. ஏனெனில் இம்முறைமையானது அனுதின ஜெபங்களோடு சேர்த்து வாசிக்கப்பட்டாலுஞ் சரி, தனிப்பட வாசிக்கப்பட்டாலும் சரி; ஞானஸ்நானமுறைமை முதலியவைகளைப்போல் இது தனிமையான ஒரு முறைமைதானென்பது நிச்சயமே.

5. வினா. இம்முறைமையில் வழங்கப்பட்டிருக்கிற சங்கீதங்கள் இரண்டும் சமயத்துக்கு உகந்தவைதானென்று காட்டு.

விடை. இவைகளில் முந்தினதாகிய 116-ம் சங்கீதமானது தாயானவள் சரீர பேறுகால உபாதியை பாராட்டுவதற்கும், பிந்தினதாகிய 102-ம் சங்கீதமானது புத்திரப்பேறின் வளமையை பாராட்டுவதற்கும் ஏற்றதாயிருக்கிறது. ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய இருபேர்ப்பட்டவர்களுடைய நிலைமைக்கும் ஒத்தபடி இச்சங்கீதங்கள் செல்லத்தக்கவைதான். எளியவர்களாயிருப்பவர்களுக்கு பிள்ளைகள் அதிகமாயுண்டாயிருப்பது வெறுப்பாய்த் தோன்றுவதாயிருக்கலாம். ஆனால் செல்வ பாக்கியத்தைப்பார்க்கிலும் பிள்ளைப்பாக்கியமே மேம்பாடுள்ளதாலும், [illegible] பிள்ளைகள் கர்த்தரால் வருகிற சுதந்தரமும் பலனுமாயிருப்பதாலும், தாய்தகப்பன்மார் இந்த ஈவைப் பாரமென்றெண்ணி முறுமுறுக்காமல் அதனையருளிய கடவுளைப்போற்றி துதித்து தங்களைப் பாக்கியசாலிகள் என்று உணர்ந்து, அவருக்குள் சந்தோஷத்தையடைய இச்சங்கீதங்கள் மிகவும் தகுந்தவையே.

6. வினா. இந்த முறைமையின் சிறப்பைக் காண்பிக்கத் தக்க சில விசேஷங்களைச் சொல்லு.

விடை. குடித்தன உணர்ச்சியும் ஆராதனைக்கொண்டாட்டமும் மனதில் பயன்படத்தக்கவிதமாய் இம்முறைமையில் சேர்த்திணைக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீயானவள் பேறுகால அவஸ்தையை உணரும்போதே மனிதர் பாவிகளான விஷயத்தையும் தன்னிலே நினைவுகூர்ந்து கொள்ளக்கூடுமே. மரணவேதனைகள் தன்னை வளைந்துகொண்டனவென்றும், பாதாளத்தின் இடுக்கண்கள் தன்னை பிடித்தனவென்றும் கர்த்தாவே என் ஆத்துமாவை விடுவியும் என்றும், அவள் கர்த்தருடைய நாமத்தைப்பற்றி

குறிப்பிட்டபடியே அவள் சத்தத்தைத கேட்டருளினுரென்றும் அவள் உணரும்பொழுது அத்தியந்த பயபத்தி அவளில் உச்சிதமாய் பிறக்கலாகுமே. அவள் தன் ஆவியில் களிகூரவும் அவளுடைய ஆத்துமா தன் இளைப்பாறுதலுக்கு திரும்பிக்கொள்ளவும் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்தில் நடப்பேன் என்று தீர்மானம்பண்ணிக்கொள்ளவுங் கூடுமே. ஆனால் தற்பெலனை நம்பி இவ்வாறு தீர்மானம்பண்ணுமல் தேவ உதவியைமுன்னிட்டே நல் நிர்ணயமபண்ணிக்கொண்டு; தன்பேரில் தமது கிருபையைப் பெருகச்செய்யும் ஆண்டவருக்கு துதிதோத்திரஞ் செலுத்துகிருள்.

7. வினு. இம்முறைமையின் முடிவிற் கண்டிருக்கிற ரூபிரிக்கு சட்டமென்ன?

விடை. ஸ்தோத்திரஞ்செலுத்தவந்திருக்கும் ஸ்திரீயானவள் வழக்கத்தின்படி காணிக்கைகளைச் செலுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அவள் தனக்குப பாராட்டப்பட்ட பெரிய கிருபைக்காக நன்றியறிந்தவளாயிருப்பதை வெளியரங்கமாய் அறிக்கையிடுவதுமன்றி, தன் காணிக்கையாலும் அதைக் காண்பிப்பது தகுதியே. மேலும் பரிசுத்த நற்கருணையைப பரிமாறுகிறதாயிருந்தால் அவளும் அதை வாங்குகிறது தகுதியென்று ரூபிரிக்குசட்டத்தில் கண்டிருக்கிறது. அவள் தன் கைகளின் காணிக்கையை கர்த்தருக்குப படைப்பதுமன்றி,தன் இருதயத்தையும் அவருக்குப படைக்கத்தக்கதாக இவ்விதசட்டம் விதித்திருப்பது மிகவும் உபயோகந்தானே. பரிசுத்த இராப்போசனமானது துதிதோத்திரபலியென்றுஅழைக்கப்பட்டிருப்பதுபோல் இதுவும் நாம் நமது நன்றியறிதலை பாராட்டுவிதற்கேற்ற முறைமையானதால், ஸ்திரீயானவள் தற்காலத்தில்தான் பெற்றிருக்கும் தேவ ஈவுக்காகமாத்திரமல்ல, அதோடேகூட பொதுவாய் தான் பெற்றனுபவித்திருக்கும் சகல நன்மையுபகாரங்களுக்காகவும் தேவநாமத்துக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தத்தக்கதாக இம்முறைமைக்குச் சேருவது மிகவும் உத்தமமே.



XX. CHAPTER.

THE CUSTOM OF THE EARLY CHURCH.

Commination Service is not against the Christian Charity. It was originally instituted by God. The beauty of the Address. The meaning of the word "Amen" before the address.

இருபதாம் அதிகாரம்.

தேவகோபாக்கினை கூறல் என்னும் முறைமையைப் பற்றியது.

---

1. வினா. "வெளியரங்கமாய்த் தபசுசெய்தல்" என்று குருவானவர் அறிவிக்குங் காரியத்தின் விவரமென்ன?

விடை. பூர்வீக திருச்சபையிலே பெரும்பாதகங்களை நடப்பித்திருக்கும் குற்றவாளிகளை உபவாசித்து, முரட்டுத்துகில், சாம்பல்பூசி, இத்தகைய வெளியரங்கமாய் தபசுசெய்வது வழக்கம். கண்காணியார் தூய சட்டதிட்டங்களை வாசித்து அவர்கள்மேல் சாம்பலைத் தெளித்தபின்புதான் அவர்களை சபையிலிருந்து அனுப்பிவிடப்படுவார்கள். அப்புறம் நெடுங்காலமாய் பரீட்சிக்கப்பட்டு நன்னடக்கையுள்ளவர்கள் என்று விளங்கினால்தான் அவர்கள் திரும்பவும் திருச்சபையின் ஐக்கியத்தில் பூரணமாய் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இவ்வித சிட்சை மிகவும் கண்டிப்புள்ளதாயிருந்தாலும் அநேக நற்பலன்கள் அதால் உண்டாயின. ஆகைடால் இது இங்கிலாந்துசபையிலும் மற்றச் சபையிலும் பூர்வமாய் நடக்கலாயிற்று.

2. வினா. தேவபதிக்கேதுவான முறைமை பழுதுபட்டுப் போனதெப்படி?

விடை. ரோமான் குருக்கள்மாருடைய சீர்கேடு விர்த்தியான காலத்தில் இம்முறைமையும் பழுதுபடலாயிற்று. வெளியரங்கமாய் பாவஞ்செய்தவர்கள், தங்கள் தலைகளில் சாம்பலை தெளித்துக்கொள்வதே போதுமென்று விதிக்கப்பட்டதால், குணப்படாதவர்களும் குணப்பட்டவர்களுமான யாவரும் ஒப்புக்குச் சேர்ந்து பாவ அறிக்கைசெய்வது வழக்கமாயிற்று.

3. வினா. திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் இதை யிட்டுச் செய்த முறை என்ன?

விடை. ரோமான்சபையில் பாவசங்கீர்த்தனம் செய்வதாயும் பாவவிமோசனங் கூறுவதாயும் இளக்காரச்சீட்டுக் கொடுப்பதாயும் நடந்துவந்த வழக்கங்கள் ஜனங்களின் மனதை மோசமபோக்கினதால், அவர்கள் கிறிஸ்துமார்க்க ஆரம்பகாலத்தில் விளங்கிய உத்தமத்துக்குப பங்கமாய் நடக்கலானார்கள் என்று இவர்கள் நிதானித்து, பழுதுள்ள முறைமையை நறுக்கிவிட்டு, பூர்வீகமாயுள்ளதைத் திருப்பவும் ஸ்தாபித்து, அதை திரும்பவும் உண்டாக்க விரும்பினார்கள். என்றாலும், அவ்விருப்பப்பிரகாரம் அப்பொழுது நிறைவேறக்கூடாதிருந்ததால் அதற்குப பதிலாக இம்முறைமையை தற்காலத்துக்கென்று அமைத்தார்கள்.

4. வினா. இம்முறைமைக்குப் பெயரென்ன? அதின் கருத்தென்ன?

விடை. தேவகோபாக்கினை கூறல் என்பதே இம்முறைமைக்குப் பேர். அதாவது, குணப்படாத பாவிகள் எல்லாருக்கும், விசேஷமாக இம்முறைமையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிற பாவங்களையடையவர்களுக்கும் விரோதமாகவரும் தேவனுடைய கோபத்தைக் கூறுவதும், தேவனுடைய நியாயப்பிரமாணங்கள் நீதியும், அவைகளை மீறுகிறவர்களுக்குண்டாகப்படும் தீர்ப்பு யதார்த்தமும் நிதானமுமென்று அறிக்கையிடுவதும் அடங்கிய முறைமையேயாம்.

5. வினா. இவ்வித முறைமைகள் யாருக்குள் பூர்வமாய் நடந்தது? கிறிஸ்தவர்களுக்கு இது ஏற்குமா?

விடை. இம்முறைமை தேவனால் ஏற்படுத்தப்பட்டு (உபா. 11–17 அதி.) யோசுவாவினால் ஆசரிக்கப்பட்டு யூத சரித்திரக்காரனாகிய யோசேப்புஸ் அறிவிக்கிறபடி யூதசபையில் நெடுகிலும் நடந்துவந்தது. தேவனுடைய தத்துவ லக்ஷணங்களை மகிமைப்படுத்துவதால் அவருடைய மகிமையை அறிக்கையிடுவதும், பாவத்தின் தன்மையையும் அத்தால் விளையும் பலன்களையும் உணர்த்துவதால் குணப்படுத்த பிறப்பிப்பதுமே இம்முறைமையின் நோக்கமாயிருப்பதால் கிறிஸ்தவர்களுக்கும் இது செல்லத்தக்கதுதான். கிறிஸ்துவானவர் நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டது மெய்தான். ஆனாலும் உண்மையாய் குணப்படும் உத்தமருக்குத்தான் இது செல்லும். குணப்படாத நிலைமையில் நிலைத்திருக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்குட்பட்டேயிருக்கிறார்கள். ஆதலால் குணப்படுதலுள்ளவர்களும்

குணப்படுதல் பெறாதவர்களுமான சகலருக்கும் இவை கூறப் படும். தேவசாபங்கள் உண்மையும் நீதியுமானவைகளென்று ஒப்புக்கொள்ளத்தகுமென்று கற்பிக்கிறது. குணப்படுதலுள்ள வன் பாவத்தால் விளையும் தீமையை அறிக்கையிடுதலாகவும், அத்தண்டனைக்குத் தன்னை நீக்கிவிடுகிற மீட்பருக்கு நன்றி யறிதலாகவும் தான் இனிப் பாவஞ்செய்து அத்தீமைகளை வருத் திக்கொள்ளாதிருக்கிறதற்கு ஏற்ற எச்சரிப்பாகவும் இதை வழங்கத்தகும். குணப்படாதிருக்கிறவன் தனக்கு நேரிடுவதா யிருக்கும் மோசத்தை உணரவும், கிருபையின் காலம் கடந்து போகு முன்னமே தானே குணப்பட்டு சீர்பொருந்தவும் ஏற்ற யத்தனமாக இதை வழங்கத்தகும்.

6. வினு. இம்முறைமைக்கு விரோதமாய் சிலர் சொல்லும் ஆட்சேபனை என்ன? அது சரியா?

விடை. நமது சபையின முறைமைகளிலெல்லாம் விளங் குகிற பிரதானமான ஒரு குறிப்பு என்னவென்றால், கிறிஸ்த மான அன்பே. இவ்வன்பினால் ஏவப்பட்டு பாவிகட்கு அவர் கள் வழியின் மோசமானதைக் காண்பிப்பதால், அவர்களை தீமையி னின்று திருப்பி மரணத்தினின்று ரட்சிக்கும்படி பிரயாசப் படுவதே அதின் பிரதான கவலை. ஆனாலும் மற்றெந்த முறைமை களைப்பார்க்கிலும் இம்முறைமையிலதான் அதிக சிறந்த வித மாய் அதின் நோக்கத்தைப் பாராட்டியிருக்கிறது. சிலர் இம் முறைமையை அன்பு முயற்சிக்குப் பின்னமானதென்று ஆட்சேபிக்கிறார்கள். மனிதர் தங்கள்பேரிலும் பிறர்பேரிலும் சாபத்தை விரும்பிக்கொள்வதாய் இம்முறைமையிற் கண்டிருக் கிறதென்று சாதிப்பார்கள். ஆனால் திருச்சபையின் நோக் கத்தைப் பார்த்தால் அப்படி அல்லவென்று விளங்கும். பாவி யானவனுக்கு பாவத்தின் தன்மையையும் அதால் விளையும் தீமை யையும் உணர்த்துவதும், அவன் தன் வாயாலே அதை அறிக்கை யிட்டு பாவத்தை வெறுக்கும்படி எச்சரிப்படைவதும், இனி எப்பொழுதும் சீர்ப்பட்டு நடக்கப் போதிப்பதுமே இதின் நோக்கம். அன்பானது தீமைக்குச் சந்தோஷப்படாமல் உண் மைக்குச் சந்தோஷப்படுகிறதென்று பரி. பவுலும், அன்பு டையவன் பாவியை அவனுடைய வழியின் மோசத்தினின்று திருப்பி ஒரு ஆத்துமத்தை மரணத்துக்கு விலக்கி ரட்சிக்கிற வன் என்று பரி. யாக்கோபும் விளம்பியபிரகாரம், இம்முறை மை அமைத்திருக்கிறதென்று துலாம்பரப்படுகிறது. மேலும் நாமாவது பிறராவது சபிக்கப்படவேண்டியதென்று விரும்

புதல் அல்லது பிரார்த்தித்தல் இம்முறைமையில் அடங்கியிரா மல், குணப்படாத பாவிகளுககு விரோதமாக தேவன் உரைத்த தீர்ப்பு குருவானவராலும், அத்தீர்ப்பு நீதிதா னென்று சம்மதவாக்கு சபையாராலும் உரைக்கப்படுவது மாத்திரமுண்டு. இப்படியிருக்க இம்முறைமையைப்பற்றி ஆட் சேபிப்பது சரியல்லவே.

7. வினு. குருவானவராலும் சபையாராலும் முறைமைப் படி கூறபபடும் வார்த்தைகளின் கருத்தென்ன?

விடை. வணங்கும்படி சித்திர சொரூபத்தையாவது வார்ப்பு விக்கிரகத்தையாவது செய்கிறவன சபிக்கபபட்டவனென்ற இந்தவிதமான பத்து வாக்கியங்கள் குருவானவரால் கூறப படும். சபிக்கபபடுவாஞக அல்லது சபிக்கபபடுவார்களாக என்று ஜெபித்தலாக அல்ல, சபிக்கப்படடபபட்டவன் எனற பொதுவசனமாக இவ்வாறு கூறபபடும. இதற்குப பிரதியுத்தரமாக, ஜனங்கள் ஆமென் என்பார்கள். இது குருவானவ ரால் கூறப்பட்டது மெயதான் என்பதற்கு சம்மதவாக்கே தவிர வேறல்ல. ஆனுல் அப்படியே ஆவதாக என்ற விருப்ப வார்த்தைபபாடாக வழஙகபபட்டிருக்கிறதென்று சிலர் சாதிப பார்கள். ஜெபங்களின் முடிவில் அது இக்கருத்தாய் வழங கப்பட்டிருக்கிறதென்பது மெய்தான். ஆனுல் ஆமென் என்ப தற்குரிய சரியான அர்த்தம மெய்யாகவே என்பதுதான். அவ்வர்த்தமாகவே விசுவாசப்பிரமாணமுடிவில் அது வழங் கப்பட்டிருக்கிறது; இக்கருத்தாகவே இவ்விடத்திலும் அது வழங்கப்பட்டிருககிறது. இதற்கிசைவான உதாரணங்களை யோசுவாவின் ஆகமத்திலும் யோவானின் ரகசிய வெளிப்படுத தலிலும் காணலாம்.

8. வினு. இம்முறைமைக்கு அனுமதியென்ன? இத்தால் நாம அறிந்துகொள்வதென்ன?

விடை. இங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற பாவங் களெல்லாம் அகோரமானவைகளும், தேவவசனத்தில் வெளிய ரங்கமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறவைகளுந்தான். இப பேர்ப்பட்ட பாவங்களுக்கு வரும் தேவசாபமும கோபாக் கினையும் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் சுவி சேஷங்களிலும் தெளிவாய் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இப்பாவங்களை நடப்பிக்கிறவாகள் தேவசாபத்துக்கும் கோபத் துக்கும் உட்புட்டேயிருக்கிறார்கள். திருச்சபையால் இச் சாபம் கூறப்பட்டாலுஞ் சரி, கூறப்படாவிட்டாலுஞ் சரி; உத்தம மனஸ்தாபமுள்ளவனை சாபம் பிடிப்பதுமில்லை; குணப்

பட்ட பாவியை அதின் சாபத்துக்கு உட்படுத்தவுங்கூடாது. ஆதலால் யூதரைக் கூறுவதால் தீமை யாதேனுமில்லை. இதற்கு எதிரிடையாக அநேகர் தங்கள் பாவத்தையும் அதற்காக வரும் தேவசாபத்தையும் உணர்ந்து சீர்ப்பட ஏதுவாயிருக்கும். பாவிகளைக் குணப்படுதலுக்கு அழைக்க இது ஏதுவாயிருக்கும். இந்த முறைமை பாவிகளை குணப்படுதலுக்கழைக்கவந்த இரட்சகர் சில சமயங்களில் கூறின ஐயோ என்ற வாக்குக்கு ஒத்திருக்கிறது.

9. வேறு குருவானவரால் கூறப்படும் புத்திபோதனை எப்பேர்ப்பட்டது?

விடை. அதிசயமும் உருக்கமான நடையுள்ளதும் மனதில் தைக்கவும் அதை அசைக்கவுந்தக்க வல்லமையுள்ளதுமாயிருக்கிறது. இதில் பயமுறுத்தலான எச்சரிப்புகளும் ஆறுதலான வாக்குத்தத்தங்களுமுண்டு. குணப்படாத பாவிகளுக்குவரும் தேவகோபாக்கினையை காட்டத்தக்கதாக கோடாரி மரங்களின் வேரருகே வைத்திருக்கிறதென்றும், பதரை அவியாத அக்கினியால் அவித்துப்போடுவார் என்றும், பாவிகள்மேல் நெருப்புத் தழல்களையும் அக்கினி கந்தகத்தையும் புசல்பெருங்காற்றையும் வருஷிக்கப்பண்ணுவாரென்றும் சொல்லியிருக்கிற வசனங்களெல்லாம் மனதை அசைக்கத்தக்கவைதானே. இப்பேர்ப்பட்டவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறார்கள் என்றும், நியாயாதிபதி இரவில் திருடன் வரும் தன்மையாய் வருவாரென்றும், கிருபையின் காலம் கடந்தபின் கர்த்தர் செவிகொடுப்பதில்லையென்றும், சபிக்கப்பட்டவர்களே! பிசாசுக்கும் அதின் தூதர்களுக்கும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற நித்திய அக்கினியில் போங்கள் என்ற தீர்ப்பே அவர்களுக்குக் கிடைக்குமென்றும் எழுதியிருக்கிற வசனங்கள் மனதைத் திடுக்கிடச்செய்யுமே! பின்னும் அதிலடங்கியிருக்கிற வசனங்கள் மிகவும் சுகிர்தமான ஆறுதலும் தேறுதலுமுள்ளவை. தெய்வ எத்தனமான மனஸ்தாபமடைந்து குணப்படும் பாவிகளுக்கு அவை மிகுந்த ஆறுதலைத் தரத்தக்கது. உங்கள் பாவங்கள் இரத்தாம்பரச் சிவப்புகொத்ததாயிருந்தாலும் பஞ்சைப்போல் வெண்மையாக்குவோம் என்றும், நீங்கள் ஏன் சாவீர்கள் என்றும், திரும்புங்கள், அப்போதே பிழைப்பீர்கள் என்றும், நமக்காக ஏற்பட்ட நாதர் பாவிகளை தம்மண்டை சேர்த்துக்கொள்ள சித்தமாயிருப்பதால் அவரிடத்துக்குத் திரும்பக்கடவோம் என்றும், அப்படிச் செய்தால் சாபத்துக்கு நீங்கி ஆசீர்வாதத்தைப் பெற்று மோட்ச ராஜ்ய மகிமையை சுதந்தரிப்போம் என்றும் சொல்லியிருக்

கிற வசனங்கள் நம்மில் நல்ல எழுப்புதலை பிறப்பிக்கத் தக்கவைதானே.

10. வினு. பின்வருகிற பங்குகள் எவை?

விடை. உட்கருத்தான மனத்துயரமும், தாழ்மையோடு கூடிய விசுவாசமும், உயிரான நம்பிக்கையும் பாராட்டப்பட்டிருக்கிறது. 51-ம் சங்கீதத்தை சபையாரனைவரும் முழங்காலினின்று சொல்லுவார்கள்; அப்புறம் கர்த்தருடைய ஜெபம் வரும்; அதின்பின் பாவத்தைக்குறித்து மனச்சாட்சியிலே குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு விமோசனத்தையும் வேண்டிய கிருபையையும் கட்டளையிடும்படி விண்ணப்பங்கள் செய்யப்படும். பின்பு சபையாரனைவருஞ் சேர்ந்து கர்த்தர் தங்களை மனந்திருப்பினுல் தாங்கள் திருப்பப்படுவோமாய அறிக்கையிட்டு, அவருடைய கிருபைக்காக பிரார்த்தித்துக் கொள்வார்கள். கடைசியாக, தேவ ஆசீர்வாதத்தோடே சபையார் அனுப்பிவிடப்படத்தக்கதாக ஆசீர்வாதவாகருகூறப்படும்.

11. வினு. சபிக்கப்பட்டவன் என்று வாசித்தவுடன் ஆமென் என்று சொல்வதற்கு அர்த்தமென்ன?

விடை. ஆமென் என்ற வார்த்தை இவ்விடத்தில் ஜெபமாக வழங்கப்படாமல் அல்லது அப்படியே ஆகக்கடவது என்ற அர்த்தங்கொள்ளாமல், அது சரியென்று ஒத்துக்கொள்ளுகிற அர்த்தமுள்ளது. ஆகையால் சாபத்தை நாமே விரும்பி, தேவன் நம்மைச் சபிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறதாக எண்ணகூடாது.



XXI. CHAPTER.

THE NEW ORDINAL COMPARED WITH THE OLD ONE.

Reasons for the Episcopal Government of the Church. Episcopacy approved by Calvin, Berga and Bucer. The three Orders in the Old and New Testaments. The several parts of the Ordinal explained and objections answered. The Minor Orders.

இருபத்தோராம் அதிகாரம்.

பட்டாபிஷேக முறைமைகளைப்பற்றியது.



வினு. திருச்சபைக் கட்டுப்பாட்டைப்பற்றிய கிரமமான முறைமை புதிய ஏற்பாட்டில் கண்டிராததற்கு முகாந்தரமென்ன?

விடை. புதிய ஏற்பாட்டாகமங்களில் எப்பங்கும் எழுதப்படு முன்னதாய்த்தானே திருச்சபை கட்டுப்பாடும் நிலைபெற்று நடந்தேறிக்கொண்டுவந்தது. ஆதலால் இவ்விஷயம் புதிய ஏற்பாட்டில் தெளிவாய் கண்டிருக்கிறதில்லை. அப்போஸ்தலர் தாங்கள் எழுதிய நிருபங்களில் எச்சரிப்பாயாவது, ஆலோசனையாய்பாவது, புத்திமதியாயாவது, ஏவி எழுப்புதலாயாவது வசனிக்குமிடத்து வழங்கிய வாசகங்களால் நாம் அதனை அனுமானித்துக்கொள்ளுகிறோமேயன்றி, மற்றப்படியல்ல. பரி பவுல் திமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் எழுதிய நிருபங்களில் இந்த வடைவான சில குறிப்புகளைக் காணலாம். புதிய ஏற்பாட்டில் திரமமான விதிமுறைமைகள் அமைக்கப்பட்டிராததால் கிறிஸ்தவர்கள் எச்சேசராதத்தாரும் தமது இஷ்டப்பிரகாரம் சபையாளுகை சட்டமுறைமைகளை விதித்துக்கொள்ளலாமென்று சிலர் சொல்லுவார்கள். ஆதிக்கிறிஸ்தவர்களுக்குள்ளே இப்படி நடந்ததாக வாசிக்கிறதில்லை. (1 கொரி. 11. 6.)

2. வினா. திருச்சபையில் பணிவிடைக்குரிய எத்தனை உத்தியோக நிலைமைகள் உண்டு?

விடை. இங்கிலாந்துசபையில் மூவித உத்தியோக நிலைமைகள் ஒப்புக்கொள்ளப்பட்டுவருகின்றன. மூவித உத்தியோகங்களே யூதச்சபையிலும் தேவநியமிப்பின்படி நடந்தேறிவந்திருக்கிறது.

3. வினா. நமது இரட்சகர் திருச்சபையில் திருப்பணிவிடை நியமித்தவிதத்திற்கு ஆதாரம் என்ன? அவருடைய நியமப்படி திருச்சபையில் எக்காலமும் நடந்துவந்ததென்று எப்படித் தெரியும்?

விடை. மோசேயின் ஏற்பாட்டில் பிரதான ஆசாரியர், ஆசாரியர், லேவியர் என்ற மூவித உத்தியோகஸ்தர் இருந்தார்கள். இவர்களுக்குத் தமது ஊழியத்துக்கடுத்த வெவ்வேறான தொழில்களும் இருந்தன. யூதமார்க்கம் பலவகையிலும் கிறிஸ்துமார்க்கத்துக்கு மாதிரிப்பிரமாணமாய் இருந்திருக்க, அப்பிரமாணப்படியே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் தமது சபையில் மூவித உத்தியோக நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார். இரட்சகர் இத்தராணியிற் சஞ்சரித்த காலமெல்லாம் தாமே மகா பிரதானஆசாரியராக கிரியை நடத்திவந்தார்; தமக்குக்கீழ் 12 அப்போஸ்தலரை நியமனம்புரிந்தார்; அவர்களுக்குக்கீழாக 70 சீஷரை திட்டஞ்செய்து அடையாளக்குறிப்

புக்குச் சரிப்பட்ட ஒற்றுமை விளக்கச்செய்தார். அவருந் பிரவேசஞ்செய்தபின் அப்போஸ்தலரும் எழுபது சீஷருமிந் ததுமன்றி, இவர்களுக்குக்கீழாக உதவிக் குருமார் மூனருமுய உத்தியோகஸ்தராக ஏற்படுத்தப்பட்டார்கள். இவ்விதமாய் வேதாகமத்திலும் பூர்வ ஆகமத்திலும் அப்போஸ்தலர்காரர், திருச்சபை சரித்திரத்திலும் திருச்சபையிலே கண்காணிகளுந் குருமார், உதவிக்குருமார் என்ற மூவித உத்தியோகஸ்தர் இ ததாக விளங்குகிறது.

4. வினா. இதை அப்போஸ்தலர் நிருபங்களைக்கொண்ட ஆதிச்சபையிலுள்ள ஆகமங்களைக்கொண்டும் ஸ்தாபி.

விடை. பரி. பவுல் கொரிந்தியருக்கு தேவன் சபையிலே, முதலாவது அப்போஸ்தலரும், இரண்டாவது தீர்க்கதரிசிகளும் மூன்றாவது போதகருமானவர்களைக் கட்டளையிட்டார் என்று எழுதியிருப்பதில் (1 கொரி. 12. 28.) மூவித உத்தியோகங்களை விசேஷித்துக் காட்டியிருக்கிறார். இதற்கு இசைவான 4 வாக்கியங்களும் இவருடைய நிருபங்களிலுண்டு (எபேசியா 11. 1 தீமோ. 3. 13: 4. 12ல் காண.). ரோமாபுரி கண்கா காட் யிருந்தவரும் பிலிப்பியர் 4. 3ல் பரி. பவலால் சுட்டிக்காட்ட டப்படுகிறவருமாகிய கிளேமென்ஸ் என்பவரும், பரி. பே வின் சிநேகிதனும் பரி. யோவானின் சீஷனும் முதலாம் நூற்றாண்டில் அந்தியோகியாவின் கண்காணியுமாயிருந்த இ வியும், போலிகார்ப்பின் சீஷனும் முந்தக குருவுமாய் பின்பு லியான்ஸ்பட்டணத்து கண்காணியுமாகிய ஐரினி இம்மூவித திருப்பணிவிடைகளைப்பற்றி பேசியிருக்கிறாக நிசேயாசங்கத்தின் 18-ம் கனோனிலும் இவற்றிற்கு ஆதா காணலாம். திருஷ்டாந்தங்கள் இன்னவும் பலவுண்டு; ஆகிலு சொல்லப்பட்டவைகளே போதும்.

5. வினா. திருச்சபையில் அப்போஸ்தலருடைய காலமுத மூவகைப் பட்டமுள்ள பணிவிடைக்காரர்கள் இருந்திரு ரர்கள் என்று மேற்சொல்லிய கிறிஸ்தவமான பூர்வபிதாகச பகரும் சாட்சி எத்தன்மையுள்ளது?

விடை. இவர்கள் அப்போஸ்தலர் காலத்திலுள்ளவர்களு அவர்கள் பட்டத்தில் வந்த பின்னடியாருந்தான். இவர்க கூவிசேஷத்திற்காக இரத்தச் சாட்சிகளான பரிசுத்தவான்க மூவகைப் பட்டத்தைப்பற்றி சொல்லப்பட்டது அங்கீ ரத்துக்கு அபாத்திரமான வீண் வர்ணிப்பாகவாவது கவனிக்கத் தகமையற்ற அற்ப விஷயமாகவாவது இருக்குமானால், இ

கள் மூவகைப்பட்டத்தின் மாட்சிமையையும் கண்காணியா ருடைய அதிகாரத்தையும் தாங்கள் அப்போஸ்தலருடைய பட்டத்தில் வந்திருப்பதையும் தீர்க்கமாய் எடுத்துரைக்கவும் உறுதியாக்கவுமாட்டார்களோ. இவர்கள் வாசம்பண்ணின காலத்தைப் பார்க்கும்போது, இவர்களுடைய சாட்சியே எல்லா வற்றிலும் சிறந்ததென்று காணப்படுகிறது.

6. வினா. மூவித திருப்பணிவிடைக்குமுரிய நாமதேயங் கள் இக்காலத்திலே வழங்குவதுபோல் பூர்வகாலத்திலும் வழங் கப்பட்டனவா? இல்லாவிட்டால் அவை பூர்வமாய் வழங்கப் பட்டனவென்று சொல்வதெப்படி?

விடை. புதிய ஏற்பாட்டாகமக்காரர் அந்நாமங்களை பணிவி டை வித்தியாசம் தெளிவாகத் தக்கதாகப் பிரயோகித்திருக்கிற நிலைமையென்பது மெய்யே. அந்தப் பதவிகள் யாதொரு மேன்மையான உத்தியோகங்கள் பெறப்படும்பொழுது, ஒன்றில் புது நாமங் கள் ஸ்தாபிக்கப்படவேண்டும்; அல்லவென்றால் பழைய நாமம் தரிப்பிக்கப்படவேண்டும். இவற்றில் பிந்தின வழக்கமே புதிய ஏற்பாட்டாகமக்காரரால் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ...ன் பட்டப்பெயராகிய இம்பரேற்றர (Impirator) என்பது ...கு ஒரு திருஷ்டாந்தமாம். கண்காணி என்ற கருத்துக் ...ளும் எபிஸ்கொப்பஸ் (Episcopos) என்றமொழி மேல ...ரணக்காரருக்கும், ஊழியக்காரன் என்ற அர்த்தங்கொள் ளும் டையக்கனுஸ் (Diaconas) என்ற மொழி சபைக்கடுத்த காரியங்களில் அலுவலாயிருக்கிறவர்களுக்கும் நாமங்களாக இறுதியில் வழங்கப்பட்டன. இவைகளில் முந்தினது நமது இரட்சகருக்கு நாமமாக இடப்பட்டிருக்கிறது (1 பேது. 2. 25.). ...ற்றது ஆரண்ணிய அப்போஸ்தலனைக்குறித்து வழங்கப்பட்டிருக் கிறது (அப். 1. 20. 1 கொரி 3. 6 எபே. 3. 7.). இவர்கள் ...ங்களுடைய வயதையும் குணத்தையும்பற்றிச் சில சமயங்க ளில் மூப்பர் அல்லது பிரெஸ்பியுற்றராஸ் (Presbuteros) என்று ...ழைக்கப்பட்டிருப்பதுமுண்டு (அப். 9. 17–28). அப்போஸ் தலமார் தாங்கள் சீக்கிரத்துக்குள்ளாக இரத்தச்சாட்சிகளாய் ...ரிப்பதை முன்னறவேயறிந்து, தாங்கள் ஸ்தாபித்த சபைகளை விசாரிக்கும்படி தங்களுக்குப் பதிலாகவும், தங்களுக்குப் பின் னடியாராகவும் பலரை ஏற்படுத்தினார்கள். அப்படியே தீமோத் தேயு எபேசு சபையையும், தீத்து கிரேத்தா சபையையும் விசாரிக்க நியமனம்பெற்றிருந்தார்கள். அப்போது அப்போஸ் தலரென்ற நாமமானது கிறிஸ்துவானவராலே நேராய் அனுப்

பப்பட்டவர்களுக்கு உரித்தானதாய் மரியாதைக்கடையா- ரம
வழங்கப்படலாயிற்று. அவர்களுக்குப் பதிலாக அவர்க ருங்
டத்தில் வந்து, திருச்சபையையும் அதற்குரிய போதகர் ரித
கிய மெய்ப்பரையும் விசாரித்துவந்த தலைமை உத்தியோ ய
ருக்கு எபிஸ்கோப்பிஸ் அதாவது, கண்காணியார் என்ற ர்த்
வழங்கப்பட்டது. அவர்களுக்குக்கீழ் இரண்டாவதான ரர்,
தஸ்தர் பிரெஸ்பியுற்றராஸ் எனப்பட்டவர்கள். இரதவ ருங்
தஸ்துள்ளவர்களுக்கு முதலாம் நூற்றாண்டிற்குப் பிறகு
கோப்பாஸ் என்ற பட்டப்பெயர் தரிக்கப்பட்டதேயல்லாமல் டும்

7. வினா. அப்போஸ்தலருடைய பட்டத்துக்கு உ
கள் உத்தியோகத்திலும் அதிகாரத்திலும் பிரஸ்பியுற்ற லே
முற்றிலும் மேலானவாகள என்று காட்டு. ரந்ய,

விடை. அப்போஸ்தலரான அவர்களுக்குப் பதிலாய் லாறு
மனமான கண்காணிமார் பிரெஸ்பியுற்றருக்கு வேறா க
ளும், அவர்களபேரில் அப்போஸ்தலாகக்கொத்த அதி வறெ
செலுத்திவந்தவர்களுமாயிருந்தார்களென்பதற்கு பலத்த 4.
டாந்தங்களுண்டு. அபபோஸ்தலமார் குறைவாய் வைத ணியா
களை நிறைவாக்கும்படி இவர்கள் நியமிக்கபபட்டார்கள் காட்
1. 5.). வேண்டியவேளைகளில் மூபபரை நியமிக்கவும், துரு
ளுக்கு விரோதமாயெழும்பும குற்றங்களை விசாரிக்கவும,
களுடைய உபதேசங்களை சோதனைசெய்யவும், குற்ற
தவர்களை எல்லா அதிகாரத்தோடும் வெளியரங்கமாய் கடி ரங
துக்கொள்ளவும், கள்ளப் போதகமாருடைய வாயை அ க
கவும், வேதப்புரட்டரைச் சபைக்குப் புறம்பாக்கவும் ரா
களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது (1 தீமோ. 1.
19, 20. தீத்து. 1. 11, 13; 2. 15; 3 10). இவ்வித அ து
முள்ளவர்கள் ஆசியாவிலுள்ள எழு சபைகளுக்கும் நியமி
பட்டிருந்தார்கள். (வெளி. 2,3 அதிகாரங்கள்) யக

8. வினா. திருச்சபையதிகாரிகளுக்கும் சபைகளு ந
வெவ்வேறாய் கொடுக்கப்பட்டிருக்கிற பொதுபெய கக
எவை?

விடை. திருச்சபையதிகாரிகளுக்கு கிளர்ஜி (Clergy) என
பது பொதுப்பெயராம். கிரேக்கப்பாஷையில் க்ளிராஸ் (K ர்க
என்னப்படும்; இதற்குப் பங்கு சுதந்தரம் என்று அர்த்தமு க
இவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற அ கிட
தெரிந்துகொள்ளப்பட்ட பங்காயிருப்பதினாலாவது, கர் ரிச்ச
மே அவர்கள் பங்கு வீதமாயிருப்பதினாலாவது இப்பெ

மக்கப்பட்டிருக்கலாம். சபையாருக்கு லேய்ற்றி (Laity)
று பெயர் அதற்கு ஜனங்களென்று அர்த்தமுண்டு:
ரணில்; அவர்கள காததரால் தெரிந்துகொள்ளபபட்ட ஜன
பட்டராம்.

வினா. பிரெஸ்பிறறிரிய ஆளுகையுண்டாவதற்கு ஆதா
திருந்ததென்ன?

விடை. மேலே சொல்லிய முறைமையைப்பற்றி 1500 ஆண்
டுவாய் ஆட்சேபனையாவது தர்க்கவாதமாவது உண்டாக
லை திருச்சபையின் சீர்திருத்தலின் காலத்திலோ சீர்திருத
கபபன சில சபைகள் கண்காணியார் அரசாட்சியை தள்ளிவி
பட்ட குரு அரசாட்சியை அமைத்துக்கொண்டார்கள். அச்ச
யைச்சேர்ந்த நாடுகளிலுள்ள கணகாணியாரில் ஒருவரும்
டைபுமார்க்கத்தை வெறுக்காமலிருந்ததால நேரிட்ட காரிய
ற்பமே இதற்குக் காரணம்; என்றாலும், இந்த வகுபபைச்
உத்தவர்களான கால்வின, பீசர், பியூசெ என்பவர்களே
கண்காணியாட்சியை வியந்துபேசியிருக்கிறார்கள். கண்காணி
சியானது தகுந்த சிபொருந்தியதாயிருக்குமிடத்து அதனை
செய்யாத எவரும் சாபத்துக்கு ஏனமானவாகள் என்று
றும், இங்கிலாந்தில இவ்வாளுகை தேவாசீர்வாதத்தினு
கல்லநுக்கிரகத்தினாலும் அமைதிபெறலாயிற்றென்று பீச
குருமாருக்குள் ஒருவர் பல சபைகளமேல் கணகாணிப்
பெற்றிருப்பது உத்தமமென்று பரிசுத்த ஆவியானவருக்
காணபபட்டபடியால் அவ்வாறே அமைதிபெறலாயிற்றெ
பியூசெரும் சொல்லியிருக்கிறார்கள்.

வினா. கண்காணியாட்சியைத் தள்ளின ஜனங்கள் அவ
ித்தியும் அவ்வாறு செய்ததாக நியாயமுறைத்திருக்க,
றும் அதனை ஒபபுக்கொள்ள காரணமென்ன?

விடை. கண்காணியாட்சியைத் தள்ளின சபைகளெங்கும்
ருத்தல் நடத்துவதில் போர்ந்த ஒற்றுமை உண்டாயிருக்க
ல. ரோமான்சபைக்கு விரோதமாய் ஜனங்கள் மனதி
ட்டாயிருந்த விரோதம் கொடூரமானதாயிருந்ததால் அவர்கள்
மிஞ்சி மூர்க்கதாபங்கொண்டு, பாப்புமார்க்கத் தவறுகளை
ரமல்ல மெய்யுபதேசங்களிலும் பலவற்றைத் தள்ளிப்
டார்கள். இந்தடைவாய்ச் சபைகளில் சீர்திருத்தலால்
ஒழுங்கே பிறக்கலாயிற்று என்கவேண்டும். காரியம் இப்
டிருப்பதால் சபைகளுக்குள் ஒருமைப்பாடு தோற்
ப்படுவது கூடாமையாயிற்று.

11. வினா. மேற்சொல்லிய சபைகளுக்கு எதிரிடையாக இங்கிலாந்து சபையிலுண்டாயிருக்கிற வழமையென்ன?

விடை. இங்கிலாந்தில் ஜனங்களும் போதகமாரும் பின்ன பேதமற பாப்புமார்க்கத்தை அரோசித்தார்கள்; ராஜாவும் கண் காணிமாரும் தலைமையாய் நின்று காரியத்தை நடத்தினார்கள்; ஜனங்கள் மட்டுமின்றி சொல்வதற்கு இராமல் ராஜ அனுமதி யாலும், கல்விமான்களும் பக்தி யுக்திசாலிகளுமான பெரியோரா மூலமாயும் சபை சீர்திருத்தல அடைந்தது. இவர்கள் மெய் யையும்பொய்யையும் பழுதறபபார்தது பொய்யைத்தள்ளி மெய் யைப் பாதுகாத்து, தஙகள் ரத்தத்தினால் அதை உறுதிபபடுத்தி மெய்ப்பித்தார்கள். இந்தவைவாயுணடான பலன் என்னவென் றால், மற்ற ஜனங்கள் புதுச்சபையை ஸதாபித்து நூதனமான திருப்பணிவிடை ஒழுங்கை அமைததிருக்க, இவர்களோ, கிறி ஸ்துவானவருடைய சபையில் உணடாயின தப்பறைகளை தவிர் த்து, அவரால்தானே அமைக்கபபட்டபிரகாரம திருபபணி விடை முறைமையை ஒப்புக்கொண்டு நடததிவந்தார்கள்.

12. வினா. திருப்பணிவிடைக்காரருக்குள் ஒருவருக்கொரு வர் கீழ்பபட்டு அமைந்திருககும் பல வகுபபு இருபபது அவ சியமென்று காட்டு.

விடை. புத்திக்கு இது ஒருமைப்பட்டது. அநுபவத்தால் அத்தாட்சிபெற்றதாயிருப்பதுமன்றி, டிசென்றார்கள்முழுவா இவ்விதம் நடப்பிப்பதே இதற்கு நியாயமென்று சொல்லலா மேலும் வேதாகமத்தில் கோராகையும அவன் கூட்டத்தாரை யும்பற்றிச் சொல்லியிருக்கிற விஷயமும் இதை மெய்ப்பிக்கும். இவர்கள் லௌகீக அதிகாரத்துக்காக அல்ல, வைதிக அதிகாரத் துக்காகவே வாதாடினார்கள். ஆசாரியருக்கும் லேவியருக்கும் அந்தஸ்திலுண்டான மேன்மை கீழ்மையை தவிர்த்து, சமம் படைக்கவேண்டுமென்பதே அவர்கள் கருத்து இதற்காக அவர்கள்மேல் வந்த தேவகோபாக்கினையை அறிவோமே. இவ் வித பாவத்துக்கு புதிய ஏற்பாட்டுக் காலத்தாரும் இனமாகவர் கள் என்றும், அப்பாவத்துக்குடன்படுகிறவர்கள் அத்தண்ட னையை அடைவார்களென்றும் யூதாவின் நிருபம் 11-ம் வச னத்தால் அறிந்துகொள்ளககூடும். ஆதலால் திருச்சபையில் திருப்பணிவிடைசெய்கிற அந்நந்த உத்தியோகஸ்தர் ஒருவ ருக்கொருவர் அமைந்திருப்பது அவசியமென்பது பிரத்தியட்ச மான காரியம்.

13. வினா. தேவபணிவிடைக்காரர் கர்த்தரால் அனுப்பப் பட்டவர்களென்று எப்படித் தெரியவரும்?

விடை.—அவர்கள் ஊழியத்தின் இயல்பே அதைத் தெரிவிக்கும். மேலும் பரி. பவுல் கிறிஸ்துவின் ஊழியக்காரனென்றும், தேவனுடைய சபைகளின் உக்கிராணக்காரனென்றும் (1 கொரி. 4.1.), கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதியென்றும் (2 கொரி. 5. 20.) அழைத்திருப்பதினாலும் இது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதே.

14. வினா. திறமைக்கும் அதிகாரத்துக்கும் வித்தியாசமென்ன? திருப்பணிவிடையை நிறைவேற்றுவதற்கு நியாயமும் திறமையும் அகத்தியம் தேவை என்று காட்டு. தகாதவிதமாய் இவ்வதிகாரத்தை அபகரித்துக்கொள்ளுதலாலுண்டாகும் மோசத்தைக் காட்டு.

விடை. கல்விமுயற்சி திறமைக்கு ஆதாரமாம்; அதிகாரமோ அனுப்புடைய மேலோரால் கொடுக்கப்படவேண்டும். ஆதலால் பரி. பவுல் அனுப்பப்படாமல் எப்படி பிரசங்கிப்பார்கள் என்று கேட்டிருக்கிறார் (ரோம. 10. 15.). மேலும் அவர் வேறோரிடத்தில் ஆரோனைப்போல் அழைக்கப்பட்டவனேயொழிய வேறொருவனும் இந்த கனத்தை தனக்கு வருவித்துக்கொள்ளுகிறதில்லையென்றும், இப்படி கிறிஸ்துவும் பிரதான ஆசாரியனாகிறதற்கு தமமைத்தாமே மகிமைப்படுத்தினதுமில்லை (எபி. 5. 4, 5) யென்றும் சொல்லியிருக்கிறார். நமது இரட்சகரும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறானென்றும் உரைத்திருக்கிறார் (பரி. யோவா. 10. 1.). கோரா, அவன் கூட்டத்தார், சவுல், உசியா என்ற இவர்கள் இவ்வூழியத்தைத் தகாதவிதமாய் அபகரித்துக்கொண்டதினால் நேரிட்ட மோசம் தெரியுமே. கர்த்தர் எப்பொழுதும் வெளியரங்கமாய் துரோகிகளுக்குப் பதில்செய்யாவிட்டாலும், அவர் ஒரு விசைவிதித்த தண்டனைக்கு அவாகளை தப்பவிடார் என்பதற்கு இவர்கள் திருஷ்டாந்தங்களாயிருக்கிறார்கள்.

15. வினா. விசேஷ வரங்களையுடைய ஒருவர் சபையில் திருப்பணிவிடையை நிறைவேற்றப் பாத்ரயப்பட்டிருக்கிறதில்லையோ?

விடை. ஒருவன் எந்தவித சிறந்த வரங்களால் முக்கியப்படுத்தப்பட்டிருந்தாலும் வெளியரங்கமாய் அதிகாரத்துடன் அனுப்பப்படாவிட்டால் இவ்வூழியத்துக்கு பாத்தியக்காரனாக எண்ணப்படான். சாதுரியமாய் மொழிந்தாலும், வாய்ச்

சாலகமாய் ஜெபித்தாலும், மகாஅலங்காரமாய் பிரசங்கித்தாலும் இவ்வூழியத்துக்குத் தேவையான இலட்சணங்கள் இதுயாத[illegible]மல்ல; இவற்றால் ஒருவன் திருச்சபையில் அதிகாரம்பாராட்ட அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறதில்லை.

16. வினா. இவ்வூழியம் நன்றாய் நிறைவேற்றப்பட்டுவரும் பொருட்டு, அழைக்கப்படுதல்மாத்திரமல்ல, வெளியரங்கமாய் அனுப்பப்படுதலும் அத்தியந்த தேவை என்று காட்டு.

விடை. ஆரோன் தேவனால் அழைக்கப்பட்டதுமல்லாமல் வெளியரங்கமாய் மோசேயால் நியமிக்கப்பட்டான் (லேவி. 8. 1.). கிறிஸ்துவானவர் யோவானஸ்நானனுடைய ஞானஸ்நானத்தின்மூலமாய் வெளியரங்கமாய் நியமிக்கப்படுமுன்னர் தமது ஊழியத்தைத் துடங்க முயன்றதில்லை (பரி. மத். [illegible]. 16, 17.). அப்போஸ்தலர் பன்னிருபேரும், சீஷர் 70 பேரும் கிறிஸ்துவானவரால் அவ்வதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். பரிசுத்தஆவியினாலும் ஞானத்தினாலும் நிறைந்திருந்த உதவிக்காரர் அப்போஸ்தலரால் ஜெபத்தினாலும் கைகளை வைத்தலினாலும் ஏற்படுத்தப்படுமுன்னதாக, திருச்சபையில் தாழ்வான உத்தியோகத்துக்குமுதலாய் பாத்தியமுடையவர்களாக எண்ணப்பட்டதில்லை. (அப். 6. 3–6.)

17. வினா. இவ்வூழியத்துக்கு பரிசுத்தஆவியால் ஒவ்வ[illegible]டதாக சொல்லும பெயரை அழைத்தெடுக்கும் அதிகாரம் [illegible]லாந்துசபைக்குண்டென்று சாதிக்கப்படுகிறதில்லையோ?

விடை. சாதிக்கப்படுகிறதுண்டு. அப்படியே பட்டம்பெற்றவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சித்தப்படியே மெய்யாய் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று தங்கள் மனநிதானிப்பை அறிக்கையிடுவதுமுண்டு. என்றாலும் இவ்வழைப்பைக் கிறிஸ்தவர்களில் சிலர் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. பரிசுத்த ஆவியானவர் ஆரம்பத்தில் அதிசயவிதமாய் உண்டாக்குகிற ஏவுதலே அவ்வழைப்பென்றும், அப்போஸ்தலமார் அழைக்கப்பட்டதுபோல அவர்களுக்குப் பின்னடியாராய் அவர்கள் பட்டத்துக்காக அதிகாரம் பெற்றிருக்கிறவர்களு[illegible]குப்படி அழைக்கப்படுவதே சுட்டிப் பேசப்பட்டி[illegible]தென்றும் அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் தேவனு[illegible] மகிமையை விளங்கச்செய்யவும், அவருடைய ஜன[illegible] போஷிக்கவும் அவருக்கு ஊழியஞ்செய்யவும் திரு[illegible] விடைக்குட்பட உண்மையாய் விரும்புவோர், தாங்கள்[illegible]

பணிவிடையை ஏற்கும்படி பரிசுத்த ஆவியினால் உள்ளாக ஏவப்பட்டவர்கள் என்று நிச்சயித்துக்கொள்ளலாம்.

18. வினா. அப்படியானால் திருப்பணிவிடைக்காரராக நியமிக்கும் அதிகாரம் முற்றிலும் யாருக்குரியது. அவர்களுக்கு அவ்வதிகாரம் யாரால் அருளப்பட்டது?

விடை. கிறிஸ்துவானவர் இவ்வுலகத்தைவிட்டுப் பரத்துக்குச் செல்லுங்காலம் சமீபித்தபோது அவர் தமது அதிகாரத்தைத் தமது அப்போஸ்தலருக்குக் கொடுத்து, என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார் (பரி. யோவா 20. 21. பரி. மத 18. 19, 20. பரி. லூக். 22 9.) அப்போஸ்தலர்களுங்கூட அப்படிப் பெற்ற அதிகாரத்தை மற்றவர்களுக்கு கையளித்து, மற்றவர்களை போதிக்கத்தக்க திறமையுள்ள மனுஷருக்கு உபதேசத்தை ஒப்புவிக்கக் கற்பித்தார்கள் (2 தீமோ. 2. 2.). இப்படியாய் அவ்வதிகாரம் தொடர்ந்தேற்றியாய் கையளிக்கப்பட்டு வந்தது. திருப்பணிவிடையாட்களை நியமிக்கும் அதிகாரம் கண்காணிமாருக்கு அல்லது திருச்சபையில் உயர்ந்த உத்தியோகஸ்தருக்குரியதென்பது, கிறிஸ்தவமான சபைகள் யாவும் 1500 வருஷகாலமாய கண்காணிமார் அரசாட்சிக்குள்ளிருந்தமையால் உண்மைபெறும். ஒவ்வொரு சபையிலும் முன்னாள் தலைமை அதிகாரி இன்னார் என்று காலக்கிரமப்படி ஆளாய சோதித்துக்கொண்டே போனோமானால், அவர்கள் எல்லாருக்கும் முந்தினவர் ஒரு அப்போஸ்தலர் என்று அல்லது அப்போஸ்தலரால் நியமிக்கப்பட்ட கண்காணியார் என்று தெரியவரும்.

19. வினா. ஆய்ந்தோய்ந்து பாராமல் பட்டங்கட்டாதபடி பரி. பவுல் தீமோத்தேயுவுக்கு கூறியிருக்கிற எச்சரிப்பென்ன? இதற்கிசைவாக இங்கிலாந்து சபை கற்பித்திருக்கிறதென்ன?

விடை. கைகளை ஒருத்தன்மேலும் சீக்கிரத்தில் வைக்காதே என்று பரி. பவுல் தீமோத்தேயுவுக்கு கற்பித்திருக்கிறார் (1 தீமோ. 5. 22.). இதற்கிசைவாய் இங்கிலாந்துசபையிலும் சோதனையும் பரீக்ஷையுங்கொடுத்து தாங்கள் உத்தியோகத்துக்கேற்ற குணசாலங்களுடையவர்களாக அறியப்படுகிறவர்களையே, அவ்வூழியத்துக்கு நியமிக்கத்தகுமென்று கற்பிக்கப்பட்டிருக்கிறது.

20. வினா திருப்பணிவிடைக்குச் சேருகிறவர்களிடத்தில் இருக்கவேண்டிய குணசாலங்கள் எவை?

விடை. திருப்பணிவிடைக்குச் சேருகிறவர்களில் உதவிக் குருமார் 23 வயதுக்கும், குருமார் 24 வயதுக்கும், கண்காணி

மார் 30 வயதுக்கும் கீழ்ப்பட்டவர்களாயிருக்கக்கூடாது. அவர்கள் குற்றமற்ற நடக்கையுள்ளவர்களோ என்பது காட்சியினாலாவது சாட்சியினாலாவது, கண்காணியாருக்குத் தெரியப்பட்டிருக்கவேண்டும். லத்தீன் பாஷையைக் கற்றவர்களும் வேதத்தில் தகுந்த அறிவுடையவர்களுமோ என்று பரீட்சிக்கப்படவேண்டும். இங்கிலாந்துசபையின் உபதேசத்துக்கும் முறைமைக்கும் வேறுபாடானவைகளை ஒப்புக்கொண்டவர்களாகவாவது, எழுதினவர்களாகவாவது இருக்கக்கூடாது. அப்பேர்ப்பட்டவர்கள் திருப்பணிவிடையில் சேர்க்கப்படும்போது ராஜாங்கத்துக்கும் திருச்சபையேற்பாட்டுக்கும் கீழ்ப்படிய பிரமாணம்பண்ணுகிறார்கள். 36-ம் கனோனில் சக்கிரவர்த்தியின் பிரதான அதிகாரத்தையும், ஜெபபுஸ்தகத்தையும், 39 பிரமாணங்களையும்பற்றிய மூன்று பிரமாணங்களையும் ஒப்புக்கொள்ளுகிறதாக வாக்குக்கொடுக்கிறார்கள்.

21. வினு. பட்டங்கொடுக்கும் முறைமை எப்போயப்பட்டது?

விடை. பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒழுங்குகளுக்கு இது ஒத்திருக்கிறது. பல சபைகளிலுமுள்ள பட்டாபிஷேகமுறைமைகளில் இதைப்போல வேதாகமத்திலும் பூர்வ திருச்சபை வழக்கத்துக்கும் ஒற்றுமைப்பட்டதொன்றுமில்லை. இது ஜெனிவாச்சபை முறைமையைப்போல் [illegible] யற்றதல்ல; ரோமான்சபை முறைமையைப்போல் அதிக சடங்குகள் உள்ளதல்ல; மிதமாகவே இருக்கிறது. இதுவுமன்றி போதனை தரத்தக்கதும், பத்தியை அனல்மூட்டத்தக்கதும், [illegible]துக்கு உகந்ததுமாயிருப்பதால் திருப்பணிவிடையிலுட்பட போகிறவர்கள் ஏற்கனவே அதை கருத்தாய் வாசித்து [illegible]களை ஆயத்தப்படுத்திக்கொள்வதும், உட்பட்டபின்பும் வருஷத்தில் ஒருவிசையாவது அதை வாசித்துக்கொள்வதும் அவசியம்.

22. வினு. பழைய பட்டாபிஷேக முறைக்கும் புதிய பட்டாபிஷேக முறைக்கும் வித்தியாசமென்ன?

விடை. இப்போதிருக்கிற பட்டாபிஷேக முறைகளுக்கு 6-ம் எட்வர்ட் அரசனின் 3-ம் வருஷமாகிய 1550ல் பிரசித்தஞ்செய்யப்பட்ட முறைமைகள் சற்று வித்தியாசமானது. திருச்சபை சீர்திருத்தலை நடப்பித்தவர்கள் [illegible]றிலிருந்து வீணும் அவபக்தியுமான சடங்காசாரங்களை [illegible]கிச் செய்திருக்கிறார்கள். குருப்பட்ட முறைமையினின்று [illegible]லத்காஸ் அபிஷேகிக்கலையும், நற்கருணை பாத்திரங்களைக் [illegible] பிற

கொடுக்குதலையும் நீக்கிப்போட்டார்கள்; கண்காணிப்பட்டம் கொடுக்கும்பொழுது பாகை, சிலுவைமோதிரம் முதலானவை கொடுக்கப்படும் வழக்கம் நின்றுபோயின. ஜெபங்களைச் செய்தலும் கைகளை மேலே வைத்தலுமே அப்போஸ்தல அனுமதியுள்ளவைகளாக மூலவசனத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன: கண்காணிப்பட்டம் கொடுக்கும்பொழுது மூன்று கண்காணிமாராவது ஆஜராயிருக்கவேண்டும், குருப்பட்டமும் உதவிக்குருப்பட்டமும் கொடுக்கப்படும்போது கண்காணியார் ஒருவரும் அவருக்குதவியாய் பல குருமாராளுமிருக்கலாம். இம்மூன்று முறைமைகளில் கண்காணிப்பட்டம் கொடுக்கும் முறைமையே முக்கியமானது. ஒவ்வொரு முறைமையிலும் பூர்வ வழக்கப்படி அந்தந்த உத்தியோகத்துக்குரிய கடமைகள் சுருக்கமாயும் தெளிவாயும் உரைக்கப்பட்டிருக்கின்றன.

23. வினா. உதவிக்குரு என்று வழங்குகிற பெயருக்குரிய மூலபாஷை அர்த்தத்தையும், அது பிரயோகிக்கப்பட்டிருக்கிற வழக்கத்தையும் காட்டு. உதவிக்குருமாருடைய தொழில்களென்ன?

விடை. உதவிக்குரு என்ற அர்த்தமாய் வழங்குகிற டீக்கன் என்ற கிரேக்கமொழியானது, அத்திருப்பணிவிடையைச் செய்பவர்களுக்கே உரிமைப்பட்டதாயிராமல், ஊழியக்காரன் என்றர்த்தமாய் பொதுப்படப் பிரயோகிக்கப்பட்டிருப்பதுண்டு (ரோம. 15. 8. அப. 20. 24. ரோம. 11. 13. 2 தீமோ. 4. 5. காண்க). என்றாலும், அப்போஸ்தலருக்குதவியாக ஏற்படுத்தப்பட்ட உதவிக்காரரைக் குறிக்கும் நாமமாக அது விசேஷித்து வழங்கப்படலாயிற்று (அப. 6 அதி.). இவர்கள் தாம் காணிக்கைகளைச் சேகரிக்கவும் பாடங்களைச் சொல்லிக்கொடுக்கவுமென்று ஏற்படுத்தப்பட்டாலும், இவர்களில் ஒருவனாகிய ஸ்தேவான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாகவும், மற்றொருவனாகிய பிலிப்பு பிரசங்கித்ததுமன்றி, ஞானஸ்நானங் கொடுத்ததாகவும் வாசிக்கிறோம். பூர்வ ஆசாரங்களில் விளங்குகிறபடி இவர்கள் கண்காணியாருக்கு கையுதவியாக நின்றதுமன்றி, இவர் அப்பத்தையும் இரசத்தையும் பிரதிஷ்டைசெய்தபின் அவைகளைச் சபையாருக்குப் பரிமாறுவதுமுண்டு; அவர்கள் குருவானவர்களோடுகூட அல்லது கண்காணியாரோடுகூட ஜெபஆராதனை நடத்துவதுமுண்டு; அப்புறம் அங்கங்கே பல ஆலயங்கள் கட்டப்படலானதனபேரில் அவர்கள் தனிமையில் ஜெபஆராதனை செய்யவுத்தரவின்பேரில் ஓமிலி பிரசங்கம் வாசிக்கவும் இடம்

பெற்றார்கள். ஆனாலும் இவர்களுக்கு சுயாதீன அதிகாரமில்லை. சபையாருக்குப பாடஞ் சொல்லிக்கொடுப்பதும், குருவானவரில்லாத சமயங்களில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங்கொடுப்பதும், வியாதிஸ்தர் எளியவர்கள் பெலவீனர் முதலியவர்களுக்கு ஆறுதலும் சகாயமும் பாராட்டுவதும் இவர்கள் கடமைகளாம்.

24. வினா. பட்டம் கொடுக்குமுன் பண்ணப்படும் பிரசங்கத்தின் நோக்கமென்ன?

விடை. திருப்பணிவிடையாட்கள் கிறிஸ்து சபைக்கு மிகவும் அவசியமென்று யாவருக்குமுணர்த்தவும், அப்பணிவிடையில் சேரவருகிறவர்களுக்கு அவர்கள் உத்தியோகக கடமைகள் இவையென்று காட்டவும், அவர்களுக்குச் சங்கைசெய்யவேண்டியவிதத்தை ஜனங்களுக்குப புகட்டவுந்தக்கதாக பிரசங்கம் செய்யப்படும்.

25. வினா. பட்டம் பெறப்போகிறவர்களை கண்காணியார முன்புக்கு நிறுத்துகிறதார்?

விடை. ஆர்ச்டீக்கனாவது கண்காணியாரால் நியமிக்கப்பட்ட வேறொரு குருவாவது என்று ரூபிரிக்கில் கண்டிருக்கிறது. பெரிய சபைகளில் பல உதவிக்குருக்களிருப்பார்கள். அவர்களில் முதன்மையாளியாயிருப்பவருக்கு ஆர்ச்டீக்கன் என்று பெயர். அவர் மற்றவர்களுக்கு மூப்பானவராக நடகொள்வார். பிற்காலத்தில் வயதின்படிமாத்திரமல்ல, குணலப்படியும் இவர்கள் தெரிந்துகொள்ளப்படலாயிற்று. இவர்களுடைய பல கடமைகளில் ஒன்று என்னவென்றால், உதவிக்குருப்பட்டம் பெறவருகிறவர்களைப் பரிசோதித்து, அவர்கள் இவ்வுத்தியோகத்துக்கு தகுதிமான்கள்தானோவென்று விசாரித்து சாட்சியிடுவதுதான். கண்காணிமாருக்கு இவர்கள் பல விஷயத்திலும் கையுதவியாட்களாயிருந்ததால், இவர்கள் கண்காணிமார்களின் கண்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆர்ச்டீக்கன் என்பது இவர்களுக்கு நாமமாயிருந்தாலும், குருமார் இப்படி அழைக்கப்படுவதுண்டு.

26. வினா. திருப்பணிவிடையாட்களுக்குப் பட்டங்கொடுப்பது ஜனங்களால் நடக்குமோ?

விடை. ஜனங்கள் போதகன்மாரைத் தெரிந்து பட்டங்கொடுப்பது பூர்வ வழக்கமல்ல. பூர்வவழக்கப்படி நடக்கும் எந்தச் சபையிலாவது இவ்வழக்கம் நடந்தேறிவருகிறதுமில்லை. ஆனாலும், பட்டம்பெற வருகிறவர்கள் தகுதிமான்கள்தான் [illegible]

தற்கு இவர்களுடைய சாட்சியுண்டாயிருப்பது மிகவும் அவசியம்; இதற்கென்றே பட்ட விளம்பரம் கூறப்படும். எவனாவது நியாயமான தடங்கலுண்டென்று அறிந்திருந்தும், மனதறிய மறைப்பானானால் அது அவன்பேரில் குற்றமாய் சுமரும். நியாயமான தடங்கலுண்டாக்கப்பட்டால் குற்றஞ்சாட்டப்பட்டவர் அக்குற்றத்துக்கு நீங்கினவரென்று தெளிவாகுமளவாயும் கண்காணியார் அவருக்குப் பட்டங்கொடாமல் நிறுத்துவார். இப்படி நிறுத்துவதும் நன்மையான காரியந்தான் என்பதற்குச் சந்தேகமில்லை.

27. வினா. பட்டம்பெறத் தகுந்தவர்களென்று காணப்படுகிறவர்களுக்காகச் செய்யப்படுகிறதென்ன?

விடை. அவர்களுக்காகச் சபையார் ஜெபம்பண்ணவேண்டுமென்று கண்காணியார் கேட்டுக்கொள்வார். இப்படிச் செய்வது மிகவும் உத்தமமான காரியம். பட்டம்பெற வருகிறவர்களுக்கு இனமுறையாரும் சிநேகிதரும் எவ்வகையிலாவது சம்மந்தப்பட்டவர்களுமாயிருப்பவர்கள் அவர்களுக்காகப் பிரார்த்தித்துக்கொள்ளத்தக்கதாகவும், பொதுவாய் திருச்சபையின் நன்மைக்கு உபயோகமான இக்காரியத்தில் சபையாரெல்லாரும் அவர்களுக்காக ஜெபித்துக்கொள்ளத்தக்கதாகவும் இவ்வாறு செய்வது நலமே. மேலும் லித்தானியா ஜெபத்தில் இவர்களுக்காக ஓர் விசேஷித்த மன்றாட்டு செய்யப்படுவதுமுண்டு.

28. வினா. பட்டமும் குருப்பட்டமும் பெறுகிறவர்களுக்காகச் சொல்லிய சுருக்கஜெபத்தில் கண்டிருக்கிறதென்ன? அப்படிச் செய்வது அவசியமா?

விடை. திருச்சபையில் வெவ்வேறான பணிவிடைக்காரருண்டாயிருப்பதும், அவர்களில் உதவிக்குருமாருண்டாயிருப்பதும் திவ்விய ஏற்பாடுதான் என்று அறிக்கையிட்டு, தேவன் தமது நாமத்துக்கு மகிமையாகவும் திருச்சபை ஊன்றக்கட்டுதலுக்கு உபயோகமாகவும், அவர்கள் மெய்ப்பத்தியிலும் பரிசுத்த நடக்கையிலும் அலங்கரித்தருளும்படி இச்சுருக்க ஜெபத்தில் பிரார்த்திக்கிறோம். ஒருவன் அறிவின்றி பக்திமானாய் மாத்திரமிருந்தால் அவன் தனக்குமாத்திரம் பிரயோஜனம் தருவதேயன்றி, சபையை ஊன்றக்கட்டமாட்டான். ஒருவன் அறிவுள்ளவனாயிருந்தாலும் பக்திசாலியாயிராவிட்டால் அவன் தன் தீய நடத்தையால் தன் உபதேசத்தை பலிதமற்றதாக்கிக் கொள்வதாயிருக்கும். திருப்பணிவிடை செய்கிறவர்களிடத்தில் இவ்விரண்டு முறைமையிருப்பது மிகவும் அவசியம்; ஆத

லால் இவைகளுககாக சுருக்க ஜெபத்தில் பிரார்த்தித்திருப்பது உத்தமமே.

29. வினா. இச்சமயத்தில் வாசிக்கப்படும் நிருப சுவிசேஷ வாக்கியத்தின் பொருளென்ன?

விடை. உதவிக்குருமாரிடத்தில் விளங்கவேண்டிய உட்கருத்து, உத்தமம், தன்னடக்கம், மனத்தாழ்மை என்பவைகளும், அவர்களுடைய மனைவிகளிடத்தில் காணப்படவேண்டிய அன்பு, உத்தமம் முதலியவைகளும் நிருபவாக்கியத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. வழக்கமாய் உதவிக்குருமாரால் வாசிக்கப்படுவதாகிய சுவிசேஷவாக்கியம் உலகத்தாரை இருளிலிருந்து வெளிச்சத்தண்டைக்கும், சாத்தானின் வல்லமையிலிருந்து தேவனண்டைக்குந் திருப்ப உண்டபடுகிற மனிதனிடத்தில் உண்டாயிருக்கவேண்டிய மனஷ்டிபடி, பக்திவைராக்கியம் முதலியவைகளைப் புகட்டுகிறது

30. வினா. சுவிசேஷவசனம் வாசிக்கப்படுடுன் நடக்கிறதென்ன?

விடை. கண்காணியார் தமது ஆசனத்தில் உட்கார்ந்து சக்கிரவர்த்தியினுடைய முக்கிய அதிகாரத்தைக்குறித்தும அன்னிய அரசர்களுடைய வல்லமைக்கும அதிகாரத்துக்கும் விரோதமுகவுங் கூறுகிற பிரமாணத்தை பட்டம்பெற வந்திருக்கிறவர்களில் ஒவ்வொருவரும் பணணச்செயவார். இப்பிரமாணத்தின் முதற்பங்கில் சொல்லப்பட்டிருப்பது பெரியோரான பல ரோமானிததரால் மறுக்கப்படுவதாயிருந்தாலும அவர்கள் சொல்லுவதை ஒப்புக்கொள்ளாமல், தேவ அதிகாரத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உபதேசத்தை மாற்றக்கூடியதல்லதென்று சாதிப்பதாயிருக்கிறது. இங்கிலாந்துசபைககுரிய நியாயதுரந்தரங்களைப் பாதுகாக்கவும், அன்னிய அதிகாரததைப்பற்றி பிந்தின பங்கில் சொல்லியிருப்பதை உறுதிபபடுத்தவுந் தக்கதாக இவ்வாக்குப்பிரமாணம் வாங்குபபடி அமைத்திருப்பது மிகவும் அவசியமே. தற்காலத்தில் கோவிலில் பிரமாணம் வாங்கப்படுகிறதில்லை.

31. வினா. அப்புறம் நடபபதென்ன?

விடை. அவர்கள் இவ்வுத்தியோகத்தை ஏற்கும்படி பரிசுத்த ஆவியினாலே உள்ளாக ஏவப்பட்டிருக்கிறதாக நம்புகிறார்களென்றும், சரியான ஒழுங்குப்படி அழைக்கப்பட்டிருக்கிறதாக நினைக்கிறார்களென்றும், வேதாகமத்தை வி[illegible]

புக்கொள்ளுகிறர்களென்றும், ஜனங்களுக்கு நல்ல ஜாக்கிரதை யாய் வாசிப்பார்களென்றும், தங்கள் உத்தியோக கடமைகளை நிறைவேற்றுவார்களென்றும், தங்கள் நடக்கையால் நன்மாதிரி காட்டுவார்களென்றும், மேற்பட்ட அதிகாரிகளுக்கு கீழ்ப்பட்டமைந்திருப்பார்களென்றும் கர்த்தருடைய சகாயத்தை முன்னிட்டு வாக்குக்கொடுப்பார்கள். அப்புறம் கண்காணியார் தமக்குமுன்பாக தாழ்மையாய் முழங்கால்படியிட்டிருக்கிற அவர்கள் ஒவ்வொருவர் சிரசின்மேலும் தமது கைகளை வைத்து, உதவிக்குருஉத்தியோகத்தைச்செய்ய திரித்துவநாமத்தால் அதிகாரங்கொடுத்து, அப்புறம் ஒவ்வொருவர் கையிலும் புதிய ஏற்பாட்டைக் கொடுத்து அந்தச் சபையில் வாசிக்கவும் பிரசங்கிக்கவும் அதிகாரங்கொடுப்பார். அப்புறம் நற்கருணை பரிமாறப்படும். பின்பு அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட உத்தியோகத்துக்கு பாத்திரமாய் நடந்து நல்லபடியேறுதலைச் சம்பாதித்துக்கொண்டு (1 தீமோ. 3. 13.) அதைவிட்டு, மேம்பாடான திருப்பணிவிடைக்கு வந்தெட்டத்தக்கதாக அவர்களுக்காக ஜெபம்பண்ணப்படும்.

32. வினு. குருப்பட்ட முறைமையில் கண்டிருக்கிற திருசுவிசேஷ வாக்கியங்களின் பொருளென்ன?

விடை. ஆதித் திருச்சபையை அலங்கரித்த ஆவியின் நானுத வரங்களைப்பற்றி நிருபவாக்கியத்தில் கண்டிருக்கிறது. அறுப்பு மிகுதி வேலையாட்கள் கொஞ்சமாயிருப்பதைப்பற்றியும், அல்லது கிறிஸ்துவாகிய பிரதான மேய்ப்பரின் மாதிரிப்படி கிறிஸ்தமான மேய்ப்பர்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறது.

33. வினு. சுவிசேஷவாசகத்தில் கூலியாள் என்று சொல்லியிருப்பதின் கருத்தென்ன?

விடை. திருப்பணிவிடை செய்வதற்காக கூலியாள் அல்லது சம்பளம்பெற்றுக்கொள்ளுகிற போதகன்மாரைத்தான் கூலியாள் என்று அழைக்கப்படுகிறதாக நாம் நினைக்கவொண்ணுது. ஏனென்றால், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனுயிருக்கிறுனென்று அப்போஸ்தலர் மாத்திரமல்ல, நமதாண்டவர் தாமும் வசனித்திருக்கிறதாக சாட்சியுண்டே (1 தீமோ.5.18. பரி லூக். 10. 7.). சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் சுவிசேஷத்தினுல் பிழைக்கும்படி கர்த்தா நியமித்திருக்கிறுரே (1 கொரி. 9. 14.). ஆனால் பொருளாதாயத்துக்காக அத்தொழில் நடப்பிக்கிறவ

னும், மனித கற்பனைகளைப் போதிக்கிறவனும், தன் நடமையின் உத்தமமும் தன் சபையின்மேல் பற்றுதலையுமின்றி ஓனாய் ஓடி வரக்கண்டு ஓடிப்போகிறவனுக்கொப்பாயிருக்கிறவனைவனே அவன்தான் கூலியாள். தற்பொழிவை தேடுகிறவர்களும் கள்ள உபதேசத்தை நாட்டுகிறவர்களும் எவர்களோ அவர்களும் இப் பேர்ப்பட்டவர்கள் (2 பேது. 2. 1-21.). மேலும் இவ்வுத்தி யோகத்துக்கடுத்த அறிவும், தகுதியுமின்றி அதில் உடன்படு கிறவர்களும் இப்பேர்பபட்டவர்கள்தான். (1 தீமோ. 1. 7. கொ லோ. 2. 18.)

34. வினு. கண்காணியார் சொல்லும் புத்திமதி எப்பேர்ப் பட்டது?

விடை. குருமார் ஞானாதிபதிகளாகவும் காவலாளிகளாகவும் உக்கிராணக்காரராகவும் பெற்றிருக்கிற மேன்மையும், அவ்வு த்தியோகத்தை அவர்கள் நிறைவேற்றவேண்டிய விதமும், அதை தகுந்தப்படிகொண்டு செலுத்தாமையால் அவர்களுக்கு சேரிடும் கனமோசமும், இதில் வெகு கண்டிப்பாய் காண்பிக்கப்பட் டிருக்கிறது.

35. வினு. குருமாரிடத்தில் கேட்கப்படுகிற கேள்விகளெ வை?

விடை. அவர்கள் தங்கள் அழைப்பின் தன்மையைப்பற்றி தங்கள் உள்ளத்தில் உணர்வுற்றிருக்கிறார்களோவென்றும், அத ணிய உபதேசங்களைப் போதியாமல் வேதாகமத்தைக்கொண் டே போதிப்பார்களோவென்றும், கிறிஸ்துமார்க்க நியமங்களை சாதித்து சபைகள் அதின்படி நடக்க ஜாக்கிரதையாய் முயற் சிப்பார்களோவென்றும், கள்ள உபதேசங்களை புறக்கணித்து சமயத்துக்குத்தக்கதாக அந்தந்த மனுஷருக்குப் புத்திசொல்ல ஜாக்கிரதையாயிருப்பார்களோவென்றும், உலக கல்வி முயற்சி களைவிட்டு ஜெபத்தியானம், தேவவசனவாசிப்பு, தியானம் முதலியவற்றில் கருத்தாயிருப்பார்களோவென்றும், தாங்களும் தங்கள் சமுசாரங்களும் சபைக்கு நன்மாதிரியாயிருப்பார்களோ வென்றும், சபையில் சமாதானமும் அன்பும் அமைதலும் விர்த் திக்க பிரயாசப்படுவார்களோவென்றும், தங்களுக்குமேற்பட்ட அதிகாரிகளுக்கு அமைந்து இணங்கிநடப்பார்களோ வென் றும் அவர்களிடத்தில் கேட்கப்படும். இவைகள் எல்லாவற்றுக் கும் அவர்கள் கர்த்தர் தங்களுக்குச் சகாயராயிருக்க தாங்கள் அப்படியே செய்வதாய் வார்த்தைப்பாடு கொடுப்பார்கள்.

36. வினு. அப்புறம் கண்காணியார் செய்கிறதென்ன?

விடை. குருமார் செய்யவேண்டிய இக்காரியங்களெல்லா வற்றிற்கும் போந்த பெலத்தை சர்வவல்லமையுள்ள தேவன் தாமே கட்டளையிட்டு, அவர்கள் துவக்கின கிரியையை நிறை வேற்றியருளும்படி பிரார்த்தித்துக்கொள்வார்; கூடிவந்திருக்கும் சபையாரும் அவர்களுக்காக தனிச்செபம் செய்யவேண்டுமெ ன்று கேட்டுக்கொள்ளுவார். அப்படியே சற்றுநேரம் யாவரும் அமைதலாயிருந்து தனிச்செபம்பண்ணுவார்கள்.

37. வினா. இதற்குப் பிற்பாடு நடக்கிறதென்ன?

விடை. குருப்பட்டம் பெறப்போகிறவர்கள் முழங்கால் படியிட்டிருக்க, வாரும், தேவாவி வாரும் என்ற ஞானப்பாட்டு பாடப்படும். அப்புறம் அவர்கள்மூலமாய் கிறிஸ்துவின் ராஜ் யம் விஸ்தரிக்கப்படவும் பரிபாலனம்பண்ணப்படவும்வேண்டி கண்காணியார் ஜெபம்பண்ணுவார். ஜெபம் முடிந்தவுடனே அவரும் கூடநின்ற குருமாரும் இவர்கள் சிரசின்மேல் கைகளை வைக்க, கண்காணியார் அவர்களுக்கு குருப்பட்டங்கொடுத்து, அவர்கள் ஒவ்வொருவர்கையிலும் வேதாகமத்தைக் கொடுத்து, சபையில் பிரசங்கிக்கவும் சாக்கிரமெந்துக்களை பரிமாறவும் அதி காரங்கொடுப்பார்.

38. வினா. குருப்பட்டங்கொடுக்கும் கண்காணியார் அதி காரங்கொடுக்கும் வார்த்தைகளை முறையாய்ச் சொல்லும். அதின் கருத்தென்ன? உதவி குருப்பட்டம் கொடுக்கும்பொழுது அவ் வார்த்தைகள் பிரயோகிக்கப்படாதிருப்பதேன்?

விடை. குருப்பட்டம் பெறுகிறவர்களை கண்காணியார் பார்த்து, இப்போது எங்கள் கைகளை வைத்ததினாலே உனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற தொழிலையும் பணிவிடையை யும் முயற்சிக்கத்தக்கதாக பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள் என் றுரைத்து, அதிகாரத்தைக் கொடுக்கிறார். இம்மொழிகளை பலவா றாய் தாற்பரியப்படுத்துவதுண்டு. ஆனால் தேவனுடைய வசனத்தையும் சாக்கிரமெந்துக்களையும் பரிபாலிக்கவும், பரிசுத் தவான்களுடைய சீர்பொருந்துதலுக்கும் கிறிஸ்துவின் சரீரம் பக்திவிருத்தியடைகிறதற்கும் (எபே. 4. 12.) அவசியமான வைகளை நிறைவேற்றவுந்தக்க பெலனை பட்டம் பெறுகிறவர்க ளுக்குக் கொடுக்கிறது பரிசுத்த ஆவியானவருடைய தொழிலே என்பதற்குச் சந்தேகமில்லை. உலகமுடிவுமட்டாக எல்லா நாட்களிலும் அப்போஸ்தலரோடிருப்பதாக இரட்சகர் அருளிய வாக்குத்தத்தப்படி இப்பெலனை பரிசுத்த ஆவியானவர் அவர் கள் பின்னடியார்மூலமாய் அனுக்கிரகித்திருக்கிறார். இக்கா

லத்தில் விசேஷித்த பெலன்களும் அற்புதவரங்களும் அருளப் படுகிறதென்று நாம் சாதிக்கத் துணியாவிட்டாலும், திருப்பணி விடையிலுட்படுகிறவர்கள் ஜீவவசனத்தைக் கூறி ஆராய்வதிலும், தங்கள் உத்தியோகத்துக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதிலும், தங்கள் மந்தைகளின் ஜீவாத்துமாக்களுடைய சுகத்துக்காக உழைப்பதிலும் பரிசுத்த ஆவியானவருடைய உதவியையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளுகிறார்களென்பது நிச்சயமே. என்றாலும் உதவிகுருக்களுக்கு இவ்விசேஷம் அருளப்படுகிறதில்லை, ஏனென்றால்; அவர்கள் உத்தியோகம் திருப்பணிவிடைக்குரிய பரீட்சை நிலைமையாயிருக்கிறது.

39. வினா. பட்டங்கொடுக்குமுன்னதாகச் சொல்லப்படுகிற கீர்த்தனை என்ன?

விடை. பட்டங்கொடுக்குமுன்னதாக வெனி க்கிரியேத்தார் (Veni Creator) என்ற கீர்த்தனை அல்லது வாரும், தேவ ஆவி வாரும் என்ற ஞானப்பாட்டைச் சொல்ல அல்லது பாடவேண்டும். இவ்விடத்திலே அது உரைக்கப்படுவது பூர்வமாயுள்ள வழக்கம். முந்தினதைச் செய்தவர் அம்புரோஸ் என்று பெரும்பாலும் சொல்லப்படும்; என்றாலும் அதற்குப் போதுமான ஆதாரமில்லை.

40. வினா. இம்முறைமையால் பரிசுத்தாவியானவரை நோக்கி மிகுந்து பிரார்த்தித்திருப்பதற்கு முகாந்திரமென்ன?

விடை. திருச்சபையில் பலவித திருப்பணிவிடைகளை நியமிப்பதும், அப்பணிவிடையில் அமருகிறவர்களை அதற்கேற்ற தகுதிமான்களாக்குவதும் திரித்துவத்தில் மூன்றும் ஆளாகிய இவருடைய செயலாக வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டிருப்பதால் (அப். 13. 2-4; 20. 28. 1 கொரி. 12. 11.) இவரை நோக்கி விசேஷமாய் பிரார்த்திப்பது அவசியமே. ஆனால் கிறிஸ்துமார்க்கத்தில் முன் நடந்ததுபோல அற்புத வரப்பிரசாதங்கள் ஒவ்வொரு குருமாருக்கும் அருளப்படவேண்டுமென்று நாம் ஜெபிக்கிறதில்லை. அவர்கள் தங்கள் கடமைகளைப் போர்ந்தபடி செய்து நிறைவேற்றத்தக்கதாக அவர்களை தகுதிமான்களாக்கும்படி ஜெபம்பண்ணுகிறோம். நாம் ஆவியானவரை எதிர்த்து நிற்கவும் ஆவியை அணைத்துப்போடவுங் கூடாதென்றும், (அப். 7. 51. 1 தெச. 5. 18.) கிருபையில் வளரக்கடவோமென்றும் (2 பேது. 3. 18.) வேதாகமத்தில் திடச்சாட்சியாய் அறிவித்திருக்கிறது. நாம் கிறிஸ்துவின் ஆவியில்லாதவர்களாயிருந்தால் நாம் அவருடையவர்களல்ல (ரோம. 8. 9.); ஆகையால்

அந்த ஆவியானவர் திருச்சபையில திருப்பணிவிடைசெய்யும் தயது தாசருக்குள் நிறைவாய் வாசம்பண்ணுமபொருட்டு நாம் உட்கருத்தோடு பிரார்த்தித்துக்கொள்வது அவசியமே.

41. **வினா.** குருமாருக்காக சொல்லிய ஜெபத்தில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர், மேய்ப்பர் என்னும் நாமங்கள் வழங்கப்பட்டிருக்கிற கருத்தென்ன?

விடை. எபே. 4. 11ல் பரி. பவுல் வகுத்துரைத்திருக்கிற முறைமையின்பிரகாரம் இவ்விடத்திலும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. திருச்சபையில் பலவித திருப்பணிவிடைகள் மாத்திரமல்ல, பூர்வ முறைமையின்படி பொது அனுமதி பெற்றவர்களும், அவர்களுடைய கடமைத்தொழில் என்னவென்று [illegible] வகளின்படி பார்க்குமிடத்து, பற்பல வகைகள் சொல்லப்பட்டிருக்கிறதென்று இதினால் நாம அறிந்துகொள்ளுகிறோம். [illegible] அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர், மேய்ப்பர் என்பவை வெவ்வேறு அந்தஸ்துள்ளவர்களை அவரவருக்கு அமைக்கப்பட்டவைகளைச் செய்து நிறைவேற்ற வேண்டிய தொழில்களை வெவ்வேறென்று காட்டவே, இவ்விடத்தில் எடுத்து வழங்கப்பட்டிருக்கின்றன.

42. **வினா.** பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கண்காணியார் உரைக்கிற வார்த்தைகள் [illegible] சொல்லப்படும் ஆட்சேபனைக்கு சமாதானமென்ன?

விடை. மனுஷர் பரிசுத்தாவியைக் கொடுக்கிறதாகச் சொல்லுவது மட்டுமீறின செய்கையென்று ஆட்சேபனை உரைக்கப்படும். ஆனால் பரிசுத்தாவி என்பது வேதாகமத்தில் பலவிடங்களில் அவருடைய வரப்பிரசாதங்களையும் கிருபைகளையும் குறிக்கிறதாய் வழங்கப்படுவதுபோல் இவ்விடத்தில அக்கருத்தாகவே வழங்கப்பட்டிருக்கிறது. இவை பட்டங்கொடுக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிறவைகள்தான். இவர்களை அனல் மூட்டி எழுப்பவே பரி. பவுல் தீமோத்தேயுவுக்குப புத்திமதி உரைத்தார் (2 தீமோ. 1. 6.). நமது ஆண்டவர் தமது அப்போஸ்தலருக்கு பாவவிமோசன அதிகாரத்தைக் கையளித்த போது இவ்வார்த்தைகளை உரைத்தபடியால், இச்சமயத்தில் வழங்கப்படுவதற்கு இவைகளே தகுந்தவைகளாக திருச்சபையால் அமைக்கப்படலாயிற்று (பரி. யோவா. 20. 23.) இல்லாதவைகளை உரைக்கிற கண்காணியார் தமது உத்தியோகமுறைமைப்படி தமக்குள் தரித்திருக்கிற சுயஆதிக்கத்தால் தாம் பரிசுத்

தாவியின் வரங்களைக் கொடுக்கிறதாகப் பாராட்டினால் காரியம் வேறு. ஆனால் தேவன் தாமே கற்பித்திருக்கிறபிரகாரம் கண்காணியார் தமது உத்தியோகக் கடமைப்படி தாம் செலுத்த அருள்பெற்ற விஷயமாகப் பாராட்டுமிடத்து, ஆட்சேபனை உரைக்கவாவது குற்றங்கூறவாவது இடமில்லையே. ஏனென்றால், இவ்வார்த்தைகளுக்குமுன்னாக என் பிதா என்னை அனுப்பினதுபோல் நான் உங்களை அனுப்புகிறேன் என்று நமது இரட்சகர் சொன்னார். இதில் வழங்குகிறபடி அவர் தமது பிதாவினால் போதனையடைந்து இவர்களை அனுப்பினதுபோல் இவர்கள் இவரால் அதிகாரம்பெற்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், புதிய போதகனமானை நியமிக்கவும் அனுமதியடைந்திருக்கிறார்கள் என்று காணப்படுகிறது.

43. வினா. குருமாருக்கு கொடுக்கப்படுகிற பாவவிமோசன அதிகாரமானது எத்தன்மையுள்ளது?

விடை. எவருடைய பாவங்களை என்பது நமது ஆண்டவரால் தமது அப்போஸ்தலருக்கு உரைக்கப்பட்ட வார்த்தைகள் ஆனால் உத்தம மனஸ்தாபமுள்ளவர்களுடைய பாவங்கள் சுமத்தவாவது, குணப்படாதவர்களுடைய பாவங்களை மன்னிக்கவாவது அவர் அதிகாரங்கொடுக்கவில்லை. மேலும் கண்காணியார் இவ்வார்த்தைகளை உரைப்பதில் அப்போஸ்தலருக்கு இவ்விஷயத்திலுண்டாயிருந்த வல்லமைகளை எல்லாம் சொல்லுகிறதாகப் பாராட்டுகிறதுமில்லை. அப்போஸ்தலர் ஆவிக்கு நிதானித்தறிய வல்லவர்களாயிருந்ததால் குணப்படுதலுள்ளவன் இன்னான் என்று அறிந்து பாவமன்னிப்பைக் கூறவும், குணப்படுதலற்றவன் இன்னான் என்று அறிந்து அதனைக் கூறாதிருக்கவும் போர்ந்த தகுதிமான்களாயிருந்தார்கள் (1 கொரி.12. 10. அப 21. 23.). மேலும் குற்றவாளிகள்பேரில் அற்புதமாய தண்டனை விதிக்கவும், அவர்கள் குணப்பட்டதின்பேரில் அத்தண்டனையை நீக்கவும் இவர்கள் வல்லமைபெற்றிருந்தார்கள். கண்காணியார் இவ்வார்த்தைகளை உரைப்பதிலே இக்கருத்துகளெல்லாம் அடங்கியிருக்கிறதில்லை. என்றாலும், கண்காணியார் அவைகளை வழங்குவதின்பேரில் (1) குருவானவர் பிரசங்கிக்கும் சுவிசேஷ விதிப்பிரகாரம் மனிதர் பாவமன்னிப்பை அடையவாவது ஆக்கினைத்தீர்ப்பை அடையவாவது கூடுமென்ற நிச்சயமும்; (2) திருச்சபையாதாரப்படி குற்றவாளிகளுக்குச் சிட்சையளிக்கவும், அவர்கள் சீர்ப்படுமிடத்து அச்சிட்சையை நீக்கவும் அதாவது, குற்றங்களை சுமத்தவும் மன்னிக்கவும் இவர்களுக்கு அதிகாரமுண்டென்னும் உறுதிப்பாடு இவ்வார்த்தை

களால் விளங்கும் இவ்வதிகாரமும் திருச்சபை ஊன்றக் கட்டப்படுதலுக்கென்றே ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

44. வினா. குருமாருக்குரிய கடமைகளெவை?

விடை. கிறிஸ்துநாதருடைய மந்தையை மேய்ப்பதும், தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிப்பதும், சாக்கிரமெந்துகளைப் பரிமாறுவதும் அவர்கள் கடமைகளாம். பாவங்களை மன்னிக்கவும் கட்டவும் பாவவிமோசனத்தைக் கூறவும் கூறுகிறதற்கும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபைகளை ஆலோசனைகளால் கண்காணியாருக்கு உதவிசெய்வதும் அவர்கள் கடமை. பொதுவாய்ச் சொல்லவேண்டுமானால் கண்காணியாருக்கே உரித்தல்லாத ஊழியங்களையெல்லாம் அவர்களும் செய்யலாம்.

45. வினா. கண்காணிமாருக்கு உரித்தாயிருக்கப்பட்ட உத்தியோகக் கடமைகளெவை?

விடை. குருமாருக்கும் உதவிக்குருமாருக்கும் பட்டங்கொடுத்தலும் (1 தீமோ. 5. 22, 3. 1–13. தீத்து. 1. 5.), இவர்கள் போதகம் உபதேசத்தை (1 தீமோ. 5. 1–9.) மேல்விசாரணை யது திவ்விய அதிகாரத்தால் தெளிவாய் விதிக்கப்பட்டிராத விஷயங்களில் சபைக்காரியங்களை ஒழுங்குப்படுத்தலும் (1 தீமோ. 3. 14, 15. 1 கொரி. 11. 34. தீத். 1. 5. அப். 20. 27.) —ப்படுத்தலும், பரிசுத்த ஸ்தலங்களைப் பிரதிஷ்டைசெய்தலுமே.

46. வினா. கண்காணிமார் யாரால நியமிக்கப்படுவோர்கள்?

விடை. கிறிஸ்துமார்க்க ஆரம்பகாலத்தில் போதகமாரும் ஜனங்களுங்கூடி கண்காணியாரைத் தெரிந்து நியமிப்பது வழக்கமாயிருந்தது. ஆனால் ஜனங்களால் அமைக்கப்படும் எவ்விஷயத்திலும் முகஇச்சகம் தப்பெண்ணமாதலால் பலபேதம் கலாதி முதலியவை காணப்படுகிறது இயல்பு. ஆகவே, இராயர்கள் கிறிஸ்துவானவர்களானதின்பேரில் அந்தந்த ராயருடைய ஆலோசனைப்பிரகாரம் அவர்கள் தெரிந்துகொள்ளப்படுவதும், தெரிந்துகொள்ளப்பட்டதின்பேரில் மற்றவர்களைத் திருப்பணிவிடைகளுக்கு நியமிக்கும் மேலான அதிகாரமானது மூன்று அல்லது நான்கு கண்காணிமார்மூலமாய் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திலேலே அவர்களுக்குக் கையளிக்கப்படுவதுமுண்டு. மேலும் சிரேஷ்ட கண்காணியரென்னும் ஆர்க்—பிஷப் என்னப்பட்ட பெயரானது, நான்காம் நூற்றாண்டுக்கு

முன்னதாயுள்ளதல்லவென்று சொல்லப்பட்டாலும், ஒரு தேச
த்திலுள்ள பல கண்காணிகளுக்கு அந்தத் தேசத்துக் கண்
காணியார் ஒருவர் முதன்மையாயிருப்பது புராதனமாயுள்ள
வழக்கந்தானென்று தெரியப்படலாகிறது. யோவானப்போ
ஸ்தலனுடைய காலத்துக்கு 70 வருஷத்துக்குப் பின்னுள்ள
வரான ஜர்ணியூ என்பவர் பிரான்சுதேசத்துக் கண்காணியார்
யாவருக்கும் முதன்மையாயிருந்து மேல்விசாரணை செய்தார்.
ராஜாக்கள்தானே கண்காணியானோரைத் தெரிந்து நியமிப்பது
சிலகாலம் வழக்கமாயிருந்தாலும், பிற்பாடோ அந்த அத்தியட்ச
ருக்கு அவ்வாலயங்களிலுள்ள அர்ச்சகரான டீன் (Dean),
சாப்ற்றர் (Chapter) என்பவர்களால் அவர்கள் தெரிந்துகொள்
ளப்படுவது அவசியமென்று கண்டதால், அவ்வாறே நடந்து
வருகிறது.

47. வினா. கண்காணிப்பட்டம் கொடுக்கும் முறைமையி
லுள்ள சுருக்க ஜெபத்தையும் நிருப சுவிசேஷவாசகங்களை
யும்பற்றி கவனிக்கப்படத்தக்கதென்ன?

விடை. திருச்சபையின் கண்காணிமார் குருமாரெல்லா
தேவவசனத்தைப் போதித்து அதின் முறைமைகளைத் தக்க
படி பரிமாறியுஞ் செலுத்தியும்வரவும், ஜனங்கள் அவர்களுக்கு
அமைந்து பணிவாய் நடக்கவும், இவ்விதமாய் யாவரும் நித்திய
மகிமையைப் பெற்று அனுபவிக்கத்தக்கதாக தேவன் கிருபை
புரிந்தருளவேண்டுமென்று நற்கருணைமுறைமைச் சுருக்க
ஜெபத்தில் பிரார்த்திக்கிறோம். நிருபவாக்கியத்தில் பரி. பவுல்
தானே தீமோத்தேயுக்கு உரைத்தபடி போதக உத்தியோகத்தில்
மேம்பாடான பரிசுத்த கடமைகள் புகட்டப்பட்டிருக்கின்
றன; அல்லது அப்போஸ்தலர் நடபடியிலுள்ள எபேசு
மூப்பருக்கு ஒப்புவித்த சபைவிசாரணை எடுத்துரைக்கப்பட்டி
ருக்கிறது. சுவிசேஷவாக்கியத்தில் 'என் ஆடுகளை மேய்' என்று
பேதுருவுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு அல்லது இரட்சகர்
உயிர்த்தெழுந்து பதினொருவருக்குக் காட்சியாகி அவர்களுக்கு
அதிகாரங்கொடுத்த பரிசுத்தாவியை சிறந்தவிதமாகவும் விசே
ஷித்த அளவாகவும் அனுக்கிரகிப்பதைப்பற்றி வார்த்தைப்
பாடு கொடுத்தவரலாறு அடங்கியிருக்கிறது. இயேசுவான
வர் தமது அப்போஸ்தலருக்கு கடைசியாக அதிகாரங்கொ
டுத்து, தாம் ஆவிக்கடுத்தபிரகாரம் தமது சபையில் உலகமுடிவு
பரியந்தம் தரித்திருப்பதாக வாக்குரைத்த விசேஷமுள்ள சுவி
சேஷவாக்கியம் சில சமயங்களில் வாசிக்கப்படுகின்றது.

48. **வினா.** தெரிந்துகொள்ளப்பட்ட கண்காணியார் கொடுக்கும் வாக்குத்தத்தங்களையும் அப்புறம் அவருக்கு அதிகாரம் கையளிக்கப்படும் வரலாற்றையும் சொல்லு.

விடை. அவர் சிரேஷ்ட கண்காணியார் முன்பாக நின்று, அவருக்கும் அவருடைய பட்டத்துக்கு உரியவர்களான பின்னடியாருக்கும் கீழ்ப்படிந்து அமைந்து நடப்பதாய் வாக்குக்கொடுப்பார். அப்புறம் கிறிஸ்துவானவர் அப்போஸ்தலரை ஏற்படுத்துமுன் ஒரு இராமுழுவதையும் ஜெபத்திலே போக்கினார் என்றதால், அப்போஸ்தலர் [illegible] வேளை [illegible], பாணபாத்திரையும் கைவைத்தலையும்முன் உபவாசித்து ஜெபம்பண்ணினார்களென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், கூடிவந்திருக்கிறவர்கள் யாவரும் அவருக்காய் ஜெபிக்கும்படி அறிவிப்பு விடப்படும். பின்பு தேவன் தமது சபையின் மனைவிக்கட்டுத் [illegible] தமது திருவடையை அனேகம் அனுப்பியருளவும் அவர் தேவ [illegible] பக்கமாய் [illegible] சத்திய உபதேசத்தாலும் [illegible] அலங்கரித்தருள [illegible] செலுத்தப்படும். [illegible] அவர் தமது [illegible] பற்றியும் வேதத்தை [illegible] பற்றியும் தேவனுடைய [illegible], ஜெபத்திலும் பக்தியாய் [illegible] இருக்கவும், கள்ள உபதேசத்துக்கு எதிராய் [illegible] நன்மாதிரியாயிருக்கவும், சமாதானத்தையும் அன்பையும் பரிபாலனம்பண்ணவும், [illegible] தண்டிப்பதையும், மற்றவர்களைத் திருப்பணிவிடைக்கு தெரிந்து ஏற்படுத்துவதில் உத்தமமாயிருக்கவும், ஏழைப்பட்டவர்களை அன்னியர் ஆதரவற்றவர்கள் முதலியவர்களுக்கு உதாரமும் இரக்கமும் பாராட்டவும், தாம் கொண்டிருக்கும் ஊழியத்தைப்பற்றியும் யாவர்முன்பாகவும் தெளிவாய் வாக்குத்தத்தம்பண்ணிக்கொடுத்தபடிச்செய்து நிறைவேற்ற [illegible] சக்தியையும் சத்துவத்தையும் கட்டளையிடும் கடவுள் [illegible] தாமும் நம்பிக்கையும் வைத்திருக்கிறதாக அறிக்கைசெய்வார். பின்பு தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் தமது அருளனுக்கிரகத்தையும் கிருபாகரச்சகாயங்களையும் புரிந்தருளும்படி அவரைநோக்கி ஜெபிக்கப்படும். தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் தமது தாசனாகிய இவர், மேன்மேலும் பெலன்கொண்டு சபையைப் பரிபாலனப்படுத்தவும், அவர் தமது அதிகாரத்

தை இடிப்பதற்கல்ல ஊன்றக்கட்டுதலாக மையாடவரவும், கர்த்தருடைய குடும்பத்தில் நித்தியானந்த சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளவும் கிருபைபுரியவேண்டுமென்று அவரை நோக்கி ஜெபிக்கப்படும். அப்புறம் நடப்பது மகா அத்தியந்த பத்திருறைமையென்று யாவரும் அறிந்துகொள்ளத்தகும். கிறிஸ்து திருச்சபையில் பிரசன்னமாயிருப்பதாக விசுவாசத்தில் கண்ணோக்கி, அந்தத் திவ்விய ரட்சகரால் கொடுக்கப்படும் கண்காணிப்பதிகாரத்துக்கு உறுதிப்பாடுள்ளது, தமது நாமத்தில் ஆசீர்வதிக்கிறவர்களை அவர் தாமும் ஆசீர்வதிக்கிறதாக நூலில் கவனிக்குமிடத்தில் மிகவும் எண்ணிக்கை தோற்றலாகுமே. பின்பு சிரேஷ்ட கண்காணியாரும் மற்றும் கண்காணியாரும் இவர் சிரசில் கைகளை வைக்க, சிரேஷ்ட கண்காணியார் அந்த பரிசுத்த உத்தியோகத்தை அவருக்குக் கையளிப்பார்.

49. வினா. பட்டஞ் சூட்டப்பட்டபின் சொல்லப்படும் போதனையும், பண்ணப்படும் ஜெபமும் என்ன?

விடை. வேதாகமம் அவர் கையில் கொடுக்கப்பட்டு அவர் தேவபத்தியையும் நற்போதனையையும் உத்தம உபதேசத்தையும் நாடித்தேடவும், தம்மைப்பற்றியும் தமது உபதேசத்தைப் பற்றியும் எச்சரிக்கையாயிருக்கவும், மந்தைக்கு நல்மேய்ப்பனாயிருக்கவும், பெலவீனமானதுகளைத் தாங்கி வியாதியுள்ளதை ஆரோக்கியப்படுத்தி, நொறுங்குண்டவர்களைக் காயங்கட்டி, துரத்துண்டவர்களைத் திருப்பிக்கொண்டு, கெட்டுப்போனதைத் தேடிப்பிடித்து, உத்தமமும் [illegible] இருந்து அதிகாரஞ் செலுத்தவேண்டுமென்று புத்தியுரைக்கப்படும். அப்புறம் பரிசுத்த நற்கருணை பரிமாறப்படும். பின்பு அவர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவும், தேவ வசனத்தைப் போதிப்பதில் அவர் பொறுமையாயிருக்கவும் [illegible] அசட்டைப் புத்தி சொல்லவும், [illegible] லும் சிநேகத்திலும் விசுவாசத்திலும் [illegible] நன்மாதிரியாக இருக்கவும், [illegible] வதில் உத்தமசாசராய் [illegible] கிருபை [illegible] வேண்டுமென்று அவருக்காகப் பிரார்த்திக்கப்படும்.

50. வினா. வேத [illegible] டந்துவருகிற [illegible] (Minor Orders) உத்தியோகஸ்தர் யார்?

விடை. (1) சுப்-டீகன், (2) அக்கொலாயித்து என்ற பணிவிடைக்காரன், (3) பேய் விரட்டுகிறவன், (4) பாடுகிறவன்,

(5) வாசிப்போன் (6) வாசற்காப்போன், (7) உதவிக்குருமார் முதலியவர்களே.

51. வினா. சப்-டீக்கோனைப்பற்றி என்ன தெரியும்?

விடை. இந்த வரிசைக்காரர் உதவிக்குருமாருக்குத் தாழ்ந்தவர்கள்; உதவிக்குருமார் இந்த வரிசையிலிருந்தே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். வேதப்பாட்டில் இவர்களைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை; விசுவாசிகளான யாவரும் இந்த வரிசையைச் சேர்ந்தவர்களைப் பணிகிறார்கள். இவர்கள் பின்வரும் வேலைகளைக் குருமாருக்கு உதவியாய்ச் செய்துவந்தார்கள்:

1. தேவாலயப் பணிமுட்டுக்களைச் சுத்தமாய் வைக்குதல்;

2. திவ்விய நற்கருணை பாத்திரங்களைச் சுத்தப்பண்ணுதல்;

3. திவ்விய நற்கருணை வேளையில் வரிசையைக் காத்தல்;

4. அப்போஸ்தலருடைய நிருபங்களையும் திருச்சபைக் கட்டளைகளையும் பல சபைகளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தல் முதலியவைகளே. இந்த வரிசை கிரேக்கசபையிலும் லத்தீன்சபையிலும் ஆதிகாலந்தொட்டு இருந்திருக்கிறது. இவர்களுக்குக் கொடுக்கப்படும் நற்கருணைத் தட்டையும் பாத்திரத்தையும் கையில் தொடுவார்; ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீர்ப்பாத்திரமும் துவாலையும் கையில் கொடுப்பார். இவர்கள் நியமனம் பெற்றபின் தங்கள் ஜீவியகாலமெல்லாம் விரத்தத்தில் வைக்கப்பட்டவர்களென்று கட்டளையிடப்பட்டது.

52. வினா. அகொலாயித்து (Acolyte), பேயோட்டுகிறவன் (Exorcist), பாடுகிறவன் (Singer), வாசிப்போன் (Reader), வாசற்காப்போன் (Porter), இவர்களைப்பற்றி என்ன தெரியும்?

விடை. (1) அகொலாயித்து, தேவாலய விளக்குகளைச் சுத்தஞ்செய்து தீபமேற்றுவதும், நற்கருணைக்குரிய அப்பம், இரசம் கொண்டுபோய் வைப்பதுமே.

(2) பேயோட்டுகிறவன், பேய் பிடித்தவர்களைக் கண்டு சந்தித்து, மந்திரங்களைச்சொல்லிப் பேயைத் துரத்துவான்.

(3) பாடுகிறவன், பிள்ளைகளைச்சேர்த்துப் பாட்டுப் படிப்பித்துக் கொண்டு தேவாலயத்தில் குருவானவருக்கு உதவியாய்ப் பாட்டை நடத்துவான்.

(4) வாசிப்போன்; ஆராதனையில் பாடங்களை வாசிக்கிறதுமல்லாமல் தேவாலயத்திலுள்ள புஸ்தகங்களைப் பத்திரம்பண்ணுவான்.

(5) வாசற்காக்கிறவன்; தேவாலயக் கதவுகளை திறந்துபூட்டிக் [illegible] பண்ணி, சற்கருணை வேளையில் ஆ[illegible]யர் பரிசுத்தபீடத் [illegible] போகாதபடி பாதுகாப்பது செய்[illegible]ன். தற்காலத்தில் [illegible] விலகுட்டிகளும், மெசகண்டனைகளும், [illegible]பதேசிமார் உபாத்தியார்களும் [illegible] பட்ட பரிசுத்த [illegible] யங்களைப் பார்த்து வருகிறார்கள் [illegible] சபையா[illegible] [illegible] இவைகள் [illegible] [illegible] [illegible] சேர்ந்த புறம[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பட்டிருந்தது.

53. வினா. [illegible] [illegible]?

விடை. [illegible] [illegible] ஆதிச்சபையி[illegible] [illegible] [illegible] [illegible] ஒரேதரம் [illegible] [illegible], [illegible] ஒருக்காலும் [illegible] [illegible]. அப்போஸ்தல [illegible] [illegible] [illegible] [illegible] (ரோம. 1[illegible] 1.) [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] தவிசெய்[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கைகளை வைத்தே நியமித்து குருட[illegible] இவர்களை [illegible] [illegible] தோன்றுகிறது. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பிரேதசகசபையில் [illegible] [illegible] நின்றுபோயிற்று.

APPENDIX.

[illegible] RULES FOR DIVINE WORSHIP.

அனுபந்தம்

1. தேவாராதனை விஷயத்திலே கைக்கொள்ளத்தக்க ஏழு சட்டங்கள்.

(1) ஆராதனைக்கென்று கோயிலுக்குப் போகும்பொழுது நல்மனதோடும் ஆசையோடும் போகவேண்டும்.

(2) [illegible] கூடி [illegible] அ[illegible] தேவாராதனை[illegible] போகு[illegible] [illegible] பிரயாசப்பட[illegible]டும்.

(3) கோயிலுக்குள் [illegible] போகும்போது [illegible] [illegible] கண்களை [illegible] போகவேண்டும்.

(4) [illegible] தேவாராதனை துவக்குமுனையும் பாவஅறிக்கை [illegible] போகவேண்டும்.

(5) நாம் தேவனா[illegible] அவருடைய சமுகத்திலே போயிருக்கும்[illegible] ஒழுங்கின்படி நடக்கத் தேவனை [illegible] இருக்கிறோமென்று எண்ணவேண்டும்.

(6) கோயிலில் இருக்கும்போது நம்முடைய சிந்தனையும், [illegible]ம், நினைவும், கருத்தும் எல்லாம் புறம்பான [illegible]ரியங்களிலல்ல, செய்யப்படும் ஆராதனையின் [illegible]மேலேயே கவனமாயிருக்கவேண்டும். மற்றப்படி புண்ணியம் தேடப்போனவிடத்தில் பாவத்தைக் கட்டிக்கொண்டு [illegible]ப்பாயிருக்கும்.

(7) தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளவேண்டும். அப்படித் தொழுதுகொள்ளுகிறவர்களுக்குத் தேவன் பரிபூரண ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுகிறவராயிருக்கிறார்.

THE CHRONOLOGICAL TABLE OF EVENTS.

II. சங்கதிகளின் கால அட்டவணை.

கி. பி.

325. நிசேயாவில் கூடிய 1-வது பெரிய சங்கம்.

380. கொன்ஸ்தாந்திநபுரியில் கூடிய 2-வது பெரியசங்கம்.

420. காசியான் கீயோ என்பவர்களின் ஜெபமுறை.

43.. எபேசுவில் கூடிய 3-வது பெரிய சங்கம்.

451 கால்சிதோனில் கூடிய 4-வது பெரிய சங்கம்

,, லீயோ என்பவரின் நற்கருணைமுறை.

460 வியனாபட்டணத்துக் கண்காணியாராகிய மாமாதஸ் ஏற்படுத்தின தபசுநாட்கள். (Rogation days)

492 கலேசியஸ் என்பவரின் நற்கருணைமுறை.

590 கிரகோரி என்பவரின் நற்கருணைமுறை.

597. அகுஸ்தீன் என்பவர் இங்கிலாந்துக்கு வந்தது.

747. கிளாவேஷோ என்ற சங்கக் கூட்டம்; ரோம ரீதத்ச்சாட்சிகளை ஒப்புக்கொள்ளப்பட்டது; ஞானஸ்நானிய நாட்களும் எம்பர் உபவ நாட்களும் நியமிக்கப்பட்டது.

787. நிசேயாவில் கூடிய 2-வது சங்கம், சுரூபவணக்கம் துவக்கப்பட்டது, பொருள்திரிதல் உபதேசம் (Transubstantiation) உற்பத்தியானது.

1074 ஹில்டிப்ராண்ட் என்பவரால் குருக்கள் கலியாணம் நிறுத்தப்பட்டது.

1085. ஆஸ்மண்டு என்பவரால் சாரம்முறை உண்டாக்கப்பட்டது.

1140. பரி. கன்னிமரியாள் பாவமில்லாமல் பிறந்தாள் என்கிற பண்டிகையானது ஸ்தாபிக்கப்பட்டது.

1164. கிளாரண்டன் ஏற்பாட்டுச்சட்டங்கள்.

1215. 4-வது லாத்தீன சங்கம் பொருள்திரிதல் [illegible] விசுவாசப் பிரமாணமாக உறுதிப்படுத்தப்பட்டது.

1384. [illegible] உயிக்ளிவ் மரித்தது.

1390. பிரைமர் என்கிற முறை இங்கிலீஷில் செய்யப்பட்டது.

1414 பரி பலியின் முறை நிறுத்தப்பட்டது; கான்ஸ்டன்ஸ்பட்டணத்துச் சங்கம் சபையாருக்குப் பரிசுத்த பாத்திரத்தின் இரசம் கொடுக்கப்படாதென [illegible]

கி. பி.

1516. எராஸ்மஸ் என்பவரின் கிரேக்குப் புதிய ஏற்பாடு லத்தீன் மொழிபெயர்ப்போடு பிரசுரஞ்செய்யப்பட்டது. சாரம், பிரவெரி திருத்தி அச்சடிக்கப்பட்டது.

1526. டிண்டல் என்பவரின் புதிய ஏற்பாடு.

1530. ஆக்ஸ்பர்க் பட்டணத்துப் பிரமாணங்கள்.

மாதாவின் கன்னிமை என்னப்பட்ட காலை மாலை நற்கருணைப் பிரார்த்தனைகள்போல செய்யப்பட்ட வியாக்கியானப்புஸ்தகம் மொழிபெயர்க்கப்பட்டது.

1531. திருத்தப்பட்ட சாரம் [illegible]ரியும் மிசாலும் பிரசுரஞ்செய்யப்பட்டது.

1534. பாப்புவின் ஆளுகை [illegible]போனது; லூத்தர்செய்த வேதாகம மொழிபெயர்ப்பு; இங்கிலீஷ் சங்கீதங்கள் திருப்பப்பட்டது.

1535. உவில்லியம் மார்ஷல் என்பவரால் இங்கிலீஷில் செய்யப்பட்ட நல்ல பிரைமர் என்ற புஸ்தகம்; காவர்டேல் என்பவரின் வேதாகமம்.

பத்து வேதவாக்கிய பிரமாணங்கள; குயிக்னோனியஸ் என்பவரால் திருத்தப்பட்ட பிறவரி.

கிறிஸ்தவனுடைய தேவபக்திக்குரிய கட்டளைகள் என்ற புஸ்தகம். (The Bishops' book), மத்தேயுவின் வேதாகமம்.

[15]38. [illegible] திருச்சபைகளில் [illegible] வாக்கியங்கள் [illegible] விடப்பட்டது.

[15]39. ஆறு [illegible] பிரமாணங்கள்; ரோமான் என்ற ஜெபமுறை ரோசெஸ்தர் பட்டணத்துக் கண்காணியாரான [illegible] என்பவரால் இங்கிலீஷில் உண்டாக்கப்பட்டது: பெரிய [illegible] வைக்கப்பட்ட [illegible]ருடைய வேதாகமம்; டாவர்னருடைய வேதாகமம்.

1540. ஏசுசபைத்தார் (Jesuits) என்பவர்களுடைய உத்தியோகவரிசை ஏற்படுத்தப்பட்டது.

1541. பெரிய வேதாகமம் அதிகாரம்பெற்ற திருப்புதலாகக் கோவில்களில் வைக்கப்பட்டது.

1542. திருத்தப்பட்ட சாரம்முறை காண்டர்பரி மாகாணம் முழுவதிலும் வழங்கவேண்டியதற்கு உத்தரவுசெய்யப்பட்டது.

1543. ஜெபமுறைப் புஸ்தகங்களைத் திருத்தும்படிக்கு ஆலோசனைக் கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டது; ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவசியமாய் அறியவேண்டிய உபதேசம் என்ற புஸ்தகம் (The King's book), ஜர்மானியபாஷையில் பிரசுரமான [illegible] கண்காணியாரான ஹர்மான் என்பவரின் "ஆலோசனை" என்ற புத்தகம்.

E CHRONOLOGICAL LIST OF FATHERS.

III. கிரேக்கு, லத்தீன் பிதாக்கள் என்பவர்களுடைய கால அட்டவணை.

கெர்ரிந்தியருக்கு ஒரு நிருபம எழுதினவரும், இரத்தசசாட்சியாய் மரித்தவருமான ரோமாபுரி கிளெமெந்து.

இரத்தசாட்சியாய் மரித்த அந்தியோகியாபட்டணத்துக் கண்காணியாராகிய இக்னாஷியு.

.164. கிரைஸ்தவ வேதம் ப்ரூசேவுடு செய்த ஒரு சம்பாஷணையையும், திருச்சபையின் விசுவாசத்துக்காக இரண்டு நியாய நிருபங்களை எழுதினவருமாகிய இரத்தச்சாட்சி

இரத்தச்சாட்சியும் சிமிர்னு பட்டணத்துக் கண்காணியுமாகிய போலிகார்ப்பு

அந்தியோகியாவில் கண்காணியாய் மரித்த தியோபிலஸ்.

குருணைகருக்கு விரோதமாய் ஒரு பிரபந்தமெழுதிய இரத்தசாட்சியாகிய ஐரினேயு.

அலெக்சந்திரியாவில் மரித்த கிளெமெந்து.

இந்த வருஷத்தில மரித்த தெர்த்துல்லியானை.

-254 ஒரிகெனெ.

கப்பதோகியாவிலுள்ள நியூ-செசாரியாவின் கண்காணியாரா தாமேடர்க்கள் (அற்புதங்களைச் செய்கிறவன்) என்றழைக்கப்பட்ட கிரகோரி

-258. கார்தேஜ் பட்டணத்துக் கண்காணியாராகிய சிப்பிரியான்

-340. செசாரியா பட்டணத்துக் கண்காணியாராகிய ஊசேபியு.

-373. அலெக்சந்திரியா பட்டணத்துக் கண்காணியாராகிய அத

-386. எருசலேம் பட்டணத்துக் கண்காணியாராகிய சிரில்.

. லாக்தான்தியஸ்.

பாயிச்டியெர்ஸ் பட்டணத்துக் கண்காணியாராகிய இலாரி

. செசாரியா பட்டணத்துக் கண்காணியாராகிய பாசில்.

. பாசில் என்பவரின் சகோதரனாகிய நீசாவிலுள்ள கிரகோரி.

. பாசில் என்பவரின் இனத்தானான நாசியான்சிலுள்ள கிரகோரி.

-397. மிலான்பட்டணத்துக் கண்காணியாராகிய அம்புரோஸ்.

7. கொன்ஸ்தந்தீன்புரி கண்காணியாராகிய யோவான் கிறிசொஸ்தம்.

0. எரோம்.

-430. இப்போப்பட்டணத்துக் கண்காணியாராகிய அகுஸ்தீன் முதலியவர்களே.

...nary. Madras. 1888.